ஸ்ரீ

திருள்ளமுத்திரைக்கோவை எண் 22.

கம்பராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

யுத்த காண்டம்

ஸ்ரீ N. K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.
அட்வகேட், வண்ணார்பேட்டை
பரிசோதித்தது.

பதிப்பாசிரியர் :
பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார்
ஆழ்வார்திருநகரி

காபிரைட்] 1954 [விலை ரூ. 10—0—0

ஸ்ரீ ராமஜயம்.

(ஆழ்வார் திருநகரிப் பிரதிகளின்படி)

கம்ப ராமாயணம், யுத்த காண்டம்

படல அட்டவணை.

எண்			பக்கம்	பாட்டு
1.	கடல்காண்	படலம்	1-3	12
2.	இராவணன் மந்திரப்	,,	3-17	118
3.	இரணியன் வதைப்	,,	18-39	176
4.	வீடணன் அடைக்கலப்	,,	40-58	152
5.	இலங்கை அளவறி	,,	59-68	77
6.	வருணன் அடைக்கலப்	,,	68-78	81
7.	சேது பந்தனப்	,,	79-87	72
8.	ஒற்றுக் கேள்விப்	,,	88-99	89
9.	இலங்கை காண்	,,	99-102	24
10.	இராவணன் வானரத் தானைகாண்		102-106	37
11.	மகுடபங்கப்	,,	107-112	47
12.	அணிவகுப்புப்	,,	113-116	30
13.	அங்கதன் தூதுப்	,,	116-122	44
14.	இராவணன் முதல்நாளையில்தோற்ற		122-154	255
15.	கும்பகருணன் வதைப்	,,	154-196	356
16.	மாயா சனகப்	,,	197-209	101
17.	அதிகாயன் வதைப்	,,	209-243	268
18.	நாக பாசப்	,,	243-280	300
19.	படைத்தலைவர்	,,	280-293	102
20.	மகரக்கண்ணன் வதைப்	,,	293-298	38
21.	பிரமாத்திரப்	,,	298-326	230
22.	சீதைகளங்காண்	,,	327-330	32
23.	மருத்துப்	,,	330-345	116
24.	களியாட்டுப்	,,	345-347	21
25.	மாயா சீதைப்	,,	348-359	95
26.	நிகும்பலை யாகப்	,,	359-382	182
27.	இந்திரசித்து வதைப்	,,	382-391	69

படல அட்டவணை.

28.	இராவணன் சோகப்	,,	391-399	61
29.	மூலபெல வரவுகாண்	,,	399-405	52
30.	மூலபெல வதைப்	,,	405-434	235
31.	வேலேற்ற	,,	435-441	52
32.	வானரங் களங்காட்சிப்	,,	441 445	34
33.	இராவணன் களங்காட்சிப்	,,	445-448	25
34.	இராவணன் தேரேறு	,,	448-453	35
35.	இராமன் திருத்தேர் ஏறு	,,	453-456	28
36.	இராவணன் வதைப்	,,	456-483	215
37.	மண்டோதரி புலம்புறு	,,	483-488	38
38.	வீடணன் முடிசூட்டு	,,	488-489	13
39.	பிராட்டி திருவடி தொழு	,,	490–508	147
40.	வசந்தன் உயிர்வரு	,,	508-511	27
41.	திருஅணைச் சிறப்புப்	,,	511-515	35
42.	மீட்சிப்படலம்	,,	516-518	17
43.	பரத்துவாசன் ஆசிரமப்	,,	518-521	23
44.	பரதன் விரதப்	,,	521-536	122
45.	நகர் புகு	,,	536-539	29
46.	திரு அபிடேக படலம்	,,	539–542	24
		ஆகப்படலம்	46–க்கு.	4336

ஆழ்வார் திருநகரியிலிருக்கும் இராமாயணம் திருவேங்கடம் உறங்காவில்லி தாசர் ஏடு தீர்மான இராமாயணப் பிரதி பார்த்துத் திருநகரியில் இருந்து கூஎம-ஆம் ஆண்டு ஆவணி மீ 31உ அசுவதி நக்ஷத்திரமும் சுக்கிரவாரமும் பரபக்ஷத்திரி திகையும் பெற்ற சுபதினத்தில் சாத்திக வேலையும் வல்லூறு பட்சிக்கு அரசுமான வேலையில் எழுதி முகிந்தது.

ஸ்ரீராமஜயம், மாருதி சகாயம்; ஸ்ரீமத் வாநாசல முநயேநம:

முன்னுரை

தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற பரஞ் சுடரின் நரவடிவாய், நடையின் நின்றுயர் நாயகராய், உல குய்ய அவதரித்த உத்தம வீரரான ஸ்ரீ ராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ என்று உவந்து கூறினர், வேதந் தமிழ் செய்த மாறனர், அக்குருகூர்ப்புனிதன் தாளினைக்குப் பாமாலை சூடி மகிழ்ந்த கம்ப நாடர், அன்னரது விழுமிய உரைக் கிணங்க இராம காதையைக் கற்றோர்க்கு இதயங் களிப்பெய் தக் காவியமாகப் பாடி உதவினர். அது தமிழ் இலக்கியங் கட்குள், தலைசிறந்தவற்றுள் ஒன்றாய், சுவைகட்கெல்லாம் உறைவிடமாய், அறவுரைகட்குக் களஞ்சியமாய், பக்திச்சுவை மலிந்ததாய்த், தமிழணங்கின் தலையணியாய்த் திகழலாயிற்று. அதனையுணர்ந்த திருநகரித் தமிழ்ப்புலவோர் அதனைப் பயின் றும், சுவைத்தும், பிறர்க்குப் போதித்தும், அதனை உருத்திரி யாது பாதுகாக்கும் வண்ணம் சுவடிகளைப் பிழையற எழுதியும், இன்பொழுது போக்கலானர். இங்ஙனம் பேணியதன் பயனைப் பின்னுளர் பெற்ற கம்பராமயாணச் சுவடிகளை, பெருங்குடிப் பிறந்த அருந்தமிழ் அன்பர் ஸ்ரீமான் பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார், தக்கார் உதவியை நாடிச் செவ்வனே ஆராய்ந்து, நிதிமிக்காரது துணைபெற்று முதல் ஆறுகாண்டங் களையும் அச்சு வாகனம் ஏற்றித் தமிழுலகில், உலவச் செய்தார். அவரது பெருநல்லுதவிக்குத் தமிழ்நாடு கழிபெரு நன்றி கூறும் கடப்பாடுடைய தாகும்.

கண்ணபிரானின் கனிவாய்ச் சொல்லின்படி இறைவன் அவதரிக்கும் நோக்கங்களாவன; அறத்தின் வழிநிற்கும் நல்லாரைக் காத்தலும், அறத்தை மீறும் தீயாரை ஒறுத்தலும், இவ்வாறு அறத்தினை நிலைநாட்டலும், எனும் மூன்றுமே. ஆனல் அறம் என்பது பொதுவும் சிறப்பும்என இருவகைத் தாதலின், அதற்கிணங்க நல்லாரும் தீயாரும் இருவகையினரா வார். பொதுவான அறநெறியாவது, நீதி நூல்களில்

விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். இப்பொது நெறிபற்றிய முத்தொழில்களையும் இறைவன் புரிந்தருளுவ தோடு சிறப்புநெறிபற்றிய அம்மூன்றையும் திறம்பட இயற் றியருள்கின்றனன். சிறப்பான அறமாவது, அறத்தின் வடிவமேயான இறைவனை உபாயமாகவும் உபேயமாகவும் பற்றிநிற்றல், இங்ஙனம் வாழும் நல்லாரை இறைவன் நன்கு பாதுகாப்பான். (பரித்ராணாய); தீயாராவார் அத்தகைய நல்லாரை நலிவதிற் கருத்தாயிருப்பார். இவர்களை இறைவன் முற்றும்மாய்ப்பன். (விநாசாய); இவ்வாறு சிறப்பான அறம் நன்கு நிலைநாட்டப்படுகின்றது; (ஸம்ஸ்தாபனம்); ஸ்ரீராமா யணத்தில் ஒவ்வொரு காண்டத்தும் பொதுவும் சிறப்புமாகிய இருவகை அறங்களைப் பின்பற்றுவாரையும் ஏற்றவாறு காத்தலும், இருவகையரான அறப்பகைவரையும் தக்கவாறு ஒறுத்தலும், இவ்வண்ணம் அறங்களையும் நிறுவுதலும் ஊன்றி நோக்குவார்க்குப் புலனுகும். ஆயினும் சிறப்பான சரணாகதி யினும் அறத்தை நிலைநாட்டலே அவதாரத்தின் சீரிய பயனும். மானிடர்க்கு உறுதிபயக்கும் மிகப்பெருநெறி அதுவென்பது வைணவ ஆசாரியரது துணிபு. தம்மிடம் சரண்புகுந்தாரைக் காத்தலே தமது நோன்பு என்று பணித்தார் ஸ்ரீராமபிரான். அப்பிரானுடைய குணநலனைத் தொகுத்துக்கூற நினைந்த சிதைப்பிராட்டியார் 'சரணாகத வத்ஸலன்' என்று அவரைக் குறிப்பிடுவதனாலும் அக்கருத்து வலியுறுகின்றது. காண்டந் தோறும் இங்ஙனம் வற்புறுத்தப்படுதலின் ஸ்ரீராமாயணம் முழுதுமே 'சரணாகதி சாஸ்திரம்' என்பர் மேலோர்.

எனினும் யுத்தகாண்டத்தில் அத்தனிப் பேராளனின் மேம்பாடும் மற்ற சிறப்பியல்களும் நன்கு விளங்குதலின் அது ஏனைய காண்டங்கட்குச் சிகரமாய் அமையும் பெருமையுடைய தாம். இதன்கண் உள்ள விபீடணன் அடைக்கலப்படலத்திலே தான் சரணாகதி நெறியின் முழுப்பண்பும், அதுபயன்பெறு தற்கு இருதிறத்தார்க்கும் இன்றியமையாது வேண்டப்படும் குணநலன்களும் தெளிவுறுத்தப் படுகின்றன. தஞ்சமென வந்தார்க்கு அஞ்சலென அருள்புரியும் இருநாலிலானுர்

இராமனின் மெய்ம்மைப் பெருவார்த்தை ''ஆதலான் அபயம் என்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு'' என்பது —நவிலப்படுவதும் அப்படலத்தே தான். கருணையே உருவான சீதைப்பிராட்டியாரும் தம்மைச் சரண்புகுந்த அரக்கியரைக் காத்து 'என்னதிமை இவர் இழைத்தார்' என்றும் 'யான் இழைத்த வினையினின் இவ்விடர் தான் அடுத்தது' என்றும் கூனியிற் கொடியார் அலரே' இவர் என்றும் கூறி, அருளால் அவர்களைக் காத்த மாண்பும் இக்காண்டத்திலே காணப்படுகிறது. அன்றியும் தேவர்களும் இலக்குமணனும் தண்டகாரண்ய முனிவரும் சுக்கிரீவனும் காகாசுரனும் சரண்கிடந்ததன் பயனெலாம் திரண்டுகனிந்தது இக்காண்டத்தில் விபீடணன் அடைக்கலப் படலத்திலே தான். இன்னும் சிறையிருந்தவளின் ஏற்றங்கூறும் இராமாயணத்திலே இக்காண்டத்திலே தான் தேவியார் தாமே சிறை புகுந்ததன் நோக்கம் நிறைவெய்தித் தேவமாதர் சிறை நீங்கப்பெற்று உய்ந்தமை கண்கூடாகின்றது. ஏனைய காண்டங்களினும் பார்க்கச் சொற்சுவை பொருட்சுவைமுதலான பல்வகைச் சுவைகளும் தோயப் பெற்றிருப்பதும், இக்காண்டமே. அனைத்திற்கும் மேலாக, பிரஹ்லாதன் வருணதேவன் கருடபகவான் தேவர்கள் பிரம்மதேவன் முதலியோர்களுடைய துதிகளெல்லாம் திவ்வியத் தீஞ்சொல்லான் அமைந்து உபநிடதங்கள் ஆதியான ஞான நூல்களின் நுணுக்கங்களே மேவிப் பொலிவதும் இக்காண்டத்திலே.

கவிச் சக்கரவர்த்தியாகிய, கம்பர் தேவபாடையின் இக்கதை செய்தவர் மூவரானவர்தம் உரையின்படித் தமிழ்ப் பாவினுல் உணர்த்திய பான்மைக்கு ஓர் அருஞ் சான்று இக்காண்டத்திலே கிடைக்கின்றது. அதனை மதிநுட்பம் நூலோடுடைய செந்தமிழ்ப் புலவர் வாயிலாக யான் கேட்டதை அங்ஙனமே கூறுவேன். (கம்பர் குறிப்பிடும் மூன்று வடமொழி இராமாயணங்களும் வால்மீகி இராமாயணம் ஒழிந்த ஏனைய இரண்டும் இன்னின்னவை யென்பதைப் பற்றியும் புலவர் வெவ்வேறு கருத்துக்களை யுடையராகின்றனர். அவையாவன அற்புத ராமாயணமும் ஆனந்த ராமாயணமும்

என்பர் ஒரு சாரர். இவ் வுண்மையை ஆராய்ந்து முடிவு கட்டுதற்கும் அச் சான்று ஒருவாறு உதவும் என்பது எனது கொள்கை) இராம இராவண யுத்தம் நடைபெற்றது ஒரு வாரம் என ஓர் இராமாயணமும் ஒருபக்ஷம் என இன்னொன்றும் ஒருமாதமென மற்றொன்றும் கூறும் என்ப. அங்ஙனமாயின் முரண்பட்ட இம் மூன்றையும் தழுவி முரணின்றிக் கூற நினைந்த சொற்செல்வரான கம்பர் அம் முப்பொருள்களையும் தரும் ''இடை யுவாவினில்'' என்ற தொடரை அமைத்த திறன் சிந்தித்து இன்புறற் குரிய தேயாம். 'உவா' எனும் சொல் பௌர்ணிமையையும், அமாவாசையையும் குறிக்கும். இவற்றில் ஒன்றைக் குறிக்குங்கால், இடையுவா என்பது ஓர் உவாவிற்கும் அடுத்த உவாவிற்கும் இடையேயுள்ள ஒரு மாதகாலம் எனப் பொருள்படும். இரண்டையுங் குறிக்குங்கால் அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இடையேயுள்ள ஒருபக்ஷத் தைக் குறிக்கும். உவா ஒருபக்ஷமாயின், இடை யுவா அக்காலத் தின் பாதியான ஒருவாரமுமாகும். மீட்சிப்படலத்தில், இரா மனை நோக்கிய தேவர்களின் வார்த்தையான 'இடையுவாவினிற் சுவேலம் வந்து...' என்று தொடங்கும் பாடலில் இத் தொடர் அமைந்துள்ளது. இப் பொருளின் பொருத்தத்தை ஆராய்ச்சி யாளர் ஆய்ந்து காண்பாராக.

பிரதேசப் பிரதிகளுள் எல்லாம் மிகச்சிறந்தவை எனக் கொண்டாடப்படும் திருநகரிப் பிரதிகளின்படி அச்சிடப் பட்டுள்ள இப் பதிப்பிலே காணப்படும் பாட பேதங்களும் படலத்தலைப்புகளும் ஆராய்ச்சியில் ஈடுபடுவார்க்குப் பெருந் துணையாவதோடு, செஞ்சொற் கவியின்பம் நுகர்வதில் விழை வுள்ள இலக்கிய வித்தகர்க்கும் தூய இன்பம் பயப்பதாகும் என்பதில் ஐயமில்லை. கற்றோரும் கல்விதனில் ஆசையுள்ளோ ரும் இப் பதிப்பினை ஆதரித்து நால்வகைத்தாய நூற்பயன் களையும் பெறுவார்களாக.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மைலாப்பூர்
18—8—1954

சுவாமி பரமாத்மானந்தா.

கலைமகள் பக்கம் 362 ஏப்ரல் 1954.

ஆழ்வார்திருநகரி இராமாயணப் பதிப்பு

கம்பராமாயண ஆராய்ச்சி இப்போது வரவர மிகுதியாகி வருவது மகிழ்ச்சி தருவதற்குரிய செய்தி. கம்பராமாயணத்தைத் திண்ணை திண்ணையாகப் படித்துச் சொன்ன காலமும் உண்டு. மலையாள நாட்டிலும் கம்பராமாயணத்தை நாட்டியத்தின் பின்னணியிலே பாடினார்களாம். அங்கங்கே கம்பராமாயணத்தைப் பயில்வாரும் பாராயணம் செய்வாரும் மிகுதியாக இருந்தமையால் அந்த நூலின் பிரதிகள் பல இருந்தன. பெரும் புலவர்கள் தம் கையாலேயே ஏடுகளை எழுதி வைத்துக் கொண்டார்கள். அவற்றைப் பார்த்து மற்றவர்கள் பிரதி செய்துகொண்டார்கள். அங்கங்கே வழங்கி வரும் பாடங்களை அந்த அந்த இடங்களில் இருந்த ஏடுகளில் காணலாம். கம்பராமாயணப் பாடல்களில் மற்ற நூற் பாடல்களைவிட அதிகமான பாடபேதங்கள் இருக்கின்றன. இதற்கு அந்தக் காவியம் எங்கும் வழங்கியதே காரணம். இந்தப் பாடங்களையெல்லாம் தொகுத்துச் சுத்தமான பதிப்பை வெளியிடவேண்டும்.

ஆழ்வார் திருநகரியில் முன்பு பல பெரும் புலவர்கள் இருந்து வந்தார்கள். அவர்கள் வீட்டில் உள்ள ஏட்டுப் பிரதிகள் பிழை இல்லாதனவாய் இருக்கும். "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என்ற பழமொழிக்கு அங்கே செலவாணி இல்லை. அந்தப் பிரதிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு தக்க புலவர்களுடைய துணையையும் கொண்டு பல ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ பெரியன் ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் ஒரு கம்பராமாயணப் பதிப்பை வெளியிடத் தொடங்கினார். ஒவ்வொரு காண்டமாக வெளியிட்டு வந்தார். இப்போது யுத்த காண்டத்தைப் பதிப்பித்துக் கம்பராமாயணத்தை நிறைவேற்றியிருக்கிறார். புலவர்கள் வைத்திருந்த ஏட்டிலிருந்து பதிப்பித்த தாதலால் இந்தப் பதிப்பில் பல புதிய திருத்தங்கள் கிடைக்கின்றன. படலப்பிரிவுகளில் சில வேறுபாடுகள் இருக்கின்றன. பல காலமாக ஐயமாக இருந்த சில இடங்கள் இந்தப் பிரதியால் தெளிவடைந்திருக்கின்றன. தாமே செலவு செய்து இந்தப் பதிப்பை வெளியிட்ட ஸ்ரீ பெரியன் ஸ்ரீநிவாசய்யங்காரவர்களுடைய தமிழன்பும் முயற்சியும் பாராட்டுவதற்குரியன.

ஆழ்வார் திருநகரிப் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் வெளியிட்ட இராமாயணப் பதிப்புப்பற்றி அண்ணாமலை பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளர் திரு. கி. இராமானுஜையங்கார் இயற்றிய பாராட்டுப் பாடல்கள்.

1. திருமகள் கொழுநன் பின்வரப் பெற்றச் சிறப்புடைச்
செந்தமிழ் மொழியிற், பொருவரும் புலமை வாய்ந்திறை
புகழே புகன்றுயர் புலவரிற் புவிமீ, தொருவரும் கருணை
யார்மகிழ் மாறற் கொப்பவ ரில்லையவ் வுரவோன், திருவருள்
பருகிச் சிறையிருந் தவள்சீர் செப்பினுற் கிணையும் வேறிலையே.

2. கம்பன் எனுமக் கலைக்கடல்முன் கருணைக் கடலென் றுலகு
தொழும், நம்பி புகழால் இராமாவ தார நூலாம் நல்லமுதம்
இம்பர் அறிஞர் பருகிடுமா றீந்ததன்சீர் எடுத்தியம்பல்,
கும்பமுனிக்கும் அரிதென்றுல் யாரேகூற வல்லாரே.

3. மற்றந் நூலில் வரைவோரால் மகிழ்ந்து கற்போரால்
பிறரால், உற்ற வேறு பாடுபல அவற்றுள் கம்பன் உரையிது
வென், றிற்றை நாளில் அறிதலரி திந்தநிலையில் எழிற்குருகூர்க்
கற்ற பெரியோன் எழுதிவைத்த இந்நூற் சுவடி கண்டுவந்து.

4. சீரார் தமிழ்நாட் டாங்காங்குத் திகழும் பலவூர்ச்
சுவடிகளுள். ஏரார் குருகூர்ச் சுவடிகளே தமிழ்மாமகளுக்
கெழிலணியாய், பாரோர் புகலும் பழந்தமிழ் நூல் பலவும்
பதித்துத் தந்தபெரும், பேராசிரியர் பெருமதிப்புப் பெற்ற
பெற்றி பெரிதுணர்ந்து.

5. தொகுத்துக் கற்றுத் துறைபோய தூயபுலவர் துணை
கொண்டு, வகுத்தங் கவற்றுள் தான்கண்ட வண்ணம்
பிழைகள் மலியாது, நுகத்துப் பகல்போல் நடுநின்று நோக்கும்
அறிஞர் பலர்மதிக்க, மிகுத்த வெண்பொன் செலவிட்டு
விரைந்தச்சிட்டு விழைந்தளித்தான்.

6. அறிவாற் பெரியன் புலவர்திறத் தன்பாற் பெரியன் அருங்குணத்தின், செறிவாற் பெரியன் நினைந்து செயும் செயலாற் பெரியன் திருப்பெரியன், வெறியார் சோலைக் குருகூர்வாழ் வே. நா. சினி வாசனென, நெறிதேர் புலவர் பாராட்ட நின்றுன் வாழி நீடூழி.

7. வாழியன்னுன் இன்னணமே மதியின் வலியார் துணை வலியால், ஆழிமுகிலின் கருணையினுல் ஆசாரியர்தம் திருவரு ளால், யாழின் இசையின் இனிய தமிழ் நூல்கள் ஆராய்ந் தினிதுகொடுத், தூழிபூழி உரைசெல்ல ஓங்கிவாழி யுள மகிழ்ந்தே.

8. கண்டவுடனே முகமலர்ந்து கனிந்த மொழியால் வரவேற்று மண்டும் அன்பால் ஆன்பாலும் வடித்த தயிரும் நறுநெய்யும் கொண்டவாயிற் சுவையுணவும் கோதில்பனுவற் செவியுணவும் உண்டு புலவர் மனமகிழ ஊட்டும் இவன்சீர் உரைப்பரிதே.

9. வாழி கவிச்சக்ர வர்த்தி மதுரகவி
வாழி திருக் குருகூர் வாழ்மாறன்—ஊழிபல
வாழி யவே. நா. சினிவாசன் வளம்மருவி
வாழி பெரியன் மரபு.

இங்ஙனம்,
(Sd.) T. K. **இராமாநுஜன்**
26—6—54

எஞ்சிறு தாதைக்கு இப்பதிப்பை சமர்ப்பிவிக்கும் விஷயம்.

மாறன் மன்னும் வளநக ரதனில்
வீறு தோன்ற விளங்கிவாழ்ந் திட்டோன்
என்னையும் என்னிளஞ் சோதரர் தமையும்
தன்னுடை மக்களாத் தாங்கிய தயையான்
அப்பா எனவே எந்தை யழைத்திடும்
அப்பாத் துரையெனும் அணிபெயர் பூண்டோன்
பெரியன் ஆழ்வான் என்னப் பிறங்கிய
பெரியோன் தம்முனைத் தந்தையாய்ப் பேணும்
எஞ்சிறு தாதை யிணையடி யடியேன்
தஞ்செனக் கொண்டே தமிழறிந் ததனால்
ஏட்டில் பொறித்த இராமா யணத்தை
நாட்டி லுள்ளார் நலனுறப் பயில
அச்சினில் ஏற்றி அகிலம் பரப்பும்
இச்சிறு முயற்சியாம் இன்மலர் மாலையை
அன்னவன் தனக்கே அணிபெறச் சாத்திப்
பன்னெடு நாளும் பணிகுவன் யானே.

ஆழ்வார்திருநகரி. } **பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸன்**
பதிப்பாசிரியன்.

Copy Of The Proceedings Of The Director Of Public Instruction Madras,

Dis. No. 2711/54 dated 13—5—54.

Sub: Books and Publications - 3 volumes of Kambaramayanam and 2 other books on Nammalwar by Perian V. N. Srinivasa Iyengar of Alwartirunagari Tinnevelly District - brought to notice.

The books mentioned below are commended for use in the libraries atached to schools, Colleges and in Public libraries.

3 Volumes of Kambaramayanam (Nos. 357, 358 & 359)

Bala Ayodhya Aranya Kandangal	Rs. 8—0—0
Kishkinda Sundara Kandangal	Rs. 6—0—0
Yudha Kandam	Rs. 10—0—0

Nammalwar 2 volumes of Thirugnana Mudiri Kovai (Nos 360 & 361)

Nammalwar Thalattu & 5 others	Rs. 5—0—0
Nammalwar Pillaithamil & 3 others	Rs. 3—8—0

By Perian V. N. Srinivasa Iyengar

Copies can be had from Perian V. N. Srinivasan, Alwartirunagari Tinnevelly Dt.

K. R. MANICKAM,
For Director of Public Instruction.

Copy forward to

The Divisinal Inspectors of Schools, D. E. Os. (Sectrary, Local authorities) and Special Officer for Eduction Pudukkotai, The Inspectresses of Girls Schools, The Inspector of Oriental schools Madras, The Inspector of Anglo Indian Schools, Madras, The Principals of all Colleges and copy to Perian V. N. Srinivasa Iyengar.

COPY OF THE PROCEEDINGS OF THE COMMISSIONER H. R. & E, C. E, (Adm) DEPARTMENT MADRAS 2.

No. L. Dis. 28933/54 *Dated* 8–10–54.

Sub:- Worke from orginal manuscripts - encouragement of.

Ref:- From Perian V. N. Srinivasan. Alwartirunagari Tinnevelly Dt, letter date Nil,

Sri V. N, Perian Srinivasan residing at Alwartirunagari Tinnevelly Dt, has pubsished (1) Kambaramayanam Kandam 1–6 (2) Six works of Nammalwar and (3) four prabandhams on Nammalwar. These publications are of great value and edited after consulting valuable and old manuscripts treasured at Alwartirunagari. The trustees of religious institutions having libraries are advised to prchase these books for maintenance in the Devasthanam libraries,

(Sd) S. V. RAJAM,
For. Commissioner.
8—10—54.

To.

All Religious institutions having libraries as per list. 2. All A. C's and Dy Cs 3. Perian V. N. Srinivasan Avl.

R. P. SETHU PILLAI.
Professor of Tamil,
UNIVERSITY OF MADRAS.

8—10—'54

தமிழ் நாடு பெற்றுள்ள தனிப் பெருங் கலைச்செல்வங் களுள் தலைசிறந்தது கம்பராமாயணம். கவிதைக்கொரு புலவன் கம்பன் என்பது நாடறிந்த உண்மை. ஆயினும் நெடுங்காலமாக நல்லதொரு கம்பராமாயணப் பதிப்பு இல் லாதது பெருங்குறையே. அக்குறையை அகற்ற வந்துள் ளது ஆழ்வார்திருநகரிப் பதிப்பு. நம்மாழ்வார் பிறந் தருளும் பேறுபெற்ற திருநகரில் கம்பர் காவியத்தைப் பொன்னே போற் போற்றும் பெருமை சான்ற புலமைக் குலத்திலே தோன்றிய பெரியன் ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் பதிப்பித்துள்ள கம்பராமாயணத்தைக் கற்ற றிந்தோர் உளங்கனிந்து பாராட்டுவர். அப்பெருங் காவி யத்தில் தழைந்துள்ள பாடபேதங்களைத் திரட்டித் தொகுத்துத் திகைப்புற்று ஆராய்ந்து வரும் கலைவாண ருக்கு இப்பதிப்பு அருந்துணையாகும். பதிப்பாசிரியர் அவர்களுக்கும் அவர்களுடன் உழைத்த நல்லறிஞர் களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

ரா. பி. சேதுப் பிள்ளை
8—10—'54

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
25 FEB 1958
MADRAS

பெரியன் ஆழ்வாரையங்கார்

1875–1930

ஆழ்வார்திருநகரி



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:



கம்ப ராமாயணம்

யுத்த காண்டம்

கடல் காண் படலம்

க. ஒன்றே என்னில் ஒன்றேயாம் பலஎன் றுரைக்கில் பலவேயாம்
அன்றே என்னில் அன்றேயாம் ஆமே என்னில் ஆமேயாம்
இன்றே என்னில் இன்றேயாம் உளதென் றியம்பில் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னே பிழைப்பம்மா. 6153

உ. ஊழி திரியுங் காலத்தும் உலையா நிலையும் உயர்கிரியும்
வாழி வற்ற மறிகடலும் மண்ணும் வடபால் வான்தோயப்
பாழித் தெற்குள் ளனகிரியும் நிலமும் தாழப் பரந் தெழுந்த
ஏழு பத்தின் பெருவெள்ளம் மகர வெள்ளத் திறுத்ததால். 6154

ங. பொங்கிப் பரந்த பெருஞ்சேனை புறத்தும் அகத்தும் புடைசூற்றச்
சங்கிற் பொலிந்த தகையாளைப் பிரிந்த பின்பு தமக்கினமாம்
கொங்கிற் பொலிந்த காமரையின் குழுவும் துயில்வுற் றிதழ்குவிக்கும்
கங்குற் பொழுதும் துயிலாத கண்ணன் கடலைக் கண்ணுற்றான் 6155

ச. சேய காலம் பிரிந்தகலத் திரிந்தான் மீண்டும் சேக்கையின்பால்
மாயன் வந்தான் கண்வளர்வான் என்று கருதி வரும்தென்றல்
தூய மலர்போல் நுரைத்தொகையும் முத்தும் சிந்திப் புடைசுருட்டிப்
பாயல் உதறிப் படிப்பதே ஒத்த திரையின் பரப்பம்மா. 6156

ரு. வழிக்கும் கண்ணீர் அழுவத்து வஞ்சி அழுந்த வந்தடர்ந்த
பழிக்கும் காமன் பூங்கணைக்கும் பற்ரு நின்ரான் பொற்ரேள்மேல்
சுழிக்கும் கொல்லன் ஒல்உலையில் துள்ளும் பொறியில் சுடுமன்னே
கொழிக்கும் கடலின்நெடும்திரைவாய்த் தென்றல் தூற்றுங்குறுந்திவலே

சூ. நென்னல் கண்ட திருமேனிக் கின்று பிறிதாய் நிலை தளர்வான்
தன்னைக் கண்டும் இரங்காது தனியே கதறும் தடம்கடல்வாய்ப்
பின்னல் திரைமேல் தவழ்கின்ற பிள்ளைத் தென்றல் கள்உயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறுஞ்சுண்ணம் பூசா தொருகால் போகாதே.

எ. நிலைமேல் கொண்ட திருநெடுந்தோட் சுவமை மலையும் சிறிதேய்ப்ப
நிலைமேல் கொண்டு மெலிகின்ற நெடியோன் தன்முன் படியேழும்
தலைமேல் கொண்ட கற்பினுள் மணிவாய் என்னத் தனித்தோன்றிக்
குலைமேல்கொண்டார்உயிர்முடிக்கும்கூற்றம்கொல்லோகொடிப்பவளம்

அ. தூரம் இல்லை மயில்இருந்த சூழல் என்ன மனம்செல்ல
வீரம் நினைந்து பிரிவெண்ணி வெல்ல நாளும் மெலிவோனை
ஈரம் இல்லா நிருதரோ டென்ன உறவுண் டுனக்கேழை
சூரல் முறுவல் குறிகாட்டி முத்தே உயிரை முடிப்பாயோ. 6160

கூ. இந்து வன்ன நுதல்பேதை இருந்தாள் நீங்கா இடர்க்கொடியேன்
தந்த பாவை தவப்பாவை தனிமை தகவோ எனத்தளர்ந்து
சிந்து கின்ற நறுந்தரளக் கண்ணீர்த் தாகித் திரைத்தெழுந்து
வந்து வள்ளல் மலரடிமேல் வீழ்வ போன்ற மறிகடலே. 6161

கo. பள்ளி அரவில் பேருலகம் பசுங்கல் லாகப் பனிக்கற்றை
துள்ளு நறுந்தேன் புனல்அளிப்பத் தூய்நீர்க் குழவி முறைசுழற்றி
வெள்ளி வண்ண நுரைக்கலவை வெதும்பும் வள்ளல் திருமேனிக்
கள்ளியப்பத் திரைக் கரத்தால் அரைப்ப தேய்க்கு மணி ஆழி. 6162

கக. கொங்கைக் குயிலைத் துயர்நீக்கி இமையோர் குறித்த குறைமுற்ற
வெங்கைச் சிலையன் தூணியினன் விடாத முனிவன் மேற்செல்லும்
கங்கைத் திருகா டுடையானைக் கண்டு நெஞ்சம் களிகூர
அங்கைத் திரைக்கை எடுத்தோடி ஆர்த்த தொத்த தணியாழி. 6163

கஉ. இன்ன தாய் கருங்கடலே எய்தி அதனுக் கெழுமடங்கு
தன்ன தாய நெடுமானம் துயரம் காதல் இவைதழைப்ப
என்ன தாகும் மேல்வினைவென் றிருந்தான் இராமன் இகல்இலங்கை
பின்ன தான காரியமும் நிகழ்ந்த வினையும் பேசுவாம். 6164

க-வது, கடல் காண் படலம். முற்றிற்று.

உ-வது, இராவணன் மந்திரப்படலம்.

க. *பூவரும் அயனெடு புகுந்து பொன்னகர்
மூவகை உலகினும் அழகு முற்றுற
ஏவினன் இயற்றினன் கணத்தின் என்பரால்
தேவரும் மருள்கொளத் தெய்வத் தச்சனே. 6165

உ. பொன்னினும் மணியினும் அமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கினன் நாகம் நோக்கினன்
முன்னையின் அழகுடைத் தென்று மொய்கழல்
மன்னனும் உவந்தனன் முனிவு மாறினன். 6166

ங. முழுப்பெருந் தனிமுதல் உலகில் முந்தையோன்
எழிற்குறி காட்டினின் றியற்றி ஈந்தனன்
பழிப்பரும் உலகங்கள் எவையும் பன்முறை
அழித்தழித் தியற்றுவார்க் கரிதுண் டாகுமோ. 6167

ச. திருநகர் முழுவதும் திருந்த நோக்கிய
பொருகழல் இராவணன் அயற்குப் பூசனை
வரன்முறை இயற்றிநீ வழிக்கொள் வாய்என்றுன்
அரியன தச்சற்கும் உதவி ஆனையால். 6168

ஞ. அவ்வழி ஆயிரம் ஆயிரம் நிரைச்
செவ்வழிச் செம்மணித் தூணம் சேர்த்திய
எவ்விழின் மண்டபத் தரிகள் ஏந்திய
வெவ்வழி ஆசனத் திளிதின் மேயினன் 6169

ஞ. வரம்பறு சுற்றமும் மந்திரத் தொழில்
நிரம்பிய முதியருஞ் சேனை நீள்கடல்
தரம்பெறு தலைவருந் தழுவத் தோன்றினன்
அரம்பையர் கவியோ டாடுந் தாரினன். 6170

---

* இவ்வடையாளம் செய்யுள் நடையின் வேறுபாட்டை யுணர்த்தும்

எ. முனைவரும் அமரரும் முற்றும் மற்றுளோர்
எனைவரும் தவிர்க்கென ஏய ஆணையால்
புனைகுழல் மகளிரோ டிளைஞர்ப் போக்கினன்
நினைவுறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினன். 6171

அ. பண்டிதர் பழையவர் கிழவர் பண்பினர்
தண்டலின் மந்திரத் தலைவர் சார்கெனக்
கொண்டுடன் இருந்தனன் கொற்ற ஆணையான்
வண்டொடு காலையும் வரவு மாற்றினன். 6172

கூ. ஆன்றமை கேள்வியர் எனினும் ஆண்தொழிற்
கேன்றவர் அன்பினர் எனினும் யாரையும்
வான்துணைச் சுற்றத்து மக்கள் தம்பியர்
போன்றவர் அல்லரைப் புறத்துப் போக்கினன். 6173

ஐ. திசைதொறும் நிறுவினன் உலகு சேரினும்
பிசைதொழில் மறவரைப் பிறிதென் பேசுவ
விசையுறு பறவையும் விலங்கும் வேற்றவும்
அசைதொழில் அஞ்சின சித்தி ரத்தினே. 6174

ஙக. தாட்சிஇங் கிதனின்மேல் தருவ தென்இனி
மாட்சிஓர் குரங்கினல் அழிந்த மாநகர்
ஆட்சியும் அமையும்என் அரசு நன்றெனு
சூட்சியின் திறவரை நோக்கிச் சொல்லினன். 6175

ஙஉ. சுட்டது குரங்கெரி சூறை யாடின
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டது பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதிவ் அரியணை இருந்த தென்னுடல். 6176

ஙங. ஊறுகின் றனகினை றுதிரம் ஒள்நகர்
ஆறுகின் றிலதுழல் அகிலின் நாவிஒத்
தேறுமென் கோதையர் கூந்த லின்சுருள்
நாறுகின் றதுநுகர்ந் திருந்த நாமெலாம். 6177

ஙச. மற்றில தாயினும் மலிந்த வானரம்
இற்றில தாகிய தென்னும் வார்த்தையும்
பெற்றிலம் பிறந்திலம் என்னும் பேறலால்
முற்றுவ தென்இனிப் பழியின் மூழ்கினேம். 6178

மரு. என்றவன் இயம்பலும் எழுந்தி றைஞ்சினன்
கன்றிய கருங்கழல் சேனை காவலன்
ஒன்றுள துணர்த்துவ தொருங்கு கேள்எனன்
நின்றவன் நிகழ்த்தினன் புணர்ப்பி னெஞ்சினன். 6179

மசு. வஞ்சனை மனிதரை இயற்றி வாள்நுதல்
பஞ்சினன் மெல்லடி மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழில்என அறிவித் தேன்அது
தஞ்சம்என் றுணர்ந்திலை உணருந் தன்மையோய். 6180

மள. கரன்முதல் நிருதரைக் கொன்ற கள்வரை
விரிகுழல் உங்கைமூக் கரிந்த வீரரைப்
பரிபவஞ் செயுநரைப் படுத்தி லாதநீ
அரசியல் அழிந்ததென் றயர்தி போலுமால். 6181

மஅ. தண்டமென் றிருபொருட் குரிய தற்கரைக்
கண்டவர் பொறுப்பரோ உலகம் காவல்செய்
வண்டுறை அலங்கலாய் வணங்கி வாழ்வதோ
விண்டவர் உறுவலி அடக்கும் வெம்மைதான். 6182

மக செற்றினர் எதிர்எழும் தேவர் தானவர்
கொற்றமும் வீரமும் வலியும் கூட்டற
முற்றமூன் றுலகுக்கு முதல்வன் ஆயது
வெற்றியோ பொறைகொலோ விளம்ப வேண்டுமால்.

உம விலங்கினர் உயிர்கெட விலங்கி மீள்கலா
திலங்கையின் இனிதிருந் தின்பம் துய்த்தியேல்
குலங்கெழு காவல குரங்கில் தங்குமோ
உலங்குகம் மேல்வரின் ஒழிக்கற் பாலதோ. 6184

உக. போயின குரங்கினைத் தொடர்ந்து போய்அவண்
ஏயென உயிர்குடித் தெவ்வந் தீர்கிலம்
வாயினு மனத்தினு மறுத்து வாழ்துமேல்
ஓயுநம் வலியென உணரக் கூறினன். 6185

உஉ. மற்றவன் பின்னுற மகோ தரப்பெயர்க்
கற்றடந் தோளினன் எரியுங் கண்ணினன்
முற்றுற நோக்கினன் முடிவும் அன்னதால்
கொற்றவ கேள்என இனைய கூறினன். 6186

உங. தேவரும் அடங்கினர் இயக்கர் சிந்தினர்
தாவருந் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்
யாவரும் இறைவரென் றிறைஞ்சு மெய்மையர்
மூவரும் ஒதுங்கினர் உனக்கு மொய்ம்பினேய். 6187

உச. ஏற்றம்என் பிறிதினி எவர்க்கும் இன்உயிர்
மாற்றுறு முறைமைசால் வலியன் மாண்பமை
கூற்றுவன் தன்உயிர் கொள்ளும் கூற்றெனத்
தோற்றுநின் ஏவல்தன் தலையில் சூடுமால். 6188

உரு. வெள்ளியங் கிரியீனை விடையின் பாகனே
டுள்ளிவிண் தொடஎடுத் தார்க்கும் ஆற்றலாற்
சுள்ளியில் இருந்துறை குரங்கின் தோள்வலிக்
கெள்ளுதி போலும்நின் புயத்தை எம்மொடும். 6189

உசு மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
கண்ணினும் நீங்கினர் யாவர் கண்டவர்
நண்ணினர் வலத்தினர் என்னும் நாயக
எண்ணினர் திறத்தவர் எண்ணல் ஏயுமோ. 6190

உள இடுக்கிவண் விளம்புவ தில்லை ஈண்டெனை
விடுக்குவை யாமெனில் குரங்கை வேரறுத்
தொடுக்கரு மனிதரை உயிருண் டுன்பகை
முடிக்குவன் யான்என முடியக் கூறினன். 6191

உஅ இச்சிரத் தவன்உரைத் திறுக்கும் ஏல்வையின்
வச்சிரத் தெயிற்றவன் வல்லை கூறுவான்
அச்சிரத் தைக்கொரு பொருளன் முயினும்
பச்சிரத் தம்பொழி பருதிக் கண்ணினன். 6192

உக போயினி மனிதரைக் குரங்கைப் பூமிமேல்
தேயுமின் கைகளால் தின்மின் என்றெமை
ஏயினை இருக்குவ தன்றி எண்ணிநீ
ஆயுமது என்வயின் அயிர்ப்புண் டாங்கொலோ. 6193

நம எவ்வல கத்துநின் ஏவல் கேட்கிலாத்
தெவ்வினை அறுத்துனக் கடிமை செய்தயான்
தவ்வின பணியுள தாகத் தான்கொலோ
இவ்வினை என்வயின் ஈக லாதென்றான். 6194

நக நின்மின்என் றவன்தனை விலக்கி நீஇவை
என்முனும் எளியர்போல் இருத்தி யோஎன
மன்முக நோக்கினன் வணங்கி வன்கையால்
துன்முகன் என்பவன் இனைய சொல்லினன். 6195

நஉ திக்கயம் வலியில தேவர் மெல்லியர்
முக்கணன் கயிலையும் முரணின் ருயது
மக்களும் குரங்குமே வலிய ராம்எனில்
அக்கடா இராவணற் கமைந்த ஆற்றலே. 6196

நந பொலிவது பொலிவுற எண்ணும் புன்தொழில்
மெலியவர் கடன்நமக் கிறுதி வேண்டுவார்
வலியினர் எனில்அவர்க் கொதுங்கி வாழ்துமோ
ஒலிகழல் ஒருவநம் உயிருக் கன்பினுல். 6197

நச கண்ணிய மந்திரக் கருமங் காவல
மண்ணியல் மனிதரும் குரங்கும் மற்றவும்
உண்ணிய அமைந்தன உணவுக் குட்குமேல்
திண்ணிய அரக்கரில் தீரர் யாவரே 6198

நடு எளியுற மடுப்பதும் எதிர்ந்து ளோர்படப்
பொருதொழில் யாவையும் புரிந்து போவதும்
வருவதுங் குரங்கினம் வாழ்க்கை யூர்கடந்
தரிதுகொல் இராக்கதர்க் காழி நீந்துதல். 6199

நஎ வந்துன திருக்கையும் அரணும் வன்மையும்
வெந்தொழில் தானையின் விரிவும் வீரமும்
சிந்தையின் உணர்ந்தவர் யாவ ரேசிலர்
உய்ந்துதம் உயிர்கொடிவ் உலகத் துள்ளுளார். 6200

நஅ ஒல்வது மினையினும் உறுதி ஓரினும்
வெல்வது விரும்பினும் வினையம் வேண்டினும்
செல்வதங் கவருழைச் சென்று தீர்ந்தறக்
கொல்வது கருமமென் றுணரக் கூறினன். 6201

நக அ காவலன் தன்னெதிர் அவனைக் கைகவித்
தியாவதுண் டினிநமக் கென்னச் சொல்லினன்
கோபமும் வன்மையும் குரங்குக் கேயென
மாபெரும் பக்கன்என் றிருவன் மொழிவான். 6202

நகூ முந்தினர் முரணிலர் சிலவர் மொய்யமர்
நந்தினர் தம்மொடும் நனி நடந்ததோ
வந்தொரு குரங்கிடு தீயின் வன்மையால்
வெந்ததோ இலங்கையோ டரக்கர் வெம்மையும். 6203

சமி மானிடர் ஏவுவார் குரங்குவந் திவ்வூர்
தானெரி மடுப்பது நிருதர் தாகீனயே
ஆனவர் அது குறித் தழுங்கு வாரெனில்
மேனிகழ் வதற்குரை விளம்ப வேண்டுமோ. 6204

சக நின்றுநின் றிவைசில இயம்பி நேர்கிலன்
நன்றினி நரரொடு குரங்கை நாம்அறக்
கொன்றுநின் றல்லதோர் எண்ணங் கூடுமோ
என்றனன் இகல்குறித் தெரியுங் கண்ணினன். 6205

சஉ திசாதிசை போதுநாம் அரசன் செய்வினை
உசாவினன் உட்கினன் ஒறிதும் வாழ்வென்றுன்
பிசாசன்என் றொருபெயர் பெற்ற பெய்கழல்
நிசாசரர் உருப்புணர் நெருப்பு நீர்மையான். 6206

சஙு ஆரியன் தன்மைஈ தாயில் ஆய்வுறும்
காரியம் இதுஎனில் கண்ட ஆற்றினுல்
சீரியர் மனிதரே சிரியர் நாம்எனச்
சூரியன் பகைஞன்என் றொருவன் சொல்லினன். 6207

சச ஆழ்வினை நிலைமையும் அரக்கர் ஆற்றலும்
தாழ்வினை இதனின்மேல் பகரத் தக்கதோ
சூழ்வினை மனிதரால் தோன்றிற் றுமெனில்
வேழ்வியின் பகைஞனும் உரைத்து வெள்கினன். 6208

சடு தொகைநிலைக் குரங்குடை மனிதர்ச் சொல்லியென்
திகைநிலைச் சூளிதன் திறத்துச் சொல்லினும்
தகைநிறத் தெண்ணலன் சமைதல் நன்றிறைப்
புகைநிறக் கண்ணனும் புகன்று பொங்கினன். 6209

சசு மற்றவன் பின்னுற மற்றை யோர்களும்
இற்றது வேநலம் எண்ணை மற்றிலென்
றுற்றன உற்றன சொல்லி ஓங்கினர்
புற்றுரை அரவெனப் புழுங்கு நெஞ்சினர். 6210

*சளவெம்பிகல் அரக்கரை விலக்கிவீணை தேரா
நம்பியர் இருக்களன நாயகீன முன்னு
எம்பிளன கிற்கில்உரை செய்வன்இதம் என்னக்
கும்பகரு ணப்பெயரி னுன்உரை குறித்தான். 6211

சஅ நீஅயன் முதற்குலம் இதற்கொருவன் நின்ரூய்
ஆயிர மறைப்பொருள் உணர்ந்தறி வமைந்தாய்
தீவீன நயப்புறுதல் செய்தனீ தெரிந்தால்
ஏயின முதல்தொகைய இத்துணைய வேயோ. 6212

சக ஓவியம் அமைந்தநகர் தீஉற உளைந்தாய்
கோவியல் அழிந்ததென வேறொரு குலத்தோன்
தேவியை நயந்துசிறை வைத்தசெயல் நன்ரே
பாவியர் உறும்பழி இதிற்பழியும் உண்டோ. 6213

கும் நன்னகர் அழிந்ததென நாணீன நயத்தால்
உன்னுயிர் எனத்தகைய தேவியர்கள் உன்மேல்
இன்னகை தரத்தர ஒருத்தன்மீன உற்ருள்
பொன்னடி தொழத்தொழ மறுத்தல்புகழ் போலாம். 6214

குக என்ரொருவன் இல்உறை தவத்தியை இரங்கா
வன்தொழிலி னுய்மறை துறந்துசிறை வைத்தாய்
அன்ரொழிவ தாயின அரக்கர்புகழ் ஐயா
புன்தொழிலி னுர்இசை பொறுத்தல்புல மைத்தோ. 6215

குஉ ஆசில்பல தாரம்அவை அஞ்சிறை அடைத்தோம்
மாசில்புகழ் காதல்உறு வோம்வளமை கூறப்
பேசுவது மான்ம்இடை பேணுவது காமம்
கூசுவது மானிடரை நன்றுநம கொற்றம். 6216

குங சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டவிழ் மலர்க்குழலி னுளையினி மன்னு
விட்டிடுது மேலெளிய மாகுமவர் வெல்லப்
பட்டிடுது மேலதுவு நன்றுபழி யன்ரூல். 6217

குச மரன்படர் வனத்தொருவ னேசிலை வலத்தால்
கரன்படை படுத்தவனீ வென்றுகளீ கட்டால்
நிரம்பிடுவ தன்றிதுவும் நின்றதினி நம்பால்
உரம்படுவ தேயிதனின் மேல்உறுதி உண்டோ. 6218

ருரு வென்றிடுவர் மானிடவ ரேனும்அவர் தம்மேல்
நின்றிடை விடாதுநெறி சென்றுற நெருக்கித்
தின்றிடுதல் செய்கிலம் எனில்செறுன ரோடும்
ஒன்றிடுவர் தேவர்உல கேழுமுடன் ஒன்றும். 6219

ருசு ஊறுபடை ஊறுவதன் முன்னம்ஒரு நாளே
ஏறு கடல் ஏறிநரர் வானரரை எல்லாம்
வேறுபெய ராதபடி வேரொடும் அடங்க
நூறுவது வேகருமம் என்பது நுவன்றான். 6220

ருள நன்றுரைசெய் தாய்குமர நான்அது நினைந்தேன்
ஒன்றும்இனி ஆய்தல்பழு தொன்னலரை எல்லாம்
கொன்றுபெயர் வோம்நமர் கொடிப்படையை எல்லாம்
இன்றெழுக என்கஎன இராவணன் இசைத்தான். 6221

ருஅ என்றவன் இயம்பியிடும் எல்லையினில் வல்லே
சென்றுபடை யோடுசிறு மானிடர் சினப்போர்
வென்றுபெயர் வாய்அரச நீகொல்என வீரம்
நன்றுபொரீ தென்றுமகன் நக்கிவை நவின்றான். 6222

ருக ஈசன்அருள் செய்தனவும் ஏடவிழ் மலர்ப்பேர்
ஆசனம் உவந்தவன் அளித்தனவு மாயாப்
பாசமுதல் வெம்படை சுமந்துபலர் நின்றூர்
ஏசஉழல் வேன்ஒருவன் யானும்உளன் என்றான். 6223

கூய முற்றுமுத லாய்உலகம் மூன்றும்எதிர் தோன்றிச்
செற்றமுத லாஎடு செறுத்ததொர் திறத்து
வெற்றி உன தாகவிலை யாதொழிகில் என்னைப்
[1]பெற்றுமிலை யானும்நிற் பிறந்தும்இலன் என்றான்.

கூக குரங்குபட மேதினி குறைத்தலை நடம்போர்
அரங்குபட மானிடர் அவம்தலை படப்பார்
இரங்குபடர் சீதைபட இன்றிருவர் என்றூர்
சிரங்குவ டெனக்கொணர்தல் காணுதி சினத்தோய் 6225

கூஉ சொல்லிடை கிழிக்கில சுருங்கிய குரங்கென்
கல்லிடைக் குறிக்கும்உரு மிற்கடுமை காணும்
வில்லிடைக் கிறித்தமிடல் வாளிவெரு வித்தம்
பல்லிடை கிறித்திரிவ கண்டுபயன் உய்ப்பாய். 6226

---

1. (பிரதி) பெற்றுமிலன்.

சுஙூ யாணையிலர் தேர்புரவி யாதுமிலர் ஏயும்
தாணையிலர் நின்றதவம் ஒன்றுமிலர் தாமோ
கூனமுது கின்சிறு குரங்குகொடு வெல்வார்
ஆனவரும் மானிடவர் ஆண்மைஅழ கன்றே. 6227

சுசு நீரும்நில னும்நெடிய காலும்நிமிர் வானும்
பேரும்உல கியாவும்ஒரு நாள்இடை பெயர்த்தே
யாரும்ஒழி யாமல்நரர் வானரரை எல்லாம்
வேரும்ஒழி யாதவகை வென்றலது மீளேன். 6228

சுசு என்றடி இறைஞ்சினன் எழுந்துவிடை ஈமோ
வன்திறலி னுய்எனவும் வாள்எயிறு வாயில்
தின்றனன் முனிந்துநனி தீவினையை எல்லாம்
வென்றவரில் நன்றுணரும் வீடணன் விளம்பும். 6229

*சுசுஙூ நூலினுல் நுணங்கிய அறிவு நோக்கினர்
போலுமால் உறுபொருள் புகலப் பூட்சியோய்
காலமேல் வினைபொருள் உணரக் கற்பிலாப்
பாலன்நீ இனையன பகரற் பாலையோ. 6230

சுஎ கருத்திலான் கண்ணிலான் ஒருத்தன் கைக்கொடு
திருத்துவான் சித்திரம் அனைய செப்புவாய்
விருத்தர்மே தகையவர் வினைய மந்திரத்
திருத்தியோ இளமையால் முறைமை எண்ணலாய். 6231

சுஅ தூயவர் முறைமையே துடங்குந் தொன்மையர்
ஆயவர் நிற்கமற் றவுணர் ஆதியர்
தீயவர் அறத்தினுல் தேவர் ஆயது
மாயமோ வஞ்சமோ வன்மை யேகொலோ. 6232

சுகூ அறம்துறந் தமரரை வென்ற ஆண்தொழில்
திறம்தெரிந் திடில்அது தானும் செய்தவம்
நிறம்திறம் பாவகை இயற்று நீதியான்
மறந்திறந் தவர்தரும் வரத்தின் வண்மையால். 6233

எடு மூவரை வென்றமூன் றுலகு முற்றுறக்
காவலின் நின்று தம் களிப்புக் கைம்மிக
வீவன முடிவென வீய்ந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் சிறியோர். 6234

எக விஞைகளை வென்றுமேல் வீடு கண்டவர்
எனைவர்என் றியம்புகேன் அவர தியற்கையால்
முனைவரும் அமரரும் முன்னும் பின்னரும்
அனையவர் பிறர்உளர் யாவர் ஆற்றினர். 6235

எஉ பிள்ளைமை விளம்பினை பேதை நீயென
ஒள்ளிய புதல்வனை உரப்பி என்உரை
எள்ளலில் யாம்எனில் இயம்பல் ஆற்றுவன்
தெள்ளிய பொருள்என அரசற் செப்பினன்: 6236

எங எந்தைநீ யாயும்நீ எம்முன்நீ தவம்
வந்தனைத் தெய்வம்நீ மற்றும் முற்றும்நீ
இந்திரப் பெரும்பதம் இழக்கின் முயென
நொந்தனன் ஆதலின் நுவல்வ தாயினேன். 6237

எச கற்றுறு மாட்சியென் கண்ணின் முயினும்
உற்றுறு பொருள்தெரிந் துணர்தல் ஓயினும்
சொற்றுறு சூழ்ச்சியின் துணிவு சோரினும்
மூற்றுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினேய். 6238

எடு கோனகர் முழுவதும் ஙினது கொற்றமும்
சானகி எனும்பெயர் உலகின் தாயவள்
ஆனவள் கற்பினுல் வெந்த தல்லதோர்
வானரம் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ. 6239

எசு எண்பொருட் டொன்றினின் றெவரும் எண்ணினுல்
விண்பொருட் டொன்றிய உயர்வு மீட்சியும்
பெண்பொருட் டன்றியும் பிறிதுண் டாம்எனில்
மண்பொருட் டன்றியும் வரவும் வல்லவோ. 6240

எள மீனுடை நெடுங்கடல் இலங்கை வேந்தனின்
தானுடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வதோர்
மானிட மடந்தையால் என்னு வாய்மொழி
தேனுடை அலங்கலாய் இன்று தீர்ந்ததோ. 6241

எஅ ஏறிய நெடுந்தவம் இழைத்த எல்லோனாள்
ஆறிய பெருங்குணத் தறிஞன் ஆணையால்
கூறிய மனிதர்பால் கொற்றம் கொள்ளலே
வேறிலி அவர்வயின் வென்றி யாவதோ. 6242

எசு. ஏயது பிறிதுணர்ந் தெண்ண வேண்டுமோ
நீ ஒரு தனிஉல கேழும் நீந்துவாய்
ஆயிரம் தோளவற் காற்றல் தோற்றனை
மேயலே யாம்இனி விளம்ப வேண்டுமோ. 6243

அம. மேல்உயர் கயிலையை வென்ற மேலோனாள்
நாலுதோள் நந்திதான் நவின்ற சாபத்தால்
கூலவான் குரங்கினுள் குறுகும் தோளது
வாலிபால் கண்டனம் வரம்பில் ஆற்றலாய். 6244

அக. தியிடைக் குளித்தஅத் தெய்வக் கற்பினுள்
வாயிடை மொழிந்தசொல் மறுக்க வல்லமோ
நோய்உனக்கு யான்என நுவன்று ளாள்அவள்
ஆயவள் சீதைபண் டமுதில் தோன்றினுள். 6245

* சம்பரப் பெயருடைத் தானவர்க் கிறைவனைத் தனுவ லத்தால்
அம்பரத் தூடுபுக் கழிடைத் தலிதுமித் தமரர் உய்ய
உம்பருக் கிறைவனுக் கரசளித் துதவினன் ஒருவன் நேமி
இம்பரில் பணிசெயத் தசரதப் பெயரினன் இசை வளர்த்தான். 6246

மிடல்படைத் தொருவனைப் அமார்கோன் விடையதாய் வெரினின்மேலாய்
உடல்பதைத் தவுணரா யினரெலா மடியவாள் உருவி னனும்
அடல்படைத் தவனியைப் பெருவளம் தருகஎன் றருளி னனும்
கடல்படைத் தவரொடும் கங்கைதந் தவன்வழிக் கடவுள் மன்னன். 6247

அச. பொய்உரைத் துலகினில் சினவினுர் குலமறப் பொருது தன்மேல்
நெய்உரைத் துறைபின்இட் டறம்வளர்த் தொருவனைப் நெறியில் நின்றுன்
மைஉரைத் துலவுகண் மனைபால் வரம்அளித் தவைம ருதே
மெய்உரைத் துபிர்கொடுத் தமரரும் பெறுகிலா வீடு பெற்றுன். 6248

அரு. அனையவன் சிறுவர்எம் பெருமஉன் பகைஞர்ஆ னவரை அம்மா
இனையர்என் றுணர்திலை இருவரும் ஒருவரும் எதிர்கி லாதார்
மூனைவரும் அமரரும் முழுதுணர்ந் தவர்களும் முற்றும் மற்றும்
நினைவரும் தகையர்கம் விணைபினல் மனிதராய் எளிதின் கின்றுர். 6249

கோசிகப்பெயருடைக் குலமுனித்தலைவன்அக் குளிர்மலர்ப்பேர்
ஆசனத்தவனெடைவ் உலகமுந் தருவன்என் றமையல்உற்றுன்
ஈசளில்பெறுபடைக் கலம்இமைப் பளவில்எவ் உலகில்யாரும்
நாசம்உற் றிடநடப் பனகொடுத் தவைபிடித் துடையர் நம்ப.

எறுழ்வலிப் பொருவில்தோள் அவுணரோ டமரர்பண் டிகல்செய்காலத்
துறுகிறல் கலுழன்மேல் ஒருவன்நின் றமர்செய்தான் உடைய வில்லும்
தெறுசினத் தவர்கள்மூப் புரம்எருப் புறஉருத் தெய்த அம்பும்
குறுமுனிப் பெயரினு னிறைதவர்க் கிறைதரக் கொண்டு கின்றுன். 6251

அ அ. நாவினுல் உலகைநக் கிடுவதிக் களவிடற் குரிய நாளும்
மேவுதீ விடம்உயிர்ப் பனவெயில் பொழிஎயிற் றனவ வீரர்
ஆவமா மரியபுற் றுறைவமூற் றறிவருக் கழிவு செய்யும்
பாவகா ரியர்உயிர்ப் பதம்அலா திரைபெரு பகழி நாகம். 6252

பேருமோ ஒருவரால் அவர்களால் அல்லதிப் பெரிய வேனும்
நாருமூ ரியும்அரு நம்முடைச் சிலைகள்போல் நலியல்ஆகா
தாருவோ வேணுவோ தாணுவாய் உலகெலாம் தழுவிநிற்கும்
மேருவோ மால்வரைக் குலம்எலாம்அல்லவோவில் லுமன்னே.

உரம்ஒருங் கியதுநீர் கடையும்வா லியதுமார் புலகை மூடும்
மரம்ஒருங் கியகரா தியர்விரா தனதுமா மலைகள் மானும்
சிரம்ஒருங் கினஇனிச் செருஒருங் குளதெனில் தேவர்என்பார்
பரம்ஒருங்குவ தலால்பிறிதொருங்காததோர்பகையும்உண்டோ.

கூக. சொல்வரம் பெரியமா முனிவர்என் பவர்கள்தந் துணையி லாதார்
எல்வரம் பெரியதோள் இருவரே தமதொடு முலகம் யாவும்
வெல்வர்என் பதுதெரிந் தெண்ணினர் நிருதர்வேர் முதலும் வீயக்
கொல்வர்என்றுணர்தலால் அவரைவந்தமைவதோர் இசைவுகொண்டார்.

கூஉ. துஞ்சுகின் றிலர்களால் இரவுகண் பகலுநிற் சொல்ல ஒல்கி
நெஞ்சகின் றயரும்இந் நிருதர்பேர் சனகியாம் கெடிய தான
கஞ்சுகின் றனர்கள்தாம் நண்ணுவார் நரகம்என் றெண்ணி நம்மை
அஞ்சுகின் றிலர்கள்நின் சரண்அலால் அரண்இலா அமரர் அம்மா.

கஙு. புகன்மதிக் துணர்கிலா மையின்நமக் களிமைசால் பொறுமைகூர
நகைமதித் தனிமறப் பொலியவாள் ஒளிஇழந் துதைய நண்ணும்
பகன்மதிக் குவமைஆ யினமுகம் விபுதர்சால் பருவ நாளின்
அகன்மதிக் குவமைஆ யினதரா பதியுளார் வதனம் அம்மா. 6257

சிந்துமுந் துலகினுக்கு றுதிபுக் குருவொளித் துழறல்செய்வார்
இந்துவின் திருமுகத் திறைவிநம் உறையுளாள் என்றலோடும்
அந்தகன் முதலினோர் அமரரும் முனிவரும் பிறரும் அஞ்சார்
வந்துநம்உலகமும்வானமும் கண்டுவந் தகல்வர் மன்னே. 6258

சொலத்தகாதுன்னிமித்தங்களும்வரவரத்தொடர்வதான்னுள்
வெலத்தகா அமரரும் அவுணரும் செருவில்விட் டனவிடாத
குலத்தகால் வயநெடுங் குதிரையும்அதிர்மதக் குன்றும்இன்று
வலத்தகான் முந்துறத் தந்துநம் மனையிடைப் புகுது மன்னோ.

வாயினும் பல்லினும் புனல்வறந் துலறினுர் நிருதர் வைகும்
பேயினும் பெரிதுபேர் நரிகளும் புரிதரும் பிறிதும் எண்ணில்
கோயிலும் நகரமும் மடநலார் குழலும்நம் குஞ்சி யோடும்
தீயின்வெந்தன இனித் துன்நிமித்தம்பெறும்திறனும்உண்டோ.

கூள.சிந்தமா நாகரைச் செருமுருக் கியகரன் திரிசிரத் தோன்
முந்தமான் ஆயினுன் வாலியே முதலினோர் முடிவு கண்டால்
அந்தமா னிடவனே டாழிமா வலவனும் பிறரும் ஐயா
இந்தமா னிடவராம் .இருவரோ டெண்ணலாம் ஒருவர் யாரே.

இன்னம்ஒன் றுரைசெய்தால் இனிதுகேள்எம்பிரான் இருவராய
அன்னவர் தம்மொடும் வானரத் தலைவராய் அணுகி நின்ருர்
மன்னநம் பகைஞராம் வானுளோர் அவரோடும்மாறுகோடல்
கன்மம்அன் றிதுநமக்குறுதிஎன் றுணர்தலும் கருமம் அன்ருல்.

கூக. * இசையும் செல்வமும் உயர்குலத் தியற்கையும் எஞ்சா
வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடு மடியா
தசைவில் கற்பினவ் அணங்கைவிட் டருளுதி அதன்மேல்
விசையம் இல்எனச் சொல்லினுன் அறிஞரின் மிக்கான்.

ஈ. கேட்ட ஆண்தகை கரத்தொடு கைத்தலங் கிடைப்ப
பூட்ட வாய்தொறும் எயிற்றிளம் பிறைக்குலம் பொழிய
நாட்டம் தீஎழ நலம்திகழ் ஆரமும் மார்பும்
தோட்ட டங்களுங் குலுங்கநக் கினையன சொன்னன்.

ஈக. இச்சை அல்லன உறுதிகள் இசைக்குவன் என்ருய்
பிச்சர் சொல்லுவ சொல்லினை என்பெரு விறலைக்
கொச்சை மானிடர் வெல்குவர் என்றனைக் குறித்த
தச்ச மோஅவர்க் கன்பினை யாவதோ ஐயா. 6265

ஈஉ. ஈங்கு மானிடப் பசுக்களுக் கிலைவரம் என்ருய்
தீங்கு சொல்லினை திசைகளை உலகொடும் செருக்கால்
தாங்கும் ஆனையைத் தள்ளிஅத் தழல்நிறத் தோனை
ஓங்கல் ஒன்றெடும் எடுக்கமுன் வரம்கொண்ட துண்டோ.

ாந. மனக்கொ டன்றியும் வறியன வழங்கினை வானோர்
சினக்கொ டும்படை செருக்களத் தென்னைனென் செய்த
எனக்கு நிற்கமற் றிருவயிற் றென்னெடும் உதித்த
உனக்கு மானிடர் வலியராந் தகைமையும் உளதோ, 6267

ாச. சொல்லு மாற்றங்கள் தெரிந்திலை பன்முறை தோற்று
வெல்லும் ஆற்றலும் ஒருமுறை பெறுகதாம் விண்ணோர்
கல்லும் ஆற்றல்என் கிளையையும் என்னையும் களத்தில்
கொல்லும் ஆற்றலர் உளர்எனக் கோடலும் கொளலோ.

ாடு. தேவரில் பெற்ற வரத்தினை தென்பெரும் செருக்கென்
மூவரில் பெற்ற முடையவன் தன்னெடும் முழுதும்
காவலில் பெற்ற திகிரியோள் தன்னையும் கடந்த
தேவரில் பெற்ற வரத்தினுல் இயம்புதி இளையோய்.

ாசு. நந்தி சாபத்தின் நமைஅடும் குரங்கெனில் நம்பால்
வந்த சாபங்கள் எனைப்பல அவைசெய்த வலியே
திந்தி ராதியர் சித்தர்கள் இயக்கர்நம் இறுதி
சிந்தி யாதவர் யாரவை நம்மைஎன் செய்த. 6270

ாள. அரங்கில் ஆடுவார்க் கன்புபூண் டுடைவரம் அறியேன்
இரங்கி யான்நிற்ப என்வலி அவன்வயின் எய்த
வரங்கொள் வாலிபால் தோற்றனன் மற்றும்வே றுள்ள
குரங்கெ லாம்எனை வெல்லுமென் றெங்ஙனம் கோடி.

ாஅ. நீல கண்டனும் நேமியும் எதிர்நின்று நேரில்
வலும் அன்னவ ருடைவலி அவன்வயின் எய்தும்
சாலும் நல்வரம் நினைந்தவன் எதிர்செலல் தவிர்ந்து
வாலி தன்னையும் மனிதனும் மறைந்துநின் றெய்தான்.

ாகூ. ஊன வில்இறுத் தோட்டைமா மரத்துள் அம்போட்டிக்
கூனி சூழ்ச்சியால் அரசிழந் துயர்வனம் குறுகி
யான்இ றைத்திட இல்இழந் துயிர்சுமந் திருந்த
மானி டன்வலி நீஅலாது யாருளர் மதித்தார். 6273

ாம. என்று தன்உரை இழித்துநீ உணர்விலி யென்ன
நன்று போதுதி எழுகெனும் அரக்கனை நணுகி
ஒன்று கேள்இனம் உறுதியென் றன்பினன் ஓழியாத்
துன்று தாரவன் பின்னரும் இனையன சொன்னான். 6274

எங்க. தன்னின் முன்னிய பொருள்இலா ஒருதனித் தலைவன்
அன்ன மானிடன் ஆகிவந் தவதரித் தமைந்தான்
சொன்ன நம்பொருட் டும்பர்தம் சூழ்ச்சியின் துணிவால்
இன்னம் எகுதி போலுமென் றடிதொழு திரந்தான். 6275

எங்உ. அச்சொற் கேட்டவன் ஆழியான் என்றனை ஆயில்
சொச்சைத் துன்மதி எத்தனை போரிடைக் குறைந்தான்
இச்சைக் கேற்றன யான்செய்த இத்தனை காலம்
முச்சற் றுன்கொல்அம் முழுமுத லோன்என முனிந்தான்.

எங்ங. இந்தி ரன்தனை இரும்சிறை வைத்தநாள் இமையோர்
தந்தி கோடிறத் தகர்த்தநாள் தன்னையான் முன்னம்
வந்த போர்தொ றும் துரந்தநாள் வானவர் உலகைச்
சிந்த வென்றநாள் சிறியன்கொல் நீசொன்ன தேவன். 6277

எங்ச. சிவனும் நான்முகத் தொருவனும் தேவர்க்கும் தெரிய
அவனும் மற்றுள அமரரும் உடன்உறைந் தடங்கப்
புவனம் மூன்றும்நான் ஆண்டுள தாண்டவர் பொருவேல்
உவன் இயாமையி னேஅவர் ஓதுங்கவோ உரையாய். 6278

எங்சு. ஆயி ரம்பெருந் தோள்களும் அத்துணைத் தலையும்
மாயி ரும்புவி உள்ளடி அடக்குறும் வடிவும்
தீய சாலவும் சிறிதென நினைந்துயாம் தின்னும்
ஓயு மானிடன் உருவுகொண் டென்கொலோ உரவோன்.

எங்கூ. பித்த னுகிய ஈசனும் அரியும்என் பெயர்கேட்
டெய்த்த சிந்தையர் எகுழி எகுழி எல்லாம்
கைத்த வற்றினும் கடவிய புள்ளினும் முதுகில்
தைத்த வாளிகள் நின்றுள குன்றின்வீழ் தடித்தின். 6280

எங்எ. வெஞ்சி னம்தரும் போரின்நம் உடன்எழ வேண்டாம்
இஞ்சி மாநக ரிடைஉறைந் தீண்டினி திருந்தி
அஞ்சல் அஞ்சல்என் றயலிருந் தார்முகம் நோக்கி
நஞ்சின் வெய்யவன் கைதறிந் தருமென நக்கான். 6281

எங்அ. மின்னும் வீடணன் ஐயனின் தரமலாப் பெரியோர்
முன்னை நாள்இவன் முடிந்திடக் கினையொடு முடிந்தார்
இன்னம் உண்டுநான் இயம்புவ திரணியன் என்பான்
தன்னை உள்ளவா கேட்டிஎன் றுரைசெயச் சமைந்தான். 6282

உ—வது. இராவணன் மந்திரப்படலம்—முற்றிற்று.

ந-வது. இரணியன் வதைப்படலம்

க. வேதம் கண்ணிய தவம்எலாம் விரிஞ்சனே ஈந்தான்
போதம் கண்ணிய வரம்எலாம் தரக்கொண்டு போந்தான்
[1]காதும் கண்ணுதல் மலர்அயன் கடைமுறை காணுப்
பூதம் கண்ணிய வலிஎலாம் ஒருதனி பொறுத்தான். 6283

உ. எற்றை நாளினும் உளன்எனும் இறைவனும் அயனும்
கற்றை அஞ்சடைக் கடவுளும் காத்தளித் தழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினே அதன்புறத் துலவா
மற்றை அண்டமும் தன்பெய ரேசொல்ல வாழ்ந்தான்.

ங. பாழி வன்தடம் திசைசுமந் தோங்கிய பணைக்கைப்
பூழை வன்கரி இரண்டிரு கைகொடு பொருத்தும்
ஆழம் காணுதற் கரியவாய் அகன்றபேர் ஆழி
ஏழும் தன்இரு தாள்அள வெனக்கடந் தேறும். 6285

ச. வண்டல் தெண்திரை ஆற்றுநீர் செலுவென்று மருவான்
கொண்டல் கொண்டநீர் குளிர்ப்பில என்றதில் குளியான்
பண்டை தெண்திரைப் பரவைநீர் உவர்என்று படியான்
அண்டத் தைப்பொதுத் தப்புறத் தப்பினுல் ஆடும்.

ஞ. மரபின் மாபெரும் புறக்கடல் மஞ்சன மருவி
அரவின் நாட்டிடை மகளிரோ டின்னமு தருந்திப்
பரவும் இந்திரன் பதியினில் பகல்பொழு தாற்றி
இரவின் ஓலக்கம் நான்முகன் உலகில்வீற் றிருக்கும். 6287

ட. சார்வி மானத்திற் சந்திரன் தனிப்பதம் சரிக்கும்
தேரின் மேலினின் றிரவிதன் பெரும்பதம் செலுத்தும்
போரில் எண்திசை காவலர் கருமமும் பிடிக்கும்
மேரு மால்வரை உச்சிமேல் அரசுவீற் றிருக்கும். 6288

எ. நிலனும் நீரும்வெங் கனலொடு காலுமாய் நிமிர்ந்த
தலமும் நீடிய அவற்றினத் தலைவரை மாற்றி
உலவும் காற்றொடும் கடவுளர் பிறருமாய் உலகின்
வலியும் செய்கையும் வருணன்தன் கருமமு மாற்றும்.

அ. தாமரைக் கண்ணன் தழல்கண்ணன் பெயர்இவை தவிர
நாமம் தன்னதே உலகங்கள் யாவையும் நவிலற்
கூம வெங்கனல் அந்தணர் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியின் இமையவர் பேறெலாம் உண்ணும்.

---

1 [பிரதி] காதல்.

கூ. காவல் காட்டுதல் துடைத்தல் என்றித் தொழில்கடவா
மூவ ரும்இவை முடிக்கிலர் பிடிக்கிலர் முறைமை
ஏவர் மற்றவர் யோகியர் உறுபதம் இழந்தார்
தேவ ரும்அவன் தாள்அலா தருச்சனை செய்யார். 6291

ம. பண்டு வானவர் தானவர் யாவரும் பயிற்றித்
தெண்தி ரைக்கடல் கடைதர வலியது தேடிக்
கொண்ட மத்தினைக் கொற்றத்தன் குவவுத்தோட் கமைந்த
தண்டெ னக்கொளல் உற்றது நொய்தெனத் தவிர்ந்தான்.

மக. மண்ட லம்தரு கதிரவன் வந்துபோய் மறையும்
எண்ட லம்தொடற் கரியன தடவரை இரண்டும்
கண்ட லம்பசும் பொன்னிறத் தவற்கிரு காதில்
குண்ட லங்கள்மற் றிறன்இனிப் பெருவலி கூறல். 6293

மஉ. மருக்கொள் தாமரை நான்முகன் முதலிய மறையோர்
குருக்க ளோடும்கற் ருேதுவ தவன்பெரும் கொற்றம்
சுருக்க நான்மறை தொன்றுதொட் டுயிர்தொறும் தோன்ரு
திருக்கும் தெய்வமும் இரணிய னேநம என்னும். 6294

மங. மயரு மன்னெடுங் சேவடி மண்ணிடை வைப்பின்
அயரும் வாள்எயிற் ருயிரம் நனந்தலை அனந்தன்
உயரு மேல்அண்ட முகடுதன் முடியுற உயரும்
பெயரு மேல்நெடும் பூதங்கள் ஐந்தொடும் பெயரும் 6295

மச. பெண்ணில் பேரெழில் ஆணினில் அலியினில் பிறிதில்
உள்ளிற் கும்உயிர் உள்ளதில் இல்லதில் உலவான்
கண்ணில் காண்பன கருதுவ யாதினும் கழியான்
மண்ணில் சாகிலன் வானினும் சாகிலன் வரத்தால். 6296

கரு. தேவர் ஆயினர் எவரினும் திரிதரும் இயக்கர்
யாவ ராலும்மற் றெண்ணவும் நினைக்கவும் இயன்ற
கோவ மால்அயன் மானிடன் யாவரும் கொல்ல
ஆவி தீர்கிலன் ஆற்றலும் தீர்கிலன் அனையான். 6297

மசு. நீரில் சாகிலன் நெருப்பினும் சாகிலன் நிமிர்ந்த
மாரு தத்தினும் மற்றுமற் றெவற்றினும் மாளான்
ஓரும் தேவரும் முனிவரும் பிறர்களும் உரைக்கும்
சாரும் சாபமும் அன்னவன் தனைச்சென்று சாரா. 6298

மௌ. உள்ளில் சாகிலன் புறத்தினும் உலக்கிலன் உலவாக்
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம் யாவையும் கொல்லா
நள்ளில் சாகிலன் பகலினில் சாகிலன் நமனுர்
கொள்ளச் சாகிலன் ஆர்இனி அவன்உயிர் கொள்வார். 6299

மஅ. பூதம் ஐந்தொடும் பொருந்திய உருவினுல் புரளான்
வேதம் நான்கினும் விளம்பிய பொருள்களால் வீயான்
தாதை தன்னைத்தான் தனிக்கொலை சூழினும் சாகான்
ஈதவன்நிலை எவ்வுல கங்கட்கும் இறைவன். 6300

மக. ஆயவன்தனக் கருமகன் அறிஞருக் கறிஞன்
தூயர் என்றவர் யாரினும் மறையினும் தூயன்
நாயகன்தனி ஞானிநல் அறத்திற்கும் நாதன்
தாயின் மன்உயிர்க் கன்பினன் உளன்ஒரு தக்கோன். 6301

உம. வாழி யான்அவன் தனைக்கண்டு மனமகிழ்ந் துருகி
ஆழியையநீ அறிதியால் மறைஎன அறைந்தான்
ஊழி யும்கடந் துயர்கின்ற ஆயுளான் உலகம்
ஏழும் ஏழும்வந் தடிதொழ அரசுவீற் றிருந்தான். 6302

உக. என்னுர் அந்தணன் எல்லையில் அறிஞனை ஏவி
நன்றுநீ இவற் குகவுதி மறைஎன நவின்றுன்
சென்று மற்றவன் தன்னெடும் ஒருசிறை சேர்ந்தான்
அன்று நான்மறை முதலிய ஓதுவான் அமைந்தான். 6303

உஉ. ஓகப் புக்கபின் உந்தைபேர் உரைஎன லோடும்
போதத் தன்செவித் துளைஇரு கையினுல் புதையா
மூதக் கோப்இது நற்றவம் அன்றென மொழியா
வேதத் துட்சியின் மெய்ப்பொருள் பெயரினை விரித்தான்.

உங. ஓரோ நாரா யணஎன் றுணர் வுருகித்
தாளைமந் திருதடக் கையும் தலையின்மேல் தாங்கிப்
பூநிறக் கண்கள் புனல்உக மயிர்ப்புறம் பொடிப்ப
ஞான நாயகன் இருந்தனன் அந்தணன் நடுங்கி. 6305

உச. கெடுத்தொ ழிந்தனை என்னையும் உன்னையும் கெடுவாய்
படுத்தொ ழிந்தனை பாவிஎத் தேவரும் பகர
அடுத்த தன்றியே அயலொன்று பகரின் அறிவின்
எடுத்த தென்இது என்செய எண்ணினை என்றுன். 6306

உடு. என்னை உய்வித்தேன் எந்தையை உய்வித்தேற் கினிய
உன்னை உய்வித்திவ் உலகெலாம் உய்விப்பான் அமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர் மொழிவது மொழிந்தேன்
என்ன குற்றம்நான் இயம்பினன் இயம்புதி என்றான்.

உசு. முந்தை வானவர் யாவர்க்கு முதல்வர்க்கும் முதல்வன்
உந்தை மற்றிவன் திருப்பெயர் உரைசெய ற்குரிய
அந்த ணாளன்நான் என்னினும் அறிதியோ ஐய
எந்தை இப்பெயர் உரைத்தெனைக்கெடுத்திடல்என்றான்.

உள. வேத பாரகன் அவ்வுரை விளம்பலும் விமலன்
ஆதி நாயகன் பெயர்அன்றி யான்பிறி தறியேன்
ஓத வேண்டுவ தில்லைஎன் அறிவினுக் கொன்றும்
போதி யாததும் இல்லைஎன் றிகையிவை புகன்றான். 6309

உஅ. தொல்லை நான்மறை வரன்முறை துணிபொருட் கெல்லாம்
எல்லை கண்டவன் அகம்புகுந் திடங்கொண்ட தென்னுள்
இல்லை வேறினிப் பெரும்பதம் யானறி யாத
வல்லை யேல்இனி ஓதுவி நீதியின் வழாத. 6310

உக. ஆரைச் சொல்லுவ தந்தணர் அருமறை அறைந்தோர்
ஓரச் சொல்லுவ துண்டுகொல் உபநிட தங்கள்
தீரச் சொல்பொருள் தேவரும் முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவ தல்லது பிறிதும்ஒன் றுளதோ. 6311

நம. வேதத் தாலும்நல் வேள்வியி னாலும்மெய் உணர்ந்த
போதத் தாலும்அப் புறத்துள எப்பொரு ளாலும்
சாதிப் பார்பெறும்பெரும்பதம்தலைக்கொண்டுசமைந்தேன்
ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம்ஒன் றுளதோ.

நக. காடு பற்றியும் கனவரை பற்றியும் கறைத்தோல்
மூடு பற்றியும் முண்டித்து நீட்டியும் முறைசால்
வீடு பெற்றவர் பெற்றதின் விழுமிதென் றுரைக்கும்
மாடு பெற்றன மற்றினி என்பெற வருந்தி. 6313

நஉ. செவிக ளால்பல கேட்டில ராயினுந் தேவர்க்
கவிகொள்நான்மறைஅகப்பொருள் புறப்பொருள் அறிவோர்
கவிக ளாகுவார் காண்குவார் மெய்ப்பொருள் காலாற்
புவிகொள் நாயகற் கடியவர் அடிமையிற் புக்கார். 6314

நந. எனக்கும் நான்முகத் தோருவற்கும் யாரினும் உயர்ந்த
தனக்கும் தன்னிலை அறிவரும் ஒருதனித் தலைவன்
மனக்கு வந்தன வந்தன யாவையும் மறையோய்
உனக்கும்இன்ன தின் நல்லதொன் றில்லெனஉரைத்தான்.

நச. மாற்றம் யாதொன்றும் உரைத்திலன் மறையவன் மறுகி
ஏற்றம் என்னெனக் கிறுதிவந் தெய்திய தென்ன
ஊற்றம் இல்லவன் ஓடினன் கனகணை உற்றான்
தோற்ற வந்ததோர் கனமுகண் டேன்எனச் சொன்னான்.

நரு. எந்தை கேள்எனக் கிம்மைக்கும் மறுமைக்கும் இயம்பச்
சிந்தை யால்இறை நினைத்தற்கும் அடாதன செப்பி
முந்தை யேநினைந் தென்பொருள் முற்றுமென் றுரைத்துன்
மைந்தன் ஓதிலன் வேதம்என் றுரைத்தனன் வணங்கி.

நசு. அன்ன கேட்டவன் அந்தண அந்தணர்க் கடாத
முன்னர் யாவரும் மொழிதரு முறைமையில் படாத
தன்ன துள்ளுடை உணர்ச்சியால் புதுவது தந்த
தென்ன சொல்லவன் இயம்பிய தியம்புதி என்றான். 6318

நஎ. அரசன் அஃதுரை செய்தலும் மறையவன் அஞ்சிச்
சிரத லம்கரம் சேர்த்திடச் செவித்துளை சேர்ந்த
உரகம் அன்னசொல் யான்உனக் குரைசெயில்உரவோய்
நரகம் எய்துவன் நாவும்வெந் தழும்என நவின்றான். 6319

நஅ. கொணர்கமைந் தனவல்விரைந் தென்றனன்கொடியோன்
உணர்வி னெஞ்சினர் ஏவலர் கடிதினில் ஓடிக்
கணனின் எய்தினர் அருள்எனத் தாதையைக் கண்டான்
துணையி லான்தனைத் துணைஎன உடையஅத் தூயோன். 6320

நக. தொழுத மைந்தனைச் சுடர்மணி மார்பிடைச் சுண்ணம்
எழுத அன்பினில் இறுகுறத் தழுவிமா டிருத்தி
முழுதும் நோக்கிநீ வேதியன் கேட்கிலன் முனியப்
பழுது சொன்னசொல் என்னுப காருதி என்றான். 6321

சம. சுருதி ஆதிய துடங்குறும் வேலியில் சொன்னோன்
ஒருவன் யாவர்க்கும் நாயகன் திருப்பெயர் உரைக்க
கருதக் கேட்டிடக் கட்டுரைத் திடர்க்கடல் கடக்க
உரிய மற்றிதி னல்லதொன் றில்லென உரைத்தான்.

சக. தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெயத் தீயோன்
தாவில் வேதியன் தக்கதே உரைசெயத் தக்கான்
ஆவ தாகுக அன்றெனில் அறிகுவன் அன்றே
யாவ தவ்உரை விளம்புதி விரைவினில் என்றான். 6323

சஉ. காமம் யாவதும் தருவதும் அப்பதம் கடந்தால்
சேம வீடுறச் செய்வதும் செந்தழல் முகத்த
ஓம வேள்வியின் உறுபயன் துய்ப்பதும் ஒருவன்
நாமம் அன்னது கேள்நமோ நாராய ணைய. 6324

சங. மண்ணி னின்றுமேல் மலர்அயன் உலகுற வாழும்
எண்ணில் பூதங்கள் நிற்பன திரிவன இவற்றின்
உண்ணி றைந்தன கரணத்தி னூங்குள உணர்வும்
எண்ணு கின்றதிவ் எட்டெழுத் தேபிறி தில்லை. 6325

சச. முக்கட் டேவனும் நான்முகத் தொருவனும் முதலாய்
மக்கட் காயும்இம் மந்திரம் மறந்தவர் இறந்தார்
புக்குக் காட்டுவ தரிதிது பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கினர் அல்லவர் அதன்நிலை உணரார். 6326

சரு. தோற்றம் என்னும்அத் தொல்வினைத் தொடுகடற்சுழிநின்
றேற்று நன்கலம் அருங்கலம் யாவர்க்கும் இனிய
மாற்ற மங்கல மாதவர் வேதத்தின் வைப்பில்
தேற்ற மெய்ப்பொருள் திருந்தமற் றிதன்இல்லைச் சிறந்த.

சசு. உன்னு யிர்க்கும் என்உயிர்க்கும் இவ்உல கத்தின் உள்ள
மன்னு யிர்க்கும்ஈ துறுதிஎன் றுணர்வுற மதித்துச்
சொன்ன இப்பொருள் என்றனன் அறிஞரில் தூயோன்
மின்னு யிர்க்கும்வேல் இரணியன் தழல்எழ விழித்தான்.

சள. இற்றை நாள்வரை யான்உள நாள்முதல் இப்பேர்
சொற்ற நாவையும் கருதிய மனத்தையும் சுடும்என்
ஒற்றை ஆணைமற் றியார்உனக் கிப்பெயர் உரைத்தார்
கற்ற தாபொடு சொல்லுதி விரைந்தெனக் கனன்றான். 6329

சஅ. முனிவர் வானவர் முதலினர் மூன்றுல கத்தும்
எனைவர் உள்ளவர் யாவரும் என்இரு கழலே
நினைவ தோதுவ தென்பெயர் நினக்கிது நேர
அனைவர் அஞ்சுவர் மைந்தநீ யாரிடை அறிந்தாய். 6330

சகூ. மறங்கொள் வெஞ்செரு மலிகுவான் பன்முறை வந்தான்
கறங்கு வெஞ்சிறைக் கலுழன்தன் கடுமையில் கழிந்தான்
பிறங்கு தெண்திரைப் பெருங்கடல் புக்கினம் பெயரா
துறங்கு வான்பெயர் உறுதியென் றுரைத்தனர் குரைத்தார். 6331

சும. பரவை நுண்மணல் எண்ணினும் எண்ணரும் பரப்பில்
குரவ ரென்குலத் துள்ளவர் அவன்கொலக் குறைந்தார்
அரவின் நாமத்தை எலியிருந் தோதினுல் அதற்கு
விரவு நன்மையென் றுன்மதி விளம்பென வெகுண்டான்.

சுக. வயிற்றி னுள்உல கேழினை டேழையும் வைக்கும்
அயிர்ப்பில் ஆற்றல்எம் அண்ணலீ னனம்ஒன் றுகி
எயிற்றி னுல்எறிந் தின்னுயிர் உண்டவன் நாமம்
பயிற்ற வோஉனப் பயந்தது நான்எனப் பகர்ந்தான்.

சுஉ. ஒருவன் யாவர்க்கும் எவ்உல கத்துக்கும் முதல்வன்
தருதல் காக்குதல் தவிர்த்தல்என் றிவைசெயத் தக்கான்
கருமத் தால்அன்றிக் காரணத் தால்உள்ள காட்சி
திருவி லீமற்றி தெம்மறைப் பொருள்எனத் தெரிந்தாய். 6334

சுங. ஆதி அந்தங்கள் அதனின்மற் றில்லிபே ருலகின்
வேதம் எங்ஙனம் அங்ஙனம் அவைசொன்ன விதியால்
கோதில் நல்வினை செய்தவர் உயர்குவர் குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர் இதுமெய்ம்மை தெரியில். 6335

சுச. செய்த மாதவம் உடைமையில் அரிஅயன் சிவன்என்
றெய்தி னுர்பதம் இழந்தனர் யான்தவம் இயற்றிப்
பொய்யில் நாயகம் பூண்டபின் இனியன புரிதல்
நொய்ய தாகும்என் றெவரும்எம் ஏவலின் நுழைந்தார்.

சுடு. வேள்வி யாதிய புண்ணியம் தவத்தொடும் விலக்கிக்
கேள்வி யாவையும் தவிர்த்தனர் அவர்கிளர் பகையைத்
தாழ்வி யாதன செய்யும்என் றனைஅவர் தம்பால்
வாழ்வி யாதவர் எவ்வலிப் புறங்கொண்டு வாழ்வார். 6337

சுசு. பேதைப்பிள் ளைஈ பிழைத்ததுபொறுத்தனன்பெயர்த்தும்
ஏதில் வார்த்தைகள் இனையன விளம்பலீ முனிவன்
யாது சொல்லினன் அவைஅவை இதம்என எண்ணி
ஓது போதிஎன் றுரைத்தனன் உலகினும் உயர்ந்தோன். 6338

நள. உரையுள துணர்த்துவன் உணர்ந்து கோடியேல்
விரையுள அலங்கலாய் வேத வேழ்வியின்
கரையுள யாவையும் கற்கும் கல்வியின்
பிரையுள என்பது மைந்தன் பேசுவான். 6339

நஅ. வித்தின்றி விளைவதொன் றில்லை வேந்தனின்
பித்தின்றி உணர்தியேல் அளவைப் பெய்குவன்
உய்த்தொன்றும் ஒழிவின்றி உணர்தற் பாற்றெனக்
கைத்துன்று நெல்லியங் கனியில் காண்டியால். 6340

நக. தன்னுளே உலகங்கள் எவையும் தந்தவை
தன்னுளே நின்றுதான் அவற்றுள் தங்குவோன்
பின்னிலன் முன்னிலன் ஒருவன் பேர்கிலன்
தொன்னிலை ஒருவரால் துணியற் பாலதோ. 6341

கூ. சாங்கியம் யோகமென் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருள்எலாம் வேறு காண்பன
ஆங்கவை உணர்ந்தவர்க் கன்றி அன்னவன்
ஓங்கிய தன்னிலை உணரற் பாலதோ. 6342

கூக. சித்தென வருமறைச் சிரத்துத் தேறிய
தத்துவம் அவனது தன்மைத் தாம்உணர்
வித்தகர் அறிகுவர் வேறு வேறுள
பித்தரும் உணர்கிலர் வீடு பெற்றிலார். 6343

கூஉ. அளவையால் அளப்பரி தறிவின் அப்புறத்
துளவையா உபநிட தங்கள் ஓதுறு
கிளவியார் பொருள்களால் கிளத்து முதவன்
களையார் அறிகுவர் மெய்ம்மை கண்டிலார். 6344

கூங. மூவகை உலகுமாய்க் குணங்கள் மூன்றுமாய்
யாவரும் எவையுமாய் எண்ணில் வேறுபட்
டோவலில் ஒருநிலை ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ. 6345

கூச. கருமமும் கருமத்தின் பயனும் அப்பயன்
தருமுதல் தலைவனும் தானும் தானவன்
அருமையும் பெருமையும் அறிவ ரால்அவர்
இருமையென் றுரைசெயுங் கடலின் றேறுவார். 6346

சுடு. மந்திர மாதவம் என்றும் மாலிய
தந்துறு பயம்இவை முறையில் சாற்றிய
நந்தலில் தெய்வமாய் நல்கு நான்மறை
அந்தமில் வேழ்விமாட் டவியு மாரவன். 6347

சுசு. முற்பயப் பயன்தரு முன்னின் நின்றவை
பிற்பயப் பயன்தரும் பின்பு போலவன்
தற்பயத் தாற்றருந் தரும மில்லையே
அற்புத மாயையால் அறிகி லார்பிறர். 6348

சுஎ. ஒருவினை ஒருபயன் இன்றி உய்க்குமோ
இருவினை னன்பவை இயற்றும் ஈட்டவை
கருதின கருதின காட்டு கின்றது
தருபரன் அருளினிற் சான்று வேண்டுமோ. 6349

சுஅ. ஓராகுதி கடைமுறை வேழ்வி ஓம்புவோர்
அராஅணை அமலனுக் களிப்ப ரேல்அது
சராசரம் அனைத்தினுஞ் சாரும் என்பது
பராவரு மறைப்பொருள் பயனும் அன்னதால். 6350

சுக. பகுதியின் உட்பயன் பயந்த தன்ன தின்
மிகுதியின் மிகுதிகள் எவையு மேலனம்
வகுதியின் வைத்தது வரசு போக்கறு
புகுதியின் மாதவர் புலத்திற் ருகுமோ. 6351

எம. எழுத்தியல் நாளத்தின் எண்ணி லாவகை
முழுத்தனி நான்முகன் முதல முற்றுயிர்
வழுத்தரும் பொகுட்டதோர் ஒளியின் வைகுமால்
விழுத்தனிப் பலவிதழ் விரையு லாமுகும். 6352

எக. கண்ணினும் கரந்துளன் கரந்து காட்டுவான்
உண்ணிறைந் திடும்உணர் வாகி உண்மையான்
மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினும் நெடியவன் ஒருவன் எண்ணிலான். 6353

எஉ. சிந்தையில் செய்கையில் சொல்லில் சேர்ந்துளான்
இந்தியம் தொறும்உளன் உற்ற தெண்ணினுல்
முந்தையோர் எழுத்தென வந்து மும்முறைச்
சந்தியும் பதமுமாய்த் தோன்றும் தன்மையான். 6354

எங. காமமும் வெகுளியும் முதல கண்ணிய
தீமையும் வன்மையுந் தீர்க்குஞ் செய்கையன்
நாமமும் பிறர்கொள நலிகொடா னெடுஞ்
சேமமும் பிறர்களால் செப்ப லாகுமோ. 6355

எச. காலமுங் கருவியும் இடனுமாய்க் கடைப்
பாலமைப் பயனுமாய்ப் பயன்துய்ப் பானுமாய்ச்
சீலமும் அவைதருந் திருவு மாய்உளன்
ஆலமும் வித்தும்ஒத் தடங்கும் ஆண்மையான். 6356

எடு. உள்ளுற உணர்வினின் உணர்ந்த ஓசையோர்
தெள்விளி யாழிடை தெரிக்குஞ் செய்கையன்
உள்ளுளன் புறத்துளன் ஒன்றும் நண்ணலான்
தள்ளரு மறைகளும் அருளுந் தன்மையான். 6357

எசு. ஓமெனும் ஒருமூத் ததனின் உள்ளுயிர்
ஆமவன் அறிவினுக் கறிவும் ஆகுவான்
தாமமும் உலகமும் தானும் சார்தலால்
தூமவெங் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான்.

எள. காலியின் நறுமலர் ஒன்றில் கட்டிய
மாலியின் மலர்புரை சமய வாதியர்
சூலியின் திருகலால் சொல்லு வோர்க்கெலாம்
வேலியுந் திரையும்போல் வேறு பாடிலான். 6359

எஅ. இன்னதோர் தன்மைய னிகழ்வுற் றெய்திய
நன்னெடுஞ் செல்வமும் நாளும் நாமற
மன்னுயிர் இழத்திஎன் றஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவன் நாமம்என் றுணரச் சொல்லினன். 6360

எக. எதிரில் நின்றவன் இவைஉரைத் திடுதலும் எவ் உலகமும் எஞ்ச
முதிரும் வெங்கத மொழிகொண்டு மூண்டது முதுகடம் கடு வேய்ப்பக்
கதிரும் வானமுஞ் சுழன்றன நெடுநிலம் கம்பித்த கனகன் கண்
உதிரங் கான்றன தேன்றின புகைக்கொடி உமிழ்ந்தது கொடுந்தீயே.

அ. வேறும் என்னெடு தரும்பகை பிறிதினி வேண்டலன் விஜயத்தால்
ஊறு என்னுளே உதித்தது குறிப்பினி உணர்குவ துளதென்றால்
ஈறில் என்பெரும் பகைஞனுக் கன்புசால் அடியன்நான் என்கின்றான்
கோறிர் என்றனன் என்றலும் பற்றினர் கூற்றினுங் கொலைவல்லோர்.

அக. குன்று போல்மணி வாயிலில் நெடும்புறத் துய்த்தனர் மழுக்கூர்வான்
ஒன்று போல்வன ஆயிர மீதெடுத் தோச்சினர் உயிரோடும்
நின்று தீர்குதும் என்குனர் உருமெனத் தெழிக்குனர் சினவேழக்
கன்று புல்லிய கோளரிக் குழுவெனக் கனல்கின்ற தறுகண்ணர்.

அஉ. தாயின் மன்னுயிர்க் கன்பினன் தன்னெயத் தவமெனுந் தகவில்லோர்
ஏயெ னுந்துணை மாத்திரத் தெய்தன எறிந்தன எறிதோறுந்
தூய வன்தனைத் தீயவன் துணிவிலா ஒருவனைத் துன்னைதார்
வாயின் வைதன ஒத்தன அத்தனை மழுவெழுக் கூர்வாளும். 6364

அங. எறிந்த எய்தன எற்றின குத்தின ஈர்ந்தன படையாவும்
முறிந்து நுண்பொடி யாயின முடிவிலன் முனிவிலான் முழுமேனி
சொறிந்த தன்மையுஞ் செய்திலை தன்மனந் தூயவன் றுணிவொடும்
அறிந்த நாயகன் சேவடி மறந்திலன் அயர்த்திலன் அவன்காமம்.6365

அச. உள்ள வான்படை உலப்பில யாவையும் உதிர்ந்தன உரவோய்உன்
பிள்ளை மேனிக்கோர் ஆனிவந்திலதினிச்செயலென்கொல்பிறிதென்னக்
கள்ள உள்ளத்தன் கட்டினன் கருவிகள் கதுமெனக் கனல்மீது
தள்ளு மின்என உரைத்தனன் வயவரும் அத்தொழில் தலைநின்றார்.

குழியில்இந்தனம்அடுக்கினர்.ஆயிரங்குடன்தொறுங்கொணர்ந் தெண்ணெய்
இழுது நெய்சொரிந் திட்டனர் நெருப்பெழுந் திட்டது விசும்பெட்ட
அழுஅ நின்றவர் அயர்வுற ஐயனைப் பெய்தனர் அரியென்று
தொழுது நின்றனன் நாயகன் தாளிணை குளிர்ந்தது சுடுதீயே. 6367

அசு. கால வெங்கனல் கதுவிய காலியில் கற்புடை யவள்சொற்ற
சில கல்லுரை சீதளம் மடுத்தலிற் கிழியொடு நெய்தீற்றி
ஆலம் அன்னகம் அரக்கர்கள் வயங்கெரி மடுத்தலில் அநுமன்தன்
கூல மாம்என என்புறக் குளிர்ந்தது குருமணித் திருமேனி. 6368

அள. சுட்ட தில்லைநின் தோன்றலைச் சுடர்க்கனல் சுழிபடர் அழுவத்துள்
இட்ட போதினும் என்இனிச் செயத்தக்க தென்றனர் இகல்வெய்யோன்
கட்டித் தீயையும் கடுஞ்சிறை இடுமின்கள் அக்கள்வனைக் கவர்ந்துண்ண
எட்டுப் பாம்பையும் விடுமின்கள் என்றனன் எரிகின்ற தறுகண்ணன்.

அஅ. அநந்த னேமுத லாகிய நாகங்கள் அருளென்கொல் எனஅன்னன்
நினைந்த மாத்திரத் தெய்தின நேர்ந்தன நெருப்புகு பகுவாயால்
வினைந்த தாரவன் மேனியி னன்றன் வாளெயி றுறஊன்றிச்
சினந்து மீக்கொளக் கடித்தன துடித்திலன் திருப்பெயர் மறவாதான்.

அகு. பக்க நின்றிவை பயத்தினிற் புயற்றகைப் பசும்புனல் பகுவாயால்
கக்க வெஞ்சிறைக் கலுழனும் நடுங்குறக் கவ்விய காலத்துச்
செக்கர் மேகத்துச் சிறுபிறை நுழைந்தன செய்கைய வலிசிந்தி
உக்க பற்குவை ஒழுகின எயிற்றிரும் புழைதொறும் அமுதூறி.

*கூஅ. சூழப் பற்றின சுற்றும் எயிற்றில்
போழக் கற்றிலை என்று புகன்ரூர்
வாழித் திக்கின் மயக்கின் மதந்தாழ்
வேழத் திற்கிடு மின்என விட்டான். 6372

கூக. பசையில் தங்கலில் சிந்தையர் பல்லோர்
திசையில் சென்றனர் செப்பினன் என்னும்
இசையில் தந்தனர் இந்திரன் என்பான்
விசையத் திண்பணை வெஞ்சின வேழம். 6373

கூஉ. கையில் கால்களில் மார்பு கழுத்தில்
தெய்வப் பாசம் உறப்பிணி செய்தார்
மையற் காய்கரி முன்னுற வைத்தார்
பொய்யற் ருனும்இ தொன்று புகன்ருன். 6374

கூங. எந்தாய் பண்டொர் இடங்கர் விழுங்கா
முந்தா நின்ற முதல்பொரு ளேயென்
றுந்தாய் தந்தை இனத்திபம் ஓத
வந்தான் வந்தென் மனத்தினன் என்ருன். 6375

கூச. என்னு முன்னம் இருங்களி றுந்தன்
பொன்னுர் ஓடை பொருந்த நிலத்தில்
அன்னு னீத்தொழு தஞ்சி அகன்ற
தொன்னுர் அத்திறம் எய்தி உரைத்தார். 6376

கூடு. வல்வீ ரைத்துயில் வானி மதித்தென்
நல்வீ ரத்தை அறித்தது நண்ணுற்
றெல்வீர் ஒற்றை உரக்கரி தன்னைக்
கொல்வீர் என்றனன் நெஞ்சு கொதிப்பான். 6377

கூசு. தன்னைக் கொல்லினர் சாருத லோடும்
பொன்னைக் கொல்லும் ஒளிப்புகழ் பொய்யா
மன்னைக் கொல்லிய வந்துவ ராரா
மின்னைக் கொல்லும் எயிற்றின் இயற்ருல். 6378

கூள. வீரத் திண்திறல் மார்பினில் வெண்கோ
டாரக் குத்தி அழுத்திய தாக
வாரத் தண்டலை வாழை மடற்சூழ்
ஈரத் தண்டென இற்றன எல்லாம். 6379

கூஅ. வெண்கோ டிற்றன மேவலர் செய்யுங்
கண்கோ டற்பொறி யிற்கடி தேகி
எண்கோ டற்கரி தென்ன வெகுண்டான்
திண்கோ டைக்கதி ரிற்றெறு கண்ணன். 6380

கூக. தள்ளத் தக்கில் பெருஞ்சயி லத்தோ
டள்ளக் கட்டி அடிக்கி விசித்துக்
கள்ளத் திங்கிவ னீக்கரை காணு
வெள்ளத் துய்த்திடு மின்னென வீட்டான் 6381

ஈ. ஓட்டிக் கொல்ல உணர்ந்து வெகுண்டான்
வீட்டிட் டான்அலன் என்று விரைந்தார்
கட்டிக் கல்லொடு கால்விசை யிற்போய்
இட்டிட் டார்கட லின்நடு எந்தாய். 6382

ஈக. நடுவொக் கும்தனி நாயகன் நாமம்
விடுகிற் கின்றிலன் ஆதலின் வேலை
மடுவொத் தங்கதில் வங்கமும் அன்றுய்க்
குடுவைத் தன்மைய தாயது குன்றம். 6383

ஈஉ. தலையில் கொண்ட தடக்கை யினுன்தன்
நிலையில் தீர்வில் மனத்தின் நினைந்தான்
சிலையில் திண்புன லிற்சினை ஆலின்
இலையில் பிள்ளை எனப்பொலி கின்றுன். 6384

ஈந. மோதுற் றுர்திரை வேலையின் மூழ்சா
மீதுற் றுர்சிலை மீது கிடந்தான்
ஆதிப் பண்ணவன் ஆயிரம் நாமம்
ஓதுற் றுன்மறை ஒல்லை உணர்ந்தான். 6385

*ஈச. அடியார் அடியேன் எனும்ஆர் வமலால்
ஓடியா வலியென் உடையேன் உளனே
கொடியாய் குறியாய் குணம்ஏ தும்இலாய்
நெடியாய் அடியேன் நிலைநேர் குதியோ. 6386

ாடு. கள்ளந் திரிவார் அவர்கை தவம்நீ
உள்ளந் தெரியா தஉனக் குளவோ
துள்ளும் பொறியின் நிலேசோ தணைதான்
வெள்ளம் தரும்இன் அமுதே விதியோ. 6387

ாசு. வருநான் முகன்ஐ முகன்வா னவர்தான்
திருநான் மறையின் முறையே திரிவார்
பெருநாள் தெரிகின் றிலர்பே தைமையேன்
ஒருநாள் உனைஎங் ஙனம்உள் ளுவனே. 6388

ாள. செய்யா தனவோ வினதீ வினைதான்
பொய்யா தனவந் துபுணர்த் திடுமால்
மெய்யே உயிர்தீர் வதொர்மேல் வினைநீ
ஐயா ஒருநா ளும்அயர்த் தணையோ 6389

ாஅ. ஆயப் பெறுநன் னெறிதம் அறிவன்
றேயப் புறும்ஈ சர்கள்எண் ணிலரால்
நீயப் புறம்நிற் கநினைக் கிலர்நின்
மாயப் பொறிபுக் குமயங் குவரால். 6390

ாக. தாமே தனிநா யகராய் எவையும்
போமே பொருள்என் றபுரா தனர்தாம்
யாமே பரம்என் றனர்என் கஅவர்க்
காமே பிறர்நின் னலதார் உளரோ. 6391

ாம. ஆதிப் பரமாம் எனல்அன் றெனலாம்
ஓதப் பெருநூல் கள்உலப் பிலவால்
பேதிப் பனநீ அவைபேர் கிலையால்
வேதப் பொருளே விளையா டுதியோ. 6392

ாஎக. அம்போ ருகனும் அரனும் அறியார்
எம்போ லியர்எண் ணிடில்என் பலலாம்
கொம்போ டடைபூக் கனிகாய் எனவும்
வம்போ மரமென் பதொர்வா சகமே. 6393

ாஎஉ. நின்னில் பிறிதாய் நிலையில் திரிவார்
தன்னில் பிறிதா யினதான் தவமும்
உன்னில் பிறிதா யினவோ உலகம்
பொன்னில் பிறிதா கிலபொற் கலனே. 6394

ாமங. தாய்தந் தையெனும் தகைவந் தீனதான்
நீதந் தீனநீ உறுநெஞ் சினன்நான்
நோய்தந் தவனே நுவல்[1]தீர் வும்எனை
வாய்தந் தனசொல் லிவணங் கினனுல். 6395

ாமச. அத்தன் மையறிந் தவருந் திறலோன்
உய்த்துய் மினென்முன் எனஉய்த் தனரால்
பித்துண் டதுபேர் வுறுமா பெறுதும்
கைத்தும் கடுநஞ் சின்எனக் கனலா. 6396

ாமடு. இட்டார் கடுவெவ் விடமென் னுடையான்
தொட்டா னுகரத் தொகைவன் கசையில்
கட்டார் கடுமத் திகைகண் கொடியான்
விட்டான் அவன்மேல் உறவீ சினரால். 6397

ாமகூ. வெய்யார் முடிவில் அவர்வீ சியபோ
துய்யான் எனும்வே லியினுள் உறவோர்
கையா யிரமல் லகணக் கிலவென்
றெய்யா உலகியா வையும்எண் ணினவால். 6398

ாமள. ஊனை டுயிர்வே றுபடா உபையந்
தானே உடையான் தனிமா யையினுல்
யானே உயிருண் பன்எனக் கனலா
வானே முழடுங் கிடவந் தனனுல். 6399

ாமஅ. வந்தா னீவணங் கிஎன்மன் னுயிர்தான்
எந்தாய் கொளஎண் ணினீயேல் இதுதான்
உந்தா யியதன் றுலகே முழுடன்
தந்தார் கொளநின் றதுதான் எனலும். 6400

ாமகூ. ஏவரே உலகந் தந்தார் என்பெயர் ஏத்தி வாழும்
மூவரே அல்ல ராகில் முனிவரே முழுதுந் தோற்ற
தேவரே பிறரே யாரே செப்புதி தெரிய என்ருன்
கோவமூணடெழுந்துங்கொல்லான்காட்டுமேற்காட்சிகொள்ளான்.

*ாஉ.ம. உலகுதந் தானும் பல்வே றுயிர்கள்தந் தானும் உள்ளுற்
றுலவிலா உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின் ருலும்
மலருள்கல் வெறியும் எள்ளில் எண்ணெய்போல் மருட்டும் கோளாய்
அலகில்பல்பொருளும் பற்றி முற்றிய அரிகாண் அத்த. 6402

1 [பிரதி] தீருமெனை.

எஉக. என்கணுல் நோக்கிக காணுய் எங்கணும் உளன்காண் எந்தை
உன்கணுல் அன்பில் சொன்னேன் உறுதிஎன் ருென்றுங் கொள்ளாய்
நின்கணுல் நோக்கிக் காண்டற் கெளியனே நினக்கு மூத்த
பொன்கணுன் ஆவி உண்ட புண்டரீ கக்க ணுனே. 6403

எஉஉ. மூன்றவன் குணமே செய்கை மூன்றவன்உருவம்மூன்று
மூன்றுவண் சுடர்கள் சென்தீ மூன்றவன் உலகம் மூன்று
தோன்றலும் இடையும்ஈறும் துடங்கிய பொருள்கட்கெல்லாம்
சான்றவன் அவனே வேத முடிவவன் சரதம் என்ருன், 6404

எஉங. என்றலும்அவுணர்வேந்தன் எயிற்றினே இலங்கநக்கான்
ஒன்றல பொருள்கள் எல்லாம் ஒருவன்புக் குறையும்என்ருய்
நன்றது காண்டும் பின்னர் நல்லவா செய்தும் அன்றே
நின்றதூண் அகத்தும்உன்கோன் இருக்குமோநிரப்பு கென்ருன்

எஉச. சாணினும்உளன் ஓர் தன்மை அணுவினேச்சதகூறிட்ட
கோணினும் உளன்மா மேருக் குன்றினும் உளன்உள் நின்ற
தூணினும் உளன்நீசொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவின்என்ருன் நன்றெனக் கனகன்சொன்னன்.

உம்பர்க்கும் உனக்கும் ஒத்திவ் உலகெலாம் பரந்து ளானேக்
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி காட்டா யாகில் [றுன்
கும்பத்தின் கரியைக் கோண்மாக் கொன்றெனநின்னேக்கொன்
செம்பொத்த குருதி தேக்கி உடலையுந் தின்பன் என்ருன்.

என்உயிர் நின்னுல் கோறற் கெளியதான் றன்று நான்முன்
சொன்னவன்தொட்டதொட்டஇடம்தொறும்தோன்ருன் ஆகில்
என்உயிர்யானே மாய்ப்பன் பின்னும்வாழ் வுகப்பன் ஆயில்
அன்னவற் கடியன் அல்லேன் என்றனன் அறிவின் மிக்கான்.

எஉஎ. நகைதிறந் தென்னப் பொங்கி நன்றுநன் றென்னநக்கு
விசைபிறந் துருமு வீழ்ந்த தென்னஓர் தூணின் வென்றி
இசைபிறந் துயர்ந்த தையால் எற்றினன் எற்றலோடும்
திசைதிறந் தண்டம் கீறச் சிறித்ததச் செங்கட் சியம்.

எஅ. நாடிநான் தருவன் என்ற நல்லறி வாளன் நாளும்
தேடிநான் முகனும் காணச் செய்பவன் சிரித்த லோடும்
ஆடினன் அழுதான் பாடி அரற்றினன் சிரத்தில் செங்கை
சூடினன் தொழுதான் ஓடி உலகெலாம் துகைத்தான் துள்ளி.

ஈஉக. ஆரடாசிரித்தாய் சொன்ன அரிகொலாம் அஞ்சிப்புக்க
நீரடார் போதா தென்று நெடுந்தறி நேடி ணுயோ
போரடா பொருதி ஆயில் புறப்படு புறப்ப டென்ருன்
பேரடா நின்ற தாளோ டுலதெலாம் பெயரப் போவான். 6411

ஈஉம. பிளந்தது தூணும் ஆங்கே பிறந்தது சீயம் பின்னர்
வளர்ந்தது திசைகள் எட்டும் பகிரண்டம் முதல மற்றும்
அளந்ததப் புறத்தின் செய்கை யார்அறிந் தறைய கிற்பார்
கிளர்ந்தது ககன முட்டக் கிழிந்தது கீழும் மேலும். 6412

ஈஉக. மன்றலந் துளப மாலை மானுட மடங்கல் வானில்
சென்றது தெரிதல் தேற்றூர் சேவடி படியில் தீண்டி
நின்றதோர் பொழுதில் அண்ட நெடுமுகட் டிருந்த முன்னேன்
அன்றவன் உந்தி வந்தான் ஆம்எனத் தோன்றி ணுனே. 6413

ஈஉஉ. எத்தனை உளது கையென் றியம்பிணுல் எண்ணத் தக்க
வித்தகர் உளரோ வந்த தானவர் விரிந்த சேனை
பத்துநூ றமைந்த கோடி வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனை கடலு மாளத் தனித்தனி அள்ளிக் கொண்ட. 6414

ஈஉஉ. ஆயிர கோடி வெள்ளத் தயில்எயிற் றவுணர்க் கங்கு
ஏயின ஒருவர்க் கோரோர் திருமுகம் இரட்டிப் பொற்றேர்ள்
தீஎனக் கனலும் செங்கண் முகம்தொறும் மூன்று தெய்வ
வாயின கடல்கள் ஏழும் மலைகளும் மற்றும் முற்றும். 6415

முடங்குவார் உலைய அண்டம் முழுவதும் முடிவில் உண்ணும்
கடங்கொள்வெங் காலச் செந்தீ அதனைவந் தவிக்குங் காலான்
மடங்கலின் உயிர்ப்பு மற்றைக் காற்றினை மாற்று மாஞல்
அடங்கலும் பகுவாய் ஆக்கை அப்புறத் தக்க தம்மா. 6416

ஈஉடு. குயிற்றிய அண்டம் குஞ்சிக் கிடமிலாமுட்டைக்குட்டம்
பயிற்றிய பருவம்ஒத்த காலத்துள் அமுதம் ஊறும்
எயிற்றுவண் பகுவாய் உள்புக் கின்னருள் இருக்கை எய்தி
வயிற்றின அன்னன் இன்னுள்வாழுமன் உயிர்கள்மன்னே. 6417

நன்மையில்தொடர்ந்தார்க்குண்டோகேடுநான்முகத்தோன் ஆதி
தொன்மையிற்றொடர்ந்தவாய்மை அறத்தொடும்துறக்கிலோரை
அன்வயத் தோருந் தீய அவுணர்அல் லாரை அந்நாள்
தன்வயிற் றகத்து வைத்துத் தந்ததச் சீயம் தாயின். 6418

பேருடை அவுணர் தம்மைப் பிறைஎயிற் றடக்கும் பேராப்
பாரிடைத் தேய்க்கும் மீளப் பகிரண்டத் தடிக்கும் பற்றி
மேருவில் புடைக்கும் மற்றை விரல்களால் பிசையும் பல்கால்
நீரிடைக் குமிழி ஊட்டும் நெருப்பிடைச் சுருக்கி நீட்டும். 6419

வகிர்படத் துணிக்கும் பற்றி வாய்களைப் பிளக்கும் வன்தோல்
துகிர்மடுத் துரிக்கும் செந்தீக் கண்களைத் தோண்டும் சுற்றிப்
பகிர்படக் குடரைக் கொய்யும் பசையறப் பிசையும் பல்கால்
உகிர்புரை பெரும்புக் கோரை உகிர்களால் உறக்கும் ஊன்றி.

ஈஙூ. யானையும் தேரும் மாவும் யாவையும் உயிர் உரும்மல்
ஊனெலும் தின்னும் பின்னை ஒலிதிரைப் பரவை ஏழும்
மீனெடும் குடிக்கும் மேகம் உருமொடும்விழுங்கும் விண்ணில்
தானெடுங் காதென் றஞ்சித் தருமமும் சலித்த தம்மா. 6421

ஈசம். ஆழிமால்வரையோ டெற்றும் சிலவரை அண்டகோளச்
சூழிரும் சுவரில் தேய்க்கும் சிலவரைச் சொன்னகுன்றம்
ஏழினோ டெற்றிக் கொல்லும் சிலவரை எட்டுத் திக்கும்
தாழிருட் பிழம்பில் தேய்க்கும் சிலரைத் தடக்கை தாக்கி.

ஈசக. மலைகளில் புரண்டு வீழ வள்ளுகிர் நுதியால் வாங்கித்
தலைகளைக் கிள்ளும் அள்ளித் தழல்எழப் பிசையும் தக்க
கொலைகளில் கொல்லும் வாங்கி உயிர்களைக் குடிக்கும் வான
நிலைகளில் பரக்க வேலை நீர்களை நிரப்பத் தூர்க்கும். 6423

ஈசஉ. மூப்புறத் துலகத் துள்ளு மொழியற முற்றும் பற்றித்
தப்புறல் இன்றிக் கொன்று தையலார் கருவும் தள்ளி
இப்புறத் தண்டந் தோறும் அவுணர்இல் லாமை எற்றி
அப்புறத் தண்டந் தோறுந் தடவின சிலகை அம்மா. 6424

ஈசஙூ. கனகனும் அவனில் வந்த வானவர் களைக ணைன
அனகனும் ஓடியப் பல்வே றவுணரா னுரை எல்லாம்
நினைவதன் முன்னம் கொன்று நின்றதந் நெடுங்கட் சீயம்
வினைகழல் அவனும் மற்றை மடங்கலின் வரவு நோக்கி. 6425

வயிரவாள் உறையின் வாங்கி வானகம் மறைக்கும் விட்டச்
செயிரறு கிடுகும் பற்றி வானவர் உள்ளும் தீய
அயிர்படர் வேலை ஏழும் மலைகளும் அஞ்ச ஆர்த்தங்
குயிருடை மேரு என்ன வாய்மடித் துருத்து நின்றான். 6426

ாசரு. நின்றவன் தன்னை நோக்கி நிலையிது கண்டு நீயும்
ஒன்றும்உன் உள்ளத் தியாதும் உணர்ந்திலை போலும் அன்றே
வன்றொழில் ஆழி வேந்தை வணங்குதி வணங்க வேஉன்
புன்றொழில் பொறுக்கும் என்றன் உலகெலாம் புகழுநின்றன்.

ாசசு. கேள்இது நீயும் காணக் கிளர்ந்தகோ ளரியின் கேளார்
தோளொடு தாளும் நீக்கி நின்னையும் துணித்த பின்என்
வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளவோ என்ன அண்டங்கள் நடுங்க நக்கான். 6428

ாசள. நகைசெயா வாயும் கையும் வாளொடு நடந்த தாளும்
புகைசெயா நெடுந்தீப்பொங்கஉருத்தெதிர்பொருந்தப்புக்கான்
தொகைசெயற் கரிய தோள்ளால் தாள்களால் சுற்றிச்சூழ்ந்தான்
மிகைசெய்வார்வினைகட்கெல்லாம்மேற்செயும்வினையம்வல்லான்

ாசஅ. இருவரும் பொருந்தப் பற்றி எவ்வுல குக்கும் மேலாய்
ஒருவரும் காண வண்ணம் உயர்ந்ததற் குவமை கூறில்
வெருவரு தோற்றத் தஞ்சா வெஞ்சின அவுணன் மேரு
அருவரை ஒத்தான் மாயன் அல்லவை எல்லாம் ஒத்தான்.

ஆர்ப்பொலி முழக்கி வெவ்வாய் வள்ளுகிர்ப் பாரம் ஆன்ற
வேற்றகுங் கரத்தில் பல்வே றெறிதிரைப் பரப்பில் தோன்ற
பாற்கடல் பரந்து பொங்கிப் பங்கயத் தொருவன் நாட்டின்
மேற்செல்வ தெனத்தான் மாயன் கனகனும் மேரு ஒத்தான்.

வாளொடு [1]தோளுங் கையும் மகுடமும் மலரோன் வைத்த
நீளிருங் ககன முட்டை நெடுஞ்சுவர் தெய்ப்ப நேமி
கோளொடும் திரிவதென்னக் குலமணிக் கொடும்பூண் மின்னத்
தாளிணை இரண்டும் பற்றிச் சுழற்றினன் தடக்கை ஒன்றால்

ாருக. சுழற்றிய காலத்திற்ற தூங்குகுண் டலங்கள் நீங்கிக்
கிழக்கொடு மேற்கி னெடு விழுந்தன கிடந்த இன்னும்
அழற்றரு கதிரோன் வைகும் உதையத்தோ டத்தமான
நிழற்றரு காலமாலை நெடுமணிச் சுடரின் நீத்தம். 6433

போன்றன இனைய தன்மை பொருவிய தினைய வென்றுந்
தான்தனை ஒருவன் தன்னை உரைசெயுந் தரத்தினனே
வான்தரு வள்ளல் வெள்ளை வள்ளுகிர் வயிரமார்பத்
தூன்றலும் உதிர வெள்ளம் பரந்துள துலகம் எங்கும். 6434

1 [பிரதி] தோலுங்.

ஆயவன் தன்னை மாயன் அந்தியின் அவன்பொற் கோயில்
வாயிலின் மணிக்க வான்மேல் வயிரவாள் உகிரின் வாளின்
மீளழு குருதி பொங்க வெயில்விரி வயிர மார்பந்
தீளழப் பிளந்து நீக்கித் தேவர்தம் இடுக்கண் தீர்த்தான்.

கருச. முக்கணன் எண்க ணனும் முளரிஆ யிரக்க ணனும்
திக்கண முனிவரோடும் தேவரும் பிறரும் சிந்தி
புக்கநா டறிவு ருமல் திரிகின்றார் புகுந்து மொய்த்தார்
எக்கணல் காண்போம் எந்தை உருவம்என் றிரங்குக்கின்றார்.

காருடு.நோக்கினர் நோக்கி னர்முன் நோக்குறு முகமும் கையும்
ஆக்கையும் தாளும் ஆகி எங்கணும் தானே ஆகி
வாக்கினல் மனத்தி னல்மற் றறிவினல் அளக்க வாரா
மேக்குயர் சீயம் தன்னைக் கண்டவர் வெருவு கின்றார். 6437

காருசு. பல்லொடு பல்லுக் கெல்லை ஆயிர காதம் பத்தி
சொல்லிய வதனம் கோடி கோடிமேல் விளங்கித் தோன்ற
எல்லையில் உருவிற் ருகி இருந்ததை எதிர்ந்து நோக்கி
அல்லியங் கமலத் தண்ணல் அவன்புகழ் விரிப்ப தானன்.6438

*காருள. தன்னைப் படைத்தனவும் தானே எனும்தன்மை
பின்னைப் படைத்தனவே காட்டும் பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய்நீ என்னல் உயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய் எனும்இதுவும் ஏத்தாமோ. 6439

காருஅ. பல்லா யிரகோடி அண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குளினில் தோன்றுமாம் நின்னுழையே
எல்லா உருவமுமாய் நின்றக்கால் இவ்வுருவம்
வல்லே குறித்தால் வரம்புண்மை வாராதோ. 6440

காருக. பேரைஒரு பொருட்கே பல்வகையால் பேர்த்தெண்ணும்
தாரை நிலையை தமியை பிறரில்லை
யாரைப் படைக்கின்ற தாரை அளிக்கின்ற
தாரைத் துடைக்கின்ற தையா அறியேமால். 6441

காகூ. நின்னுள்ளே என்னை நிருமித்தாய் நின்னருளால்
என்னுள்ளே எப்பொருளும் யாவரையும் யான்ஈன்றேன்
பின்னிலேன் முன்னிலேன் எந்தை பெருமானே
பொன்னுள்ளே தோன்றியபொற்கலனே போல்கின்றேன்.

ாசுக. என்முங் கியம்பி இமையாத முக்கண்ணின்
வன்தாள் மழுவோனும் தானும் வணங்கினர்
நின்முர் இருமருங்கும் நேமிப் பெருமானும்
ஒன்முத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினன். 6443

ாசுஉ. எஞ்சும் உலகனைத்தும் இப்பொழுதே என்றென்று
நெஞ்சு நடுங்கும் நெடுந்தை வரைநோக்கி
அஞ்சன்மின் என்னு அருள்சுரந்து நோக்கினன்
கஞ்சமலர்ப் பறிக்கும் கைஅபையங் காட்டினன். 6444

ாசுஙு. பூவில் திருவை அழகின் புனைகலத்தை
யாவர்க்கும் செல்வத்தை வீடென்னும் இன்பத்தை
ஆவித் துணையை அமுதில் பிறந்தாளை
தேவர்க்கும் தம்மோயை ஏவினர் பால்செல்ல. 6445

ாசுச. செந்தா மரைமலர்மேல் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை நறுந்தார் இளங் கொழுந்தை
முந்தா உலகும் உயிரும் முறைமுறையே
தந்தாளை நோக்கினன் தன்ஒப்பொன் றில்லாதான். 6446

ாசுரு. தீதிலா ஆக உலகின்ற செல்வத்தை
காதலால் நோக்கினன் கண்ட முனிக்கணங்கள்
ஓதினர் சீர்த்தி உயர்ந்த பரஞ்சுடரும்
நோதல் ஆங் கில்லாத அன்பனையே நோக்கினன். 6447

ாசுசு. உந்தையை உன்முன்னே கொன்றுடலை யான்அளையச்
சிந்தை களரா தறம்பிழையாச் செய்கையாய்
அந்தமில் அன்பென்மேல் வைத்தாய் அளித்தாயேல்
எந்தாய் இனிஇதற்குக் கைமாறி யாதென்முன். 6448

ாசுஎ. அயிரா இமைப்பினையோர் ஆயிரங் கூறிட்ட
செயிரின் ஒருபொழுதின் உந்தையை யான்சீறி
உயிர்தெடு வேன்போல் உடல்அளையத் தான்கண்டும்
செயிர்சேரா உள்ளத்தாப் கென்இனியான் செய்கேனு.

ாசுஅ. கொல்லேன் இனிஉன் குலத்தோரைக் குற்றம்தான்
எல்லை இலாதன செய்தாரே ஆனலும்
நல்லேன் உனக்கென்னை நாணுமல் நான்செய்வ
தொல்லை உளவேல் இயம்புதியால் என்றுரைத்தான்.

ாசுகூ. முன்பு பெறப்பெற்ற பேறே முடிவில்லை
பின்பு பெறும்பேறும் உண்டு பெறுவேனேல்
என்புபெரூத இறிபிறவி எய்தினும் நின்
அன்பு பெறும்பே றடியேற் கருள்என்ரூன். 6451

ாளம். அன்னூனை நோக்கி அருள்சுரந்த நெஞ்சினனுய்
என்ஆனை வல்லன் எனமகிழ்ந்த பேரீசன்
முன்ஆன பூதங்கள் யாவையும் முற்படினும்
உன்நாள் உலவாய்நீ என்போல் உளைஎன்ரூன். 6452

ாளக. மின்னேத் தொழுவனேத்த தென்ன மிளிர்ஒளியாய்
முன்னேத் தொழும்புக்கே யாம்அன்ரே மூஉலகும்
என்னேத் தொழுதேத்தி எய்தும் பயன்எய்தி
உன்னேத் தொழுதேத்தி உய்க உயிர்எல்லாம். 6453

ாளஉ. ஏனவர்க்கு வேண்டில் எளிதன்ரே எற்கன்பர்
ஆனவர்கள் எல்லாம் உனக்கன்பர் ஆகினுர்
தானவர்க்கு வேந்தனே என்னும் தரத்தாயோ
வானவர்க்கும் நீயே இறைவ மறைவல்லோய். 6454

ாளஙு. நல்அறமும் மெய்மையும் நான்மறையும் நல்அருளும்
எல்லேஇலா ஞானமும் ஈறிலா எப்பொருளும்
தொல்லேசால் எண்குணனும் நின்சொல் தொழில்செய்ய
நல்ல உருவொளியாய் நாளும் வளர்கநீ. 6455

ாளச. என்று வரம்அருளி எவ்வுலகும் கைகூப்ப
முன்றில் முரசம் முழங்க முடிசூட்டி
நின்ற அமரரையும் நீர்விரும்பி வந்திவனுக்
கொன்று பெருமை உரிமை புரிகென்ரூன். 6456

ாளஞ. தேவர் உரிமை புரியத் திசைமுகத்தோன்
ஓமம் இயற்ற உடையான் முடிசூட்டக்
கோமன் னவன்ஆகி மூஉலகுங் கைக்கொண்டான்
நாம அருமறைநூல் ஓதி நனிஉணர்ந்தான். 6457

ாளசு. ஈதாகும் முன்நிகழ்ந்த தெம்பெருமான் என்உரையை
யாதானும்ஆக நினேயா திகழுதியேல்
தீதாய் வருதல் திடம்என்று செப்பினுன்
மேதாவி கட்கெல்லாம் மேலான மெய்மையான். 6458

ஙு-வது, இரணியன் வதைப்படலம்–முற்றும்.

வீடணன் அடைக்கலப்படலம்

க. கேட்டனன் இருந்தும்அக் கேள்வி தேவியில்
கோட்டிய சிந்தையன் உறுதி கொண்டிலன்
மூட்டிய தீஎன முடுகிப் பொங்கினன்
ஊட்டறக் கூட்டிய அனைய ஒண்கணான். 6459

உ. இரணியன் என்பவன் என்முன் னேரினும்
முரணியன் அவனையே முருக்கி முற்றினேன்
அரணியன் என்றவற் கன்பு பூண்டனை
மரணம்என் றொருபொருள் மாற்றும் வண்மையோ.

ங. ஆயவன் வளர்த்ததன் தாதை ஆக்கையை
மாயவன் பிளந்திட மகிழ்ந்த மைந்தனும்
ஏயஎம் பகைஞனுக் கினிய அன்புசெய்
நீயுமே நிகர்பிறர் நினக்கு நேர்வரோ. 6461

ச. பாழிசால் இரணியன் புதல்வன் பண்பெனச்
சூழ்வினை முற்றியான் அவற்குத் தோற்றபின்
எழைநீ என்பெருஞ் செல்வம் எய்திப்பின்
வாழுவோ கருத்தது வரவற் றாகுமோ. 6462

ஞ. முன்புற அனையர்பால் நண்பு முற்றினை
வன்பகை மனிதரின் வதிந்த அன்பினை
என்புற உருகுதி அழுதி வத்துதி
உன்புகல் அவர்பிறி துரைக்க வேண்டுமோ. 6463

ட. நண்ணினை மனிதரை நண்பு பூண்டனை
எண்ணினை செய்வினை என்னை வெல்லுமா
றுண்ணினை வரசின்மேல் ஆசை ஊன்றினை
திண்ணிதுன் செயல்பிறர் செறுநர் வேண்டுமோ. 6464

ண. அஞ்சினை ஆதலால் அமர்க்கும் ஆளிலை
தஞ்சென மனிதர்பால் வைத்த சார்பினை
வஞ்சனை மனத்தினை பிறப்பு மாற்றினை
நஞ்சினை உடன்கொடு வாழ்தல் நன்மையோ. 6465

த. பழியினை உணர்ந்தியான் படுக்கி லேன்உனை
ஒழிகிலை புகலுதல் ஒல்லை ஏகுதி
விழிஎதிர் நிற்றியேல் விளிதி என்றனன்
அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான். 6466

கூ. என்றலும் இளவலும் எழுந்து வானிடைச்
சென்றனன் துணைவரும் தானும் சிந்தியா
நின்றனன் பின்னரும் நீதி சான்றன
ஒன்றல பலபல உறுதி ஓதினன். 6467

ம. வாழியாய் கேட்டியால் வாழ்வு கைம்மிக
ஊழிகாண் குறுகின துயிரை ஓர்கிலாய்
கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் ஓர்தியோ
வாழ்வுதான் அறம்பிழைத் தவர்க்கு வாய்க்குமோ. 6468

மக, புத்திரர் குருக்கள்நின் பொருவில் கேண்மையர்
மித்திரர் அடைந்துளோர் மெலியர் வன்மையர்
இத்தனை வோரையும் இராமன் வெஞ்சரம்
சித்திர வதைசெயக் கண்டு தீர்தியோ. 6469

மஉ. எத்துணை வகையினும் உறுதி எய்தின
ஒத்தன உணர்த்தினன் உணர் கிற்றிலை
அத்தனன் பிழைபொறுத் தருளு வாய்எனா
உத்தமன் அந்நகர் ஒழியப் போயினன். 6470

மங. அனலனும் அனிலனும் அரன்சம் பாதியும்
இனையவர் நால்வரும் விரைவின் எய்தினர்
கனைகழல் காலினர் கருமச் சூழ்ச்சியர்
அனையவர் வீடண னெடும் ஆயினர், 6471

மச. அரக்கனும் ஆங்கணைர் அமைச்சர் நால்வரும்
குரக்கினக் கடலொடும் மனிதர் கொள்ளநீர்க்
கரைக்கண்வந் திறுத்தனர் என்ற காலையில்
பொருக்கென எழுதும்என் றெண்ணிப் போயினர். 6472

மரு. அளக்கரைக் கடந்துமேல் அறிந்த நம்பியும்
விளக்கொளி பரத்தலில் பாலின் வெண்கடல்
வளத்தடம் தாமரை மலர்ந்த தாம்எனக்
களப்பெருந் தாணையைக் கண்ணில் நோக்கினன். 6473

மசு. ஊனுடை உடம்பின உயிர்கள் யாவையும்
ஏனைய ஓருதலை நிறுத்தி எண்ணினால்
வானரம் பெரிதென மறுவில் சிந்தையான்
தூநிறச் சுடுபடைத் துணைவர்ச் சொல்லினன். 6474

ஙஎ. அறந்தலை நின்றவர்க் கன்பு பூண்டனன்
மறந்தனன் புகழ்அலால் வாழ்வு வேண்டலன்
பிறந்தவின் னுறுதிநீ பிடிக்கி லாய்எனத்
துறந்தனன் இனிச்செயல் சொல்லு வீரென்றான். 6475

ஙஅ. மாட்சியின் அமைந்தது வேறு மற்றிலைத்
தாழ்ச்சியில் பொருள்தரும் தரும மூர்த்தியைக்
காட்சியே இனிக்கடன் என்று கல்விசால்
சூட்சியின் கிழவரும் துணிந்து சொல்லினார். 6476

ஙக. நல்லது சொல்லினீர் நாமும் வேறினி
அல்லது செய்துமேல் அரக்கர் ஆகுதும்
எல்லையில் பெருங்குணத் திராமன் தாளிணை
புல்லுதும் புல்லிய பிறவி போகவே. 6477

ஙஉ. முன்புறக் கண்டிலன் கேள்வி முன்பிலன்
அன்புறக் காரணம் அறிய கிற்றிலேன்
என்புறக் குளிரும்நெஞ் சுருகும் என்அவன்
[1]புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால். 6478

ஙக. ஆதியம் பரமனுக் கன்பு நல்அறம்
நீதியின் வழாமலும் உயிர்க்கு நேயமும்
வேதியர் அருளும்நான் விரும்பிப் பெற்றதும்
போதுறு கிழவனைத் தவமுன் பூண்டநாள். 6479

ஙஉ. ஆயது பயப்பதோர் அவதி ஆவதும்
தூயது நினைத்தது தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி நம்மனத்
தேயது முடித்தும்என் றினிது மேவினன். 6480

ஙங. இருளிடை எய்துவ தியல்பன் றும்எனப்
பொருள்உற எண்ணிய புலன்கொள் கேள்வியார்
மருள்உறு சோலையின் மறைந்து வைகினார்
உருள்உறு தேரவன் உதையம் ஆயினன். 6481

ஙச. அப்புறத் திராமனும் அலங்கல் வேலையைக்
குப்புறக் கருதுவான் குவளை நோக்கிதன்
துப்புறச் சிவந்தவாய் நினைந்து சோர்குவான்
இப்புறத் திருங்கரை மருங்கில் எய்தினன். 6482

1 [பிரதி] பின்புறப்.

உடு. கானலும் கழிகளும் மணலும் கண்டலும்
பானலும் குவளையும் பரந்த புன்னையும்
மேனிறை அன்னமும் அடம்பும் வேட்கைகூர்
பூநிறை சோலையும் புரிந்து நோக்கினன். 6483

உசு. தரளமும் பவளமும் தரங்க மீட்டிய
திரள்மணிக் குப்பையும் கனக தீரமும்
மருளுமென் பொதும்பரும் மணலின் குன்றமும்
புரள்நெடுந் திரைகளும் புரிந்து நோக்கினன். 6484

உள. மின்நகு மணிவிரல் தேய வீழ்கணீர்
துன்அரும் பெரும்சுழி அழிக்கச் சோர்வினை
டின்னகை நுழைச்சியர் இழைக்கும் ஆழிசால்
புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கினன். 6485

உஅ. கூதிர்நுண் குறும்பனித் திவலைக் கோவைசால்
மோதுவெண் திரைவர முடவெண் தாழைமேல்
பாதியஞ் சிறையிடைப் பெடையைப் பாடணைத்
தோதிமம் துயில்வகண் டுயிர்ப்பு வீங்கினன். 6486

உக. அருந்துதற் கினியமீன் கொணர அன்பினால்
பெருந்தடம் கொம்பரில் பிரிந்த சேவலை
வருந்திசை நோக்கிஓர் மழலை வெண்குரு
கிருந்தது கண்டுநின் றிரக்கம் எய்தினன். 6487

நம. ஒருதனிப் பேடைமேல் உள்ளம் ஓடலால்
பெருவலி வயக்குரு கிரண்டும் பேர்கிலா
திருகுவெஞ் சினத்தின தெறுகண் தீயுகப்
பொருவன சண்டுதன் புருவம் கோட்டினன். 6488

நக. உள்நிறை ஊடலில் தோற்ற ஓதிமம்
கண்ணுறு கலவியின் வெல்லக் கண்டவன்
தண்ணிறப் பவளவாய் இதழைத் தற்பொதி
வெண்நிற முத்தினால் அதுக்கி விம்மினன். 6489

நஉ. இத்திறம் எய்திய காலம் எய்துறும்
வித்தகர் சொற்களால் மெலிவு நீங்கினன்
ஒத்தனன் இராமனும் உணர்வு தோன்றிய
பித்தரின் ஒருவகை பெயர்ந்து போயினன். 6490

நந. உறைவிடம் எய்தினன் ஒருங்கு கேள்வியின்
துறைஅறி துணைவரோ டிருந்த சூழலின்
முறைபடு தானையின் மருங்கு முற்றினன்
அறைகழல் வீடணன் அயிர்ப்பில் சிந்தையான். 6491

நச. முற்றிய குரிசிலை முழங்கு தானையர்
உற்றனர் நிருதர்வந் தென்ன ஒன்றினர்
எற்றுதிர் பற்றுதிர் எறிதிர் என்றிடை
சுற்றினர் உருமெனத் தெழிக்கும் சொல்லினர். 6492

நரு. தந்தது தருமமே கொணர்ந்து தானிவன்
வெந்தொழில் தீவினை பயந்த மேன்மையான்
வந்தனன் இலங்கையர் மன்னன் ஆம்எனச்
சிந்தனை முடிந்தன என்னுஞ் செய்கையார். 6493

நசு. இருபது கரந்தலை ஈரைந் தென்பர்அத்
திருவிலிக் கன்னவை சிதைந்த தோஎன்பார்
பொருதொழில் எம் மொடும் பொருதிர் போர்என்பார்
ஒருவரில் ஒருவர்முன் உறுக்கி ஊன்றுவார். 6494

நஎ. பற்றிநம் சிறையிடை வைத்துப் பாருடைக்
கொற்றவற் குணர்த்துதும் என்று கூறுவார்
எற்றுவ தன்றியே இவனைக் கண்டிறை
நிற்றலென் பிறிதென நெருக்கி நேர்குவார். 6495

நஅ. இமைப்பதன் முன்விசும் பெழுந்து போயபின்
அமைப்பதென் பிறிதவர் அரக்கர் அல்லரோ
சமைப்பது கொலையலால் தக்கதி யாவதோ
குமைப்பது நலன்என முடுகிக் கூறுவார் 6496

நக. இயைந்தன இயைந்தன இனைய கூறலும்
மயிந்தனும் துமிந்தனும் என்னும் மாண்பினர்
அயிந்திர நிறைந்தவன் ஆணை ஏவலான்
நயந்தெரி காவலர் இருவர் நண்ணினர். 6497

சம். விலக்கினர் படைஞரை வேத நீதிநூல்
இலக்கணம் நோக்கிய இயல்பர் எய்தினர்
சலக்குறி இலர்என அருகு சார்ந்தனர்
பலக்குறி அறிநெறி பொருந்த நோக்கினர். 6498

சக. ஆர்இவண் எய்திய கருமம் யாவது
போர்அது புரிதிரோ புறத்தோர் என்னைமோ
சார்வுற நின்றநீர் சமைந்த வாறெலாம்
சோர்விலீர் மெய்முறை சொல்லு வீர்என்றான். 6499

சஉ. பகலவன் வழிமுதல் பாரில் நாயகன்
புகலவன் கமலடைந் துய்யப் போந்தனன்
தகவுறு சிந்தையன் தரும நீதியான்
மகன்மகன் மைந்தன்நான் முகற்கு வாய்மையால். 6500

சங. அறநிலை வழாமலும் ஆதி மூர்த்திபால்
நிறைபெரு நேயமும் நின்ற வாய்மையும்
மறையவர்க் கன்பும்என் றினைய மாமலர்
இறையவன் தரநெடுந் தவத்தின் எய்தினன். 6501

சஞ. சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி
இடுதியே சிறையிடை இறைவன் தேவியை
விடுதியேல் உய்குதி விடாது வேட்டியேல்
படுதிஎன் றுறுதிகள் பலவும் பன்னினன். 6502

சடு. மறந்தரு சிந்தையன் மதியில் நீங்கினன்
பிறந்தனீ பின்பதிற் பிழைத்தி போகுதி
இறந்தனீ நிற்றியேல் என்ன மன்னவன்
உறந்தனன். எனவிரித் தன்னலன் சொல்லினன். 6503

சசு. மயிந்தனும் அவ்வுரை மனத்து வைத்தினி
இயைந்தவை நாயகற் கியம்ப வேனெனப்
பெயர்ந்தனன் தம்பியும் பெயர்வில் சேனையும்
அயர்ந்திடல் காவல்என் றமைவ தாக்கியே. 6504

சள. தருமமும் ஞானமும் தவமும் வேலியாப்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணினை
அருள்நெறி எய்திச்சென் றடிவ ணங்கினன். 6505

சஅ. உண்டுரை உணர்த்துவ தூழி யாய்எனப்
புண்டரீ கத்தடம் புரைகண் புங்கவன்
மண்டலச் சடைமுடி துளக்கி வாய்மையால்
கண்டதும் கேட்டதும் கழறு வாய்என்றான். 6506

சகூ. விஞாவினை அறிந்திலன் வீட ணப்பெயர்
நளிர் மலர் யர்க்கையன் நால்வ ரோடுடன்
களவியல் வஞ்சனை இலங்கை காவலற்
கிளையவன் சேனையின் நடுவண் எய்தினன் 6507

ருஏ. கொல்லுமின் பற்றுமின் என்னுங் கொள்கையால்
பல்பெருஞ் சேனைசென் றடர்க்கப் பார்த்தியான்
நில்லுமின் என்றிவன் யாவன் இன்னிலை
செல்லுமின் என்னஓர் துணைவன் சொல்லினன். 6508

ருக. முரண்புகு தீவினை முடித்த முன்னவன்
கரன்புகுன் சூழலே புகுதக் காண்பதோர்
அரண்பிறி தில்லென அருளின் வேலியை
சரண்புகுந் தான்என முன்னம் சாற்றினன். 6509

ருஉ. ஆயவன் தருமமும் ஆதி மூர்த்திபால்
மேயதோர் சிந்தையும் மெய்யும் வேதியர்
நாயகன் தரநெடும் தவத்தின் நண்ணினன்
தூயவன் என்பதோர் பொருளும் சொல்லினன். 6510

ருங. கற்புடைத் தேவியை விடாது ககத்தியேல்
எற்புடைக் குன்றமாம் இலங்கை ஏனரின்
பொற்புடை முடித்தலை புரளும் என்றொரு
நற்பொருள் உணர்த்தினன் என்று நாட்டினன். 6511

ருச. ஏந்தெழில் இராவணன் இனைய சொன்னநீ
சாந்தொழிற் குரியைஎன் சார்பு நிற்றியேல்
ஆந்தினைப் பொழுதில்நீ அகல்தி யால்எனப்
போந்தனன் என்றனன் புகுந்த தீதென்றான். 6512

ருரு. அப்பொழு திராமனும் அருகில் நண்பரை
இப்பொருள் கேட்டனீர் இயம்பு வீர்இவன்
கைப்புகப் பாலனே கழியப் பாலனே
ஒப்புற நோக்கும்நும் உணர்வி னுல்என்றான். 6513

ருசு. தடமலர்க் கண்ணனைத் தடக்கை கூப்பினன்
இடம்இது காலம்ஈ தென்ன எண்ணுவான்
கடன்அறி காவலன் கழறி னனரோ
சுடர்நெடு மணிமுடி சுக்கி ரீவனே. 6514

ரூஎ. நனிமுதல் வேதங்கள் நான்கும் நாமநூல்
மனுமுதல் யாவையும் வரம்பு கண்டநீ
இனியன கேட்கவோ எம்ம னோர்களை
வினவின காரணம் விதியின் மேலுளாய். 6515

ரூஅ. ஆயினும் விளம்புவன் அருளின் ஆழியாய்
ஏயென ஆதலின் அறிவுக் கேற்றன
தூயஅன் றென்னினும் துணிவன் றென்னினும்
மேயது கேட்டபின் விளைவு நோக்குவாய். 6516

ரூகூ. வெம்முனை விளைதலின் அன்று வேறொரு
சும்மையால் உயிர்கொளத் துணித லால்அன்று
தம்முனைத் துறந்தது தரும நீதியோ
செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர். 6517

கூஏ. தகையுறு தம்முனைத் தாயைத் தந்தையை
மிகையுறு குரவரை உலகில் வேந்தனைப்
பகைஉற வருதலும் துறந்த பண்பிது
நகைஉறல் அன்றியும் நயக்கல் பாலதோ. 6518

கூக. வேண்டுறி இனியன விரும்பி வெம்முனை
பூண்டுறி அஞ்சிவெம் செருவில் புக்குடன்
மாண்டுறி அன்றிநம் மருங்கு வந்தவன்
ஆண்தொழில் உலகினுக் காணி ஆம் அன்றே. 6519

கூஉ. மிகைப்புலம் தருமமே வேட்ட போதுதன்
தொகைக்குலம் துறந்துபோய்த் துறத்தல் அன்றியே
நகைப்புலம் பொதுவுற நடந்து நாயக
பகைப்புலம் சார்தலோ பழியும் நீங்குமோ. 6520

கூங. வார்க்குற வனைகழல் தம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே போந்த போதிவன்
ஆர்க்குற வாகுவான் அருளின் ஆழியாய். 6521

கூச. ஒட்டிய கனகமான் உருவம் ஆகிய
சிட்டனும் மருமகன் இழைத்த தீவினை
கிட்டிய போதினில் தவமும் கேள்வியும்
விட்டது கண்டும் நாம்விடாது வேண்டுமோ. 6522

சுஞ. கூற்றுவன் தன்னெடேவ் உலகும் கூடிவந்
தேற்றன என்னினும் வெல்ல வேற்றுளான்
மாற்றவன் தம்பிநம் மருங்கு வந்திவண்
தோற்றுமோ அன்னவன் துணையும் ஆகுமோ. 6523

சுசு. அரக்கரை ஆசறக் கொன்று நல்அறம்
புரக்கவந் தனம்எனும் பெருமை பூண்டநாம்
இரக்கமில் அவரையே துணைக்கொண் டேற்றுமேல்
சுருக்கமுண் டவர்வலிக் கென்று தோன்றுமால். 6524

சுஎ. விண்டுழி ஒருங்கில நிற்பர் மெய்முகம்
கண்டுழி ஒருங்கில நிற்பர் கைப்பொருள்
கொண்டுழி ஒருங்கில நிற்பர் கூழுடன்
உண்டுழி ஒருங்கில நிற்பர் உற்றவர். 6525

சுஅ. வஞ்சனை இயற்றிட வந்தவா றலால்
தஞ்சென நம்வயிற் சார்ந்து ளான்அலன்
நஞ்செனக் கொடியனே நயந்து கோடியோ
அஞ்சன வண்ணனென் றறியக் கூறினன். 6526

சுக. அன்னவன் பின்உற அலகில் கேள்வியில்
தன்னிகர் பிறர்இலாத் தகைய சாம்பனை
என்னைஉன் கருத்தென இறை விளையினன்
தொன்முறை நெறிதெறிந் தவனும் சொல்லினன். 6527

எம. அறிஞரே ஆயினும் அரிய தெவ்வரைச்
செறிஞரே ஆம்எனில் கெடுதல் திண்ணமாம்
நெறிதனை நோக்குறில் நிருதர் நிற்பதோர்
குறிநனி உளதென உலகம் கொள்ளுமோ. 6528

எக. வெற்றியும் தருகுவர் வினையும் வேண்டுவர்
முற்றுவர் உறுகுறை முடிப்பர் முன்பினுல்
உற்றுறு நெடும்பகை உடையர் அல்லரே
சிற்றினத் தவரொடும் செறிதல் சீரிதோ. 6529

எஉ. வேதமும் வேள்வியும் விலக்கி வேதியர்க்
கேதமும் இமையவர்க் கிடரும் ஈட்டிய
பாதகர் நம்வயிற் பட்ட ராம்எனில்
நீதிலர் ஆயவர்க் கன்பு செய்வரோ. 6530

எஉ. கைப்புகுந் துரைசரண் அருளிக் காத்துமேல்
பொய்க்கொடு வஞ்சனை புணர்த்த போதினும்
மெய்க்கொள விளியினும் விடுதும் என்னினும்
திக்குறு நெடும்பழி அறமும் சீறுமால். 6531

எச. மேல்நனி விளைவது விளம்பல் வேண்டுமோ
கானகத் திறைவியோ டுறைந்த காலையில்,
மான்என வந்தவன் வரவை மானும்இவ்
ஏனையன் வரவும்என் றினைய கூறினன். 6532

எடு. பால்வரும் பனுவலில் துணிவு பற்றிய
சால்பெரும் கேள்வியின் தானை நாயகன்
நீலனை நின்கருத் தியம்பு நீஎன
ஏலவ னினைத்தன இனைய கூறினன். 6533

எசு. பகைவரைத் துணைஎனப் பற்றல் பாலவாம்
வகைஉள அன்னவை வரம்பில் கேள்வியாய்
தொகைஉறக் கூறுவ குரங்கின் சொல்என
நகைஉறத் தக்கன நயந்து கேட்டியால். 6534

எஎ. தங்குலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப்
பொங்கினர்க் கொன்றவர்க் கெளியர் போந்தவர்
மங்கையர் திறத்தினில் வயிர்த்த சிந்தையர்
சிங்கலில் பெரும்பொருள் இழந்து சீறினோர். 6535

எஅ. பேரபி மானங்கள் உற்ற பெற்றியோர்
போரினில் புறங்கொடுத் தஞ்சிப் போந்தவர்
நேர்வரு தாயத்து நிறம்பி னோர்பிறர்
சீறிய கிளைஞரை மடியச் செற்றுளோர். 6536

எம. அடுத்தநாட் டரசியல் புடைய ஆணையால்
படுத்தவர் பட்டவர் பகைவ ரோடொரு
மடக்கொடி திறத்திடை வைத்த சிந்தையர்
உடற்கோளத் தகையர்நம் முழைவந் தான்றினுல்.

அம. சாம்அவர்க் கெளிவரும் தகைமை யாரலர்
நாம்உற வல்லவர் நம்மை நண்ணினர்
தோம்உற நீங்குவர் துணிவர் ஆதலின்
யாம்இவன் வரவினை என்என் றுன்னுவாம். 6538

அக. காலமே நோக்கினும் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும் முனிந்து போந்தவன்
சீலமே நோக்கியான் தெளிந்து தேறுதற்
கேலுமே என்றுரைத் தினைய கூறினன். 6539

அஉ. மற்றுள மந்திரக் கிழவர் வாய்மையால்
குற்றமில் கேள்வியார் அன்பு கூர்ந்தவர்
பற்றுதல் மழுதெனப் பகைஉருவகை
பெற்றியின் உணர்வினர் முடியப் பேசினர். 6540

அங. உறுபொருள் யாவையும் ஒன்றக் கூறினர்
செறிபொருள் கோள்வியாய் கருத்தென் செப்பென
நெறிதரு மாருதி என்னும் நேரிலா
அறிவனை வினவினன் அறிவின் மேல்உளான். 6541

அச. இணங்கினர் அறிவிலர் எனினும் எண்ணுங்கால்
கணங்கொள்கை நும்மனோர் கடமை காண்எனா
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
துணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினன். 6542

அசு. எத்தனை உளர்தெரிந் தெண்ண ஏய்ந்தவர்
அத்தனை வரும்பொருள் ஐய நன்றென
உத்தமர் அதுதெரிந் துணர ஓதினர்
வித்தக இனிச்சில விளம்ப வேண்டுமோ. 6543

அஎ. தூயவர் துணிதிறம் நன்று தூயதே
ஆயினும் ஒருபொருள் உரைப்பன் ஆழியாய்
தீயன்என் றவனையான் அயிர்த்தல் செய்திலேன்
மேயின சிலபொருள் சொல்லி மேவினன். 6544

அஅ. வண்துழாய் அலங்கலாய் வஞ்சர் மாண்முகம்
கண்டதோர் மோழுதிலே தெரியும் கைதவம்
உண்டெனில் அஃதவர்க் கொளிக்க ஒண்ணுமோ
விண்டவர் நம்புகல் மருவி வீழ்வரோ. 6545

அஅ. உள்ளத்தில் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பும் ஆதலால்
கள்ளத்தின் வினைவெலாம் கருத்தி லாஇருள்
பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ. 6546

அசு வாலி விண்பெற அரசிளை யவன்பெறக்
கோலிய வரிசிலை வலியும் கொற்றமும்
சீலமும் உணர்ந்துகிற் சேர்ந்து தெள்ளிதின்
மேல்அர செய்துவான் விரும்பி மேவினன். 6547

கூ. செறிகழல் அரக்கர்தம் அரசுஞ் சீரியோர்
நெறியலை தாதலின் நிலைக்க லாமையால்
ஏறிகடல் உலகெலாம் இளவற் கீய்ந்துதார்
பிறிவருங் கருணையும் மெய்யும் பேணினன். 6548

கூக. காலம்அன் றிவன்வரு காலம் என்றது
வாலிதன் றுறுபகை வலிய தெய்தியே
தேலுமிவ் வுற்பினி இறுதி என்றலால்
மூலம்என் றுணர்தலால் பிரிவு முற்றினன். 6549

கூஉ. தீய்த்தொறில் அரக்கர்தம் மாயச் செய்வினை
வாய்த்துளான் அன்னவை உணரும் மாண்பினால்
காத்தவர் அவர்களே கையுற் றுல்நமக்
கேற்றதோர் உறுதியும் எளிதின் எய்துமால். 6550

கூங. தெளிவுறல் அரிதவர் மனத்தில் தீமையால்
விளிவகை செய்குவர் என்ன வேண்டுதல்
ஒளிவுற உயர்ந்தவர் ஒப்ப எண்ணிலார்
எளியவர் திறத்திவை எண்ணல் ஏயுமோ. 6551

கூச. கொல்லுமின் இவனைஎன் றரக்கன் கூறிய
எல்லையில் தூதரை எறிதல் என்பது
புல்லிது பழியொடும் புணரும் போர்த்தொறில்
வெல்லுவாய் பின்னர்என் றிடை விலக்கினன். 6552

கூடு. மாதரைக் கோறலும் மறத்துள் நீங்கிய
ஆதரைக் கோறலும் அறிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன் றும்என
வுதுவில் சிறந்தன எடுத்துக் காட்டினன். 6553

கூசு. எல்லியில் யான்அவன் இரத மாளிகை
செல்லிய போழ்தினும் திரிந்த போதினும்
நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன
அல்லதும் உண்டியான் அறிந்த தாறியாய். 6554

கூஎ. நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தில கண்டிலன் தரும தானமும்
வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்
தந்தணர் மனனெனப் பொலிந்த தாழியாய். 6555

கூஅ. மன்னவன் தனிமகன் மலரின் மேல்அயன்
சொன்னதோர் சாபமுண் டுன்னைத் துன்மதி
நன்னுதல் தீண்டுமேல் நணுகும் கூற்றென
என்னுடை இறைவிக்கும் இனிது கூறினன். 6556

•பெற்றுடைய பெருவரமும்பிறந்துடையவஞ்சனையும்பிறவும்உன்கை [டும்
வில்தொகையின் விடுகணையால் வெந்தொழியும் எனக்கருதி மேற்கோளோ
உற்றுடைய மனவலியும்ஊக்கமிகு பெருந்தொழிலும் உணர்ந்து நோக்கில்
மற்றுடையார் தாமுளரோ வாளரக்கன் அன்றியே தவத்தின் வாய்த்தார்•

ஈ. தேவர்க்குந் தானவர்க்குந் திசைமுகனே முதலாய தேவ தேவர்
மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை முற்றுவிப்பான் மூன்று நின்ரூய்
ஆவத்து வந்தபையம் என்ரூனை அயிர்த்தகல விடுதி ஆயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த தொவ்வாதோ கொற்ற வேந்தே.

பகைப்புலத்தோர் துணையல்ல என்றிவனைப் பற்ரேமேல் அறிஞர்பார்க்கில்
நகைப்புலத்த தாமன்றே நற்ரூய முதலாய பற்ரூல் மிக்க
தகைப்புலத்தோர் தந்தைதாய் தம்பியர்கள் தனையரிவர் தானே அன்ரே
மிகைப்புலத்தின் விளைகின்ற ஒருபொருளைக் காதலிக்கின் விளிஞர் ஆவார்.

ஆதலால் இவன் வரவு நல்லவரவே என்றுணர்ந்தேன் அடிய னேன்உன்
வேதநூல் எனத்தகைய திருமனத்தின் குறிப்பறியேன் என்று விட்டான்
காதல்நான் முகனுலும் கணிப்பரிய கலைஅனைத்தும் கதிரோன் முன்சென்
ரேதினனன் ஒகநீர் கடந்துபகை கடந்துலகை உய்யக் கொண்டான்.

*ஈங். மாருதி அமுத வார்த்தை செவிமடுத் தினிது மாந்தி
பேர் அறி வாளன் நன்று நன்றெனப் பிறரை நோக்கிச்
சீர்இது மேல்இவ் வார்த்தை தெளிவுறத் தேர்மின் என்னு
ஆரியன் உரைப்ப தானுன் அனைவரும் அதனைக் கேட்டார்.

ஈசு. கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று காதல்
அருத்தியும் அரசின் மேற்றே அறிவினுக் கவதி இல்லை
பெருத்துயர் தவத்தி னலும் பிழைப்பிலன் என்னும்பெற்றி
திருத்திய தாகும் அன்றே நம்வயிற் சேர்ந்த செய்கை.

ாரு. மற்றினி உரைப்ப தென்னை மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி அன்ன தன்றெனில் பிறிதொன் ரூலும்
வெற்றியே பெறுக தோற்க வீயவீ யாது வாழ்க
பற்றுதல் அன்றி உண்டோ அடைக்கலம் பகர்கின் ரூனை.6563

இன்றுவந் தான்என் றுண்டோ எந்தையை யாயை முன்பு
கொன்றுவந் தான்என் றுண்டோ அடைக்கலம் கூறு கின்ரூன்
துன்றிவந் தன்பு பேணும் துணைவனும் அவனே பின்னைப்
பின்றும்என் ரூலும் நம்பால் புகழன்றிப் பிறிண் டாமோ.

பிறந்தநாள் தொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ என்னைச் சரண்என்று வாழ்கின்ரூனைத்
துறந்தநாள் அகன்ற நாளாம் துன்னினூர் சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்ரே என்றும் இருந்தநாள் ஆவ தென்ரூன்.

இடைந்தவர்க் கபயம் யாம்என் றிரந்தவர்க் கெறிநீர்வேலை
கடைந்தவர்க் காதி ஆலம் உண்டவர்க் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவான் ஆயின் உள்ளதொன் றீயான் ஆயின்
அடைந்தவர்க்கருளான் ஆயின் அறம்என்னும் ஆண்மைஎன் னும்.

பேடையப் படுத்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து விறகிடை வெந்தி மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்ரே. 6567

மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன்
தன்னன உலகம் எல்லாம் தருமமும் எவையும் தானே
என்னினும் அடைந்தோர் தம்மை ஏமுற இனிதில் ஓம்பிப்
பின்னும்வீ டளிக்கும் என்ரூல் பிறிதொரு சான்றும்உண்டோ.

ககக. சரண் எனக் கியார்கொல் என்று சானகி அழுது சாம்ப
அரண்உனக் காவன் வஞ்சி அஞ்சல்என் றருளின் எய்தி
முரண்உடைக் கொடியோன் கொல்ல மொய்அமர் முடித்த தெந்தை
மரணம்அப் பெரியோன் பெற்ற தென்வயின் வழக்கன் ரூமோ. 6569

ாஅஉ. நஞ்சினீ ரிடற்று வைத்த நகைமழு வாள ணுடும்
தஞ்சென முன்னம் தானே தாதைபால் கொடுத்துச்சாதல்
அஞ்சினன் அபயம் என்ற அந்தணற் காகி அந்நாள்
வெஞ்சினக் கூற்றைக் கொன்ற மேன்மையின் மேன்மைஉண்டோ.6570

ாம.உ. உய்யலுற்றபயம்என்ருன் உயிர்த்தனன்உயிரின்ஓம்பாக்
கையனும் ஒருவன் செய்த உதவியில் கருத்தி லானும்
மையறு முறையின் நோக்கி அருமறை வழக்கில் நின்ற
மெய்யினைப்பொய்யென்ருனும் மீள்கிலாநரகில்வீழ்வான்.

ாம.ஊ. சீதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வன் என்று பேணிய விரதப் பெற்றி
வேதியர்க் கபயம் என்ருர்க் கன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்துச் சொன்ன அவ்வுரை கடக்க லாமோ.

ாம.ரு. போதகம் ஒன்று கன்றி இடங்கர் மாப் பொருத போரில்
ஆதியம் பரனே யான்உன் அபயம்என் றறைந்த அன்ஞள்
வேதமும் முடிவு காணு மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பி லாதார்.

ாம.கூ. காரிய மாக இன்றே ஆகுக கருணை யார்க்கும்
சீரிய தன்மை நோக்கில் இதனின்மேல் சிறந்த துண்டோ
பூரிய ரேனும் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்ரு
ஆருயிர் கொடுத்துக் காத்தார் எண்ணிலா அமரர் அம்மா. 6574

ாம.எ. மோதிவந் தடரும் சீயம் முனிவினுக் குடைந்த வேடன்
மீதொரு மரத்தில் சேர வெகுண்டுரை அரிக்குச் சொல்லப்
பேதமற் றிருந்தும் அன்ஞன் பிரித்தவஞ் சகத்தை ஓர்ந்தும்
காதலில் கனிகாய் நல்கிக் காத்ததும் கவிய தன்ரு. 6575

ாம.அ. ஆதலால் அபயம் என்ற பொழுதத்தே அபய தானம்
ஈதலே கடமை நீரும் இயம்பினீர் என்மேல் வைத்த
காதலின் இனிவே றெண்ணக் கடவதென் கதிரோன்மைந்த
கோதிலா தாணை நீயே என்வயிற் கொணர்தி என்ரு. 6576

ாம.கூ. ஐயுற எல்லாம் நீங்கி அளவையால் அமைந்த தன்றே
தெய்வநா யகன்தன் உள்ளம் தேறிய தெளிவே தேறிக்
கைபுகற் கமைவ தானுன் கடிதினில் கொணர்வன் என்னு
மெய்யினுக்குறையுள் ஆன ஒருவன்பால் விரைவில்சென்ரு.

வருகின்ற கவியின் வேந்தை மயிந்தனுக் கிளைய வள்ளல்
தருகென்ரு ன் அதனுல்உன்னை எதிர்கொளற் கருக்கன் தந்த
இருகுன்றம் அனைய தோளான் எய்தினன் என்ற லோடும்
தெரிகின்ற உள்ளத் தானும் அகமகிழ்ந் தவன்முன் சென்ரு.

தொல்அரும் காலம் எல்லாம் பழகினும் தூயர் அல்லார்
புல்லலர் உள்ளந் தூயார் புல்லுவர் எதிர்ந்த போதே
ஒல்லைவந் துணர்வும் ஒன்ற இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவில் தோளார்.

தழுவினர் நின்ற காலை தாமரைக் கண்ணன் தங்கள்
முழுமுதல் குலத்துக் கேற்ற முறைமையால் உவகை மூள
வழுவிலன் அபயம் நின்பால் வழங்கினன் மலர்ப்பொற் பாதம்
தொழுதியால்விரைவின் என்று கதிரவன்சிறுவன் சொன்னான்.

சிங்கவே றனையான் சொன்ன வாசகம் செவி புகாமுன்.
கங்குலின் நிறத்தி னுன்தன் கண்மழைத் தாரை கான்ற
அங்கமும் மனம்அ தென்ன குளிர்ந்தன அகத்தை மிக்குப்
பொங்கிய உவகை என்னப் பொடித்தன ரோமப் புள்ளி. 6581

ஈஉச பஞ்சென ச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரிந்தபாவி
வஞ்சனுக் கிளைய என்னை வருகஎன் றருள்செய் தானே
தஞ்செனக் கருதி னானே தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்செனச் சிறந்தேன் அன்றே நாயகன் அருள நாயேன்.

மருளுறு மனத்தால் என்தன் வாய்மொழி மறுத்தான்வானத்
துருளுறு தேரி னனும் இலங்கைமீ தோடும் அன்றே
தெருளுறு சிந்தை வந்த தேற்றம்ஈ தாகில் செய்யும்
அருளிது ஆகில் கெட்டேன் பிழைப்பரோ அரக்கர் ஆனோர்.

ஈஉசு. தீர்வரும் இன்ன தீமை செய்யினும் செய்ய சிந்தைப்
பேர்அறி வாளர் தத்தம் பெருமையில் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனல்எழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய அமுதுபண் டுதவிற் றன்றே. 6584

ஈஉள. துறவியின் உணர்வு பூண்ட தூயவர் துணைவன் என்னை
உறவுதந் தருளி மீளா அடைக்கலம் உதவி னானே
அறவினை இறையும் இல்லா அறிவிலி அரக்கன் என்னும்
பிறவியைப்பெயர்ந்தேன் பின்னும் நரகினும்பிழைப்பதானேன்

ஈஉஅ. திருத்திய உணர்வு மிக்க செங்கதிர்ச்செல்வன் செம்மல்
ஒருத்தரு நலனும் தீங்கும் தேரினும் உயிரின் ஓம்பும்
கருத்தினன் அன்றே தன்னைக் கழல்அடைந் தோரைக்காணும்
அருத்தியன் அமலன் தாழா தேகுதி அறிஞ என்றான். 6586

ாஉகூ. மொய்தவழ் கிரிகள் முற்றும் பலவுடன் முடுகிச் செல்ல
மைதவழ் கிரியும் மேருக் குன்றமும் வருவ தென்னச்
செய்தவம் பயந்த வீரர் திரள்மரம் ஏழும் தீய
எய்தவன் இருந்த சூழல் இருவரும் எய்தச் சென்றார். 6587

ாஉஅ. மாற்கடம் சூழ்ந்த வைப்பின் அங்கதன் மருங்கு காப்ப
நாற்கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வ னுமப்
பாற்கடல் சுற்றி விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம்பூத்த தெனப்பொலி வானைக்கண்டான். 6588

ாஉக, அள்ளிமீ துலகை வீசும் அரிக்குலச் சேனை நாப்பண்
தள்ளரும் திரையிற் ருகிப் பிறிதொரு திறனும் சாரா
வெள்ளிவெண் கடலுள் மேல்நாள் விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தான் என்னப் பொலிதரு பண்பி னானை. 6589

ாஉஉ. கோணுதற்கரிய கோலப் புருவம்போல் திரையும் கூடப்
பூணுதற் கினிய முத்தின் பொலிமணல் கானல்வைப்பில்
காணுதற் கரிய நீள வெண்மையில் கருமை காட்டி
வாள்நுதல் சீதை கண்ணின் மணிஎன வயங்கு வானை 6590

ாஉஊ. பட்டமழை சுமந்த காயம் பகர்வரும் அமரர் கோமான்
அட்டசில தூறந்த தென்ன ஆரம்தீர் மார்பி னானை
கடல்கடை மத்தும் தாம்பும் கழற்றிய தென்னக் காசின்
சுடர்ஒளி வலையம் தீர்ந்த சுந்தரத் தோளி னானை. 6591

ாஉசு. கற்றைவெண் நிலவு நீக்கிக் கருணையால் அமுதம்காலும்
முற்றுறு கலையிற் ருய முழுமதி முகத்தி னானைப்
பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணியால் மோலி சடைபொரு சென்னி யானை.

ாஉரு. வீரனை நோக்கி அங்கம் மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் ருகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ண னென்லாம்
ஆர்அருள் சுரக்கும் நீதி அறநிறம் கரிதோ என்ருன். 6593

ாஉசு. மிம்மினி ஒளியில் மாயும் பிறவியை விரைவின் வாங்கிச்
செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தம்முனுர் கமலத் தண்ணல் தாதையார் சரணம் தாழ
எம்முனுர் எனக்குச் செய்த உதவிஎன் றேம்பல் உற்ருன். 6594

ாஙஎ. பெருந்தவம்இயற்றினுர்க்கும்பேர்வரும்பிறவிநோய்க்கு
மருந்தென நின்றதானே வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன் நின்ற தென்னே இயம்புவ தெல்லை தீர்ந்த
அருந்தவம்உடையர்அம்மாஅர்க்கர்என்றகத்துட் கொண்டான்.

ாஙஅ. கரங்கள்மீச்சுமந்துசெல்லும் கதிர்மணிமுடியன்கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலான் கருணை வள்ளல்
இரங்கினுன்நோக்கும்தோறும் இருநிலத் திறைஞ்சுகின்றுன்
வரங்களின் வாரி யன்ன தாளிணை வந்து வீழ்ந்தான். 6596

ாஙக. அழிந்தது பிறவி என்னும் அகத்தியல் முகத்தில் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின் மார்புற வணங்கி னுணைப்
பெழிந்ததோர் கருணை தன்னுல் புல்லினன் என்று தோன்ற
எழுந்தினி திருத்தி என்னு மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.

ாஙஎ. ஆழியான் அவணை நோக்கி அருள்சுரந் துவகை கூர
ஏழினே டேழாய் நின்ற உலகும்என் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும் வளைஎயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்றுன்.

ாஙக. சீர்த்தனகருணைநோக்கிச்செய்ததோர்சிறப்புப்பெற்றுன்
கூர்த்தநல் அறத்தை நோக்கிக் குறித்ததோ யாது கொல்லோ
வார்த்தைஅ துரைத்த லோடும் தனித்தனி வாழ்ந்தோம்என்னு
ஆர்த்தன உலகில் உள்ள சராசரம் எவையும் அம்மா. 6599

ாஙஉ. உஞ்சனன் அடியனேன்என் றூழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யாணை அழகனும் அருளின் நோக்கித்
தஞ்செனத் துணைவன் அனதகை விலாப் புகழோன் தன்னைத்
துஞ்சலின் நயனத் தையா சூட்டுதி மகுடம் என்றுன். 6600

ாஙஙு. வீளைவீணை அறியும் வென்றி வீடணன் என்றும் வீயா
அளவறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின் ஐயா
களவியல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர
இளையவன் கவித்த மோலி என்னையும் கவித்தி என்றுன். 6601

ாஙஙு. குகனேடும் ஐவர் ஆனேம் முன்புபின் குன்றுசூழ்வான்
மகனேடும் அறுவர் ஆனேம் எம்உழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் அப்பா நின்னேடும் எழுவர் ஆனேம்
புகல் அரும் கானம் தந்து புகல்வரால் பொலிந்தான் எந்தை.

ாசடு. நடுவினிப் பகர்வ தென்னே நாயகன் நாயி னேனே
உடன்உதித் தவர்க ளோடும் ஒருவன்என் றுறையா நின்ருன்
அடிமையில்சிறந்தேன் என்னு அயிர்ப்பெனும் அச்சம்நீங்கித்
தொடுகழல் செம்பொன் மோலி சென்னியில் சூட்டிக் கொண்டான். 6603

ாசசு. திருவடி தலேயில் சூட்டிச் செங்கதிர் உச்சி சேர்ந்த
அருவரை என்ன நின்ற அரக்கர்தம் அரசை நோக்கி
இருவரும் உவகை கூர்ந்தார் யாவரும் இன்பம் உற்ருர்
பொருவரும் அமரர் வாழ்த்திப் பூமழை மொரிவ தானுர். 6604

ாசள. ஆர்த்தன பரவை ஏழும் அவனியும் அமரர்நாடும்
வார்த்தெழில் புணரும் தெய்வ மங்கல மூரசும் சங்கும்
தூர்த்தன கனகமாரி சொரிந்தன நறுமென் சுண்ணம்
போர்த்தனவொன்ருேவானத்தெழுந்ததோர் துழனிப்பொம்மல்

மொழிந்தசொல்அமுதம்அங்நாள் திறத்தினின் முறைமை நீக்கி
இழிந்தஎன் மரபும் இன்றே உயர்ந்ததென் றேம்பல் உற்ருன்
செழுந்தனி மலரோன் நல்கும் இராவணன் தீமைச் செல்வம்
அழிந்ததென் றறனும் தன்வாய் ஆவலம் கொட்டிற் றன்றே.

ாசகு. இன்னதோர் காலம் ஆக இராமனும் இலங்கை வேந்தன்
தன்நெடும் செல்வம் தானே பெற்றமை பலரும் கேட்டப்
பன்னெடும் தானே சூழப் பகலவன் சேயும் வாலி
மன்னெடும் குமார பாடி வீட்டினே வலம்செய் கென்ருன். 6607

ாருல. அந்தம்இல் குணத்தி னுனே அடியினே முடியி னேடும்
சந்தன விமானம் ஏற்றி வானரத் தலேவர் தாங்க
இந்திரற் குரிய செல்வம் எய்தினன் இவன்என் றேத்த
மந்தரத் தடந்தோள் வீரர் வலம்செய்தார் பாடி வைப்பை6608

ாருக. தேடுவார் தேட நின்ற சேவடி தானும் தேடி
நாடுவான் அன்று கண்ட நான்முகன் கழலி இய நன்னீர்
ஆடுவார் பாவம் ஐந்தும் நீக்கிமேல் அமரர் ஆவார்
சூடுவார் எய்தும் தன்மை சொல்லுவார் யாவர் கேட்டூர். 6609

இற்றைநாள் அளவு யாரும் இருடிகள் இமையோர் ஞானம்
முற்றினர் அன்பு பூண்டார் வேள்விகள் முடித்து நின்ருர்
மற்றுமா தவரும் எல்லாம் வாள்எயிற் றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்ருர் என்று வியந்தனர் பெரியோர் எல்லாம்.

சு-வது, வீடணன் அடைக்கலப்படலம் – முற்றிற்று.

நூ-வது. இலங்கை அளவறிபடலம்.

க. வந்தடி வணங்கிய நிருதர் மன்னவற்
கந்தமில் திறத்ததோர் உறையுள் அவ்வழி
தந்தனன் விடுத்தபின் இரவி தன்கதிர்
சிந்தின வெய்யஎன் றெண்ணித் தீர்ந்தனன். 6611

உ. சந்திவந் தணைத்தொழில் முடித்துத் தன்நெடும்
புந்திநொந் திராமனும் உயிர்ப்பப் பூங்கணை
சிந்திவந் திறுத்தனன் மதனன் தீநிறத்
தந்திவந் திறுத்தது கறுத்த தண்டமே. 6612

ங. மாத்தடம் திசைதொறும் மலர்ந்த வல்இருள்
கோத்தது கருங்கடல் கொள்ளை கொண்டென
நீத்தநீர்ப் பொய்கையின் நிறைந்த நாண்மலர்
பூத்தன மீன்களால் பொலிந்த தண்டமே. 6613

ச. கில்லியல் கோதையை நினைந்து தேம்பிய
வில்லியைத் திருமனம் வெதுப்பும் வெம்மையால்
எல்லியைக் காண்டலும் அலர்ந்த விட்டிஞல்
மல்லிகைக் கானமும் வானம் ஒத்ததே. 6614

ஞ. ஒன்றிஉட் கறுவிஞை டொளியின் வாள் உரீஇத்
தந்திரு முகத்தினுல் என்னைத் தாழ்த்தற
வென்றவள் துணைவனை இன்று வெல்குவன்
என்றது போலவந் தெழுந்த திங்களே. 6615

ஞ. கண்ணினை அப்புறம் கரந்து போகிலும்
பெண்நிறம் உண்டெனில் பிணிப்பன் ஈண்டென
உள்நிறை நெடுங்கடல் உலகம் எங்கணும்
வெண்நிற நிலவெனும் வலையை வீசினன். 6616

எ. புடைக்கவன் திரைஎடுத் தார்க்கும் போர்க்கடல்
உடைக்கரும் தனிநிறம் ஒளித்துக் கொண்டவன்
அடைக்கவந் தான்மறித் துரியின் தாணையால்
கிடக்கவந் தான்எனக் கிளர்ந்த தொத்ததே. 6617

அ. மேல்உகத் தொருதியால் முதிர்ந்த மெய் எலாம்
தோல்உகுத் தால்என வரவத் தொல்கடல்
வால்உகுத் தால்இடை பரந்த வைப்பெலாம்
பால்உகுத் தால்என நிலவு பாய்ந்ததே. 6618

கூ. மன்றல்வாய் மல்லிகை எயிற்றின் வண்டெனக்
கன்றிய நிறத்தது நறவின் கண்ணது
குன்றின்வாய் முழையினில் குலாய கொட்பது
தென்றல்என் றிருபுலி உயிர்த்துச் சென்றதால். 6619

ஐ. கரத்தொடும் பாழிமாக் கடல் கடைந்துளான்
உரத்தொடும் கரஞெடும் உயர ஓங்கிய
மரத்தொடும் துளைத்தவன் மார்பில் மன்மதன்
சரத்தொடும் பட்டன நிலவின் தாரைவாள். 6620

ஐக. உடலினை நோக்கும்பின் உயிரை நோக்குமால்
இடரினை நோக்கும்மற் றுஇயாதும் நோக்கலன்
கடலினை நோக்கும்அக் கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்தன் சிலையை நோக்குமால். 6621

ஐஉ. பணிபழுத் தமைந்தபூண் அல்குல் பண்பிஞல்
பிணிபழுத் தமைந்ததோர் பித்தின் உள்ளத்தான்
அணிபழுத் தழகமைந் தமுத சும்புதேன்.
மணிபழுத் தனையவாய் மறக்க வல்லனே. 6622

ஐங. ஆயதோர் அளவையின் அருக்கன் மைந்தன்நீ
தேய்வதென் காரியம் முடிக்கும் சிந்தையை
மேயவன் தன்னெடும் எண்ணி மேல்இனித்
தூயது நினைத்திலை என்னச் சொல்லினன். 6623

ஐச. அவ்வழி நினைவுவந் தயர்வு நீங்கினன்
செவ்வழி அறிஞனை கொணர்மின் சென்றென
இவ்வழி வருதிஎன் றியம்ப எய்தினன்
வெவ்வழி விலங்கினன் நெறியை மேவினன். 6624

ஐடு. ஆர்கலி இலங்கையின் அரணும் அவ்வழி
வார்கழை கணைகழல் அரக்கன் வன்மையும்
தார்கெழு தாணையின் அளவு தன்னையும்
நீர்கெழு தன்மைமாய் நிகழ்த்து வாய்என்றான். 6625

ஐக. எழுதலும் இருத்திஎன் றிராமன் ஏயினன்
முழுதுணர் புலவர்முன் முளரிக் கண்ணினன்
பழுதற வினவிய பொருளைப் பண்பினல்
தொழுதுயர் கையினன் தெரியச் சொல்லினன். 6626

மஎ. நிலவுஉடை வடவரை குலையக் நேர்ந்ததன்
தலைஎன விளங்கிய தமனி யப்பெரு
மலையினை வலியினுல் வாங்கி ஓங்குநீர்
அலைகடல் இட்டனன் அனுமன் தாதையே. 6627

மஅ. ஏழுநூ ருரோசனை அகலம் இட்டகீழ்
ஆழம்நூ ருரோசனை ஆழி மால்வரை
வாழியாய் உலகினை வளைத்த வண்ணமே
சூழுமா மதில்அது சுடர்க்கு மேலதால். 6628

மக. மருங்குடை வினையமும் பொறியின் மாட்சியும்
இருங்கடி அரணமும் அமைய எண்ணினுல்
சுருங்கிடும் என்பல சொல்லில் சுற்றிய
கருங்கடல் அகழது நீளம் காண்டியால். 6629

உம. வடதிசை வயங்கொளி வாயில் வைகுவார்
இடையிலர் எண்ணிரு கோடி என்பரால்
கடையுக முடிவினில் காலம் என்பதென்
விடைவரு பாகனைப் பொருவும் வெம்மையார். 6630

உக. மேல்திசை வாயிலின் வைகும் வெய்யவர்
ஏற்றம்இல் எண்ணிரு கோடி என்பரால்
கூற்றையும் கட்பொறி குறுகக் காண்பரேல்
ஊற்றுறு குறுதியோ டுயிரும் உண்பரால். 6631

உஉ. தென்திசை வாயிலின் வைகும் தீயவர்
என்றவர் எண்ணிரு கோடி என்பரால்
குன்றுறு நெடியவர் கொடுமை கூறினன்
வன்திறல் நமனையும் அரசு மாற்றுவார். 6632

உங. கீழ்த்திசை வாயிலின் வைகும் கீழவர்
ஈட்டமும் எண்ணிரு கோடி என்பரால்
கோட்டிருந் திசைநிலைக் கும்பக் குன்றையும்
தாட்டிணை சுழற்றியே தரையின் எற்றுவார். 6633

உச. விண்ணிடை விரித்துமு நிற்கும் வெய்யவர்
எண்ணிரு கோடியின் இரட்டி என்பரால்
மண்ணிடை வானவர் வருவர் என்றவர்
கண்ணிமி கரையிலி கரந்து போயினர். 6634

உடு. பிறங்கிய நெடுமதிள் பின்னும் முன்னரும்
உறங்கிலர் உண்பதும் உலவை ஆதலால்
கறங்கெனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்
அறைந்துள தையிரு நூறு கோடியால். 6635

உசு. இப்படி மதில்ஒரு மூன்றும் வேறினி
ஒப்பரும் பெருமையை உரைக்க ஒண்ணுமோ
மெய்ப்பெருந் திருநகர் காக்கும் வெய்யவர்
முப்பது கோடியின் மும்மை முற்றினர். 6636

உஎ. சிறப்பவன் செய்திடச் செல்வம் எய்தினர்
அறப்பெரும் பகைஞர்கள் அளவின் ஆற்றலார்
உறத்தெறும் பகைவரின் உதவும் உண்மையர்
இறப்பிலர் எண்ணவர்க் கேழு வெள்ளமே. 6637

உஅ. விடம்அல விழிஎன வெருளுஞ் சிந்தையார்
கடன்அல இமைப்பன என்னும் காவலர்
வடமலை புரைவன கோயில் வாயிலின்
இடம்வலம் வருபவர் எண்ணெண் கோடியால். 6638

உகூ. அன்றியும் அவன்அகல் கோயி லாய்மணி
முன்றினுள் மாறினர் முறையின் வைகுவார்
ஒன்றிடின் உலகையும் எடுக்கும் ஊற்றத்தார்
குன்றினும் நெடியவர் கோடி கோடியால். 6639

நுயி. தேர்பதி னுயிர கோடி செம்முகக்
கார்வரை அவற்றினுக் கிரட்டி கால்வயத்
தூர்பறி உரைத்தவற் றிரட்டி ஓட்டகந்
தார்வரு புரவியின் பாகம் சாலுமால். 6640

நுக. பேயினேன் என்பல பிதற்றிப் போர்வுறு
மாஇரு ஞாலத்து வைத்து மாப்படை
தேயினும் நாளெலாம் தேய வேண்டுவ
தாயிர வெள்ளம்என் றறிந்த ஆழியாய். 6641

நஉ. இலங்கையின் அரண்இது படையின் எண்இது
வலங்கையின் வாள்சிவன் கொடுக்க வாங்கிய
அலங்கல்அம் தோளவன் துணைவர் அந்தம்இல்
பெலங்களும் வரங்களும் தவத்தில் பெற்றுளார். 6642

நஙு. உகம்பல் காலமும் தவம்செய்து பெருவரம் உடையான்
சுகம்பல்போர் அலால் வேறிலன் பொரும்படைத்தொகையான்
நகம்பல் என்றிவை இலாததோர் நரசிங்கம் அனையான்
அகம்பன் என்றுளன் அலைகடல் குடிக்கவும் அமைவான். 6643

நஙூ. பொருப்பை மீதிடும் பூட்கையும் புரவியும் தேரும்
உருப்பவிற் படை ஒன்பது கோடியும் உடையான்
செருப்பெய் வானிடை சினக்கடாய் கடாய்வந்து செறுத்த
நெருப்பை வென்றவன் நிகும்பன்என் றுளன்ஒரு நெடியோன்

நஙே. தும்பி ஈட்டமும் புரவியின் இரதமும் தொடர்ந்த
அம்பொன் வாட்படை ஐயிரு கோடிகொண் டமைந்தான்
செம்பொன் நாட்டிடைச் சித்தரைச் சிறையிடை வைத்தான்
கும்பன் என்றுளன் ஊழிவெங் காற்றினும் கொடியோன். 6645

நஙூ. பேயை யாளியை யானையைக் கழுதையைப் பிணித்த
தாய தேர்ப்படை ஐயிரு கோடிகொண் டமைந்தான்
தாயை ஆயினும் சலித்திடில் வஞ்சனை தவிரான்
மாயை யான்உளன் மகோதரன் என்றொரு மறவோன். 6646

நஙள. குன்றில் வாழ்பவர் கோடிநா லிலந்தினுக் கிறைவன்
இன்று ளார்பின்னை நாளை லார்என எயிற்றால்
தின்று ளான்நெடும் தேவரைப் பன்முறை செருவின்
கொன்றுளான்உளன் வேள்வியின் பகைஞனென்னே வெய்யோன்.

நஙஅ. மண்உ ளாரையும் வான்உ ளாரையும் வகுத்தால்
உண்ணு நாள்ஒரு நாளினின் றுழல்தரு பசியன்
எண்ணின் நால்இரு கோடியன் எரிஅஞ்ச விழிக்கும்
கண்உ ளான்உளன் சூரியன் பகைஞன்ஓர் கழலோன். 6648

நஙக. தேவரும் தக்க முனிவரும் திசைமுகன் முதலா
மூவரும் பக்கம் நோக்கியே மொழிதர முனிவான்
தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன்
மாபெரும் பக்கன் என்றுளன் குன்றினும் வலியான். 6649

சஙி. உச்சிரத் தெரிகதிரென எருத்தெரி முகத்தான்
நச்சிரப்படைநால்லிரு கோடிக்கு நாதன்
மூச்சிரத் தயில் தலைவற்கும் வெலற்கரு முனைவன்
வச்சிரத் தெயிற்றவன் என்றொர் கூற்றிற்கும் வலியான். 6650

சக. அசஞ்ச லப்படை ஐயிரு கோடியன் அம்மீன்
வசஞ்செ யாதவர் தான்அன்றி பிறிதிலா வலியான்
இசைஞ்ச வெஞ்சமத் தியக்கரை வேரோடும் முன்னுள்
பிசைஞ்சு மோந்தவன் பிசாசன்என் றுளன்ஒரு பித்தன். 6651

சஉ. சில்லி மாப்பெருந் தேரோடுங் காரிபரி செறிந்த
வில்லின் மாப்படை ஏழிரு கோடிக்கு வேந்தன்
கல்லின் மாப்படி கலக்குவன் கனல்எனக் காந்திச்
சொல்லும் ஆற்றலன் துன்முகன் என்றறந் துறந்தான். 6652

சங. இலங்கை நாட்டினன் எறிகடல் தீவிடை உறையும்
அலங்கல் வேல்படை ஐயிரு கோடிக்கும் அரசன்
வலங்கொள்வாள்தொழில் விஞ்சையர்பெரும்புகழ்மறைத்தான்
விலங்கு நாட்டத்தன் என்றுளன் வெயில்உக விழிப்பான். 6653

சச. நாம நாட்டிய சவம்எரி நாடொறும் ஒருவர்
ஈம நாட்டிடை யிடவணம் எயிற்றிடை இடுவான்
தாம நாட்டிய கொடிப்படைப் பதுமத்தின் தலைவன்
தூம நாட்டத்தன் என்றுளன் தேவரைத் துரந்தான். 6654

சரு. போர்உன் மத்தனும் பொருவரு மத்தனும் இருவர்
நீரின் மத்தெனும் பெருமையார் நெடுங்கடல் படையார்
ஆரும் அத்தனை வலியுடை யார்இலை அவரால்
பேரும் அத்தனை எத்தனை உலகமும் பெரியோய். 6655

சசு. இன்ன தன்மையர் எத்தனை ஆயிரர் என்கேன்
அன்ன வன்பெருந் துணைவராம் அமர்த்தொழிற் கமைந்தார்
சொன்ன சொன்னவா படைத்தொகைக் கிரட்டியின்தொகையான்
பின்னர் எண்ணுவான் பிரகத்தன் என்றொரு பித்தன். 6656

சள. சேனை காவலன் இந்திரன் சிந்துரச் சென்னி
யானை கால்குலைந் தாறிஓர் ஏழும்விட் டகல
ஏனை வானவர் இருக்கைவிட் டிரியல்போய் உலையச்
சோனை மாரியில் சுடுகணை பலமுறை துறந்தான். 6657

சஅ. தம்பி முற்பகல் சந்திரர் நால்வரில் தயங்கும்
கம்ப மால்கரிக் கோடிரு கைகளால் கழற்றி
செம்பொன் மால்வரை மதம்பட்ட தாம்என எரிந்தான்
கும்பகன்னன்என் றுளன்பண்டு தேவரைக் குமைத்தான். 6658

சகூ. கோள்இ ரண்டையும் கொடுஞ்சிறை வைத்தஅக் குமரன்
மூளும் வெஞ்சினத் திந்திர சித்தென மொழிவான்
ஆளும் இந்திரற் கன்னவன் பிணித்ததற் பின்னே
தாளி னும்உள தோளி னும்உள இனம் தழும்பு. 6659

ருஅ. தன்னே யும்தெறும் தருமம்என் றிறைமனம் தாழான்
முன்ன வன்தரப் பெற்றதோர் முழுவலிச் சிலையான்
அன்ன வன்தனக் கிளையவன் அப்பெயர் ஒழிந்தான்
பின்னெ னர்இந்திரன் இலாமையில் பேர்அதி காயன். 6660

ருக. தேவ ராந்தகன் நராந்தகன் திரிசிரா என்னும்
மூவ ராம்தகை முதல்வராம் தலைவரும் முனையில்
போவ ராம்தகை அழிவராம் எனத்தனி பொருவார்
ஆவ ராம்தகை ராவணற் கரும்பெறல் புதல்வர். 6661

ருஉ. இனைய தன்மையர் வலிஇலீ திராவணன் என்னும்
அனைய வன்திறம் யான்அறி வனஎலாம் அறைவென்
தனையன் நான்முகன் தகைமகன் சிறுவர்க்குத் தவத்தால்
முனைவர்கோன் அவன்முக்கணன்வரத்தொடும்உயர்ந்தான்

ருந. எள்ளில் ஐம்பெரும் பூதங்கள் யாவையும் சூழ்ந்த
புள்ளி மான்உரி ஆடையன் உமையொடும் பொருந்தும்
வெள்ளி யம்பெரும் தடங்கிரி வேரொடும் வாங்கி
அள்ளி விண்தொட எடுத்தனன் உலகெலாம் அனுங்க.

ருச. ஆன்ற எண்திசை உலகெலாம் சுமக்கின்ற ஆனை
ஊன்று கோடிற மணிப்புயத் தழுத்தின உண்மை
தோன்றும் என்னவே துணுக்கம்உற் றிரிவர்அத் தேவர்
மூன்று கோடியின் மேல்ஒரு முப்பத்து மூவர். 6664

ருடு. குலங்க ளோடும்தன் குலமணி முடியொடும் குறைய
அலங்கு வாள்கொடு காலகே யரைக்கொன்ற அதற்பின்
இலங்கை வேந்தன்என் றுறைத்தலும் இடிஉண்ட அரவில்
கலங்கு மால்இனம் தானவர் தேவியர் .கருப்பம். 6665

ருசு. குரண்டம் ஆடும்நீர் அளகையில் ஒளித்துறை குபேரன்
இரண்டு மாடும்தன் நிதியமும் திருவொடும் இழந்து
புரண்டு மான்திரள் புலிகண்ட தாம்எனப் போனான்
இரண்டு மானமும் இலங்கைமா நகரமும் இழந்து. 6666

ருள. புண்ணும் செய்தது முதுகெனப் புறம்கொடுத் தோடி
உண்ணும் செய்கையில் தசமுகக் கூற்றம்தன் உயிர்மேல்
நண்ணும்செய்கைய தெனக்கொடு நாடொறும் தன்னுள்
எண்ணும்செய்கையன் அந்தகன்தன் பதம்இழந்தான். 6667

ருஅ. இருணன் காசற எழுகதி ரவன்நிற்க இன்றும்
அருணன் கண்களுங் கண்டிலை இலங்கைபண் டமரில்
பருணன் தன்பெரும் பாசமும் பறிப்புண்டு பயத்தால்
வருணன்உய்ந்தனன் மகரநீர் வெள்ளத்துமறைந்தே. 6668

ருக. என்று லப்புறச் சொல்லுகேன் இராவணன் என்னும்
குன்று லப்பினும் உலப்பிலாத் தோளினுன் சொற்றம்
இன்று லப்பினும் நாளையே உலப்பினும் சிலநாள்
சென்று லப்பினும் நினக்கன்றி பிறர்க்கென்றும் தீரா.

கூம. ஈடு பட்டவர் எண்ணிலர் தோரணத் தெழுவால்
பாடு பட்டவர் படுகடன் மணலினும் பலரால்
சூடு பட்டது தொல்நகர் அடுபுலி துரந்த
ஆடு பட்டது பட்டனர் அனுமனுல் அரக்கர். 6670

கூக. எம்கு லத்தவர் எண்பதி னுயிரர் இறைவ
கிங்க ரப்பெயர் கிரிஅன்ன தோற்றத்தர் கிளர்ந்தார்
வெங்க ரத்தினும் காலினும் வாலினும் வீக்கச்
சங்க ரற்கழி திரிபுரத் தவர்எனச் சமைந்தார், 6671

கூஉ வெம்புமாக்கடல்சேனைகொண் டெதிர்பொர வெகுண்டான்
அம்பும் ஆயிரம் ஆயிரம் இவன்புயத் தழுத்தி
உமபர் வானகத் தொருதனி யமனைச்சென் றுற்றான்
சம்பு மாலியும் வாலினுல் சுருக்குண்டு தலைவ. 6672

கூங. சேனைக் காவலர் ஓர்ஐவர் உளர்பண்டு தேவர்
வானைக் காவலும் அரணமும் மாற்றிய மறவர்
தானைக் கார்க்கரும் கடலொடு தமரொடு தாமும்
ஆனைக் கால்புட்ட செல்என ஒல்லையின் அவிந்தார். 6673

கூச. காய்த்த லக்கணத் தரக்கர்தம் உடல்உகு கறைத்தோல்
நீத்த எக்கரின் நிறைந்துகு கருங்கடல் நெருப்பின்
வாய்த்த அக்கணை வரிசிலை மலையொடும் வாங்கித்
தேய்த்த அக்குழம் புலர்ந்தில இலங்கையில் தெருவில்.

சுடு. சொன்ன மாமதிள் இலங்கையின் பரப்பிது தொலைந்து
சின்ன மானவர் கணக்கிலர் நீர்களே தெரிதிர்
இன்னம் ஆர்உளர் வீரர்மற் றிவன்சுட எரிந்த
அன்ன மாநகர் அவிந்ததக் குருதியால் அன்று. 6675

சுசு, விலங்கல் வெந்தது வேறினி விளம்புவ தேவனே
அலங்கல் மாலையும் சாந்தமும் அன்றுதான் அணிந்த
கலன்க ளோடும்அச் சாத்திய துகிலொடும் கதிர்வாள்
இலங்கை வேந்தனும் ஏழுநாள் விசும்பிடை இருந்தான்.

சுஎ. காந்து வாளியின் கரன்முதல் வீரரும் கவியின்
வேந்தும் அன்னவர் விளிந்தவா கேட்டன்று அஇலங்கை
தீய்ந்தவா கண்டும் அரக்கரை இவன்செரு முருக்கிப்
போந்தவா கண்டும் நான்இங்குப் புகுந்தது புகழோய். 6677

சுஅ, நொதுமல் திண்திறல் அரக்கர தியற்கையை நுவன்றேன்
அதுமற் றவ்வழி அரணமும் பெருமையும் அறைந்தேன்
இதுமற் றிவ்வழி எய்திய திராவணன் ஏவப்
பதுமத் தண்ணலே பண்டுபோல் அந்நகர் படைத்தான். 6678

கேள்கொள் மெய்மையான்கிளத்தியபொருள்எலாம்கேட்டான்
வாள்கொள் நோக்கியை பாக்கியம் பழுத்தன்ன மயிலை
நாள்கள் சாலவும் பிரிதலின் நலம்கெட உலர்ந்த
தோள்கள் வீங்கித்தன் தூதனைப் பார்த்திவை சொன்னான்.

எம. கூட்டி னுர்படை பாகத்தின் மேல்படக் கொன்றாய்
ஊட்டி னுய்எரி ஊர்முற்றும் இனிஅங்கொன் றுண்டோ
கேட்ட வாற்றினுல் கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாததென் வில்தொழில் காட்டவோ வீரா. 6680

எக. நின்செய் தோள்வலி நிரம்பிய திலங்கையை நேர்ந்து
பின்செய் தோம்சில அவைஇனிப் பீடென்று பெறுமே
பொன்செய் தோளினுய் போர்ப்பெரும் படைகொடு புக்கோம்
என்செய் தேம்என்று பெரும்புகழ் எய்துவான் இருந்தேம்.

எஉ. என்ன தாக்கிய தன்மையும் இராவணன் வலியும்
உன்ன தாக்கிணை பாக்கியம் உருக்கொண்ட தொப்பாய்
முன்ன தாக்கிய மூஉல காக்கிய முதலோன்
பின்ன தாக்கிய பதம்உனக் காக்கினன் பெற்றாய். 6682

எஉ. என்ற போழ்தினில் எழுந்திரு நிலத்துற இறஞ்சி
ஒன்றும் பேசலன் நாணினன் வணங்கிய உரவோன்
நின்ற வானரத் தலைவரும் அரசும்அன் னெடியோன்
வென்றி கேட்டலும் வீடுபெற் றார்என வியந்தார். 6683

எச. துடக்கும் என்னினின் உலகொரு மூன்றையும் தோளால்
அடக்கும் வண்ணமும் அளித்தலும் ஒருபொருள் அன்றால்
கிடக்கும் வண்ணவெங் கடலினைக் கிளர்பெருஞ் சேனை
கடக்கும் வண்ணமும் எண்ணுதி எண்ணநூல் கற்றாய்.

எடு. கரந்து நின்றநின் தன்மையை அதுசொலில் கருதில்
பரந்து நின்றநின் குலமுதல் தலைவரால் பாரில்
வரம்த ரும்இந்த மாகடல் படைசெல வழிவே
றிரந்து வேண்டுதி எறிதிரைப் பரவையை என்றான். 6685

எசு. நன்றி லங்கையர் நாயகன் மொழிஎன நயந்தான்
ஒன்றும் தன்பெருஞ் சேனையும் படைசெல உரவோன்
சென்று வேலையைச் சேர்தலும் விசும்பிடைச் சேர்ந்த
குன்றின் மேல்நின்று குதித்தது பகலவன் குதிரை. 6686

எள. கொழுங்க திர்ப்பகைக் கோளிருள் நீங்கிய கொள்கை
செழுஞ்சு டர்ப்பனிக் கலையெலாம் நிரம்பிய திங்கள்
புழுங்கு வெஞ்சினத் தஞ்சனப் பொறிவரி அரவம்
விழுங்கி நீங்கிய தொத்தது வேலைசூழ் ஞாலம். 6687

டு-வது, இலங்கை அளவறி படலம்-முற்றிற்று.

சு-வது வருணன் அடைக்கலப் படலம்.

க. தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருள்ந யந்துநுண் நூல்முறை அடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி. 6688

உ. பூழி சென்றுதன் திருவுருப் பொருந்தவும் புரைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும் வளர்ந்தான்
ஊழி சென்றன ஒப்பன ஒருபகல் அவையோர்
ஏழு சென்றன வந்திலன் எறிகடற் கிறைவன். 6689

ங. ஊற்றம் மீக்கொண்ட வேலியான் உண்டில்லை என்னும்
மாற்றம் மீக்கவும் பெற்றிலை யுமெனும் மனத்தால்
ஏற்றம் மீக்கொண்ட புனலிடை எரிமுனைத் தென்னச்
சீற்றம் மீக்கொள்ளச் சிவந்தன தாமரைச் செங்கண். 6690

ச. மாண்ட வில்லிழந் தயருநாள் வழிதரு கென்ன
வேண்ட வில்லையென் றெருளித்ததா மெனமனம் வெதும்ப
நீண்ட வில் லுடை நெடுங்கனல் உயிர்ப்பொருள் நிறை நாண்
பூண்ட வில்லெனக் குனித்தன கொடுங்கடைப் புருவம். 6691

ஞ. ஒன்றும் வேண்டலர் ஆயினும் ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவ ரேல்அவர் சிறுமையில் தீரார்
இன்று வேண்டிய தெறிகடல் நெறிதனீ மறுத்தால்
நன்று நன்றென நகையொடும் புகையுக நக்கான். 6692

ஞ. பாரம் நீங்கிய சிலையினன் இராவணன் பறித்த
தாரம் நீங்கிய தன்மையன் ஆதலில் தகைசால்
வீரம் நீங்கிய மனிதன்என் றிகழ்ச்சிமேல் விளைய
ஈரம் நீங்கிய தெறிகடற் கின்றென இசைத்தான். 6693

எ. புரந்து கோடலும் புகழொடு கோடலும் பொருது
துரந்து கோடலும் என்றிவை தொன்மைய தொடர்ந்தும்
இரந்து கோடலில் இயற்கையும் தருமமும் எஞ்சக்
கரந்து கோடலே நன்றினி நின்றதென் கழறி. 6694

அ. கானி டைப்புகுந் திருங்கனி காயொடும் கவர்ந்த
ஊனு டைப்பொறை உடம்பினன் என்றுகொண் டுணர்ந்த
மீனு டைக்கடற் பெருமையும் வில்லொடும் நின்ற
மானி டச்சிறு தன்மையும் காண்பரால் வானோர். 6695

கூ. ஏதம் அஞ்சிநான் இருந்ததை எளியென இகந்த
ஓதம் அஞ்சிஇவ் டிரண்டும் வெந் தொருபொடி யாகப்
பூதம் அஞ்சும்வந் தஞ்சலித் துயிர்கொண்டு பொருமப்
பாதம் அஞ்சலர் செஞ்செவே பணிவரென் பகைஞர். 6696

ஏ. மறுமை கண்டமெஞ் ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யாவையும் விரும்பார்
குறுமை கண்டவர் கொழுங்கனல் என்னினும் கூசார்
சிறுமை கண்டவர் பெருமைகண் டல்லது தேறார். 6697

மக. திருதி என்பதொன் றுறிதர ஊழியில் சினவும்
பருதி மண்டலம் எனப்பொலி முகத்தினன் பலகால்
தருதி வில்எனும் அளவையில் தம்பியும் வெம்பிக்
குருதி வெங்கனல் உமிழ்கின்ற கண்ணினன் கொடுத்தான்.

மஉ. வாங்கி வார்சிலை வாளிபெய் புட்டிலும் மலைபோல்
வீங்கு தோளியல் வீக்கினன் கோதையின் விரலால்
தாங்கு நாணினைத் தாக்கினன் தாக்கிய தமரம்
ஓங்கல் முக்கணன் தேவியைத் தீர்த்துள தூடல். 6699

மங. மாரி யின்பெருந் துளியினும் வரம்பில வடித்த
சீரி தென்றவை எவற்றினும் சீரிய தெரிந்து
பாரி யங்கிரும் புனல்எலாம் முடிவுறப் பருகுஞ்
சூரி யன்கதிர் அனையன சுடுசரம் துரந்தான். 6700

மச. பெரிய மால்லரை ஏறினும் பெருவலி படைத்த
வரிகொள் வெஞ்சிலை வளர்பிறை யாம்என வாங்கித்
திரிவ நிற்பன யாவையும் முடிவினில் தீய்க்கும்
எரியின் மும்மடி கொடியன சுடுசரம் எய்தான். 6701

மடு. மீனும் நாகமும் விண்தொடர் மலைகளும் விறகாய்
ஏன நிற்பன யாவையும் மேல்எரி எய்தப்
பேன நீர்நெடு நெய்எனப் பெய்கணை நெருப்பாய்க்
கூன அங்கியின் குண்டம்ஒத் ததுகடல் குட்டம். 6702

மசு. பாழி வன்னெடும் கொடுஞ்சிலை வழங்கிய பகழி
ஏழு வேலையும் எரியொடு புகைமடுத் தென்ன
ஊழி வெங்கனல் கொழுந்துகள் உருத்தென ஓடி
ஆழி மால்வரைக் கப்புறத் திருளையும் அவித்த. 6703

மஎ. மரும தாரையில் எரியுண்ட மகரங்கள் மயங்கிச்
செரும வானிடைக் கற்பக மரங்களும் தீய
நிருமி யாவிட்ட நெடுங்கணை பாய்தலின் நெருப்போ
டுருமு வீழ்ந்தெனச் சென்றன கடல்துளி உம்பர். 6704

மஅ கூடும்வெம்பொறிக்கொடுங்கணைதொடர்ந்தனல்கொழுந்த
ஓடு மேகங்கள் பொரிந்திடை உதிர்ந்தன உம்பர்
ஆடு மங்கையர் கருங்குழல் வெளுத்தன அளக்கர்
கோடுதீய்ந்தெழக் கொடும்புகைப் பிழம்புபோய்க்கொள்ள.

எக. நிமிர்ந்தவெஞ்சரம்நிறந்தொறும்படுந்தொறும்நெய்த்தோர்
உமிழ்ந்து லந்தன மகரங்கள் சிரங்களும் உருவத்
துமிந்த துண்டமும் பலபடத் துரந்தன தொலைந்த
திமிங்கி லங்களுந் திமிங்கி லங்களும் சிதறி. 6706

உஅ. நீறு மீச்செல பொருப்பெலாம் நெருப்பெழுந்தெரிய
நூறும் ஆயிர கோடியும் கடுங்கணை நுழைய
ஆறு கீழ்ப்பட அளறு பட் டழுந்திய அளக்கர்
சேறு தீய்ந்தெழக் காய்ந்தன சேடன்தன் சிரங்கள். 6707

உக. மொய்த்த மீன்குலம் முதலற முருங்கின மொழியில்
மொய்த்த சான்றவன் குலமெனப் பொருகணை அரிய
உய்த்த கூம்பொடு நெடுங்கலம் ஓடுவ கடுப்பத்
தைத்த அம்பொடும் திரிந்தன சாலமீன் சாலம்.

உஉ. சிந்தி ஓடிய குருதிவெம் கனலொடு செறிய
அந்தி வானகம் கடுத்ததவ் வளப்பரும் அளக்கர்
பந்தி பந்திக ளாய்நெடும் சரங்களும் பருக
வெந்து வீழ்ந்தன கரிந்தன பொரிந்தன சிலமீன்.

உங. வைய நாயகன் வடிக்கணை குடித்திட வற்றி
ஐய நீருடைத் தாயபேர் அருங்கனல் மண்டிக்
கைக ளந்தொரி கருங்கடல் காரகல் கடுப்ப
வெய்ய நெய்யிடை வேவன ஒத்தன சிலமீன்.

உச. குணிப்ப ருங்பெரும் பகழிகள் குருதிவாய் மடுப்பக்
கணிப்ப ரும்புனல் கடையுறக் குடித்தலில் காந்தும்
மணிப்ப ருந்தடக் குப்பைகள் மறிகடல் வெந்து
தணிப்ப ருந்தழல் சொரிந்தன போன்றன தயங்கி.

உரு. எங்கும் வெள்ளிடை மடுத்தலின் இனிதுடை இனமீன்
சங்க முங்கறிக் கிழங்கென இடைஇடை தழுவ
அங்கம் வெந்துவெம் சேற்றிடை அடுக்கிய வயங்கப்
பொங்கு நன்னெடும் புனல்அறப்பொடித்தமீன்போன்ற.

உசு. அதிரும் வெங்கணை ஒன்றையொன் றடர்ந்தெரிஅட ரவெதிர் னன்னெடும் காவென வெந்தது மீனம்
பொதுவின் மன்னுயிர்க் குலங்களும் துணிந்தன பொழிந்த
உதிர முங்கடல் திரைகளும் பொருவன ஒருபால்.

உஎ. அண்ணல் வெங்கணை அறுத்திடத் தெறித்தெழுந்தளக்கர்
பண்ணை வெம்புனல் படப்பட நெருப்பொடும் பற்றி
மண்ணில் வேருற முற்றிய நெடுமரம் மற்றும்
எண்ணெய் தோய்ந்தென எரிந்தன கிரிக்குலம்எல்லாம்.

உஅ. தெய்வ நாயகன் தெரிகணை திசைமுகத் தோருவன்
வைவி தாமெனப் பிழைப்பில மனத்தினும் கருக
வெய்ய வானெருப் பிடையிடை பொடித்தெழ வெறிநீர்ப்
பொய்கை தாமரை பூத்தெனப் பொலிந்தன புணரி.

உகூ. செப்பின் மேலவர் சீறினும் அதுசிறப் பாதல்
தப்பு மேயது கண்டனம் உவரியில் தணியா
உப்பு வேலையென். றுலகுறு பெரும்பழி ஒழிய
அப்பு வேலையாய் நிறைந்தது குறைந்ததோ அளக்கர். 6715

உஅ. தாரை உண்டபேர் அண்டங்கள் அடங்கலும் தானே
வாரி உண்டருள் செய்வதற் கீதொரு வலியோ
பாரை உண்பது படர்புனல் அப்பெரும் பரவை
நீரை உண்பது நெருப்பெனும் அப்பொருள் நிறைத்தான்.

*உக. மங்கலம் பொருந்திய தவத்து மாதவர்
கங்குலும் பகலும்அக் கடலுள் வைகுவார்
அங்கம்வெந் திலர்அவன் அடிகள் எண்ணலால்
பொங்குவெங் கனல்எனும் புனலில் போயினர். 6717

உஉ. தென்திசை குடதிசை முதல திக்கெலாம்
துன்றிய பெரும்புகைப் படலச் சுற்றலால்
கன்றிய நிறத்தன கதிர வன்பரி
நின்றன சென்றில நெறியின் நீங்கின. 6718

உங. பிறந்தவர்க் குறுதுயர் என்னும் பெற்றியை
அறிந்திருந் தறிந்திலர் அனையர் ஆம்எனச்
செறிந்ததம் பெடைகளைத் தேடித் தீக்கொள
மறிந்தன கரிந்தன வானப் புள்ளெலாம். 6719

உச. கடையுறு கருங்கடல் கனலி கைபரந்
தமைவனம் ஒத்தபோ தறைய வேண்டுமோ
சுமையுறு பெரும்புகைப் படலம் சுற்றலால்
இமையவர் இமைத்தனர் வெயர்ப்பும் எய்தினர். 6720

நடு. பூச்செலா தவள்நடை போகிலா மையால்
ஏச்செலாம் எய்தின அன்னம் யாவையும்
தீச்செலா நெறிபிறி தின்மை யால்திசை
மீச்செலாப் புரவலன் புகழின் வீய்ந்ததால். 6721

நகு. பம்புறு நெடுங்கடல் பறவை யாவையும்
உம்பரில் செல்லல்உற் றுருகி வீழ்ந்தன
வம்பரும் அம்பரத் தேகல் ஆற்றல
இம்பரில் மறிந்து போய் எரிந்து வீழ்ந்தவே. 6722

நஎ. பட்டன படப்பட படாத புட்குலம்
சுட்டுவந் தெரிக்குலப் படலம் சுற்றலால்
இட்டுழி அறிகில இரியல் போயின
முட்டைஎன் றெடுத்தன கடலுள் முத்தெலாம். 6723

நஅ. வள்ளலைப் பாவிதான் மனிதன் என்றுடன்
எள்ளல்உற் றெதிர்ந்திலன் ஏழு நாள்எனு
வெள்ளிவெண் பற்கீளைக் கிழித்து விண்உற
துள்ளல்உற் றிரிந்தன குரங்கின் சூழலே. 6724

நக. தாநெடுந் தீமைகள் உடைய தன்மையோர்
மாநெடுங் கடலிடை மறைந்து வைகுவார்
தூநெடுங் குருதிவேல் அவுணர் துஞ்சினர்
மீனெடுங் குலம்என மிதந்து வீங்கினர். 6725

சம. தசும்பிடை விரிந்தன என்னும் தாரைய
பசும்பொனின் மானங்கள் உருகிப் பாய்ந்தன
அசும்பற வறந்தன வானயா றெலாம்
விசும்பிடை இயங்கின மீனும் வெந்தவே. 6726

சக. செறிஉறு செம்மையில் தியை ஓம்புவ
நெறிஉறு செலவின தவத்தின் நீண்டன
உறுசினம் உறப்பல உருவு கொண்டன
குறுமுனி எனக்கடல் குடித்த கூர்ங்கணை. 6727

சஉ. மோதல்அம் கணைகடல் முழங்கு தீயினுல்
பூதலம் காவொடும் எரிந்த பொன்மதிள்
வேதலும் இலங்கையும் மீளப் போயின
தூதன்வந் தனன்எனும் துணைக்கம் உற்றதே. 6728

சஙு. அருக் கனில் ஒளிவிடும் ஆட கக்கிரீ
உருக்கென உருகின உதிரம் தோய்ந்தன
முருக்கெனச் சிவந்தன முதிர வெந்தன
காரிக்குவை நிகர்த்தன பவளக் காடெலாம். 6729

சஙு. பேருடைக் கிரிஎனப் பெரிய மீன்களும்
ஓரிடத் துயிர்தரித் தொதுங்கு கிற்கிலா
நீரிடைப் புகுமதி னெருப்பு நன்றெனு
பாரிடைக் குதித்தன பதைக்கு மெய்யின. 6730

சஙு. சுருள்கெடத் திரைகளைத் தொலைய உண்டன
பருகிடப் புனல்இல பகழி பாரிடை
மருள்கெடப் படர்வன நாகர் வைப்பையும்
இருள்கெடச் சென்றன இரவி போன்றன. 6731

சஙூ. கரும்புறக் கடல்களோ டுலகம் காச்சிய
இரும்புறச் செல்வன இழிவ கீழ்உற
அரும்புறத் தண்டத்தை உருவி அப்புறப்
பெரும்புறக் கடலையும் தொடர்ந்து பின்செலும். 6732

சஎ. திடல்திறந் துகுமணித் திரள்கள் சேண்நிலம்
உடல்திறந் துதிரம்வந் துகுவ போன்றன
கடல்இறந் தெங்கணும் வற்ற அக்கடல்
குடல்திறந் தனஎனக் கிடந்த கோள்அரா. 6733

சஅ. ஆழியில் புனல்அற மணிகள் அட்டிய
பேழையில் பொலிந்தன பரவை பேர்வறப்
பூழையில் பொருகணை உருவிப் புக்கன
மூழையில் பொலிந்தன முரலும் வெள்வகை. 6734

சகூ. நின்றுநூ றுயிரம் பகழி நீட்டலால்
குன்றுநூ றுயிர கோடி ஆயின
சென்றுதேய் வுறுவரோ புலவர் சிறிஞல்
ஒன்றுநூ றுயின உவரி முத்தெலாம். 6735

ரும். சூடுபெற் றய்யமே தொலைத்து மீன்உயிர்
வீடுபெற் றனஅடை மிடைந்த வேணுவின்
காடுபற் றியநெடுங் கனலி கைபரந்
தோடிஉற் றதுநெருப் புவரி நீர்எலாம். 6736

நக. காலவான் கடுங்கனல் சுற்றும் கவ்வலால்
நீலவான் துகிலினீன நீக்கிப் பூநிறக்
கோலவான் கழிநெடும் கூறை சுற்றினுள்
போலமா நிலமகள் பொலிந்து தோன்றினுள்: 6737

நஉ. கற்றவர் கற்றவர் உணர்வில் காண்கிலாக்
கொற்றவன் படைத்ததீ குடிக்க வேகிலவிட்
டுற்றுயிர் பதைத்தெழுந் தோடல் உற்றதால்
மற்றிரு கடல்புக வடவைத் தீஅரோ. 6738

நந. வாழியர் உலகினீன வளைத்து வான்உறச்
சூழ்இரும் பெருஞ்சுடர்ப் பிழம்பு தோன்றலால்
ஊழியின் உலகெலாம் உண்ண ஓங்கிய
ஆழியில் பொலிந்ததவ் ஆழி அன்னநாள். 6739

நஈ. ஏனையர் எண்ணிலவே றுலகில் ஈண்டினுர்
ஆனவர் செய்தன அறைய வேண்டுமோ
மேல்நிமிர்ந் தெழுகனல் வெதுப்ப மீதுபோய்
வானவர் மலர்அயன் உலகில் வைகினுர். 6740

நடு. இடுக்கினி எண்ணுவ தில்லை ஈண்டினி
மூடுக்குவன் வருணனீன என்ன மூண்டதோர்
தடுக்கரும் வெகுளியால் சதுமு கன்படை
தொடுத்தனன் அமரரும் துணுக்கம் எய்தினுர். 6741

நசு. மழைக்குலம் கதறின வருணன் வாய் உலர்ந்
தழைத்தனன் உலகினில் அடைந்த வாறெலாம்
இழைத்தன தூறெலாம் யாரும் யாதினிப்
பிழைப்பரீ தென்பதோர் பெரும் பயத்தினுல். 6742

*நுள. அண்டமூ லத்துக் கப்பால்ஆழியும் கொந்தித்த ஏழு தெண்திரைக் கடலின்செய்கை செப்பிஎன் தேவன்சென்னிப் பண்டைநாள் இருந்தகங்கை நங்கையும் பதைத்தாள் பார்ப்பான் குண்டிகை இருந்த நீருங் கொளுகொளு கொதித்த தன்றே.

நுஅ. இரக்கம்வந் துற்ற காலத் துலகெலாம் ஈன்று மீளக் கரக்கும்நா யகனீத் தானும் உணர்ந்திலன் சீற்றம் கண்டு வரக்கரு தாது தாழ்த்த வருணனின் மாறு கொண்ட அரக்கரே அறிஞர் என்னு அமரரும் அலக்கண் உற்றுர். 6744

ருக. உற்றுரு தனியே தானே தன்கணே உலகம் யாவும்
பெற்றவன் முனியப் புக்கால் நடுவினிப் பிழைப்ப துண்டோ
குற்றம்ஒன் றிலாதார் மேலுங் கோள்வரக் குறுகும் என்னு
மற்றுள பூதம் எல்லாம் வருணனே வைத மாதோ. 6745

சுஎ. எழுசுடர்ப் படலை யோடும் இரும்புகை நிரம்பி எங்கும்
வழிதெரி வறிகி லாதான் நோக்கினன் வருணன் என்பான்
அழுதழி கண்ணன் அன்பால் உருகிய நெஞ்சன் அஞ்சித்
தொழுதெழு கையன் கொய்தில் தோன்றினன் வழுத்துஞ் சொல்லான்.

சுக. நீஎனை நினைத்த தன்மை நெடுங்கடல் முடிவில் நின்ற
நாயினேன் அறிந்தி லேன்என் றண்ணலுக் கயிர்ப்பு நீங்கக்
காய்எரிப் படலஞ் சூழ்ந்த கருங்கடல் தரங்கத் தூடே
தீயிடை நடப்பான் என்னச் செறிபுனற் கிறைவன் சென்றான்.

சுஉ. வந்தனன் என்ப மன்னே மறிகடற் கிறைவன் வாயில்
சிந்திய மொழியன் தீய்ந்த சென்னியன் திகைத்த நெஞ்சன்
வெந்தழிந் துருகும் மெய்யன் விழுப்புகைப் படலை விம்ம
அந்தரில் அலமந் தஞ்சித் துயருழந் தலக்கண் உற்றான். 6748

சுஉ. நவையறும் உலகிற் கெல்லாம் நாயகன் நீயே சிறிய்
கவையம் நின் சரணம்அல்லால் பிறிதொன்று கண்டதுண்டோ
இவைஉனக் கரிய வோதான் எனக்கென்ன வலிவே றுண்டோ
அவையம்நின் அவையம் என்னு அடுத்தடுத் தரற்று கின்றான்.

சுச. ஆழிநீ அனலும் நீயே அல்லவை எல்லாம் நீயே
ஊழிநீ உலகும் நீயே அவற்றுறை உயிரும் நீயே
வாழியாய் அடியேன் நின்னே மறப்பனே வயங்கும் செந்தீச்
சூழுற உலைந்து போனேன் காத்தருள் சுருதிமூர்த்தி. 6750

சுரு. காட்டுவாய் உலகம் காட்டிக் காத்தவை கடையில் செந்தீ
ஊட்டுவாய் உண்பாய் நீயே உனக்கும்ஒண் ணுத துண்டோ
தீட்டுவான் பகழி ஒன்றால் உலகங்கள் மூன்றும் தீய
வீட்டுவாய் நினையில் நாயேற் கித்தனை வேண்டு மோதான்.

சுசு. சண்டவான் கிரண வாளால் தயங்கிருள் காடுசாய்க்கும்
மண்டலத் துறையுஞ் சோதி வள்ளலே மறையின் வாழ்வே
பண்டைநான் முகனே ஆதி சராசரத் துள்ள பள்ளப்
புண்டரீ கத்து வைகும் புராதனு போற்றி போற்றி. 6752

கூஎ. கள்ளமாய்உலகங்கொள்ளும் கருணையாய் மறையில்கூறும்
எள்ளலா காத மூலத்தி யாவர்க்கும் முதலாய் உள்ள
வள்ளலே காத்தி என்ற மதகரி வருத்தம் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனு போற்றி போற்றி.

கூஅ. அன்னீநீ அத்தன் நீயே அல்லவை எல்லாம் நீயே
பின்னும்நீ முன்னும் நீயே பேறும்நீ இழவும் நீயே
என்னீநீ இகழ்ந்தாய் என்ற தெங்ஙனம் ஈசன் ஆய
நின்னீநீ உணராய் நாயேன் எங்ஙனம் உணர்வேன் நின்னை.

கூக. பாயிருள் சீய்க்குந் தெய்வப் பருதியை பழிக்கு மாலை
மாயிருங் கரத்தான் மண்மேல் அடிஉறை யாக வைத்துத்
தீயவை சிறியோர்செய்தால் பொறுப்பதே பெரியோர்செய்கை
ஆயிர நாமத் தய்யா சரணம்என் றடியில் வீழ்ந்தான். 6755

எம. பருப்பதம் வேவ தென்னப் படர்எரி படரா நின்ற
உருப்பெறக் காட்டி வந்து தான்உனக் கடிமை என்ன
அருப்பெறக் கிளர்ந்த கோப மாற்றினன் ஆற்ரு ஆற்றல்
நெருப்புறப் பொங்கும் வெம்பால் நீருற்ற தணைய நீரான்.

எக. ஆறினன் அஞ்சல்உன் பால் அளித்தனன் அபையம்அன்பால்
ஈறிலா வணக்கஞ் செய்து யான்இரந் திடஎய் தாதே
சீறுமா கண்டு வந்த திறத்தினைத் தெரியும் வண்ணம்
கூறுவாய் தெரிய என்ரூன் வருணனும் தொழுது கூறும்.

எஉ. பார்த்தழைப் பொறையின் மிக்க பத்தினிக் குற்றபண்பும்
வார்த்தையின் அறிந்த தல்லால் தேவர்பால் வந்திலேன் நான்
தீர்த்தனின் ஆணை ஏறாஞ் செறிதிரைக் கடலில் மீனின்
போர்த்தொழில் விலக்கப் போனேன் அறிந்திலேன் புகுந்ததொன்றும்.

எங. என்றலும் இரங்கி ஐயன் இத்திறம் நிற்க என்கைப்
பொன்றலில் பகழிக் கப்பால் இலக்கம்என் புகல்தி என்ரூன்.
நன்றென வருணன் தானும் உலகத்து நவிவு தீரக்
குன்றென உயர்ந்த தோளாய் கூறுவன் என்று கூறும். 6759

எச. மன்னவ மருகாந் தாரம் என்பதோர் தீவின் வாழ்வார்
அன்னவர் சதகோ டிக்கும் அளப்பரும் அவுணர் தாங்கள்
தின்னவே உலகம் எல்லாம் தேய்ந்தன எனக்கும் தீயார்
மின்உமிழ் கணையை வெய்யோர் மேல்செல விடுதி என்ரூன்.

தேடிநூல் தெரிந்து ளோர்தம் உணர்வுக்கும் தெரிய நின்ரூன்
கோடிநூ ருயதிய அவுணரைக் குலத்தி னோடும்
ஓடிநூ றென்று விட்டான் ஓர்மை ஒடுங்கா முன்னம்
பாடிநூ ருக நூறி மீண்டதப் பகழித் தெய்வம். 6761

எசு. ஆய்வினை யுடையர் ஆகி அறம்பிழை யாதார்க் கென்றும்
ஏயவன் அருளே அன்றி இறுதிவந் தியைவ துண்டோ
மாய்வினை இயற்ற வேண்டி வருணன்மேல் எழுந்த சீற்றம்
தீவினை உடையார் மாட்டே தீங்கினைச் செய்த தன்றே. 6762

எள. பாபமே இயற்றி னரைப் பன்னெடுங் காதம் ஓடித்
தாபமே பெருகும் வண்ணம் எரிஎழச் சுட்ட தன்றே
தீபமே அனைய ஞானத் திருமறை முனிவன் செப்பும்
சாபமே ஒத்த தம்பு தருமமே வலிய தம்மா. 6763

எஅ. மொழிஉனக் கபயம் என்ரூய் ஆதலால் முனிவுதீர்ந்தேன்
பழிஎனக் காகும்என்று பாதகப் பரவை என்னும்
குழியினைக் கருதிச் செய்த குமண்டையைக் குறைத்து நீக்கி
வழியினைத் தருதி என்ரூன் வருணனை நோக்கி வள்ளல். 6764

எக. ஆழமும் அகலம் தானும் அளப்பரி தெனக்கும் ஐய
ஏழென அடுக்கி நின்ற உலகுக்கும் எல்லை இல்லை
வாழியாய் வற்ற நீக்கில் வரம்பறு காலம் எல்லாம்
தாழும்நின் சேனை உள்ளம் தளர்வுறும் தவத்தின் மிக்காய்.

அம. கல்லென அடுக்கி நிற்கில் கணக்கிலா உயிர்கள் எல்லாம்
ஒல்லையின் உலைந்து வீயும் இட்டதொன் றெழுகா வண்ணம்
எல்லையில் காலம் எல்லாம் ஏந்துவன் இனிதின் எந்தாய்
செல்லுதி சேது என்ரூன் றியற்றிஎன் சிரத்தில் என்ரூன்.

அக. நன்றிது புரிதும் என்றே நளிர்கடல் பெருமை நம்பால்
இன்றிது தீரும் என்னில் எளிவரும் பூதம் எல்லாம்
குன்றுகொ டுடுக்கிச் சேது குயிற்றுதிர் என்று கூறிச்
சென்றன்இருக்கை நோக்கி வருணனும் அருளிற் சென்ரூன்.

சு—வது, வருணன் அடைக்கலப்படலம்—முற்றிற்று

எழுவது, சேது பந்தனப்படலம்

க. அளவரும் அறிஞரோ டரக்கர் கோமகற்
கிளவலும் இனிதுடன் இருக்க எண்ணினன்
விளைவன செய்வன முடிக்க வேண்டுவான்
நளன்வரு கென்றனன் கவிக்கு நாயகன். 6768

உ. வந்தனன் வானரத் தச்சன் மன்னனின்
சிந்தனை என்னெனச் செறி திரைக்கடல்
பந்தனை செய்குதல் பணி நமக்கென
நிந்தனை இல்லவன் இயற்ற நேர்ந்தனன். 6769

ங. காரியம் கடல்தனை அடைத்துக் காட்டுவேன்
சூரியன் காதல சொல்லி என்பல
மேருவும் அணுவும்ஓர் வேறு ருவகை
சேர்வுற இயற்றுவன் கொணரச் செப்பென்ருன். 6770

ச. இளவலும் இறைவனும் இலங்கை வேந்தனும்
அளவறு நம்மலத் தரசும் அல்லவர்
வளைதரு கருங்கடல் அடைக்க வம்மெனத்
தளமலி சேனையைச் சாம்பன் சாற்றினன். 6771

ஞ. கருவரை காதங்கள் கணக்கி லாதன
இருகையில் தோள்களில் சென்னி ஏந்தின
ஒருகடல் அடைக்கமற் றெழுந்த வேலைகள்
வருவென வாம்என வந்த வானரம். 6772

ஙு. பேர்த்தன மலைசில பேர்க்கப் பேர்க்கச்சென்
றீர்த்தன சிலசில சென்னி ஏந்தின
தூர்த்தன சிலசில தூர்க்கத் தூர்க்கதின்
முர்ந்தன சிலசில ஆடிப் பாடின. 6773

எ. காலிடை ஒருமலை உருட்டிக் கைகளின்
மேலிடை ஒருமலை வாங்கி விண்டொடும்
சூலுடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய
வாலிடை ஒருமலை ஈர்த்து வந்தன. 6774

அ. மூடுக்கினன் தருகென மூன்று கோடியர்
எடுக்கிலும் அம்மலை ஒருகை ஏந்திஇட்
டடுக்கினன் தன்வலி காட்டி ஆழியை
நடுக்கினன் நளன்எனும் நவையுள் நீங்கினன். 6775

க. சயக்கவிப் பெரும்படைத் தலைவர் தாங்கின
முயற்கறை மதிதவழ் மூன்றில் குன்றுகள்
அயக்கலின் முகில்குலம் அலறி ஓடின
இயக்கரும் மகளிரும் இரியல் போயினர். 6776

ஙி. மஞ்சினில் திகழ்தரு வெம்மை மாக்குரங்
கெஞ்சலில் கிரிஎடுத் தெறிய வேகளன்
விஞ்சையில் தாங்கினுன் சடையன் வெண்ணெயில்
தஞ்சம்என் றேர்கூத் தாங்கும் தன்மைபோல். 6777

கக. வேரொடுங் கிரிதலை வாங்கி வீசின
ஓரிடத் தொன்றின்மேல் ஒன்று சென்றுற
நீரிடை நிமிர்பொறி பிறக்க நீண்டவி
தாருடை நெருப்பென வருணன் அஞ்சினுன். 6778

கஉ. ஆனிறக் கண்ணன்என் றிருவன் அங்கையால்
கானிற மலைகொணர்ந் தெறியக் கார்க்கடல்
தூநிற முத்தினம் துவலை யோடும்போய்
வானுடை மீனெடு மாறு கொண்டதே. 6779

கஙு. சிந்துரத் தடவரை எறியச் சேண்இடை
முந்துறத் தெறித்தெழு முத்தம் தொத்தலால்
அந்தரத் தெழுமுகில் ஆடையாய் அகன்
பந்தர்ஒத் ததுநெடும் பருதி வானமே. 6780

கச. வேணுவின் நெடுவரை வீச மீமிசைச்
சேண்உறு திவலையால் நனைந்து செந்துகில்
பூண்உறும் அல்குலில் பொருந்தப் போகலா
நாணினர் வானநாட் டுறையும் நங்கைமார். 6781

கடு. தேனிமிர் தடவரை திரைக் கருங்கடல்
தானிமிர் தரவிடை குவிப்பத் தள்ளு நீர்
மேனிமிர் துவலைமீச் சென்று மீன்களால்
வானவர் நாட்டினும் மழை பொழிந்ததால். 6782

*கசு. மையறு மலைக ளோடு மறிகடல் வந்து வீழ்ந்த
வெய்ய வாய் மகரம் பற்ற வெருவின விலைப்ப மேல்நாள்
பொய்கையின் இடங்கர் கவ்வப் புராதனு போற்றி என்று
கையெடுத் தழைத்த யானை போன்றன களிநல் யானை.

மெ. அசும்புபாய் மலரும் தேனும் ஆரமும் அகிலும் மற்றும்
விசும்பெலாம் உலவும்தெய்வ வெறியினம் மிடைந்து விம்மத்
தசும்பெலாம் வாச மூட்டிச் சாரித்த தண்ணீர் போலப்
பசும்புலால் நாறும் வேலை பரிமளம் கமழ்ந்த தன்றே. 6784

மெஅ. தேமுதல் கனியும் காயும் தேனினே டினும் தெய்வப்
பூமுதல் ஆய எல்லாம் மீன்கொளப் பொலிந்த தன்றே
மாமுதல் தருவோ டோங்கும் வான்உயர் மானக் குன்றம்
தாமுத லோடுங் கெட்டால் ஓழிவரோ வண்மை தக்கோர். 6785

மெக. மண்ணிறை சேற்றுப் புக்குச் சுரிகின்ற மாலைக் குன்றம்
கண்ணிறை பூவும் காயும் கனிகளும் பிறவும் கவ்வா
வெண்ணிற மீன்கள் எல்லாம் வறியவர் என்ன மேன்மேல்
உண்ணிறை செல்வம் நல்கா தொளிக்கின்ற லோபர் ஒத்த.

மெம. கறங்கெனத் திரியும் வேகக் கவிக்குலம் கையின் வாங்கிப்
பிறங்கிருங் கடலிற் பெய்த பேர்வரைப் பெரிய பாந்தள்
மறங்கிளர் மான யானை வயிற்றின வாக வாய்ச் சேர்ந்
துறங்கின கேடுற் றுலும் உணர்வரோ உணர்வி லாதார்.

இழைஎனத் தகைய மின்னின் எயிற்றினம் முழக்கம் ஏய்ந்த
புழையுடைத்தடக்கைஒன்றே டொன்றிடைபொருந்தச்சுற்றிக்
கழையுடைக் குன்றின் முன்றில் உருமொடும் கலந்த கால
மழையெனப் பொருத வேலை மகரமு மத்த மாவும். 6788

மெஉ. பொன்றின சிறிய வாய புண்ணியம் புரிந்தோர் போலக்
குன்றுகள் துரக்கும் வீரர் குவித்தனர் நெருப்புக் கோப்ப
ஒன்றின்மேல் ஒன்று வீழ உதைத்தெழுந் தும்பர் நாட்டில்
சென்றுமேல் நிலைபெ றாது திரிந்தன சிகரச் சில்லி. 6789

மெங. கூருடையிற்றுக்கோண்மாச்சுறவினம்எறிந்துகொல்லப்
போரிடை அரியும் வெய்ய புலிகளும் யானைப் போத்தும்
நீரிடைத் தோற்றத் தன்றே தன்னிலை நீங்கிச் சென்றுல்
ஆரிடைத் தோலார் தங்கள் அறிவிடை நோக்கில் அம்மா.

மெச. ஓள்ளிய உணர்வு கூட உதவலர் எனினும் ஒன்றே
வள்ளியர் ஆனோர் செய்கை மன்னுயிர்க் குதவும் அன்றே
துள்ளின குதித்த வானத் துயர்வரைக் குவட்டில் தூங்கும்
கள்ளினி றைய மாந்திக் கவியெனக் களித்த மீன்கள்.

உடு. மூசெரி பிறக்க மீக்கொண் டிறக்கிய முடுக்கம் தன்னுல்
கோசொரி நறவம் என்னத் தண்புனல் உகுக்கும் குன்றின்
வேய்சொரி முத்துக் கம்மா விருந்துசெய் திருந்த போலும்
வாய்சொரி இப்பி யோடும் வலம்புரி உமிழ்ந்த முத்தம்.

*உசு. விண்ட லந்தொடு மால்வரை வேரொடும்
கொண்ட லங்கொளி வீரர் குவித்தலால்
திண்ட லங்கடல் ஆயது நீர்செல
மண்ட லங்கடல் ஆகி மலிந்ததே. 6793

உஎ. ஐயன் வேண்டில் அதுஇது ஆம்அழல்
வெய்ய சீயமும் வேங்கையும் வேழமும்
மொய்கொள் குன்றின் முதலின மொய்த்தலால்
நெய்தல் வேலை குறிஞ்சி நிகர்த்ததால். 6794

உஅ. யானு ணுதன ஈங்கிவை என்னவோர்
தீனு ணுதன என்னிது செய்யுமே
மானு ணுத திரைக்கடல் வாழ்தரு
மீனு ணுதன இல்லை விலங்கரோ. 6795

உகூ. வல்வி லங்கு வளர்த்தவர் மாட்டருள்
செவ்வி லங்கலில் சிந்தையர் தீர்வரோ
இவ்வி லங்கல் விடோம்இனி என்பபோல்
எவ்வி லங்கும்வந் தெய்திய வேலையே. 6796

உஎ. கனித ருநெடுங் காய்தரு நாடொறும்
இனித ருந்தவ நொய்தின் இயற்றலால்
பனித ருங்கிரி தம்மனம் பற்றுறு
முனிவ ரும்முனி யார்முடி வுன்னுவார். 6797

உக. புலையின் வாழ்க்கை அரக்கர் பொருப்பினர்
தலையின் மேல்வைத்த கையினர் சாற்றுவார்
மலையி லேமற்று மாறினி வாழ்வதோர்
நிலையி லேம்என் றிலங்கை நெருங்கினர். 6798

உஉ. முழுக்கல் நீரிற் புகாமுது கிற்செலக்
குழுக்க ளோடணை கோளரி யாளிகள்
இழுக்கில் பேரணை யின்இரு பக்கமும்
ஒழுக்கின் மாலை வகுத்தன ஒத்தவே. 6799

நஙு. பளிக்கு மால்வரை முந்து படுத்தன
ஒளிக்கும் ஆழி கிடந்தன ஓர்கிலார்
வெளிக்கு மால்வரை வேண்டும் எனக்கொணர்ந்
தளிக்கும் வானர வீரர் அநேகரால். 6800

நசு. பாரி ணுண்முது கும்நெடும் பாழ்பட
மூரி வானரம் வாங்கிய பொய்ம்மலை
வேரின் நாயகன் மென்முழை யின்னுழை
சோரும் நாகம் நிலன்உறத் தூங்குமால். 6801

நடு. அருணச் செம்மணிக் குன்றய வெறிவு
இருள்நல் குன்றம் அடுக்கிய ஏய்ந்தன
கருணைக் கொண்டல் வறியன் கழுத்தென
வருணற் கீய்ந்த வருண சரத்தினில். 6802

நகூ. ஏய்ந்த தம்முடம் பிட்ட உயிர்க்கிடம்
ஆய்ந்து கொள்ளும் அறிஞரில் ஆழ்கடல்
பாய்ந்து பண்டுறை யும்மலைப் பாந்தள்
போந்து மால்வரை யின்முழைப் புகுதால். 6803

நஎ. சேது வின்பெரு மைக்கணி செப்பஓர்
ஏது வேண்டும்என் றெண்ணுவ தென்கோலோ
தூத னிட்ட மலையின் துவலையால்
மீது விட்டுல குற்றன மீன்களும். 6804

நஅ. நீலன் இட்ட நெடுமலை நீள்நிலம்
மூல முட்டலின் மொய்ம்புனல் கைமிகும்
கூல மிட்டிய தாதலிற் கோத்ததால்
ஓல மிட்டன ஓடி உலகெலாம். 6805

நகூ. ஒருவன் ஆயிரம் யோசனை ஓங்கிய
வெருவு மால்வரை விட்டெறிந் தார்த்தலால்
மருவு வான்கொடி மாட இலங்கையில்
தெருவெ லாம்புக் குலாயதெள் நீரரோ. 6806

சஎ. மயிந்தன் இட்ட நெடுவரை வான்உற
வயிந்த முட்டி விழஎழுந் தார்த்தநீர்
தியந்த முட்டித் திசைநிலை யாவையும்
பெயர்ந்து விட்டவை யாவும் பிளிறின. 6807

சக. இலக்கு வன்சரம் ஆயினும் இன்றெதிர்
விலக்கி னுல்விலங் காத விலங்கலால்
அலக்கண் எய்த அழுதெழு ஆழியைக்
கலக்கி னுன்மகன் மீளக் கலக்கினுன். 6808

சஉ. மருத்தின் மைந்தன் மணிநெடுந் தோள்எனப்
பெருத்த குன்றம் கரடிப் பெரும்படை
விருத்தன் இட்ட விசையினில் வீசிய
திருத்தம் வானவர் சென்னியில் சென்றதால். 6809

சஙு. குமுதன் இட்ட குலவரைக் கூத்தரில்
திமிதம் இட்டுத் திரியும் திரைக்கடல்
துமிதம் ஊர்புக வானவர் துள்ளினுர்
அமிர்தம் இன்னம் எழும்எனும் ஆசையால். 6810

சச. கனசி னத்துரு மிற்கடுங் கார்வரை
பனசன் இட்டன யாவும் பரிக்கிலன்
மனசி னத்த அனந்தனும் வாழ்விகந்
தனசன் அத்தொழில் மேற்கொள்வ தாயினுன். 6811

சரு. எண்ணில் எண்கினம் இட்ட கிரிக்குலம்
உண்ண உண்ணச்சென் றொன்றினில் ஒன்றுறச்
சுண்ண நுண்பொடி யாகித் தொலைந்தன
புண்ணி யம்பொருந் தார்தம் முயற்சிபோல். 6812

சசு. ஆர ஆயிர யோசனை ஆழமும்
தீர நீண்டு பரந்த திமிங்கிலம்
பார மாமலை ஏறப் பதைத்துடல்
பேர வேநெடும் குன்றமும் போந்தவே. 6813

சள. குலைகொ ளக்குறி நோக்கிய கொள்கையான்
சிலைகள் ஒக்க முறித்துச் செறித்துநேர்
மலைகள் ஒக்க அடுக்கி மணல்படத்
தலைகள் ஒக்கத் தடவும் தடக்கையால். 6814

சஅ. தழுவி ஆயிர கோடியர் தாங்கிய
குழுவின் வானரம் தந்த கிரிக்குலம்
எழுவின் நீள்கரத் தெற்றிட விற்றிடை
வழுவி வீழ்வன கால்களின் வாங்குவான். 6815

சகூ. மலைசு மந்து வருவன வானரம்
நிலையில் நின்றன செல்ல நிலம்பெரு
அலைநெ டுங்கடல் அன்றியும் ஆண்டுத்தம்
தலையின் மேலும்ஓர் சேதுத் தருவபோல். 6816

சும். பருத்த மாமலை ஏந்திய பல்படை
நிரைத்த லில்சில செல்ல நிலம்பெருக்
கரத்தில் ஏந்திய கார்வரை வானரம்
சிரத்தின் மேல்கொண்டு நீந்தின சென்றதால். 6817

சுக. ஆய்ந்து நீளம் அரிது சுமந்தன
ஓய்ந்த காலும் பசியின் உழந்தன
வேந்து மால்வரை வைத்தவற் றீண்டுதேன்
மாந்தி மாந்தி மறந்து மயங்குமால். 6818

சுஉ. குறைவில் குங்கும மூங்குலத் தேன்களும்
நிறைம லர்க்குவை யும்நிறைந் தெங்கணும்
துறைதொ றுங்கிரி தூக்கின தோய்தலால்
நறைநெ டுங்கடல் ஒத்தது நாமநீர், 6819

சுஙூ. நெடும்பொன் மால்வரை தூர்த்து நெருக்கவும்
தொடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
இடும்பை எத்தனை யும்மடுத் தெய்தவும்
குடும்பம் தாங்கும் குடிப்பிறந் தார்கள்போல். 6820

சுசு. போதல் செய்குந ரும்புகு வார்களும்
மாதி ரந்தொறும் வானர வீரர்கள்
சேது எத்தனை சென்றதென் றுர்சிலர்
பாதி சென்ற தெனப்பகர் ந்தார்சிலர். 6821

சுருு. தொக்க டங்கல வோடும் துவலைகள்
மிக்க டங்கலும் போவன மீன்குலம்
அக்க ருங்கடல் தூர அயல்கடல்
புக்க டங்கிடப் போவன போல்வன. 6822

சுரூ. கொழுந்து டைப்பவ ளக்கொடி யின்குலம்
அழுந்த உய்த்த அடுக்கக் காய்ந்தயல்
விழுந்த பன்மணி யின்னெளி மீமிசை
எழுந்த தெங்கணும் இந்திர வில்லென. 6823

ருள. பழும ரம்பறிக் கப்பற வைக்குலம்
தழுவி நின்றெரு வன்தனி தாங்கினுன்
விழுத லும்புகும் வேறிடம் இன்மையால்
அழுத ரற்றுங் கிளேயென ஆனவால். 6824

ருஅ. தரவ லோமலர் என்றுயிர் தாங்கிய
மரம்ள லாங்கடல் வீழ்தலும் வண்டெலாம்
கரவ லாளர் விழுக்களே கண்ணிலா
இரவ லாளரின் எங்கும் திரிந்ததால். 6825

ருக. நிலம ரங்கிய வேரொடும் நேர்பறித்
தலம ருந்துயர் எய்திய ஆயினும்
வலம ரங்களே விட்டில மாசிலாக்
குலம டந்தையர் போன்ற கொடிகளே. 6826

சுஎ. மூசு வண்டின மும்மத மாவின்பின்
ஆசை கொண்டன போல்தொடர்ந் தாடின
ஓசை மாக்கடல் குன்றெ டொளித்தலும்
வேசை மங்கையர் அன்பென மீண்டவே. 6827

சுக. துப்பு டைக்கடல் தூய துவலையால்
அப்பு றக்கட லுஞ்சுவை அற்றன
எப்பு றத்துரு மேறுங் குளிர்ந்தன
உப்பு றைத்தன மேகம் உடுத்த நீர். 6828

சுஉ. முதிர்நெ டுங்கிரி வீழ முழங்குநீர்
எதிரெ ழுந்து நிரந்தரம் எய்தலால்
மதிய வன்கதி ரிற்குளிர் வாய்ந்தன
கதிர வன்கனல் வெங்கதிர்க் கற்றையே. 6829

சுங. நன்கொ டித்து நறுங்கிரி சிந்திய
பொன்கொ டித்துவ லேப்பொதிந் தோடிய
வன்கொ டிப்பவ ளங்கள் வழங்கலால்
மின்கொ டிக்கள் பொடித்தது விண்ணெலாம். 6830

சுச. ஓடு மோட்டரின் ஒன்றின்முன் ஒன்றுபோய்க்
காடும் நாடும் மரங்களும் கற்களும்
நாடி நாடி நளிர்கடல் நாட்டில்ஓர்
பூடும் வாட்டமி லாமை பெற்றுந்தின. 6831

சுடு. வரைப ரப்பும் மணல்பரப் புமவற்
றரைப ரப்புவ தென்னத் தனித்தனி
உரைப ரப்பு முறுகிரி ஒண்கவிக்
கரைப ரப்பும் கடல்பரப் பானதால். 6832

சுசு. உற்ற தால்அணை ஓங்க இலங்கையை
முற்றி மூன்று பகலிடை முற்றலும்
பெற்ற ஆர்ப்பின் விசும்பு பிளந்தது
மற்றி வானம் பிறிதொரு வான்கொலாம். 6833

சுஎ. நாடு கின்றதென் வேரொன்று நாயகன்
தோடு சேர்குழ லாள்துயர் நீக்குவான்
ஓடு மின்முது கிட்டென ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது சேதுவே. 6834

சுஅ. மெய்யன் ஈட்டத் திலங்கையர் மென்மகள்
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலாள்
ஐயன் ஈட்டிய சேணகண் டன்பினுல்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால். 6835

சுசு. கான யாறு பரந்த கருங்கடல்
ஞான நாயகன் சேண நடக்கலால்
ஏண யாறினி யானல தாரென
வான யாறிம்பர் வந்தது மானுமால். 6836

எம். கற் கிடந்தொளிர் காசினம் காந்தலால்
மற் கடந்தவர் வந்து வயங்கணை
எற் கடந்த திருளிடை இந்திர
விற் கிடந்தது என்ன விளங்குமால். 6837

எக. ஆன பேர்அணை அன்பின் அமைத்தபின்
கான வாழ்க்கைக் கவிக்குல நாதனும்
மான வேற்கை இலங்கையர் மன்னனும்
ஏண யோரும் இராமண எய்தினர். 6838

எஉ. எய்த யோசண ஈண்டொரு நூறுடன்
ஐயிரண் டின்அகலம் அமைந்திடச்
செய்த தால்அணை என்பது செப்பினர்
வைய நாதன் சரணம் வாங்கியே. 6839

எ—வது, சேது பந்தனப்படலம் — முற்றிற்று.

அ-வது. ஒற்றுக் கேள்விப்படலம்

க. ஆண்தகையும் அன்பினொடு காதலது கூற
நீண்டகையி னுல்அவரை நெஞ்சினொடு புல்லி
ஈண்டஎழு கின்றனன் இறைத்தபடி எல்லாம்
காண்டல்அதின் மேல்நெடிய காதல்முதிர் கின்றுன்.

உ. பண்டைஉறை யுட்கெதிர் படைக்கடலின் வைகும்
கொண்டல்என வந்தஅணை யைக்குறுகி நின்றுன்
அண்டர்முதல் வன்ஒருதன் ஆவிஅனை யாளைக்
கண்டனன் எனப்பெரிய காதல்முதிர் கின்றுன். 6841

ங. நின்றுபெரி துன்னியும் நிறைக்கடல் நிரம்பக்
குன்றுகொ டடைத்தணை குயிற்றியதொர் கொள்கை
அன்றுலகு தந்தமுதல் அந்தணன் அமைத்தான்
என்றபொழு தின்கணும்இ தென்றியலும் என்றுன். 6842

ச. ஊழிமுதல் நாயகன் வியப்பினொ டுவந்தான்
தாழும்உரை செய்யும்அள வேதனிஇ தான்றே
ஆழியின் இலங்கைநெடி தத்திசையி னுமேல்
ஏழுகட லுங்கடி தடைப்பர்இவர் என்றுன். 6843

ஞ. நெற்றியில் அரக்கர்பதி செல்லநிறை நள்ளூல்
கற்றுணரு மாருதி கடைக்குழை வரத்தன்
பெற்றிஉணர் தம்பிஒரு பின்புசெல வீரப்
பொற்றிரள் புயக்கரு நிறக்களிறு போனுன். 6844

ட. இருங்கவிகொள் சேனைமணி ஆரமிட றித்தன்
மருங்குவளர் தண்டலை வயங்குதிரை மான
ஒருங்குருனி போயின உயர்ந்தகரை யூடே
கருங்கடல் புகப்பெருகு காவிரி கடுப்ப. 6845

ண. ஓதிய குறிஞ்சிமுத லாயநிலன் உள்ள
கோதில வருந்துவன கொள்ளியின் முகந்துற்
றியாதுமொரி யாவகை சுமந்துகடல் எய்தப்
போதலினு மன்னபடை பொன்னி எனலாகும். 6846

த. ஆயது நெருங்கஅடி யிட்டிடை விடாமல்
தேயுநெறி மாடுதிரை ஊடுசில செல்லப்
போயசில பொங்குதொறு பொங்குதொறு பூசல்
பாய்புரவி விண்படர்வ போல்இனிது பாய்வ. 6847

கூ. மெய்யிடை நெருங்கவிசை உற்றவயல் வீழும்
பொய்யிடம் இலாதபுன லிற்புகலி லாத
உய்விடம் அளிக்கும்அரு ளாளர்முறை உய்த்தார்
கையினிடை சென்றுகரை கண்டகரை இல்லை. 6848

எ. இழைத்தணைய வெங்கதிரின் வெஞ்சுடர் இராமன்
மழைத்தமுகில் அன்னமணி மேனிவரு டாமல்
தழைத்தநிழல் உற்றகுளிர் சந்தனம் உயர்ந்த
வழைத்தரு வெடுத்தருகு வந்தனர் அநேகர். 6849

ஏக. ஓமநெறி வாணர்மறை வாய்மைஒரு தானே
ஆமரசன் மைந்தர் திரு மேனிஅல சாமே
பூமரம் இறுத்தவை பொருந்துவ பொருந்தச்
சாமைரையின் வீசினர் படைத்தலிவர் தாமே. 6850

ஐஉ. மருங்கட வளர்ந்தமுலை மங்கைமனம் உன்னு
வருங்கடக மங்கையினில் வள்ளல்நினை கின்றுன்
ஒருங்கடல் உயர்ந்தபடர் தாணையொடு மோதத்
திருங்கடல் கடந்துகரை ஏறினன் இராமன். 6851

ஐஎ. பெருந்தவம் முயன்றமரர் பேணிய பயத்தான்
மருந்தணைய தம்பியொடும் வன்துணைவ ரோடும்
அருந்ததியும் வந்தனைசெய் அம்சொல்இள வஞ்சி
இருந்தநக ரின்புறன்ஓர் குன்றிடை இறுத்தான். 6852

*ஐஏ. நீலனை நோக்கி ஈண்ட நேமியோன் நெடிய நீரம்
பால்வரும் சேனைக் கெல்லாம் அமைத்தியால் பாடி என்றுன்
கால்வரை வணங்கிப் போனுன் கல்லினுல் கடலைக்கட்டி
நூல்வரை வழிசெய் தானுக் கன்னிலை நொய்தில் சொன்னுன்

பொன்னினும் மணியி னுலும் நான்முகன் புனைந்த பொற்பின்
நன்னல மாக வாங்கி நால்வகைச் சதுரம் நாட்டி
இன்னர்என் னுத வண்ணம் இறைவர்க்கும் பிறர்க்கும்எல்லாம்
தன்நகர் என்னச் செய்தான் தாதையும் நானுக் கொண்டான்.

வில்லினுற் கிருக்கை செய்யும் விரும்பினுல் பொறுப்புவிங்கக்
கல்லினுற் கல்லை ஒக்கக் கடாயினுன் கழைக ளாலும்
நெல்லினுல் அலக்குங் காலும் நிரப்பினுன் தருப்பை என்னும்
புல்லினுல் தொடுத்து வாசப் பூவினுன் மேய்ந்து போனுன்.

வாயினும் மனத்தும் வாழ்த்தி மன்னுயிர்க் கெல்லாம் பெற்ற
தாயினும் அன்பி னேனைத் தாள்உற வணங்கித் தத்தம்
ஏயின இருக்கை நோக்கி எண்திசை மருங்கில் யாரும்
போயினர் அமைத்த சாலை இராமனும் இனிது புக்கான்.

மஅ. பப்புநீண் டுயர்ந்த வீரர் பருவரை கடலில் பாச்சத்
துப்புநீர் ஆய தூய சுடர்களும் கறுக்க வந்திட்
டுப்புநீர் அகத்துத் தோய்ந்த ஒளிநிறம் விளங்க அப்பால்
அப்புநீ ராடுவான் போல் அருக்கனும் அத்தம் சேர்ந்தான்.

மக. மால்உறு குடக வானில் மயங்கியே வந்து தோன்றும்
பால்உறு பசுவெண் திங்கள் பங்கய நயனத் தண்ணல்
மேல்உறு பகழி தூர்க்க வெகுண்டனன் விரைவின் வாங்கிக்
கால்உற வளைத்த காமன் வில்எனக் [1]காட்டிற் றன்றே.

உம. நூற்றிதழ்க் கமலம்தந்த நுண்ணரும் சுண்ணம்உண்ணத்
தீற்றிமென் பனிநீர் தோய்ந்த சீதளத் தென்றல் என்னும்
காற்றினும் மாலை யான கனலினும் காமன் வாளிக்
கூற்றினும்வெம்மைகாட்டிக் கொதித்ததக்குளிர்வெண் திங்கள்.

உக. செயிர்ப்பினும்அழகுசெய்யும் திருமுகத்தணங்கைத்தீர்ந்து
துயில்சுவைதுறந்தான் தோளில் தூய்மிலாத்தவழ்ந்ததோற்றம்
மயில்குலம் பிரிந்த தென்ன மரகத மலைமேல் வன்னி
உயிர்ப்பொடும் வெள்ளைப் பிள்ளை வாள்அரா ஊர்வ தொத்த

உஉ. மன்நெடுங் கிரியின் மாடே வரவர வயிரச் செங்கைப்
பொன்நெடும் திரள்தோள் ஐயன் மெய்யுறப்புழுங்கிநைந்தான்
பன்நெடும் காதத் தேயும் சுடவல்ல பவளச் செவ்வாய்
அன்னெடும் கருங்கட் டீயை அணுகினுல் ஆவ துண்டோ.

உங. இற்றிது காலம் ஆக இலங்கையர் வேந்தன் ஏவும்
ஒற்றர்வந் தளவு நோக்கிக் குரங்கென உழல்கின் றுரைப்
பற்றினன் என்ப மன்னே பண்டுதான் பலநாள் செய்த
நற்றவப் பயன்கள் துய்ப்பான் முந்துறப் போந்த நம்பி. 6862

பேர்வுறு கவியின் சேனைப் பெருங்கடல் வெள்ளம் தன்னுள்
ஓர்வுறு மனத்தன் ஆகி ஒற்றரை உணர்ந்து கொண்டான்
சேர்வுறு பாலின் வேலைச் சிறுதுளி தெளித்த தேனும்
நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் அன்னன் 6863

---

1 [பிரதி] காட்டித்தன்றே.

உரு. பெருமையும் சிறுமை தானு மூற்றிரு பெற்றி ஆற்ற
அருமையின் அகன்று நீண்ட விஞ்சையின் அடக்கத் தாலும்
உருவமும் தெரியா வண்ணம் ஒளித்தனர் உறையு மாயத்
திருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னல் ஆனன். 6864

உசு. கூட்டிய விரல்தின் கையால் குரங்குகள் இரங்கக் குத்தி
மீட்டொரு வீணை செ யாமல் மாணியின் கொடியால் வீக்கிப்
பூட்டிய தன்கை வாயில் பொழிகின்ற குருதியாரைக்
காட்டினன் கள்வர் என்னக் கருணையங் கடலும் கண்டான் 6865

பாம்புழைப் பள்ளி வள்ளல் பகைஞரென் றுணரான்பல்லோர்
நோம்பிழை செய்த கொல்லோ குரங்கென இரங்கி நோக்கித்
தாம்பிழை செய்தா ரேனும் தஞ்மென் றடைந்தோர் தம்மை
நாம்பிழை செய்ய லாமோ நலியலீர் விடுதிர் என்றான். 6866

உஅ. அகனுறப் போந்த வள்ளல் கருணையொத் தழுத கண்ணீர்
நகுநிறை காலில் வைகும் நம்இனத் தவரும் அல்லர்
தகைநிறை விலாத உன்னத் திராவணன் தந்த ஒற்றர்
சுகன் இவன் அவனுஞ் சாரன் என்பது தெரியச் சொன்னான்.

உக. கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருநிற நிருதக் கள்வர்
வல்வில்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கைஅரிதென்றெண்ணி வீணையத்தால்எம்மைஎல்லாம்
கொல்விக்க வந்தான் என்னு குரங்குநாங் கொள்க என்றார்.

உம. கள்ளரே காண்டி என்னு மந்திரம் கருத்தில்கொண்டான்
தெள்ளிய தெரிக்கும் தெய்வத் தீவீணை சேர்த லோடும்
துள்ளியின் இரதம் தோய்ந்து தொன்னிறந் திரிந்து வேறூர்
வெள்ளிபோல் இருந்த செம்பொன் ஆம்என வேறுபட்டார்.

உக. மின்குலாம் எயிற்ற ராகி வெருவியே வெற்பில் நின்ற
வன்கணர் தம்மை நோக்கி மணிநகை முறுவல் செய்தான்
புன்கணர் புன்க ணீக்கும் புரவலன் போந்த தன்மை
என்கொலாம் தெரிய எல்லாம் இயம்புதிர் அஞ்சல் என்றான்.

உஉ. தாய்தெரிந்துலகங்காத்த தவத்தியைத்தன்னைக்கொல்லும்
நோய்தெரிந் துணரான் தேடிக் கொண்டனன் நுவலஎன்னு
வாய்தெரிந் துரையா வண்ணம் குழறுவார் வணங்கி மாய
வேய்தெரிந் துரைக்க வந்தோம் வீணையினுல் வீரஎன்றார். 6871

நஉ. எல்லியில் இலங்கைச் செல்வம் இளையவற்கீய்ந்ததன்மை
சொல்லுதிர் மகரவேலை கவிக்குல வீரர் தூர்த்த
கல்லினிற் கடந்த வாறுங் கழறுதிர் காலம் தாழ்த்த
வில்லினர் வந்தார் என்றும் விளம்புதிர் தெரிய என்றான்.

கொத்துறு தலையான் வைகுங் குறும்புடை இருக்கைக்குன்றம்
தத்துறு தடநீர் வேலை தனிலொரு சிறையிற் றூதல்
ஒத்துற உணர்ந்தி லாமை உயிரொடும் உணர்வி னோடும்
இத்துணை இருந்த தென்னும் தன்மையும் இயம்பு வீரால்.

நஙு. சண்டங்கொள் வேக மாகத் தனிவிடை உவணம்தாங்கும்
துண்டங்கொள்பிறையோன்மோலித்துளவினுனோடுந்தோல்லை
அண்டங்கள் எவையுந் தாங்கிக் காப்பினும் அறனில் யாக்கை
கண்டங்கள் பலவும் காண்பன் என்பதும் கழறு வீரால். 6874

நசு. தீட்டிய மழுவாள் வீரன் தாதையைச் செற்றூர் சுற்றம்
மாட்டிய வண்ணம் என்ன வருக்கமும் மற்று மூற்றும்
வீட்டியென் தாதைக்காய மெய்ப்பலி விசும்பு ளோரை
ஊட்டுவன் உயிர்கொண் டென்னும் வார்த்தையும் உணர்த்து வீரால்.

தாழ்விலாத் தவத்தோர் தையல் தனித்தொரு சிறையில் தங்கச்
சூழ்கலா வஞ்சம் சூழ்ந்த தன்னீத்தன் சுற்றத் தோடும்
வாழ்வெலாந் தம்பி கொள்ள வயங்கொரி நரகம் என்னும்
மீள்கலாச் சிறையின் வைப்பேன் என்பதும் விளம்புவீரால்.

நஅ. நோக்கினீர் தானை எங்கும் நுழைந்தநீர் இளிவே றொன்றும்
ஆக்குவ தில்லை யாயின் அஞ்சல்என் றவரை ஐயன்
வாக்கினுல் மனத்தால் கையால் மற்றிவர் நலியா வண்ணம்
போக்குதி விரைவின் என்றான் உய்ந்தனம் என்று போனார்.

*நகூ. அரவ மாக்கடல் அஞ்சிய அச்சமும்
உரவு நல்அணை கட்டிய ஊற்றமும்
வரவு நோக்கி இலங்கையர் மன்னவன்
இரவில் எண்ணிடம் வேறிருந் தானரோ. 6878

சஅ. வாரு லாமுலை மாதரும் மைந்தரும்
யாரும் நீங்க அறிஞரொ டேகினன்
சேர்க என்னின் அல்லால் அன்றுதென் றலும்
சார்கி லாதெடு மந்திரச் சாலையே. 6879

சக. உணர்வின் நெஞ்சினர் ஊமரைப் போல்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர் பொறியிலார்
கொணருங் கூனர் குறளர் கொழுஞ்சுடர்த்
துணரும் நல்விளக் கேந்தினர் சுற்றினர். 6880

சஉ. நணிய வந்த மனிதர் நமக்கினித்
துணியுஞ் செய்வினை யாதெனச் சொல்லினுன்
பணியுந் தானவர் ஆதியர் பன்முடி
மணியி னுல்விளங் குமலர்த் தாளினுன். 6881

சங. கால வெங்கனல் போலுங் கணைகளால்
வேலை வெந்து நடுங்கி வெயில்புரை
மாலை கொண்டு வணங்கிய வாறெலாம்
சூலம் என்னஎன் நெஞ்சைத் துளைத்ததால். 6882

சச. கிழிப டக்கடல் கீண்டது மாண்டது
மொழிப டைத்த வலிஎன மூண்டதோர்
பழிப டைத்த பெரும்பயத் தன்னவன்
வழி கெடுத்ததென் உள்ளம் வருத்துமால். 6883

சடு. படைத்த மாமலை யாவும் பறித்து வேர்
துடைத்து வானர வீரர்தம் தோள்களைப்
புடைத்த வாறும் புணரியைப் போக்கற
அடைத்த வாறும்என் உள்ளத் தடைத்தவால். 6884

சசு. காந்து வெஞ்சின வீரர் கணக்கிலார்
தாம்தம் ஆற்றலுக் கேற்றன தாக்கவே
வேந்தன் மற்றொரு வன்தன் விரல்களால்
ஏந்தி இட்டதென் உள்ளத்தின் இட்டதால். 6885

சள. சுட்ட வாகண்டும் தொல்நகர் வேலையைத்
தட்ட வாகண்டும் தாவற்ற தெவ்வரைக்
கட்ட வாகண்டும் கண்டெதி ரேவந்து
விட்ட வாகண்டும் மேல்எண்ண வேண்டுமோ. 6886

சஅ. என்று தாயைப் பயந்தோன் இயம்பலும்
மென்று வாயை விறிவழி தீயுக
நன்று நன்றுநம் மந்திரம் நன்றெனு
என்றும் வாழி இளவலோ டேகென்றுன். 6887

சகூ. சன்மோ கொல் இதம்என எண்ணினன்
மோனமாய் இருந்தான் அற மூற்றினன்
ஆன காலை அடியின் இறைஞ்சிய
சேனை நாதன் இனையன செப்பினன். 6888

ருஅ. கண்மை அந்தர வேலை கடந்தஅத்
திண்மை ஒன்றும்அல் லால்திசை காவலர்
எண்ம ரும்இவற் கேவல்செய் கின்றஅவ்
உண்மை ஒன்றும் உணர்ந்திலை யோஐயா. 6889

ருக. கூசும் வானரர் குன்று கொடுகடல்
வீசி னுர்எனும் வீரம் விளம்பினுய்
ஊசி வேரொடும் ஓங்கலை ஓங்கிய
சசை னேடும் எடுத்ததும் இல்லையோ. 6890

ருஉ. அதுகொ டென்சில வானரம் ஆகிநீ
மதிகொ டுந்தகை யோர்வந்து நாம்உறை
பதிபு குந்தனர் தம்மைப் படுப்பதோர்
வீதிகொ டுந்த விளைந்தது தான்என்ருன். 6891

ருங. மூற்று மூடிய கஞ்சுகன் மூட்டிய
வெற்ற னல்பொறிக் கண்ணினன் வேத்திரம்
பற்று மங்கையி னன்படி வாயினன்
ஒற்றர் வந்தனர் என்ன உணர்த்தினுன். 6892

ருச. வாயில் காவலன் கூறி வணங்கலும்
மேய வெங்கண் விறல்கொள் இராக்கதர்
நாய கன்புகுத் தீங்கென நன்றெனப்
போய வன்புக லப்புகுந் தார்அரோ. 6893

ருரு. மணிக்கண் வந்தவன் பாதம் வணங்கினர்
பணிக்கை வன்குரங் கின்படர் சேனையை
நிணிக்க வேயும் திடுக்கெனும் நெஞ்சினர்
கணிக்கும் தோறும் உதிரங்கள் கக்குவார். 6894

ருசு. வெள்ள வாரி விரிவொடும் வீடணன்
தள்ள வாழும் நிலைமையும் தாபதர்
உள்ள வாறும் உரைமின்என் ருன்உயிர்
கொள்ள வாய்வெரு வும்கொடும் கூற்றினன். 6895

ருள. அடியம் அன்னெடுஞ் சேனையை ஆசையால்
முடிய நோக்கலுற் றேறுமது வேலியின்
படியை நோக்கிஎப் பாலும் படர்குறும்
கடிய வேகக் கலுழனில் கண்டிலேம். 6896

ருஅ. நுவல யாம்வர வேண்டிய நோக்கதோ
கவலை வேலை அடைத்திடக் கற்பழிந்
தவலம் எய்திய தேதுளி ஆர்த்தெழும்
துவலை யேவந்து சொல்லிய தில்லையோ. 6897

ருக. எல்லை நோக்கவும் எய்தல தாம்எனும்
சொல்லை நோக்கிய மானிடன் தோள்எனும்
கல்லை நோக்கிக் கணைகளை நோக்கித்தன்
வில்லை நோக்கலும் வெந்தது வேலையே. 6898

சுஅ. தார் உலாமணி மார்பஉன் தம்பியே
தேர் உலாவு கதிர்கள் இரண்டும்தன்
பேர் உலாவள வும்எய்தப் பெற்றனன்
நீர் உலாவும் இலங்கை நெடுந்திரு. 6899

சுக. சேது பந்தனம் செய்தனன் என்றதிப்
போது வந்த புதுமைய தோஓரு
தூது வந்தவன் தோள்வலி யாமுனம்
ஏது வந்ததெ லாம்நம் இருக்கையே. 6900

சுஉ. மருந்து தேவர் அருந்திய மாலிவந்
தருந்து தானவர் தம்மை அறிந்துமுன்
பெருந்திண் மாயற் குணர்த்திய பெற்றிபோல்
தெரிந்து காட்டினன் நும்பி சினத்தினன். 6901

சுங. பற்றி வானர வீரர் பணைக்கையால்
எற்றி எங்களை யெண்நெடும் தோள்இறச்
சுற்றி ஈர்த்தலைத் துச்சுடர் போல்ஒளிர்
வெற்றி வீரற்குக் காட்டி விளம்பினன். 6902

சுஎ. சரங்கள் இங்கிவற் றுல்பண்டு தான்உடை
வரங்கள் சிந்துவன் என்றனன் மற்றெமைக்
குரங்க லாமை தெரித்தும்அக் கொற்றவன்
இரங்க உய்ந்தனம் ஈதெங்கள் ஒற்றரோ. 6903

சுரு. மற்றும் யாவையும் ஈதென மன்னவன்
சொற்ற யாவும் செவியிடைச் சொல்லினூர்.
குற்றம் யாவையும் கோளொடு நீங்குக
இற்றை நாள்முத லாயுவண் டீதென்றூர். 6905

*சுசு. வைதெனக் கொல்லும் வித்கை மானிடர் மகர வேலை
நொய்தினில் அடைத்துத் தானை யோடும்வந் தேறி நம்ஊர்
எய்தினர் என்ற போதும் வேறினி எண்ண வேண்டும்
செய்திறம் உண்டோ என்னச் சேனைகா வலவன் சொன்னான்.

சுஎ. விட்டனை மாதை என்ற போதினும் வெருவி வேந்தன்
பட்டதென் றிகழ்வர் விண்ணோர் பற்றிஇப் பகையைத் தீர
ஓட்டலாம் பெரியோய் ஒன்னூர் ஓட்டிலும் உம்பி ஓட்டான்
கிட்டிய பொழுது வேறு செய்வதெள் கிளக்க வேண்டும். 6907

சுஅ. ஆண்டுசென் றரிக ளோடும் மனிதரை அரணில் கொன்று
மீண்டுநம் இருக்கை சேர்தும் என்பது மேற்கொண் டோமேல்
ஈண்டுவந் திறுத்தார் என்னில் ஈதலால் உறுதி உண்டோ
வேண்டுவ தெய்தப் பெற்றால் வெற்றியில் விழுமி தன்றே.

சுக. ஆயிர வெள்ளம் ஆய அரக்கர்தம் தானை ஐய
தேயினும் ஊழி நூறு வேண்டுமே சிறுமை என்னை
நாயினம் சீயம் கண்ட தாம்என நடப்ப தல்லால்
நீர்உருத் தெதிர்ந்த போது குரங்கெதிர் நிற்ப துண்டோ.

எம. வந்தவர் தானை யோடு மறிந்துமா கடலில் வீழ்ந்து
சிந்தினர் இரிந்து போகச் சேனையும் யானும் சென்று
வெந்தொழில் புரிகு மாறு காணுதி விடைஈ கென்ன
இந்திரன் முதுகு கண்ட இராவணற் கெய்திச் சொன்னான்.

எக. மதிநெறி அறிவு சான்ற மாலிய வான்நல் வாய்மை
பொதுநெறி நிலைமை யாக உணர்த்துதல் புலமைத் தென்னை
விதிநெறி நிலைய வாக விளம்புகின் றேறு மீண்டு
செதிநெறி நிலையி னூரே என்பது தெரியச் சொல்லும். 6911

எஉ. பூசற்கு முயன்று நம்பால் பொருதிரைப் புணரி வேலித்
தேசத்துக் கிறைவன் ஆன தெசரதன் சிறுவன் ஆக
மாசற்ற சோதி வெள்ளத் துச்சியின் வரம்பில் தோன்றும்
ஈசற்கும் ஈசன் வந்தான் என்பதோர் வார்த்தை யிட்டார்.

எங. அன்னவற் கிளையான் தன்னை அருமறைபாம்பென்றேதும்
நல்நிலை நின்று தீரா நவைஇலா உயிர்கள் தோறும்
தொல்நிலை பிரிந்தான் என்னப் பல்வகை நின்று தூயோன்
என்னும்ஈ தெவரும் கேட்ப விளம்புவ தேது யாதோ. 6913

எச. ஆயிரம் உற்பா தங்கள் இங்குள தடுத்த தென்றூர்
தாயினும் உயிர்க்கு நல்லாள் இருந்துழி அறியத் தக்கோன்
ஏயின தூதன் எற்றப் பற்றுவிட் டிலங்கைத் தெய்வம்
போயின தென்று சொன்னூர் புகுந்தது போரும் என்றூர்.

எடு. அம்பினுக் கிலக்கம் ஆவார் அரசொடும் அரக்கர் என்றூன்
நம்பரத் தடங்கும் மெய்யன் நாவினில் பொய் இலாதான்
உம்பர்மந் திரிக்கும் மேலாம் ஒருமுழம் உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனன் என்பதும் சாரச் சொன்னூர்.

அவ்வவர்க் கமைந்த வில்லும் குலவரை அவற்றின் ஆன்ற
வெவ்வலி வேறு வாங்கி விரிஞ்சனே விதித்த மேல்நாள்
செவ்வழி நாணும் சேடன் தெரிகணை ஆகச் செய்த
கவ்வையில் கால நேமிக் கணக்கையும் கடந்த தென்றூர்.

எஎ. வாலிமா மகன்வந் தாணை வானவர்க் கிறைவன் என்றூர்
நீலனை உலகம் உண்ணும் நெருப்பினுக் கரசென் றூர்கள்
காலனை ஒக்கும் தூதன் காற்றெனும் கடவுள் என்றூர்
மேலும்ஒன் றுரைத்தார் அன்னன்விரிஞ்சனும்இனிமேல்என்பார்.

எஅ. அப்பதம் அவனுக் கீய்ந்தான் அரக்கர்வேர் அறுப்ப தாக
இப்பதி எய்தி நின்ற இராமன்என் றெவரும் சொன்னூர்
ஒப்பினி உரைக்கின் றூரோ உண்மையே உரைக்கின்றூரோ
செப்பிஎன் குரங்காய் வந்தார் தனித்தனித் தேவர் என்றூர்.

எக. ஆயது தெரிந்தோர் தங்கள் அச்சமோ அறிவோயார்க்கும்
சேயவள் எளியள் என்னு சீதையை இகழல் அம்மா
தாயவள் அமுதி னோடும் தோன்றினுள் என்றும் தோன்றுத்
தாயவள் உலகுக் கெல்லாம் என்பதும் சாற்று கின்றூர். 6919

அம. கான்இடை வந்த தேயும் வானவர் கடாவ வேயாம்
மீன்உடை அகழி வேலை விலங்கன்மேல் இலங்கை வேந்தன்
தான்உடை வரத்தை எண்ணித் தருமத்தின் தலைவர் தாமே
மானிடர் வடிவு கொண்டார் என்பதோர் வார்த்தை இட்டார்.

அக. ஈதெலாம் உணர்ந்தேன் ஆயின் என்குலம் இறுதி உற்ற
தாதியின் அவனுல் என்றும் உன்கண்மேல் அன்பி னுலும்
வேதனை நெஞ்சில்எய்தவெதும்பியான்விளைவைச்சொன்னேன்
சீதையை விடுதி ஆயில் தீரும்இத் திமை என்ருன். 6921

அஉ. மற்றெலாம் நிற்க இந்த மனிதர்வா னரங்கள் வானில்
இற்றைநாள் அளவும் நின்ற இமையவர் என்னும் தன்மை
சொற்றவா றன்றி யேயும் தோற்றமீ என்றும் சொன்னுய்
கற்றவா நன்று போஎன் றிவைஇவை கழறல் உற்ருன். 6922

அங. பேதைமா னுடவ ரோடு குரங்கல பிறவே ஆகப்
பூதல வரைப்பில் நாகர் புரத்தின்அப் புறத்தின் உள்ளார்
காதிவெஞ் செருவேட் டென்னைக் காந்தினர் கலந்த போதுஞ்
சீதைதன் திறத்தின் ஆயின் அமர்த்தொழில் திறம்பு வேனே.

அச. ஒன்றல பகழி என்கைக் குரியன உலகம் எல்லாம்
வென்றவன் ஒருவன் செய்த வினையினும் வெய்ய வெம்போர்
முன்தரு கின்ற தேவர் முதுகுபுக் குவரீ ஊடும்
சென்றன மீட்டும் இந்தக் குரங்கின்மேல் செல்கி லாதோ.

சூலமேய் தடக்கை அண்ணல் தானும்ஓர் குரங்காய்த் தோன்றி
ஏலுமேல் இடைவ தல்லால் என்செய்ய வல்லான் என்னை
வேலைநீர் கடைந்த மேல்நாள் உலகெலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க என்கை அயின்முகப் பகழி அம்மா. 6925

அசு. அறிகிலை போலும் ஐய அமர்எனக் கஞ்சிப் போன
எறிசுடர் நேமி யோன்வந் தெதிர்க்கினும் என்கை வாளி
பொறிபடு சுடர்கள் தீயப் போவன போகில் அந்த
மறிகடல் கடையவந்த மணிகொலாம் பூண மார்பில். 6926

அள. கொற்றவாள் இமையோர் கோமான் குரக்கினதருவம் கொண்டால்
அற்றைநாள் அவன்தான் விட்ட அயில்படை அறுத்து நீக்கி
இற்றவான் சிறைய ஆகி விழுந்துமேல் எழுந்து வீங்காப்
பொற்றைமால் வரைய வோஎன்புயநெடும்பொருப்பும் அம்மா.

அஅ. உள்ளமே தூது செல்ல உயிரனுர் உறையுள் நாடும்
கள்ளமா மகளிர் துஞ்ச நேமிப்புள் கவற்றி நீங்கக்
கொள்ளூபூண் டமரர்வைகும் குன்றையும்கோட்டிக்கொள்ளும்
வெள்ளநீர் வடிந்த தென்ன வீங்கிருள் வீடிந்த தன்றே. 6928

அக. இன்னதோர்தன்மையாம்என் றெட்டியும்பார்க்கஅஞ்சிப்
பொன்மதிள் புறத்துநாளும் போகின்றுன்போர்மேல்கொண்டு
மன்னவர்க் கரசன் வந்தான் வலியமால் என்று தானும்
தொன்நகர் காண்பான்போலக் கதிரவன் தோற்றம்செய்தான்.

அ-வது ஒற்றுக் கேள்விப்படலம் – முற்றிற்று.

-வது, இலங்கை காண்படலம்.

க. அருந்ததி அணைய நங்கை அவ்வழிஇருந்தாள் என்று
பொருந்திய காதல் தூண்டப் பொன்னகர் காண்பான்போலப்
பெருந்துணை வீரர் சுற்றத் தம்பியும் பின்பு செல்ல
இருந்தமால் வரையின் உச்சி ஏறினன் இராமன் இப்பால்.

உ. செருவலி வீரர் எல்லாம் சேர்ந்துடன் மருங்கு செல்ல
இருதிறல் வீரர் தாங்கும் இகல்நெடுங் கமலக் கையன்
பொருவலி வயவெஞ் சீயம் யானையும் புலியும் சுற்ற
அருவரை இவர்வ தாங்கோர் அரிஅர சனையன் ஆனன். 6931

ங. கதமிகுத் திரைத்துப் பொங்கும் கணைகடல் உலகம்எல்லாம்
புதையச்செய் இருளில்பொங்கும் அரக்கரும் புரமும் பொற்பும்
சிதையச் செய் குறியைக் காட்டி வடதிசை சிகரி ஒன்றின்
உதையத்தை ஓழியத் தோன்றும் ஒருகரு ஞாய ருத்தான்.

துமிலத்தின் செருவில் வாளிப் பெருமழைசொரியத்தோன்றும்
விமலத்தின் சிலையான் ஆண்டோர் வெற்பினை மேய வீரன்
அமலத்தின் கரமும் காலும் வதனமும் கண்ணும் ஆன
கமலத்தின் காடு பூத்த காளமா மேகம் ஒத்தான். 6933

ஙு. மற்குவ டணைய திண்தோள் மானவன் வானத் தோங்கும்
கற்குவ டடுக்கி வாரிக் கடலினைக் கடந்த காட்சி
நற்குவ டணைய வீரர் ஈட்டத்துள் நடுவண் நின்றுன்
பொற்குவ டிடையே தோன்றும் மரகதக் குவடு போன்றுன்.

சு. அணைநெடுங் கடலில் தோன்றஆற்றிய சிற்றத் தையன்
பிணைநெடுங் கண்ணி என்றும் இன்உயிர் பிரிந்த பின்னைத்
துணைபிரிந் தயரும் அன்றில் சேவலில் துளங்கு கின்றுன்
இணைநெடுங் கமலக் கண்ணுல் இலங்கையை எய்தக்கண்டான்.

எ. நம்திரு நகரே யாதி வேறுள நகர்கட் கெல்லாம்
வந்தபேர் உவமை கூறி வழுத்துவான் அமைந்த காலை
இந்திரன் இருக்கை என்பர் இலங்கையை எடுத்துக்காட்டார்
அந்தரம் அறிதல் தேற்றூர் அருங்கவிப் புலவர் அம்மா.

அ. பழுதற விளங்கும் செம்பொன் தலத்திடை பருதி நாண
முழுதெரி மணியில் செய்து முடித்தன முனிவ ராலும்
எழுதரும் தகைய ஆய மாளிகை இசையச் செய்த
தோழில்தெரி இலவால் தங்கள் சுடர்நெடுங் கற்றை சுற்ற.

கூ. விரிகின்ற கதிர ஆகி மிளிர்கின்ற மணிகள் வீசிச்
சொரிகின்ற சுடரின் சும்மை விசும்புறத் தொடர்ந்ததோற்றம்
அரிஎன்ற வென்றி ஆற்றல் மாருதி மடுத்த தீயால்
எரிகின்ற தாமே காண்இக் கோடிநகர் இருந்த தின்னும்.

ஙி. மாசடைப் பரந்து மீண்ட மரகதத் தலத்து மானக்
காசிடை சமைந்த பாடக் கதிரிடைக் கற்றை சுற்ற
ஆசறக் குயின்ற வெள்ளி அகல்மதி அன்ன மாகப்
பரசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்த்த பாராய்.

ஙக. தீச்சிகை சிவணும் சோதிச் செம்மணி செற்றிச் செய்ய
தூச்சுடர் மாட மீண்டித் துறுதலால் கருமை தோன்ரு
மீச்செலும் மேகம் எல்லாம் விரிசுடர் விழுங்க வேறு
காய்ச்சிய இரும்பு மானச் சேந்தவை ஒளிர்வ காணுய். 6940

ஙஉ. நாள்மலர்த் தெரியல் மார்ப நம்பலம் காண்பான் மாடத்
தியாழ்மொழித் தெரிவை மாரும் மைந்தரும் ஏறு கின்ரூர்
வாழ்வினிச் சமைந்த தன்றே என்றுமா நகரை எல்லாம்
பாழ்படுத் திரியல் போவார் ஒக்கின்ற பரிசு பாராய். 6941

கஙு. விற்படி திரள்தோள்வீரா நோக்குதி வெங்கண் யாகை
அற்படி நிறத்த வேனும் ஆடகத் தலத்தை யாழக்
கற்படி வயிரத் திண்காத் திரங்களில் கல்லிக் கையால்
பொற்பொடி மெய்யின் வீசிப் பொன்வரை என்னப் போவ.

ஙச. பூசல்வில் குமர நோக்காய் புகர்அறஇமைக்கும்பொற்பின்
காசுடைக் கவரிக் கற்றைக் கால்களால் கதுவு கின்ற
வீசுபொற் கொடிகள் எல்லாம் விசும்பினைக் கவித்த மேகம்
மாசறத் துடைத்து மாடம் விளக்குவ போல்வ மாதோ. 6943

மரு. நூல்படத்தொடர்ந்தசெம்பொன் சித்திர நுணித்தபத்திக்
கோல்படு மணிகள் ஆன குலமணி எவையும் கூட்டிச்
சால்படுத் தரக்கன் மாடத் தனிமணி நடுவட் சேர்த்தி
மால்கடற் கிறைவன் பூண்ட மாலைபோன் றுளதிம் மூதூர்.

மசு. நல்நெறி அறிஞ நோக்காய் நனிநெடுந்தெருவில் நாப்பண்
பல்மணி மாடப் பத்தி நிழல்படப் படர்வ பண்பால்
தன்நிறம் தெரிகி லாத ஒருநிறம் சார்கி லாத
இன்னதோர் குலத்த என்று புலப்படா இவுளிஎல்லாம். 6945

மள. வீரநீ பாராய் மெல்லென் பளிங்கினுல் விளங்கு கின்ற
மாரனு மருளச் செய்த மாளிகை மற்றோர் சோதி
சேர்தலும் தெரிப வன்றே தெரிகில தெரிந்த காட்சி
நீரினுல் இயன்ற என்ன நிழல்எழு கின்ற நீர்மை. 6946

கோனிறக் குனிவில் செங்கைக் குமரனே குளிர்வெண் திங்கள்
கானிறக் கதிரின் கற்றை சுற்றிய அனைய காட்சி
வானிறத் தவளப் பந்தர் மரகத நடுவண் வைத்த
பால்நிறப் பரவை வைகும் பரமனை நிகர்த்த பாராய். 6947

மக. கொற்றவெஞ் சிலைக்கைவீரர் கொடிமிடைமாடக்குன்றை
உற்றவான் கழுத்த ஆன ஓட்டக மற்ற தும்பர்ச்
செற்றிய மணிகள் ஈன்ற குடாரினைச் செக்கர் ஆர்ந்த
கற்றையந் தளிர்கள் என்னக் கவ்விய நிமிர்வ காணுய். 6948

வாகைவெஞ் சிலைக்கை வீரர் மலர்க்குழல் வடிவ மானத்
தோகையர் இட்ட தூய அகில்புகை முழுதும் சுற்ற
மேகவெங் களிற்றின்வன்தோல் மெய்யுறப் போர்த்த தையல்
பாகனில் பொலிந்து தோன்றும் பவளமா ளிகையைப் பாராய்.

உக. கோளவா வரியே றன்ன குருசிலே கொள்கை நோக்காய்
நாளவாய் மீன்தோய் மாடத் தும்பரோர் நாகர் பாவை
காளவாய் உறையின் வாங்கும் கண்ணடி விசும்பில் கவ்வி
வாளரா விழுங்கிக் காலும் மதியினை நிகர்த்த வண்ணம். 6950

உஉ. காவலன் பயந்த வீரக் கார்முகக் களிறே கற்ற
தேவர்தம் தச்சன் நீலக் கல்லினுல் திருந்தச் செய்த
யாவரும் தெரியா உள்ளத் திராக்கதர் சூட்டி வைத்த
பாவபண் டாரம் அன்ன செய்குன்றம் பலவும் பாராய். 6951

உங. பிணமதத் தணைய நோக்கம் பாழ்ப்படப் பிடியுண் டன்பில்
துணைவரைப் பிரிந்து போந்து மருங்கெனத் துவளும் உள்ளப்
பணமயிர்ப் பெய்தும் அல்குல் பாவையர் பருவம் நோக்கும்
கணமயில்குழாம்போல்நம்மைக் காண்கின்ரூர்தம்மைக்காணுய்.

உச. இன்னவா றிலங்கைதன்னே இளையவற் கிராமன் காட்டிச்
சொன்னவர் சொல்லா முன்னம் அதிசெயம் தோன்றும் காலை
அன்னமா நகரின் வேந்தன் அரிக்குலப் பெருமை காண்பான்
சென்னிவான் தடவும் தோற்றக் கோபுரத்தும்பர்ச் சென்ரூன்.

கூ–வது, இலங்கை காண்படலம் – முற்றிற்று.

ஙு-வது, இராவணன்வானரத்தானை காண்படலம்

க. கவடுறப் பொருத காய்களி றன்னுன்
அவடுவக் கின்மலர் அம்புற வெம்பும்
சுவடுடைப் பொருவில் தோளின் அநேகம்
குவடுடைத் தனிஓர் குன்றென நின்ரூன். 6954

உ. பொலிந்த தாம்இனி தும்போர்என லோடும்
நலிந்த நங்கைகழி லால்வலி நாளும்
மெலிந்த தோள்கள்வட மேருவின் மேலும்
வலிந்து செல்லுமிசை செல்லு மனத்தான் 6955

ங. செம்பொன் மோலி சிரங்கள் தயங்கும்
அம்பொன் மேருவரை கோபுர மாக
வெம்பு காலினே விழுங்கிட மென்மேல்
உம்பர் மீதுநிமிர் வாசுகி ஒத்தான். 6956

ச. தொக்க பூதம்அவை ஐந்தொடு துன்னிட்
டொக்க நின்றதிசை ஒன்பதொ டொன்றும்
பக்க முன்னிழல் பரப்பிய திப்பார்
மிக்கு நின்றகுடை மீது விளங்க. 6957

ரு. கைத்தருங் கவரீ வீசிய காலின்
நெய்த்திருண் டுயரும் நீள்வரை மீதில்
தத்திவீ ழும்அரு வித்திரள் சால
உத்தரீ கம்நெடு மார்பின் உலாவ. 6958

சு. வான கத்தமு துருப்பசி வாசத்
தேன கத்தரு திலோத்தமை செவ்வாய்
மேன கைக்குயில் மென்மயி லாரும்
சான கிக்கழகு தந்தயல் சார. 6959

எ. வீழி யின்கனி இதழ்ப்பணை மென்தோள்
ஆழி வந்தஅர மங்கையர் ஐந்நூற்
றேழி ரண்டினின் இரட்டிப் பயின்றூர்
சூழி ரண்டுபுற மும்அயல் சுற்ற. 6960

அ. முழை படிந்தபிறை முள்எயி றெழுள்வாள்
இழை படிந்தஇள வெண்ணில வீனக்
குழை படிந்தணைய குன்றின் முழங்கா
மழை படிந்தனைய தொங்கல் வயங்க. 6961

கூ. ஓது நூல்கொள் செவியின்வழி உள்ளும்
சீதை சீதையென ஆருயிர் தேய
நாத வீணைஇசை நாரதன் நாதம்
வேத கீதஅமு தள்ளி விழுங்க. 6962

ஏ. வெங்க ரத்தயில் வாளினர் வில்லோர்
சங்க ரற்கும்வலி சார்வில் சலத்தோர்
அங்க ரக்கர்சத கோடி அமைந்தோர்
பொங்க ரக்குவிழி யோர்புடை சூழ. 6963

ஏக. கல்லி லங்கைஉல கங்கள் கடப்போர்
நல்லி லங்கைமுத லோர்நவை இல்லோர்
சொல்லி லங்கொர்சத கோடி தொடர்ந்தோர்
வில்லி லங்குபடை ஓர்புடை விம்ம. 6964

ஏஉ. பாரி யங்கினர் வீசும்பு படர்ந்தோர்
வாரி யங்குமழை யின்குலம் என்னப்
பேரி யெங்குமுரு டாகுளி பெட்குந்
தூரி யங்கடலி னின்று துவைப்ப. 6965

ஏங. நஞ்சும் அஞ்சுவிழி நாரியர் நாகர்
வஞ்சி அஞ்சும்இடை வஞ்சியர் வானத்
தஞ்சொல் இன்சுவை அரம்பையர் ஆடிப்
பஞ்சு ரஞ்சிவணும் இன்னிசை பாட. 6966

மச. கூயு ரைப்பகுல மால்வரை யேனுஞ்
சாயு ரைப்பரிய வாய தடந்தோள்
வாயு ரைத்தகல வைக்களி வாசம்
வேயு ரைப்பதென வந்து விளம்ப. 6967

மடு. நஞ்சு கக்கும்எரி கண்ணினர் நாமக்
கஞ்சு கத்தர்கசை பற்றிய கையார்
மஞ்சு கக்குமிறு சொல்லினர் வல்வாய்த்
திஞ்சு கத்தின்விசை யோர்திசை செல்ல. 6968

மசு. வேத்தி ரத்தர்எரி வீச விழிக்கும்
நேத்தி ரத்தர்இறை நின்றுழி நில்லாக்
காத்தி ரத்தர்மனோ காவல் விரும்புஞ்
சூத்தி ரத்தர்பதி னுயிரர் சுற்ற. 6969

மஎ. தோர ணத்தமணி வாசல் மிசைச்சூல்
நீர நீத்தமுகி லாம்என நின்றுன்
ஆர ணத்தைஅமு தைமறை சொல்லுங்
கார ணத்தைநிமிர் கண்கொடு கண்டான். 6970

மஅ. மடித்த வாயினன் வயங்கெரி வந்து
பொடித்த முன்றவிழி அன்னது போழ்தின்
இடித்த வன்றிசை எரிந்தது நெஞ்சந்
துடித்த கண்ணினெ டிட்டத்திரள் தோள்கள் 6971

மக. ஆக ராகவனீ அவ்வழி கண்டான்
மாக ராகநிற வாளொளி யோனை
ஏக ராசியினில் எய்த எதிர்க்கும்
வேக ராகுஎன வெம்பி வெகுண்டான். 6972

உம. ஏனை யோன்இவன் இராமன் எனத்தன்
மேனி யேஉரை செய்கின்றது வேறிச்
சேனை யோரையடை யத்தெரி என்னத்
தான்வி னுவஎதிர் சார்ன் விளம்பும். 6973

உக. இங்கி வன்படை இலங்கையர் மன்னன்
தங்கை என்றலும் முதிர்ந்த சலத்தால்
அங்கை வாள்கொடவள் ஆகம் விளக்கும்
கொங்கை நாசிசெவி கொய்து குறைத்தான். 6974

உஉ. அறக்கண் ணல்லதோரு கண்ணிலன் ஆகி
நிறக்க டுந்தகைமை நீதியில் நின்றுந்
துறக்கம் எய்திய வருந்துற வாத
உறக்கம் என்பதனை ஓட முனிந்தான். 6975

உங. கையு வன்தொட அமைந்த கரத்தான்
ஐயு வாலியொடிவ் அண்டம் நடுங்கச்
செய்ய திண்மைச் செருவினில்திகழ் கின்ருன்
வெய்ய வன்புதல்வன் யாரினும் வெய்யோன். 6976

உச. தந்தை மற்றவன் சார்வில் வலத்தோன்
அந்த ரத்தில்அமு தார்கழி காலு
மந்த ரத்தினொடு வாசுகி சுற்றிச்
சுந்த ரப்பெரிய தோள்கள் திரித்தான் 6977

உடு. நடந்து நின்றவன் நகுங்கதிர் முன்பு
தொடர்ந்த வன்உலகு துற்ற எயிற்றுரல்
இடந்த பன்றியின் எழுந்தெழு வேலை
கடந்த வன்சரிதை கண்டனை என்ருன். 6978

உசு. நீலன் நின்றவன் நெருப்பின் மகன்தான்
சூல முங்கயிறும் இன்மை துணிந்தும்
ஆலம் என்னுநிறம் இன்மை அறிந்தும்
காலன் என்பர்இவ னீக்கரு தாதார். 6979

*உள. வேறுக நின்ருன் நளன்என்னும் விலங்கல் அன்னான்
ஏறு வருணன் வழிதந்திலன் என்றி ராமன்
சீறுத உள்ளத் தெழுசீற்றம் உழிந்த செந்தீ
ஆறுத முன்னம் அகல்வேலையை ஆறு செய்தான். 6980

உஅ. முக்கா லமுந்தன் னுடைமெய்ம் மதியால் உணர்வான்
புக்கா லம்எழப் புணரிப் புலவோர் கலக்கும்
அக்காலம் உள்ளான் கழடிக் கரசாகி நின்ருன்
இக்காலம் நின்றும் உலகேழும் எடுக்க வல்லான். 6981

உக. சேனை பதிதன் அயலே இருள்செய்த குன்றில்
ஆனை மருங்கேஇரண் டாடகக் குன்றில் நின்ருர்
ஏனை ரில்இராமன் இலக்குவன் என்னும் ஈட்டார்
வானோர் தம்மருத்துவர் மைந்தர் வலிக்கண் மிக்கார்.

நம. உவன்காண் குமுதன் குமுதாக்கனு மூங்கு வன்காண்
இவன்காண் கவையன் கவையாக்கனும் சங்கிவன்காண்
சிவன்காண் அயன்காண் எனுந்தூ தணைப்பெற்ற செல்வன்
அவன்காண் நெடுந்தோள் வலிக்கேசரி ஆற்றல் மிக்கான்.

நக. முரவன்னகு தோளவன் மூரி மடங்கல் என்னக்
கரமன்னக மின்னவை மின்னெனக் காந்து கின்ருன்
வரவன்னகந் தன்னேயும் வேரொடும் வேண்டில் வாங்கு
சரவன்னக மன்ன சதவலி ஆய தக்கோன். 6984

நஉ. மூன்று கண்ணிலன் ஆயினு மூவெயில் எரித்தான்
போன்று நின்றவன் பனசன்இப் போர்க்கெலாந் தானே
ஏன்று நின்றவன் இடவனும் மற்றவன் எதிரே
தோன்றுகின்றவன்சுசேடணன் தீயொடுந்தொடர்ந்தோன்.

நங. எதிர்கொள் குன்றெலாம் வேரொடும் வாங்கிமேதினியை
முதுகு நொய்தெனச் செய்தவன் கனலியும் முனிவோன்
கதிர வன்மகற் கிடமருங் கேகின்ற காலே
கதிமு கன்இவன் சங்கன்என் றுரைக்கின்ற சிங்கம்.

நச. அண்ணல் கேள்இதற் கவதியும் அளவும்ஒன் றுளதோ
விண்ணின் மீன்களேக் குணிப்பினும் வேலியின் மீனே
எண்ணி னேக்கினும் அக்கடலில் மணலினே எல்லாம்
கண்ணில் நாடினும் கணக்கிலர் என்றனன் காட்டி.

நடு. சினங்கொள் திண்திறல் அரக்கனும் சிறுநகைசெய்தான்
புனங்கொள் புன்தலேக் குரங்கினேப் புகழுதி போலாம்
வனங்களும் படர் வரைதொறும் திரிதரு மானின்
இனங்களும் பல என்செயும் அரியினே என்ருன். 6988

நஎ. என்னும் வேலியில் இராவணற் கிளவலே இராமன்
கண்ணிமா மதிள் நகர்நின்று நம்பலம் காண
முன்னிவான் தொட முடுகினின் ருர்களே முறையால்
இன்ன நாமத்தர் இனேயர்என் றியம்புதி என்ருன்.

நஎ. நாறு தன்பெருங் குலம்எலாம் நாசுத்துள் நடுவோன்
சேறு செய்துவைத் தான்உம்பர் திலோத்தமை முதலாப்
கூறு மங்கையர் குழாத்திடைக் கோபுரக் குன்றத்
தேறி நின்றவன் புன்தொழில் இராவணன் என்ருன்.

யு-வது, இராவணன் வானரத்தானேன் காண்படலம் - முற்றிற்று.

68-வது, மகுட பங்கப்படலம்.

க. கருதி மற்றொன்று கழறுதன் முன்விழிக் கனல்கள்
பொருது புக்கனன் முந்துறச் சூரியன் புதல்வன்
சுருதி அன்னவன் சிவந்தநற் கனிஎனச் சொல்லப்
பருதிமேல் பண்டு பாய்ந்தவன் ஆம்எனப் பாய்ந்தான்.

உ. சுதையத் தோங்கிய சுவேலத்தின் உச்சியைத் துறந்து
சிதையத் திண்திறல் இராவணக் குன்றிடைச் சென்றான்
ததையச் செங்கரம் பரப்பிய தன்பெருந் தாதை.
உதையக் குன்றினின் றக்குன்றிற் பாய்ந்தன ஒத்தான்.

ங. பள்ளம் போய்ப்புகும் கிரிஎனப் படியிடைப் படிந்து
தள்ளும் பொற்கிரி சலிப்புறக் கோபுரம் சார்ந்தான்
வெள்ளம் போற்கன்னி அழுதலும் இராவணன் மேல்தன்
உள்ளம் போற்செலும் கழுகினுக் கரசனும் ஒத்தான்.

ச. கரிய கொண்டலைக் கருணையங் கடலினைக் காணப்
பெரிய கண்கள்பெற் றுவக்கின்ற அரம்பையர் பிறரும்
உரிய குன்றிடை உரும்இடி வீழ்தலும் உலைவுற்
றிரியல் போயின மயில்பெருங் குலம்என இரிந்தார்.

*ஞ. காலஇருள் சிந்துகதி ரோன்மதலை கண்ணுற்
றேலஎதிர் சென்றடல் இராவணனை எய்தி
நீலமலை முன்கயிலை நின்றதென நின்றான்
ஆலவிடம் அன்றுவர நின்றசிவன் அன்னான். 6995

சு. இத்திசையின் வந்தபொருள் என்என இயம்பத்
தத்திஎதிர் சென்றுதிசை வென்றுயர் தடந்தோள்
பத்தினெடு பத்துடைய வன்உடல் பதைப்பக்
குத்தினன் உரத்தின்நிமிர் கைத்துணை குளிப்ப. 6996

எ. திருகிய சினத்தொடு செறுத்தெரி விழித்தான்
ஒருபது திசைக்கணும் ஒலித்தஒலி ஒப்பத்
தருவனம் எனப்பல தழைத்துயர் தடக்கை
இருபதும் எடுத்துரும் இடித்தென அடித்தான். 6997

அ. அடுத்தவிரல் பட்டஉடல் அற்றுழி இரத்தம்
பொடித்தெழ உருக்கிஎதிர் புக்குடல் பொருந்திக்
கடுத்தவிசை யில்கடிதெ முந்துகதிர் வேலான்
முடித்தலைகள் பத்தினும் முகத்தினும் உதைத்தான்.

கூ. உதைத்தவன் அடித்துணை பிடித்தொரு கரத்தில்
பதைத்துலை வுறப்பல விதத்திகல் பரப்பி
மதக்கரியை உற்றரி நெரித்தென மயக்கி
சுதைத்தலன் இடைக்கடி தடிக்கொடு துகைத்தான்.

எ. துகைத்தவன் உடற்பொறை சுறுக்கொள இறுக்கித்
தகைப்பெரு வலத்தொடு தலத்திடை அழுக்கி
வகைப்பிறை நிறத்தெயி றுடைப்பொறி வழக்கில்
குகைப்பொழி புதுக்குருதி கைக்கொடு குடித்தான்.

ஏக. கைக்கொடு குடித்தவன் உடல்கனக வெற்பைப்
பைக்கொடு விடத்தர வெனப்பலகை பற்றி
மைக்கொடு நிறத்தவன் மறத்தொடு புறத்தில்
திக்கொடு போருப்பென நெருப்பொடு திரித்தான். 7001

ஐஉ. திரித்தவன் உரத்தின்உகிர் செற்றும்அவை குத்திப்
பெருத்துயர் தடக்கைகொ டடுத்திடை பிடித்துக்
கருத்தழி வுறத்திரி நிறத்தெயில் கணத்தின்.
நெரித்தவனே ஒத்தவன் எடுத்தகழி இட்டான். 7002

ஐஊ. இட்டவனே இட்டஅக ழில்கடிதின் இட்டான்
தட்டஉய ரத்தினின் இருந்ததச முகத்தான்
ஒட்டஉட னேஅவனும் வந்திவனே உற்றான்
விட்டிலர் புரண்டிருவர் ஓர்அகழின் வீழ்ந்தார். 7003

ஐச. வீழ்ந்தனர் சுழன்றனர் விரிந்தனர் திரிந்தார்
அழுந்தினர் அழுந்திலர் அகன்றனர் புகன்றார்
எழுந்தனர் மூனிந்தனர் இடைந்திலர் எதிர்ந்தார்
ஒழிந்திலர் உலைந்திலர் உணர்ந்திலர்கள் ஒன்றும். 7004

ஐடு. அந்தர அருக்கன்மகன் ஆழிஅக பாகச்
சுந்தரம் உறக்கரம் வலிக்கயிற தொப்ப
எந்திரம் எனத்திரி இரக்கமில் அரக்கன்
மந்தரம் எனக்கடையும் வாலியையும் ஒத்தான். 7005

ஐசு. ஊறுபடு செம்புனல் உடைத்தகறை யுற்ற
ஆறுபடர் கின்றன எனப்படர அன்னார்
பாறுபொரு கின்றன பருந்திவை யெனப்போய்
ஏறினர் விசும்பிடை இரிந்தஉல கெல்லாம். 7006

மஎ. தூரநெடு வானின்மலே யுஞ்சுட் ரவன்சேய்
காரினிற மோடுநிகர் காய்சின அரக்கன்
தாருடைய தோள்கள்பல வுந்தழுவ நின்றுன்
ஊரினெடு கோள்கதுவு தாதையையும் ஓத்தான். 7007

மஅ. பொங்கமர் விசும்பிடை உடன்றுபொரு போழ்தில்
செங்கதி ரவன்சிறுவ கீனத்திரள் புயத்தான்
மங்கல வயங்கொளி மறைத்தவல் அரக்கன்
வெங்கதிர் கரந்ததொரு மேகமெனல் ஆனுன். 7008

மஉ. நூபுர மடந்தையர் கிடந்தலற நோனு
மாபுர மடந்தையர் இரிந்தயர வன்தாள்
மேபுர மடங்கல்என வெங்கதி ரவன்சேய்
கோபுர மடங்க இடியத்தனி குதித்தான். 7009

மஏ. ஒன்றுற விழுந்தஉரு மைத்தொடர ஓடா
மின்திரி எயிற்றின்ஒரு மேகம்விழும் என்னுத்
தின்றிடுவன் என்றெழு சினத்திறல் அரக்கன்
பின்தொடர வந்திரு கரத்துணே பிடித்தான். 7010

மஐ. வந்தவணே நின்றவன் வலிந்ததிர் மலேந்தான்
அந்தகனும் அஞ்சிட நிலத்திடை அரைத்தான்
எந்திரம் எனக்கடி தெடுத்தவன் எறிந்தான்
கந்துகம் எனக்கடி தெழுந்ததிர் கலந்தான். 7011

மஒ. படிந்தனர் பரந்தனர் பரிந்ததோர் நெருப்பின்
கொடுஞ்சின முதிர்ந்தனர் உரத்தின்மிசை குத்த
நெடுஞ்சுவர் பிளந்தன நெரிந்தநிமிர் குன்றம்
இடிந்தன தகர்ந்தன இலங்கைநகர் எல்லாம். 7012

மஓ. செறிந்துயர் கறங்கணேயர் மேனிநிலே தேரார்
பிறிந்தனர் பொருந்தினர் எனத்தெரிதல் பேணர்
எறிந்திலர்கள் எய்திலர்கள் இன்னர்என முன்னின்
றறிந்திலர் அரக்கரும் அமர்த்தொழில் அயர்த்தார். 7013

*மஒ. இன்னதோர் தன்மை எய்தும்அளவினில்எழிலிவண்ணன்
மன்னுயிர் அணேய காதல் துணேவணே வரவு காணுன்
உன்னிய கருமம் எல்லாம் முதலொடும் உலந்த தென்னுத்
தன்உணர் வழிந்து நிந்தைஅலமரத் தளர்ந்து சோர்ந்தான்.

உடு. ஒன்றிய உணர்வின் ஐய ஒருயிர்த் துணைவனின்னே
இன்றியான் உளனுய் நின்றெனன் றியற்றுவ திசைவதன்றுல்
அன்றியும் துயரத் திட்டாய் அமரரை அரக்கர் எல்லாம்
வென்றியும் கொடுத்தாய் என்னைக் கெடுத்ததுன் வெகுளி என்றன்.

உசு. தெய்வவெம் படையும் தீரா மாயமும் வல்ல தியோர்
கையிடைப் புக்காய் நீவே றெவ்வண்ணங் கடத்தி காவல்
வையம்ஓர் ஏழும் பெற்றுல் வாழ்வனே வாராய் ஆகில்
உய்வனே தமிய னேனுக் குயிர்தந்த உதவி யோனே. 7016

உள. ஒன்றுக நினைய ஒன்றுய் விளைந்ததென் கருமம் அந்தோ
வென்றுனும் யானே வாழேன் நீஇலை எனவும் கேளேன்
இன்றுய பழியின் நிற்க நெடுஞ்செருக் களத்தில் என்னைக்
கொன்றுயும் நீயேஉன்னைக் கொல்லுமேல் குணங்கள் தியோன்.

உஅ. இறந்தனை ஏன்றபோதும் இருந்திகல் அரக்கர் என்பார்
திறந்தனை உலகில் நீக்கிப் பின்உயிர் தீர்வன் என்றுல்
புறந்தரு நண்பி னோர்கள் உயிரொடும் பொருந்தி னனை
மறந்தனன் என்றுகொள்வார் ஆதலால் அதுவும் மாட்டேன்.

உக. அழிவன செய்தாய் ஐய அன்பினுள் அளியத்தேனை
உழிவரும் உதவிசெய்த உன்னை யான் ஒழிய வாழ்தல்
எழுபது வெள்ளம் தன்னுள் ஈண்டோர்பேர் எஞ்சாதேகிச்
செழுநர கடையில் அன்றே இத்துயர் தீர்வ தென்றன்.

உம. என்றவன் இரங்கு காலத் திருவரும் ஒருவர் தம்மில்
வென்றிலர் தோற்றி லாராய் வெஞ்சமர் விளக்கும் வேலை
வன்திறல் அரக்கன் மோலி தனிமணி வலியில் வாங்கிப்
பொன்றினன்ஆகிநன்றென் றவன்வெள்கஇவனும்போந்தான்.

கொழுமணி முடிகள் தோறும் கொண்டநன் மணியின்கூட்டம்
அழுதயர் கின்ற அண்ணல் அடித்தலம் அதனில் சூட்டித்
தொழுதயல் நாணி நின்றன் தூயவர் இருவ ரோடும்
எழுபது வெள்ள யாக்கைக் கோருயிர் எய்தி றன்னன்.

நஉ. என்புறக் கிழிந்தபுண்ணின் இழிகொழுங் குருதியோடும்
புன்புலத் தரக்கன் தன்னைத் திண்டிய திறைமை போக
அன்பனை மார்பில் புல்லி மஞ்சனம் ஆட்டி விட்டான்
தன்பெருங் கண்கள்என்னுந் தாமரைத் தடத்துநீரால். 7022

நக. ஈர்கின்ற தன்றே யென்தன் உள்ளத்தை அங்குமிங்கும்
பேர்கின்ற தாவி ஆக்கை பெயர்கின்ற தில்லைப் பின்னர்
தேர்கின்ற சிந்தை ஒன்றே திகைத்தனன் என்றுதெண்ணீர்
சோர்கின்ற அருவிக்கண்ணன் துணைவனே நோக்கிச்சொல்லும்.

நச. பெருமையும் வண்மைதானும் பேரெழில் ஆண்மைதானும்
ஒருமையால் உணரநோக்கில் பொறையின தூற்றம் அன்றே
அருமையும் அடுத்துநின்ற பழியையும் அயர்ந்தாய் போலும்
இருமையும் கெடுக்கல் உற்றாய் என்னினைந் தென்செய் தாய்நீ

நஞ. கல்லினும் வலியதோளாய் நின்னைஅக் கருணை இல்லான்
கொல்லுதல்செய்தான் ஆகில் கொடுமையால்கொற்றம்பேணிப்
பல்பெரும் பகழி மாரி வேரொடும் பறிய நூறி
வெல்லினும் தோற்றேன்நானே அல்லனே விளிந்தி லாதேன்.

நக. இந்நிலை விரைவின் எய்தா தித்துணை தாழ்த்தி ஆகின்
நன்றுதல் சீதை யால்என் ஞானத்தால் பயன்எல் நம்பி
உன்னையான் தொடர்வேன் என்னைத் தொடரும்இவ் உலகம் ஒன்றே
பின்னையென் இதனைக் கொண்டு விளையாடிப் பிழைக்கச் செய்தாய்.

நஎ. காட்டிலே கழுகின்வேந்தன் செய்தது காட்டமாட்டேன்
நாட்டிலே குகனுர் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலேன் அல்லேன் இன்று கண்டும்அக் கிளிஅன்னாளை
மீட்டிலேன் தலைகள்பத்தும் கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்,

நஅ. வன்பகை நிற்க எங்கள் வானரத் தொழிலுக் கேற்ற
புன்பகை காட்டும் யான்ஓர் புகழ்ப்பகை ஒருவன் போலாம்
என்பகை தீர்த்தென் ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன்பகை உனக்கே தந்தேன் உயிர்சுமந் தழல நின்றேன்.

நகூ. செம்புக்கும்சிவந்தசெங்கண் திசைநிலைக்களிற்றின்சீற்றக்
கொம்பிற்கும்குறைந்தஅன்றேஎன் னுடைக்குரக்குப்புன்தோள்
அம்புக்கும் முன்பு சென்றன் அரும்பகை அறுப்பன் என்ற
வெம்புற்ற மனமும் யானும் தீதிலென் மீள வந்தேன். 7029

சஅ. நூல்வலி காட்டும் சிந்தை நும்பெரும்தூதன் வன்போர்
வேல்வலி காட்டி னுர்க்கும் வில்வலி காட்டி னுர்க்கும்
வால்வலி காட்டி மீண்ட வளநகர் புக்கு மற்றென்
கால்வலி காட்டி மீண்டேன் கைவலிக் கவதி உண்டோ. 7030

சக. இன்னன பலவும் பன்னி இறங்கியப் முடியன் நாணி
மன்னவர் மன்னன் முன்னர் வானர மன்னன் நிற்ப
அன்னவன் தன்னை நோக்கி அழகினை நோக்கி ஆழி
மின்னென விளங்கும் பைம்பூண் வீடணன் இதனைச் சொன்னான்.

சஉ. வாங்கிய மணிகள் அன்னான் தலைமிசை மவுலி மேலே
ஓங்கிய அல்ல லோடும் நினைப்பால் உயர்ந்த துண்டோ
தீங்கவன் சிரத்தின் மேலும் உயிரினும் சீரி தம்மா.
வீங்கிய புகழை எல்லாம் வேரொடும் பறித்து விட்டாய். 7032

சங. பாரகம் சுமந்த நாகப் பணிமணி பறிக்க வேண்டில்
வார்கழல் காலி னாலே கவ்வவல் லானை மன்னு
தார்கெழு மவுலி பற்றி தனிமணி பறித்து வந்த
வீரமே விடைவல் லோற்கும் முடியுமோ மேலும் உண்டோ.

கருமணிக் கண்டத் தான்தன் சென்னியின் கறைவெண் திங்கள்
பருமணி வண்ணன் மார்பில் செம்மணி பறித்திட்டா லும்
தருமணி இமைக்கும் தோளாய் தசமுகன் முடியில் கொண்ட
திருமணி பறித்து வந்த வென்றியே சீரி தன்றே. 7034

தொடிமணி இமைக்கும் தோளாய் சொல் இனிவேறுண்டோ
வடிமணிவயிர ஒள்வாள் சிவன்கையில் வாங்கிக் கொண்டான்
முடிமணி பறித்திட் டாயோ இவன்இனி முடிக்கும் வென்றிக்
கடிமணி இட்டாய் அன்றே அரிகுலத்தரச என்றான். 1035

வென்றிஅன் றென்றும் வென்றி வீரர்க்கு விளைக்கத் தக்க
நன்றிஎன் றென்றும்அன்று நானிலம் எயிற்றில் கொண்ட
பன்றிஅன் றுகில் ஆர்ஈ தியற்றுவார் பரிவில் தந்த
இன்றிவற் கருமை என்றென் றிராமனும் இரங்கிச் சொன்னான்

தன்தனிப் புதல்வன் வென்றித் தசமுகன் முடியில் தைத்த
மின்தவிர்த் தனைய பன்மா மணிகளை வெளியில் கண்டான்
ஒன்றொழித் தொன்றும்என்ன அரக்கனும் ஒளிப்பான் போல
வன்தனிக் குன்றுக் கப்பால் இரவியும் மறையப் போனான்.

கக-வது, மகுடபங்கப்படலம் – முற்றிற்று.

ஐஉவது, அணிவகுப்புப் படலம்

க. என்ருனும் ஜினைய தன்மை எய்தாத இலங்கை வேந்தன்
நின்ருர்கள் தேவர் கண்டார் என்பதோர் நாணம் நீள
அன்ருய மகளிர் நோக்கம் ஆடவர் நோக்கம் ஆகப் 7038
பொன்ருது பொன்றி னுன்தன் புகழ்என இழிந்து போனுன்.

உ. கங்குல்வந் திறுத்த காலைக் கைவிளக் கெடுத்த காவல்
வெங்கழல் அரக்கன் மோலி மிசைமணி விளக்கம் செய்யச்
செங்கதிர் மைந்தன் செய்த வென்றியை நிறையத் தேக்கிப்
பொங்கிய தோளி னுனும் இழிந்துபோய் இருக்கை புக்கான்.

ங. மானத்தால் ஊன்றப் பட்ட மருமத்தான் வதனம் எல்லாம்
கூனத்தா மரையில் தோன்ற வான்தொடும் கோயில் புக்கான்
பானத்தான் அல்லன் தெய்வப் பாடலான் அல்லன் ஆடல்
தானத்தான் அல்லன் மெல்லென்சயனத்தான் உரையும்தாரான்.

ச. வைஎயிற் ருலும் நேரா மணியிழந் தின்னே மானும்
மைஅணைத் துயிர்க்கும் பேழ்வாய் பஃதலைப் பாம்பின்பாலில்
மெய்அணைத் திரையின் வேலை மென்மலர்ப் பள்ளி யான
அய்யணைப் பிரிந்து வைகும் அனந்தனே அரக்கர் வேந்தன்.

ஞ. தாயினும் பழகி னுரும் தன்நிலை தெரிக்கல் ஆகா
மாயையால் உருவத் தான்முன் வருதலும் வாயில் காப்பான்
சேயவர் சேனை நண்ணுர் செய்திறம் தெரித்தி நீஎன் 7042
றேயவன் எய்தி னுன்என் றரசனே இறைஞ்சிச் சொன்னுன்.

கூ. அழைஎன எய்திப் பாதம் வணங்கிய அறிஞன் என்னைப்
பிழைஉரு தறிந்த எல்லாம் உறைத்திஎன் றரக்கன் பேச
முழைஉறு சீயம் அன்னுன் முகத்தினுல் அகத்தை நோக்கிக்
குழைஉறு மெய்யன் பைய வரன்முறை கூறல் உற்ருன்.

எ. வீரிய விதியின் எய்திப் பதினேழு வெள்ளத் தோடும்
மாருதி மேலை வாயில் உறிஞைமேல் வருவ தானுன்
ஆரியன் மைந்தன் வெள்ளம் அத்தனை யோடும் வெற்றிச்
சூரியன் மகனைத் தன்னைப் பிரியலன் நிற்கச் சொன்னுன்.

அன்றியும் பதினேழ் வெள்ளத் தரியொடும் அரசன் மைந்தன்
தென்திசை வாயில் செய்யும் செருவெலாம் செய்வ தானுன்
ஒன்ருபத் தேழு வெள்ளக் கவியொடும் துணைவ ரோடும்
நின்றனன் நீலன் மற்றைக் குணதிசை வாயில் நெற்றி. 7045

இம்பரின் இயைந்தகாயும் கனியும்கொண் டிரண்டுவெள்ளம்
வெம்புவெஞ் சேனைக் கெல்லாம் உணவுதந் துழலவிட்டான்
உம்பியை வாயில்தோறும் நிலைதெரிந் துணரச் சொன்னான்.
தம்பியும் தானும் நிற்ப தாயினுன் சமைவீ தென்றான். 7046

மே. சார்த்தூலன் இதனைச் சொல்லத் தழல்சொரிதறுகணானும்
பார்த்தூளி வாடை பொங்கப் படுவது படுமா பார்த்தி
போர்த்தூளி துடைப்பன் நாளை அவர்உடல்பொறையின்கின்றும்
தேர்த்தூறுங் குருதி தன்னுல் என்றனன் எயிறு தின்று. 7047

மக. மாவணை நீலக் குன்றத் திளவெயில் வந்த தென்னத்
தூவணைக் குருதிச் செக்கர் சுவடுறப் பொலிந்த தோளான்
ஏவணை வாரிவில் காமன் சரம்பட எரியா நின்ற
பூவணை மாற்றி வேறோர் புனைமணி இருக்கை புக்கான். 7048

செய்வனமுறையின் எண்ணித் திறத்திறம் முறையில்தேரும்
மைஅறு மரபின் வந்த அமைச்சரை வருக என்றான்
பொய்எனப் பளிங்கின் ஆய பொதுவினில் புறத்தைச் சுற்றி
அய்யிரண் டாய கோடி பேய்க்கணம் காப்ப தாக்கி. 7049

மந. அளந்தறி வறிய வல்ல அமைச்சரை அடங்க நோக்கி
வளைந்தது குரங்கின் சேனை வாயில்கள் தோறும் வந்து
விளைந்தது பெரும்போர் என்ன விட்டது விடாது நம்மை
உளைந்தனர் என்ன எண்ணி என்செயற் குரிய என்றான்.

மச. எழுபது வெள்ளத் துற்ற குரங்கினம் எயிலை முற்றும்
தழுவின என்று செய்யத் தக்கது சமைதும் போலாம்
அழுவநீர் வேலை அன்ன தாயிர வெள்ளம் அன்றே
உழிஞையைத் துடைக்க நொச்சி உச்சியிற்கொண்ட துன்னூர்.

எழுமழுத் தண்டு வில்வாள் இலைநெடுஞ் சூலம் என்றிம்
முழுமுதற் படைகள் வந்தி இராக்கதர் முனிந்த போது
தொழுதுதம் படைகள் கைவிட் டோடுவார் சுரர்கள் என்றுல்
விழுமிது குரங்கு வந்து வெறுங்கையால் கொள்ளும் வெற்றி.

மசு. ஈதிவ ணிகழ்ச்சி என்னு எரிவிழித் திடியின் நக்குப்
பூதலத் தடித்த கையன் நிகும்பன்என் றிருவன் பொங்கு
வேதனைக் காமம் அந்தோ வேரொடும் கெடுத்த தென்னு
மாதுலத் தலைவன் பின்னும் அன்பினோர் மாற்றம் சொன்னான்.

புக்கெரிமடுத்திவ் ஊரைப் பொடிசெய்து போயி னுற்குச்
சக்கரம் உண்டோ கையில் தசமுகன் தலைகள் ஆகும்
இக்கிரீ வத்தின் மோலி இனமணி இமைப்பில் கொண்ட
சுக்கிரீ வற்கும் உண்டோ சூலமும் வேலும் வாளும். 7054

இதாடைக்கலத்திராமன்வாளி தோன்று தல் முன்னம்தோன்று
இடைக்கல மரலைச் செய்யும் முலையினுள் தன்னை ஈய்ந்து
படைக்கலம் உடைய நாமப் படையிலாப் படையை ஈண்ட
அடைக்கலம் புகுவ தல்லால் இனிப்புகும் அரணும் உண்டோ.

மசு. என்புழி அனையான் தன்னை எரிஎழ நோக்கி என்பால்
வன்பழி தருதி போலாம் வாய்முறை அறிய வார்த்தை
அன்பழி சிந்தை தன்னுல் அடாதன அறையல் என்றான்
பின்பழி எய்த நின்றான் அவன்பின்னைப் பேச்சு விட்டான்.

உம. காட்டிய கால கேயர் கொழுநிணக் கற்றை காலத்
தீட்டிய படக்கை வீரச் சேனையின் தலைவ தெள்ளி
ஈட்டிய அரக்கர் சேனை இருநூறு வெள்ளங் கொண்டு
கீட்டிசை வாயில் நிற்றி நின்பெருங் கிளையி னுடும். 7057

உக. காலன்தன் களிப்புத் தீர்த்த மகோதர காலையே போய்
மாலொன்று மனத்து வீரன் மாபெரும் பக்க னுடும்
கூலங்கொள் குரங்கை எல்லாம் கொல்லுதி வெள்ள மான
நாலெம்ப தோடுஞ் சென்று நமன்திசை வாயில் நண்ணி.

ஏற்றம்என் சொல்ல ஒள்வாள் இந்திரன் பகைஞ னிங்ஙாள்
காற்றினுக் கரசன் வந்தான் கடுமைஈ கண்ட தன்றே
நூற்றிரண் டாய வெள்ளம் நும்பெரும் படைஞர் சுற்ற
மேல்திசை வாயில் சேர்தி விடிவதன் முன்னம் வீர. 7059

இந்நெடுங் காலம் எல்லாம் இமையவர்க் கிறுதி கண்டாய்
புன்னெடுங் குரங்கிற் சேறல் புல்லிது புகழும் அன்றால்
அந்நெடும் மூலத் தானை அதனினுடும் அமைச்ச போடும்
தொன்னெடு நகரி காக்க இருக்கவென் றரக்கன் சொன்னான்.

உச. கடகரி புரவி ஆள்தேர் கமலத்தோன் உலகுக் கப்பால்
புடைஉள பொருது கொண்டு போர்பெரும் பொங்கு கின்ற
இடையிடை மிடைந்த சேனை இருநூறு வெள்ளம் கொண்டு
வடதிசை வாயில் காப்பேன் யான்என வகுத்துவிட்டான்.

உரு, கலங்கிய கங்குல் ஆங்கு நீங்கிய கற்பங் காணும்
நலங்கிளர் தேவர்க் கேயோ நான்மறை முனிவர் கேயோ
பொருவலி இராமற் கேயோ பொலங்கெழு சீதைக் கேயோ
இலங்கையர் வேந்தற் கேயோ இன்பம்வந் தெய்திற்றென்பார்.

அளித்தகல் இல்லா ஆற்றல் அமைந்தவன் கொடுமை அஞ்சி
வெளிப்பட அரிதென் றுள்ளம் வேதனை உழக்கும் காலை
களித்தவர் களிப்பு நீக்கிக் காப்பவர் தம்மைக் கண்ணுற்
றெளித்தவர்வெளிப்பட்டென்ன கதிரவன்உதையம்செய்தான்

உஎ. உளைப்புறும் ஓத வேலை ஓங்கலை ஒடுங்கித் தூர்க்க
அளப்பரும் தூளிச் சுண்ணம் ஆசைகள் அலைக்கும் பூசல்
இளைப்பரும் தலைவர் முன்ன மேயவர் எயிலை முற்றும்
வளைத்தவர் விடியத் தத்தம் வாயிலின் வந்து சார்ந்தார். 7064

உஅ. தந்திரம் இலங்கை மூதூர் மதிலினைத் தழுவித் தாவி
அந்தியங் குலமீன் சிந்த அண்டமும் கிழிய ஆர்ப்பச்
செந்தனிச் சுடரோன் சேயுந் தம்பியும் பின்பு செல்ல
இந்திரன் தொழுது வாழ்த்த இராமனும் எழுந்து சென்றான்.

உக. நூற்கட்பற் புலவ ராலும் நுனிப்பரும் வலத்த தாய
வேற்கடல் தானை யான விரிகடல் விழுங்கிற் றேனுங்
கார்க்கடல் புறத்த தாகக் கவிக்கடல் வளைந்த காட்சி
பாற்கடல் அழுவத் துள்ள தொத்ததப் பதகன் மூதூர்.

நம. அலகிலா அரக்கர் சேனை அகப்பட அரியின் தானை
வலைகொலாம் என்னச் சுற்றி வளைந்ததற் குவமை கூறில்
கலைகுலாம் பரவை ஏழும் கால்கிளர்ந் தெழுந்த காலத்
துலகெலாம் ஒருங்கு கூடி ஓங்கின வேயும்ஒக்கும். 7067

மஉ-வது, அணிவகுப்புப் படலம் – முற்றிற்று.

மங-வது, அங்கதன் தூதுப்படலம்.

க. வள்ளலும் விரைவின் எய்தி வடதிசை வாயில் முற்றி
வெள்ளம்ஓர் ஏழு பத்தும் கணித்தவெஞ் சேனை யோடும்
கள்ளனை வரவு நோக்கி நின்றனன் காண்கி லாதான்
ஒள்ளிய துணர்ந்தேன் என்ன வீடணற் குரைப்ப தானான்.

உ. தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி
மாதினை விடுதி யோஎன் றுணர்த்தினுல் மறுக்கும் ஆகில்
காதுதல் கடன்என் றுள்ளம் கருதிய தறனும் அஃதே
நீதியும் அஃதே என்றான் கருணையின் நிலைமை ஆனான். 7069

கூ. அரக்கர்கோன் அதனைக்கேட்டான் அழகிதேஆகும்என்றான்
குரக்கினத் திறைவன் கேட்டுக் கொற்றவற் குறுதி என்றான்
இரக்கமு மிழுக்கம் என்றான் இலையவன் இனிநாம் அம்பு
துரக்கும தல்லால்வேறு சொல்லுண்டோ என்னச்சொன்னான்.

தேசருக் கிடுக்கண் செய்தான் தேவியைச் சிறையில்வைத்தான்
பூசுரர்க் கலக்கண் ஈய்ந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லாம் உலகமும் தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான் வழியலா வழிமேல்செல்வான்.

டு. வாழியாய் உன்னை இங்ஙன் வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா வஞ்சம் சூழ்ந்து துணைவியைப் பிரிவு செய்தான்
ஏழையாள் இடுக்கண் நோக்கி ஒருதனி இகல்மேற் சென்ற
ஊழிகாண் கிற்கும்வாழ்நாள் உந்தையையுயிர்பண் டுண்டான்

கூ. அன்னவன் தனக்கு மாதை விடில்உயிர் அருளு வாயேல்
என்னுடை நாமம் நிற்கும் நாள்எலாம் இலங்கை காக்கும்
மன்னவன் நீயே என்று வந்தடைந் தவர்க்கு வாயால்
சொன்னசொல் என்னும் முன்னம் சூழுற வென்னைக் தோன்றும் 7073

எ. அறந்தரு தவத்தி னுள்மேல் அருளினுல் அவற்றை எல்லாம்
மறந்தனை எனினும் மற்றை இலங்கையின் வண்மை நோக்கி
இறந்திது போதல் தீதென் றிரங்கினை எனினும் எண்ணில்
சிறந்தது போலே என்றான் சேவகன் முறுவல் செய்தான்,

அ. அயர்த்திலன் முடிவும் அஃதே ஆயினும் அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நீதி நூலை நாம்துறந் தமைத்தல் நன்றே
புயத்துறை வலியரேனும் பொறையொடும் பொருந்திவாழ்தல்
சயத்துறை அற்னும் அஃதே என்பது சமையச் சொன்னான்.

கூ. மாருதி இன்னம் செல்வின் மற்றவ னன்றி வந்து
சாருனர் வலியோர் இல்லை என்பது சாரும் அன்றே
ஆர்இனி ஏகத் தக்கார் அங்கதன் அமையும் ஒன்னார்
வீரமே விளைப்ப ரேனும் தீதன்றி மீள வல்லான். 7076

ம. நன்றென அவனைக் கூவி நம்பிநீ நண்ண லார்பால்
சென்றுள துணர ஒன்று செப்பிநீ திரிதி என்றான்
அன்றவன் ஏவப்பெற்ற ஆணையால் அவன்பொற் றேள்கள்
குன்றினும் உயர்ந்த தென்றுள் அவன்நிலை கூறலாமோ.

மக. என்அவற் குரைப்ப தென்ன ஏந்திழை யாளே விட்டுத்
தன்உயிர் பெறுதல் நன்றே அன்றெனில் தலைகள் பத்தும்
சின்னபின் னங்கள் செய்யச் செருக்களம் சேர்தல் நன்றே
சொன்னவை இரண்டிலொன் றுதுணிந்ததுசொல்லுகென்றான்.

மஉ. அறத்துறை அன்று வீரர்க் கழகுமன் றாண்மை அன்று
மறத்துறை அன்று சேமம் மறைந்துறைந் தொதுங்கி வாழ்தல்
நிறத்துற வாளி கோத்து நேர்வந்து நிற்கும் ஆகில்
புறத்துற எதிரே வந்து போர்தரப் புகல்தி என்றான். 7079

மங. பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப்படர்வ தேபோல்
வீரன்வெஞ் சிலையில் கோத்த அம்பென விசையில் போனான்
மாருதி அல்லன் ஆகில் நீளனும் வார்த்தை பெற்றேன்
யார்இனி என்னை டொப்பார் என்பதோர் இன்பம் உற்றான்.

மச. அயில்கடந் தெரிய நோக்கும் அரக்கரைக் கடக்க ஆழித்
துயில்கடந் தயோத்தி வந்தான் சொல்கட வாத தூதன்
வெயில்கடந் திலாத காவல் மேருவின் மேலும் நீண்ட
எயில்கடந் திலங்கை எய்தி அரக்கன திருக்கை புக்கான்.

மசு. அழுகின்ற கண்ணர்ஆகி அநுமன்கொல் என்ன அஞ்சித்
தொழுகின்ற சுற்றம் சுற்றச் சொல்லிய துறைகள் தோறும்
மொழிகின்ற வீரர் வார்த்தை முகந்தொறும் செவியில் மூழ்க
எழுகின்ற தானை நோக்கி இயைந்திருந் தானைக் கண்டான்.

கல்லுண்டு மரமுண் டேழைக் கடலுண்டு கடந்தேம் என்னும்
சொல்லுண்டே இவனை வெல்லத் தோற்றவர்கூற்றும்உண்டோ
எல்லுண்ட படைகைக் கொண்டால் எதிர்உண்டோ இராமன் கையில்
வில்லுண்டேல்உண்டென்றுள்ளம் ஆற்றவும்வியந்துநின்றான்.

மஎ. இன்றிவன் தன்மை எய்த நோக்கினுல் எதிர்ந்த போரில்
வென்றனன் தாதைமார்பில் வில்லின்மேல் கணைஒன் றுந்திக்
கொன்றவன் தானேவந்தான் என்னுடன் குறிப்பின் அல்லால்
ஒன்றிலன் தன்னைச் செய்ய வல்லரோ உயிர்க்கு நல்லார்.

மஅ. அணிபறித் தழகு செய்த அணங்கின்மேல்வைத்த காதல்
பிணிபறித் திவனை யாவர் முடிப்பவர் படிக்கட் பேராப்
பணிபறித் தெழுந்த மானக் கலுழனில் இவனைப் பற்றி
மணிபறித் தெழுந்த எந்தை யாரினும் வலியன் என்றான். 7085

மக. நெடுந்தகை விடுத்ததூ தன் இவை இவை நிரம்பஎண்ணிக்
கடுங்கனல் கதுவும் கூற்றும் கலந்துகார் விடமும் கூட்டி
விடுஞ்சுடர் மகுடம் மின்ன விரிகடல் இருந்த தன்ன
கொடுந்தொழில்மடங்கல் அன்னான் எதிர்சென்றுகுறுகினான்ரூன்

உம. நின்றவன் தன்னை நோக்கி நெருப்பினும் நிமிர்ந்த கோபத்
தின்றிவன் வந்த நீயார் எய்திய கருமம் யாது
கொன்றிவர் தின்னு முன்னம் கூறுதி தெரிய என்ரூன்
வன்திறல் வாலி சேயும் வாள்எயி றிலங்க நக்கான். 7087

உக. பூதநா யகன்நீர் சூழ்ந்த புவிக்குநா யகன்இப் பூமேல்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகன்நீ செப்பும்
வேதநா யகன்மேல் நின்ற விதிக்குநா யகன்தான் விட்ட
தூதன்நான் பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன் என்ரூன்.

அரன்கொலாம் அரிகொலாம்மற் றயன்கொலாம்என்பதன்றிக்
குரங்கெலாம் கூட்டி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவான் ஆகில் இன்னம் அறிதிஎன் றுன்னை ஏவும்
நரன்கொலாம்உலகில்நாதன் என்றுகொண்டரக்கன்நக்கான்.

உங. கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமும் தரித்த மால்மற் றின்னகர் தன்னைச் சாரார்
அங்கவர் தன்மை நிற்க மனிதருக் காக அஞ்சா
திங்குவந் திதனைச் சொன்ன தூதன்நீ யாவன் என்ரூன்.

இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்பான்தன்னைச்
சுந்தரத் தோள்கள் தோறும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரக் கிரியால் வேலை கலக்கினான் மைந்தன் என்ரூன்.

உரு. உந்தைஎன்துணைவன்என்றே ஓங்கறச் சான்றும்உண்டே
நின்தனை இதன்மேல் உண்டோ நீ அவன் தூதன் ஆகை
தந்தனன் உனக்கு நானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தாய் என்னுடை மைந்த என்ரூன். 7092

தாதையைக் கொன்ரூன் பின்னே தலைசுமந் திருகை நாற்றிப்
பேதையர் என்ன வாழ்ந்தாய் என்பதோர் பிழையும் தீர்ந்தாய்
சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனும் ஆகப் பெற்றேன்
ஏதெனக் கிரிய தென்ரூன் இறுதிநாற் கெல்லை கண்டான்.

உஎ. அந்தரர் இன்று நாளை அழிவதற் கையம் இல்லை
உன்னர சுனக்கே தந்தேன் ஆளுதி ஊழி காலம்
பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவன் ஆக யானே சூட்டுவன் மகுடம் என்றான். 7094

உஅ. அங்கதன் அதனைக் கேளா அங்கைகொ டங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்
இங்குனின் முர்கட் கெல்லாம் இறுதிஎன் றென்றும் உள்ளான்
நுங்கள்பால் நின்றும் எம்பால் போந்தனன் நும்பி என்றான்.

உக. வாய்தரத் தக்க சொல்லி என்னைஉன் வசம்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றே தூதுவந் தரச தாள்கை
நீதரக் கொள்வன் யானே இதற்கினி நிகர்வே றுண்டோ
நாய்தரக் கொள்ளும் சீயம் நல்அர சென்று நக்கான். 7096

அடுவனே என்னப் பொங்கி ஓங்குவாள் அரக்கன் அந்தோ
தொடுவனே குரங்கைச்சீறிச் சுடர்ப்படை என்றுகொண்டான்
நடுவனே செய்யத் தக்க நாள்உலந் தாரை நம்பிப்
படுவதே துணிந்தாய் ஆகில் வந்தது பகர்தி என்றான். 7097

நக.கூவிஇன் றென்னைநீபோய்த் தன்குலம்முழுதும்கொல்லும்
பாவியை அமருக் கஞ்சி அரண்புக்குப் பதுங்கி னானைத்
தேவியை விடுக அன்றேல் செருக்களத் தெதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக என்றான் அருளினம் விடுகி லாதான்.

பருந்துணப்பாட்டி யாக்கை படுத்தநாள் பகைஞ ரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை மூக்கும்வெம் முலையும் எம்பி
அிருந்துழி வந்தி லாதான் ஆண்தொழில் அழகி தென்றான்.

நஙக.கிளையொடும் பகைஞரோடும் கேடிலா உயிர்கட்கெல்லாம்
கிளைஎனத் தம்பி மாரை வேரொடும் கிளையைக் கண்டும்
இளையவன் பிரிய மாயம் இயற்றியே கொண்டு போன
வினைஎயிற் றரக்கன் வெம்போர்க் கினிஎதிர் வருவ துண்டோ.

ஏந்திழை தன்னைக் கண்ணுற் றெதிர்ந்தவர் தம்மை எற்றிச்
சாந்தெனப் புதல்வன் தன்னைத் தரையிடை தேய்த்துத் தன்ஊர்
காந்தெரி மடுத்துத் தானும் காணவே கடலில் தாவிப்
போந்தபின் வந்திலா தான்இனிப் பாரும் போரும்உண்டோ.

உடைக்குலத்தொற்றர்க்கம்மா உரைகொடுத் துள்ளம் கள்ளம்
துடைத்துழி வருணன் வந்து தொழுதுழி தொழாத கொற்றக்
கொடைத்தொழில் தம்பிகொள்ள கொடுத்துழி வேலுகோலி
அடைத்துழி வந்திலாதான் ஆண்தொழிற் கழகே தம்மா. 7802

நகூ. மறிப்புண்ட தேவர்காணத் தன்வரைத் தோளில் வைகும்
நெறிப்புண்ட ரீகம் அன்ன முகத்தியர் முன்னர் நென்னல்
பொறிப்புண்ட ரீகம் போலும் ஒருவனுல் புனைந்த மோலி
பறிப் புண்டும் வந்தி லாதான் என் இனிப் படுவ தென்றான்.

நஎ. பசையறு சிந்தை யானைத் தமரொடும் படுத்த போதும்
இசைஎனக் கில்லை என்றே என்பதோர் இகழ்வு கொண்டான்
வசையற இசைக்கும் ஊரை வளைக்கவும் வந்தி லாதான்
திசையினை வென்ற வென்றி வரவரச் சீர்த்த தன்றே. 7804

என்றிவை இயம்பி வாவென் றேவினன் இவற்றை எல்லாம்
ஒன்றுனக் குறுவ துன்னித் துணிந்துரை உறுதி பார்க்கில்
துன்றிருங் குழலி விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோடும்
பொன்றுதி ஆயின் இன்றே வாயிலில் புறப்ப டென்றான்.

நகூ. நீரிலே பட்டுச் சூழ்ந்த நெருப்பிலே பட்டு நீண்ட
பாரிலே பட்டு வானப் பரப்பிலே பட்ட தெல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருதனீ ஒளித்துப் புக்குன்
ஊரிலே பட்டாய் என்றுல் பழிஎன்ப துளையச் சொன்னான்.

*சஅ. சொற்ற வார்த்தையைக் கேட்டலும் தொல்உயிர்
குற்றும் உண்பது போலும் முனிவினுல்
பற்று ரின்கடி தின்நெடும் பார்மிசை
எற்று மின்என நால்வரை ஏவினான். 7807

சக. ஏவினுர் பிடித் தாரை எடுத்தெழத்
தாவினான் அவர் தந்தலை யால்அறை
கூவினான் அவன் கோபுர வாயிலில்
தூவினான் துகைத் தான்இவை சொல்லினான். 7808

சஉ. ஏமம் சார்ந்த எளியவர் யாவரும்
தூமம் கால்வன வீரன் சுடுசரம்
வேமின் போல விழுவதன் முன்னமே
போமின் போமின் புறத்தென்று போயினான். 7809

சஙு. அந்த ரத்திடை ஆர்த்தெழுந் தார்அவர்
சிந்த ரத்தம் துதைந்தெழு செச்சையான்
இந்து விண்ணின் றிழிந்துள தாம்என
வந்து வீரன் அடியின் வணங்கினான். 7810

சஙு. உற்ற போதவன் உள்ளக் கருத்தெலாம்
கொற்ற வீரன் உணர்த்தென்று கூறலும்
முற்றும் ஓதினன் மூர்க்கன் முடித்தலே
அற்ற போதன்றி ஆசை அறுதென்றான். 7811

யஙூ-வது, அங்கதன் தூதுப்படலம் – முற்றிற்று.

யஙு. இராவணன் முதலோயிற் சேற்ற படலம்.

க. பூச லேபிறி தில்லை எனப் புறத்
தாசை தோறும் முரசம் அறைந்தன
பாச றைப்படை யின்னிடம் பற்றிய
வாசல் தோறும் முறையின் வகுத்திரால். 7812

உ. மற்றும் நின்ற மலையும் மரங்களும்
பற்றி வீசப் பறவையின் மும்முறை
கற்ற கைகளி னுல்கடி மாநகர்
சுற்று நின்ற அகழியைத் தூர்த்திரால். 7813

ங. எடுமின் பன்மரம் எங்கும் இயக்கறத்
தடுமின் போர்க்கு வருகெனச் சாற்றுமின்
கடுமின் இப்பொழு தேகதிர் மீச்செலாக்
கொடும தில்குடு மித்தலை கொள்கென்றான். 7814

ச. தடங்கொள் குன்றும் மரங்களும் தாங்கிய
மடங்கல் போல்வரும் வானர மாப்படை
இடங்கர் மாவிரி யப்புனல் ஏறிடத்
துலங்கி வேலை அகழியைத் தூர்க்கவே. 7815

ஙு. ஏய வெள்ளம் எழுபதும் எண்கடல்
ஆய வெள்ளத் தகழியைத் தூர்த்தலுந்
தூய வெள்ளம் துணைச்செய்வ தாம்என
வாயி லாடுபுக் கூரை வளைந்ததே. 7816

கூ. விளையும் வென்றி இராவணன் மெய்ப் புகழ்
முளையி னெடுங் களைந்து முடிப்பபோல்
தளைய வீழ்ந்தசெந் தாமரை மாத்தட
வளையம் ஒண்கையில் வாங்கிய வானரம். 7817

எ. இகழும் தன்மையன் ஆய இராவணன்
புகழும் இன்றொடு போயின தாம்என
நிகழும் கண்நெடு நீலம் உகுத்தலால்
அகழி தானும் அழுவது போன்றவே. 7818

அ. தண்டி ருந்தடந் தாமரை தாள்அறப்
பண்டி ருந்த சிதையப் படர்சிறை
வண்டி ரிந்தன வாய்தொறும் முட்டையுங்
கொண்டி ரிந்தன அன்னக் குழாம்எலாம். 7819

கூ. ஈளி தாரம் இயம்பின வண்டுறை
பாளை தாதுகு நீர்நெடும் பண்ணிய
தாள தாமரை அன்னங்கள் தாவிட
வாளை தாவின வானரம் தாவவே. 7820

ஙி. தூறு மாமர மும்மலை யுந்தொடர்
நீறு நீர்மிசைச் சென்று நெருக்கலால்
ஏறு பேர்அக ழின்நின் றெனப்பல
ஆறு சென்றன ஆர்கலி மேல்அரோ. 7821

ஙக. இழுகு மாக்கல் இடுந்தொ றிடுந்தொறுஞ்
சுழிகள் தோறுஞ் சுரித்திடை தோன்றுவ
ஒழுகு தாமரை ஒத்தன ஓங்குநீர்
முழுகி மீதெழு மாதர் முகத்தையே. 7822

ஙஉ. தன்மைக் குத்தலை யாய தசமுகன்
தொன்மைப் பேரகழ் நீரொடுந் தூர்த்தலால்
இன்மைக் கும்ஒன் றுடைமைக்கும் யாவர்க்கும்
வன்மைக் கும்ஓர் வரம்பும்உண் டாங்கொலோ. 7823

ஙஎ. தூர்த்த வானரஞ் சுள்ளி பறித்திடைச்
சீர்த்த பேரணை தன்னையும் சிந்தின
வார்த்த தன்ன மதிலின் வரம்புகொண்
டார்த்த ஆர்கலி காரொடும் அஞ்சவே. 7824

ஙஏ. வட்ட மேரு இதுவென வான்முகம்
எட்ட நீண்ட மதில்மிசை ஏறிவிண்
தொட்ட வானரந் தோன்றின மீத்தொக
விட்ட வெண்கொடி வீங்கின தென்னவே. 7825

மரு. இறுக்க வேண்டிய தில்லைஎண் டீர்மணி
வெறுக்கை ஓங்கிய மேரு விழுக்கலால்
நிறுக்க நேர்வரும் வீரர் நெருக்கலால்
பொறுக்க லாது மதிள்தரை புக்கதே. 7826

மசு. அறைந்த மாமுர சானைப் பதாகையால்
மறைந்த தால்நடு வானகம் மாதிரங்
குறைந்த தூளி குழுமிவிண் ணூடுபுக்
குறைந்த தாம்அவர் போர்க்கெழும் ஓதையே. 7827

மஎ. கோட லம்பின கோதை அலம்பின
ஆட லம்பரித் தாரும் அலம்பின
மாட லம்பின மாமணித் தேர்மணிப்
பாட லம்பின பாய்மத மாவெலாம். 7828

மஅ. அரக்கர் தொல்குலம் ஆசற வல்லவர்
வருக்கம் யாவையும் வாழ்ந்துற வந்ததோர்
கருக்கொள் காலம் விதிகொடு காட்டிடத்
தருக்கி உற்றெதிர் தாக்கின தானையே. 7829

மக. பற்கொடும் நெடும் பாதவம் பற்றியும்
கற்கொடும் சென்ற தக்கவி யின்கடல்
விற்கொடும் நெடு வேல்கொடும் வேறுள
எற்கொடும் படை யுங்கொண்ட திக்கடல். 7830

உம. அம்பு கற்களோ அள்ளிய அம்பெலாம்
கொம்பு டைப்பணை கூறுற நூறின
வம்பு டைத்தட மாமரம் மாண்டன
செம்பு கச்சுடர் வேல்கணம் செல்லவே. 7831

உக. மாக்கை வானர வீரர் மலைந்தகல்
தாக்கி வஞ்சர் தலைகள் தகர்த்தலால்
நாக்கின் ஊடும் செவிதொறும் நாகம்வாழ்
மூக்கி னூடும் சொரிந்தன மூளையே. 7832

உஉ. அற்க ளோடு நிறத்த அரக்கர்தம்
விற்க ளோடு சரம்பட வெம்புண்நீர்
பற்க ளோடும் சொரிந்தன பற்றிய
கற்க ளோடும் உருண்ட கவிகளே. 7833

உக. நின்ற மேரு நெடுமதில் நெற்றியின்
வென்றி வானர வீரர் விசைத்தகல்
சென்று தீயவர் ஆருயிர் சிந்தின
குன்றின் வீழும் உருமின் குழுவினே. 7834

உச. எதிர்த்த வானர யாக்கையை ஏற்றின
மதிற்பு றங்கொண்டு முண்ணில் மறைந்தன
கதிர்க்கொ டுங்கண் அரக்கர் கரங்களால்
விதிர்த்தெ றிந்த விலங்கிலை வேல்களே. 7835

உடு. கடித்த குத்தின கையில் கழுத்தினில்
பிடித்து வள்ளுகி ராற்பிள வாக்கின
இடித்த எற்றின எண்ணில் அரக்கரை
முடித்த வானரம் வெஞ்சினம் முற்றின. 7836

உசு. எறிந்தும் எய்தும் எழுமுளைத் தண்டெடுத்
தறைந்தும் வெவ்வயில் ஆகத் தழுத்தியும்
நிறைந்த வெங்கண் அரக்கர் நெருங்கலால்
குறைந்த வானர வீரர் குழுக்களே. 7837

உஎ. செப்பில் செம்புனல் தோய்ந்தசெம் பொன்மதில்
துப்பில் செய்தது போன்றது சூழ்வரை
குப்புற் றீர்பிணக் குன்று சுமந்துகொண்
டுப்பில் சென்ற உதிரத்தின் ஓதமே. 7838

உஅ. வந்தி ரைத்த பறவை மயங்கின
அந்த ரத்தின் நெருங்கலின் வந்தொரு
பந்தர் பெற்றது போன்றது பற்றுதல்
இந்தி ரற்கும் அரிய இலங்கையே. 7839

உக. தங்கு வெங்கன லோடு தயங்கிய
பொங்கு வெங்குரு திப்புனல் செக்கர்பூங்
கங்குல் அன்ன கவந்தமும் கைஎடுத்
தங்கும் இங்குமின் ருடிய தால்அரோ. 7840

நம. கொன்னிறக் குருதிக் குடை புட்களின்
தொன்னிறச் சிறையில் துளி தூவலால்
பல்நிறத்த பதாகைப் பரப் பெலாம்
சென்னிறத் தனவால் நிறம் தீர்ந்ததே. 7841

நக. பொழிந்த சோரிப் புதுப்புனல் பொங்கிமீ
வழிந்த மாமதில் கைவிட்டு வானரம்
ஒழிந்த மேருவின் உம்பர்விட் டிம்பரின்
இழிந்த மாக்கடல் என்ன இழிந்தவே. 7842

நஉ. பதன மும்மதி லும்படை நாஞ்சிலும்
கதன வாயிலும் கட்டுமட் டாலையும்
முதல யாவையும் புக்குற்று முற்றின
விதன வெங்கண் இராக்கதர் வெள்ளமே. 7843

நங. பாய்ந்த சோரிப் பறவையின் பற்பல
நீந்தி ஏக நெருங்கி இடைச்செல
சாய்ந்து சாய்ந்து சரம்படத் தள்ளல்உற்
றேய்ந்து வீழ்ந்த சிலசில ஓடின. 7844

நச. தழிய வானர மாக்கடல் சாய்தலும்
பொழியும் வெம்படைப் போர்க்கடல் ஆர்த்தலால்
ஒழியும் காலத் துலகொரு மூன்றும்ஒத்
தழியு மாக்கடல் ஆர்ப்பெடுத் தாயதோ. 7845

நடு. முரசும் மாமுரு டும்முரல் சங்கமும்
உரைசெய் காளமும் ஆகுளி ஓசையும்
விரசு பல்லியம் வில்அர வத்தொடும்
திரைசெய் வேலைக்கொர் ஆகுலம் செய்ததே. 7846

நசு. ஆய காலை அனைத்துல கும்தரு
நாய கன்முகம் நாலும் நடந்தென
மேய சேனை விரிகடல் விண்குலாம்
வாயி லூடு புறப்பட்டு வந்ததே. 7847

நள. நெடிய காவதம் எட்டும் நிரம்பிய
படிய வாயில் பருப்பதம் பாய்ந்தெனக்
கொடியொ டுங்கொடி சுற்றக் கொடுத்ததண்
டொடிய ஊன்றின மும்மத ஓங்கலே. 7848

நஅ. சூழி யானை மதம்படு தொய்யலின்
ஊழி நாள்நெடுங் காவென ஓடின
பாழி யாள்வயி ரப்படி பன்முறை
பூழி ஆக்கின பல்நெடும் தேர்களே. 7849

கூ. பிடித்த வானரம் பேரெழில் தோள்களால்
இடித்த மாமதில் ஆடல் இலங்கையுள்
மடுத்து மாக்கடல் வாவும் திரைஎலாம்.
குடித்துக் கால்வன போன்ற குதிரையே, 7850

சம. கேளிர் ஞாலம் கிளத்திய தொல்முறை
நாளும் நாளும் நடந்தன நள்இரா
நீளம் எய்தி ஒருசிறை நின்றன
மீளு மாலையும் போன்றனர் வீரரே. 7851

சக. பத்தி வன்தலைப் பாம்பின் பரங்கெட
மூத்தி நாட்டின் முகட்டினை முந்துறப்
பித்தி பிற்பட வன்திசை பேர்வுறத்
தொத்தி மீண்டில வானெடும் தூளியே. 7852

சஉ. நெருக்கி வந்து நிருதர் நெருங்கலால்
குரக்கி னப்பெரும் தானை குலைந்துபோய்
அருக்க னுர்மகன் ஆர்அமர் ஆசையால்
செருக்கி நின்றவன் நின்றுழிச் சென்றவால். 7853

சஙு. சாய்ந்த தானைத் தளர்வுஞ் சலித்தெதிர்
பாய்ந்த தானைப் பெருமையும் பார்த்துறக்
காய்ந்த நெஞ்சின் கனல்சொரி கண்ணினன்
ஏய்ந்த தங்கொர் மராமரம் ஏந்தினன். 7854

சச. வாரணத் தெதிர் வாசியின் நேர்வயத்
தேர்மு கத்தினில் சேவகர் மேல்செறுத்
தோரொ ருத்தர்க் கொருத்தரின் உற்றுயர்
தோர ணத்தொரு வன்எனத் தோன்றினன். 7855

சடு. களிறும் மாவும் நிருதரும் கால்இற
ஒளிறும் மாமணித் தேரும் உருட்டிவெங்
குளிறு சோரி ஓழுகக் கொதித்திடை
வெளிறி லாமர மேகொண்டு வீசினன். 7856

சகூ. அன்ன காலை அரிகுல வீரரும்
மன்னன் முன்மத வன்கண் அரக்கரும்
முன்ள ழுந்து முழங்கு பெரும்செருத்
தன்னில் வந்து தலைமயக் குற்றவால். 7857

சள. கற்று ரந்த கணம்பட வஞ்சகர்
இற்று லந்து முடிந்தவர் எண்ணிலார்
வில்து ரந்தன வெங்கணை யால்உடல்
அற்று லந்த குரங்கும் அனந்தமே. 7858

சஅ. கற்க டந்து நிமிர்ந்து கடுஞ்செரு
மற்க டங்கள் வலிந்து மலைந்திடத்
தற்க டங்கி உலர்ந்தவர் தம்உயிர்
தெற்க டங்கி நிறைந்து செறிந்ததால் 7859

சக. பாடு கின்றன பேய்க்கணம் பல்வித
தாடுகின்ற வறுகுறை ஆழ் கடல்
கோடு கின்ற துதிரம் புகுந்துடல்
நாடு கின்றனர் கற்புடை நங்கைமார். 7860

சுஅ. ஆனை பட்ட அழிபுனல் ஆறெலாம்
பானை பட்டன பல்கணை மாரியின்
சோனை பட்டது சொல்லரும் வானரச்
சேனை பட்டது பட்டது செம்புனல். 7861

சுக. கர்ந்த வானர வீரர் கரத்தினுல்
தேய்ந்த ஆயுளர் ஆனவர் செம்புண்நீர்
பாய்ந்த தானைப் படுகளம் பாழ்படச்
சாய்ந்த தால்நிரு தக்கடல் தானையே. 7862

சுஉ. தங்கள் மாப்படை சாய்தலும் தீஎழும்
வெங்கண் வாள்அரக் கன்விசைத் தேரினைக்
கங்க சாலம் தொடரக் கடற்செலும்
வங்க மாம்என வந்ததிர் தோன்றினன். 7863

சுங. வந்து தாங்கி வடிக்கணை மாமழை
சிந்தி வானரச் சேனை சிதைத்தலும்
இந்தி ராதிய ருந்திசைத் தேங்கினர்
நொந்து சூரியன் கான்முளை நோக்கினன். 7864

சுச. நோக்கி வஞ்சன் நொறில்வய மாப்பரி
வீக்கு தேரினன் மீதெழப் பாய்ந்துதோள்
தூக்கு தூணியும் வில்லும் துணித்தவன்
யோக்கை யும்சிதைத் திட்டெழிந் தேகினன். 7865

ருடு. மலை குலைந்தென வச்சிர முட்டிதன்
நிலை குலைந்து விழுதலின் நின்றுளார்
குலை குலைந்து கொடிநகர் நோக்கினர்
அலை கிளர்ந்தென வானரம் ஆர்த்தவே. 7866

ருசு. வீழி வெங்கண் இராக்கதர் வெம்படை
ஊழி ஆழி கிளர்ந்தென ஓங்கியே
கீழை வாசலில் கிட்டலும் முட்டினர்
சூழும் வானர வீரர் துவன்றியே. 7867

ருள. சூலம் வாள்மழுத் தோமரம் சக்கரம்
மாலை வாளி மழையின் வழங்கியே
ஆலம் அன்ன அரக்கர் அடர்த்தலும்
காலும் வாலும் துமிந்த கவிக்குலம். 7868

ருஅ. வென்றி வானர வீரர் விசைத்தெறி
குன்றும் மாமர மும்கொடும் கால்எனச்
சென்று வீழ நிருதர்கள் சிந்தினர்
பொன்றி வீழ்ந்த புரவியும் பூட்கையும். 7869

ருக. தண்டு வாள்அயில் சக்கரம் சாயகம்
கொண்டு சீறி நிருதர் குதித்தெழப்
புண்தி றந்து குருதி பொழிந்துக
மண்டி ஓடினர் வானர வீரரே. 7870

சும. எரியின் மைந்தன் இருநிலம் கீழுற
விரிய நின்ற மராமரம் வேரொடுந்
திரிய வாங்கி நிருதர்வெம் சேனைபோய்
நெரிய ஊழி நெருப்பெழ வீசினான். 7871

சுக. தேரும் மாவும் படைஞரும் செம்முகக்
காரும் யாளியும் சீயமும் காண்தகு
பாரின் வீழப் புடைப்பப் பசும்புணின்
நீரும் வாரி அதனை நிறைத்ததே. 7872

சுஉ. அரக்கர் சேனை அடுகளம் பாழ்பட
வெருக்கொண் டோடிட வெம்படைக் காவலான்
நெருக்க நேர்ந்துகும் பானு நெடுஞ்சரந்
துரக்க வானரச் சேனை துணிந்தவே. 7873

கூடு. கண்டு நின்ற கரடியின் காவலன்
எண்தி சாமுகம் எண்ணும் இடும்பன்ஓர்
சண்ட மாருதம் என்னத் தடவரை
கொண்டு சீறி அவன்எதிர் குப்புரு. 7874

கூசு. தொடுத்த வாளிகள் வீழுமுன் சூழ்ந்தெதிர்
எடுத்த குன்றை இடும்பன் எறிதலும்
ஓடித்து வில்லும் இரதமும் ஒல்லெனப்
படுத்த வாசியும் பாகனும் பாழ்பட. 7875

கூடு. தேர் கிழிந்து சிலையும் இழந்துகக்
கார் கிழிந்த உரும்எனக் காந்துவான்
பார் கிழிந்துறப் பாய்ந்தனன் வானவர்
போர் கிழிந்து புறந்தரப் போர்செய்தான். 7876

கூகூ. தத்தி மார்பின் வயிரத் தடக்கையால்
குத்தி நின்றகும் பானுவைத் தான்எதிர்
மொய்த்து நீடு முடித்தலை கீழுறப்
பத்தி வன்தலை கோளுறப் பற்றுவான். 7877

கூஎ. கடித்த லத்திரு கால்உறக் கைகளால்
பிடித்துத் தோளைப் பிறங்கலின் கோடுநேர்
முடித்த லத்தினில் எற்றிட மூளைகள்
வெடித்தி ழிந்திட வீய்ந்தன னும்அரோ. 7878

கூஅ. தன்படைத் தலைவன் படத் தன்எதிர்
துன்படைத்த மனத்தன் சுமாலி சேய்
முன்படைத்த முகில் அன்ன காட்சியான்
வன்படைத்த வரி சிலை வாங்கினான். 7879

கூகூ. வாங்கி வார்சிலை வானர மாப்படை
ஏங்க நாண்எறிந் திட்டிடை இன்றியே
தூங்கு மாரி எனச்சொரி வாளிகள்
வீங்கு தோளினன் வீழ்த்தின னும்அரோ. 7880

எம். நூறும் ஆயிர முங்கணை நொய்தினில்
வேறு வேறு படுத்தலின் வெம்பியே
ஈறில் வானர மாப்படை எங்கணும்
பாற நீலன் வெகுண்டெதிர் பார்ப்புரு. 7881

எக. குன்று நின்ற தெடுத்ததிர் கூற்றெனச்
சென்று நின்றனன் சேனை சிதைத்திட
வென்று வில்லின் விடுகணை மாரியில்
ஒன்று நூறுற உற்றதக் குன்றமே. 7882

எஉ. மீட்டும் அங்கொர் மராமரம் வேரொடும்
ஈட்ட வாங்கி இடியென எற்றலும்
கோட்டும் வில்லும் கொடியும் குலப்பரி
பூட்டும் தேரும் பொறிதுகள் ஆயதே. 7883

எஙு. தேர் அழிந்து சிலையும் அழிந்துபின்
கார் அழிந்த உரும்எனக் காந்துவான்
பார் அழிந்த பருவலித் தண்டுகொண்
டூர் அழிந்த கதிர்என ஓடினன். 7884

எச. வாய் மடித்தனல் கண்தொறும் வந்துகப்
போய் அடித்தலும் நீலன் புகைந்தெதிர்
தாய் அடித்தவன் தன்கையில் தண்டொடும்
மீள டுத்து விசும்புற வீசினன். 7885

எடு. அம்ப ரத்தினின் முர்த்த அரக்கனும்
இம்பர் உற்றெரி யின்திரு மைந்தன்மேல்
செம்பு னல்பொழி யக்கதை சேர்த்தினன்
உம்பர் தத்தம துள்ளம் நடுங்கவே. 7886

எசு. அடித்த லோடும் அதற்கிளை யாதவன்
எடுத்த தண்டைப் பறித்தெதி யாஇகல்
முடித்தும் என்றிரு கைக்கொடு மோதினன்
குடித்து மிழ்ந்தெனக் கக்கக் குருதியே. 7887

எஎ. குருதி வாய்நின் றெழுகலும் கூசலான்
நிருதன் நீலன் நெடுவரை மார்பினில்
கருத லாதமுன் குத்தலும் கைத்தவர்
பொருத பூசல் புகலஒண் ணுததே. 7888

எஅ. மற்ற நீலன் அரக்கனை மாடுறச்
சுற்றி வால்கொடு தாளினும் மார்பினும்
நெற்றி மேலும் நெடுங்கரம் நீட்டலும்
இற்ற மால்வரை என்ன விழுந்தனன். 7889

எக. இறந்து வீழ்ந்தன னேபிர கத்தன்என்
றறிந்து வானவர் ஆவலம் கொட்டினர்
எறிந்த செம்மயிர் வெள்ளெயிற் முடவர்
முறிந்து தத்தம் முழுநகர் நோக்கினர். 7890

அம. தெற்கு வாசலில் சென்ற நிசாசரர்
மற்கு லாவும் வயப்புயத் தங்கதன்
நிற்க வேஎதிர் நின்றிலர் ஓடினர்
பொற்கு லாவு சுபாரிசன் பொன்றவே. 7891

அக. நூற்றி ரண்டெனும் வெள்ளமும் நோன்கழல்
ஆற்றல் சால்துன் முகனும்அங் கார்த்தெழ
மேல்திண் வாயிலின் மேவினர் வீடினர்
காற்றின் மாமகன் கைஎனும் காலனுல். 7892

அஉ. அன்ன காலத் தயிந்திர வாசலில்
துன்னு போர்கண்ட தூதுவர் முந்தினர்
மன்ன கேள்என வந்து வணங்கினர்
சென்னி தாழ்ப்பச் செவியிடை செப்பினர். 7893

அங. வடக்கு வாய்தலில் வச்சிர முட்டியும்
குடக்கு வாய்தலில் துன்முகக் குன்றனும்
அடக்க ரும்வலத் தைம்பது வெள்ளமும்
படச்சி தைந்தது நம்படை என்றனர். 7894

அச. வென்றி வேற்கை நிருதர் வெகுண்டெழாத்
தென்தி சைப்பெரு வாயிலில் சேர்ந்துழிப்
பொன்றி னுன்அச்சு பாரிசன் போயுளர்
இன்று போன இடம்அறி யோம்என்றார். 7895

அடு. கீழை வாய்தல் கிளர்நிரு தப்படை
ஊழி நாளினும் வெற்றிகொண் டுற்றுளார்
ஆழி அன்ன அனிகத் தலைமகன்
பூழி யாய்உயிர் புக்கது விண்என்றார். 7896

அசு. என்ற வார்த்தை எரிபுகு நெய்எனச்
சென்று சிந்தை புகுதலும் சீற்றத்தீக்
கன்று கண்ணின் வழிசுடர் கான்றிட
நின்று நின்று நெருப்புயிர்த் தான்அரோ. 7897

அஎ. மறுத்தும் ஆரவன் ஆருயிர் வவ்வினர்
இறுத்துக் கூறிஎன் முன்திசை எங்கணும்
நிறுத்த நீலன் நெடும்பெரும் சேனையை
ஒறுத்து மற்றவ னேடும்வந் துற்றனன். 7898

அஅ. உற்ற போதின் இருவரும் ஒன்றலக்
கற்ற போர்கள்எல் லாம்செய்த காலையில்
நெற்றி மேல்மற்ற நீலன் நெடுங்கையால்
ஏற்ற வீய்ந்தனன் என்ன விளம்பினர். 7899

அக. அன்ன வன்னெடு போன அரக்கரில்
இந்த கர்க்குவந் தோம்ஐய யாங்களே
என்ன என்ன எயிற்றகல் வாய்களூத்
தின்னத் தின்ன எரிந்தன திக்கெலாம். 7900

கஅ. மாடு நின்ற நிருதரை வன்கணன்
ஓட நோக்கி உயர்படைக் காவலன்
கோடு கொண்டு பொருத குரங்கினுல்
வீடி னுன்என விட்டு விளம்பினுன். 7901

கக. கட்ட திந்திரன் வாழ்வைக் கடன்முறை
பட்ட திங்கோர் குரங்கு படுத்தஎன்
றிட்ட வெஞ்சொல் எரியினில் என்செவி
சுட்ட தென்னுடை நெஞ்சையும் சுட்டதால். 7902

கஉ. கருப்பை போல்குரங் கெற்றக் கதிர்சுழல்
பொருப்பை ஒப்பவன் தான்இன்று பொன்றினுன்
அருப்பம் என்று பகையையும் ஆரழல்
நெருப்பை யும்இகழ்ந் தால்அது நீதியே. 7903

கங. நிற்க அன்னது நீர்நிறை கண்ணினுன்
வற்கம் ஆயின மாப்படை யோடும்என்
றெற்கம் வந்துத வாமல் உறுகென
விற்கொள் வெம்படை வீரரை ஏவியே. 7904

கச. மண்டு கின்ற செருவின் வழக்கெலாம்
கண்டு நின்று கயிலை கடந்தவன்
புண்தி றந்தன்ன கண்ணினன் பொங்கினுன்
திண்தி றல்நெடும் தேர்தெரிந் தேறினுன். 7905

கூடு. ஆயிரம் பரி பூண்ட ததிர்குரல்
மாயி ருங்கடல் ஓப்பது வானவர்
தேயம் எங்கும் திரிந்தது திண்திறல்
சாய இந்திர னேபண்டு தந்தது. 7906

கூசு. ஏற்றி எண்ணரி இறைஞ்சி இடக்கையின்
ஆற்றி னுன்தன் நெடும்சிலை அன்னதின்
மாற்றம் என்நெடு நாண்ஒலி வைத்தலும்
கூற்றின் ரூரங் கருவுயிர் கொண்டதே. 7907

கூஎ. மற்றும் வான்படை வானவர் மார்பிடை
இற்றி லாதன எண்ணும் இலாதன
பற்றி னுன்கவ சம்படர் மார்பிடைச்
சுற்றி னுன்நெடும் தும்பையும் சூடினுன். 7908

கூஅ. பேருங் கற்றைக் கவரிப் பெருங்கடல்
நீரும் நீர்நுரை யும்என நின்றவன்
ஊரும் வெண்மை உவாமதிக் கீழ்உயர்
காரும் ஒத்தனன் முத்தின் கவிகையான். 7909

கூகூ. போர்த்த சங்கப் படகம் புடைத்திடத்
தீர்த்த சங்கக் கடல்உகத் தேவர்கள்
வேர்த்த சங்க விசும்பு வெடித்திட
ஆர்த்த சங்கம் அறைந்த முரசினம். 7910

ஈ. தேரு மாவும் படைகளும் செற்றிட
மூரி வன்னெடுந் தாணையை முற்றினுன்
நீரொர் ஏழும் முடிவின் நெருங்குநாண்
மேரு மால்வரை என்ன விளங்கினுன். 7911

ஈக. ஏழிசைக் கருவிவீற் றிருந்த தென்னினுஞ்
சூழிருந் திசைகளோத் தொடரும் தொல்கொடி
வாழிய உலகெலாம் வலோத்து வாய்இடும்
ஊழியின் அந்தகன் நாவின் ஓங்கவே. 7912

ஈஉ. வேணுயர் நெடும்சிலை அரக்கர் வேலைக்கோர்
தோணிபெற் றனர்எனக் கடக்கும் தொல்செருக்
காணிய வந்தவர் கலக்கம் கைமிகச்
சேண்உயர் நெடுவரை அமரர் சிந்தினுர். 7913

ஈஎ. கண்ணுறு கடும்புகை கதுவக் கார்நிறத்
தண்ணல்வாள் அரக்கர்தம் அரத்தப் பங்கிகள்
வெண்நிறம் கோடலில் உருவும் வேற்றுமை
நண்ணினுர் நோக்கவும் அயிர்ப்பு நல்கவே. 7914

ஈஏ. காணெடும் தேர்உயர் கதலி யும்கரத்
தேணியர் ஏந்திய பதாகை ஈட்டமும்
ஆணியின் கொடிகளும் அளவித் தோய்தலால்
வானயா றெடுமழை ஒற்றி வற்றவே. 7915

ஈடு. ஆயிர கோடிபேய் அங்கை ஆயுதம்
தூயன சுமந்துபின் தொடரச் சுற்றெளிர்
சேயிரு மணிநெடும் சேமத் தேர்தெரிந்
தேயின ஆயிரத் திரட்டி எய்தவே. 7916

ஈசு. ஊன்றிய பெரும்படை உலைய உற்றுடன்
ஆன்றபேர் அரக்கர்கள் நெருங்கி ஆர்த்தெழத்
தோன்றினன் உலகெலாம் தொடர்ந்து நின்றஅம்
மூன்றையும் கடந்தொரு வெற்றி முற்றினுன். 7917

ஈள. ஓதுறு கருங்கடற் குயர்ந்த தாணியான்
தீதுறு தெறுதொழில் அரக்கன் சிற்றத்தால்
போதுறு பெருகளம் புகுந்து ளான்எனத்
தூதுவர் நாயகற் கறியச் சொல்லினுர். 7918

ஈஅ. ஆங்கவன் அமர்த்தொழிற் கணுகி னுன்என
வாங்கினன் சீதையை என்னும் வண்மையால்
தீங்குறு பிறிவினுல் தேய்ந்த தேய்வற
வீங்கின ஆரியன் வீரத் தோள்களே. 7919

ஈகூ. தொடையுறு வற்கலை ஆடைச் சுற்றின்மேல்
புடையுறு வயிரவாள் பொலிய வீக்கினுன்
இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர்
கடையுறு நோக்கினில் காணும் காட்சியான். 7920

ஈஎ. ஒத்திரு சிறுகுறள் பாதம் உய்த்தநாள்
வித்தக அருமறை உலகை மிக்குமேல்
பத்துள விரல்புடை பரந்த பண்பெனும்
சித்திரச் சேவடிக் கழலும் சேர்த்தினுன். 7921

ாமக. பூவுயர் மீன்எலாம் பூத்த வானிகர்
மேவிருந் கவசம்இட் டிறுக்கி வீக்கினுன்
தேவியைத் திருமறு மார்பில் தீர்ந்தன்ன்
நோவிலள் என்பது நோக்கி ஞன்கோலோ. 7922

ாமஉ. நற்புதுக் கோதைதன் நளினச் செங்கையில்
நிற்புறச் சுற்றிய காட்சி நேமியான்
கற்பகக் கொம்பீனக் காரிய மாசுணம்
பொற்புறத் தழுவிய தன்மை போன்றதால். 7923

ாமஙு. புதைஇருள் பொழுதினும் அலரும் பொங்கொளி
சிதைவரு நாள்விரைச் சிவந்த தா மரை
இதழ்தொறும் வண்டுவீற் றிருந்த வேயெனத்
ததையுறு நிரைவிரல் புட்டில் தாங்கினுன். 7924

ாமச. பல்லியல் உலகுறு பாடல் பாடமைத்
தெல்லியில் நூல்கடல் எய்த நோக்கிய
நல்லியல் நவைஅறு கவிஞர் நாவருஞ்
சொல்லனத் தொலைவிலாத் தூணி தூக்கினுன். 7925

ாமஞ. கிளர்மழைக் குழுவிடைக் கிளர்ந்த மின்என
அளவறு செஞ்சுடர்ப் பட்டம் ஆர்த்தனன்
இளவரிக் கவட்டிலை யாரொ டெற்படத்
துளவொடு தும்பையும் சுளியஞ் சூடினுன். 7926

ாமசு. ஓங்கிய உலகமும் உயிரும் ஒப்பறத்
தாங்கிய மறைகளும் பொருளும் தான்என
நீங்கிய தியாவது நினைந்தி லேம்அவன்
வாங்கிய வரிசிலை மற்றொன் றேகொலாம். 7927

ாமள. நாற்கடல் உலகமும் விசும்பும் நாண்மலர்
தூர்க்கவெஞ் சேனையும் தானும் தோன்றினுன்
மாற்கடல் வண்ணன்தான் வளரு மால்இரும்
பாற்கட லோடும்வந் தெதிரும் பான்மைபோ. 7928

ாமஅ. ஊழியின் ஊருத்திரன் உருவு கொண்டுதான்
ஏழ்உயர் உலகமும் வீக்கின் ருன்என,
வாழிய வரிசிலை தம்பி மாப்படை
கூழைய னென்றிகின் ருனைக் கூடினுன். 7929

எஅசு. என்புழி நிருதராம் ஏழு வேலையும்
மின்பொழி எயிற்றுடைக் கவியின் வெள்ளமும்
தென்புலக் கிழவனும் செய்கை கீழ்ப்படப்
புன்புலக் களத்திடை பொருத போலுமால். 7930

எஉம. துமிந்தன தலைகுடர் சொரிந்த தேர்க்குலம்
அவிந்தன புரவியும் தாரும் அற்றன
குவிந்தன பிணக்குவை சுமந்து கோள்நிலம்
நிமிர்ந்தது பரந்தது குருதி நீத்தமே. 7931

எஉக, தெற்கிவை வடக்கிவை என்னத் தேர்கிலாப்
பற்குவை பரந்தன குரக்குப் பல்பிணம்
பொற்குவை நிகர்த்தன நிருதர் போர்ச்சவம்
கற்குவை நிகர்த்தன மழையும் காட்டின. 7932

எஉஉ. கடுங்குரங் கிருகையால் எற்றக் கால்வயக்
கொடுங்குரந் துணிந்தன புரவி குத்தினுல்
ஒடுங்குரந் துணிந்தனர் நிருதர் ஓடின
நெடுங்குரம் பெனநிறை குருதி நீத்தமே. 7933

எஉங. அவ்வழி இராவணன் அமரர் அஞ்சத்தன்
வெவ்விழி நெருப்புக வில்லின் நாணினீச்
செவ்வழிக் கோதையில் தெறிக்கச் சிந்தியாங்
கெவ்வழி மருங்கினும் இரிந்த வானரம். 7934

எஉச. உருமிடித் துழியுலைந் தொளிக்கும் நாகமொத்
திரியலுற் றனசில இறந்த வாள்சில
வெருவலுற் றனசில விம்மலுற்றன
பொருகளத் துயிரொடும் புரண்டு போம்சில. 7935

எஉஞ. பொரக்கரு தினமெடும் விசும்பு புண்பட
இரக்கமில் இராவணன் எறிந்த நாணினுல்
குரக்கினம் உற்றதென் கூறில் தன்குலத்
தரக்கரும் அனையதோர் அச்சம் எய்தினுர். 7936

எஉசு. வீடணன் ஒருவனும் இளைய வீரனும்
கோடணை குரங்கினுக் கரசும் கோடிலர்
நாடினர் நின்றனர் நாலு திக்கினும்
ஓடினர் அல்லவர் ஒளித்த தும்பரே. 7937

*ாஉ.எ. எடுக்கினுல் நிலத்தைஏந்தும் இராவணன்எறிந்தாணுல்
நடுக்கினுன் உலகை என்பார் நண்ணினுன் என்னல் பாற்றே
மிடுக்கினுல் மிக்க வானேர் மேக்குயர் வெள்ளம் மேல்நாள்
கெடுக்குநாள் மழையின் ஆர்ப்புக் கேட்டனர்என்னக்கேட்டார்.

ாஉஅ. ஏந்திய சிகரம் ஆங்கொன் றிந்திரன் குலிசம் என்னக்
காந்திய உருமின் விட்டான் கவிக்குலத் தரசன் நக்கான்
நீந்தரும் நெருப்புச் சிந்தி நிமிர்தலும் நிருதர்க் கெல்லாம்
வேந்தனும் பகழி ஒன்றுல் வெறுந்துகள் ஆக்கி வீழ்த்தான்.

ாஉகூ. அண்ணல்வாள் அரக்கன்விட்டஅம்பினுல்அழிந்துசிந்தித்
திண்நெடும் சிகர நீருய்த் திசைதிசை சிந்த லோடும்
கண்நெடும் கடும்தீக் காலக் கவிக்குலத் தரசன் கையால்
மண்மகள் வயிறு கீற மரம்ஒன்று வாங்கிக் கொண்டான். 7940

ாஉ.ம. கொண்டமா மரத்தை அம்பின் கூட்டத்தால் காட்டத்தக்க
கண்டம்ஆ யிரத்தின் மேலும் உளஎனக் கண்டங் கண்டான்
விண்டவாள் அரக்கன் மீது விசும்பெரி பரக்க விட்டான்
பண்டைமால் வரையின் மிக்க தொருகிரி பருதிமைந்தன். 7941

ாஉக. அக்கிரி யினையும் ஆங்கோர் அம்பினுல் அறுத்துமாற்றித்
திக்கிரி தரப்போர் வென்ற சிலையினை வலைய வாங்கிச்
சுக்கிரீ வன்தன் மார்பில் புங்கமும் தோன்ற வண்ணம்
உக்கிர வயிர வாளி ஒன்றுபுக் கொளிக்க எய்தான். 7942

ாஉஉ. சுடுகணை படுதலோடும் துளங்கினுன் துளங்காமுன்னம்
குடதிசை வாயில் நின்ற மாருதி புகுந்த கொள்கை
உடன்உறைந் தறிந்தான் என்ன ஓர்இமை ஒடுங்கா முன்னம்
வடதிசை வாயில் வந்து மன்னவன் முன்னர் ஆனுன். 7943

ாஉந. பருதிசேய் தேரு முன்னம் பருவலி அரக்க பல்போர்
பொருதியோ என்னுெடொன்னுப் புகைஎழ விழித்துப்பொங்கி
வருதியேல் வாவா என்பான் மேல்மலை ஒன்று வாங்கிச்
சுருதியே அனைய தோளால் வீசினுன் காலின் தோன்றல். 7944

ாஉச. மீளழு மழைகள் எல்லாம் வெந்துவெங் காயில் சிந்தித்
தீஎழ விசும்பின் ஊடு செல்கின்ற செயலை நோக்கிக்
காய்கணை ஐந்தும் ஐந்தும் கடுப்புறத் தொடுத்துக் கண்டித்
தாயிரம் கூறு செய்தான் அமரரை அலக்கண் செய்தான்

ாகடு. மீட்டொரு சிகரம் வாங்கி வீங்குதோள் விசையின் வீசி
ஓட்டினுன் ஓட்ட வானத் துருமினும் கடுக ஓடிக்
கோட்டுவெஞ் சிலையின் வாளி முன்சென்று கொற்றப் பொற்றேர்
பூட்டிய வலியத் தோடும் பூழியாய்ப் போயிற் றன்றே.

மெய்எரிந் தழன்று பொங்கி வெங்கணுன் விம்மி மீட்டோர்
மைவரை வாங்கு வாணு வரிசிலை வலிய வாங்கிக்
கையினும் தோளின் மேலும் மார்பினும் கரக்க வாளி
அய்யிரண் டழுந்த எய்தான் அவைஅவன் ஆற்றி நின்ருன்.

ஆர்இது செய்ய கிற்பார் என்றுகொண் டிமையோர் ஆர்த்தார்
மாருதி பின்னும் ஆங்கொர் மராமரம் கையின் வாங்கி
வேரொடும் சுழற்றி விட்டான் விடுதலும் இலங்கை வேந்தன்
சாரதி தலையைத் தள்ளிச் சென்றது நிருதர் சாய. 7948

ாகஅ. மாறிஓர் பாகன் ஏற மறிதிரைப் பரவை மண்ணும்
சிறிய தணுயன் ஆன செறிகழல் அரக்கர் தேவன்
நாறுகோல் நொய்தின் எய்தான் அவைஉடல் நுழைதலோடும்
ஆறுபோல் சோரி சேர அனுமனும் அலக்கண் உற்ருன். 7949

கற்கொண்டும் மரங்கள் கொண்டும் கைக்கொண்டும் அளித்து நும்வாய்ச்
சொற்கொண்டும் மயிரின் புன்தோள் தோள்கொண்டும் சுள்ளி வெள்ளிப்
பற்கொண்டும் மலிகின் ருரில் பழிகொண்டேன் என்ன கான் ஓர்
விற்கொண்டு நின்ற போது விறல்கொண்டு மிகுதிர் கொல்லாம். 7950

என்றுரைத் தெயிற்றுப் பேழ்வாய்எரிஉகநகைசெய்தியாணர்ப்
பொன்தொடர் வடிம்பின் வாளி கடையுகத் துருமு போல
ஒன்றின்ஒன் றறுக மாக ஆயிர கோடி உய்த்தான்
சென்றது குரக்குச் சேணு கால்எறி கடலில் சிந்தி. 7951

ாசக. கலக்கிய அரக்கன் வில்லின் கல்வியும் கவிகள் உற்ற
அலக்கணும் தலைவர் செய்த தன்மையும் அமையக் கண்டான்
இலக்குவன் என்கை வாளிக் கிலக்கிவன் இவணு இன்று
விலக்குவன் என்ன வந்தான் வில்உடை மேகம் என்ன. 7952

தேயத்தின் தலைவன் மைந்தன் சிலையைநாண் எறிந்தான் தீய
மாயத்தின் இயற்கை வல்லார் நிலைஎன்னு முடிவின் மாரி
ஆயத்தின் இடிஇ தென்றே அஞ்சின உலகம் யாணு
சீயத்தின் முழக்கம் கேட்ட போன்றனர் செறுனர் எல்லாம்.

ஆற்றல்சால் அரக்கன் தானும் அயல்நின்ற வயவர் நெஞ்சும்
வீற்றுவீற் றுகி உற்ற தன்மையும் வீரன் தம்பி
கூற்றின்வெம் புருவம் அன்ன சிலைநெடுங் குரலுங் கேளா
ஏற்றினன் மகுடம் என்னே இவன்ஒரு மனிதன் என்றான்.

கட்டமை தேரின் மேலும் களிநெடுங் களிற்றின் மேலும்
விட்டெழு புரவி மேலும் வெள்ளெயிற் றரக்கர் மேலும்
முட்டிய மழையின் துள்ளி முறைஇன்றி மொய்க்கு மாபோல்
பட்டது பகழி எங்கும் பரந்தது குருதிப் பவ்வம். 7955

நகங்களில் பெரிய வேழ நறைமதம் அருவி நாலு
முகங்களில் புக்க வாளி அபரத்தை முற்றி முன்பார்
அகங்களைக் கழன்று தேரின் அச்சினை உருவி அப்பால்
உகங்களில் கடைசென் றூலும் ஒய்வில ஓடல் உற்ற. 7956

நூக்கிய களிறுந் தேரும் புரவியும் நூழில் செய்ய
ஆக்கிய அரக்கர் சேனை ஐஇரு கோடி கைஒத்
தோக்கிய படைகள் வீசி உடற்றிய துலகம் செய்த
பாக்கியம் அனைய வீரன் தம்பியைச் சுற்றும் பற்றி. 7957

ராசஎ. உறுபகைமனிதன் இன்றிறம் மன்னனைஉறுகிற்பானேல்
வெறுவிது நம்தம் வீரம் என்றிருரு மேன்மை தோன்ற
எறிபடை அரக்கர் ஏற்றார் ஏற்றது மாற்றான் என்ன
வறியவர் ஒருவன் வண்மை பூண்டவன் மேற்சென் றென்ன.

ராசஅ. அறுத்தனன் அரக்கர் எய்த எறிந்தன அறுத்த ரூத
பொறுத்தனன் பகழி மாரி பொழிந்தனன் உயிரின் போகம்
வெறுத்தனன் நமனும் வேலை உதிரத்தின் வெள்ளம் மீள
மறித்தது மறிந்த தெங்கும் பிணங்கள்மா மலைகள் மான. 7959

ராசக. தலைஎலாம்அற்ற முற்றும் தாள்எலாம்அற்ற தோளாம்
மலைஎலாம் அற்ற பொற்றார் மார்பெலாம் அற்ற சூலத்
திலைஎலாம் அற்ற வீரர் எயிறெலாம் அற்ற கொற்றச்
சிலைஎலாம் அற்ற கற்ற செருவெலாம் அற்ற சிந்தி. 7960

தோள்எலாம் துமிந்த மாவின் திறம்எலாம் துமிந்த செங்கண்
கார்எலாம் துமிந்த வீரர் கழல்எலாம் துமிந்த கண்டத்
தார்எலாம் துமிந்த நின்ற தனுஎலாம் துமிந்த தத்தம்
போர்எலாம் துமிந்து கொண்ட புகழ்எலாம் துமிந்து போன.

ாருக. அரவியற் றறுகண் வன்தாள் அள்விழ ஆள்மேல்வீழ்ந்த
புரவிமேல் பூழ்க்கை வீழ்ந்த பூழ்க்கைமேல்பொலந்தேர் வீழ்ந்த
நிரவிய தேரின் தன்மேல் நெடுந்தலை கிடந்த நெய்த்தோர்
விரவிய களத்தில் எங்கும் வெள்ளிடை இலைமேல் வீழ. 7962

ாருஉ. கடுப்பின்கண் அமர ரேயும் கார்முகத் தம்பு கையில்
தொடுக்கின்ருன் துரக்கின்ருன்என் றுணர்ந்திலர் துரந்தவாளி
இடுக்கொன் றும்காணர்காண் பதெய்தகோல்நொய் தின்எய்திப்
படுக்கின்ற பிணத்தின் பம்பல் குப்பையின் பரப்பைப் பல்கால்

ாருங. குன்றன யானை மானக் குரகதக் கொடித்தேர் பாய்மா
வன்திறல் ஆளி சீயம் மற்றைய பிறவும் முற்றும்
சென்றன எல்லை இல்லைத் திரிந்தில சிறிது போதும்
நின்றன இல்லை எல்லாம் கிடந்தன நெளிந்த பார்மேல். 7964

கொற்றவான் கொலைவேல் சூலம் கொடுஞ்சிலை முதல தோலி
வெற்றிவெம் படைகள் யாவும் வெங்தொழில் அரக்கர் மெய்க்கொண்
டுற்றனர் கூற்றம் அஞ்ச ஒளிர்வன ஒன்று நூறாய்
அற்றன அன்றி ஒன்றும் அறுதன இல்லை அன்றே. 7965

சாய்ந்தது நிருதர் தானை தமர்தலை இடறித் தள்ளுற்
றேய்ந்ததும் ஒழிந்த தோடி உலந்ததும் ஆக ஒன்றே
வேய்ந்தது வாகை வீரற் கிளையவன் வரிவில் அம்பில்
காய்ந்ததவ் விலங்கை வேந்தன் மனம்எனும் காலச் செந்தீ.

காற்றுறழ் கலின மான்தேர் கடிதினில் கடாவிக் கண்ணுற்
றேற்றனன் இலங்கை வேந்தன் எரிவிழித் திராமன் தம்பி
கூற்றுமால் கொண்ட தென்னக் கொல்கின்ருன் சூறுகச் செல்ருன்
சீற்றமும் தானும் வேறென் றியாவர்க்கும் தெரிக்கொணுதால்.

*ாருஎ. காந்தின் றளன் நெடுங்காலின் கடிநீக்கிய கள்வர்
போக்கின்றுனக் கணித்தால்எனப் புகன்ருன்புகை உயிர்ப்பான்
கோக்கின்றன தொடுக்கின்றன கொலையம்புகள் தலையோ
டிர்க்கொன்றிய கனல்ஒப்பன எய்தான்இகல் செய்தான்.

எய்தான்சரம் எய்தாவகை யிற்றீகென இடையே
வைதான்என ஐதாயின வடிவாளியின் அறுத்தான்
அய்தாதலின் அறுத்தாய்இனி அகல்செய்கென வழிகார்
பெய்தால்என நெடுவாளிகள் சொரிந்தான்துயில் பிரிந்தான்.

ஆங்குஞ்சரம் அனையான்விடும் அயில்வாளிகள் அவைதான்
வீங்கும்சரம் பருவத்தழி மழைபோல்வன விலகாத்
தூங்கும்சரம் நெடும்புட்டிலில் சுடர்வேலவற் கிளையான்
வாங்கும்சரம் வாங்காவகை அறுத்தான் அறமறுத்தான். 7970

அப்போதையின் அயர்வாறிய அனுமான் அழல் விழியாப்
பொய்ப்போர்கில புரியேல்என அவன்தேர் எதிர் புகுந்தான்
கைப்போதகம் எனமுந்தவன் கடுந்தேர்எதிர் நடந்தான்
இப்போர்ஒழி பிற்போர்உள அவைகேள்என இசைத்தான்.

வென்றுய்உல கொருமூன்றையும் மெலியாநெடு வலியால்
தின்றுய்செறி கழல்இந்திரன் இசையைத்திசை திரித்தாய்
என்றுலும்இன் றறிவுன்வயின் எய்தும்என இசையா
நின்றுன்அவன் எதிரேஉல களந்தான்என நிமிர்ந்தான். 7972

ஈசூஉ. எடுத்தான்வலத் தடக்கையினீஇதுபோய்உல கெல்லாம்
அடுத்தான்குறள் வளர்ந்தான்திரு வடியின்படி யாயே
மடுத்தாங்குற வளர்ந்தான்என வளர்கின்றவன் உருவம்
கடுத்தான்எனக் கொடியாற்கெதிர் காண்பாய்எனக் காட்டா.

ஈசூங. வில்ஆயுதம் முதலாகிய வயவெம்படை முதலோ
டெல்லாம்இடை பயின்றுய்புயம் நாலிந்திரன் டியைந்தாய்
வல்லாய்செரு வலியாய்திறல் மறவோய்இகல் எதிரே
நில்லாய்என நிகழ்த்தாநெடு நெருப்பாம்என உயிர்ப்பான்.

ஈசூச. நீள்ஆண்மையோ டெதிரேதனி நின்றுய்இனி ஒன்றோ
வாள்ஆண்மைபும் உலகேழினை டனேஉடை வலியும்
தாள்ஆண்மையும் நிகர்அரும்இல் தனிஆண்மையும் இனிநின்
தோள்ஆண்மையும்மிடலோடன்துடைப்பேன்ஒருபுடைப்பில்

ஈசூரு. பரக்கப்பல உரைத்தென்படர் கயிலைப்பெரு வரைக்கும்
அரக்குத்தெறி பொறிக்கண்திசைக் கரிக்கும்சிறி தனுங்கா
உரக்குப்பையின் உயர்தோள்பல உடையாய்இனி உடையாக்
குரக்குத்தனிக்கரத்தில்தொடப் பொறையாற்றுவைகொல்லாம்

ஈசூசு. என்தோள்வலி அதனுல்எடுத் தியான்எற்றவும் இறவா
நின்றுய்எனில் நீபின்எனை நின்கைத்தல நிரையால்
குன்றேறுபுரை தோளாய்மிடல் கொடுகுத்துதி குத்தப்
பொன்றேன்எனில் நின்னோடெதிர் பொருகின்றிலன்என்றுன்

ஈசுள. காரில்கரீ யவன்மாருதி கழறக்கடி துகவா
வீரற்குரீ யதுசொற்றனீ விறலோய்ஒரு தனியே 7978
நேர்நிற்பவர் உளரோபிறர் நீஅல்லவர் இனிநின்
பேருக்குல களவேஎன உளவோபிற என்றான்.

ஈசுஅ. ஒன்றுயுதம் உடையாய்அலை ஒருநீஎன துறவும்
கொன்றுய்உயர் நெடுந்தேர்நிமிர் கொடுவெஞ்சிலை கோலி
நின்தானையின் உடன்வந்தவன் எதிர்வந்துநின் வலியால்
நின்றுயொடு நின்றுய்எனில் நிகரோஉரை நெடியோய் 7979

ஈசுக. முத்தேவர்கள் முதலாயினர் முழுமூன்றுல கிடையும்
எத்தேவர்கள் எத்தானவர் எதிர்வார்இகல் என்ன
பித்தேறினர் அல்லால்இடை பேராதெதிர் மார்பில்
குத்தேஎன நின்றுய்இது கூறும்தரம் அன்றால். 7980

ஈஎம. பொருகைத்தலம் இருபத்துள புகழும்சிறி துள்தால்
வருகைத்தலம் மதவெங்கரி வலிகட்டினன் வருவான்
இருகைத்தலம் உடையாய்என தெதிர்சொற்றனீ இனிமேல்
தருகைக்குரீ யதொர்கொற்றம்என் அமர்தக்கதும் அன்றால்.

திசைஅத்தனீ யையும்வென்றது சிதையப்புகழ் தெறும்அவ்
வசைமற்றினி உளதேஎன துயிர்போல்வரு மகனீ
அசை யத்தரை அணைவித்தனீ அழிசெம்புனல் அதுவோ
பசையற்றில தொருநீஎன தெதிர்நின்றிவை பகர்வாய். 7982

ஈஎஉ. பூணித்திவை உரைசெய்தனீ அதனுல்உரை பொதுவே
பாணித்தது பிறிதென்சில பகர்கின்றது பழியால்
நாணித்தலை இடுகின்றிலன் நனிவந்துல கெவையும்
காணக்கடி தெதிர்குத்துதி என்றுன்வினீ கடிவான். 7983

ஈஎந. வீரத்திறம் இதுநன்றென வியவாமிக விளியாத்
தேரிற்கடி திவராமுழு விழியில்பொறி சிதரு
ஆரத்தொடு கசவத்துடல் பொடிபட்டவன் மார்பில்
கூரத்தளி எதிர்குத்தினன் வயிரக்கரம் அதனுல். 7984

ஈஎஏ. அயிர்உக்கன நெடுமால்வரை அனல்உக்கன விழிதண்
தயிர்உக்கன முழுமூவுலகள் தலைஉக்கன திரியா
உயிர்உக்கது நிருதக்கடல் உயர்வானரம் எவையும்
மயிர்உக்கன எயிறுக்கன மழைஉக்கன வானம். 7985

எடு. விற்சிந்தின நெடுநாண்நிமிர் தரைசிந்தின விரிநீர்
கற்சிந்தின குலமால்வரை கதிர்சிந்தின சுடரும்
பற்சிந்தின மதஆனைகள் படைசிந்தினர் எவரும்
எற்சிந்திய எரிசிந்திய இகலோன்மணி அகலம். 7986

எசு. கைக்குத்தது படலும்களி நிருதர்க்கிறை கறைதீர்
மைக்குப்பையின் எழில்கொண்டொளிர் வயிரத்தட மார்பில்
திக்கில்சின மதஆனையின் நெடுவெம்பணை செருவில்
புக்கிற்றன போதாதன புறம்உக்கன புகழின். 7987

எள. அள்ளாடிய சுவசத்தவிர் மணிஅற்றன திசைபோய்
விள்ளாநெடு முழுமீன்என விழிவெம்பொறி எழநின்
றுள்ளாடிய நெடுங்கால்பொர ஓடுங்காநிலை குலையத்
தள்ளாடிய வடமேருவில் சலித்தான் அறம் வலித்தான். 7988

ஆர்த்தார்விசும் புறைவோர்நெடி தனுமான்மிசை அதிகம்
தூர்த்தார்நறு முழுமென்மலர் இசைஆசிகள் சொன்னூர்
வேர்த்தார்நிரு தர்கள்வானரர் வியந்தார்அவன் விசையம்
தீர்த்தான்என உவந்தாடினர் முழுமெய்ம்மயிர் சிலிர்த்தார். 7989

எஎ. கற்றங்கியின் நெடுவாயுவின் நிலைகண்டவர் கதியான்
மற்றங்கொரு வடிவுற்றது மாருடுவ காலைப்
பற்றங்கரு மையின்அன்னது பயவாதொரு செயல்போல்
உற்றங்குயிர் புறம்போய்உடல் புகுந்தால்என உணர்ந்தான்.

அஅ. உணராநெடி துயிராஉரை உதவாளரி உமிழா
இணையாரும்இல் அவன்நேர்வர எய்தாவலி செய்தாய்
அணையாய்இனி எனதூழ்என அடராளரிப் படராப்
பணையார்புயம் உடையான்இடை சிலஇம்மொழி பகர்ந்தான்.

அஅ. வலிஎன்பதும் உளதேஅது நின்பால்அது மறவோய்
அலிஎன்பவர் புறம்நின்றவர் உலகேழையும் அடர்த்தாய்
சலிஎன்றெதிர் மலரோன்உரை தந்தால்இறை சலியேன்
மெலிவென்பதும் அறிந்தேன்எனை வென்றாய்இனி என்றான்.

அஉ. ஒன்றுண்டினி உரைநேர்குவ துன்மார்பின்என் ஒருகைக்
குன்றின்இடைக் கடைநாள்விழும் உரும்ஏறெனக் குத்தா
நின்றுன்னிலை தருவாய்எனில் நீஅல்லவர் உளரோ
இன்றும்உளர் என்றும்உளர் இலையோர்பகை என்றான். 7993

ாஅஆ. என்ருன்எதிர் சென்ருன்இகல் அடுமாருதி எனைநீ
வென்ருயலை யோஇன்றுயிர் வீடாதுரை செய்தாய்
நன்ருகஉன் நிலைநன்றென நல்காஎதிர் நடவாக்
குன்ருகிய திரள்தோளஉன் கடன்கொள்கெனக்கொடுத்தான்.

ாஅச. உறுக்கித்தனி எதிர்நின்றவன் உரத்திற்றனதொளிர்பல்
இறுக்கிப்பல நெடுவாய்மடித் தெரிகண்தொறும் இழிய
முறுக்கிப்பொறி நிமிர்பல்வீரல் நெரியத்திசை மூரியக்
குறுக்கிக்கரம் நெடுந்தோள்உற நிரைக்கைகொடு குத்தா.

ாஅடு. பள்ளக்கடல் கொள்ளப்படர் படிபேரினும் பதையா
வள்ளற்பெரு வெள்ளத்தெறுழ் வலியாரினும் வலியான்
கள்ளக்கறை உள்ளத்தெதிர் கழல்வெய்யவன் கரத்தால்
தள்ளத்தளர் வெள்ளிப்பெரும் கிரியாம்எனச் சலித்தான்.

*ாஅசு. சலித்த காலையில் அமையவர் உலகெலாம் சலித்த
சலித்த சால்அறம் சலித்தது மெய்மொழி தகவும்
சலித்த நன்றியும் தவமொடு சுருதியும் சலித்த
சலித்த நீதியும் சலித்தன கருணையும் பலவும். 7997

ாஅஎ. அனைய சூலையில் அரிக்குலத் தலைவர்அவ் வழியோர்
எனையர் அன்னவர் யாவரும் இருங்குவ டேந்தி
நினைவின் முன்நெடும் விசும்பொரு வெளியின்றி நெருங்க
வினைய நன்றிதென் றிராவணன் மேற்செல விட்டார். 7998

ாஅஅ. ஒத்த கையினர் ஊழியின் இறுதியின் உலகை
மெத்த மொய்த்தெழு மேகத்தின் விசும்பெலாம் மறையப்
பத்து நூறுகோ டிக்குமேற் பணிபடு சிகரம்
எத்தி மேற்செல எறிந்தனர் பிறிந்தனர் இமையோர். 7999

ாஅகூ. ஒன்றின் ஒன்றுபட் டுடைவன இடித்துரும் உதிரச்
சென்று வான்பொறி மீப்பல செறிந்திடத் தெய்வ
வென்றி வில்என விழுகில விழுந்திட மேன்மேல்
கன்றி ஓடிடக் கனமழை நிகர்த்தன கற்கள். 8000

ாகூஅ. இரிந்து நீங்கிய திராக்கதப் பெரும்படை எங்கும்
விரிந்து சிந்தின வானத்து மீனொடு மானம்
சொரிந்த வெம்பொறி படக்கடல் சுவறின தோற்றம்
கரிந்த கண்டகர் கண்மணி எனப்பல கழறில் 8001

ாகூக. தருக்கின் வீசிட வீசும்பிடம் இன்மையில் தம்மின்
நெருக்கு கின்றன நின்றன சென்றில நிறைய
அருக்க னும்மறைந் தான்இருள் விழுங்கிய தண்டம்
சுருக்கம் உற்றனர் அரக்கர்அன் றிமையவர் சூழ்ந்தார்.

ாகூஉ. இறுத்த தின்றுல கென்பதோர் திமிலம்வந் தெய்தக்
கறுத்த சிந்தையன் இராவணன் இணையது கண்டான்
ஒறுத்த வானவர் புகழுண்ட பாரவில் உலைய
அறுத்து நீக்கினன் ஆயிர கோடிமேல் அம்பால். 8003

ாகூங. காம்பெ லாங்களப் பட்டன களிறெலாம் துமியப்
பாம்பெ லாம்பட வாளியும் உழுவையும் பாறக்
கூம்பன் மாமரம் எரிந்திடக் குறுந்துகள் நுறுங்கச்
சாம்பர் ஆயின தடவரை சுடுகணை தடிய. 8004

ாகூச. உற்றவா றென்றும் ஒன்றுநூ ருயிரம் உருவாய்
இற்றவா றென்றும் இடிப்புண்டு பொடிப்பொடி ஆகி
அற்றவா றென்றும் அரக்கணை அடுசிலை கொடியான்
கற்றவா றென்றும் வானவர் கைத்தலம் குலைந்தார். 8005

ாகூடு. அடல் துடைத்தும்என் றரிகுல வீரர்அன் றெறிந்த
திடல் துடைத்தன தசமுகன் சரம்அவை திசைசூழ்
கடல் துடைத்தன களத்தின்நின் றுயர்தரும் பூழி
உடல் துடைத்தன உதிரமும் துடைத்ததொண் புடவி.8006

ாகூசு. கொல்வன் இக்கணமே மற்றிவ் வானரக் குழுவை
வெல்வன் மானுடர் இருவரை எனச்சினம் வீங்கிப்
பல்வன் வார்சிலை பத்துடன் தடக்கையில் வாங்கித்
தொல்வன் மாரியில் தொடர்வன நெடுஞ்சரம் துரந்தான்.

ாகூள. ஐயி ரண்டுகார் முகத்தினும் ஆயிரம் பகழி
கைக ளீரைந்தி னலும்வெங் கடுப்பினில் தொடுப்புற்
றெய்ய வெஞ்சின வானமும் இருநில வரைப்பும்
மொய்கொள் வேலையும் திசைகளும் சரங்களாய் முடித்தான்.

ாகூஅ. அந்தி வானகம் ஒத்ததவ் அமர்க்களம் உதிரம்
சிந்தி வேலையும் திசைகளும் நிறைந்தன சினத்தால்
பந்தி பந்தியாய் மடிந்தது வானரப் பகுதி
வந்து மேகங்கள் படிந்தன நெடும்பிணை மலைமேல். 8009

8006. நீலன் அம்பொடும் சென்றிலன் நின்றிலன் அனலன்
கால னுர்வசத் தடைந்திலன் ஏவுண்ட கவியன்
ஆலம் அன்னதோர் சரத்தொடும் அங்கதன் அயர்ந்தான்
சூலம் அன்னதோர் வாளியால் சோம்பினன் சாம்பன்.

8007. மற்றும் வீரர்தம் மருமத்தின் அயில்அம்பு மடுப்பக்
கொற்ற வீரமும் ஆண்தொழில் செய்கையும் குறைந்தார்
சுற்றும் வானரப் பெருங்கடல் தொலைந்தது குலைவால்
உற்று நின்றவர் ஓடியே இலக்குவற் குரைத்தார். 8011

8008. நூறு கோடிய நூறுநூ றாயிர கோடி
வேறுவே றெய்த சரம்எலாம் சரங்களால் விலக்கி
ஏறு சேவகன் தம்பிஅவ் இராவணன் எடுத்த
ஆறு நாலுவெஞ் சிலையையும் கணைகளால் அறுத்தான். 8012

8009. ஆர்த்து வானவர் ஆவலங் கொட்டினர் அரக்கர்
வேர்த்து நெஞ்சமும் வெதும்பினர் விஜயனு முனிவர்
தூர்த்து நன்மலர் சொரிந்தனர் இலக்குவன் தோளைப்
பார்த்து வந்தனன் குனித்தது வானரம் படியில். 8013

8010. நன்று தோள்வலி [1]நன்றுபே ராள்வலி வீரம்
நன்று நோக்கமும் நன்றுகைக் கடுமையும் நன்று
நன்று கல்வியும் நன்றுநின் திண்மையும் நலனும்
என்று கைமறித் திராவணன் ஒருவன்நீ என்றான். 8014

8011. கானில் அன்றிகல் கரன்படை படுத்தஅக் கரியோன்
தானும் இந்திரன் தன்னையோர் தனுவலம் தன்னுல்
கானில் வென்றஎன் மதலையும் வரிசிலை பிடித்த
யானும் அல்லவர் உனக்கெதிர் என்றென்றும் இசைத்தான்.

8012. வில்லினுல்இவன் வெலப்படான் எனமனம்வெதும்பாக்
கொல்லு நாளும்இன் றிதுஎனச் சிந்தையுள் கொண்டான்
பல்லி னுல்இதழ் அதுக்கினன் பருவலிக் கரத்தால்
எல்லி னுன்முகன் கொடுத்ததோர் வேல்எடுத் தெறிந்தான்.

8013. எறிந்த காலவேல் எய்தஅம்பி யாவையும் எரித்துப்
பொறிந்து போய்உகத் தீஉக விசையினில் போகச்
செறிந்த தாரவன் மார்பிடைச் சென்றது சிந்தை
அறிந்த மைந்தனும் அமர்நெடுங் களத்திடை அயர்ந்தான்.

---

1 [பிரதி] நன்றுபொ ராவலி.

உளை. இரீய லுற்றது வானரப்பெரும்படை இமையோர்
பரீய லுற்றவர் உலைந்தனர் முனிவரும் பதைத்தார்
விரிதி ரைக்கடற் கிரட்டிகொண் டார்த்தனர் விரவார்
திரீய லுற்றது மண்டலம் கதிரொளி தீர்ந்த. 8018

உஅ. அஞ்சி னுன்அலன் அயன்தந்த வேலினும் ஆவி
துஞ்சி னுன்அலன் துளங்கினுன் என்பதும் துணியா
எஞ்சி லாக்கையை எடுத்துக்கொண் டகல்வன்என் றெண்ணி
நஞ்சி னுல்செய்த நெஞ்சினன் பாரின்மேல் நடந்தான்.

உஉ. உள்ளி வெம்பிணத் துதிரத்தின் ஓதத்தின் ஓடி
அள்ளி அங்கைகள் இருபதும் பற்றிப்பண் டான்ற
வெள்ளி யங்கிரி எடுத்தனன் வெட்கினுன் என்ன
எள்ளில் பொன்வரை எடுக்கலுற் றுன்என எடுத்தான். 8020

உக. அடுத்த நல்உணர் வொழிந்திலன் அம்பரம் செம்பொன்
உடுத்த நாயகன் தான்என உணர்ந்திலன் ஒருங்கே
கொடுத்த எண்வகை மூர்த்தியைத் துளக்கிய பொருப்போ
டெடுத்த தோள்களுக் கெழுந்திலன் இராமனுக் கிளையான்.

உக. தலைகள் பத்துடன் தழுவிய தசமுகத் தலைவன்
நிலைகொள் மாகடல் ஒத்தனன் கரம்புடை நிமிரும்
மலைகள் ஒத்தன அதில்எழும் மாமதி ஒத்தான்
இலைகொள் தண்துழாய் வயங்குதோள் இராமனுக் கிளையான்.

உஉ. எடுக்கல் உற்றவன் மேனியை ஏந்துதற் கேற்ற
மிடுக்கி லாமையில் இராவணன் வெய்துயிர்ப் புற்றுன்
இடுக்கி நின்றபோர் மாருதி புகுந்தெடுத் தேந்தித்
தடுக்க லாகலா விசையினில் எழுந்தயல் சார்ந்தான். 8023

உங. தொக ஒதுங்கிய ஞானமென் றெவற்றிற்கும் தூயான்
தகவு கண்டதென் அன்பனும் தனித்துணை அல்லால்
அகவு காதலால் ஆண்தகை ஆயினும் அனுமன்
மகவு கொண்டுபோய் மரம்புகு மந்தியை நிகர்த்தான். 8024

உச. மையல் கூர்மனத் திராவணன் படையினுல் மயங்கும்
செய்ய வாளரி ஏறன்னுன் சிறிதினில் தேறக்
கையும் கால்களும் நயனமும் கமலமே அனைய
பொய்யி லாதவன் நின்றிடத் தனுமனும் போனுன். 8025

உகடு. போன காலையில் புக்கனன் புங்கவன் போர்வேட்
டானை மேற்செலும் கோளரி ஏறது என்ன
வானு ளோர்கணம் ஆர்த்தனர் தூர்த்தனர் மலர்மேல்
தூங் வின்றவேல் அரக்கனும் தேரினைத் துரந்தான். 8026

உகசு. தேரில் போர் அரக்கன்செல சேவகன் தனியே
பாரில் செல்கின்ற வறுமையை நோக்கினன் பரிந்தான்
சீரில் செல்கின்ற தில்லியிச் செருவெனும் திறத்தால்
வாரில் பெய்கழல் மாருதி கதும்என வந்தான். 8027

உகள. நூறு பத்துடை நொறில்பரித் தேரின்மேல் உன்முன்
மாறில் போர்அரக் கன்பொர நிலத்தில்நீ மலைதல்
வேறு காட்டும்ஓர் வெறுமைய மெல்லியன் எனினும்
ஏறு சீஇய என்னுடைத் தோளின்மேல் என்றான். 8028

உகஅ. நன்று நன்றென நாயகன் ஏறின னுமக்
குன்று தாவிய கோளரி ஏறெனக் கூறி
இன்று வானவர் ஆசிகள் இயம்பினர் ஈன்ற
கன்று தாங்கிய தாய்என மாருதி களித்தான். 8029

உகக. மாணி யாய்உல களந்தநாள் அவனுடை வடிவை
ஆணி யாய்உணர் மாருதி அதிசயம் உற்றான்
காணி யாகப்பண் டுடையனும் ஒருதனிக் கலுழன்
நாணி னுன்மற்றை அனந்தனும் தலைநடுக் குற்றான். 8030

உஉஎ. ஓதம் ஒத்தனன் மாருதி அதன்அகத் துறையும்
நாதன் ஒத்தனன் என்னிலோ துயில்கிலன் அமலன்
வேதம் ஒத்தனன் மாருதி வேதத்தின் சிரத்தின்
போதம் ஒத்தனன் இராமன்வே றிதனிலைப் பொருவே.

*உஉக. தகுதியாய் நின்ற வென்றி மாருதி தனிமை சார்ந்த
மிகுதியை வேறு நோக்கில் எவ்வண்ணம் விளம்பும் தன்மை
புகுதி கூர்ந் துள்ளவேதம் பொதுவுறப் புலத்து நோக்கும்
பகுதியை ஒத்தான் வீரன் மேலைத்தன் பதமே ஒத்தான்.

மேருவின் சிகரம் போன்ற தென்னினும் வெளிறுண்டாமால்
மூரிநீர் அண்டம் எல்லாம் வயிற்றிடை முன்னம் கொண்ட
ஆரியற் கனைக மார்க்கத் தாயிரம் வலமு தாகச்
சாரியை திரிய லான மாருதி தாமப் பொற்றேர்ள். 8033

*உஉங. ஆசி சொல்லினர் அருந்தவர் அறம்எனும் தெய்வம்
காசின் நன்னெடும் கரம்எடுத் தாடிடக் கயிலை
ஈசன் நான்முகன் என்றிவை முதலிய முத்தேலார்
பூசல் காணிய வந்தவர் அணுகுறப் புகுந்தார். 8034

உஉச. அண்ணல் அஞ்சன வண்ணனும்அமர்குறித்தமைந்தான்
எண்ண ரும்பெருந் தனிவலிச் சிலையைநாண் ஏறிந்தான்
மண்ணும் வானமும் மற்றும்தன் வாரிவாய்ப் பெய்த்
துண்ணும் காலத் துருத்திரன் ஆர்ப்பொத்த தோதை. 8035

உஉரு. ஆவி சென்றிலர் நின்றிலர் அரக்கரோ டியக்கர்
நாவு லர்ந்தனர் கலங்கினர் விலங்கென நடுங்கிக்
கோவை நின்றபேர் உலகமும் குலைந்தன குலையாத்
தேவர் தேவனும் விரிஞ்சனும் சிரதலம் குலைத்தார். 8036

உஉசு. ஊழி வெங்கனல் ஒப்பன துப்பன உருவ
ஆழி நீரையும் குடிப்பன திசைகளை அளப்ப
வீழின் மேற்செலின் விண்ணையும் மண்ணையும் துளைப்ப
ஏழு வெஞ்சரம் உடன்தொடுத் திராவணன் எய்தான். 8037

உஉள. எய்த வாளியை ஏழினுல் ஏழினை டேழு
செய்து செஞ்சரம் ஐஞ்சொரு தொடையினில் சேர்த்தி
வெய்து காலவெம் கனல்களும் வெள்குறப் பொறிகள்
பெய்து போம்பகை இராகவன் சிலைநின்று பெயர்த்தான். 8038

உஉஅ. வாளி ஐந்தையும் ஐந்தினுல் விசும்பிடை மாற்றி
ஆளி மொய்ம்பினவ் அரக்கனும் ஐயிரண் டம்பு
தோளி னுல்உற வாங்கினன் துரந்தனன் சுருதி
ஆளும் நாயகன் அவற்றையும் அவற்றினுல் அறுத்தான். 8039

உஉக. அறுத்து வேறவன் அயல்நின்ற அளப்பரும் அரக்கர்
செறுத்து விட்டன படையைவெங் கணைகளால் சிந்தி
இறுத்து வீசிய கிரிகளை எரிஎழு நூறி
ஒறுத்து மற்றவர் தலைகளால் சிலைமலை உயர்த்தான். 8040

உஉம. மீனு டைக்கருங் கடல்புரை இராக்கதர் விட்ட
ஊனு டைப்படை இராவணன் அம்பொடும் ஓடி
வான ரக்கடல் படாவகை பகழியால் மாற்றித்
தானு டைச்சரத் தால்அவர் தலைமலை கடிந்தான். 8041

உஉக. இம்ப ரான்எனில் விசும்பினன் ஆகும்ஓர் இமைப்பில்
தும்பை சூடிய இராவணன் முகம்தொறும் தோன்றும்
வெம்பு வஞ்சகர் விழிதொறும் தோன்றுமா நின்றுன்
அம்பின் முன்செலும் மனத்திற்கும் முன்செலும் அநுமன்.

உஉஉ. ஆடு கின்றன கவந்தமும் அவற்றெடும் ஆடிப்
பாடு கின்றன அலகையும் நீந்தின பணைக்கை
கோடு துன்றிய களியொடு தேர்க்குலம் தலைக்கொண்
டோடு கின்றன உலப்பில உதிரவா றுவரி. 8043

உஉஊ. அற்ற [1]வாழிய அரியுண்ட அச்சினம் பொடிபட்
டிற்ற கொய்யுளைப் புரவிய தேர்க்குலம் எல்லாம்
உறற வாளியோ டுருண்டன கருங்களிற் றேங்கல்
சுற்றும் வாசியும் துணிந்தன அமர்க்களம் தொடர்ந்த. 8044

உஉச. தேர் இழந்துவெஞ் சிலைகளும் இழந்துசெந் தறுகண்
கார் இழந்துவெங் கனைமாக் கால்களும் இழந்து
சூர் இழந்துவெங் கவசமும் இழந்தது பிளந்து
தார் இழந்துபின் இழந்தனர் நிருதர்தம் தலைகள். 8045

உஉடு. அரவின் நுண்இடை மடந்தையர் கணவர்அன் றற்ற
சிரமும் அன்னவை ஆதலில் யாதொன்றும் தெரியா
புரவி யின்தலை பூழ்க்கையின் தலைஇவை பொருத்தித்
தரவின் நல்உயிர் துறந்தனர் குவவுத்தோள் தழுவி. 8046

உஉசு. ஒன்று நூற்றினே டாயிரம் நெடுந்தலை உருட்டிச்
சென்று தீர்வில எனப்பல கோடியுஞ் சிந்தி
நின்ற தேரொடும் இராவணன் ஒருவனும் நிற்கக்
கொன்று வீழ்த்ததவ் விராகவன் சரம்எனும் கூற்றம். 8047

உஉள. ஆர்ப்ப டங்கின வாய்எலாம் அழல்கொழுந் தொழுகும்
பார்ப்ப டங்கின கண்எலாம் பலவகைப் படைகள்
தூர்ப்ப டங்கின கைஎலாம் தூளியின் படலைப்
போர்ப் படங்கின உலகெலாம் முரசெலாம் போல 8048

உஉஅ. தேரும் யானையும் அரக்கரும் புரவியும் தெற்றி
பேரும் ஓர்விடம் இன்றெனத் திசைதோறும் பிறங்கிக்
காரும் வானமும் தொடுவன பிணக்குன்று கண்டான்
மூரி வெஞ்சிலை இராவணன் அராவென முனிந்தான். 8049

---

1 [பிரதி] வாளிய.

உசுக. முரண்டொருஞ்சிலை இமைப்பினின் மூறையுறவாங்கிப்
புரண்டு தோள்உறப் புலன்கொள்நாண் வலம்படப் போக்கித்
திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்
திரண்டு தோளினும் இரண்டுபுக் கழுந்திட எய்தான். 8050

உசம. முறுவல் எய்திய முகத்தினன் முளரியங் கண்ணன்
மறுவி லாததோர் வடிக்கணை தொடுத்துற வாங்கி
இறுதி எய்துநாள் கால்பொர மந்தரம் இடையிட்
டறுவ தாம்என இராவணன் சிலையினை அறுத்தான். 8051

உசக. மாற்று வெஞ்சிலை வாங்கினன் வடிம்புடை நெடுநாண்
ஏற்று ருவகை இடையறக் கணைகளால் எய்தான்
காற்றி னும்கடி தாம்அவன் கதிர்மணி நெடுந்தேர்
ஆற்றுங் கொய்யுளைப் புரவியின் சிரங்களும் அறுத்தான். 8052

உசஉ. மற்றும் வெம்படை வாங்கினன் வாங்குரு முன்னம்
அற்ற ழிந்துக அயில்நெடுங் கணைகளால் அறுத்தான்
கொற்றவெண்குடை கொடியொடுங் குறைபடத்துணித்ததான்
கற்றை யஞ்சுடர்க் கவசமுங் கட்டறக் கழித்தான். 8053

உசங. மாற்றுத் தேர்அவண் வந்தன வந்தன வாரா
வீற்று வீற்றுற வெயிலுமிழ் கடுங்கணை விட்டான்
சேற்றுச் செம்புனல் படுகளப் பரப்பிடைச் செங்கண்
கூற்றுக் கைஎடுத் தாடிட இராவணன் குதித்தான். 8054

உசச. மின்னும் பன்மணி மோலிமேல் ஒருகணை விட்டான்
அன்ன காய்கதிர் இரவிமேல் பாய்ந்தபோர் அனுமான்
என்ன லாயதோர் விசையினில் சென்றவன் தலையில்
பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த. 8055

உசரு. செறிந்த பன்மயிர்ப் பெருவனந் திசைபரந் தெரியப்
பொறிந்த வாய்வயக் கடுஞ்சுடர்க் கணைபட்ட பொழுதில்
எறிந்த கால்பொர மேருவின் கொடுமுடி இடந்து
மறிந்து வேலையில் வீழ்ந்ததும் ஒத்தது மகுடம். 8056

உசசு. அண்டர் நாயகன் அடுசிலை உதைத்தபேர் அம்பு
கொண்டு போகப்போய்க் குரைகடல் குளித்ததோர் கொள்கை
மண்ட லம்தொடர் வயங்குவெங் கதிர்சிலை வாயால்
உண்ட கோளொடும் ஒலிகடல் வீழ்ந்ததும் ஒக்கும். 8057

உசஎ. சொல்லும்அத்துணை அளவையின் மணிமுடிதுறந்தான்
எல்லிமைத் தெழு மதியமும் ஞாயிறும் இழந்த
அல்லும் ஒத்தனன் பகலும்ஒத் தனன்அமர் பொருமேல்
வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன். 8058

உசஅ. மாற்ற ரும்தட மணிமுடி இழந்தவாள் அரக்கன்
ஏற்றம் எவ்உல கத்திலும் உயர்ந்துளான் எனினும்
ஆற்றல் நன்நெடுங் கவிஞன்ஓர் அங்கதம் உரைப்ப
போற்ற ரும்புகழ் இழந்தபோர் ஒருவனும் போன்றான். 8059

உசக. அறங்க டந்தவர் செயல்இதென் றுலகெலாம் ஆர்ப்ப
நிறங்க ரிந்துதன் நிலம்விரல் கிளைத்தவன் நின்றான்.
இறங்கு கண்ணினன் எல்அழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆல்அன்ன மெய்யான்.

உருய. நின்ற வன்நிலை நோக்கிய நெடுந்தகை இவனைக்
கொன்றல் என்பயன் வெறுங்கையின் றூன்எனக் கொள்ளா
இன்ற விந்தது போலும்நின் தீமைஎன் றிசையோ
டொன்ற வந்தன வாசகம் இனையன உரைத்தான். 8061

உருக. அறத்தி னுல்அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தி னுல்அரி தென்பது மனத்திடை வலித்தி
பறத்தி நல்நெடும் பதிபுக விறையினில் பாவி
இறத்தி நான்அது நினைத்திலென் தனிமைகண் டிரங்கி. 8062

உருஉ. உடைப்பெ ருங்குலத் தாரொடும் உறவொடும் உதவும்
படைக்க லங்களும் மற்றும்நீ தேடிய பலவும்
அடைத்து வைத்தன திறந்துகொண் டாற்றுதி ஆயின்
கிடைத்தி அல்லையேல் ஒளித்தியால் சிறுதொழில் கீழோய்.

உருங. சிறையில் வைத்தவள் தன்னைவிட் டுலகினில் தேவர்
முறையில் வைத்துநின் தம்பியை இராக்கத முறைப்பேர்
இறையில் வைத்தவற் கேவல்செய் திருத்தியேல் இன்னும்
தறையில் வைக்கிலன் நின்தலை வாளியில் தடிந்து. 8064

உருச. அல்லை யாம்எனில் ஆரமர் ஆற்றினின் றேற்க
வல்லை யாம்எனின் உனக்குள வலிஎலாம் கொண்டு
நில்லை யாஎதிர் நேர்நின்று பொன்றுதி எனினும்
நல்லை ஆகுதி பிழைப்பினி உன்டென்று நயவேல். 8065

உருடு. ஆளே யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளே ஆயின கண்டனே இன்றுபோய்ப் போர்க்கு
நாளே வாஎன நல்கினன் நாகிளங் கமுகின்
வாளே தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

இச-வது. இராவணன் முதல் நாளையில் தோற்ற படலம் முற்றிற்று.

இரு-வது, கும்பகருணன் வதைப்படலம்.

க. வாரணம் பொருத மார்பும் வரையினே எடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்க நயம்பெற உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே விட்டு வெறுங்கையே மீண்டு போனான்.

உ. கிடந்தபோர் வலியார்மாடே கெடாதவா னவரைஎல்லாம்
கடந்தபேர் உலகம் மூன்றும் காக்கின்ற காவ லாளன்
தொடர்ந்துபோம் பழியி னேடும் தூக்கிய கரங்களோடும்
நடந்து போய் நகரம் புக்கான் அருக்கனும் நாகம் சேர்ந்தான்

நாள் ஒத்த நளினம் அன்ன முகத்தியர் நயனம் எல்லாம்
வாள் ஒத்த மக்கள் வார்த்தை இராகவன் வாளி ஒத்த
கோள் ஒத்த சிறைவைத்தாண்ட கொற்றவற் கற்றைநாள்தன்
தோள் ஒத்ததுணேமென்கொங்கை நோக்கங்கு தொடர்கிலாமை.

ச. மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெரும் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தானும்
பூதலம் என்னும் மங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.

ரு. மந்திரச் சுற்றத் தாரும் வாள்நுதல் சுற்றத் தாரும்
தந்திரச் சுற்றத் தாரும் தன்கிளைச் சுற்றத் தாரும்
எந்திரம் பொறியின் நிற்ப யாவரும் இன்றித் தான்ஓர்
சிந்துரக் களிறு கூடம் புக்கெனக் கோயில் சேர்ந்தான்.

சு. ஆண்டொரு செம்பொற் பீடத் திருந்துதன் வருத்தம் ஆறி
நீண்டுயர் நினைப்பன் ஆகிக் காஞ்சுகி அயல்நின் றுணை
ஈண்டுநம் தூதர் தம்மை இவ்வழித் தருதி என்றான்
பூண்டதோர் பணியின் வல்லே அவைவரைக் கொண்டு புக்கான்.

எ. மனகதி வாயு வேகன் மருத்தன்மா மேகன் என்றிவ்
வினைஅறு தொழிலர் முன்னு ஆயிரர் வினவி னுரை
நினைவதன் முன்னம் நீர்போய் நெடுந்திசை எட்டும் நீந்தி
கனைகழல் அரக்கர் தானை கொணருதிர் கடிதின் என்றான்.

அ. ஏழ்பெருங் கடலும் சூழ்ந்த ஏழ்பெருந் தீவும் எண்ணெண்
பாழியம் பொருப்பும் கீழ்பார் அடுத்தபா தாளத் துள்ளும்
ஆழியங் கிரியின் மேலும் அரக்கர்ஆ னவரை எல்லாம்
தாழ்விலீர்கொணர்திர்என்ருன் அவர்அதுதலைமேல்கொண்டார்

கூ. மூவகை உலகு ளாரும் முறையின்நின் றேவல் செய்யப்
பாவகம் இன்ன தென்றும் தெரிகிலார் பதைத்து விம்மத்
தூவக லாத வைவாய் எஃகுருத் துளைக்கை யானை
சேவகம் அமைந்த தென்னச் செறிமலர் அமளி சேர்ந்தான்.

பண்நிறை பவளச் செவ்வாய்ப் பைந்தொடிச் சீதை என்னும்
பெண்நிறை கொண்டநெஞ்சன் நாணிறைகொண்ட பின்னர்க்
கண்ணிறை கோடல் செய்யான் கையறு கவலை சுற்ற
உண்ணிறை மானந் தன்னே உமிழ்ந்துமிழ்ந் துயிர்ப்பதானன்.

மக. வான்நகும் மண்ணும்எல்லாம் நகும்மணி வயிரக் கையான்
தான்நகு பணைஞர் யாரும் நகுவர்என் றதற்கு நாணன்
வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதுலை வந்த
சானகி நகுவள் என்று நாணத்தால் சாம்பு கின்ருன். 8077

மஉ. ஆங்கவன் தன்மூ தாதை ஆகிய மூப்பின் யாக்கை
வாங்கிய வரிவில் அன்ன மாலிய வான்என் பானோர்
பூங்கழல் அரக்கன் வந்து பொலன்கழல் இலங்கை வேந்தைத்
தாங்கிய அமளி மாட்டோர் தவிசுடைப் பீடம் சார்ந்தான்.

இருந்தவன் இலங்கை வேந்தன் இயற்கையை எய்த நோக்கிப்
பொருந்தவத் துற்ற போரில் தோற்றனே போலும் என்னு
வருந்தினே மனமும் தோளும் வாடினே நாளும் வாடாப்
பெருந்தவம் உடைய ஐயா என்உற்ற பெற்றி என்ருன்.

கவைஉறு நெஞ்சன் காந்திக் கனல்கின்ற கண்ணன் பத்துச்
சிவையின் வாய் என்னச்சென்தீ உயிர்ப்புறத் திறந்த மூக்கன்
நவைஅறு பாகை அன்றி அமுதினே நக்கி ஞலும்
சுவைஅறு உலர்ந்த நாவன் இனையன சொல்லல் உற்ருன்.

மஏ. சங்கம்வந் துற்ற கொற்றத் தாபதர் தம்மோ டெம்மோ
டங்கம்வந் துற்ற தாக அமரர்வந் துற்ருர் அன்றே
கங்கம்வந் துற்ற செய்யும் களத்துநம் குலத்துக் கொவ்வாப்
பங்கம்வந் துற்ற தொன்றே பழியும்வந் துற்ற தன்றே. 8081

மசு. முனை அமை திங்கள் சூடும் முக்கணன் முதல ஆகக்
கினை அமை புவனம் மூன்றும் கிளர்ந்துடன் கெழீய ஏனும்
வனை அமை வாளில் வாளி மெய்உற வழங்கும் ஆகில்
இனையவன் தனக்கும் ஆற்ரு தென்பெருஞ் சேனை நம்பா. 8082

மஎ. எறித்தபோர் அரக்கர் ஆவி எண்இலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோ தென்னை இந்தப் பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்தபோ தன்னுள் அந்தக் கூனி [1]கூன் போஉண்டை
தெறித்தபோ தொத்த தன்றிச் சினவுண்மை தெரிந்த தில்லை.

மஅ. போயபின் அவன்கை வாளி உலகெலாம் புகுவ தல்லால்
ஓயும்என் றுரைக்க லாமோ ஊழிசென் ரூலும் ஊழித்
தீயையும் தீய்க்கும் செல்லும் திசையையும் தீக்கும் சொல்லின்
வாயையும் தீக்கும் உன்னின் மனத்தையும் தீய்க்கும் மன்னோ.

மக. மேருவைப் பிளக்கும் என்ரூல் விண்கடந் தேகும் என்ரூல்
பாரினை உருவும் என்ரூல் பௌவத்தைப் பருகும் என்ரூல்
ஆருமே அவற்றி னூலை ஆற்றமே அனந்த சோடி
மேருவும் மண்ணும் விண்ணும் கடல்களும் வேண்டும் அன்றே.

உம. வரிசிலை நாணில் கோத்து வாங்குதல் விடுதல் ஒன்றும்
தெரிகிலர் அமர ரேயும் ஆர்அதன் செய்கை தேர்வார்
பொருசினத் தரக்கர் ஆவி போக்கிய போக என்று
கருதவே உலகம் எல்லாம் சரங்களாய்க் காட்டும் அன்றே.

உக. மலைஉறப் பெரிய வாய வாள்எயிற் ரரக்கர் தானை
நிலைஉறச் செறிந்த வெள்ளம் நூற்றிரண் டெனினும் நேரே
கொலைஉறக் குளித்த வாளி குதிரையைக் களிற்றை ஆளைத்
தலைகளைத் தள்ளிற் றல்லால் உடல்களில் தங்கிற் றுண்டோ.

உஉ. நல்இயல் கவிஞர் நாவில் பொருள்குறித் தமைந்த நாமச்
சொல்எனச் செய்யுள் கொண்ட தொடைஎனத் தொடையை நீக்கி
எல்லையில் சென்றுந் தீரா இசைஎன வழுவி லாத
பல்அலங் காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ. 8088

உங. இந்திரன் குலிச வேலும் ஈசன்கை யிலைமூன் றெற்ற
மந்திர அயிலும் மாயன் திகிரியும் வரவும் கண்டேன்
அந்தர நீளி தம்மா தாபதன் அம்புக் காற்ரு
நொந்தனன் யான் அல்லா தார்அவை நோக்கி நிற்பார்.

1 [பிரதி] கூன்போ தரமல் உண்டை.

உ ஈ. பேய்இருங் கணங்க ளோடும் சுடுகளத் துறையும் பெற்றி
ஏயவன் தோள்கள் எட்டும் இந்திரன் இரண்டு தோளும்
மாயிரு ஞாலம் முற்றும் வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும் அன்னுன் விரல்ஒன்றிற் காற்றல் ஆற்ரு.

உடு. மூப்புரம் ஒருங்கச் சுட்ட மூரிவெஞ் சிலையும் வீரன்
அற்புத வில்லுக் கம்மா அம்பெனக் கொளலும் ஆகா
ஓப்புவே றுரைக்க லாவ தொருபொருள் இல்லை வேதம்
தப்பின போதும் அன்னுன் தனுஉமிழ் சரங்கள் தப்பா.

ஊர்த்தவீர் யனுப் உள்ளான் செங்கண்மால் எனினும்யான்அக்
கார்த்தவீ ரியனை நேர்வார் உளர்எனக் கருதல் ஆற்றேன்
பார்த்தபோ தவனும் மற்றத் தாபதன் தம்பி பாதத்.
தார்த்ததோர் துகளும் ஒவ்வான் ஆர்அவர்க் காற்ற கிற்பார்.

உஎ. உற்பத்தில் அயனே ஒக்கும் ஓடும்போ தரியே ஒக்கும்
கற்பத்தில் அரனே ஒக்கும் பகைஞரைக் கலந்த காலைச்
சிற்பத்தை நம்மால் பேசச் சிறியவோ என்றும் தீராத்
தற்பத்தைத்துடைக்கும்என்ருல்பிறிதொருரான்றும்உண்டோ.

உஅ. குடக்கதோ குணக்க தேயோ நாணத்தின் பால தேயோ
தடத்தபேர் உலகத் தேயோ விசும்பதோ எங்கும் தானே
வடக்கதோ தெற்க தோஎன் றுணர்ந்திலன் மனிதன் கைவில்
இடத்ததோ வலத்த தோஎன் றுணர்ந்திலன் யானும் இன்னும்.

உசு. ஏற்றம்ஒன் றில்லை என்ப தெழுமைப் பால தன்றே
ஆற்றல்சால் கலுழ னேதான் ஆற்றுமே அமரின் ஆற்றல்
காற்றையே மேல்கொண் டானே கனலையே கடாவி னானே
கூற்றையே ஊர்கின் ருனே குரங்கின்மேல் கொண்டுநின்ரு ன்.

போய்இனித் தெரிவதென்னே பொறையினுல்உலகம்போலும்
வேய்எனத் தகைய தோளிக் கிராகவன் மேனி நோக்கில்
தீஎனக் கொடிய வீர சேவகச் செய்கை கண்டால்
நாய்எனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம். 7396

ஈக. வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவாள் அங்கை
ஈசன்என் றினைய தன்மை இழிதரும் இவரால் அன்றி
நாசம்வந் துற்ற போது நல்லதோர் பகையைப் பெற்றேன்
பூசல்வண் டுறையும் தாராய் இதுஇங்குப் புகுந்த தென்ரு ன்.

நஉ. முன்உரைத் தோனை வாளா முனிந்தனை முனியா உம்பி
இன்னுரைப் பொருளும் கேளாய் ஏதுஉண் டெனினும் ஓராய்
இன்னுரைக் குரைவே றுண்டோ நெருப்புரைத் தாலும்நீண்ட
மின்னுரைத் தாலும்ஒவ்வா விளங்கொளி அலங்கல் வேலோய்.

நந. உளைவன எனினும் மெய்ம்மை உற்றவர் முற்றும் ஓர்ந்து
விளைவன சொன்ன போதும் கொள்கிலாய் விடுதல் கண்டாய்
இளைதரு சுற்றம் வெற்றி இழுமைதம் கல்வி செல்வம்
களைவருந் தானை யோடும் கழிவது காண்டி என்றான்.

நச. ஆயவன் உரைத்த லோடும் அப்புறத் திருந்த ஆன்ற
மாயைகள் பலவும் வல்ல மகோதரன் கடிதில் வந்து
தீய்வழி நோக்கி என்இச் சிறுமைநீ செப்பிற் றென்னை
ஓய்வுறு சிந்தை யானுக் குருதபேர் உறுதி சொன்னான்.

நடு. நன்றிசை தென்று கொண்டான் நயத்தினை நயந்து வேறு
வென்றியே ஆக மற்றும் தோற்றுயிர் விடுதல் ஆக
ஒன்றிலே நிற்றல் போலாம் உத்தமர்க் குரிய தொல்கிப்
பின்றுமேல் அவனுக் கன்றே பழியொடு நரகம் பின்னை.

நகூ. திரிபுரம் எரிய ஆங்கோர் தனிச்சரம் துரந்த செல்வன்
ஒருவன்இப் புவனம் எல்லாம் ஓர்அடி ஒடுக்கிக் கொண்டான்
பொருதுனக் குடைந்து போனார் மானிடர் பொருத போர்க்கு
வெருவுதி போலும் மன்ன கயிலையை வெருவல் கண்டாய்.

வென்றவர் தோற்பர் தோற்றார் வெல்குவர் எவர்க்கும் மேலாய்
நின்றவர் தாழ்வர் தாழ்ந்தார் உயர்குவர் நெறியும் அஃதே
என்றவர் அறிஞர் அன்றே ஆற்றலுக் கெல்லை உண்டோ
புன்தொழில் இருவர் போரைப் புகலுதி புகழ்க்கு மேலோய்

நஅ. தேவியை விடுதி ஆயில் தீரும்உன் தீமை அன்றேல்
ஆவியை விடுதல் அன்றி அல்லதொன் றுரவ துண்டோ
தாவரும் பெருமை அம்மா நீஇங்குத் தாழ்த்த தென்னை
காவல விடுதி இன்றிக் கையறு கவலை நொய்தில். 7404

நகூ. இனிஇறை தாழத்தி ஆகில் இலங்கையும் யாமும் எல்லாம்
கனிஉடை மரங்கள் ஆகக் கவிக்குலம் கடக்கும் காண்டி
பனிஉடை வேலைச் சின்னீர் பருகினன் பருதி என்னத்
துனிஉழந் தயர்வ துண்டோ துறத்தியால் துன்பம் மன்னோ.

சஅ. முன்உனக் கிறைவர் ஆன மூவரும் தோற்றார் தேவர்
பின்உனக் கேவல் செய்ய உலகொடு மூன்றும் பெற்றாய்ப்
புன்நுனைப் பனிநீர் அன்ன மனிதரைப் பொருளென் றுன்னி
என்உனக் கிளைய கும்ப கருணனே இகழ்ந்த தெந்தாய். 7406

சக. ஆங்கவன் தன்னைக் கூவி ஏவுதி ஆயில் ஐய
ஓங்கலே போல்வான் மேனி காணவே ஒளிப்பர் அன்னோர்
தாங்குவார் செருமுன் என்னில் தாபதர் உயிரைத் தானே
வாங்கும்என் றினைய சொன்னன் அவன்அது மனத்துக் கொண்டான்.

சஉ. பெறுதியே எவையும் சொல்வாம் பேரறிவாளா சின்
தறிதியே என்பால் வைத்த அன்பினுக் கவதி உண்டோ
உறுதியே சொன்னாய் என்னை உள்ளமும் வேறு பட்டான்
இறுதியே வினைவ தானால் இடைஒன்றால் தடையும் உண்டோ

சங. நன்றிது கருமம் என்னை நம்பியை நணுக ஓடிச்
சென்றீவட் டருதிர் என்றன் என்றலும் நால்வர் சென்றார்
தென்திசைக் கிழவன் தூதர் தேடினர் செல்வார் என்னக்
குன்றினும் உயர்ந்த தோளான் கொற்றமாக் கோயில் புக்கார்.

சச. திண்திறல் வீரர் வாயில் திறத்தலும் சுவாத வாதம்
மண்டுற வீரர் எல்லாம் வருவது போல தாகக்
கொண்டுடைத் தடக்கை பற்றிக் குலமுடை வாயி னூலே
கண்துயில் எழுப்ப எண்ணிக் கடிதொரு வாயில் புக்கார்.

சடு. ஓதநீர் இசைந்த தென்ன உறங்குவான் நாசிக் காற்றுல்
சோதிலா மலைகள் கூடி வருவது போல தாக
ஈதெலாம் கண்ட வீரர் ஏங்கினர் துணுக்கம் உற்றார்
போதுவான் அருகு செல்லப் பரந்தனர் பொறிகொள் கண்ணார்

இங்கிவன் தன்னை யாம்இன் றெழுப்பசாம் வகையா தென்று
துங்கமெய் வாய்மூக் கீது கண்டுமெய் துணுக்கம் உற்றார்
அங்கைகள் தீண்ட அஞ்சி ஆழ்செவி அதனின் உள்ளே
சங்கொடு தாரை சின்னம் சமைவுறச் சாற்றல் உற்றார்.

சஎ. கோடிகள் தண்டு கூட்டம் சங்குவல் லோர்கள் கூடித்
தாடிகள் சந்து மார்பு தலைசெவி தாக்க லோடும்
வாடிய கையர் ஆகி மன்னவற் குரைப்ப பின்னும்
நீடிய பரிகள் எல்லாம் நிரைத்திடும் விரைவின் என்றான்.

சஅ. கட்டுறு கவன மாஓர் ஆயிரம் கடிதின் வந்து
மட்டற உறங்கு வான்தன் மார்பிடை வருத்த மாக
விட்டுற நடத்தி ஓட்டி விரைவுள சாரி வந்தார்
தட்டுறு குறங்கு போலத் தடந்துயில் கொள்வ தானுன்.

சக. கொய்ம்மலர் அலங்க லான்தன் குரைகழல் வணங்கி ஐய
உய்வகை நாடி நின்றே எழுப்பலாம் வகையே செய்து
கையெலாம் வலியும் ஓய்ந்த கவனமாக் காலும் ஓய்ந்த
செய்யலாம் வகைவே றுண்டோ செப்புதி தெரிய என்றார்.

*ருஅ. இடைபெயரா இளஅனை இணைஆழி மணிநெடுந்தேர்
படைபெயரா வரும்போதும் பதையாத உடம்பானை
மடைபெயராச் சூலத்தான் மழுவாட்கொண் டெறிந்தாலும்
புடைபெயராத்துயில்வானைத்துயில்எழுப்பிக்கொணர்கென்றான்.

ருக. என்றலுமே அடியிறைஞ்சி ஈரைஞ்ஞூ றிராக்கதர்கள்
வன்தொழிலால் துயில்கின்ற மன்னவன்தன் மாடணுகி
நின்றிரண்டு கதுப்பும்உற நெடுமுசலம் கொண்டடிப்பப்
பொன்றினவன் எழுந்தால்போல் புடைபெயர்ந்தவ் கெழுந்திருந்தான்.

*ருஉ. மூவகை உலகும் உட்க முரட்டிசைப் பணைக்கை யானை
தாவரும் திசையின் நின்று சலித்திடக் கதிரும் உட்கப்
பூவுளான் புணரி மேலான் பொருப்பினன் முதல்வர் ஆய
யாவரும் துணுக்குற் றேங்க எளிதினில் எழுந்தான் வீரன்.

*ருஊ. உறக்கம் அவ்வழி நீங்கி உணத்தரும்
வறைக்க மைந்தன ஊனெடு வர்க்கிய
நறைக் குடங்கள் பெருன்கடை நக்குவான்
இறக்கு கின்ற முகத்தினை எய்தினன். 7419

ருச. ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்களும் நுங்கினன்
ஏறு கின்ற பசியை எழுப்பினன்
சீறு கின்ற முகத்தினன் செங்கணான். 7420

ருரு. எருமை ஏற்றைய ஈரறு நூற்றையும்
அருமை ஆற்றியே அய்த்திறை ஆற்றினன்
பெருமை பெற்றது கோடுமென் றேபிறங்
குருமை ஏற்றைப் பிசைந்தெரி ஊதுவான். 7421

நசு. இருந்த போதும் இராவணன் இன்றெனத்
தெரிந்த மேனியன் திண்கட லின்திரை
நெரிந்த வன்ன புருவத்து நெற்றியான்
சொரிந்த சோரிதன் வாய்உகத் தூங்குவான். 7422

நஎ. உதிர வாரியோ டேனுள் எழும்புதோல்
உதிர வாரி நுகர்வதோர் ஊணினன்
கதிர வாள்வயி ரப்பணைக் கையினன்
கதிர வாள்வயி ரக்கழல் காலினன். 7423

நஅ. இரும் பசிக்கு மருந்தென எஃகினே
டிரும் பசிக்கு மருந்து மெயிற்றினன்
வருங் களிற்றினைத் தின்றனன் மால்அரு
வருங் களிற்றிரி கின்றதோர் ஆசையான். 7424

நக. சூல மேகந் திருத்திய தோளினன்
சூல மேகம் எனப்பொலி தோற்றத்தான்
காலன் மேனி மனத்தன் கழல்பெருங்
காலன் மேல்நிமிர் செம்மயிர்க் கற்றையான். 7425

நம. எயிற லைத்த கரதலத் திந்திரன்
எயிற லைத்த கரதலத் தெற்றினன்
அயிற லைத்தொடர் அங்கையன் சிங்கஊன்
அயிற லைத்தொடர் அங்ககல் வாயினன். 7426

நக. உடல் கிடந்துளி உம்பர்க்கும் உற்றுயிர்க்
குடல் கிடந்தடங் காநெடும் கோளினன்
கடல் கிடந்தது நின்றதன் மேற்கதழ்
வடகடுங் கனல் போல்மயிர்ப் பங்கியான். 7427

நஉ. திக்க டங்களும் வென்றவன் சீறிட
மிக்க டங்கிய வெங்கதிர் அங்கிகள்
புக்க டங்கிய மேருப் புழைஎனத்
தொக்க டங்கித் துயில்தரு கண்ணினன். 7428

நங. காம்பி றங்கும் கனவரைக் கைம்மலைத்
தூம்பி றங்கு மதத்தின துற்றிட
ஓம்பு றும்முழை உற்றுயர் மூக்கினன்
பாம்பு றங்கும் படர்செவிப் பாழியான். 7429

கூசு. கூயினன் உன்தன் முன்எனக் கூறலும்
போயினன் நகர் பொம்மென் றிறைத்தெழ
வாயில் வல்லே நுழைந்து மதிதொடும்
கோயில் எய்தினன் குன்றன்ன கொள்கையான். 7430

கூடு. நிலை கிடந்த நெடுமதிள் கோபுரத்
தலை கிடந்த இலங்கையர் அண்ணலைக்
கொலை கிடந்தவேல் கும்ப கருணன்ஓர்
மலை கிடந்தது போல வணங்கினன். 7431

கூகூ. வன்து ணைப்பெருந் தம்பி வணங்கலும்
தன்தி ரண்டதோள் ஆரத் தழுவினன்
நின்ற குன்றொன்று நீள்நெடுங் காலிலாடும்
சென்ற குன்றைத் தழீஇஅன்ன செய்கையான். 7432

கூஎ. உடன் இருத்தி உதிரத்தொ டொள்நறைக்
குடம் நிறைத்தவை ஊட்டித் தசைகுடீஇக்
கடல் நுரைத்துகில் சுற்றிக் கதிர்க்குழாம்
புடை நிரைத்தொளிர் பல்கலன் பூட்டினன். 7433

கூஅ. பேர விட்ட பெருவலி இந்திரன்
ஊர விட்ட களிற்றெடும் ஓடுநாள்
சோர விட்ட சுடர்மணி ஓடையை
வீர பட்டம் எனநுதல் வீக்கினன். 7434

கூகூ. மெய்ய லாமின் இளவெயில் வீசிடத்
தொய்யல் வாசத் துவர்துதைந் தாடிய
கையில் நாகம் எனக்கடன் மேனியில்
தெய்வ நாறுசெஞ் சாந்தமும் சேர்த்தினன். 7435

எம. விடம்எ ழுந்தது போல்நெடு வீண்ணிலீனத்
தொடஉ யர்ந்தவன் மார்பிடைச் சுற்றினன்
இடபம் உந்தும் எழில்இரு நான்குதோள்
கடவுள் ஈய்ந்த கவசமும் கட்டினன். 7436

எக. அன்ன காலைஇவ் ஆரம்பம் யாவையும்
என்ன காரணத் தால்என் றியம்பினன்
மின்னை அன்ன புருவமும் வீண்ணிலீனத்
துன்னு தோளும் இடம்துடி யாநின்றன். 7437

எஉ. வான ரப்பெருந் தானையும் மானிடர்
கோன கர்ப்புறஞ் சுற்றினர் கொற்றமோ
டேனை உற்றவ ரோடமர் ஏற்றுயிர்
போன கத்தொழில் மூற்றுதி போய்என்றான். 7438

*எக. கிட்டிய தோசெருக் கிளர்பொற் சிதையைச்
சுட்டிய தோமுன்னம் சொன்ன சொற்களால்
திட்டியின் விடம்அன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோஇது விதியின் வண்ணமே. 7439

எச. ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடை
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமே. 7440

எடு. கல்லினுல் உலகினை வ்ரம்பு கட்டினும்
சொல்லலாம் பெருவலி இராமன் தோள்களை
வெல்லலாம் என்பதும் சிதை மேனியைப்
புல்லலாம் என்பதும் போலு மாலையா. 7441

எசு. புலத்தியன் வழிமுதல் வந்த பொய்அறு
குலத்தியல் பழிந்தது கொற்ற மூற்றுமேல்
வலத்தியல் அழிவதற் கேது மையறு
நிலத்தியல் நீர்இயல் என்னும் நீரதால். 7442

எஎ. கொடுத்தனை இந்திரற் குலகும் கொற்றமும்
கெடுத்தனை உன்பெருங் கிளையொ டுன்னையும்
படுத்தனை பலவகை அமரர் தங்களை
விடுத்தனை வேறினி வீடும் இல்லையால். 7443

எஅ. அறம்உனக் கஞ்சிஇன் றெளித்த தன்னதின்
திறம்முனம் உழுத்தலின் வலியுஞ் செல்வமும்
நிறம்உனக் களித்ததிங் கதனை நீக்கினுய்
இறவின யார்உனை எடுத்து நாட்டுவார். 7444

எக. தஞ்சமும் தருமமும் தவமு மேயவர்
நெஞ்சமுங் கருமமும் உரையு மேநெடு
வஞ்சமும் பாவமும் பொய்யும் வல்லயாம்
உஞ்சுமோ அதற்கொரு குறைஉண் டாகுமோ. 7445

அம். காலினுல் கருங்கடல் கடந்து காற்றினே
போலவன் குரங்குகள் சிதை போகிலள்
வாலியை உரங்கிழித் துருவ வல்லவன்
கோல்உள நாம்உள குறைஉண் டாகுமோ. 7446

அக. என்றுகொண் டினேயன இயம்பி யான்உனக்
கொன்றுள துணர்த்துவன் உணர்ந்து கோடியேல்
நன்றது நாயக நயக்கி லாய்எனில்
பொன்றினே யாகவே கோடி போக்கிலாய். 7447

அஉ. தையலே விட்டவன் சரணந் தாழ்ந்துனின்
ஐயறு தம்பியோ டளவ ளாவுதல்
உய்திறம் அன்றெனில் உளது வேறும்ஓர்
செய்திறம் அன்னது தெரியக் கோடியால். 7448

அங. பந்தியில் பந்தியில் படையை விட்டவை
சிந்துதல் கண்டுநீ இருந்து தேம்புதல்
மந்திரம் அன்றுநம் வலிஎ லாம்எடுத்
துந்துதல் கருமம்என் றுறுதி கூறினுன். 7449

அச. உறுவது தெரியஅன் றுன்னேக் கூயது
சிறுதொழில் மனிதரைச் கோறி சென்றென
அறிவுடை அமைச்சன்நீ அல்லே அஞ்சினே
வெறிவிதுன் வீரம்என் றிவை விளம்பினுன். 7450

அடு. மறம்கிளர் செருவினுக் குரியை மாண்டனே
பிறங்கிய நறவொடு தசையும் பெற்றனே
இறங்கிய கண்முகிழ்த் திரவும் எல்லியும்
உறங்குதி போய்என உனேயக் கூறினுன். 7451

அசு. மானிடர் இருவரை வணங்கி மற்றும்அக்
கூன்உடைக் குரங்கையும் கும்பிட் டுய்தொழில்
ஊன்உடை உம்பிக்கும் உனக்கு மேகடன்
யான்அது நினேக்கிலேன் எழுதி போதியால். 7452

அள. தருகஎன் தேர்படை சாற்றென் கூற்றையும்
வருகஎன் வானமும் மண்ணும் மற்றவும்
இருகைவன் சிறுவரோ டொன்றி என்னெடும்
பொருகவெம் போர்எனப் போதல் மேயினுன். 7453

அஅ. அன்னது கேட்டவன் தம்பி ஆனவன்
பொன்னடி வணங்கிநீ பொறுத்தி யால்என
மன்னெடுஞ் குலத்தை வலத்து வாங்கினன்
இன்னம்ஓன் றுளதுரை என்னக் கூறினன். 7454

அக. வென்றிவண் வருவன்என் றுரைக்கி லேன்விதி
நின்றது பிடர்பிடித் துந்து கின்றது
பொன்றுவன் பொன்றினுல் போலன்கொள் தோளியை
நன்றது நாயக விடுதல் நன்றரோ. 7455

கஅ. என்னேவென் றுளர்எனில் இலங்கை காவல
உன்னேவென் றுயருதல் உண்மை யாம்என்றுல்
பின்னேநின் றெண்ணுதல் பிழை அப்பெய்வகீ
தன்னேஅன் றளிப்பது தவத்தின் நன்றரோ. 7456

கக. இந்திரன் பகைஞனும் இராமன் தம்பிகை
மந்திர அம்பினுல் மடிதல் வாய்மையால்
தந்திரங் காலுறு சாம்பர்ப் பின்னரும்
மந்தரம் உணர்ந்துனக் குறுவ தாற்றுவார். 7457

கஉ. இற்றையின் நாள்வரை யான்முன் செய்தன
குற்றமும் உளஎனில் பொறுத்தி கொற்றவ
அற்றதால் முகத்தினில் விழித்தல் ஆரிய
பெற்றனன் விடைஎனப் பெயர்ந்து போயினன். 7458

கங. அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமுஞ்
செவ்வழி நீரொடும் குருதி தேக்கினன்
எவ்வழி யோர்களும் இரங்கி ஏங்கினர்
வெவ்வழி அவனும்போய் வாயில் மேவினன். 7459

*கச. விண்ணினை இடறும் மோலிவிசும்பினைமறைக்கும்மேனி
கண்எனும் அவை இரண்டு கடல்களில் பெரிய தாக
எண்ணினும் பெரியன் ஆன இலங்கையர் வேந்தன் பின்னுன்
மண்ணினை அளக்க நீண்ட மால்என வந்து நின்றுன். 7460

*கரு. இரும்படை கடிப்பெடுத் தெற்றி ஏகுகப்
பெரும்படை இளவலோ டென்ற பேச்சினுல்
வரும்படை வந்தது வானு ளோர்கள்தம்
அரும்படை மலர்முடி தூளி தூர்க்கவே. 7461

கூசு. தேர்க்கொடி யானையின் பதாகை சேண்உறு
தார்க்கொடி என்றிவை தகைந்து வீங்கின
போர்க்கொடும் தூளிபோய்த் துறக்கம் புக்கன
ஆர்ப்பது துடைப்பது போல ஆடுவ. 7462

கூஎ. எண்ணுறு படைக்கலம் இழக விற்றிடை
நண்ணுறு பொறிகளும் படைக்கு நாயகர்
கண்ணுறு பொறிகளும் கதுவிக் கண்ணகல்
விண்ணுறு மழைஎலாம் கரிந்து வீழ்ந்தலால். 7463

கூஅ. தேர்செலக் கரிசெல நெருக்கிச் செம்முகக்
கார்செலாத் தேர்செலாப் புரவி கால்செலாத்
தார்செலக் கடைசெலாச் சென்ற தானையும்
பார்செலற் கரிதென விசும்பில் பாய்ந்ததால். 7464

கூகூ. ஆயிரம் கோளரி ஆளி ஆயிரம்
ஆயிர மதகரி பூதம் ஆயிரம்
மாஇரு ஞாலத்தைச் சுமப்ப வாங்குவ
சேய்இருஞ் சுடர்மணித் தேர்ஒன் றேறினன். 7465

ஈ. தோமரம் சக்கரம் சூலம் கோல்மழு
நாம்வேல் உலக்கைவாள் நாஞ்சில் தண்டெழு
வாமவில் வல்லியம் கணையம் மற்றுள
சேமவெம் படைஎலாம் சுமந்து சென்றவே. 7466

ஈக. நறைஉடைத் தசும்பொடு நறிதில் வெந்தஊன்
நிறைஉடைச் சகடம்ஆ யிரங்கள் நேர்கொடு
பிறைஉடை எயிற்றவன் பின்பு சென்றன
முறைஉடைக் கைகொடு முடுக ஈட்டுவார். 7467

ஈஉ. ஒன்றல பற்பலர் உதவும் ஊன்தசை
பின்தரு பிலத்திடைப் பெய்யும் ஆறுபோல்
வன்திறல் இருகரம் வாங்கி மாந்தியே
சென்றனன் யாவரும் திடுக்கம் எய்தவே. 7468

ஈஊ. கணந்தரு குரங்கொடு கழிவ தன்றிது
நிணந்தரு நெடுந்தடிக் குலகம் நேருமோ
பிணந்தலைப் பட்டது பெயர்வ திங்கினி
உணர்ந்தது கூற்றம்என் றும்பர் ஓடினர். 7469

ாசு. பாந்தளின் நெடுந்தலை வழுவிப் பாரொடும்
வேந்தென விளங்கிய மேரு மால்வரை
போந்தது போல்பொலன் தேரில் பொங்கிய
ஏந்தலை ஏந்திதழில் இராமன் நோக்கினான். 7470

ாடு. வீணைஎன் றுணரின்அ தன்று விண்தொடும்
சேண்உயர் கொடிஅது வயவெஞ் சீயமால்
காணினும் காலின்மேல் அரிய காட்சியான்
பூண்ஒளி மார்பினன் யாவன் போலுமால். 7471

ாசு. தோள்ஒடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால் நடுவண் நின்றதோர்
தாளுடை மலைகொலாம் சமரம் வேட்டதோர்
ஆள்என உணர்கிலன் ஆர்கொ லாம்இவன். 7472

ாஎ. எழுங்கதி ரவன்ஒளி மறைய எங்கணும்
விழுங்கிய திருள்இவன் மெய்யி னுல்வெரீஇப்
புழுங்கும்நம் பெரும்படை இரியல் போகின்ற
தழுங்கலில் சிந்தையாய் யார்கொ லாம்இவன். 7473

ாஅ. அரக்கன்அவ் உருவொளித் தரியின் சேனையை
வெருக்கொளத் தோன்றுவான் கொண்ட வேடமோ
தெரிக்கிலன் இவ்வுருத் தெரியும் வண்ணம்மீ
பொருக்கென வீடணு புகறி யால்என்றான். 7474

*ாகூ. ஆரியன் இனையகூற அடியிணை இறைஞ்சி ஐய
பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன் எனக்கு முன்னோன்
காரியல் காலன் அன்ன கழல்கும்ப கருணன் என்னுங்
கூரிய சூலத் தான்என் றவன்றிலை கூற லுற்றான். 7475

தவன்துணங் கினரும்வேதத் தலிவரும் உணரும் தன்மைச்
சிவன்உணர்ந் தலரின் மேலைத் திசைமுகன் உணரும் தேவன்
அவன்உணர்ந் தெழுந்த காலத் தசுரர்கள் படுவ தெல்லாம்
இவன்உணர்ந் தெழுந்த காலத் திமையவர் படுவர் எந்தாய்.

*ாஅக. ஆழியாய் இவர் ஆகுவார், ஏழை வாழ்வுடை எம்முனூர்
தாழ்வி லாஒரு தம்பியார், ஊழி காலம் உறங்குவார். 7477

ாஉஉ. கால னுருயிர் காலனூர், காலின் மேல்நிமிர் காலனூர்
மால னுர்கெட வாகையோர், சூல மேகொடு சூடினூர். 7478

தாங்குகொம்பொருநான்குதாள், ஓங்கல்ஒன்றிஈஉம்பர்கோன்
வீங்கும்நெஞ்சன் விழுந்திலான், தூங்கஇன்றுசுழற்றினன்.7479

கழித்த தீயொடு காலியும், பிழிந்து சாறுகொள் பெற்றியான்
அழிந்து நீர்உகும் ஆழிநீர், இழிந்து காலினில் எற்றுவான்.

ஈஅ0. ஊன் உயர்ந்த உரத்தினன், மேல் நிமிர்ந்த மிடுக்கினன்
தான் உயர்ந்த தவத்தினன், வான் உயர்ந்த வரத்தினன். 7481

திறங்கொள் சாரி திரிந்தநாள், கறங்க லாது கணக்கிலான்
இறங்கி னூர்புவி இன்றுகா, றுறங்க லால்உல குய்ந்ததால்

சூலம் உண்டது சூருளோர், காலம் உண்டது கைக்கொள்வான்
ஆலம் உண்டவன் ஆழிவாழ், ஞாலம் உண்டவன் நல்கினன்.

மின்னில் ஒன்றிய-விண் உளோர், முன்னில் என்றவர் முற்றினர்
என்னில்என்றுமவ்எண் இலார், வென்னில்அன்றிவிழித்திலான்

தருமம் அன்றிது தான்செயில், வருங்நமக் குயிர் மாள்வெனு
உருமில் வெய்யவ னுக்குரை, இருமை மேலும் இயம்பினன்.

மறுத்த தம்முனீ வாய்மையால், ஒறுத்தும் ஆவ துணர்த்தினன்
வெறுத்து மாள்வது மெய்எனு, இறுத்து நின்எதிர் எய்தினன்.

ஈஉக. நன்றி தன்று நமக்கெனு, ஒன்று நீதி உணர்த்தினன்
இன்று காலன்முன் எய்தினன், என்றுசொல்லிஇறைஞ்சினன்

ஈஉஉ. என்றவன் உரைத்த லோடும் இரவிசேய் இவனீஈண்டு
கொன்றொரு பயனும் இல்லை கூடுமேல் கூட்டிக் கொண்டால்
நின்றது புரிதும் மற்றிந் நிருதர்கோன் இடரும் நீங்கும்
நன்றிது நினைந்தேன் என்றான் நாயகன் நலனீ தென்றான்.

ஈஉந. ஏகுதற் குரியார் யாரே என்றலும் இலங்கை வேந்தன்
ஆகில்மற் றடிய னேன்சென் றறிவினுல் அவனீ உள்ளம்
சேகறத் தெருட்டி ஈண்டு சேருமேல் சேர்ப்பன் என்றான்
மேகம்ஒப் பானும் நன்று போகெனக் கூறி விட்டான். 7489

ஈஉச. தந்திரக் கடலை நீந்தித் தன்பெரும் படையைச்சார்ந்தான்
வெந்திறல் அவனுக் கையா வீடணன் விரைவின் உன்பால்
வந்தனன் என்னச் சொன்னார் வரம்பிலா உவகை கூர்ந்து
சிந்தையுள் களிக்கின் றான்தன் செறிகழல் சென்னி சேர்ந்தான்

ாஉடு. முந்திவந் தீறைஞ்சி னூனை முகந்துயிர் மூழ்கப் புல்லி
உய்ந்தனை ஒருவன் போனுய் உளனென உவக்கின் றேன்தன்
சிந்தனை முழுதும் சிந்தித் தெளிவிலார் போல மீள
வந்ததென் தனியே என்முன் மழையின்நீர் வழங்குங்கண்ணுன்.

ாஉசு. அவையம்நீ பெற்ற ஆறும் அமரரும் பெறுதல் ஆற்ரு
உவையலோ கத்தில் உள்ள சிறப்புங்கேட் டுவந்த துள்ளம்
கவையரில் அறிவு மிக்காய் காலன்வாய்க் களிக்கின் றேம்பால்
நவையுற வந்த தென்நீ அழுதுண்பாய் நஞ்சுண் பாயோ. 7492

குலத்தியல் பழிந்த தேனும் குமரமற் றுன்னைக் கொண்டே
புலத்தியல் மரபு மாயாப் புண்ணியம் பொருந்தித் றென்னு
வலத்தியல் தோளை நோக்கி மகிழ்கின்றேன் மன்ன வாயை
உலத்தினை திரிய வந்தாய் உளகின்ற துள்ளம் அந்தோ. 7493

அறப்பெரும் துணைவர் தம்மை அடையம்என் றடைந்தனின்னைத்
துறப்பினைத் துணியார் தங்கள் ஆருயிர் துறந்த போதும்
இறப்பெனும் பயத்தை விட்டாய் இராமன்என்பானைப் பற்றிப்
பிறப்பெனும்புன்மைதீர்ந்தாய்என்கொல்நீபெயர்ந்தவண்ணம்.

ாஉசு. அறம்என நின்ற நம்பர்க் கடிமைபெற் றவர்க ளாலே
மறம்என நின்ற மூன்றும் மருங்கற மாற்றி முற்றும்
திறம்என நின்ற தீமை இம்மையே தீர்ந்த செல்வம்
பிறர்மனை நோக்கு வோமை உறவெனப் பெறுதி போலாம்.

ாஎம. நீதியும் தருமம் நின்ற நிலைமையும் புலமை தானும்
ஆதியங் கடவு ளாலே அருந்தவம் ஆற்றிப் பெற்ருய்
வேதியர் தேவன் சொல்லால் விளிவிலா ஆயுப் பெற்ருய்
சாதியின் புன்மை இன்னம் தவிர்ந்திலை போலும் தக்கோய்.

ஏற்றிய வில்லின் யார்க்கும் இறையவன் இராமன் நின்முன்
மாற்றரும் தம்பி நின்முன் மற்றையோர் முற்றும் நின்முர்
கூற்றமும் நின்ற தெம்மைக் கொல்லிய விதியும் நின்ற
தோற்றனம் பக்கல் ஐய வெவ்வலி தொலைய வந்தாய். 7497

ாஎஉ. ஐயநீ அயோத்தி வேந்தற் கடைக்கலம் ஆகி ஆங்கே
உய்கிலை என்னில் மற்றிவ் அரக்கராய் உள்ளோர் எல்லாம்
எய்கணை மாரி யாலே இறந்துபாழ் படுதும் பட்டால்
கையினுல் இறைநீர் நல்கிக் கடன்கழிப் பாரைக் காட்டாய்.

வருவதும் இலங்கை மூதூர்ப் புலேஎலாம் மாண்ட பின்னைத்
திருஉறை மார்ப னேடும் புகுந்தனே என்றும் தீராப்
பொருவருஞ் செல்வந் துய்க்க விரைந்தனே போதி என்றான்
கருமமுண் டுரைப்ப என்றான் உரைஎனக் கழறல் உற்றான்.

இருள்உறு சிந்தை யோர்க்கும் இன்னருள் புரிந்த மன்னன்
அருளும்நீ சேரில் ஒன்றே அபையமும் அளிக்கும் அன்றி
மருள்உறு பிறவிநோய்க்கு மருந்துமாய் மாறிச் செல்லும்
உருள்உறு சகட வாழ்க்கை ஒழித்துவீ டளிக்கும் அன்றே.

எனக்கவன் தந்த செல்வத் திலங்கையும்அரசும்எல்லாம்
நினக்குநான் தந்து மற்றுன் ஏவலின் நெடிது நிற்பன்
உனக்கிதின் உறுதி இல்லே உத்தம உன்பின் வந்தேன்
மனத்துநோய் துடைத்து வந்த மரபையும் விளக்கு வாழி.

போதலோ அரிது போனுல் புகல்இடம் இல்லே வல்லே
சாதலோ சரதம் நீதி அறத்தொடும் தழுவி நின்றாய்
ஆதலான் உனதாம் ஆவி அனுயமே உகுப்ப தென்னே
வேதநூல் மரபுக் கேற்ற ஒழுக்கமோ பிடிக்க வேண்டும்.

தீயவை செய்வர் ஆகில் சிறந்தவர் பிறந்த உற்றூர்
தாயவை தந்தை மார்என் றுணர்வரோ தருமம் பார்ப்பார்
நீஅவை அறிதி அன்றே நினக்குநான் உரைப்ப தென்னே
தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வ துண்டோ.

மக்களைக் குருக்கள் தம்மை மாதரை மற்று ளோரை
ஒக்குமின் உயிர்அன் னுரை உதவிசெய் தாரை யொன்றத்
துக்கமித் தொடர்ச்சி என்று துறப்பரால் துறவு பூண்டார்
மிக்கது கலனே ஆகி வீடுபே றளிக்கும் அன்றே. 7504

தீவினை ஒருவன் செய்ய அவனெடும் திங்கி லாதார்
வீவினை உறுதல் ஐயா மென்மையோ கீழ்மை யோதான்
ஆய்வினை உடையை அன்றே அறத்தினை நோக்கி ஈன்ற
தாய்வினை செய்ய அன்றே கொன்றதோர் தவத்தின் மிக்கான்.

சாமி. கண்நுதல் தீமை செய்ய கமலத்துள் முளேத்த தாதை
அண்ணல்தன் தலேயின் ஒன்றை அறுக்கஅன் றமைந்தான் அன்றே
புண்உறு புலவு வேலோப் பழியொடும் பொருந்திப் பின்னை
எண்ணுறு நரகம் எய்த அறிஞரும் இயற்று வாரோ. 7506

உடலிடைத்தோன்றிற் றிருவ்வை அறுத்ததில் உதிரம்ஊற்றிச்
சுடர்உறச் சுட்டு வேரூர் மருந்தினல் துயரம் தீர்வர்
கடலிடைக் கோட்டம் தோய்த்துக் கழியது கருமம் அன்றுல்
மடல்உடை அலங்கல் மார்ப மதிஉடை யோர்க்கு மன்னோ.

ாசஉ. காக்கலாம் நும்முன் தன்னை என்னினும் கண்டதில்லை
ஆக்கலாம் அறத்தை வேறே என்னினும் ஆவ தில்லை
தீக்கெலாம் கொண்ட தேவர் சிரிக்கலாம் செருவில் ஆவி
போக்கலாம் பின்னை நின்ற நரகன்றிப் பொருந்திற்றுண்டோ.

ாசஙு. மறங்கிளர்உலகை வென்று வாழ்ந்திலைமண்ணின்மேலாய்
இறந்திலை இன்று சாறும் இளமையும் வறிதே ஏக
உறங்கினை என்ப தல்லால் உற்றதொன் றுளதோ எண்ணி
அறங்கெட உயிரை நீத்து மேற்கொள்வான் அமைந்த தையா.

ாசச. திருமறு மார்பன் நல்க அனந்தலும் தீர்ந்து செல்வம்
பெருமையும் எய்தி வாழ்தி ஈறிலா நாளும் பெற்றுய்
ஒருமையே அரசு செய்வாய் உரிமையும் உனதே ஒன்றும்
அருமையே இவற்றின் இல்லைக் காலமும் அடுத்த தையா. 7510

ாசஞு. தேவர்க்குந் தேவன்நல்க இலங்கையில்செல்வம்பெற்றுல்
ஏவர்க்கும் சிறியை அல்லை யார்உனை நலியும் ஈட்டார்
மூவர்க்கும் முதலேஅன மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்கும் பிறந்து நின்றுர் காகுத்தன் வேடங் காட்டி. 7511

ாசசு. உன்மக்கள் ஆகி உள்ளார் உன்னெடும் உதையம்செய்த
என்மக்கள் ஆகி உள்ளார் இக்குடிக் கிறுதி சூழ்ந்தான்
தன்மக்க ளோடும் ஐயா தலையொடும் திரிவர் அன்றே
புன்மக்கள் தருமம் பூண்டார் புலமக்கள் தருமம் பூணுர்.

ாசஎ. முனிவரும் கருணை வைப்பர் மூஉல கத்தும் தோன்றி
இனிவரும் பகையும் இல்லை ஈறுண்டென் றிரங்கல் வேண்டாம்
துனிவரும் செறுநர் ஆன தேவரே துணைவர் ஆவார்
கனிவருங் காலத் தையா பூக்கொய்யக் கருத லாமோ. 7513

வேதநா யகனே என்னைக் கருணையால் வேண்டி விட்டான்
காதலால் உன்மேல் வைத்த கருணையால் தருமம் ஈதே
அதலால் அவனைக் காண அறத்தொடும் திறம்பா தையா
போதுவாய் ஆகி என்னுப் பொலன்கழல் இரண்டும்பூண்டான்.

ாசகூ. தும்பையந்தொடையல்மாலைச் சுடர்முடிபடியில்தோயப்
பம்புபொன்கழல்கள்கையால்பற்றினன்புலம்பும்பொன்தோள்
தம்பியை எடுத்து மார்பில் தழுவித்தன் தறுகண் ணோடும்
வெம்புண்நீர் சொரிய நின்றான் இனையன விளம்பல் உற்றான்.

ாரும்.நீர்க்கோலவாழ்வைநச்சிநெடி துநாள்வளர்த்துப்பின்னைப்
போர்க்கோலம்செய்துவிட்டாற் குயிர்கொடாதங்குபோந்தென்
தார்க்கோல மேனி மைந்தா என்துயர் தவிர்த்தி ஆயில்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதின் என்றான். 7516

ாருக. மலரின்மேல் இருந்தவள்ளல் மழுவலான் வரத்தினுல்நீ
உலகிலாத் தருமம் பூண்டாய் உலகுள்ள தனையும் உள்ளாய்
தலைவன்நீ உலகுக் கெல்லாம் உனக்கது தக்க தேயால்
புலைஉறு மரணம் எய்தல் எமக்கது புகழ தேயால். 7517

ாருஉ. கருத்திலா இறைவன் தீமை கருதினுல் அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகில் அன்றே திருத்தலாம் தீரா தென்னில்
பொறுத்துறு பொருள்உண்டாமோ பொருதொழிற் குரியராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா. 7518

தும்பையந் தொடையல்வீரன் சுடுசரம் துணிப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன்மூன் றுலகை ஆண்டான்
தம்பியை அன்றி மாண்டு கிடப்பனே தமையன் மண்மேல்.

ாருச. அனைஇன்றி உயர்ந்த வென்றி அஞ்சினர் நகைய தாகப்
பிணைஒன்று. கண்ணுள் பங்கன் பெருங்கிரி நெருங்கப் பேர்த்த
பணைஒன்று திரள்தோள் காள பாசத்தால் பிணிப்பக் கூசித்
துணைஇன்றிச் சேரல் நன்றே தோற்றுழல் கூற்றின் சூழல்.

ாருரு. செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தேரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ டையா
கும்பிட்டு வாழ்கி லேன்நான் கூற்றையும் ஆடல்கொண்டேன்.

ாருசு. அனுமனை வாலிசேயை அருக்கன்சேய் அவனை அம்பொன்
தனுஉடை அவரை வேழூர் நீலனைச் சாம்பன் தன்னைக்
கனிதொடர் குரங்கின் சேனைக் கடலையும் கடந்து மூடும்
பனிதுடைத் துலகம் சுற்றும் பருதியில் திரிவன் பார்த்தி.

ாநுஎ. ஆலங்கண் டஞ்சி யோடும் அமரர்போல் அரிகள் ஓடச்
சூலங்கொண் டோடி வேலை தொடர்வதோர்தோற்றம்தோன்ற
நீலங்கொள் கடலும் ஓட நெருப்பொடு காலும் ஓடக்
காலங்கொள் உலகும் ஓடக் கறங்கெனத் திரிவன் காண்டி.

ாருஅ. செருவிடை அஞ்சார் வந்தென் கண்ணெதிர் சேர்வர் ஆகில்
கனவரை கனக்கக் குன்றம் என்னலாம் காட்சி யோராம்
இருவரும் நிற்க மற்றங் காருளார் அவரை எல்லாம்
ஒருவரைத் திரிய ஓட்டேன் உயிர்சுமந் துலகில் என்றான்.

தாழ்க்கிற்பாய் அல்லை என்சொல் தலைக்கொளத் தக்க தென்று
கேட்கிற்பாப் ஆகில் எய்தி அவரோடும் கெழீஇய நட்பை
வேட்கிற்பாய் இனிஓர்மாற்றம் விளம்பினுல்விளைவுண்டென்று
சூழ்க்கிற்பாய் அல்லையாரும் தொழுகிற்பாய்என்னச் சொன்னன்.

ாசுஎ. போதுநீ ஐய பின்னர் பொன்றினுர்க் கெல்லாம் நின்ற
வேதியர் தேவன் தன்னை வேண்டினை பெற்று மெய்மை
ஆதிநூல் மரபி னுலே கடன்களும் ஆற்றி ஏற்ற
மாதுயர் நரகம் நண்ணு வண்ணமும் காத்தி மன்னோ. 7526

ாசுக. ஆகுவ தாகும் காலத் தாவதும் அழிந்து சிந்திப்
[1]போகுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்
சேகர உணர்ந்தோர் நின்னில் யாருளர் வருத்தம் செய்யா
தேகுதி எம்மை நோக்கி இரங்கலை என்றும் உள்ளாய். 7527

ாசுஉ. என்றவன் தன்னை மீட்டும் எடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி ஏங்கி நீர்பொழி கண்ணின் நோக்கி
இன்றெரு டவிர்ந்த தன்றே உடன்பிறப் பென்று விட்டான்
வென்றிவெந் திறலி னுனும் அவன் அடித்தலத்தின் வீழ்ந்தான்.

வணங்கினுன் வணங்கிக் கண்ணும் வதனமும் மனமும் வாயும்
உணங்கினுன் வயிர யாக்கை ஒடுங்கினுன் உரைசெய் தின்னும்
பிணங்கினுல் ஆவதில்லைப் பெயர்வதென் றுணர்ந்து பேர்ந்தான்
குணங்களால்உயர்ந்தான் சேனைக் கடலாலாம் கரங்கள் கூப்ப.

கள்ளநீர் வாழ்க்கை யோரைக் கைவிட்டுக் காலும் விட்டான்
பிள்ளமை தொடர்ந்தான் என்னுப் பேதுறு நிலையன் ஆகி
வெள்ளநீர் வேலை தன்னுள் வீழ்ந்தநீர் வீழ வெங்கண்
உள்ளநீர் எல்லாம் மாறி உதிரநீர் ஒழுக நின்றான். 7530

1 [பிரதி] போவதும் அயலே.

ாசுடு. எய்திய நிருதர் கோனும் இராமனே இறைஞ்சி எந்தாய்
உய்திறம் உடையார்க் கன்றே அறன்வழி ஒழுகும் உள்ளம்
பெய்திறம் எல்லாம் பெய்து பேசினன் பெயரும் தன்மை
செய்திலன் குலத்து மானம் தீர்ந்திலன் சிறிதும் என்றான்.

கொய்திறல் சடையின் கற்றைக் கொந்தளக் காலக் கொண்டல்
நொய்தினில் துளக்கி ஐய நுன்எதிர் நும்முன் னேனே
எய்திறத்துணித்துவீழ்த்தல் இனிதன்றென்றியானசொன்னேன்
செய்திறம் இனிவே றில்லை விதியையார் தீர்க்க வல்லார்.

எனஇனி துரைக்கும் காலை இராக்கதச் சேனை என்னும்
கனைகடல் கவியின் தானைக் கழியினை வளைந்து கட்டி
முனைதொழில் முயன்ற தாக மூவகை உலகும் முற்றத்
தனிநெடும் தூளி ஆர்க்க ஆர்த்தில பறவை தள்ளி. 7533

ாசுஅ. ஓடின புரவி வேழம் ஓடின உருளைத் திண்தேர்
ஓடின மலைகள் ஓட ஓடின உதிரப் பேரா
றாடின கவந்த பந்தம் ஆடின அலகை மேன்மேல்
ஆடின பதாகை ஓங்கி ஆடின பறவை அம்மா. 7534

ாசுக. மூளையும் தசையும் என்புங் குருதியும் நிணமும் மூரி
வாளொடும் குழம்பு பட்டார் வாள்எயிற் றரக்கர் இற்றூர்
ஆள்அழி குருதி வெள்ளத் தழுங்கின கவிகள் அம்பொன்
தோளொடு மரமும் கல்லும் சூலமும் வேலும் தாக்க. 7535

ாஎம. எய்தனர் நிருதர் கல்லால் எறிந்தன கவிகள் ஏந்திப்
பெய்தனர் அரக்கர் பற்றிப் பிசைந்தனர் அரிகள் பின்றூர்
வைதனர் யாதுந் தாழா வதைத்தனர் வான ரேசர்
செய்தனர் பிறவும் வெம்போர் திகைத்தனர் தேவர் எல்லாம்.

ாஎக. நீரினை ஓட்டும் காற்றும் காற்றெதிர் நிற்கும் நீரும்
போரினை யாவம் என்னப் பொருகின்ற பூசல் நோக்கித்
தேரினை ஓட்டி வந்தான் திருவினை தேவர் தங்கள்
ஊரினை நோக்கா வண்ணம் உதிரவே நோக்கி உள்ளான்.

ாஎஉ. ஊழியில் பட்டகாலின் உலகங்கள் பட்டால் ஒப்பப்
பூழியில் பட்டுச் செந்நீர் புணரியில் பட்டுப் பொங்கும்
சூழியில் பட்ட நெற்றிக் களிற்றொடும் தொடர்ந்த தேரின்
ஆழியில் பட்ட தன்றே அவனியில் பட்ட தெல்லாம். 7538

குன்றுகொண் டெறியும்பாரில் குதிக்கும்வெங் குரங்கைப்பற்றி
ஒன்றுகொண்டொன்றைஎற்றும்உதைக்கும்விட்டுழக்கும்வாரித்
தின்றுதின் றுமிழும் அள்ளிச் சிரங்களூத்திருகும் தேய்க்கும்
மென்றுமென் றுமிழும் வீர வசந்தனைப் பிசைந்து பூசும்.

7539. வாரினன்முகக்கும்கையால்மண்ணிடை அடிக்கும் வாரி
நீரிடைக் குவிக்கும் அப்பால் நெருப்பிடைச் சுரிக்க நீட்டுந்
தேரிடை எற்றும் எட்டுத் திரையினும் செல்லச் சிந்துந்
தூரிடை மரத்து மோதும் மலைகளில் புடைக்கும் சுற்றி. 7540

7540. பறந்தனர் அமரர்அஞ்சிப் பல்பெரும் பிணத்தைப்புல்லி
நிறைந்தன பறவை எல்லாம் நெடுந்திசை நான்கும் நான்கும்
மறைந்தன பெருமை தீர்ந்த மலைக்குலம் வற்றி வற்றிக்
குறைந்தன குரங்கு வெள்ளம் கொன்றனன் கூற்றங் கூச.

7541. மற்றிலை ஒருவன் மேலோர் மரனெடு கற்கள் வீசப்
பெற்றில வாகும் என்றே இன்றெடும் பெறுவ தாமே
அற்றன ஆகும் என்னு அரிகுலத் தலைவர் ஆற்றி
எற்றின எறிந்தவல்லாம் இணைநெடும் தோளில் ஏற்றான்.

7542. கல்லொடு மரனும் வேரும் கட்டையும் காலில் தீண்டும்
புல்லொடும் பிறவும் எல்லாம் பொடிப்பொடி ஆகிப் போன
இல்லைமற் றெறியத் தக்க எற்றுவ சுற்றும் என்னைப்
பல்லொடு பல்லும் மென்று பட்டன குரங்கு முட்டி. 7543

7543. குன்றின்வீழ் குருவி என்ன குழாம்கொளக் குறித்துக் கூடிச்
சென்றுமேல் வீழ்ந்து பற்றிச் சிந்தலந் தேயக் குத்தி
வன்திறல் எயிற்றுல் கௌவி வள்ளுகிர் மடிய அள்ளி
ஒன்றும்ஆ கின்ற தில்லை என்றிரிந் தோடிப் போன. 7544

7544. மூலமே மூழ்கி மண்ணில் கிடந்ததோர் பொருப்பை முற்றும்
காலமே எழுந்த கால்போல் கையினுல் கடிதில் வாங்கி
நீலன்மேல்நிமிர்ந்த தாங்கோர் நெருப்பெனத்திருப்பிவிட்டான்
சூலமே கொண்டு நூறி முறுவலும் தோன்ற நின்றான். 7545

7545. பெயர்ந்தொரு சிகரம் தேடில் அச்சமாய்ப் பிறக்கும் என்னைப்
புயங்களே படைகள் ஆகத் தோளெதிர் ஓடிப் புக்கான்
இயங்களும் கடலும் மேகத் திடிகளும் இடிய யாரும்
பயங்கொளக் கரங்கள் ஓச்சிக் குத்தினன்.தைத்தான்பல்கால்.

ாஅக. கைத்தலம் சலித்துக் காலும் ஒய்ந்துதன் கருத்து முற்றி
நெய்த்தலை அழலில் காந்தி எரிகின்ற நீலன் தன்னை
எய்த்துயிர் பதைப்ப அன்னான் எற்றினான் இடத்துக் கையால்
மெய்த்தலைச் சூலம் ஓச்சான் வெறுங்கையான் என்று வெள்கி.

ாஅஉ. ஆண்டது நோக்கி நின்ற அங்கதன் ஆழி தன்னுள்
நீண்டதோர் நெடுந்திண் குன்றம் நிலமுது காற்ற வாங்கி
மாண்டனன் அரக்கன் தம்பி என்றுல கேழும் வாழ்த்தத்
தூண்டினன் அதனை அன்னான் ஒருதனித் தோளின் ஏற்றான்.

ாஅங. ஏற்றபோ தனைய குன்றம் எண்ணரும் துகள தாகி
வீற்றுவீற் றுகி ஓடி விழுதலும் கவியின் வெள்ளம்
ஊற்றமே தெமக்கென் றஞ்சி உடைந்தது குமரன் உற்ற
சீற்றமும் தானும் நின்றான் பெயர்ந்திலன் சென்ற பாதம்.

இடக்கையால் அரக்கன் ஆண்டோர் எழுநூறு வயிரத் தண்டு
தடுக்கலாம் தரத்த தன்றும் வலியது கடிதில் வாங்கி
மடக்குவாய் ஆவி என்னு வீசினன் அதனை மைந்தன்
தடக்கையால் பிடித்துக் கொண்டான்வானவர் தன்னை வாழ்த்த.

ாஅடு. பிடித்தது சுழற்றி மற்றப் பெருவலி அரக்கன் தன்னை
இடித்துரும் ஏறு குன்றத் தெரிமடுத் தியங்கு மாபோல்
அடித்துயிர் குடிப்பன் என்னு அனல்விழித் தார்த்து மண்டிக்
கொடித்தடம் தேரின் முன்னர்க் குதித்தெதிர் குதித்து நின்றான்.

ாஅசு. நின்றவன் தன்னை நோக்கி நெருப்புக விழித்து நீஇப்
பொன்றவந் தடைந்த தானைப் புரவலன் ஒருவன் தானை
அன்றவன் மகனை எம்மனோர் அனல்மடுத் தார்க்கர் தம்மை
வென்றவன் தானை ஆரோ சொல்லுதி விரைவில் என்றான்.

ாஅள. நும்முனை வாலில் சுற்றி நோன்திரை நான்கும் தாவி
மும்முனை நெடுவேல் அண்ணல் முளரிஅம் சரணம் சாழ்ந்த
வெம்முனை வாலி மைந்தன் நின்னையும் வாலில் வீக்கித்
தெம்முனை இராமன் பாதம் வணங்கிடச் செல்வன் என்றான்.

உந்தையை மறைந்தோர் அம்பால்உயிர்உண்டஉ தவியோர்க்குப்
பந்தனை பகையை வென்று காட்டலே என்னில் பாரோர்
நிந்தனை நின்னைச் சொல்வார் நல்லது நினைந்தாய் நேரே
வந்தனை புரிவர் அன்றே வீரராய் வசையில் தீர்ந்தார். 7554

ஈஅகூ. இத்தலை வந்த என்னை இராமன்பால் வாலின் சுற்றி
வைத்தலை நுதலி அன்று வானவர் மார்பில் தைத்த
முத்தலை அயிலின் உச்சி முதுகுற மூரி வால்போற்
கைத்தலம் காலும் தூங்கக் கிடத்தலைக் கருதி என்றான்.

ஈகூஎ. அற்றவன் உரைத்த லோடும் அனல்விழித்தசனிகுன்றத்
துற்றது போலும் என்ன ஒலிபட உலகம் உட்கப்
பொற்றடந் தோளின் வீசிப் புடைத்தனன் பொறியில் சிந்தி
இற்றது நூறு கூரும் எழுமுனை வயிரத் தண்டு. 7556

ஈகூக. தண்டிறத் தடக்கை ஓச்சித் தழுவியத் தறுகண்ணினைக்
கொண்டிறப் புறவன் என்னுத் தரையினில் குளிக்கின் முனைப்
புண்டிறப் போர்வன் யாக்கை கையினுல் புகைந்து குத்த
மண்டிறப் பெய்த வீழ்ந்தான் மாருதி இமைப்பின் வந்தான்.

மறித்தவன் அவனைத் தன்கை வயிரவான் சூலம் மார்பில்
குறித்துற எறியல் உற்ற காலையில் குன்றம் ஒன்று
பறித்தவன் எற்றி முற்றப் பரப்பிடைப் பாகம் உள்ளே
செறித்தன சுரிக்க வீசித் தீர்த்தனை வாழ்த்தி ஆர்த்தான்.

ஈகூங. தலையினில் தைத்து வேறோர் தலைஎன நின்ற தள்ளா
மலையினைக் கையின் வாங்கி மாருதி வயிர மார்பின்
உலையுற வெந்த பொன்மேல் கம்மியர் கூடம் ஒப்பக்
குலையுறு பொறிகள் சிந்த வீசித்தோள் கொட்டி ஆர்த்தான்.

ஈகூச. அவ்வயின் வாலி சேயை அரிக்குல வீரர் அஞ்சார்
வவ்வினர் கொண்டு போனார் மாருதி வாலை முற்றும்
கவ்விய தனைய தாங்கோர் நெடுவரை கடிதில் வாங்கி
எவ்வம்இல் ஆற்ற லானை நோக்கினின் றினைய சொல்வான்,

எறிகுவன் இதனை நின்மேல் இமைப்புறும் அளவில் ஆற்றுய்
மறிகுவை அன்றி வல்லாய் மாற்றினின் முற்றில் வன்மை
அறிகுவர் எவரும் பின்னை அமர்நின்னை டமர்தல் செய்யேன்
பிறிகுவன் உலகில் நீயோ பெரும்புகழ் பெறுதி என்றான்.

ஈகூசு. மாற்றம துரைப்பக் கேளா மலைமுழை திறந்த தென்னக்
கூற்றுறழ் பகுவாய் விள்ள நகைத்துநீ கொணர்ந்த குன்றை
ஏற்றனன் ஏற்ற காலத் திறைஅதற் கிடைவன் ஆகில்
தோற்றனன்உனக்கென்வன்மைசுருங்கும்என்றரக்கன்சொன்னான்.

ாகூள. மாருதி வல்லே ஆகில் நில்லடா மாட்டாய் ஆகில்
பேருதி உயிர்கொண் டென்று பெருங்கையால் நெருங்க விட்ட
காருதிர் வயிரக் குன்றைக் காத்திலன் தோளில் ஏற்றான்
ஓருதிர் நூறு கூறாய் உக்கதெவ் உலகும் உட்க. 7563

இளக்கம் ஒன் றின்றி நின்ற இயற்கைபார்த் தினைதா ற்றல்
அளக்குறற் பாலும் ஆகாக் குலவரை அமரின் ஆற்றுத்
துளக்குறு நிலையான் அல்லன் சுந்தரத் தோளன் வாளி
பிளக்குமேல் பிளக்கும் என்னு மாருதி பெயர்ந்து போனான்.

ாகூக. எழுபது வெள்ளத் துள்ளார் இறந்தவர் ஒழிய யாரும்
முழுவதும் ஆள்வர் இன்றே இவன்வலத் தமைந்த முச்சூல்
கழுவினில் என்று வானோர் கலங்கினர் நடுங்கி னரால்
பொழுதினி உலகம் எங்கும் திரியும்என் றுள்ளம் பொங்கி.

உா. தாக்கினர் தாக்கி னர்தம் கைத்தலம் சலித்த தல்லால்
நூக்கினர் இல்லை ஒன்றும் நோவுசெய் தாரும் இல்லை
ஆக்கினர் களத்தின் ஆங்கோர் குரங்கின தடியும் இன்றிப்
போக்கினன் ஆண்மை யோடும் புதுக்கினன் புகழை அன்னான்.

உாக. சங்கொத்த குரங்கு சாயத் தாபதர் என்னத் தக்கார்
இங்குத்தான் அல்ல ரோதான் வேறுமோர் இலங்கை உண்டோ
எங்குத்தான் உற்றார்என்றெ டுத்தழைத் திமையோர் எஞ்சத்
தங்கத்தோள் கொட்டி ஆர்த்தான் கூற்றையும் தூணுக்கம் கொண்டான்.

உாஉ. பறந்தலை அதனின் வந்த பலபெருங் கவியின் பண்ணை
இறந்தது கிடக்க நின்ற திரிதலின் யாரும் இன்றி
வறந்தது நோக்கி வந்து வளர்ந்தது மகர வேலை
குறைந்தது வானுற் றோதம் கிளர்ந்துமீக் கொண்ட தென்ன.

*உாஙு. குன்றும் கற்களும் மரங்களும் குறைந்தன குரங்கின்
வென்றி யம்பெரும் சேனைஓர் பாதியின் மேலும்
இன்று தேய்ந்ததென் றுரைத்தலும் அமரரும் உவப்ப
சென்று தாக்கினன் ஒருதனிச் சுமித்திரை சிங்கம். 7569

உாச. நாண் எறிந்தனன் சிலையினை அரக்கியர் நகுபொற்
பூண் எறிந்தனர் படியிடை இடிபொடித் தென்னச்
சேண் எறிந்தெழு திசைசெவி டெறிந்தன அலகை
தூண் எறிந்தன கைவிடுத் தெறிந்தன துணங்கை. 7570

உரு. இலக்கு வன்கடி தேவின திரைபெரு திரைப்பச்
சிலைக்க டுங்கணை நெடுங்கணம் சிறையுடன் செல்ல
உலைக்கொ டுங்கனல் வெதும்பின வாவெரிந் தோடிக்
குலக்க யங்களில் குளித்தன குடித்தன குருதி. 7571

உசு. அலை படைத்தவாள் அரக்கரைச் சிலைகழுத் தரியச்
சில சிரத்திணைத் துணித்தவை திசைகொண்டு செல்லக்
கொலை படைத்தவெங் களத்தினில் விழுந்தஅக் கொடியோர்
தலை படைத்தன போன்றன வால்நெடும் சரங்கள். 7572

உஎ. உருப் பதங்களை ஒப்பன சிலகணை ஓடைப்
பொருப் பதங்களை உருவிமற் றப்புறம் போன
செருப் பதம்பொரு தரக்கர்தம் தலைசிந்தி உடலாம்
பருப் பதங்கள்புக் கொளித்தன முழைபுகு பாம்பின். 7573

உஅ. மின் புகுந்தன பல்குழு வாம்என மிளிரும்
பொன் புகுந்தன வடிம்பின கடுங்கணை போவ
முன் புகுந்தவர் முகத்துக்கும் கடைக்குழை முதுகின்
பின்பு ரின்றவர் மிடற்றிற்கும் விசைஒக்கும் பிறழா. 7574

உஆ. போர்த்த பேரியின் கண்ணன காளத்தின் பொகுட்ட
ஆர்த்த வாயன கையன ஆனையின் முகத்த
ஈர்த்த தேரன இவுளியின் தலையன எவர்க்கும்
பார்த்த கண்ணன தலத்தன இலக்குவன் பகழி. 7575

உஇ. மருப்பி ழந்தன களிறெலாம் வால்செவி இழந்த
நெருப்பு கும்கண்கள் இழந்தன நெடுங்கரம் இழந்த
செருப்பு கும்கடுங் காத்திரம் இழந்தன சிகரப்
பொருப்பு ருண்டன வாம்எனத் தலத்திடை புரண்ட. 7576

உஈ. பல்ல வக்கணை படப்படு புரவிகள் பலகால்
வில்லு டைத்தலை வாளொடும் சூதரை வீழ்த்த
எல்லை உற்றசெங் குருதியின் ஈர்ப்புண்ட தல்லால்
செல்ல கிற்றில ரின்றில கொடிநெடும் தேர்கள். 7577

உஉ. நிரந்த ரந்தொடை நெகிழ்த்தலில் திசைஎங்கும்நிறையும்
சரந்த லைப்படத் தலைப்பட மயங்கின சாய்ந்த
உரந்த லத்துற உளைத்தலாற் பிழைத்தில ஒண்பொற்
குரந்த லத்தினும் விசும்பினும் மிதித்தில குதிரை. 7578

உகஙு. பேழை ஒத்தகல் வாயன்ன பேய்க்கணம் உகக்கும்
மூழை ஒத்தன கழுத்தற வீழ்ந்தன முறைசால்
ஊழை ஒத்தன ஒருகணை தைத்தலின் உதிரத்
தாழி ஒத்தபேர் உததியின் மிதப்பன தலைகள். 7579

உகச. ஓட்டி நாயகன் வென்றிநாட் குறித்தொளிர் முனைகள்
அட்டி வைத்தன பாலிகை நிகர்த்தன அழிந்து
நட்ட வாம்என வீழ்ந்தன துடிகளின் நடுவண்
வட்ட வாய்களின் வதிந்தன வருணசா மறைகள். 7580

உகடு. எரிந்த வெங்கணை நெற்றியில் படுதலின் யானை
அரிந்த அங்குசத் தங்கையன் கல்வியின் அமையா
திரிந்த வேகத்தின் பாரங்கள் தீர்ந்தன செருநேர்
புரிந்து வானரத் தானையில் புக்கன புயலில். 7581

உகசு. வேனி லான்அன்ன இலக்குவன் கடுங்கணை விலக்க
மான வாள்எயிற் றரக்கர்தம் படைக்கல வாரி
போன போயின திசைதொறும் பொறிக்குலம் பொடிப்ப
மீனை லாம்உடன் விசும்பினின் றுதிர்ந்தென வீழ்ந்த. 7582

உகள. கரங் குடைந்தன தொடர்ந்துயர் கொய்யுளைச் கடுமாக்
குரங் குடைந்தன வெரிணுறக் கொடிநெடுங் கொற்றத்
தரங் குடைந்தன அணிநெடும் தேர்க்குலம் தகர்ந்த
வரங் குடைந்தன அயில்நெடு வாளிகள் அறுப்ப. 7583

உகஅ. துரக்கு மெய்யுணர் விருவினை கூளஎனும் சொல்லில்
கரக்கும் வீரத்தைத் தீமையே எனும்இது கண்டோம்
இரக்கம் நீங்கினர் அறத்தொடு திறம்பினர் எனினும்
அரக்கர் ஆக்கையை அரம்பையர் தழுவினர் விரும்பி. 7584

உகக. மறக்கொ டுந்தொழில் அரக்கரும் மறக்கிலாமழைபோல்
நிறக்கொ டுங்கணை நெருப்பொடு நிகர்வன நிமிர
இறக்கம் எய்தினர் யாவரும் எய்தினர் என்னில்
துறக்கம் என்பதில் பெரியதொன் றுளதெனச் சொல்லேம்.

உஉம. ஒருவ ரைக்கரம் ஒருவரைச் சிரமற் றங்கொருவர்
குரைக ழல்துணைத் தாளிணை பிறமற்றும் கொளலால்
விரவ லர்ப்பெரு வறுமைய ஆயின இவ்வே
றிரவு கற்றன போன்றன இலக்குவன் பகழி. 7586

உஉக. சிலவ ரைச்சிரம் சிலவ ரைச்செவி சிலர்நாசி
சிலவ ரைக்கரம் சிலவரைக் கண்கொளும் செயலால்
நிலவ ரைத்தரும் பொருள்வழித் தண்தமிழ் நிரப்பும்
புலவர் சொல்துறை புரிந்தன போன்றன சரங்கள். 7587

உஉஉ. அறத்தின் இன்னுயிர் அனையவன் கணைபட அரக்கர்
இறத்தும் இங்கிறை நிற்பின்என் றிரியலின் மயங்கித்
திறத்தி றம்படத் திசைதொறும் திசைதொ றும் சிந்திப்
புறத்தின் ஓடினர் பொன்றினர் குருதியே போல. 7588

உஉங. செருவில் மாண்டவர் பெருமையும் இலக்குவன் செய்த
வரிவில் ஆண்மையும் நோக்கிய புலத்தியன் மருமான்
திரிபு ரம்செற்ற தேவனும் இவனுமே உலகில்
ஒருவி லாளர்என் றுயிரக் கால்எடுத் துரைத்தான். 7589

உஉச. படர்நெ டுங்கொடித் தேர்ஒன் று திசைதொறும் பாகர்
கடவு கின்றது காற்றினும் மனத்தினும் கடிய
அடல்வ யங்கொள்வெஞ் சீயம்நின் றுர்க்கின்ற தம்பொன்
வடபெ ருங்கிரி புரைவதொன் றேட்டினன் வந்தான். 7590

உஉடு. துளைகொள் வாணுகத்தொடர்நெடும்தேர்மிசைத்தோன்றி
வளைகொள் வெள்ளெயிற் றரக்கன்வெஞ்செருத்தொழில்மலையக்
கிளைகொ ளாதிகல் என்றன்ன மாருதி கிடைத்தே
இளைய வள்ளலே ஏறுதி தோள்மிசை என்றான். 7591

உஉசு. ஏறி னன்இளங் கோளரி இமையவர் ஆசி
கூறி னர்எடுத் தார்த்தது வானரக் குழுவும்
நூறு பத்துடைப் பத்தியின் நொறில்பரி பூண்ட
ஆறு தேரினும் அகன்றன அனுமன்தன் தடந்தோள். 7592

உஉஎ. தன்னில் நேர்பிறர் தான்அல தில்லவன் தோள்மேல்
துன்னு பேரொளி இலக்குவன் தோன்றிய தோற்றம்
பொன்னின் மால்வரை வெள்ளியங் கிரியின்மேல் பொலிந்த
தென்னு மாறின்றிப் பிறிதெடுத் தியம்புவ யாதோ. 7593

உஉஅ. ஆங்கு வீரனோடமர்செய்வான் அமைந்தவான் அரக்கன்
தாங்கு பல்கணைப் புட்டிலும் தகைபெறக் கட்டி
வீங்கு தோள்வலிக் கேய்வது விசும்பில்வில் வெள்ள
வாங்கி னுன்நெடு வடவரை புரைவதோர் வரிவில். 7594

உஉக. இராமன் தம்பிமீ இராவணன் தம்பிநான் இருவோம்
பொராமின் றேம்இது காணிய வந்தனர் புலவர்
பராவும் தொல்செரு முறைவலிக் குரியன பகர்ந்து
விராவு நல்அமர் விலக்குதும் யாம்என விளம்பா. 7895

உஎம. பெய்த வத்தின்ஓர் பெண்கொடி எம்முடன் பிறந்தாள்
செய்த குற்றம்ஒன் றில்லவள் நாசிவெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ மற்றவள் கூந்தல்தொட் டீர்த்த
கைத லத்திடைக் கிடத்துவன் காக்குதி என்றான். 7896

உஎக. அல்லி னுல்செய்த நிறத்தவன் அணையது பகர
மல்லினுல் செய்த புயத்தவன் மாற்றங்கள் நும்பால்
வில்லி னுல்சொல் வதல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லி னுல்சொலக் கற்றிலம் யாம்எனச் சொன்னான்.

உஎஉ. வீண் இரண்டுகூ றுய்து பிளந்தது வெற்பு
மண் இரண்டுறக் கிழிந்ததென் றிமையவர் மறுகக்
கண் இரண்டினும் தீயுகக் கதிர்முகப் பகழி
எண் இரண்டினே டிரண்டுகோத் தொருதொடை எய்தான்.

உஎந. கொம்பு நான்குடைக் கொலிக்கரி கும்பத்துட் குளித்த
உம்பர் ஆற்றலை ஒதுக்கிய உருமினில் செலல
வெம்பு வெஞ்சினத் திராவணன் தம்பிமேல் விட்ட
அம்பு நான்கினுல் பத்தினே டெட்டையும் அறுத்தான். 7899

உஏச. அறுத்த காலையில் அரக்கனும் அமரரை நெடுநாள்
ஒறுத்த தாயிரம் உருவது திசைமுகன் உதவப்
பொறுத்த தாங்கொரு புகர்முகக் கடுங்கணைப் புத்தேள்
இறுத்தி மற்றிது வல்லையேல் என்றுகோத் தெய்தான். 7900

உஏடு. புரிந்து நோக்கிய திசைதொறும் பகழியின் புயலால்
எரிந்து செல்வதை நோக்கிய இரமனுக் கிளையான்
தெரிந்து மற்றது தன்னைஓர் தெய்வவெங் கணையால்
அரிந்து வீழ்த்தலும் ஆயிரம் சரங்களும் அற்ற. 7901

உஏசு. ஆறி ரண்டுவெங் கடுங்கணை அனுமன்மேல் அழுத்தி
ஏறு வெஞ்சரம் இரண்டிளங் குமரன்மேல் ஏற்றி
நூறும் ஐம்பதும் ஓர்தொடை தொடுத்திதாரு நொடியில்
மாறு திக்கையும் விசும்பையும் மண்ணையும் மறைத்தான். 7902

உஎ. மறைத்த வாளிகள் எவற்றையும் அவற்றினுல் மாற்றித்
துறைத்த லந்தொறும் தலந்தொறும் நின்றுதேர் சுமக்கும்
பொறைக்க மைந்தவெங் கரிஅரி ஆளிமாப் பூதம்
திறத்தி றம்படத் துணித்தவன் தேரையும் சிதைத்தான். 7903

உஅ. தேர ழிந்தது செங்கதிர்ச் செல்வனைச் சேர்ந்த
ஊர ழிந்தது போல்துரந் தூர்பவர் உலந்தார்
நீர ழிந்திலர் நெடுமழைக் குழாத்திடை நிமிர்ந்த
பார வெஞ்சிலை அழிந்தெனத் துமிந்தது பருவில். 7904

உஉ. செய்த போரினை நோக்கிஇத் தேரிடைச் சேர்ந்த
கொய்யு ளைக்கொடுங் கோளரி முதலிய குழுவை
எய்து கொன்றன னெனெடு மந்திரம் இயம்பி
வைது கொன்றன னெனவான வர்மகிழ்ந்தார். 7905

ஊன்று தேரொடும் சிலைஇலன் கடல்கிளர்ந் தொப்பான்
ஏன்று மற்றவன் இன்உயிர் குடிப்பன்என் றுலகம்
மூன்றும் வென்றமைக் கிடுகுறி என்னும்முச் சிகைத்தாய்த்
தோன்றும் வெஞ்சுடர்ச் சூலவெங் கூற்றினைத் தொட்டான்.

உஊ. இழியப் பாய்ந்தனன் இருநிலம் பிளந்திரு கூறுய்க்
கிழியப் பாய்புனல் கிளர்ந்தெனக் கிளர்சினத் தரக்கன்
பழியப் பால்இவன் பகரும்என் றனுமன்தன் படர்தோன்
ஒழியப் பார்மிசை இழிந்துசென் றிளவலும் உற்றான். 7907

உஊ. உற்ற காலையில் இராவணன் தம்பிமாட் டுதவ
இற்ற தானையின் இருமடி கடற்படை ஏவ
முற்றி அன்னது முழங்குமுந் நீரென முடுகிச்
சுற்றி ஆர்த்தது சுமித்திரைச் சிங்கத்தைத் தொடர்ந்து.

உஎ. இரிந்த வானரம் இரியலின் மயங்கின எங்கும்
சொரிந்த வெம்படை துணித்திடத் தடுப்பருந் தொழிலால்
பரிந்த அண்ணலும் பரிவிலன் ஒருபுடை படரப்
புரிந்த வன்னெடுஞ் சேனையங் கருங்கடல் புக்கான். 7909

உஏ. முருக்கு நாண்மலர் மூசைவிரிந் தால்அன்ன முரட்கண்
அரக்கர் செம்மயிர்க் கருந்தலை அடுக்கிய கணைகள்
பெருக்கி னுல்பெருங் கடலிடைப் பெய்துபெய் தெருவை
உருக்கி னுல்அன்ன குருதிநீர் ஆறுகள் ஒதுங்க. 7910

உசடு. கரியின் கைசளும் புரவியின் கால்களும் கால்வில்
திரியும் தேர்களின் சில்லியும் அரக்கர்தம் சிரமும்
சொரியும் சோரியின் துறைமடுத் துறைதொறும் சுழிப்ப
நெரியும் பல்பிணப் பெருங்கரை கடந்தில நீத்தம். 7911

கொற்ற வாள்எழுக் கோல்மழுத் தண்டுவேல் குலிசம்
மற்றும் வேறுள படைக்கலம் இலக்குவன் வாளி
சுற்றும் ஓடுவ தொடர்ந்திடை துணித்திடத் தொகைபோய்
அற்ற துண்டங்கள் படப்படத் துணிந்தனர் அநேகர். 7912

உசள. குண்ட லங்களும் மவுலியும் ஆரமும் கோவை
தண்டை தோள்வளை கடகம்என் றினையன தயங்கக்
கண்டார் கண்டங்க ளொடுங்கவே தூர்த்தன கதிர்சூழ்
மண்ட லங்களே மாறுகொண் டிமைத்தன வானின். 7913

உசஅ. பரந்த வெண்குடை சாமரை நெடுங்கொடி பதாகை
சரந்த ரும்சில கேடகம் பிச்சம்எய் சரங்கள்
துரந்து செல்வன குருதிநீர் ஆறுகள் தோறும்
நிரந்த பேய்க்கணம் கரைதொறு குவித்தன நீந்தி. 7914

உசக. ஈண்டு வெஞ்செரு இனையன நிகழ்வுழி எவர்க்கும்
நீண்ட வெள்ளெயிற் றரக்கன்மற் றிருதனி நின்ரூன்
பூண்ட வெஞ்செரு இரவிகான் முளையொடும் பொருதான்
காண்ட கும்என இமையவர் குழுக்கொண்டு கண்டார். 7915

*உருஐ. பொறிந்தெழு கண்ணினன் புகையும் வாயினன்
செறிந்தெழு கதிராவன் சிறுவன் சிறினன்
முறிந்தன அரக்கன்மா முரண்திண் தோள்என
எறிந்தனன் விசும்பிவர் மலைஒன் றேந்தியே. 7916

உருக. அம்மலை நின்றும்வந் தவனி எய்திய
செம்மலை ஆனவெங் களிறும் சேணியின்
வெம்மலை வேழமும் பொருத வேறினி
எம்மலை உள அவற் கெடுக்கொ ணுததே. 7917

உருஉ. இவ்வகை நெடுமலை இழிந்த மாசுணம்
கவ்விய நிருதர்தம் களிறு கட்டற
அவ்வகை மலையினே ஏற்றெர் அங்கையால்
வவ்வினன் அரக்கன்வாள் அயணர் வாழ்த்தினர். 7918

உருந. ஏற்றெரு கையினுல் இதுகொல் நீளடா
ஆற்றிய குன்றம்என் றளவில் ஆற்றலான்
நீற்றினும் நுணுகுறப் பிசைந்து நீங்கெனத்
தூற்றினன் இமையவர் துணுக்கம் எய்தினுர். 7919

உருச. செல்வன்ஓர் நெடுங்கிரீ இன்னம் தேர்ந்தெனு
எல்லவன் கான்முளை உணரும் ஏல்வையில்
கொல்என எறிந்தனன் குறைவில் நோன்பின்ஓர்
சொல்எனப் பிழைப்பிலாச் சூலம் சோர்விலான்.

உருடு. பட்டனன் பட்டனன் என்று பார்த்தவர்
விட்டழைத் திடநெடு விசும்பில் சேறலும்
எட்டினன் அதுபிடித் திறுத்து நீக்கினுன்
ஓட்டுமோ மாருதி அறத்தை ஓம்புவான். 7921

உருசு. சித்திர வனமுலைச் சீதை செவ்வியால்
முத்தனுர் மிதிலையூர் அறிவு முற்றிய
பித்தனுர் வெஞ்சிலை இறுத்த பேரொலி
ஒத்தது சூலம்இன் றிற்ற ஓசையே. 7922

உருள. நிருதனும் இனையவன் நிலைமை நோக்கினுன்
கருதவும் இயம்பவும் அலதுன் கைவலி
அரியன முடிப்பதற் கணைந்து சாட்டினும்
ஒருதனி உளைஇதற் குவமை யாதென்றுன். 7923

உருஅ. என்னெடு பொருதியேல் இன்னம் யான்அமர்
சொன்னது புரிதும்என் றரக்கன் சொல்லினுன்
முன்இனி எதிர்கிலேன் என்று முற்றிய
பின்இகல் பழுதெனப் பெயர்ந்து போயினுன். 7924

உருக. அற்றது காலியில் அரக்கன் ஆயுதம்
பெற்றிலன் பெயர்ந்திலன் ஐய பெற்றியில்
பற்றினன் பாய்ந்ததிர் பருதி கான்முளை
எற்றினன் குத்தினன் எறியும் கண்ணினுன். 7925

உசும. அரக்கனும் கன்றுநின் ஆண்மை ஆயினும்
தருக்கினி இன்றெடும் சமையும் தான்எனு
நெருக்கினன் பற்றினன் நீங்கு முவகை
உருக்கிய செம்பன உதிரக் கண்ணினுன். 7926

உசுக. திரிந்தனர் சாரியை தேவர் கண்டிலர்
புரிந்தனர் நெடுஞ்செருப் புகையும் போர்த்தெழ
எரிந்தன உருவெலாம் இருவர் வாய்களும்
சொரிந்தனர் குருதிதாம் இறையும் சோர்ந்திலார்.

உசுஉ. உறுக்கினர் ஒருவரை ஒருவர் உற்றிகல்
முறுக்கினர் முறைமுறை அரக்கன் மொய்ம்பினுல்
பொறுக்கலா வகைநெடும் புயங்க ளால்பிணித்
திறுக்கினுன் அவன்சிறி துணர்வும் எஞ்சினுன்.

உசுங. மண்டமர் இன்ரெடு மடங்கு மானிடர்
தண்டலில் பெரும்படை சிந்தும் தக்கதே
எண்டருங் கருமமற் றிதனில் இல்லெனக்
கொண்டனன் போயினன் நிருதர் கோகநகர். 7929

உசுச. உரற்றின பார்ப்பினே ஊறு கொண்டெழச்
சிரற்றினப் பறவையிற் சிந்தை சிந்திட
விரற்றுறு கைத்தலத் தடித்து வெய்துயிர்த்
தரற்றின வானரம் அரக்கர் ஆர்த்தனர். 7930

உசுரு. நடுங்கினர் அமரரும் நாவுலர்ந்து வேர்த்
தொடுங்கினர் வானரத் தலைவர் உண்முகிழ்த்
திடுங்கின கண்ணினர் எரியும் நெஞ்சினர்
அடங்கின ருமுயிர்ப் பென்னும் அன்பினுர். 7931

உசுசு. புழுங்கிய வெஞ்சினத் தரக்கன் போகுவான்
அழுங்கலில் கோண்முகத் தரவம் ஆயினுன்
எழுங்கதிர்த் தலைமகன் புதல்வன் எண்ணிற
விழுங்கிய மதியென மெலிந்து தோன்றினுன். 7932

உசுள. திக்குற விளக்குவான் சிறுவன் தீயவன்
மைக்கரு நிறத்திடை மறைந்த துன்உரு
மிக்கதும் குறைந்ததும் ஆக மேகத்துட்
புக்கது புறத்ததா மதியும் போன்றனன். 7933

உசுஅ. ஒருங்கமர் புரிகிலன் உன்னெ டியான்என
நெருங்கிய உரையினே நினைந்து நேர்கிலன்
கருங்கடல் கடந்தஅக் காலன் காவின்சேய்
பெருங்கரம் பிசைந்தவன் பின்பு சென்றனன். 7934

உசுசு. ஆயிரம் பேரவன் அடியில் வீழ்ந்தனர்
நாயகர் எமக்கினி யாவர் நாட்டினில்
காய்கதிர்ப் புதல்வனைப் பிணித்த கையினன்
போயினன் அரக்கன்என் றிசைத்த பூசலார். 7935

உஎம. தியினு முதிர்வுறத் சிவந்த கண்ணினன்
காய்கணை சிலையொடும் கவர்ந்த கையினன்
ஏயெனும் அளவினில் இலங்கை மாநகர்
வாயில்சென் றெய்தினன் மழையின் மேனியான்.

உஎக. உடைப்பெருந் துணைவனை உயிரில் கொண்டுபோய்க்
கிடைப்பருங் கொடிநகர் அடையில் கேடெனுத்
தொடைப்பெரும் பகழியின் மாரி தூர்த்திறை
அடைப்பன்என் றடைத்தனன் விசும்பின்ஆறெலாம்.

உஎஉ. மாதிர மறைந்தன வயங்கு வெய்யவன்
சோதியும் கிளர்கிலை தொடர்தல் ஓவின
யாதும்விண் படர்கில இயங்கும் கார்மழை
மீதுகின் றகன்றன விசும்பு தூர்ந்ததால். 7938

உஎங. மனத்தினும் கடியதோர் விசும்பின் வான்செல்வான்
இனக்கொடும் பகழியின் மதிலை எய்தினன்
நினைத்தனன் நீங்குதல் அருமை நின்றெனச்
சினக்கொடுந் தொழிலவன் திரிந்து நோக்கினன்.

உஎச. கண்டனன் வதனம்வாய் கண்கை காலெனப்
புண்டரீ கத்தடம் பூத்தொர் வார்சிலை
மண்டலந் தொடர்ந்துவான் வயங்க வந்ததோர்
கொண்டலில் பொலிதரு கோலத் தான்தனை. 7940

உஎடு. மடித்தவாய் கொடும்புகை வயங்க மாறிதழ்
துடித்தமார் புருவங்கள் சுறுக்கொண் டேறிடப்
பொடித்ததீ நயனங்கள் பொறுக்க லாமையான்
இடித்தவான் றெழிப்பினுல் இடிந்த குன்றெலாம்.

உஎசு. மாக்கவந் தனும்வலி தொலைந்த வாலியாம்
பூக்கவர்ந் துண்ணியும் போலும் இன்றெனைத்
தாக்கவந் தனைஇவன் தன்னை இன்னுயிர்
காக்கவந் தனைஇது காணத் தக்கதால். 7942

உஎஎ. உம்பியை முனிந்திலேன் அவனுக் கூர்தியாந்
தும்பியை முனிந்திலேன் தொடர்ந்து வாலிதன்
தம்பியை முனிந்திலேன் சமரம் தன்னில்யான்
அம்பியல் சிலையினுய் புகழ்இன் ருதலால். 7943

உஎஅ. தேடினன் திரிந்தனன் நின்னைத் திக்கறிந்
தோடின துன்படை உம்பி நேர்ந்தொரு
பாடுற நடந்தனன் அநுமன் பாறினன்
ஈடுறும் இவனைக்கொண் டெளிதில் எய்தினே.ன்

உஎக. காக்கிய வந்தனை என்னில் கண்டனன்
பாக்கியம் தந்தது நின்னைப் பன்முறை
ஆக்கிய செருவலாம் ஆக்கி எம்முனைப்
போக்குவன் மனத்துறு காதல் புன்கணேய். 7945

உஎம. ஏதில்வெம் திறலினுய் இமைப்பி லோர்எதிர்
பேதுறு குரங்கையான் பிணித்த கைப்பிணி
கோதைவெஞ் சிலையினுய் கொள்விட் டேன்எனில்
சீதையும் போந்தனள் சிறைநின் ரும்என்ருன்.

உஅக. என்ருலும் முறுவலித் திராமன் யானுடை
இன்துணை ஒருவனை எடுத்த தோளிணை
குன்றினும் உயர்ந்தன குறைக்கி லேன்எனில்
பின்றினன் உனக்குவில் பிடிக்கி லேன்என்ருன்.

உஅஉ. மீட்டவன் சரங்களாம் விலங்க லாரலை
மூட்டற நீக்குவான் முயலும் வேலையில்
வாட்டலை விடார்த்தலை வயங்கு வாளிகள்
சேட்டகல் நெற்றியில் இரண்டு சேர்த்தினுன். 7948

உஅங. சுற்றிய குருதியின் செக்கர் சூழ்ந்திழை
நெற்றியில் நெடுங்கணை ஒளிர நின்றவன்
முற்றிய வெய்யவன் முளைக்கும் முந்துவந்
துற்றெழும் அருணன துதையம் போன்றனன். 7949

உஅச. குன்றின்வீழ் அருவியின் குதித்துக் கோத்திறிப்
புன்தலைக் குருதிநீர் முகத்தைப் போர்த்தலும்
இன்துயில் உணர்ந்தென உணர்ச்சி எய்தினுன்
வன்திறல் தோற்றிலான் மயக்கம் எய்தினுன். 7950

உஅடு. நெற்றியி னின்ரெளிர் நெடிதி மைப்பன
கொற்றவன் சரம்எனக் குறிப்பின் உன்னினான்
சுற்றுற நோக்கினும் தொழுது நோக்கினான்
முற்றிய பொருட்கெலாம் முடிவு ளான்தனே. 7951

உஅசு. கண்டனன் நாயகன் தன்னைக் கண்ணுறத்
தண்டலில் மானமும் நாணும் தாங்கினான்
விண்டவன் நாசியும் செவியும் வேரொடுங்
கொண்டனன் எழுந்துபோய்த் தமரைக் கூடினான்.

உஅள. வானரம் ஆர்த்தன மழையும் ஆர்த்தன
தானர மகளிரும் தவமும் ஆர்த்தன
மீனலர் வேலியும் வெற்பும் ஆர்த்தன
வானவ ரோடும்நின் றறமும் ஆர்த்தன. 7953

உஅஅ. காந்திகல் அரக்கன்வெம் கரத்து நீங்கிய
ஏந்தலை அகமகிழ்ந் தெய்த நோக்கிய
வேந்தனும் சானகி இலங்கை வெம்சிறை
போந்தன ளாம்எனப் பொருமல் நீங்கினான். 7954

உஅக. மத்தகம் பிளந்துபாய் உதிரம் வார்ந்தெழ
வித்தகன் சரந்தொட மெலிவு தோன்றியச்
சித்திரம் பெறுதலில் செவியும் மூக்கும்கொண்
டத்தலை பெயர்ந்தனன் அல்ல தோண்ணுமோ 7955

உகம. அக்கணத் தறிவுவந் தணுக அங்கைநின்
றுக்கன கவிஅர சென்னும் உண்மையும்
மிக்குயர் நாசியும் செவியும் வேறிடம்
புக்கதும் உணர்ந்தனன் உதிரப் போர்வையான்.

உகக. சாதுரா கத்தடம் குன்றத் தாரைசால்
கூதிர்கால் நெடுமழை சொரியக் கோத்திறி
ஊதையோ டருவிகள் உமிழ்வ தொத்தனன்
மீதுறு குருதியா ரொழுகும் மேனியான். 7957

உகஉ. எண்ணுடைத் தன்னிலை இனைய எண்ணிலாப்
பெண்உடைத் தன்மைய வாய பீடையால்
புண்ணுடைச் செவிநெடு மூக்கும் போனவால்
கண்ணுடைச் சுழிகளும் குருதி கால்வன. 7958

உகூங. ஏசிஉற் றெழும்விசும் பினரைப் பார்க்கும்தன்
நாசியைப் பார்க்குமுன் நடந்த நாண்உடை
வாசியைப் பார்க்கும்இம் மண்ணைப் பார்க்குமால்
சீசிஉற் றுளதெனத் தீயும் நெஞ்சினன். 7959

உகூச. என்முகம் காண்பதன் முன்னம் யான்அவன்
தன்முகம் காண்பதே சரதம் தான்எனத்
பொன்முகம் காண்பதோர் தோலும் போரிடை
வன்முகம் காண்பதோர் வாளும் வாங்கினன். 7960

உகூடு. ஆயிரம் பேய்சுமந் தளித்த தாங்கொரு
மாயிருங் கேடகம் இடத்து வாங்கினன்
பேயிரண் டாயிரம் சுமந்து பேர்வதோர்
காய்எரி வயிரவாள் பிடித்த கையினன். 7961

உகூசு. வீதிர்த்தனன் வீசினன் விசும்பின் மீன்எலாம்
உதிர்த்தனன் உலகினை அனந்தன் உச்சியோ
டதிர்த்தனன் ஆர்த்தனன் ஆயிரம் பெருங்
கதிர்த்தலம் சூழ்வட வரையின் காட்சியான். 7962

உகூள. வீசினன் கேடகம் முகத்து வீங்குகால்
கூசின குரங்குவெங் குழுவைக் கொண்டெழுந்
தாசைகள் தோறும்விட் டெறிய ஆர்த்தெழுந்
தோசைஒண் கடலையும் திடர்செய் தோடுமால். 7963

உகூஅ. தோலிடைத் துரக்கவும் துகைக்க வுஞ்சுடர்
வேலுடைக் கூற்றினுல் துணிய வீசவும்
காலிடைக் கடல்எனச் சிந்திக் கைகெட
வாலுடை நெடும்படை இரிந்து மாய்ந்ததால். 7964

உகூக. ஏறுபட் டதும்இடை எதிர்ந்து ளோர்எலாம்
கூறுபட் டதும்கொழுங் குருதி கோத்தெழுந்
தாறுபட் டதுநிலம் அனந்தன் உச்சியில்
சேறுபட் டதும்ஒரு கணத்தில் தீர்ந்ததால். 7965

ஙூஈ. இடுக்கினி எதிரினி இவனை இவ்வழி
தடுக்கிலை ஆம்எனில் குரங்கின் தானையை
ஒடுக்கினை அரக்கனை உயர்த்தி னுய்என
முடுக்கினன் இராமனைச் சாம்பன் முன்னியே, 7966

நாகக. அண்ணலும் தாணையின் அழிவும் ஆங்கவன்
திண்ணெடுங் கொற்றமும் வலியும் சிந்தியா
நண்ணினன் நடந்ததிர் நமணை இன்றிவன்
கண்ணதிர் நிறுத்துவன் என்னும் கற்பினுல். 7967

நாஉ. ஆறினை டாறுகோல் அசனி ஏறென
ஈறிலா விசையன இராமன் எய்தனன்
பாறுகு சிறைஎன விசும்பில் பாறிட
நூறினன் வாளினுல் நுணங்கு கல்வியான். 7968

நாஙு. ஆடவர்க் கரசனும் தொடர அவ்வழி
கோடையில் கதிர்என கொடிய கூர்ங்கணை
ஈடுறத் துறந்தனன் அவையும் இற்றுகக்
கேடகப் புறத்தினுல் கிழிய வீசினுன். 7969

நாசு. சிறுத்ததோர் முறுவலும் தெரியச் செங்கணுன்
மறுத்தொரு வடிக்கணை தொடுக்க மற்றதவ்
ஒறுத்தொளிர் வாள்எனும் உரவு நாசுத்தை
அறுத்ததக் கலுழனில் அமரர் ஆர்த்தெழ. 7970

நாரு. அற்றது தடக்கைவாள் அற்றது இல்என
மற்றொரு வயிரவாள் கடிதின் வாங்கினுன்
முற்றினன் முற்றினன் என்ன முன்புவந்
துற்றனன் ஊழித்தீ அவிய ஊதுவான். 7971

நாசு. அந்நெடு வாளையும் துணித்த ஆண்தகை
பொன்நெடும் கேடகம் புரட்டிப் போர்த்ததோர்
நன்னெடுங் கவசத்து நாம வெங்கணை
மின்னெடு நிகர்ப்பன பலவும் வீசினுன். 7972

நாஎ. அந்தரம் அன்னது நிகழும் அவ்வழி
இந்திரன் தமரொடும் இரியல் ஏய்திடச்
சிந்துரம் தன்னிலை நாணச் சேண்உற
வந்தது தசமுகன் விடுத்த மாப்படை. 7973

நாஅ. வில்வினை ஒருவனும் இவணை வீட்டுதற்
கொல்வினை இதுஎனக் கருதி ஊன்றினுன்
பல்வினை தியன பரந்த போதொரு
நல்வினை ஒத்தது நடந்த தாணையே. 7974

நாகசு. கோத்தது புடைதொறும் குதிரை தேரொடாள்
பூத்திழி மதமலை மிடைந்த போர்ப்படை
காத்தது கருணனைக் கண்ட மாயமாக்
கூத்தனும் வருகெனக் கடிது கூடினான். 7975

நாகம. சூழிவெங் கடகரி புரவி தூண்டுதேர்
ஆழிவெம் பெரும்படை மிடைந்த ஆர்கலி
ஏழிரு கோடிவந் தெய்தித் றென்பரால்
ஊழியின் ஒருவனும் எதிர்சென் றூன்றினான். 7976

நாகக. காலமும் காலனும் கணக்கில் தீமையும்
மூலம்மூன் றிலைஎன வகுத்து முற்றிய
ஞாலமும் நாகமும் விசும்பும் நக்குறும்
சூலம்ஒன் றரக்கனும் வந்தித் தோன்றினான். 7977

*அரங்கிடம் செகமறு குறைநடிப்பன வல்லஎன் றிமையோரும்
மரங்கிடந் தனமலைக் குவைகிடந் தனஆம் எனமாறுடிக்
கரங்கிடந் தனகாத்திரம் கிடந்தன கறைபடும் படிகவ்விச்
சிரங்கிடந் தனகண்டனர் கண்டிலர் உயிர்கொடு திரிவாரை.

இற்றஅல்லவும்ஈர்ப்புண்டஅல்லவும்இடைஇடைமுறிந்தெங்கும்
துற்றஅல்லவும் துணிபட்டஅல்லவும்சுடுபொறித்தொகைதூவி
வெற்றவெம்பொடி ஆயின அல்லவும் வேருன்று நாறுகி
அற்றஅல்லவும் கண்டிலர் படைக்கலம் அடுகளம் திடராக.

படர்ந்தகும்பத்துப்பாய்ந்தனபகழிகள் பாதத்தைப் பறிந்தோடி
குடைந்து வையகம் புக்குறத் தாக்கியகுருதியால் குடர்சோரத்
தொடர்ந்த கையொடும் துணைமருப் பிழந்துதங் காத்திரம் துணியாகிக்
கிடந்த அல்லவும் நடந்தன கண்டிலர் கிளர்மத கரீஎங்கும்

வீழ்ந்த வாளன விரைவுற்ற பாகர்மேல் வெயில்உமிழ் அயில்அம்பு
போழ்ந்த பன்னெடும் புரவியை முறைமுறை அச்சொடும் பொறியாகத்
தாழ்ந்த வெண்ணினம் தயங்குவெம் குடும்பிடைத் தலைத்தலை மாறுடி
ஆழ்ந்த அல்லது பேர்ந்தன கண்டிலர் அதிர்குரல் மணித்தேர்கள்.

நாகசு. ஆடல் தீர்ந்தன வலைகழுத் தற்றன அதிர்பெருங் குரலீத்த
தாள்து ணிந்தன தறுகண்வெம் கரிநிரை தாங்கிய பிணத் தோங்கல்
கோட மைந்தவெம் குருதிநீர் ஆற்றகல் சுழிதொறும் கொணர்ந்தங்கி
ஓடல் அன்றிநின் றுகழ்வன கண்டிலர் உயர்கெழு பரிஎல்லாம். 7982

வேத நாயகன் வெங்கணை வழக்கத்தின் மிகுதியை யாம்வேறிட்
டோதுகின்றதென் உம்பரும்அரக்கர்வெங்களத்துவந்துற்றுரைக்
காதல் விண்ணிடைக் கண்டனர் அல்லது கண்டக ருடனுடும்
மாதர் வெள்ளமே கண்டனர் கண்டிலர் மலியினும் பெரியாரை

பனிப்பட் டால்அது கதிர்வரப் படுவது பட்டதப் படைபற்றூர்
துனிப்பட் டார்எனத் துளங்கினர் இமையவர் யாவர்க்கும் தோலாதான்
இனிப்பட் டான்என வீங்கின அரக்கரும் எங்கினர் இனிஅந்தோ
தனிப்பட் டான்என அவன்முகம் நோக்கிஓன் றுரைத்தனன் தனிநாதன்.

கஎகஉ. ஏதி யோடெஇர் பொருந்துணை இழந்தனை எதிர்ஒரு தனிகின்றாய்
நீதி யோஎனும் பிறந்தனை ஆதலின் நின்உயிர் நினக்கீவன்
போதியோ நாளை வருகியோ அன்றெளில் போர்பொருது இப்போதே
சாதி யோஉனக் குறுவது சொல்லுதி தெரிவுறச் சமைந்தம்மா. 7685

இழைத்த தீவினை இற்றில தாதலின் யான்உனை இனையோனுல்
அழைத்த போதினும் வந்திலை அந்தகன் ஆணையின் வழிநின்றாய்
பிழைத்த தால்உனக் கருந்திரு நாளொடும் பெருந்துயில் நெடுங்காலம்
உழைத்து வீடுவ தாயினை என்உனக் குறுவதொன் றுரைஎன்றான்.

மற்றை லாம்நிற்க வாசியும் மானமு மறத்துறை வழுவாத
கொற்ற நீதியும் குலமுதல் தருமமும் என்றிவை குடியாகப்
பெற்ற நுங்கள்பால் எங்களைப் பிரிந்துதன் பெரும்செவி மூக்கோடும்
அற்ற எங்கைபோல் என்முகம் ஆர்க்கினி காட்டுவ துரைஅய்யா.

நோக்கி முந்தனர் வானவர் எங்களால் உவகையின் நோக்கேயால்
தாக்க ணங்கினை யாள்பிறர் மனைவியைத் தடுத்தனன் தக்கோர்முன்
வாக்கி முந்தென தயர்வுறு வேன்மற்றும் அமரிடை மாற்றூரால்
மூக்கி முகதுபின் மீள்வன்என் றுல்இது முடியுமோ முடியாதால். 7688

உங்கள் தோள்தலை வாள்கொடு துணித்துயிர் குடித்தெம்முன் வந்தெய்த
நுங்கை கன்னலம் கொடுக்கிய வந்தநான் வானவர் நகைசெய்யச்
செங்கை தாங்கிய சிரத்தினன் கண்ணினீர் குருதியி னெநிம்தேக்கி
எங்கை போல்எடுத் தழைத்துநான் விழுவனே இராவணன் எதிர்அம்மா.

ஒருத்த னேஅவன் உலகொருமூன் றிற்கும்ஆயினும்பழியோருங்
கருத்தி னுல்வரும் சேவகர் அல்லரோ சேவகர் கடன்ஓர்வார்
செருக்கின்வாளினுல் திறத்திறநுங்களை மறத்துறச்சிரம்கொய்து
பொருத்தினுலதுபொருந்துமோ தக்கதுபுகன் றிலைபோல்என்றான்

என்று தன்நெடுஞ் சூலத்தை இடக்கையின் மாற்றித்தன் வலக்கையால்
குன்று நின்றது போர்த்தெடுத் திருநிலம் குடர்கவர்ந் தெனக்கொண்டான்
சென்று விண்ணைடும் பொறியொடும் தீச்செலச் சேவகன் செனிநேரே
வென்று நீர்கென விட்டனன் பட்டது பட்டது மேல்என்ன. 7691

கூஉசு. அனைய சூன்றெனும் அசனியை யாவர்க்கும் அறிவரும்அரன்மேனி
புனையும் நன்னெடு நீறென நாறிய புரவலன் பொதுவென்று
நினையும் மாத்திரத் தொருகைகின் ருருகையின் நிமிர்கின்ற நெடுவேலைத்
கினைபின் மாத்திரைத் துணிபட முறைமுறை சிந்தினன் சரம்சிந்தி.

அண்ணல் விற்கொடு கால்விசைத் துதைத்தனன் அலைகடல் வளாகத்தை
உண்ண கிற்பன வுருமையும் சுடுவன மேருவை உருவிப்போய்
விண்ண னேத்தையும் கடப்பனபிழைப்பிலாமெய்யின்றன்மேல்சேர்ந்த
கண்ணு தல்பெரும் கடவுள்தன் கவசத்தைக் கடந்தில கதிர்வாளி. 7693

தாக்கு கின்றில நுழைகில தலையது தாமரைத் தடங்கண்ணுன்
நோக்கி இங்கிது சங்கரன் கவசம்என் றுணர்வுற நுனித்துன்னி
ஆக்கி ஆங்கவன் அடுபடைதொடுத்துவிட்டறுத்தனன் அதுசிந்தி
வீக்கி முந்தது வீழுந்தது வரைசுழல் சுட்டிடை வீழ்ந்தென்ன.

காந்துவெஞ்சுடர்க்கவசம்அற்றுகுதலும்கண் தொறும்கனல்சிந்தி
ஏந்து வன்கெடும் தோள்புடைத் தார்த்தங்கொர் எழுமுனை வயிரப்போர்
வாய்ந்த வன்னெடும் தண்டுகைப் பற்றினன் வானரப்படை முற்றும்
சார்ந்து செய்தனன் ஆம்எனத் தரையோடும் முறைமுறை அரைத்தான்

பறப்ப ஆயிரம் படுவன ஆயிரம் பகட்டெழில் அவன்மார்பைத்
திறப்ப ஆயிரம் தீர்வன ஆயிரம் சென்றுபுக் குருவாது
மறைப்ப ஆயிரம் வருவன ஆயிரம் வடிக்கணை என்றுலும்
பிறப்பஆயிரம்தெழித்துறத்திரிந்தனன்கறங்கெனப்பெருஞ் சாரி

கூகூக. தண்டு கைத்தலத் துளதெனில் உளதன்று தானைஎன்றவர் சாற்றக்
கொண்டல் ஒத்தவன் கொலைக்கணை பத்கொரு தொடையினில் கோத்தான்
கண்டம் உற்றது மற்றதுகருங்கழல் அரக்கனும்கனன்றுங்கோர்
மண்ட லச்சுடர் ஆடகக் கேடகம் வாங்கினன் வாளோடும்.

வாள் எடுத்தலும் வானர வீரர்கள் மயங்கினர் வழிதோறும்
தாள்எடுத்தனர்சமழ்த்தனர் வானவர் தலைஎடுத்திலர்தாழ்ந்தார்
கோள்எடுத்ததுமீளஎன் றுரைத்தலும்கொற்றவன்குன்றெடுத்த
தோள் எடுத்தது துணித்திஎன் றெருசரம் துரந்தனன் சுரர்வாழ்த்த.

கூகூக. அலக்கண் உற்றது தீவினை கல்வினை ஆர்த்தெழும் ததுவேர்த்துக்
கலக்கம் உற்றனன் இராக்கதர் காலவெங் கருங்கடல் திரைபோலும்
வலக்கை அற்றது வாளொடும் கோளொடும் வாள்அவிர் மதிபோலும்
இலக்கைஅற்றதவ்விலங்கைக்கும் இராவணன்தலைக்கும்என்றெழுந்தோடி

மற்றும் வீரர்கள் உளர்எனக் கெளிதரோ மறத்தொழில் அவன்மாடு
பெற்று நீங்கினர் ஆம்எனி னல்லது பேரெழில் தோளொடும்
அற்று வீழ்ந்தகை அருதவெங் கையினுல் எடுத்தவன் ஆர்த்தோடி
எற்ற வீய்ந்தன வெயிறிரிந் தோடின வானரக்குலம் எல்லாம். 7700

வள்ளல் காத்துடன் நிற்கவும் வானரத் தானையை மறக்கூற்றம்
கொள்ளை கொண்டிடத் தண்டினின் மும்மடி குமைக்கின்ற படிநோக்கி
வெள்ள மின்றெடும் வீக்கறும் என்பதோர் விம்மலுற் றுயிர்வெம்ப
உள்ள கையினும் அற்றவெங் கையையே அஞ்சின உலகெல்லாம்.

கூகூசு. மாறுவானரப் பெருங்கடல் ஓடத் தன்தோள் நின்று வருசோரி
யாறும் விண்டொடும் பிணக்குவைக் கொண்டுமேல்அமரரும்இரிந்தோட
கூறுபட்டன வீலங்கலும் இலங்கையும் யாவையும் குலைந்தோட
ஏறு சேவகன் மேல்எழுந் தோடினன்மழைக்குலம் இரிந்தோட.

ஈற்றுக்கையையும்இக்கணத்தரியுமென்றிமையவர்தொழுதேத்தத்
தோற்றுக்கையதன்றழிந்தவன் உடையநாள்தொலையவும்தோன்றுத
கூற்றுக்கையமும்அச்சமும்கெடநெடுங்கொலைபயில்அயில்அம்பால்
வேற்றுக்கையையும்வேலையில்இட்டனன்வேறுமோர்அணைமான.

சந்தி ரப்பெருந் தூணெடும் சாத்திய ததில்ஒன்றும் தவிராமல்
அந்த ரத்தவர் அலைகடல் அழுதெழ கடைவுறும் அந்நாளில்
சுந்த ரத்தடந் தோள்வலி மாசுணம் சுற்றிய தொழில்காட்ட
மந்த ரத்தையும் கடுத்தது மற்றவன் மணிஅணி வயிரத்தோள்.

சிவண வண்ணவன் கருங்கடல் கொண்டுய்த்த செயலினும் செறிகற்றை
சவண வண்ணவெஞ் சிறையிடைக் கடுவிசை முடுக்கிய தொழிலாலும்
அவண வண்ணல தேவலின் இயற்றிய அமைவினும் அயில்வாளி
உவண அண்ணலெஞத்தன மந்தரம்நிகர்த்தன உயர்பொற்றோள்,

பழக்க நாள்வரு மேருவை உள்ளுறத் துளைத்துஒரு பணையாக்கி
வழக்கி னுல்உல களந்தவன் அமைத்ததோர் வான்குணில் வலத்தேந்தி
முழக்கி னுல்என்ன முழங்குபேர் ஆர்ப்பினல்வான ரமுன்னிரை
உழக்கி னுன்தசை தோல்எலும் பெனும்இவை குருதியோ டொன்றுக.

சசக. நிலத்த கால்கனல் புனல்எனும் இவைமுற்று நிருதன துருவாகிக்
கொலத்த காலன வடிவுகொண் டனஎன உயிரினைக் குடிப்பாரைச்
சலத்த காலனை தறுகணர்க் கரசனைத் தருக்கினில் பெரியோனை
வலத்த காலியும் வடித்தவெங் கணைபினுல் தடிந்தனன் தனுவல்லான்.

சசஉ. பந்தி பந்தியின் பற்குல மீன்குலம் பாடுபா டுறப்பாகத்
திந்து வெள்ளயி றிமைத்திடக் குருதியாம் எக்கர்கொண் டெழுஞ்செக்கர்
அந்தி வந்தென அகல்நெடு வாய்விரித் தடிஒன்று கடிதோடிக்
குந்தி வந்தனன் நெடுநிலம் குழிபடக் குரைகடல் கொதித்தேற.

மாறு கால்இன்றி வான்உறப் பாய்ந்துபா ளலைகலாம் பறித்தேந்திக்
கூறைமாருதம் ஆம்என சுழியன்மேல்துரக்கின்றதொழிலானை
ஏறு சேவகன் எரிமுகப் பகழியால் இறைநிலம் பொறை நீங்க
வேறு காலியும் துமித்தனன் அறத்தொடு வேதங்கள் கூத்தாட.

கைஇரண் டொடும்கால்களும்துணிந்தனகனவரைபொருவும்தன்
மெய்இரண்டும்நூ றுயிரம் பகழியால் வெரிஞுறத் துளைபோன
செய்ய கண்பொழி தீச்சிகை இருமடி சிந்தின தெழிப்போடும்
வையம் வானிடி மழையினும் பெருத்தன வளாந்தது பெருஞ்சீற்றம்.

பாதங் கைகளோ டிழந்தனன் படியிடைஇருந்துவன்பகுவாயால்
காதம்நீளியமலைகளைக் கடித்திறுத் தெடுத்துவெங் கனல்பொங்க
மீதுமீதுதன் அகத்தெழு காற்றினுல் விசைகொடு திசைசெல்ல
ஊத ஊதபட் டுலந்தன வானரம் உருமுவீழ் உயிர்என்ன.7711

தீயி னுல்செய்த கண்உடை யான்நெடுஞ் சிகையினுல் திசைதீய
வேயினுல்திணி வெற்பொன்றுநாவினுல்விசும்புறவளைத்தேந்திப்
பேயின் ஆர்ப்புடை பெருங்களம் இரிந்தெழப் பிலந்துறத் தனபோலும்
வாயி னுல்செல வீசினன்வள்ள லும்மலர்க்கரம்விதிர்ப்புற்றான்.

அய்யன் வில்தொழிற் காயிரம் இராவணர் அமைகிலர் அந்தோயான்
கையும் கால்களும்இழந்தனன்வேறினிஉதவலாம்துணைகாணேன்
மையல் நோய்கொண்டு முடித்தவர்தான்என்றும்வரம்பின்றிவாழ்ந்தாஇக்
குய்யுமா றிதென்று தன்உள்ளத் தின்உணர்ந் தொருதுயர் உற்றான்.

*சிந்துரச்செம் பசுங்குருதி திசைகள்தொறுஞ் சிறையாரு
எந்திரத்தேர் காரிபரியாள் ஈர்த்தோடப் பார்த்திருந்த
கந்தரப்பொற் களியாடல் களிறனையான் கண்டின்ற
சுந்தரப்பொற் றோளானை முகம்நோக்கி இவைசொன்னான்.

7714. புக்கடைந்த புறஒன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கா மதஆனை வாள்வேந்தன் வழிவந்தீர்
இக்கடங்கள் உடையீர்நீர் எம்வினைதீர்த் தும்முடைய
கைக்கடந்தான் உயிர்காக்கக் கடவீர்எங் கோக்கட்டால். 7715

7715. நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறிஅல்லால்
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி
ஆதியாய் உனைஅடைந்தான் அரசர்உருக் கொண்டமைந்த
வேதியா இன்னம்உனக் கடைக்கலம்நான் வேண்டினேன்.

7716. வெல்லுமா நினைக்கின்ற வேல்அரக்கன் வேரோடும்
கல்லுமா முயல்கின்றான் இவன்என்னும் கறுவுடையான்
ஒல்லுமா றியலுமேல் உடன்பிறப்பின் பயன்ஓரான்
கொல்லுமால் அவன்இவனைக் குறிக்கொள்நீ கோடாதாய்.

7717. தம்பிஎன நினைந்திரங்கித் தவிரான்அத் தகவில்லான்
நம்பிஇவன் தனைக்காணில் கொல்லும்இறை நல்காளுல்
உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழுதும்
எம்பிபிரி யான்ஆக அருளுதியான் வேண்டினேன். 7718

7718. மூக்கிலா முகம்வந்து முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமுன் ஒருகணையால் என்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலில்
போக்குவாய் இதுஎனக்கு வேண்டுகின்ற பொருள்என்றான்.

7719. வரங்கொண்டான் இனிமறுத்தல் வழக்கன்றென் றெருவாளி
உரங்கொண்ட நெடுஞ்சிலையின் உரகேந்திரன் உடன்கொண்டான்
சிரங்கொண்டான் கொண்டதனைத் திண்காற்றின் கடும்படையால்
அரங்கொண்ட நெடுங்கடலின் அழுவத்துள் அழுத்தினான்.

7720. மாக்கூடு படர்வேலை மறிமகரத் திரைவாங்கி
மேக்கூடும் கிழக்கூடும் மிக்கிரண்டு திக்கூடும்
போக்கூடும் தவிர்ந்திருகண் செவியூடும் புகைஉயிர்க்கும்
மூக்கூடும் புகைபுக்கு மூழ்கியது முகக்குன்றம். 7721

7721. ஆடினார் வானவர்கள் மகளிர்களும் அமுதஇசை
பாடினார் மாதவரும் வேதியரும் பயம்தீர்ந்தார்
கூடினார் எனத்தலைவர் கொற்றவனைக் குடர்கலங்க
ஓடினார் அடல்அரக்கர் இராவணனுக் குணர்த்துவார். 7722

ஐந்-வது. கும்பகருணன் வதைப்படலம் – முற்றிற்று.

ககூ-வது. மாயா சனகப் படலம்

க. அவ்வழி கருணன்செய்த பேரெழில் ஆண்மை எல்லாம்
செவ்வழி உணர்வு தோன்றச் செப்பினம் சிறுமைதீரா
வெவ்வழி மாயை ஒன்று வேறிருந் தெண்ணி வேட்கை
இவ்வழி இலங்கை வெந்தன் இயற்றிய தியம்பல் உற்றும்.

உ. மாதிரம் கடந்த தோளான் மந்திர இருக்கை வந்த
மோதரன் என்னும் நாமத் தொருவனை முறையில் நோக்கிச்
சீதையை எய்தி உள்ளச் சிறுமையைத் தீரும் செய்கை
யாதெனக் குரைத்தும் நீயே என்உயிர் ஈதி என்றான்.

ங. உணர்த்துவன் இன்றே நன்றேர்உபாயத்தின் இறுதிமாயை
புணர்த்துவன் சீதைதானே புணர்வதோர் வினயம் போக்கிக்
கணத்துவன்சனகன் தன்னைக்கட்டினன் கொணர்ந்துகாட்டில்
மணத்தொழில் புரியும் அன்றே மருத்தனை உருவம் மாற்றி.

ச. எனஅவன் உரைத்த லோடும் எழுந்துமார் பிறுகப் புல்லி
அனையவன் தன்னைக் கொண்டாங் கணுகுதி அன்ப என்னப்
புனைமலர்ச் சரளச் சோலை நோக்கினன் எழுந்து போனான்
வினைகளைக் கற்பின் வென்ற விளக்கினை வெருவல் காண்பான்.

ஞ. மின்ஒளிர் மகுட கோடி நெடுவெயில் விரித்து வீசத்
துன்இருள் இரிந்து தெய்வச் சுடர்மணித் தோளில் தோன்றும்
பொன்அரி மாலை நீல வரையின்வீழ் அருவி போல
நன்நெடும் களிமால் யானை நாண்உற நடந்து சென்றான்.

சு. விளக்கொரு விளக்கம் தாங்கி மின்அணிந் தரவும் சுற்றி
இளைப்புறும் மருங்கு நோவ முலைசுமந் தியங்கும்என்ன
முளைப்பிறை நெற்றி வான மடந்தையர் முன்னும் பின்னும்
வளைத்தனர் பரந்து சூழ வந்திகர் வாழ்த்த வந்தான். 7728

எ. பண்களால் கிளவி செய்து பவளத்தால் அதரம் ஆக்கிப்
பெண்கள்ஆ னூர்க்குள் நல்ல உறுப்பெலாம் பிறக்கி ஈட்டி
எண்களால் அளவில் மானக் குணம்தொகுத் தியற்றி ஞாலக்
கண்களால்கண்டான் காணா அவனையோர் அலக்கண் காண்பான்.

இட்டதோர் இரத்தின பீடத் தமரரை இருக்கை நின்றும்
கட்டதோள் கானம் சுற்றக் கழல்ஒன்று கவானில் காண
வட்டவெண் கவிகை ஓங்கச் சாமரை மருங்கு வீசத்
தொட்டவன் சுரிகையாளன் இருந்தவன் இனையசொன்னான்.

என்றுதான் அடிய னேனுக் கிரங்குவ திந்து என்பான்
என்றுதான் இரவி யோடும் வேற்றுமை தெரிப்ப தென்பான்
என்றுதான் அனங்கன் வாளிக் கிலக்கிலா திருக்க லாவ
தென்றுதான்பட்டதெல்லாம்இயம்புவான்எடுத்துக்கொண்டான்.

வஞ்சனேன் எனக்கு நானே மாதரார் வடிவம் கொண்ட
நஞ்சுதோய்ந் தமுதம் உண்பான் நச்சினேன் நாளும் தேய்ந்த
நெஞ்சுநேர் ஆன தும்மை நிணப்புவிட் டாவி நீக்க
அஞ்சினேன் அஞ்சி னேன்உம் அடைக்கலம் அமுதில் வந்தீர்.

தோற்பித்தீர் மதிக்கு மேனி சுடுவித்தீர் தென்றல் தூற்ற
வேர்ப்பித்தீர் வயிரத் தோளை மெலிவித்தீர் வேனில் வேளை
ஆர்ப்பித்தீர் என்னை இன்னல் அறிவித்தீர் அமரர் அச்சம்
தீர்ப்பித்தீர் இன்னம் என்என் செய்வித்துத் தீர்திர் அம்மா.

பெண்எலாம் நீரே ஆக்கிப் பெயரெலாம் நுமதே ஆக்கிக்
கண் எலாம் நும்கண் ஆக்கிக் காமவேள் என்னும் நாமத்
தண்ணல்எய் பவனும் ஆக்கி ஐங்கணை அரியத் தக்க
புண்எலாம் எமக்கே ஆக்கி விபரீதம் புணர்த்தி விட்டீர்.

ஈசனே முதலி னோர்கள் மானிடர் இறுதி யாகக்
கூசமூன் றுலகும் காத்த கொற்றத்தென் வீரக் கோட்டி
பேசுவார் ஒருவர்க் காக்கி தோற்றிலன் பெண்பால் வைத்த
ஆசைநோய்கொண்டேன்என்றுல் ஆம்மைமாசுண்ணுதோதான்.

மச. நோயிடை நுகர வேயும் நுணங்குநின் றுணங்கும் ஆவி
நாயுயிர் ஆகும் அன்றே நாள்பல கழிந்த காலைப்
பாயிரம் முதல நூலோர் காமத்துப் பகுத்த பத்தி
ஆயிரம் அலல பொன்னே ஐயிரண் டென்பர் பொய்யே.

மடு. அறந்தரும் செல்வமன்னீர் அமுதினும் இனியீர் என்னைப்
பிறந்திலன் ஆக்க வந்தீர் பேரெழில் மானம் கொல்ல
மறந்தன பெரிய போன வரம்எனும் மருந்து தன்னுல்
இறந்திறந் துய்கின் றேனை யார்இது தெரியும் ஈட்டார்.

மசு. அந்தரம் உணரா மேல்நாள் அகலிகை என்பாள் காதல்
இந்திரன் உணர்த்த நல்கி எய்தினுள் இழுக்குற் றுளோ
மந்திரம் இல்லை வேரோர் மருந்திலை மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுதலால் அமுதச் சொல்லீர்.

என்றுரைத் தெழுந்து சென்றவ் இருபதென் றிசைக்கும் நீலக்
குன்றுரைத் தாலும் நேராத் தோள்எலாம் நிலைத்துக் கூட
மின்றிரைத் தருக்கன் தன்னை விரித்துமீன் தொக்க தொன்று
நின்றிமைக் கின்ற தன்ன முடிபடி நெடிதின் வைத்தான்.7739

எஅ. வல்லிய மருங்கு கண்ட மான்என மறுக்கம் உற்ற
மெல்லியல் ஆக்கை முற்றும் நடுங்கினள் வீம்மு கின்ருள்
கொல்லிய வரினும் உள்ள கூறுவன் தெரிய என்னப்
புல்லிய கிடந்த தோளை நோக்கினள் புகல்வ தானுள்.

எக. பறியிது பாவம் என்று பார்க்கிலை பகரத் தக்க
மொழிஇவை அல்ல என்ப துணர்க்கிலை முறைமை நோக்காய்
கிழிகிலை நெஞ்சம் வஞ்சக் கிளையொடும் இன்று காறும்
அழிகிலை என்ற போதென் கற்பென்னும் அறந்தான் என்னும்.

உஎ. வான்உள மறத்தில் தேறுன் சொல்வழி வாழ மண்ணில்
ஊன்உள உடம்புக் கெல்லாம் உயிர்உள உணவும் உண்டால்
தான்உள பத்துப் பேழ்வாய் தகாதன உரைக்க இங்கே
யான்உளன் கேட்க என்ருல் என்சொல்லாய் யாதுசெய்யாய்,

உக. வாசவன் மலரின் மேலான் மழுவலான் மைந்தன்மற்றைக்
கேசவன் சிறுவன் என்றித் தன்மையோர் தன்மை கேளாய்
பூசலின் எதிர்ந்த தென்ருய் போர்க்களம் புக்க போதென்
ஆசையின் கனியைக் கண்ணில் கண்டிலை போலும் அஞ்சி.

உஉ. ஊண்இலா ஆக்கைபேணி உயிர்செகா துள்கி நான்றென்
நாண்இலா திருந்தேன்அல்லேன் நவைஅறு குணங்கள்என்னும்
பூண்எலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் என்னும் அந்தக் காதலால் இருந்தேன் கண்டாய்.

சென்றுநின் றிறியும் ஆவி தரிக்குமால் செருவில் செம்பொன்
குன்றுநின் றனைய தம்பி புறக்கொடை காத்து நிற்பக்
கொன்றுநின் தலைகள் சிந்தி அரக்கர்தம் குலத்தை முற்றும்
வென்றுநின் றருளுங் கோலம் காணிய கிடந்த வேட்கை. 7745

எனக்குயிர் பிறிதும் ஒன்றுண் டென்றிரேல் இரக்கம்அல்லால்
தனக்குயிர் வேறின் றுகித் தாமரைக் கண்ண தாகிக்
கனக்கரு மேகம் ஒன்று கார்முகம் தாங்கி யார்க்கும்
மனத்துள தாகி நிற்கும் அஃதன்றி வரம்பி லாதாய். 7746

உடு. என்றனள் என்ற லோடும் எரிஉகு கண்ணன் தன்னைக்
கொன்றன மானம்தோன் றக்கூற்றென ச்சீற்றம்கொண்டான்
வென்றனை இராமன் உன்னை மீட்டபின் அவனை டாவி
ஒன்றென வாழ்தி யேஎன் றுரும்இடி உக்க நக்கான். 7747

எனைத்துளார் உலகத் துள்ளார் இமையவர் முதலி னோர்என்
சினத்துளார் யாவர் தீர்ந்தார் தசரதன் சிறுவன் நீஇப்
புனத்துளாய் மாலை யான்என் றுவக்கின்ற ஒருவன் புக்குன்
மனத்துளான் எனினும் கொல்வன் வாழுதி பின்னை மன்னை.

உஎ. வளைத்தன மதிலை வேலை வகுத்தன வரம்பு வாயால்
உளைத்தன குரங்கு பல்கால் என்றுகொண் டுவந்த துண்டேல்
இளைத்தநுண் மருங்கு நங்காய் என்எதிர் எய்தி றெல்லாம்
விளக்கெதிர் வீழ்ந்த விட்டில் பான்மைய வியக்க வேண்டா.

கொற்றவாள் அரக்கர் தம்மை அயோத்தியர் குலத்தைமுற்றும்
பற்றிநீர் தருதிர் அன்றேல் பசுந்தலை கொணர்தி பாரித்
துற்றதொன் றியற்று வீர்என் றுந்தினேன் உந்தை மேலும்
வெற்றியோர் தம்மைச் செல்லச் சொல்லினென் விரைவின் என்றான். 7750

உக. என்றவன் உரைத்த காலை என்னைஇம் மாயம் செய்தாற்
கொன்றும்அங் கரிய தில்லை என்பதோர் துணுக்க முந்த
நின்றுநின் றுயிர்த்து நெஞ்சம் வெதும்பினள் நெருப்பை மீளத்
தின்றுமிழ் கின்ற தென்னத் துயருக்கே சேக்கை ஆனாள்.

நம. இத்தலை இன்ன செய்த விதியினூர் என்னை இன்னம்
அத்தலை அன்ன செய்யச் சிறியரோ அளியர் அம்மா
பொய்த்தலை உடைய செல்லாம் தருமமே போலும் என்னுக்
கைத்தனள் உள்ளம் வெள்ளக் கண்ணினீர்க் கரையி லாதாள்

நக. ஆயின காலத் தாங்சோர் அரக்கனைச் சனகன் ஆக்கி
வாய்திறந் திரங்கப் பற்றி மகோதரன் கடிதின் வந்தான்
காய்எரி அனையான் முன்னர்க் காட்டினுன் வணங்கக் கண்டாள்
தாய்எரி வீழக் கண்ட பார்ப்பெனத் தரிக்கி லாதாள். 7753

கைகளை நெறித்தாள் கண்ணில் மோதினுள் கமலக் கால்கள்
நெய்எரி மிதித்தால் என்ன நிலத்திடைப் பதைத்தாள்நெஞ்சம்
மெய்என எரிந்தாள் ஏங்கி விம்மினுள் நடுங்கி வீழ்ந்தாள்
பொய்என உணராள் அன்பால் புரண்டனள் பூசல்இட்டாள்.

நக. தெய்வமே என்னும் மெய்மை சிதைந்ததோ என்னும்தீய
வைவனே உலகை என்னும் வஞ்சமோ வலிதே என்னும்
உய்வனே இன்னம் என்னும் ஒன்றல துயரம் உற்றுள்.
ஐயவோ துயர மேயோ ஆர்அதன் தன்மை ஓர்வார். 7755

எந்தையே எந்தையேஇன் றென்பொருட் டுனக்கும் இக்கோள்
வந்ததே என்னைப் பெற்று வாழ்ந்தவா றிதுவோ மண்ணோர்
தந்தையே தாயே செய்த தருமமே தயாவே என்னும்
வெந்துயர் வீங்கித் தீவீழ் விறகென வெந்து வீழ்ந்தாள்.

கடு. இட்டுண்டாய் அறங்கள் செய்தாய் எதிர்ந்துளோர்ர் இருக்கைஎல்லாம்
சுட்டுண்டாட் டயர்ந்தாய் வேழ்வித் துறைஎலாம் கரையுங் கண்டாய்
மட்டுண்டார் மனிதர்த் தின்னூர் வஞ்சரால் வயிரத் தோள்கள்
கட்டுண்டாய் போலும் யானும் காண்கின்றேன் கொடிய கண்ணுய். 7757

என்றினை பலவும் பன்னி எழுந்துவீழ்ந் திடரில் தோய்ந்தாள்
பொன்றினள் போலும் என்னப் பொறைஅழிந் துயிர்ப்பும் போனாள்
மின்தனி நிலத்து வீழ்ந்து புரள்கின்ற தணைய மெய்யாள்
அன்றில்அம் பேடை போல வாய்திறந் தரற்றல் உற்றுள்.

பிறைஉடை நுதலார்க் கேற்ற பிறந்தஇல் கடன்கள் பெற்ற
இறைஉடை இருக்கை மூதூர் என்றும்வந் திறுத்தி லாதீர்
சிறைஇடைக் காண நீரும் சேர்ந்ததெவ் வாறு வேரூர்
மறைஇடை வரம்பு நீங்கா வழிவந்த மன்னன் நீரே. 7759

நஅ. வன்சிறைப் பறவை ஊரும் வானவன் வரம்பின் மாயப்
புன்சிறைப்பொறையைத் தீர்ப்பான் உளன்எனப்புலவர் நின்றூர்
என்சிறை நீக்குவாரைக் காண்கிலேன் என்னில் வந்த
உன்சிறை நீக்கல் பாலார் ஆர்உளர் உலகத்துள்ளார். 7760

நக. பண்பெற்ரு ரோடும் கூடாப் பகைபெற்ரும் பகழி பாய
விண்பெற்ரும் எனினும் நன்ரும் வேந்தராய் உயர்ந்தமேலோர்
எண்பெற்ரும் பழியும் பெற்ரும் இதுநின்னுல்பெற்றதென்ரும்
பெண்பெற்ரும் அதனுல் பெற்ரும் யாவர்நின் பேறு பெற்ரூர்.

கம. சுற்றுண்ட பாசம் நாஞ்சில் சுமையொடும் சூடுண் டாற்ற
எற்றுண்டும் அளற்று நீங்கா துழுஞ்சிறு குண்டை என்னப்
பற்றுண்ட நாளே மாளாப் பாவியேன் உம்மை எல்லாம்
விற்றுண்டேன் எனக்கு மீளும்விதிஉண்டோ நரகில்வீழ்ந்தால்.

இருந்துநான் பதைத்த தெல்லாம் இறுதிகண் டளவில்இன்பம்
பொருந்தினேன் அல்லேன் எங்கோன் திருவடி புனைந்தேன் அல்லேன்
வருந்தினேன் நெடுநாள் உம்மைவழியொடுமுடித்தேன்வாயால்
அருந்தினேன் அயோத்தி வந்த அரசர்தம் புகழை அந்தோ.

சஉ. கொல்எனக் கணவற் கொங்கோர் கொடும்பகை கொடுத்தேன் எந்தை
கல்எனத் திரண்ட தோளைப் பாசத்தால் கட்டக் கண்டேன்
இல்எனச் சிறந்து நின்ற இரண்டுக்கும் இன்னல் சூழ்ந்தேன்
அல்லலோ எளியளோ நான் அளியத்தேன் அயர்க்கலாமோ.

இணையறு வேள்வி மேல்நாள் இயற்றிஈன் றெடுத்த எந்தை
புணைஉறு தடந்தோள் ஆர பூரியில் புரட்டக் கண்டேன்
மணவினை முடித்தென் கையை மந்திரம் மரபில் தொட்ட
கணவனை இனைய கண்டால் அல்லது கழிகின் றேனை. 7765

சச. அன்னையீர் ஐயன் மீரே ஆர்உயிர்த் தங்கை மீரே
என்னைஈன் றெடுத்த எந்தைக் கெய்திய யாதும் ஒன்றும்
முன்னம்நீர் உணர்ந்தி லீரோ உமக்கும்வே றுற்ற துண்டோ
துன்னரும் நெறியின் வந்து தொடர்ந்திலீர் துஞ்சி னீரோ.

சரு. மேருவிற்கும்பர்ச்சேர்ந்து விண்ணினைமீக்கொண்டாலும்
நீருடைக் காவல் மூதூர் எய்துவாம் நெறியிற் றன்றால்
போரிடைக் கொண்டார் ஏனும் வஞ்சனை புணர்த்தார் ஏனும்
ஆர்உமக் குரைக்கல் பாலார் அனுமனும் உளனே நும்பால்.

சசு. சரதம்மற் றிவனைத் தந்தார் தவம்புரிந் தாற்றல் தாழ்ந்த
பரதனைக் கொணர்தற் சேதும் ஐயுற வில்லைப் பன்னாள்
வரதனும் வாழ்ந்தான் அல்லன் தம்பியும் அனையன் வாழான்
விரதமுற் றறத்தின்நின்றார்க் கிவைகொலாம்விளைவமென்மேல்.

சள. அடைத்தது கடலை மேல்வந் தடைந்தது பதியை ஆவி
துடைத்தது பகையைச் சேனை எனச்சிலர் சொல்லச் சொல்லப்
படைத்ததோர் உவகை தன்னை வேறொரு விளையம் பண்ணி
உடைத்ததுவிதியேஎன்றென் றுயிர்த்தனள்உரையும்தீர்ந்தாள்.

சஅ. ஏங்குவாள் இனைய பன்னி இமையவர் மற்ற எல்லாம்
வாங்குவாள் அரக்கன் ஆற்ற மனமகிழ்ந் தினிதின் நோக்கித்
தாங்குவாள் அல்லள் துன்பம் இவனையும் தாங்கித் தானும்
ஓங்குவாள் என்ன உன்னி இனையன உரைக்கல் உற்றான்.

சகூ. காரிகை நின்னை எய்தும் காதலால் கருதல் ஆகாப்
பேரிடர் இயற்றல் உற்றேன் பிழைஇது பொறுத்தி இன்னும்
வேர்அற மிதிலை யோரை விளிகிலேன் விளிந்த போதும்
ஆருயிர் இவனை உண்ணேன் அஞ்சலை அன்னம் அன்னாய்.

ருய. இமையவர் உலக மோதான் இவ்உல கேழு மோதான்
அமைவரு புவனம் மூன்றும் என்னுடை ஆட்சி யேதான்
சமைவுறத் தருவன் மற்றித் தாரணி மன்னற் கின்னல்
சுமைஉடைக்காமவெந்நோய்துடைத்தியேல்தொழுதுவாழ்வேன்

ருக. இலங்கைஊர் இவனுக் கீய்ந்து வேறிடத் திருந்துவாழ்வன்
நலங்கிளர் நிதியம் மூன்றும் நல்குவன் நாமத் தெய்வப்
பொலங்கிளர் விமானம் தானே பொதுவறக் கொடுப்பன் புத்தேள்
வலங்கிளர் வாளும் வேண்டில் வழங்குவன் யாது மாற்றேன்.

ருஉ. இந்திரன் கவித்த மோலி இமையவர் இறைஞ்சி ஏத்த
மந்திர மரபில் சூட்டி வானவர் மகளிர் யாரும்
பந்தரின் உரிமை செய்ய யான்இவன் பணியின் நிற்பன்
சுந்தரப் பவள வாயால் ஒருமொழி சிறிது சொல்லீர். 7774

ருங. எந்தைதன் தந்தை தாதை இவ்உல கின்ற முன்னோன்
வந்தவன் தானே கேட்ட வரம்எலாம் வழங்கு மாற்றான்
அந்தகன் அடியார் செய்கை ஆற்றுமால் அமுதின் வந்த
செந்திரு நீர் அலீரேல் அவளும்வந் தேவல் செய்யும். 7775

ருச. தேவரே முதலி னோர்கள் சிறுநரர் இறுதி ஆனோர்
ஏவரும் வந்து நுந்தை அடிதொழு தேவல் செய்வார்
பாவமே இவனின் வந்த பயன்பழு தாவ தன்றால்
மூவுல காளும் செல்வம் கொடுத்திது முடித்தி என்றான். 7776

ருரு. இத்திரு பெறுகிற் பானும் இந்திரன் இலங்கை நுங்கள்
பொய்த்திரு புணர்கிற் பானும் வீடணன் புலவர் கோமான்
கைத்திரு சரங்கள் உன்தன் மார்பொடும் கலக்கல் பால
மைத்திரு நிறத்தான் தாள்என் தலைமிசை வைக்கல் பால. 7777

ருசு. நகுவன நின்னை டைய நாயகன் நாம வாளி
புகுவன போழ்ந்த போதுன் மார்பினில் தீர்ந்த புண்கள்
தகுவன இனிய சொல்லத் தக்கன சாபம் நாணின்
உகுவன மலைகள் என்னப் பிளப்பன ஒலிகள் அம்மா. 7778

சொல்லுவ மதுர மாற்றந் துண்டத்தால் கொத்திக் கண்ணீக்
கல்லுவ காகம் வந்து கலப்பன கமலக் கண்ணன்
வில்உமிழ் கணைகள் வந்துன் விலங்கெழில் அலங்கல் மார்பம்
புல்லுவ களிப்புக் கூரப் புலவுநா றலகை போல. 7779

ருஅ. விரும்பிய கேட்ப துண்டால் நின்னுழை வார்த்தை வீரன்
இரும்பியல் வயிர வாளி இடறிட எயிற்றுப் பேழ்வாய்ப்
பெரும்பெயர்த் தலைகள் சிந்திப் பிழைப்பிலை முடிந்தாய்என்ன
அரும்பிய தரளப் பைந்தார் அனுமன்வந் தளிக்கும் அந்நாள்.

ருக. புன்மக கேட்டி கேட்டற் கினியன புகுந்த போரில்
உன்மகன் உயிரை எம்மைச் சுமித்திரை உய்ய ஈன்ற
நன்மகன் வாளி நக்க நாய்அவன் உடலை நக்க
என்மகன் இறந்தான் என்ன நீட்டுத் தழைப்ப தென்ருள்.

கூம. வெய்யவன் இனைய கேளா வெயில்உக விழித்து வீரக்
கைபல பிசைந்து பேழ்வாய் எயிறுபுக் கழுந்தக் கவ்வித்
தையல்மேல் ஓட லோடும் மகோதரன் தடுத்துத் தான்தன்
மொய்கழல் தாதை வேண்ட இசையும்நீ முனியல் என்ருன்.

கூக. என்றவன் விலக்க மீண்டாண் டாசனத் திருக்க ஆவி
பொன்றினன் ஆகும்என்னத் தரையிடைக்கிடந்தபொய்யோன்
இன்றிது நேராய் என்னில் என்னைஎன் குலத்தி னுேடும்
கொன்றனை யாதி என்ன இனையன கூறல் உற்ருன். 7783

கூஉ. பூவின்மேல் இருந்ததெய்வத்தையும் பொதுமை உற்ருள்
பாவியான் பயந்த நங்கை நின்பொருட் டாகப் பட்டேன்
ஆவிபோய் அழிதல் நன்ருே அமரர்க்கும் அரசன் ஆனேன்
தேவியாய் இருத்தல் தீதோ சிறையிடைத் தேம்புகின்ருய்.

கூங. என்னைஎன் குலத்தி னுேடும் இன்உயிர் தாங்கி ஆண்டு
நன்னெடும் செல்வம் துய்ப்பான் நோக்கினை நல்கி னுளும்
உன்னைவெஞ் சிறையில் நீக்கி ஒகைதந் தளிப்பாய் என்னப்
பொன்னடி மருங்கு வீழ்ந்தான் உயிருக்கே பொருமுகின்ருன்.

கூச. அவ்வுரை கேட்ட நங்கை செவிகளை அமையப் பொத்தி
வெவ்வுயிர்த் தாவி துள்ள வீங்கினள் வெகுளி பொங்க
இவ்வுரை எந்தை கூறுன் இன்உயிர் வாழ்க்கை பேணிச்
செவ்வுரை அன்றி தென்னைச் சிறிய கிளியில் கூறும். 7786

சுடு. அறங்கெட வழக்கு நீங்க அரசர்தம் மரபிற் கான்ற
மறங்கெட வன்மை தேய வசைவர மறைகள் ஓதும்
திறங்கெட ஒழுக்கம் குன்றத் தேவரும் பேணத் தக்க
நிறங்கெட இனைய சொன்னுய் சனகன்கொல் நீயும் ஐயா.

வழிகெட வரினும் தம்தம் வாழ்க்கைதெய்ந் திரினும் மார்பம்
கிழிபட அயில்வேல் வந்து கிடைப்பினும் சான்றோர் கேட்கும்
மொழிபட வாழ்வ தல்லால் முறைகெடப் புறநின் ருர்க்கும்
பழிபட வாழு கின்ற பார்த்திபர் உளரோ பாவம். 7788

சுஎ. நீயும்நின் கிளையும் மற்றிந் நெடுநில வரைப்பும் நேரே
மாயினும் முறைமை குன்ற வாழ்வனே வயிரத் தின்தோள்
ஆயிர நாமத் தாழி ஐயனுக் கடிமை செய்வேல்
நாயினேத் திண்டு வேனே நாண்துறந் துயிரை நச்சி. 7789

சுஅ. வரிசிலே ஒருவன் அல்லால் மைந்தர்என் மருங்கு வந்தால்
எரியிடை வீழ்ந்த விட்டில் அல்லரோ அரசுக் கேற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை அங்கணத் தழுக்குத் தின்னும்
நரியொடும் வாழ்வ துண்டோ நாயினும் கடைப்பட் டானே.

சுக. அல்லையே எந்தை தானு யாகதான் அலங்கல் வீரன்
வில்லையே தொழுது வாழ்த்தி மீளுதி மீட்சி என்ப
தில்லையேல் இறந்து நீர்தி இதுஅலால் இயம்பல் ஆகாச்
சொல்லையே உரைத்தாய் என்னும் பழிகொண்டாய் என்னச் சொன்னுள்.

வன்திறல் அரக்கன் அன்ன வாசகம் மனத்துள் கொள்ளான்
நின்றது நிற்க மேன்மேல் நிகழ்ந்தவா நிகழ நின்ருன்
நின்றவன் அல்லன் போலாம் என்றனே கணத்தின் மூன்னே
கொன்றுயிர்குடிப்பன்என்னுச் சுருகைவாள்உருவிக்கொண்டான்.

என்னையும்கொல்வாய்இன்னே இவனையும்கொல்லாய்இன்னம்
உன்னையும் கொல்ல மற்றிவ் உலகையும் கொல்ல யானே
இன்னலும் நீங்கி என்றும் கெடாப்புகழ் எய்து கின்றேன்
பின்னையும்எங்கோன் அம்பில்கிளையொடும்பிழையாய்என்ருள்.

இரந்தனன்வேண்டிற்றல்லால் இவன்பிழைஇழைத்ததுண்டோ
புரந்தரன் செல்வத் தைய கொல்கையோர்பொருளிற் ருேன்றான்
பரந்தவெம் பகையை வென்ருல் இவன்பாறிப் படரும் நங்கை
அரந்தையள் ஆகும் அன்றே தந்தையை நினைவதானுல். 7794

என்றவன் விலக்க மீண்டாண் டிருந்ததோர் இறுதி யின்கண்
குன்றென நீண்ட கும்ப கருணனே இராமன் கொல்ல
வன்திறல் குரங்கின் தானை வான்உற ஆர்த்த ஓசை
சென்றன செவியின் ஊடு தேவர்கள் ஆர்ப்பும் செல்ல. 7795

எசு. உருந்திறல் அமரர் நாடும் வானர யோகத் தாரும்
மிகுந்திறல் வேறொன் றில்லா இருவர்நாண் ஒலியும் விஞ்சத்
தகுந்திறம் நினைந்தேன் எம்பிக் கமரிடைத் தனிமைப் பாடு
புகுந்துள துண்டென் றுள்ளம் பொருமல்வந் துற்ற போது.

எஞ. புறந்தருஞ் சேனை முன்னீர் இரும்சிறைபோக்கிப்போதப்
பறந்தனர் அனைய தூதர் செவிமருங் கெய்திப் பையத்
திறம்திறம் ஆகி நின்ற கவிப்பெருஞ் சேனை சிந்தி
இறந்தனன் உம்பி அம்பில் கொன்றனன் இராமன் என்றார்.

ஊரொடும்பொருந்தித்தோன்றும்ஒளியவன்என்னஒண்பொன்
தாரொடும் பொலிந்த மோலி தரையொடும் பொருந்தத் தள்ளப்
பாரொடும் பொருந்தி நின்ற மராமரம் பலவும் ஏழும்
வேரொடும் பறிந்து மண்மேல் வீழ்ந்ததே போல வீழ்ந்தான்.

பிறிவெனும் பொருள தொன்றும் பிறந்தகாள் துடங்கி என்றும்
உறுவதொன் றறியான் ஆவி ஒன்றென நினைந்து நின்றான்
எறிபெருஞ் செருவில் தம்பி தன்பொருட் டிறந்தான் என்ன
அறிவழிந் தவசன் ஆகி அரற்றினன் அண்டம் முற்ற. 7799

*எஅ. தம்பியோ தானவராந் தாமரையின் காடுமுக்குந்
தும்பியோ நான்முகத்தோன் தொன்மரபின் தோன்றலோ
நம்பியோ வானவரை நாமப் பொறிதுடைத்த
எம்பியோ யான்உன்னை இவ்உரையும் கேட்டேனை. 7800

எக. மின்னிலைய வேலானே யான்உன் விழிகாணேன்
என்னிலைமை இன்றென் னிலைபேணி நிற்கிலேன்
உன்னிலைமை ஈதேற்ற ஓடைக் களிறுந்திப்
பொன்உலகம் மீளப் புகாரோ புரந்தரனுர். 7801

அம. வன்நெஞ்சாய் நீஎன்னை நீத்துப்போய் வான்அடைந்தால்
இன்னஞ் சிலரோ டொருவயிற்றி லார்பிறப்பார்
மின்அஞ்சு வேலோய் விழிஅஞ்சி வாழ்கின்றேர்
தன்நெஞ்சு தானே தடவாரோ தானவர்கள். 7802

அக. கல்அன்றே நீராடும் காலத்துக் கால்தேய்க்க
மல்ஒன்று தோளாய் வடமேரு மானிடவன்
வில்ஒன்றல் உன்னை விளிவித் துளதென்னுஞ்
சொல்அன்றே என்னைச் சுடுகின் றதுதோன்றல். 7803

அஉ. மாண்டனவோ சூலமும் சக்கரமும் வண்மழுவும்
தீண்டினவோ ஒன்றும் செயலிற்ற தோதெறித்து
மீண்டனவோ மானிடவன் மெல்லம்பு மெய்உருவ
நீண்டனவாந் தாம்இன்னம் நின்றுராம் தோள்நோக்கி.

அங. நோக்கறவும்எம்பியர்தாம் மாளவும்போய்நொய்திலங்கை
போக்கறவும் மாதுலனுர் பொன்றவும்என் பின்பிறந்தாள்
மூக்கறவும் வாழ்ந்தேன் ஒருத்தி முலைக்கிடந்த
ஏக்கறவால் இன்னம் இரேனே உனைஇழந்தும். 7805

அச. தன்னைத்தான் தம்பியைத்தான் தானைத் தலைவனைத்தான்
மன்னைத்தான்மைந்தனைத்தான் மாருதத்தின்காதலித்தான்
பின்னைக் கரடிக் கிறையைத்தான் பேர்தொலைத்தான்
என்னைத்தான் கேட்டிலேன் என்னுன வாறிதுவோ. 7806

அடு. ஏழை மகளிர் அடிவருட ஈர்ந்தென்றல்
வாழும் மணிஅரங்கில் பூம்பள்ளி வைகுவாய்
சூழும் அலகை துணங்கைப் பறைதுவைப்பப்
பூழி அணைமேல் கிடந்தனையோ போர்க்களத்தே. 7807

அசு. செந்தேன் பருகித் திசைஉந்தித் தீவாழ்வு
நந்தேன் இனிஎன்றும் நானும் உனக்காவி
தந்தேன் பிழையேன் தனிபோகத் தாழ்கிலேன்
வந்தேன் தொடர மதக்களிறே வந்தேனே. 7808

அஎ. அண்டத் தளவும் இனைய பகர்ந்தழைத்துப்
பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பாலித்தான்
தொண்டைக் கனிவாய் துடிப்ப மயிர்பொடிப்பக்
கெண்டைத் தடம்கண்ணி உள்ளே கிளுகிளுத்தாள். 7809

அஅ. வீங்கினுள் கொங்கை மெலிந்த மெலிவகல
ஓங்கினுள் உள்ளம் உவந்தாள் உயிர்புகுந்தாள்
தீங்கில்லாக் கற்பில் திருமடந்தை சேடியாம்
பாங்கினுள் உற்றதனை யாரே பகர்கிற்பார். 7810

அசு, கண்டாள் கருணீனத்தன் கண்கடந்த தோளாணைக்
கொண்டாள் ஒருதுணுக்கம் அன்றவணைக் கொற்றவனுர்
தண்டாத வாளி தடிந்த தனிவார்த்தை
உண்டாள் உடல்தடித்தாள் வேறொருத்தி ஒக்கின்ருள்.

கூம. தாவரிய பேருலகத் தெம்பி சவத்தோடும்
யாவரையும் கொன்றடுக்கி என்றும் இறவாத
மூவரையும் மேலுநாள் மூவா மருந்துண்ட
தேவரையும் வைப்பன் சிறைஎன்னச் சீறினுன். 7812

கூக. அக்கணத்து மந்திரிமார் ஆற்றச் சிறிதாறி
இக்கணத்து மானிடவர் ஈரக் குருதியினுல்
மூக்கைப் புனல்உகுப்பன் என்ன முனிந்தெழாத்
திக்கனைத்தும் போர்கடந்தான் போயினுன் தீவிழிப்பான்.

கூஉ. கூறும் இனிநமக்காய்க் கும்பம்செய் கன்னனுர்
பாருடும் வெங்களத்தே பட்டார் எனப்பதைத்தான்
வேறுர் சிறைஇவணை வைமின் எனவிளம்பா
மாறுர் திசைநோக்கிப் போனுர் மகோதரனுர். 7814

*கூங. வரிசடை நறுமலர் வண்டு பாடிலாத்
தூரிசடை புரிகுழல் சும்மை சுற்றிய
ஒருசடை உடையவட் குடைய அன்பினுள்
திரிசடை தெருட்டுவாள் இனைய செப்பினுள். 7815

கூச. உந்தைஎன் றுன்எதிர் உருவம் மாற்றினுன்
வந்தனன் மருத்தன்என் றுளன்ஓர் மாயையான்
அந்தமில் கொடுந்தொழில் அரக்கன் ஆம்எனச்
சிந்தையின்உணர்த்தினள் அமுதின் செய்கையாள். 7816

கூடு. நங்கையும் அவள்உரை நாளும் தேறுவாள்
சங்கையும் இன்னலும் துயரும் தள்ளினுள்
இங்குநின் றேகிய இலங்கை காவலன்
அங்குநின் றியற்றிய தறைகு வாம்அரோ. 7817

கூசு. கொழுந்துவிட் டழன்றெரிமடங்கல் கூட்டற
எழுந்தெரி வெகுளியான் இரு மருங்கினும்
தொழுந்தகை அமைச்சரைச் சுழிந்து நோக்குரு
மொழிந்தனள் இடியொடு முகிலும் அஞ்சவே. 7818

கஎ. ஏகுதிர் என்முகத் தெவரும் என்னுடை
யோகவெஞ் சேனையும் உதவ உம்முடைச்
சாகரத் தானையும் தழுவச் சார்ந்தவர்
வேகவெஞ் செருத்தொழில் விலக்கி மீள்கிலீர் 7819

கூஅ. எடுத்தவர் இருந்துழி எய்தி யாரையும்
படுத்தவன் மீளும்என் றுரைத்த பண்பின்நீர்
தடுத்திலீர் எம்பியைத் தாங்க கிற்றிலீர்
கொடுத்திலீர் நும்உயிர் வீரக் கோட்டியீர். 7820

கூக. உம்வயின் அன்றுநான் உலகம் மூன்றும்என்
வெம்மையின் ஆண்டது நீர்என் வென்றியால்
இம்மையின் நெடுந்திரு எய்தி னீர்இனிச்
செம்மையின் இன்உயிர் துறந்து தீர்திரால். 7821

ஈ. ஆற்றலம் என்றிரேல் எனினும் யான்அவர்
தோற்றல மந்துறத் துரந்து தொல்நெடும்
கூற்றல மரஉயிர் குடித்துக் கூர்த்தஎன்
வேற்றலே மானிடர் வெளினில் காண்பனுல். 7822

ஈக. அல்லதும் உண்டுமக் குரைப்ப தாரமர்
வெல்லுதும் என்றிரேல் மேல்செல் வீர்இனி
வல்லது மடிதலே என்னின் மாறுவீர்
சொல்லும்நும் கருத்தெனத் துணிந்து சொல்லினுன். 7823

இசு-வது, மாயா சனகப்படலம் – முற்றிற்று.
படலம் 16-க்கு திருவிருத்தம் 7823

கள-வது, அதிகாயன் வதைப்படலம்

*க. நதி காய்நெடு மானமும் நாணம்உரு
மதி காய்குடை மன்னனே வைதுரையா
விதி காயினும் வீரம் வெலற்காரியான்
அதி காயன்எனும் பெயரான் அறைவான். 7824

உ. வானஞ் சுகவை யகமஞ் சுகமால்
தானஞ் சுசுசங் கரன்அஞ் சுகபார்
நான்அஞ் சினனேல் உனைநா ணுகபோர்
யான்அஞ் சினன்என் றும்இயம் புவதோ. 7825

ஊ. வெம்மைப் பொருதா னவர்மேய் வலியோர்
தம்மைத் தலையில் கொடுதந் திலனே
உம்மைக் குலையப் பொரும்உம் பரையும்
கொம்மைக் குயவட் டனைகொண் டிலனே. 7826

சு. காய்ப்புண் டநெடும் படைகை உளதாய்த்
தேய்ப்புண் டவனும் சிலசில் கணையால்
ஆய்ப்புண் டவனும் அவர்சொல் வலதால்
ஏய்ப்புண் டவனும் எனஎண் ணினனே. 7827

டு. உம்பிக் குயிர்ஈறு செய்தான் ஒருவன்
தம்பிக் குயிர்ஈறு சமைத் தவனைக்
கம்பிப் பதைார்வன் துயர்கண் டிலனேல்
நம்பிக் கொருநன் மகனே இனிநான். 7828

ரு. கிட்டிப் பொருதக் கிளர்சே னைஎலாம்
மட்டித் துயர்வா னரர்வன் தலையை
வெட்டித் தரையிட் டிகல்வில் வினரைக்
கட்டித் தருவன் இதுகா ணுதியால். 7829

எ. சேனைக் கடலோ டிடைச்செல் கெனினும்
யான்இப் பொழுதே தனிஎ கெனினும்
தான்ஒத் தனசொல் லுதிதா விடைஎன்
ருன்இத் திறம்உன் னிஅரக் கர்பிரான். 7830

அ. சொன்னுய் இதுநன் றுதுணிந் தனைநீ
அன்னுன் உயிர்தந் தனையாம் எனில்யான்
பின்னுள இராமன் எனும் பெயரான்
தன்ஆ ருயிருண் டுசமிக் குவனுல். 7831

கூ. போவாய் இதுபோது பொலன் கழலோர்
மூவா யிரகோ டியரோ டுமுரண்
காவார் கரிதேர் பரிகா வலின்நின்
றேவா தனயா வையும்வ வினனுல். 7832

ம. கும்பக் கொடியோ னுங்கும் பனும்வே
றும்பொற் கழல்வீரன் அகம்ப னெடும்
செம்பொற் பொலிதேர் அயல்செல் குவரால்
உம்பர்க் கும்வெலற் கரியார் உறவோர். 7833

கக. ஆமத்த னைமா வுடைஅத் தனைதேர்
சேமத் தனைபின் புடைசெல் லநெடும்
கோமத் தமத கரிகோ டியொடும்
போமத் தனைவெம் புரவிக் கடலே. 7834

கஉ. ஓரேறு சிவற்குள தொப்புள வாம்
வாரேறு வயப்பரீ ஆயிரம் வன்
போரேறி டினேறுவ பூணுறு திண்
தேரேறு திதந் தனன்வெந் திறலோய். 7835

கந. என்றே விடைநல்க இறைஞ்சி எழா
வன்தாள் வயிரச் சிலைகைக் கொடுவான்
பொன்தாழ் கவசம் புகுதா முகிலின்
நின்ரூன் இமையோர்கள் நெளிந் தனரால். 7836

மச. பல்வே றுபடைக் கலம்வெம் பகலோன்
எல்வே றுதெரிப் பதொடே கினனுல்
சொல்வே றுதெழிக் குனர்சுற் றுனரால்
வில்வே றுதெரிக் கருமே கம்அனுன். 7837

மந. இழைதுஞ் சனமால் களிறெண் ணில்அரீ
முழைஅஞ் சமுழங் கினமும் முறைநீர்
உழைஅஞ் சமுழங் கினநா ண்ஒலி கோள்
மழைஅஞ் சமுழங் கினமா முரசே 7838

மசு. ஆர்த்தார் அகல்வா னகம்அஞ் சவடி
பேர்த்தார் நிலமா மகள்பேர் வதெனத்
தூர்த்தார் அலைவே லைகள்தூ ளியினுல்
வேர்த்தார் அதுகண்டு விசும் புறைவோர். 7839

மள. அடியோடு மதக்களி யானை களின்
பிடியோடு நிகர்த்தன பின்புற மூன்
றடியோடு துடக்கிய தாரைய வெண்
கொடியோடு துடக்கிய கொண்மூ எலாம். 7840

மஅ. தாருடின மால் கரியின் புடைதாள்
மாருடின வார் மதம்மண்டு தலால்
ஆருடின பாய் பரியானை களுஞ்
சேருடின சேண் நெறிசென்ற எலாம். 7841

மக. தேர்சென் றனசெங் கதிரோ னுடுதேர்
ஊர்சென் றனபோல் ஒளிர்ஓ டைகளின்
கார்சென் றனகார் நிரைசென் றனபோல்
பார்சென் றனசென் றிலபாய் பரியே. 7842

உம. மேருத் தனிவெற் பின்ம்ஓத் துநெடும்
பாரில் செலும்ஆ றுபடப் படரும்
தேர்சுற் றிடவே கொடுசென் றுமுரண்
போர்முற் றுகளத் திடைபுக் கன்ரால். 7843

உக. கண்டான் அவ்இரா மன்எனும் களிமா
உண்டா டியவெங் களம்உ டுருவப்
புண்தான் உறுநெஞ் சுபுழுக் கம்உறத்
திண்டா டினன்வந் தசினத் திறலோன். 7844

உஉ. மலிகண் டனபோல் வருவா ளெர்டுதேர்ள்
கலிகண் டகருங் கடல்கண் டுழல்வான்
நிலிகண் டன்கண் டொருதா ன்தெடுந்
தலிகண் டிலன்நின் றுசலித் தனனுல். 7845

உங. மிடல்ஒன் றுசரத் தொடுமீ துயர்வான்
திடல்அன் றுதிண்சக் களிற்ன் றெருதிண்
கடல்அன் றிதினைந் தைகடக் காியான்
உடல்என் றுயிராால் உயிர்த் தனனுல். 7846

உச. எல்லே இதுகா ணியளய் தினனே
வல்லே உளரா கியமா னிடரைக்
கொல்லேன் உயிர்நான் ஒருகோள் நெறியேல்
செல்லேன் எனில்இவ் இடர்தீர் குவனே. 7847

உரு. என்னு முனியா விதிழைத் துள்வன்
பின்னு னையும்இப் படிசெய் துபெயர்ந்
தன்னன் இடர்கண் டிடர்ஆ றுவன்என்
றுன்னு ஒருவற் கிதுரைத் தனனுல். 7848

உசு. வாநீ மயிடர் நெடுவல் விசையில்
போய்நீ அிலைக் குவனில் புகல்வாய்
நான்ச துமுனிந் தனன்நண் ணினனேல்
மேல்நீ தியஉன் னிவிளம் பீடுவாய். 7849

உள. அந்தார் இளவற் கயர்வெய் தியழும்
தந்தா தைமனத் திடர்தள் ளிடுவான்
உந்தா ரியரோ டுமுருத் தெரிவான்
வந்தான் எனமுன் சொல்வமுங் குதியால் 7850

உஅ. கோளுற் றவன்நெஞ் சுசுடக் குழைவான்
நாளுற் றஇருக் கையில்நன் கொருதன்
தாள்உற் றுருளத் தலைதள் ளிடுவான்
சூளுற் றதுமுண் டிதுசொல் லுதியால். 7851

உக. தீதென் னிவைசிந் தனைசெய் திலனுல்
ஈதான் றறமன் னெறியான் எனல்நீ
தூதென் றிகழா முறைசொல் வலதால்
போதென் றுடனே கொடுபோ துதியால். 7852

உஎ. செருஆ சையினுர் புகழ்தே டுவரால்
ஒருவோ ரையும்நீ அலதுற் றிதிரே
பொருவார் நமனுர் சிறைபுக் குறைவான்
வருவா ரைஎலாம் வருகென் னுதியால். 7853

உக. சிந்தா குலம்எந் தைதிரித் திடுவான்
வந்தான் எனஎன் எதிரே மதிதோய்
தந்தாய் எனின்யான் அலதார் தருவார்
உந்தா ரியவல் லஉவந் தளலாம். 7854

உஉ. வேறே அகிலக்கு வன்என் னவிளம்
பேறே வருமேல் இமையோர் எதிரே
கூறே பலசெய் துயிர்கொண் டுண்யும்
மாறே யும்ஓர்மன் எனவைக் குவனுல். 7855

உங. விண்ணு டியர்விஞ் சையர்அஞ் சொலினுர்
பெண்ணுர் அமுதன் னவர்பெய் தெவரும்
உண்ணு தனகூர் நறவுண்ட தசும்
பெண்ணு யிரஎண் என்வீ குவனுல். 7856

உச. உறைதந் தனசெங் கதிரோன் உருவில்
பொறைதந் தனகா சொளிர்பூண் இமையோர்
திறைதந் தனதெய் வநிதிக் கிழவன்
முறைதந் தன்தந்து முடிக் குவனுல். 7857

உஞ. மாரூம தவாரிய வண்டி னெடும்
பாரூடு முகத்தன பல் பகலும்
தேரூதன செங்கண வெங் களிமா
நூரூயிர மாயினும் நுந்துவ னுல். 7858

நக. செம்பொன் னின்அமைந் துசமைந் தனதேர்
உம்பர் நெடுவா னினும்ஒப் பலவால்
பம்பும் கணிதா ரணிபாய் பரிமா
இம்பர் நடவா தனவீ குவனுல். 7859

நஎ. நிதியின் நிறை குப்பை நிறைத்தனவும்
பொதியின் நிமிர் காசு பொறுத்தனவும்
மதியின் ஒளிர் தூசு வகுத்தனவும்
அதிகஞ் சக டாயிரம் ஈகுவனுல். 7860

நஅ. மற்றும் ஒருதீ தின்மணிப் பணிதந்
துற்றுன் னுழையா வையும்உந் துவனுல்
பொற்றிண் கழலோய் நனிபோ கெனலும்
எற்றுந் திரள்தோள் அவன்ஏ கினனுல். 7861

நக. ஏகித்தனி சென்றெதிர் எய்த லுறுங்
காகுத்தணி எய்திய காலையின் வாய்
வேகத்தொடு வீரர் விசைத் தெழலும்
ஓகைப்பொருள் உண்டென ஓதின னுல். 7862

சம. போத முதல்வாய் மொழியே புகல்வான்
ஏதம் அறியான் வறிதே கினனுல்
தூதன் இவனேச் சுளியன் மின்எனு
வேதம் முதல்நாதன் விலக்கின னுல். 7863

சக. என்வந்த குறிப்ப தியம்பென லும்
மின்வந்த வெயிற்றவன் வில்வல னின்
பின்வந் தவனே அறிபெற் றியதால்
மன்வந்த கருத்தென மன்னர் பிரான். 7864

சஉ. சொல்லா யதுசொல் விடுசொல் லிடெனு
வில்லா ளன்விளங் கிளையோன் வினவப்
பல்லா யிரகோ டிபடைக் கடல்முன்
நில்லாய் எனநின்று நிகழ்த்தின னுல். 7865

சங. உன்மேல் அதிகா யன்உருத் தெதிர்வான்
நன்மே ருவினின் றனன்நா டிஅவன்
தன்னேர் எதிரும் வலிதக் குளையேல்
பொன்மே னியஎன் னுடுபோ துதியால். 7866

சச. ரையப் படிவத் தொருதந் தையைமுன்
மெய்எப் படிசெய் தனன்நுன் முன்விரைந்
தையப் படலப் படியிப் படியில்
செய்யப் படுகிற் றிதெரீந் தனனுல். 7867

சரு. கொன்ரு ன்ஓழியக் கொலைகோள் அறியான்
நின்ரு னெடுநின்ற தெனே டிஎனில்
தன்தா தைபடுத் துயர்தந் தையைமுன்
வென்ரு னேஇயற் றுறும்வேட் கையினுல். 7868

சசு. வானேர் களுமண் ணில்உளோர் களும்மற்
றேனேர் களும்இவ் உரைசே ண்மின் அவன்
தானே பொருவான் அயலே தமர்வந்
தானு லும்உடன் பொருவான் அமைவான். 7869

சள. எழுவாய் இனிஎன் உடனென் றெரியும்
மழுவாட் நிகர்வெஞ் சொல்வழங் குதலும்
தழுவா உடனே குதிதான் எனவே
தொழுவார் தொழுதாள் அரிசொல் லுதலும். 7870

சஅ. எல்லாம் முடன் எய்தியபின் இவனே
வில்லாலெடு போர்செய வேண்டும் எனு
நல்லாடை வீடணன் நாரணன் முன்
சொல்லாடினன் அன்னவை சொல்லுது மால். 7871

சக. ஓவாநெடு மாதவம் ஒன்றுடை யான்
தேவாசுரர் ஆதியர் செய் செருவில்
சாவான் இறையும் சலியா வலியான்
மூவா முதல்நான் முகனுர் மொழியால். 7872

நும. கடமே கயிலைக் கிரிகண் நுதலோ
டிடமே றவெடுத் தவனே இவ்வீன்
திடமே உலகில் பல தேவரொடும்
வடமேரு எடுக்க வளர்த்தன னுல் 7873

நுக. மாலாரொடு மந்தர மாசுண மும்
மேலாயின தேவரும் வேண்டும் எனு
ஆலா லமும் ஆரமுதும் அமையக்
காலால் நெடுவேலை கலக்கிடு மால். 7874

ருஉ. ஊழிக்கும் உயர்ந்துள நாளொடும் வாழ்
பாழித்திசை நின்று சுமந்த பணை
சூழிக் கரிதள் ளுதல்தோள் வலியோ
ஆழிக்கிரி தள்ளும் ஓர் அங் கையினுல். 7875

ருங. காலங்கள் கணக்கில கண் இமையா
ஆலங்கொள் மிடற்றவன் ஆர் அமுல் வாய்
வேலங் கெறியக் கொடுவிட் டதுநீ
சூலங் கொல்எனப் பகர்சொல் லுடையான். 7876

ருச. பகையாடிய வானவர் பல்வகை ஊர்
புகையாடிய நாள்புணை வாகையி னுன்
மிகையாருயிர் உண்ணென வீசிய வெங்
தகையாழி தகைந்த தனுத் தொழிலான். 7877

ருரு. உயிர்ஒப்புறு பல்படை உள்ள தெலாம்
செயிர்ஒப்புறும் இந்திரர் சிந்திய நாள்
அயிர்ஒப்பன நுண்துகள் செய்தவர் தம்
வயிரப்படை சிந்திய வாளியி னுன், 7878

ருசு. கற்ருன் மறைநூலொடு கண்நுதல் பால்
முற்ரு தெனதேவர் முரட்படை தான்
மற்ருரும் வழங்க வல்லாரி யலாம்
பெற்ருன் நெடிதாண்மை பிறந்துடை யான். 7879

ருள. அறனல்லது வல்லது மாறறி யான்
மறனல்லது பல்லணி மாறறி யான்
திறனல்லதொர் ஆருயி ருஞ்சிதை யான்
உறநல்லன பேரிசை ஒன்றுடை யான். 7880

ருஅ. காயத் துயிரே விடுகா லையினும்
மாயத்தவர் கூடி மலைத் திடினும்
தேயத்தவர் செய்யல செய் திடினும்
மாயத்திறல் செய்ய மதித் திலனுல். 7881

ருக. மதுகையிட வாரென வானவர் தம்
பதிகைகொடு தொட்டவர் பண்டொரு நாள்
அதிகைதவர் ஆழி அனந்தனீ யும்
விதிகைமுக முட்டிய வேட்கையி னுர். 7882

கூடி. நீராழி இழிந்து நெடுந் தகையைத்
தாராயமர் என்றனர் தாம்ஒரு நாள்
ஆராழிய அண்ணலும் அஃதி சையா
வாராய்அமர் செய்கென வந்தன னுல். 7883

கூக. வல்லார் கரம்ஆ யிரமாய் வரினும்
நல்லார் முகம்வீச நகும் தொழிலார்
மல்லால் இளகாது மலிந்தனர் மா
றல்லாயிரம் ஆயிரம் மஃகின் வால். 7884

கூஉ. தன்போல் பவர்தானும் இலாத தனிப்
பொன்போல் ஒளிர்மே னியணைப் புகழ்
என்போல் பலபோலுவ எண்ணுடை யார்
என்போ லியர்யார் உள்ரென் றுரையாய். 7885

கூங. ஒருவோம் உலகேழையும் உண்டுமிழ் வோம்
இருவோ மொடுநீ தனிஇத் தணைநாள்
பொருவோம் எனவே பொருதாய் புகழோய்
தருவோம் நின்மனத் தனதந் தனரால். 7886

கூச. ஒல்லும் படிநல் லதுனக் குதவச்
சொல்லும் படிஎன் றவர்சொல் லுதலும்
வெல்லும் படிநும் மைவிளம் பும்எனக்
கொல்லும் படியால் அரிகூ றுதலும். 7887

கூடு. இடையில் படுகிற் கிலம்யாம் ஒருநின்
துடையில் படுகிற் றும்எனத் துணியா
அடையில் படகிற் றியதா ணைஎனு
நடையில் பொலிநீ தியர்நல் கினரால். 7888

கூசு. வீட்டான் உலகேழையும் மேலொடு கீழ்
அட்டா ஒருவன் தன்இடத் துடையால்
ஒட்டா தவர்ஒன் றினர்ஊழ் வினையில்
பட்டார் இதுபட்டது பண்டொரு நாள். 7889

கூஎ. தனிநாயகன் வன்கதை தன்கை கொளா
நனிசாட வீழ்ந்தனர் நாள் உலவா
பனியாம் அதுமே தையினில் படமே
தினியா யதுபூ உலகெங் கணுமே. 7890

கூஅ. விதியால்இவ் உகந்தனில் மெய்வலி சால்
மதுவானவன் எம்முன் மடிந்தன னுல்
கதிர்தானிகர் கயிடவன் இக்கதிர் வேல்
அதிகாயன தாக அறிந்தன னுல். 7891

கூகூ. என்றுன்அவ் இராவண னுக்கிளை யான்
நன்றுகுக என்றெரு நாயக னும்
மின்தான் நிமிர்வெண் நகைவே றுசெயா
நின்றுன் இதுகூற நிகழ்த்தின னுல். 7892

எம. எண்ஆ யிரகோடி இராவண ரும்
விண்நா டரும்வே றுலகத் தவரும்
நண்ணு ஒருமூ வரும்நண் ணிடினும்
கண்ணுல் இவன்வில் தொழில்கா ணுதியால். 7893

எக. வான் என்பதென் வையகம்என்ப தென்மால்
தான் என்பதென் வேறுதனிச் சிலையோன்
யான் என்பதென் ஈசன்என் வானவர்தம்
கோன் என்பதென் எம்பி கொதித்திடுமேல். 7894

எஉ. தெய்வப் படையும் திறலும் சினமும்
மைஉற் றெழு மாயமும் மற்றும்எலாம்
எய்தற் குளவோ இவன்அச் சிலையில்
கைவைப் பளவே இதுகா ணுதி யால். 7895

எங. என்தேவியை வஞ்சனை செய் தெழுவான்
அன்றே முடிவான் இவன் அன்னவள்சொற்
குன்றேன் எனஎய் தியகொள் கையினுல்
நின்றுன் உளன்ஆ யெடுங் தகையோன். 7896

எச. நீரைக் கொடுநீர் எதிர்நிற் கொணுமோ
தீரக் கொடியா ரொடுதே வர்பொரும்
போரைக் கொடுவந் துபுகுந் ததுநான்
ஆரைக் கொடுநீ யதறிந் திலையோ. 7897

எடு. சிவன்அல் லன்எனில் திருவின் பெருமான்
அவன்அல் லன்எனில் புவிதந் தருளும்
தவன்அல் லன்எனில் தனியே வலியோன்
இவன்அல் லன்எனில் பிறர்யார் உளரோ. 7898

எசு. ஒன்ரு யிரவெள் ளம்ஒருங் குளதாம்
வ்ன்தா னையின்வந்து மலைந்த எலாம்
கொன்ரூன் இவன்அல் லதுகொண் டுடனே
ரின்ரூர் பிறர்இன் மைரிணைந் திலையோ. 7899

எஎ. ஏகாய் உடன்ரீ யும்எதிர்ந் துளனும்
மாகா யனெடுந் தலைவா ளியொடும்
ஆகா யம்அளந் துவிழுந் ததனைக்
காகா திகள்நுங் குதல்கா ணுதியால். 7900

எஅ. கொல்வா னும்இவன் கொடியோ ரைஎலாம்
வெல்வா னும்இவன் முதல்வீண் ணெடனு
ஒல்வா னும்இவன் உடனே ஒருரீ
செல்வாய் எனஏ வுதல்செய் தனனுல். 7901

எக. அக்கா லிலைலக் குவன்ஆ ரியனை
முக்கா லும்வலங் கொடுமூ துணர்வின்
மிக்கான் மதிவீ டணன்மெய் தொடரப்
புக்கான் அவன்வந் துபுகுந் தகளம். 7902

அம. சேனைக் கடல்சென் றதுதிண் கடல்மேல்
ஏனைக் கடல்வந் ததெழுந் ததென
ஆனைக் கடல்தேர் பரியாள் மிடையும்
தானைக் கடலோ டுதலைப் படலும். 7903

அக. பசும்படு குருதியில் பண்டு சேறுபட்
டசும்புற உருகிய உலகம் ஆர்த்தெழுக்
குசும்பையின் நறுமலர்ச் சுண்ணக் குப்பையின்
விசும்பையுங் கடந்தன விரிந்த தூளியே. 7904

அஉ. தாம்இடித் தெழும்பணை முழக்கும் சங்கினம்
ஆம்இடிக் குமுறலும் ஆர்ப்பின் ஓதையும்
ஏமுடைக் கொடுஞ்சிலை இடிக்கு எஞ்சித்தன்
வாய்மடித் தொடுங்கின மகர வேலையே. 7905

அங. உலைதொறுங் குருதிநீர் அருவி ஓடுவ
இலைதுறு மரம்எனக் கொடிகள் இற்றன
மலைதொறும் படர்ந்தன மான ஆனையின்
தலைதொறும் பாய்ந்தன குறங்கு தாவியே. 7906

அச. கிட்டின கிளைநெடுங் கோட்டம் கீழ்உக
மட்டின அருவியின் மதத்த வானரம்
விட்டன நெடுவரை வேழம் வேழத்தை
முட்டின ஒத்தன முகத்து வீழ்வன. 7907

அடு. இடித்தன உறுக்கின இறுக்கி எற்றின
தடித்தன எயிற்றினுல் தலைகள் சந்தறக்
கடித்தன கவிக்குலம் கால்கள் மேற்படத்
துடித்தன குருதியில் துரக ராசியே. 7908

அசு. அடைந்தன கவிக்குலம் எற்ற வற்றென
குடைந்தன கால்பொரப் பூளைக் குப்பைகள்
மிடைந்தன முகில்குலம் இரிந்து சாய்ந்தென
உடைந்தன கரிமருப் புகுத்த முத்தமே. 7909

அஎ. தோல்படப் புளைந்தன வயிரத் தூண்அணி
கால்படக் கைபடக் கால பாசம்போல்
வால்படப் புரண்டனர் நிருதர் மற்றவர்
வேல்படப் புரண்டனர் கவியின் வீரரே. 7910

அஅ. மரவமும் சிலையொடு மலையும் வாள்எயிற்
றரவமுங் கரிகளும் பரியும் அல்லவும்
விரவின கவிக்குலம் வீச விம்மலால்
உரவரும் கான்எனப் பொலிந்த தும்பரே. 7911

அகூ. தடவரை கவிக்குலத் தலைவர் தாங்கின
அடல்வலி நிருதர்தம் அனிக ராசிமேல்
விடவிட விசும்பிடை மிடைந்து வீழ்வன
படர்கடல் இனமழை படிவ போன்றதே. 7912

கூஅ. இழுக்கினர் அடிகளின் இங்கும் அங்குமாய்
மழுக்களும் அயில்களும் வாளும் தோள்களும்
முழுக்கினர் உழக்கினர் மூரி யானையை
ஒழுக்கினர் நிருதரை உதிர ஆற்றினே. 7913

கூக, மிடல்உடைக் கவிக்குலம் குருதி வெள்ளநீர்
இடைஇடை நீந்தின எய்த யானையின்
திடர்இடைச் சென்றவை ஒழுக்கிச் சேர்ந்தன
கடல்இடைப் புக்கன கரையும் காண்கில. 7914

கூஉ. கால்பிடித் தீர்த்திழி குருதிக் கண்ணகல்
சேல்பிடித் தெழுதிரை யாற்றில் திண்நெடும்
கோல்பிடித் தொழுகிய குருடர் கூட்டம்போல்
வால்பிடித் தொழுகின கவியின் மாலையே. 7915

கூஊ. பாய்ந்தது நிருதர்தம் பரவை பன்முறை
காய்ந்தது கடும்படை விலக்கிக் கைதொறும்
தேய்ந்தது சிதைந்தது சிந்திச் சேண்உறச்
சாய்ந்தது தணைப்பெரும் கவியின் தானையே. 7916

கூஎ. அத்துணை இலக்குவன் அஞ்சல் அஞ்சல்என்
றெத்துணை மொழிகளும் இயம்பி ஏற்றதன்
கைத்துணை வில்லினைக் காலன் வாழ்வினை
மொய்த்தெழு நாண்ஒலி முழங்கத் தாக்கினான். 7917

கூஏ. நூன்மறைந் தொளிப்பினும் நுவன்ற பூதங்கள்
மேன்மறைந் தொளிப்பினும் விரிஞ்சன் வீயினும்
கான்மறைந் தொளிப்பினும் கடையில் கண்அகல்
நான்மறை ஆர்ப்பென நடந்த தவ்வொலி. 7918

கூஐ. துரந்தன சுடுசரம் துரந்த ஒன்றல
கரந்தன நிருதர்தம் கரையில் ஆக்கைகள்
நிரந்தன நெடும்பிணம் விசும்பின் எஞ்சுறப்
பரந்தன குருதியில் பள்ள வெள்ளத்தே. 7919

கூஒ. யானையின் கரம்துணித் தெதிர்ந்த வீரர்தம்
வான்உயர் முடித்தலை தடிந்து வாசியின்
கான்நிரை அறுத்துவெம் கறைக்கண் மொய்ம்பரை
ஊன்உடை உடல்பிளந் தோடும் அம்புகள். 7920

கூஓ. வில்லிடை அறுத்துவேல் துணித்து வீரர்தம்
எல்இடு கவசமும் மார்பும் ஈர்த்தெறி
கல்இடை நுறுக்கிஆன் தடிந்து தேர்கழீஇக்
கொல்லிய யானையைக் கொல்லும் கோல்களே. 7921

கூக. வெற்றிவெங் களிகளின் வளைந்த வெண்மருப்
பற்றது விசைகளின் உம்பர் அண்ணின
முற்றரு முப்பகல் திங்கள் வெண்முகீ
உற்றன விசும்பிடைப் பலவும் ஒத்ததே. 7922

ா. கண்டகர் நெடுந்தலை கனலும் கண்ணகன்
துண்டவெண் பிறைத்துணை கவ்வித் தூக்கிய
குண்டல மீன்குலம் தழுவிக் கோள்மதி
மண்டலம் வீழ்வன போன்ற மண்ணினே. 7923

ாக. கூர்மருப் பிணையன குறைந்த கையன
கார்மதக் கனக்கிரி கவிழ்ந்து வீழ்வன
போர்முகக் குருதியின் புணரி புக்கன
பார்மிசை எடுக்குறும் பன்றி போன்றன. 7924

ாஉ. புண்ணுற உயிர்உகும் புரவி பூட்டறக்
கண்ணகன் தேர்க்குலம் மறிந்த காட்சிய
எண்ணுறு பெரும்பதம் வீணையின் எஞ்சிட
மண்உற விண்ணின்வீழ் மானம் போன்றன. 7925

ாங. அடக்கரும் கவந்தம்நின் றாடு கின்றன
விடற்கரும் வினையறச் சிந்தி மெய்உயிர்
கடக்கரும் துறக்கமே கலந்த ஆம்என
உடற்பொறை உவகையில் குனித்த தொத்ததே. 7926

ாச, ஆடின கவந்தம்ஒன் றுறெண் ணுயிரம்
வீடிய பொழுதினும் பனுவன் மெய்யதோ
கோடியின் மேல்உள பொருத கொற்றவன்
பாடினி ஒருவரால் பகரல் பாலதோ. 7927

ாரு. ஆனையின் குருதியும் அரக்கர் சோரியும்
ஏனைவெம் புரவியின் உதிரத் தீட்டமும்
கானினும் மலையினும் பரந்த காற்புனல்
வானயா றும்எனக் கடல் மடுத்ததே. 7928

ாசு. தாக்கிய சரங்களில் தலைகள் நீங்கிய
ஆக்கிய புரசையோ டணைந்த தாள்அன்
மேக்குயர் அங்குசக் கைய வெங்கரீ
நாக்குவ கணிப்பில அரக்கர் நோன்பிணம். 7929

ாஎ. வைவன முனிவர்சொல் அனைய வாளிகள்
கொய்வன தலைகளைக் குறைத்த லைக்குழாங்
கைவளை வரிசிலை பிடித்த கைவிடா
தெய்வன எனைப்பல துரத வீரரே. 7930

ாஅ. கோளுடைக் கணைபடப் புரவிக் கூத்தன
தோளுடை நெடுந்தலை துணிந்து தீர்கில
ஆளுடைக் குறைத்தலை அதிர ஆடுவ
வாளுடைத் தடக்கைய வாசி மேலன. 7931

ாகூ. தாதையைத் தம்முனைத் தம்பி யைத்தனிக்
காதலைப் பேரணை மருகனைக் களத்
தூதையின் ஒருகணை உருவ மாண்டனர்
சீதையென் றொருபெருங் கூற்றம் தேடியே. 7932

ாகo. தூண்டரும் கணைபடத் துணிந்து துள்ளிய
தீண்டரும் நெடுந்தலை தழுவிச் சேர்ந்தன
பூண்டன கரதலம் பொறுக்க லாதன
ஆண்டலை நிகர்த்தன எருவை ஆடுவ. 7933

ாகக. ஆயிரம் அயிரங் கோடி யாய்வரும்
தீஉமிழ் கொடுங்கணை மனத்தில் செல்வன
பாய்வன புகுவன நிருதர் பல்உயிர்
ஓய்வன நமன்தமர் கால்கள் ஓடியே. 7934

ாகஉ. விளக்குவான் கணைகளால் விளிந்து மேருவைத்
துளக்குவார் உடல்பொறை துணிந்து துன்னுவார்
இளக்குவார் அமரர்தம் சிரத்தை யெண்முது
குளுக்குவாள் நிலமகள் பிணத்தின் ஓங்கலால். 7935

ாகங. தாருகன் என்றுளன் ஒருவன் தான்நெடு
மேருவின் பெருமையால் எரியின் வெம்மையான்
போர்உவந் துழல்குவான் புகுந்து தாக்கினன்
தேரினன் சிலையினன் உமிழும் தீயினன். 7936

ாகச. துறந்தனன் நெடும்சரம் நெருப்பின் தோற்றத்த
பரந்தன விசும்பிடை ஓடுங்கப் பண்டுடை
வரந்தனின் வளர்வன அவற்றை வள்ளலும்
கரந்தனன் கணைகளால் முனிவு காந்துவான். 7937

ாகடு. அண்ணல்தன் வடிக்கணை துணிப்ப அற்றன
கண்ணகன் நெடுந்தலை விசையில் கார்என
விண்இடை ஆர்த்தன விரைவின் வெவ்வுயிர்
உண்ணிய வந்தவெங் கூற்றும் உட்கவே. 7938

ாகசு. காலனும் குலிசனும் கால சங்கனும்
மாலியும் மருத்தனும் மருவும் ஐவரும்
பாலமும் கணிச்சியும் கடிது பற்றினர்
சூலமும் ஆலமும் அயிலும் தூவுவான். 7939

ாகள. அன்னவர் எய்தன எறிந்த ஆயிரந்
துன்னரும் படைக்கலம் துணியத் தூவினன்
நன்னெடும் தலைகளும் தடிந்து நால்வகைப்
பன்னெடும் தானையைப் பாற நூறினன். 7940

ாகஅ. ஆண்டதி காயன்தன் சேனை ஆண்டவர்
ஈண்டின மதகரி ஏழ்எண் ணுயிரம்
தூண்டினர் மருங்குறச் சுற்றினர் தொகை
வேண்டின படைக்கலம் மழையின் வீசினர். 7941

ாகக. போக்கிலா வகைப்புறம் வளைத்துப் பொங்கினர்
தாக்கினர் திசைதொறும் தடக்கை மால்வரை
நூக்கினர் படைகளை நுறுக்கி னர்குழம்
பாக்கினர் கவிகள்தம் குழுவை ஆர்ப்பினர். 7942

ாஉம். எறிந்தன எய்தன எய்தி ஒன்றொடொன்
றறைந்தன அசனியின் விசைய வாரியின்
நிறைந்தன மழைஎன நெருக்கி நிற்றலால்
மறைந்தன உலகொடு திசையும் வானமும். 7943

ாஉக. அப்படை அனைத்தையும் அறுத்து வீழ்த்தவர்
துப்புடைக் கைகள்தாள் துணித்துச் சுற்றிய
மூப்புடை மதமலைக் குலத்தை முட்டினன்
எப்புடை மருங்கினும் எரியும் வாளியால். 7944

*ாஉஉ. குன்றெனு மதகரி கொம்பொடு கரம்அற
வன்தலை துமிதர மஞ்சென மறிவன
ஒன்றல ஒருபதும் ஒன்பதும் ஒருகணை
சென்றரி தரமழை சிந்தின மதமலை. 7945

ாஉங. ஒருதொடை வருவன உருமுறழ் கணைபட
இருதுடை புரசையொ டறுபவர் எறிபடை
விருதுடை நிருதர்கள் மலைஎன விழுவர்கள்
பொருதுடை வணமத மலைஅன புகர்மலை. 7946

7947. பருமமு துகிடை படிகையும் வலிபடர்
மருமமும் வழிபட நுழைவன வடிகணை
உருமினும் வலியன உருள்வன திசைதிசை
கருமலை நிகர்வன கதமலை கனல்வன.

7948. இறுவன கொடியவை எறிவன இடைஇடை
துறுவன சுடுகணை துணிவன மதகரி
அறுவன அவைஅவை கடவினர் அமைதலை
வெறுமைகள் கெடுஎன விழிகுழி கழுதுகள்.

7949. மிடலொடு விடுகணை மழையினும் மிகையன
படலொடும் உரும்எறி பருவரை நிரைஎன
உடலொடும் உருள்கரி உதிரம துருகெழு
கடலொடு பொருதது கரியொடு கரிஎன.

7950. மேலவர் மடிதலின் விடுமுறை யிலமிடல்
ஆலமும் அசனியும் அனையன வடுகரி
மாலுறு களியன மறுகின மதமழை
போல்வன மதகரி எதிர்எதிர் பொருதன.

7951. கால்சில துணிவன கரம்அறு வன்கதழ்
வால்சில துணிவன வயிறுகள் வெளிபட
நால்வன குடர்சில நகழ்வன சிலசில
தோல்சில கணைபல சொரிவன மழையன.

7952. முட்டின முட்டற முரண்உறு திசைநிலை
எட்டினும் எட்டற நிலையன அவைஅவர்
விட்டன விட்டன விடுகணை படுதொறும்
பட்டன பட்டன படுமத கரிபல.

7953. அறுபது முதலினொ டாறமை ஆயிரம்
இறுதிய மதகரி இறுதலும் எரிஉமிழ்
தறுகணை தகைவரு நிலையன சலம்உறு
கறுவினர் வரைஎதிர் கடவினர் கடல்என

7954. எல்லையின் மதகரி இகலிரி நிகர்வன
செல்வன முடிவிலை தெறிதொழில் மறவினை
வில்லியை இனியிது விடுகணை மழைஎன
கொல்லுதி எனஎதிர் கடலினர் கொடியவர்.

ாஙஉ. வந்தன மதகரி வலிதலின் மழைபொதி
செந்தனி ஒருசுடர் எனமறை திறலவன்
இந்திர தனுஎன எழுசிலை குனிவுழி
தந்தியின் நெடுமழை சிந்தின தரையினில். 7955

*ாஙங. மையற்றழைசெவிமுப்பொழி மழைபெற்றனமலியின்
மெய்பெற்றன கடல்ஒப்பன வெயில்உக்கன விழியின்
மொய்பெற்றனமுதுகிற்றன முகம்உக்கனமுரண்வெங்
கையற்றன மதமுற்றின களிஅற்றில கதமா. 7956

ாஙச. உண்ணின்றலி அலறீர்உக இறுதிக்கடை உறுகால்
எண்ணின்றலி நிமிர்கின்றன இகல்வெங்கணை இரணப்
பண்ணின்படர் தலையில்பட மடிகின்றன பலவாய்
மண்ணின்றலி உகுகின்றன மழைஒத்துயர் மதமா.

ாஙரு. பிறைபற்றிய எனும்நெற்றிய பிழைஅற்றன பிறவும்
பறைஅற்றமில் வசைஅற்றன வரியக்கிரி அமரர்க்
கிறைபற்றிய முனிவில்படை எறியப்படை எழுபொன்
சிறைஅற்றன எனஇற்றன சினமுற்றின சிலமா.

ாஙசு. கதிர்ஒப்பன கணைபட்டில கரமற்றில கதழ்கார்
அதிரத்தனி திரள்கைக்கரி அளவற்றன அளவா
எதிர்பட்டனல் பொழியக்கிரி இடறித்திசை எழுகார்
உதிரத்தொடும் ஒழுகிக்கடல் நடுஉற்றவும் உளவால்.

ாஙள. கண்ணின்றலி அயில்வெங்கணை படநின்றவை காணூ
எண்ணின்றலி நிமிர்வெங்கத முதிர்கின்றன இகன்மா
மண்ணின்றலி நெரியும்படி திரிகின்றன மலிபோல்
உண்ணின்றலி நிருதக்கடல் உழறிட்டன உளவால்.

ாஙஅ. ஓராயிரம் அயில்வெங்கணை ஒருகால்விடு தொகையில்
காராயிரம் விடுதாரையின் நிமிர்கின்றன கதழ்வுற்
றீராயிர மதமால்கரி விழுகின்றன இனிமேல்
ஆராய்வதென் அவன்வில்தொழில்அமரேசரும் அறியார்

ாஙக. தேரும்தெறு கரியும்பொரு சினமள்ளரும் வயவெம்
போரின்தலி உகழ்கின்றன புரவிக்குலம் எவையும்
பேரும்திசை பெறுகின்றல பெருகும்திறல் மதவெங்
காரின்கரு குருதிப்பொரு கடல்நின்றன கடவா. 7962

ாசஅ. நூறுயிர மதவெங்கரி ஒருநாழிகை நுவலக்
கூறுயின பயம்உற்றிரு குலோவாயின உலகம்
தேறுதன மலோஎன்றன தெரியாதன சினமா
வேறுயின அவையாவையும் உடனேவர விட்டான்.

ாசக. ஒருகோடிய மதமால்கரி உளவந்தன உடன்முன்
பொருகோடியின்உயிர்உக்கனபொழியப்பொழிமதவால்
தருகோடுவ வரவந்தினர் அசனிப்படு கணையால்
இருகோடுடை மதவெஞ்சிலை இளவாளரி எதிரே. 7964

ாசஉ. உலகத்துள மலோஎத்தனை அவைஅத்தனை உடனே
கொலோநிற்பன பொருகிற்பன புடைசுற்றின குழுவா
அலகற்றன சினமுற்றின அனல்ஒப்பன அவையும்
தலோஅற்றன சரம்அற்றன தனிவில்தொழில் அதனுல்.

ாசஙு. நாலாயின நவயோசனை நனிவன்திசை எவையும்
மாலாயின மதவெங்கரி திரிகின்றன வரலும்
தோலாயின துலகெங்கணும் எனஅஞ்சின துகளே
போலாயின வயவானரம் அன்றுயின புவியே. 7966

ாசஎ. கடைகண்டன தலோகண்டில கழுகின்திரள் பிணமாம்
இடைகொண்டன மலோகொண்டன எழுகின்றன துரையால்
புடைகொண்டெறி குருதிக்கடல் புனர்கின்றனபொறிவெம்
படைகொண்டிடை படர்கின்றன மதஆறுகள்பலவால். 7967

ாசஞு. ஒற்றைச்சரம் அதனுலொடொரு கரிபட்டுக ஒளிர்வாய்
வெற்றிக்கணை உரும்ஒப்பன வெயில்ஒப்பன அயில்போல்
வற்றக்கடல் சுடுகிற்பன மழைஒப்பன பொழியும்
கொற்றக்கரி பதினுயிரம்ஒருபத்தியில்கொல்வான். 7968

ாசசு. மலோஅஞ்சின மழைஅஞ்சின வனம்அஞ்சின பிறவும்
நிலோஅஞ்சின திசைவெங்கரி நிமிர்கின்றன கடலின்
அலோஅஞ்சின பிறிதென்சில தனியைங்கர கரியும்
கொலோஅஞ்சுதல் புரிகின்றன கரியின்படி கொளலால்.

ாசஎ. காலேறின சிலைநாண்ஒலி கடலேறுகள் படவான்
மேலேறின மிசையாளர்கள் தலோமெய்தொறும் உருவக்
கோலேறின உரும்வ றுகள் குடியேறின எனலாய்
மாலேறின களியாணைகண் மழைவ றென மறிய. 7970

ரசஅ. அவ்வேலையில் அனுமான்முதல்எழுவேலையும்அணையான்
வெவ்வேலவர் செல்லவிய கொலையாணையின் மிசையே
செவ்வேசெல நினையாஒரு செயல்செய்குவன் என்பான்
தவ்வேன்என வந்தான்அவர் தனிவேல்எனத் தகைவான்.

ரசக. ஆர்த்தங்கனல் விழியாமுழு மதஆனையை அனையான்
தீர்த்தங்கழல் பரவாமுதல் அரிபோல்வரு திறலான்
வார்த்தங்கிய கழலான்ஒரு மரம்நின்றது நமனூர்
போர்த்தண்டினும்வலியாப்அது கொண்டான்புகழ்கொண்டான்.

ரஉ. கருங்கார்அன நெடுங்கைஅன களியாணைக ளொடுசென்
றெருங்காயின உயிர்மாய்ந்தன பிரிதென்பல உரையா
வருங்காலமும் பெரும்பூதமும் மழைமேகமும் உடனுய்ப்
பொருங்காலியின் மலைமேல்விழு உரும்என்னப்புடைத்தான்.

ரஙக. மிதியால்பல விசையால்பல மிடலால்பல இட்டுங்
கதியால்பல தெழியால்பல காலால்பல வாலின்
நுதியால்பல நுதலால்பல நொடியால்பல பயிலுங்
குதியால்பல குமையால்பல கொன்றுன் தனிநின்றுன்.

பறித்தான்சில பகிர்ந்தான்சில வகிர்ந்தான்சில பணைபோல்
இறுத்தான்சில இடந்தான்சில பிளந்தான்சில எயிற்றுல்
கறித்தான்சில கவர்ந்தான்சில கரத்தால்சில பிடித்தான்
முறித்தான்சில திறத்தாணையின் நெடுங்கோடுகள் முனிந்தான்.

ரஙஉ. வாரிக்குரை கடலில்புக வெறியுங்நெடு மரத்தால்
சாரித்தலைத் துருட்டுங்நெடு நிலத்தில்படுத் தரைக்கும்
பாரில்பிடித் தெற்றுங்குடர் பறிக்கும்நெடும் விசும்பின்
ஊரில்செல வீசும்மிதித் துழக்கும்முகத் துதைக்கும். 7976

ரஙச. வாலால்வர வளைக்கும்நெடு மலைப்பாம்பென வளையா
மேலாளொடு பிசையுமுழு மலையிற்செல வீசும்
ஆலாலமுண் டவனேஎன அலவாயிலிட் டதுக்குந்
தோலாயிரம் இரைப்போதினில் அரிவறெனத் துகைத்தான்.

ரஙடு. சையத்தினும் உயர்வுற்றன தறுகட்களி மதமா
நொய்தில்கடி தெதிர்உற்றன நூறுயிர மாறு
மையல்கரி உயிரிலசில விண்புக்கன மறையத்
தொய்யல்படர் அழுவத்தொடு சேறுய்எழத் துகைத்தான்.7978

ஈருசு. வேருயின மதவெங்கரி ஒருகோடியின் விறலோன்
நூருயிரம் படுத்தான்அது நுவல்காலியின் இளையோன்
கூருயின பெறஅன்னவை கொலைவாளியில் அறுத்தான்
தேருததோர் பயத்தால்நெடுந் திசைகாவலர் இரிந்தார். 7979

கடுஎ. இரிந்தார்திசை திசைஎங்கனும் யாணைப்பிணம் எற்ற
நெரிந்தார்களும் நெரியாதுயிர் நிலைத்தார்களும் நெருக்காற்
றெரிந்தார்நெடும் தடந்தேர்இழிந் தெல்லாருமுன் செல்லத்
திரிந்தான்நெடுந் தனியேஒரு தேவாந்தகன் சினத்தான்.

கடுஅ. உதிரக்கடல் பிணமால்வரை ஒன்றல்லன பலவாய்
எதிரக்கடு நெடும்போர்க்களத் தொருதான்புகுந் தேற்றான்
கதிரொப்பன சிலவெங்கணை அனுமான்உடற் கரந்தான்
அதிரத்தட நெடுந்தேரினன் மழையாம்என ஆர்த்தான். 7981

கடுகூ. அப்போதினின் அனுமானும்ஓர்மரம்வந்திறின்றூர்த்தான்
இப்போதிவன் உயிர்போம்என உரும்ஏறென எறிந்தான்
வெப்போஎன வெயில்கால்வன அயில்வெங்கணை விசையால்
துப்போஎனத் துணியாநெடும் தேவாந்தகன் துரந்தான்.

கசுஅ. மாருங்கொரு மலைவாங்கினன் வயவானரக் குலத்தோர்
ஏருங்கது எறியாதமுன் முறியாய்உக எய்தான்
கோருங்கிய சிலையான்உடன் நெடுமாருதி கொதித்தான்
பாருங்கெனப் புகப்பாய்ந்தவன் நெடுவில்லினைப் பறித்தான்.

பறித்தான்நெடும் பகைவானரப் படைஆர்த்திடப் பலவாய்
முறித்தான்இவன் வலிகண்டுயர் தேவாந்தகன் முனிந்தான்
மறித்தாங்கொரு சுடர்த்தோமரம் வாங்காமிக ஓங்காச்
செறித்தான்இவன் தடந்தோள்மிசை இமையோர்களும் நிகைத்தார்.

சுடர்த்தோமரம் எறிந்தார்த்தலும் கனலாம்எனச் சுளிந்தான்
அடர்த்தோர்மரம் பறித்தான்திரித் துரும்வெறென வடித்தான்
புடைத்தான்அவன் தடந்தேரொடும் நெடுஞ்சாரதி புரள
மடத்தோகையர் வலிவென்றவன் வாணுர்முகம் மலர்ந்தார்.

சூலப்படை தொடுவான்தனை இமையாதமுன் தொடர்ந்தான்
ஆலத்தினும் கடியானும்வந் தெதிரேபுகுந் தடர்ந்தான்
காலத்திரு கண்ணுன்தனிக் கையால்அவன் கதுப்பின்
மூலத்திடை புடைத்தான்உயிர் முடிந்தான்சிரம் இடிந்தான்.

கசுச. கண்டான்எதிர் அதிகாயனுங்கனலாம்எனக்கனன்ருன்
புண்தான்எனப் புனலோடிழி உதிரம்விழி பொழிவான்
உண்டேன்இவன் உயிர்இப்பொழு தொழியேன்எனஉரையாத்
திண்தேரினைக் கடிதோட்டினன் சென்ருன்இவன் நின்ருன்.

கசுரு. அன்னன்வரும் அளவின்தலை நிலைநின்றன அனிகம்
பின்ஆனது முன்ஆனதும் பிறிந்தார்களும் செறிந்தார்
பொன்னுல்உயர் நெடுமால்வரை போல்வான்எதிர் புக்கான்
சொன்னுன்இவை அதிகாயன்அச் சுடர்மாருதி முன்னர். 7988

தேய்த்தாய்ஒரு தனிஎம்பியைத் தலத்தோடொரு திறத்தால்
போய்த்தாயினை நெடுமாகடல் பிழைத்தாய்எனப் புகுந்தாய்
வாய்த்தாயினையும் மடித்தாய்அது கண்டேன்எதிர் வந்தேன்
ஆய்த்தாயது முடிவின்றுனக் கணித்தாகவந் தடைந்தாய். 7989

கசுஎ. இன்றல்லது நெடுநாள்உனை ஒருநாளினும் எதிரேன்
ஒன்றல்லது செய்தாய்பல இலையோனையும் உனையும்
வென்றல்லது மீளாதுஎன் மிடல்வெங்கனை மழையால்
கொன்றல்லது செல்லேன்இது கொள்என்றனன் கொடியோன். 7990

பிழையாதிது பிழையாதெனப் பெருங்கைத்தலம் பிசையா
மழையாம்எனச் சிரித்தான்வட மலையாம்எனும் நிலையான்
முழைவாள்அரி அனையானையும் எனையும்மிக முனிவாய்
அழையாய்திரி சிரத்தானையும் தலத்தோடும்இட் டரைக்க.

ஆமாம்எனத் தலைமூன்றுடை அவன்ஆர்த்துவந் தடர்ந்தான்
கோமான்தனிப் பெருந்தூதனும் எதிரேசெருக் குறித்தான்
காமாண்டவர் அல்லாதவர் வல்லீர்எனக் கழறு
நாமாண்டற வரநின்றவர் நடுவேபுக நடந்தான். 7992

தேர்மேல்செலக் குதித்தான்திரி சிரத்தானையொர் திறத்தால்
கார்மேல்துயில் மலைபோலியைக் கரத்தால்பிடித் தெடுத்தான்
பார்மேல்படுத் தரைத்தான்அவர் பழிமேல்படப் படுத்தான்
போர்மேல்திசை நெடுவாயிலின் உளதாம்எனப் போனுன்.

*களக. இமையிடையாகச்சென்ருன் இகல்அதிகாயன்நின்ருன்
அமைவதொன் ருற்றல்தேற்ருன் அருஞ்யோ டழல்கால் கண்ணுன்
உமைஒரு பாகன்எனும் இவன்முனிந் துருத்த காலைக்
கமைவுறற் பாலன்என்னுக் கரத்தொடுங் குலைக்குங் கையான். 7994

பூணிப்பொன் றுடையன்ஆகிப் புகுந்தகான் புறத்து நின்று
பாணித்த வீரம் அன்ருல் பருவலி படைத்தோர்க் கெல்லாம்
ஆணிப்பொன் அனையான் தன்னைப் பின்னுங்கண் டறிவன் என்னத்
தூணிப்பொன் புறத்தான் திண்தேர் இளவல்மேல் தூண்டச் சொன்னன்.

களக. தேர்ஒலி கடலைச் சீறச் சிலைஒலி மழையைச் சீறப்
போர்ஒலி முரசின் ஓதை திசைகளின் புறத்தும் செல்லத்
தார்ஒலி கழல்கால் மைந்தன் தானையும் தானும் சென்ருன்
வீரனும் எதிரே சென்ருன் விண்ணவர் விசையம் செல்ல.

களச. வல்லியின் அணுக வந்து வணங்கினன் வாலி மைந்தன்
சில்லியந் தேரின் மேலான் இவன்அமர் செவ்வி தன்ருல்
வில்லியர் திலதம் அன்னுய் நின்திரு மேனி தாங்கப்
புல்லியன் எனினும் என்தோள் ஏறுதி புனித என்ருன்.

ஆம்என்று மன்னன் தம்பி அங்கதன் அலங்கல் தோள்மேல்
தாமரைச் சரணம் வைத்தான் கலுழனில் தாங்கி நின்ற
கோமகன் ஆற்றல் நோக்கிக் குளிர்கின்ற மனத்தர் ஆகிப்
பூமழை பொழிந்து வானேர் போயதெம் பொருமல்என்ருர்.

ாளசு. ஆயிரம் புரவி பூண்ட அதிர்குரல் அசனித் திண்தேர்
போயின திசைகள் தோறும் கறங்கெனச் சாரி போமால்
மீளழின் உயரும் தாழில் தாழும்விண் செல்லில் செல்லும்
தீளழ உவரி நீரைக் கலக்கினுன் சிறுவன் அம்மா. 7999

அத்தொழில் நோக்கி ஆங்கண் வானரத் தலைவர் ஆர்த்தார்
இத்தொழில் கலுழற் கேயும் அரிதென இமையோர் எல்லாம்
கைத்தலம் குலைத்தார் பின்னர்க் களிற்றினும் தேரின்மேலும்.
தைத்தன இலைய வீரன் சரம்எனும் தாரை மாரி. 8000

களஅ. முழங்கின புரசை வேழம் முழங்கின முரணத் திண்தேர்
முழங்கின மூரிப் பாய்மா முழங்கின முழுவெண் சங்கம்
முழங்கின தனுவின் ஓதை முழங்கின கழலும் தாரும்
முழங்கின தெழிப்பும் ஆர்ப்பும் முழங்கின முகிலின் மும்மை.

களக. கரிபடக் காலாள் வெள்ளம் களப்படக் கலினக் காலப்
பரிபடக் கண்ட கூற்றும் பயப்படப் பைம்பொற் றிண்தேர்
எரிபடப் பொருத பூழி இடம்பட வீதி எல்லாம்
முரிபடப் பட்ட வீரன் முரட்கணை மூரி மாரி. 8002

கஅம. மன்னவன் தம்பி மற்ற இராவணன் மகனை நோக்கி
என்உனக் கிங்கு நின்ற எறிகடல் தானை எல்லாம்
சின்னபின் னங்கள் பட்டால் பொருதியோ திரிந்து நீயின்
நன்னெடும் நகர்செல் வாயோ சொல்லுதி நயந்த என்றான்.

கஅக. யாவரும் பொருவ தில்லை எதிர்ந்துள நீயும் நானும்
தேவரும் பிறரும் காணச் செருப்பல செய்வோம் என்றான்
காவல்வந் துன்னைக் காப்பார் காக்கவும் அமையும் வேறை
கூவிய ததனுக் கன்றே என்றனன் கூற்றின் வெய்யோன்.

கஅஉ. உமையனே காக்க மற்றை உலகமொரு பாகன் காக்க
இமையவர் எல்லாம் காக்க உலகம்ஓர் ஏழும் காக்க
சமையமுன் வாழ்க்கை இன்றே என்றுதன் சங்கம் ஊதி
கமன்உருக் கொண்ட கூற்றும் நாண்எறிந் தருமின் ஆர்த்தான். 8005

கஅங. அன்னது கேட்ட மைந்தன் அரும்பிய முறுவல் தோன்றச்
சொன்னவர் வாரார் யானே தோற்கினும் தோற்கத் தக்கேன்
எஞ்ஞனீ பொருது வெல்லின் அவரையும் வென்ற தென்றான்
மின்னினும் மிளிர்வ தாங்கோர் வெஞ்சரம் கொடுத்து விட்டான். 8006

கஅச. விட்டவெம் பகழிதன்னை வெற்பினும் வீங்கு தோளான்
சுட்டதோர் பகழி தன்னால் விசும்பிடைத் துணித்து நீக்கி
எட்டினை டெட்டு வாளி இலக்குவ விலக்காய் என்னத்
திட்டியின் விடத்தி னானும் இனையன சிதறி ஆர்த்தான்.

கஅடு. ஆர்த்தவன் எய்த வாளி அனைத்தையும் அம்பி னாலே
வேர்த்தொளிர் வயிர வெங்கோல் மேருவை விசும்பை முட்டத்
தூர்த்தனன் இராமன் தம்பி அவைஎலாம் துணித்துச் சிக்கிக்
கூர்த்தன பகழி கோத்தான் சூபேரனை ஆடல் கொண்டான். 8008

கஅசு. எய்தன எய்த எல்லாம் எரிமுகப் பகழி யாலே
கொய்தனன் நீக்கி மற்றக் குமரனைக் குரிசில் கோபம்
செய்தனன் துரந்தான் தெய்வச் சிலையினில் செங்கண் வெங்கோல்
கொய்தவன் கவசம் கிறி நுழைவன பிழைப்பி லாத. 8009

கஆள. நூறுகோல் கவசம் கிறி நுழைதலும் குழைவு தோன்றத்
தேறலாம் துணையும் தெய்வச் சிலைகெடும் தேரின் ஊன்றி
ஆறினன் அதுகா லத்தங் கவன்படை அனிகம் எல்லாம்
கூறுகூ றுக்கி அம்பால் கோடியின் மேலும் கொன்றான். 8010

கஇஅ. புடைநின்ருர் புரண்ட வாறும் போகின்ற புங்க வாளி
கடைநின்று கணக்கில் ஆங்கோர் கணக்கிலா ஆறுங் கண்டான்
இடைநின்று மயக்கம் தீர்ந்தான் ஏந்திய சிலையன் காந்தித்
தொடைநின்ற பகழி மாரி மாரியின் மும்மை தூர்த்தான். 8011

வான்எலாம் பகழி வானின் வரம்பெலாம் பகழி மண்ணே
தான்எலாம் பகழி குன்றின் தலைஎலாம் பகழி சார்ந்தோர்
ஊன்எலாம் பகழி நின்ருர் உயிர்எலாம் பகழி வேலை
மீன்எலாம் பகழி ஆக வித்தினன் வெகுளி மிக்கான். 8012

மறைந்தன திசைகள் எல்லாம் வானவர் மன்மே போலக்
குறைந்தனசுடரின்மும்மைக்கொழுங்கதிர்குவிந்தோன்ருன்றை
அறைந்தன பகழி வையம் அதிர்ந்தன விண்ணும் அஃதே
நிறைந்தன பொறியின் குப்பை நிமிர்ந்தது நெருப்பின்கற்றை.

ககக. முற்றிய தின்றே அன்ருே வானரம் முழங்கு தானை
மற்றிவன் தன்னை வெல்ல வல்லனே வள்ளல் தம்பி
கற்றது கால னேடே கொலைஇவன் ஒருவன் கற்ற
வில்தொழில் என்னும் என்னத் தேவரும் வெருவல் உற்ருர்.

ககஉ. அங்கதன் நெற்றி மேலும் தோளினும் ஆகத் துள்ளும்
புங்கமும் தோன்ரு வண்ணம் பொருசரம் பலவும் போக்கி
வெங்கணை இரண்டும் ஒன்றும் வீரன்மேல் ஏவி மிக்க
சங்கமும் ஊதி விண்ணேர் தலைபொதிர் எறிய ஆர்த்தான்.

ககங. வாளிசேய் மேனி மேலும் மழைபொரு குருதி வாரி
கால்உயர் வரையில் கீழ்வீழ் அருவிபோல் ஒழுகக் கண்டான்
கோல்ஒரு பத்து நூருல் குதிரையின் தலையைக் கொய்து
மேல்அவன் தேரைச் சிந்தி வில்லையும். அறுத்தான் வீரன்.

ககச. மாற்ருெரு தடந்தேர் ஏறி மாரொரு சிலையும் வாங்கி
ஏற்றவல் அரக்கன் தன்மேல் எரிமுகக் கடவுள் என்பான்
ஆற்றல்சால் படையை விட்டான் ஆரியன் அரக்கன் அம்மா
வேற்றுளை தாங்க என்னு வெய்யவன் படையை விட்டான்.

பொருபடை இரண்டும் தம்மில் பொருந்தின பொருத லோடும்
எரிகணை உருமின் வெய்ய இலக்குவன் துரந்த மார்பை
உருவின உலப்பி லாத உலோகிலன் ஆற்றல் ஓயான்
சொரிகணை மழையின் மும்மை சொரிந்தனன் கெழிக்கும் சொல்லான்.

ஈகூசு. பின்நின்ரூர் முன்நின் ருரைக் காணலாம் பெற்றித்தாக
மின்நின்ற வயிர வாளி துரந்தனன் மேனி முற்றும்
அன்னின்ற நிலையன் ஆற்றல் துறந்திலன் ஆவி நீங்கான்
பொன்நின்ற வடிம்பின் வாளிஉரும்எனப்பொழியும்வில்லான்.

கோன்முகம் தள்ளி உள்ளும் கொடுஞ்சிலை நாணில் கோத்துக்
கான்முகம் குழைய வாங்கிப் பொழிகின்ற காலை வீரன்
பால்முகம் தோன்ற நின்று காற்றினுக் கரசன் பண்டை
நான்முகன் படையின் அன்றிச் சாகிலன் நம்ப என்ருன். 8020

ஈகூஅ. நன்றென உவந்து வீரன் நான்முகன் படையை வாங்கி
மின்தனி திரண்ட என்னச் சரத்தொடும் கூட்டி விட்டான்
குன்றினும் உயர்ந்த தோளான் தலையினைக் கொண்டவ் வாளி
சென்றது விசும்பி னூடு தேவரும் தெரியக் கண்டார். 8021

பூமழை பொழிந்து விண்ணோர் போயதெம் பொருமல் என்ருர்
தாமழைத் தலறி ஏங்கிச் சரிந்தனர் அரக்கர் தள்ளித்
தீமையும் தகைப்பும் நீங்கித் தெளிந்தது குரக்குச் சேனை
கோமகன் தோளில் நின்றும் குதித்தனன் கொற்ற வில்லான்.

உஈ. வெந்திர சித்திகண்ட வீடணன் வியந்த நெஞ்சன்
அந்தர சித்தர் ஆர்க்கும் அமலையும் கேட்டான் ஐயன்
மந்திர சித்தி அன்னன் சிலைத்தொழில் வலிய தானல்
இந்திர சித்தி னூற்கும் இறுதியே இயைவ தென்ருன். 8023

உஉக. ஏந்தெழில் ஆகத் தெம்முன் இறந்தனன் என்று நீரின்
சாந்தக லாத திண்தோள் நோக்கினன் தனுவைத் தாங்கிப்
போந்தகைக் குரிய தன்ருல் போகலை போகல் என்னு
நாந்தகம் மின்னத் தேரை நராந்தகன் நடத்தி வந்தான். 8024

உஉஉ. தேரிடை நின்று கண்கள் தீஉகச் சிற்றம் பொங்கப்
பாரிடை கிழியப் பாய்ந்து பகலிடைப் பருதி என்பான்
ஊரிடை நின்ருன் என்னக் கேடகம் ஒருகை தோன்ற
நீருடை முகிலின் மின்போல் வாளொடு நிமிர வந்தான். 8025

உஉங. வீசின மரமும் கல்லும் வீற்றுவீற் ருகவீழ
ஆசைகள் தோறும் சிந்த வாளினுல் அறுத்து மாற்றித்
தூசியும் இரண்டு கையும் நெற்றியும் சுருண்டு நீர்மேல்
பாசியின் ஒதுங்கச் சென்ருன் அங்கதன் அதனைப் பார்த்தான்.

மரம்ஒன்று விசையின் வாங்கி வாய்மடித் துறுக்கி வள்ளல்
சரம்ஒன்றில் கடிது சென்று தாக்கிஞன் தாக்கி ஞன்தன்
கரம்ஒன்றில் திரிவ தாரும் காண்கிலா ததனைத் தன்கை
அரம்ஒன்று வயிர வாளால் ஆயிரம் கண்டம் கண்டான்.

அவ்விடை வெறுங்கை நின்ற அங்கதன் ஆண்மை அன்ருல்
இவ்விடைப் பெயர்வ தென்னு இமையிடை ஒடுங்கா முன்னம்
வெவ்விடை என்னப் பொங்கி அவனிடை எழுந்து வீசித்
தவ்விடை உருவில் புக்கு வாளொடும் தழுவிக் கொண்டான்.

அத்தொழில் கண்ட வானேர் ஆவலங் கொட்டி ஆர்த்தார்
இத்தொழில் இவனுக் கல்லால் யாவர்க்கும் இயையா தென்பார்
குத்தொழித் தவன்கை வாள்தன் கூர்உகிர்த் தடக்கை கொண்டான்
ஒத்திரு கூருய் வீசி விண்ணவர் உலைய ஆர்த்தான். 8029

உள். கூர்மத்தின் முதுகு வைத்து வானவர் அமுதங் கொண்ட
நீர்மத்தின் நிமிர்ந்த தோளான் நிறைமத்த மதுவைத் தேக்கி
ஊர்மத்தை உண்டால் என்ன மயக்கத்தான் உருமைத் தின்பான்
போர்மத்தன் என்பான் வந்தான் புகர்மத்த பூழ்க்கை மேலான். 8030

உஅ. காற்றன்றேல் கடுமை என்னும் கடல்அன்றேல் முழக்கம் என்னும்
கூற்றின்றேல் கொலைமற் றென்னும் உரும்அன்றேல் கொடுமை என்னும்
சீற்றந்தான் அன்றேல் சீற்றம் வேருென்று தெரிப்ப தெங்கே
மாற்றன்றே மலைமற் றேதோ மத்தன்தன் மத்த யானை. 8031

உஉ. வேகமாய்க் கவிகள் வீசும் வெற்பினம் வீழ மேன்மேல்
பாகர்கால் சிலையில் தூண்டும் உண்டையாம் எனவும் பற்ரு
மாகமா மரங்கள் எல்லாம் கடாத்திடை வண்டு சேர்வ
தாகினும் ஆக அன்றேல் கரும்பென்றே அறைய லாமால்.

உரு. காலிடைப் பட்டு மானக் கையிடைப் பட்டுங் காலை
வாலிடைப் பட்டும் வெய்ய மருப்பிடைப் பட்டு மாண்டு
காலிடைப் பட்ட சேனை நம்பிதன் தம்பி எய்த
கோலிடைப் பட்ட தெல்லாம் பட்டது குரக்குச் சேனை. 8033

உங. தன்படை பட்ட தன்மை நோக்கினன் தரிக்கி லாமை
அன்படை உள்ளத் தண்ணல் அங்கியின் புதல்வன் ஆழி
வன்படை அனைய தாங்கோர் மராமரம் சுழற்றி வந்தான்
பின்படை பட்டு நண்ணுர் பெரும்படை இரிந்து பேர. 8034

சேறலும் களிற்றின் மேலான் திண்திறல் அரக்கன் செவ்வே
ஆறிரண் டம்பி னூலே அம்மரம் அறுத்து விட்டான்
வேறொரு குன்றம் நீலன் வீசினன் அதனை விண்ணின்
நூறுவெம் பகழி யாலே நுறுக்கினூன் கரியை நூக்கி. 8035

பின்நெடும் குன்றம் தேடிப் பெயர்குவான் பெயரா வண்ணம்
பொன்நெடும் குன்றம் சூழ்ந்த பொறிவரி அரவம் போல
அன்னெடும் கோப யானை அமரரும் வியப்ப அங்கி
தன்நெடு மகனைச் சுற்றிப் பிடித்தது தடக்கை நீட்டி. 8036

ஓடுங்கினன் உரமும் ஆற்றல் ஊற்றமும் உயிரும் என்னக்
கொடும்படை வயிரக் கோட்டால் குத்துவான் குறுகுங் காலை
நெடுங்கையும் தலையும் வீய நொய்தினின் நிமிர்ந்து போனூன்
நடுங்கினர் அரக்கர் விண்ணோர் நன்றுநன் றென்ன நக்கார்.

தறைத்தலை உற்றூன் நீலன் என்பதோர் காலம் தன்னில்
நிறைத்தலை வழங்கும் சோரி நீத்தத்து நெடுங்குன் றென்னக்
குறைத்தலை வேழம் வீழ விசும்பைமேல் கொண்டு நின்றூன்
பிறைத்தலை வயிர வாளி மழைஎனப் பெய்யும் வில்லான். 8038

உஅசு. வாங்கிய சிரத்தின் மற்றை வயிரவாள்கோட்டைவாங்கி
வீங்கிய விசையான் நீலன் அரக்கன்மேல் செல்ல விட்டான்
ஆங்கவன் அவற்றை ஆங்கோர் அம்பினுல்அறுத்தோர்அம்பால்
ஓங்கல்போல் புயத்தி னூன்தன்உரத்தின்மேல்குளிப்பஎய்தான்.

உகள. எய்தது கால மாக விழுந்தில யானை என்னக்
கைஉடை மலைஒன் றேறிக் காற்றெனக் கடாவி வந்தான்
வெய்யவன் தன்னைத் தானும் மேற்கொளா வில்லி னூடும்
மொய்பெருங் களத்தில்இட்டான்மும்மதக் களிற்றின்முன்னர்.

உகஅ. இட்டவன் அவனி நின்றும் எழுவதன் முன்னர்யானை
கட்டமை வயிரக் கோட்டால் களப்பட வீழ்த்துக் காலால்
எட்டிவன் தடக்கை தன்னுல் எடுத்தெங்கும் விசையின் வீசப்
பட்டிவன் தானே தன்கைக் கரியீனப் படுத்து வீழ்த்தான்.

உகக. தன்கரி தானே கொன்று தடக்கையால் தடிந்து வீழ்த்து
மின்கரி தென்ன நின்ற எயிற்றினூன் வெகுளி நோக்கிப்
பொன்கரி தென்னும் கண்கள் பொறிஉக நீலன் புக்கான்
வன்கரம் முறுக்கி மார்பில் குத்தினூன் மத்தன் மாண்டான்.

உன்மத்தன் வயிர மார்பில் உரும்ஒத்த கரம்சென் றூன்ற
வன்மத்தைக் கண்டு மாண்ட மதமத்த மலையைப் பார்த்துச்
சன்மத்தின் தன்மை யாலும் தருமத்தைத் தள்ளி வாழ்ந்த
கன்மத்தின் கடைக்கூட் டான மலைமத்தன் கனன்று வந்தான்.

உஉக. பொய்யினும் பெரிய மெய்யான் பொருப்பினைப் பழித்த தோளான்
மெய்யன்என் துரைக்கச் சாலத் திண்ணியன் வில்லின் செல்வன்
பெய்கழல் அரக்கர் தானை ஆர்த்தெழப் பிறங்கு பல்பேய்
ஐயிரு நூறு பூண்ட ஆழியம் தேரின் மேலான். 8044

ஆர்க்கின்ருன்உலகைஎல்லாம் அதிர்க்கின்ருன் அசனி என்னப்
பார்க்கின்ருன் பொன்மி னுரைப் பழிக்கின்ருன் பகழி மாரி
தூர்க்கின்ருன் குரங்குச்சேனை துறக்கின்ருன்துணிவை நோக்கி
ஏற்கின்ருர் இல்லை என்னு இடபன்வந் தவனே டேற்ருன்.

உஉஙு.சென்றவன் தன்னை நோக்கிச் சிரித்துநீ சிறியை நின்னை
வென்றவம் என்று போரின் விளிகிலன் விரிஞ்சன் என்பான்
என்றவன் எதிர்ந்த போதும் இராவணன் மகனை இன்று
கொன்றவன் தன்னைக் கொன்றே குரங்கின்மேல் கொதிப்பன் என்ருன்.

வாய்கொண்டும் சொற்றற் கொத்த வலிகொண்டு பலிஉண் வாழ்க்கைப்
பேய்கொண்டும் வெல்ல வந்த பித்தனே மிடுக்கைப் பேணி
நோய்கண்டு மருந்து செய்யா ஒருவனின் நோன்மை எல்லாம்
ஓய்கின்ருய் காண்டி என்னு உரைத்தனன் இடவன் ஒல்கான்.

உஉசு. ஓடுதி என்ன ஓடா துரைத்தியே உன்னை டின்னே
ஆடுவன் விளையாட் டென்னு அயில்எயிற் றரக்கன் அம்பொன்
கோடுறு வயிரப் போர்வில் காலொடும் புருவம் சோட்டி
ஈடுற இடபன் மார்பத் தீரைந்து பகழி எய்தான். 8048

உஉசூ. அசும்புடைக் குருதி பாயும் ஆகத்தான் வேகத் தாய
தசும்புடைக் கொடுந்தேர் தன்னைத் தடக்கையால்எடுத்துவீசப்
பசுங் கழற் கண்ணின் பேயும் பறந்தன பரவை நோக்கி
விசும்பிடைச் செல்லும் காரின் தாரைபோ னுன்றமெய்யான்.

தேரொடும் கடலின் வீழ்ந்து சிலையும்தன் தலையும் எல்லாம்
நீரிடை அழுந்திப் பின்னும் நெருப்பினும் நிமிர வந்தான்
பாரிடைக் குதியா முன்னர் இடவனும் பதக னேபோய்
ஆரிடைப் புகுதி என்னு அந்தரத் தார்த்துச் சென்ருன். 8050

உஉ.அ. அல்லினைத் தழுவி நின்ற பகலென அரக்கன் தன்னைக்
கல்லினும் வலிய தோளால் கட்டியிட் டிறுக்கும் காலைப்
பல்லிடைப் பிலவா யோடு பசும்பெருங் குருதி பாய
வில்லிடை மேகம் என்ன வீழ்ந்தனன் உயிர்விண் செல்ல. 8051

குரங்கினுக் கிறையும் வென்றிக் கும்பனும் குறித்த வெம்போர்
அரங்கினுக் கழகு செய்ய ஆயிரம் சாரி போந்தார்
மரங்கொடுந் தண்டு கொண்டும் மலிலென மலியா நின்றூர்
சிரங்களும் க்ரமும் எல்லாம் குலைந்தனர் கண்ட தேவர். 8052

*உஉ.இ. இடைத்தார் உடலில் கிழிசோ ரியைவாரித்
துடைத்தார் விழியில் கனல்மாரி சொரிந்தார்
உடைத்தா ரொடுபைங் கழல்ஆர்ப்ப உலாவிப்
புடைத்தார் பொருகின்றனர் கோளரி போல்வார். 8053

உஉக. தண்டம்கையின் வீசிய தக்க அரக்கன்
அண்டங்கள் வெடித்தின் என்ன அடித்தான்
கண்டங்கது மாம்ர மேகொடு காத்தான்
விண்டங்கது தீர்ந்தது மன்னன் வெகுண்டான். 8054

உஉஉ. பொன்றப் பொருவேன் இனியென்று பொருதான்
ஒன்றப்புகு கின்றதொர் காலம் உணர்ந்தான்
நின்றப்பெரி யோன்நினை யாதமுன் நீலன்
குன்றெறிப்பதொர் தண்டு கொணர்ந்து கொடுத்தான்.

உஉங. அத்தண்டு கொடுத்தது கைக்கொ டமைந்தான்
ஒத்தண்டமு மண்ணும் நடுங்க உருத்தான்
பித்தன்தட மார்பொடு தோள்கள் பிளந்தான்
சித்தங்கள் நடுங்கி அரக்கர் திகைத்தார். 8056

உஉச. அடிஉண்ட அரக்கன் அருங்கனல் வீழ்
இடிஉண்டதொர் மால்வரை என்ன விழுந்தான்
முடியுமிவன் என்பதொர் முன்னம் வெகுண்டான்
ஒடியுமுன தோள்என மோதி உயர்ந்தான். 8057

உஉடு. தோளிற்புடை யுண்டயர் சூரியன் மைந்தன்
தாளிற்தடு மாறல் தவிர்ந்து தகைந்தான்
வாளிப்படு வல்விசை யால்எதிர் மண்டி
ஆளித்தொழி லோன்அவன் மார்பின் அறைந்தான்.

உங.சூ. அடிஆயிர கோடியின் மேலும் அடித்தார்
முடிவார்இவர் யாரென வானவர் மொழித்தார்
இடியோடிடி ஏறென இன்ன இரண்டும்
பொடியாயின தண்டு பொருந்தினர் புக்கார். 8059

உங.எ. மத்தச்சின மால்களி றென்ன மலைந்தார்
பத்துத்திசை யுஞ்செவி டெய்தின பல்காவ்
தத்தித்தழு வித்திரள் கொடு தள்ளிக்
குத்தித்தனி குத்தென மார்பு கொடுத்தான். 8060

உங.அ. நிலையிற்சுட ரோன்மகன் அங்கை நெருங்கக்
கலையிற்படு கம்மியர் கூடம் அலைப்ப
உலையிட்ட இடும்பென வன்மை ஓடுங்க
மலையிற்பிள வுற்றது தியவன் மார்பம். 8061

உங.கூ. செய்வாய் இகலென் றிவனின்று சிரித்தான்
ஐவாய் அரவ முழைபுக்கென ஐயன்
தைவாய்வழி சென்றவன் ஆருயிர் கக்கப்
பைவாய்நெடு நாவை முனிந்து பறித்தான். 8062

உசம. அக்காலை நிகும்பன் அனல்தெறு கண்ணன்
புக்கான்இனி எங்கட போதுதி என்ன
மிக்கான்எதிர் அங்கத னுற்று வெகுண்டான்
எக்காலமும் இல்லதொர் பூசல் இழைத்தார். 8063

உசக. சூலப்படை மின்னிட வந்து தொடர்ந்தான்
ஆலத்தினும் வெய்யவன் அங்கதன் அங்கோர்
கோலப்பணைக் கைக்கொடு சென்று குதித்தான்
நீலக்கிரி மேல்நிமிர் பொற்கிரி நேர்வான். 8064

உசஉ. ஏறிவான்உயர் சூலம் எடுத்தலும் இன்னே
முறிவான்இகல் அங்கதன் என்பதன் முன்னர்
அறிவான்அடல் மாருதி அற்றம் உணர்ந்தான்
பொறிவான்உகு தீஎன வந்து புகுந்தான். 8065

உசங. தடையேதுமில் சூலம் முனிந்து சலத்தால்
விடையேஎகர் அங்கதன் மேல்விடு வானை
இடையேதடை கொண்டுதன் ஏடவிழ் செங்கைப்
புடையேகொடு கொன்றனன் மாருதி போலும். 8066

உசச. நின்றார்கள் எதிர்ப்பவர் இன்மை நினைந்தார்
பின்றுதவர் பின்றி இரிந்து பெயர்ந்தார்
வன்றுண்மரம் வீசிய வானர வீரர்
கொன்றார்மிகு தாணீ அரக்கர் குறைந்தார். 8067

உசடு. ஓடிப்புகு வாயின் நெருக்கின் உலந்தார்
கோடிக்கணீ தத்தினும் மேலுளர் குத்தில்
பீடிப்புறு புண்உட லோடு பெயர்ந்தார்
பாடித்தலை உற்றவர் எண்ணிலர் பட்டார். 8068

உசசு. தண்ணீர்தரு கென்றனர் தாவற ஓடி
உண்ணீர் அறஆவி உலந்தனர் உக்கார்
கண்ணீர் ரொடும்ஆவி கலுழ்ந்தனர் காலான்
மண்ணீர் முறக்கட்டி தூர்புக வந்தார். 8069

உசஎ. விண்மேல்நெடி தோடினர் ஆருயிர் விட்டார்
மண்மேல்நெடு மால்வரை என்ன மறிந்தார்
எண்மேலும் நிமிர்ந்தனர் சுரல் தயங்கும்
புண்மேலுடை மேனியி னூர்திசை போனூர். 8070

உசஅ. அறியுமவர் தங்களை ஐயஇவ் அம்பைப்
பறியுமென வந்து பறித்தலும் ஆவி
பிறியுமவர் எண்ணிலர் தம்மனை பெற்றூர்
குறியும்அறி கின்றிலர் சிந்தை குறைந்தார். 8071

உசக. பரிபட்டு விழச்சிலர் நின்று பதைத்தார்
கரிபட்டு ருளச்சிலர் கால்கொடு சென்றூர்
நெரிபட்ட மிதேரிடை யேசிலர் நின்றூர்
எரிபட்ட மணிக்கண் இருந்தவர் ஒத்தார். 8072

உடுஎ. மண்ணின்தலை வானர மேனியின் வந்தார்
புண்ணின்ற உடற்பொறை யோருறை புக்கார்
கண்ணின்ற குரங்கு கலந்தன என்னு
உண்ணின்ற அரக்கர் மலைக்க உலந்தார். 8073

*உடுக. இருகண்ணும் திறந்து நோக்கி இல்இருந் திரங்கு கின்ற
உருகுதம் காத லோரை உண்ணுநீர் உதவும் என்றூர்
வருவதன் முன்னம் மாண்டார் சிலர்சிலர் வந்த தண்ணீர்
பருகுவான் இடையே பட்டார் சிலர்சிலர் பருகிப்பட்டார். 8074

உருஉ. மக்களைச் சுமந்து செல்லும் தாதையர் வழியின் ஆவி
உக்கனர் என்ன வீசித் தம்மைக்கொண் டோடிப் போனார்
கக்கினர் குருதி வாயால் கண்மணி சிதறக் காலால்
திக்கொடு நெறியும் காணர் திரிந்துவந் துயிரும் தீர்ந்தார்.

உருந. இன்னதோர் தன்மை எய்தி இராக்கதர் இரிந்து சிந்திப்
பொன்னகர் புக்கார் இப்பால் பூசல்கண் டோடிப் போன
துன்னரும் தூதர் போனோர் சொடுகழல் அரக்கர்க் கெல்லாம்
மன்னவன் அடியின் வீழ்ந்தார் மழையின்நீர் வழங்கு கண்ணர்.

உருச.நோக்கிய இலங்கைவேந்தும் உற்றது துவல்தீர் என்றான்
போக்கிய சேனை தன்னில் புகுந்துள திறையும் போதா
ஆக்கிய செருவின் ஐயா அதிகாயன் முதலாய் உள்ள
கோக்குல மைந்தர் எல்லாம் கொடுத்தனர் ஆவி என்றார்.

உருடு. ஏங்கிய விம்மல் மானம் இரங்கிய இரக்கம் வீரம்
ஓங்கிய வெகுளி துன்பம் என்றிவை ஒன்றுக் கொன்று
தாங்கிய தரங்கம் ஆகத் தரையினைத் தள்ளித் தள்ளி
வாங்கிய கடலே போல்வான் நெருப்புநீர் வழங்குங் கண்ணன்.

உருசு. திசைகளை நோக்கும் நின்ற தேவரை நோக்கும் செய்த
வசைகளை நோக்கும் கொற்ற வாளினை நோக்கும் பற்றிப்
பிசையுறு கைகள் மீசை சுறுக்கொள உயிர்க்கும் பேதை
நசையிடை கண்டால் என்னை நகுமழு முனியும் நாணும். 8079

மண்ணினை எடுக்க எண்ணும் வானிடை மடிக்க எண்ணும்
எண்ணிய உயிர்கள் யாவும் ஒருகணத் தெற்ற எண்ணும்
பெண்எனும்பெயரஎல்லாம்பிளப்பன்என்றெண்ணும்பேராப்
புண்ணிடை எரிபுக் கென்ன மரணத்தால் புழுங்கு கின்றான்.

ஒருவரும் உரையார் வாயால் உயிர்த்திலர் உள்ளம் ஓர்வார்
வெருவரும் தகைய ஆகி விம்மினர் இருந்த வேலைத்
தருவனம் அனைய தோளான் தன்எதிர் தானை மாலி
இரியலிட் டலறி ஓயாப் பூசலிட் டேங்கி வந்தாள். 8081

மலைக்குவட் டிடிவீழ்ந் தென்ன மணிகளோ டாரம் வாங்க
முலைக்குவட் டெற்றுங் கையாள் முழைதிறந் தன்ன வாயாள்
தலைக்குவட் டணிந்த செக்கர் சரிந்தன குழல்கள் தாங்கி
உலைக்குவட் டுருகும் செம்பொத் துதிநீர் ஒழுகுங் கண்ணுள்.

வீழ்ந்தனள் அரக்கன் தாள்மேல் மென்மைத்தோள் நிலத்தைத் தோயப்
போழ்ந்தனள் பெரும்பாம் பென்னப் புரண்டனள் நோக்கித் துன்பம்
சூழ்ந்தனை கொடியாய் என்னைத் துடித்தரும் துயரவெள்ளத்
தாழ்ந்தனள் புலம்பல் உற்றுள் அழக்கண்டும்அறிந்திலாதாள்.

*உசுக. மாட்டையோ இக்காலம் வல்லார் வலிதீர்க்க
மீட்டாயோ வீரம் மெலிந்தாயோ தோள்ஆற்றல்
கேட்டாய் அறிந்திலையோ என்உரையும் கேளாயோ
காட்டாயோஎன்னுடைய கண்மணியைக்காட்டாயோ.

உகஉ. இந்திரற்கும் தோலாத நன்மகனை ஈன்றுள்என்
றந்தரத்தின் வானவரும் ஏத்தும் அளியத்தேன்
மந்தரத்தோள் என்மகனை மாட்டா மனிதன்தன்
உந்துசிலைப் பகழிக் குண்ணக் கொடுத்தாயோ. 8085

உகஙு. அக்கன் உலந்தான் அதிகாயன் தான்பட்டான்
மிக்கத் திறத்துள்ளார் எல்லாரும் வீடினார்
மக்களினி யார்உள்ளார் மண்டோ தரிமகனே
திக்கு விசையம்இனி ஒருகால் செய்யாயோ. 8086

உகச. ஏதையா சிந்தித் திருக்கின்றாய் எண்ணிறக்த
கோதையார் வில்லரக்கர் பட்டாரைக் கூவாயோ
பேதையாய் காமம் பிடித்தார் பிழைப்பாரோ
சீதையால் இன்னம் வருவ சிலவேயோ. 8087

உகசு. உம்பி உணர்வுடையான் சொன்ன உரைகொள்ளாய்
நம்பி குலக்கிழவன் கூறும் நலம்ஓராய்
கும்ப கருணனையும் கொல்வித்தென் கோமகனை
அம்புக் கிரைஆக்கி ஆண்டாய் அரசையா. 8088

உகஎ. என்று பலபலவும் பன்னி எடுத்தழைத்துக்
கன்று படப்பதைத்த தாய்போல் கவல்வாளை
நின்ற உருப்பசியும் மேனகையும் நேர்ந்தெடுத்துக்
குன்று புரையு நெடும்கோவில் கொண்டணைந்தார்.8089

உகஅ. தானை நகரம் தளரத் தலைமயங்கிப்
போன மகவுடையார் எல்லாம் புலம்பினார்
ஏனை மகளிர்நிலை என்னுகும் எண்ணிறந்த
வான மகளிரும்தம் வாய்திறந்து மாழ்கினார். 8090

உசுஅ. தார்அகலத் தண்ணல் தனிக்கோயில் தாசரதி
பேர்உல குற்ற துற்றதால் பேரிலங்கை
ஊரகம் எல்லாம் அரந்தை உவாஉற்ற
ஆர்கலி யேஓத்த அழுத குரல்ஓசை. 8091

களவது, அதிகாயன் வதைப்படலம் – முற்றிற்று.
ஆக திருவிருத்தம் — 8091

கஅ-வது, நாகபாசப் படலம்.

க. குழுமிக் கொலை வாட்கண் அரக்கியர் கூந்தல் தாழுத்
தழுவித் தலை பெய்துதம் கைகொடு மார்பின் எற்றி
அழும்இத்தொழில் யாதுகொல்என்றொர் அயிர்ப்பும் உற்றான்
எழும்இத்தனி ஏறென இந்திர சித்தெழுந் தான். 8092

உ. எட்டாகிய திக்கையும் வென்றவன் இன்றும் ஈடு
பட்டான்கொல் அகன்றெனில் பட்டொழிந்தான் கொல்பண்டோர்
சுட்டான்இவ் அகல்பதியைத் தொடுவேலை யோடும்
கட்டான்கொல் இதற்கொரு காரணம்என்கொல்என்றான்.

ங. கேட்டான் இடைஉற்ற தென்று கிளத்த யாரும்
மாட்டாது நடுங்கினர் மாற்றம் மறந்துநின்றார்
ஓட்டாய் நெடுந்தேர் கடிதென்றொர் இமைப்பின் உற்றான்
காட்டாதன காட்டிய தாதையைச் சென்றுகண்டான்.

சு. கண்டான் இறைஆதிய நெஞ்சினன் கைகள்கூப்பா
உண்டாயதென் இவ்வழி என்றலும் உம்பிமாரைக்
கொண்டான்உயிர் காலனும் கும்பனிகும்ப னெடும்
விண்தான் அடைந்தான் அதிகாயனும் வீரன்என்றான்.

ரு. சொல்லாத முன்னம் சுடரைச்சுடர் தூண்டுகண்ணன்
பல்லால் அதரத்தை அதுக்கிவின் மீதுபார்த்தான்
எல்லாரும் இறந்தன ரோஎன ஏங்கிநின்றான்
வில்லாளரை எண்ணில் விரற்குமுன் நிற்கும்வீரன். 8096

ரூ. ஆர்கொன்றவன் என்றலுமே அதிகாயன் எனும்
பேர்கொன்றவன் வென்றி இலக்குவன் பின்னைநின்ற
தூர்கொன்றவ னல்பிற ராற்பிற உற்றதெல்லாம்
தார்கொன்றையினோன்கிரி சாய்த்தவன்தான்உரைத்தான்.

எ. கொன்றார் அவரோ கொலைசூழ்கென கீகொடுத்தாய்
வன்தாணையர் மானிடர் வன்மை அறிந்தும்மன்னா
என்றானும் எனைச்செல ஏவலி உற்றஎன்னை
நின்றான் நெடிதுன்னி முனிந்து நெருப்புயிர்ப்பான். 8098

அ. அக்கப் பெயரோனை நிலத்தோ டரைத்துளானை
விக்கற்கொடு வெவ்வுரைத் தூதுவன் ஏன்றுவிட்டாய்
புக்கத்தலை ஏய்தி நினைந்திலை புந்திஇல்லாய்
மக்கள்துணை அற்றனை இற்றதுன் வாழ்க்கைமன்னோ.

கூ. என்னின்று நினைந்தும் இயம்பியும் எண்ணியும்தான்
கொன்னின்ற படைக்கலத் தெம்பியைக் கொன்றுளானை
அன்னின்ற நிலத்தவன் ஆக்கையை வீட்டிஅல்லால்
மன்னின்ற நகர்க்கினி வாரலன் வாழ்வும்வேண்டேன்.

மு. வெங்கண்நெடு வானரத் தானையை வீற்றுவீற்றுய்ப்
பங்கம்பட நூறி இலக்குவனைப் படேனேல்
அங்கம்தர அஞ்சிஎன் ஆணை கடக்கிலாத
செங்கண்நெடு மால்முதல் தேவர் சிரிப்பளன்னை. 8101

மஅ. மாற்றுயிர் எம்பியை மாற்றிய மானிடன்தன்
ஊற்றுர் குருதிப்புனல் பார்மகள் உண்டிலளேல்
ஏற்றுஇகல் இந்திரன் ஈரிருகால் எனக்கே
தோற்றுன் தனக்கே நெடுவெஞ்சமர் தோற்களன்றுன்.

மஉ. பாம்பில்தரு வெம்படை பாசுபதத்தி னோடும்
தேம்பல்பிறை சென்னிவைத் தான்தரு தெய்வவேதி
ஓம்பித்திரிந் தேன்எனக் கின்றுத வாதுபோமேல்
சோம்பித் திரிவேன் இனிச் சோறும் உவந்துவாழேன். 8103

மங. மருந்தேனிகர் எம்பிதன் ஆருயிர் வௌவினானை
விருந்தேஎன அந்தகர்க் கீகிலன் வில்லும் ஏந்திப்
பொருந்தேவர் குழாம்நகை செய்திடப் போந்துபாரின்
இருந்தேன்எனில் யானும் இராவணி அல்லஎன்றுன்.

மச. ஏகாய்இது செய்தென தின்னலை நீக்களந்தைக்
காகாதன வும்உளதோ அவர்க் காற்றலாமோ
மாகாலிவரி வெஞ்சிலை யோயை மதித்தபோதே
சேகர்கும் என்றெண்ணி உவப்பினில் சிந்தைசெய்தேன்.

மரு. வன்தாளை வணங்கி இலங்கிலை வாளும்ஆர்த்திட்
டொன்றுனும் அரு வுருவாஉடல் காவலோடும்
பின்தாழ்கணை யின்நெடும் புட்டில் புறத்துவீக்கி
வன்தாழ்வயிர்ச் சிலை வாங்கினன்வாணெனன்றுன். 8106

கசு. வயிரங்நெடு மால்வரை கொண்டு மலர்க்கண் வந்தான்
செயிரென்றும் உருவகை இந்திரற் கென்று செய்த
உயர்வெஞ்சிலை அச்சிலை பண்டவன் தன்னை ஓட்டித்
துயரின்தலை வைத்திவன் கொண்டது தோற்றம் ஈதால்

களை. தோளில்கணைப் புட்டிலும் இந்திரன் தோற்ற ஞான்றே
ஆளித்திறல் அன்னவன் கொண்டன ஆழி ஏழும்
மாளப்புனல் வற்றினும் வாளி அறுத வன்கண்
கூளிக்கொடுங் கூற்றினுக் காவதொர் கூடு போல்வ.

கஅ. பல்லாயிர கோடி படைக்கலம் பண்டு தேவர்
எல்லாரும் முனித்தலை யாவரும் ஈய்ந்த மேரு
வில்லாளர் கொடுத்த விரிஞ்சன் அளித்த வெம்மை
அல்லால் புரியாதன யாவையும் ஆய்ந்து கொண்டான்.

கூ. நூறுயிர மாளாநி நோன்மை தெரிந்த சீயத்
தேறுமவை அன்னவை ஆயிரம் பூண்ட தென்ன
மாறுயொர் இலங்கை நிகர்ப்பது வானு ளோருந்
தேறுதது மற்றவன் ஏறிய தெய்வ மாத்தேர். 8110

உஅ. பொன்சென் றறியா உவணத் தனிப் புள்ளினுக்கும்
பின்சென் றறியா மழுவாளன் விடைக்கு மேல்நாள்
பின்சென் றதல் லாததொர் பெருஞ்சிறப் புற்றபோரின்
முன்சென் றறி யாதது மூன்றுல கத்தின்உள்ளும். 8111

உக. செதுகைப்பெருந் தானவர் ஊனெடுந் தேய்ந்த நேமி
அதுகைத்திசை ஆணையை ஓட்டிய தென்ன லாமே
மதுகைத்தடந் தோள்வலி காட்டிய வான வேந்தன்
முதுகைத்தழும் பாக்கிய மொய்யொளி மொட்டி தம்மா.

உஉ. ஏயாத்தனிப் போர்வலி காட்டிய இந்திரன் தன்
சாயாப்பெருஞ் சாய்கெடப் பாம்புக ளால்தடந் தோள்
போயார்த்தவன் வந்தனன் வந்தனன் என்று பூசல்
பேயார்த்தெழுந் தாடு நெடுங்கொடி பெய்த தம்மா.

உங. அத்தேரீனை ஏறிய தொப்பன ஆயிரந் தேர்
ஒத்தேறின சேமம் வரத்தன துள்ளம் வெம்போர்ப்
பித்தேறினன் என்ன நடந்தனன் பின்பி லான்மற்
றெத்தேவ ரையுமுகம் கண்டறி யாது விட்டான். 8114

உச. அன்னுழுனுடு போயின தாணை அளந்துகூற
என்னுல்அரி தேனும் இயம்புவன் மீகன் என்பான்
அன்னுள் அறை வான்அது நாற்பது வெள்ளம் என்னச்
சொன்னுன்பிறர் யாவர் உணர்ந்து தொகுக்க வல்லார்.

உடு. தூமக்கண் அரக்கனுங் தொல்அம ரர்க்கும் தோலா
மாபக்கனும் அந்நெடுந் தேர்மணி ஆழி காப்ப
தாமக்குடை மீதுயரப் பெரும் சங்கம் விம்ம
நாமப்பெரும் பல்லியம் நாற்கடல் மேலும் ஆர்ப்ப. 8116

உசு. தேர்ஆயிரம் ஆயிர கோடிதன் மாடு செல்லப்
போராணை புறத்தின் அவற்றின் இரட்டி போகத்
தாரார் புரவிக்கடல் முன்செலத் தாணை வீரர்
பேராழி முகஞ்செலச் சென்றனன் பேர்ச்சி இல்லான்.

*உஎ. நின்றனன் இலக்குவன் களத்தை நீங்கலன்
பொன்றினன் இராவணன் புதல்வன் போர்க்கினி
அன்றவன் அல்லனேல் அமரர் வேந்தனை
வென்றவன் வரும்என விரும்பும் சிந்தையான். 8118

உஅ. ஆர்இவன் வருபவன் இயம்பு வாய்என
வீரவெந் திறலினுன் வினவ வீடணன்
ஆரிய இவன்கொலாம் அமரர் வேந்தனைப்
போர்கடந் தவன்இவன் வலிது போர்என்முன். 8119

உகூ. எண்ணிய துணர்த்துவ துளதென் றெம்பிரான்
கண்ணகல் பெரும்படைத் தலைவர் காத்திட
நண்ணிய துணையொடும் பொருகை நன்றெனத்
திண்ணிய துணர்த்தினன் தெரியும் சிந்தையான். 8120

உஙு. மாருதி சாம்புவன் வான ரேந்திரன்
தாரைசேய் நீலன்என் றினைய தன்மையாம்
வீரர்வந் துடன்உற விமல நீநெடும்
போர்செயத் தகுதியால் புகழின் பூணினுய். 8121

உக. பல்பதி னுயிரம் தேவர் பக்கமார்
எல்லியின் தாணைகொண் டெதிர்ந்த இந்திரன்
ஒல்லியின் உடைந்தனன் உயிர்கொண் டுய்ந்தனன்
மல்லலம் தோளினுய் அமிர்தின் வன்மையால். 8122

கூஉ. இனியது மறையுமே இந்திரன் புயப்
பனிவரை யின்னெடும் பாசத் தால்உற
அனுமனைப் பிணித்துளன் ஆன போதவன்
தனுமுறை வித்தகம் சாற்றல் பாலதோ. 8123

கூஊ. என்றவன் இயம்பலும் இளைய வள்ளலும்
நன்றென மொழிதலும் நணுகி னுன்அரோ
வன்திறல் மாருதி இலங்கைக் கோன்மகன்
சென்றனன் இளவல்மேல் என்னும் சிந்தையான். 8124

கூசு. கூற்றமும் கட்புலம் புதைப்பக் கோத்தெழுந்
தேற்றமும் இராவணி துணிவும் நோக்குரு
மேற்றிசை கீழ்த்திசை விட்டு வெங்கடுங்
காற்றென அணுகினர் கடிதில் காக்கவே. 8125

கூடு. அங்கதன் முன்னரே ஆண்மையான் அயல்
துங்கவள் தொழிலினர் எவரும் சுற்றினர்
செங்கதி ரோன்மகன் முன்பு சேன்றனன்
சங்கநீர்க் கடல்எனத் தழிஞ்ய தானையே. 8126

கூசு. இருதிரைப் பெருங்கடல் இரண்டு திக்கினும்
பொருதெழில் வேட்டெழுந் தார்த்துப் பொங்கின
வ்ருவன போல்வன மனத்தி னுல்சினம்
திருகின எதிர்எதிர் செல்லும் சேனையே. 8127

கூஎ. கண்ணினுல் மனத்தினுல் கருத்தினுல் தெரிந்
தெண்ணினுல் பெறும்பயன் எய்தும் இன்றென
நண்ணினர் இமையவர் நங்கை மாரொடும்
விண்ணினு டுறைவிடம் வெறுமை கூரவே. 8128

கூஅ. ஒத்திரு தானையும் உடற்ற உற்றுழி
அத்தனை வீரரும் ஆர்த்த ஆர்கலி
நத்தெலி மூரசொலி நடுக்க லால்தலை
பொத்தினர் செவிகளைப் புரந்த ராதியர். 8129

கூக. எற்றுமின் பற்றுமின் எறிமின் எய்மின்என்
றுற்றன உற்றனர் உரைக்கும் ஓதையும்
முற்றுறு கடையுகத் திடியின் மும்மடி
பெற்றன பிறந்தன சிலையின் பேரொலி. 8130

சமி. கற்பட மரம்படக் கால வேல்பட
விற்படு கணைபட வீழும் வீரர்தம்
எற்படர் உடல்பட இரண்டு தாணையும்
பிற்பட இருநிலம் பிளந்து பேருமால். 8131

சக. எழுத்தொடர் மரங்களால் எற்ற முற்றிய
விழுத்தலை முழுவதும் சிதறி வீழ்ந்தன
அழுத்தின பெருஞ்சினத் தரக்கர் ஆக்கைகள்
கழுத்துள தலையில களத்தில் ஆடுவ. 8132

சஉ. வெட்டிய தலைகளில் நரம்பு வீசமேல்
மூட்டிய குருதிகள் குரங்கின் மொய்உடல்
சுட்டுயர் நெடுவனம் தொலைந்த பின்நெடும்
கட்டைகள் எரிவன போன்று காட்டுவ. 8133

சஙு. பிடித்தன நிருதரைப் பெரிய தோள்களே
ஒடித்தன கால்விசைத் துதைத்த உந்தின
கடித்தன கழுத்தறக் கைகளால் எடுத்
தடித்தன அரைத்தன ஆர்த்த வானரம். 8134

சச. வாள்களில் கவிக்குல வீரர் வான்கழல்
தாள்களைத் துணித்தனர் தலையைத் தள்ளினர்
தோள்களைத் துணித்தனர் உடலைத் துண்டமிட்
டாழ்கடல் புரட்டினர் நிருதர் ஆர்த்தனர். 8135

சடு. மரங்களின் அரக்கரை மலைகள் போன்றுயர்
சிரங்களைச் சிதறினர் உடலைச் சிந்தினர்
கரங்களை முறித்தனர் கண்ணைச் சூழ்ந்தனர்
குரங்கெனப் பேயர்கொடு திரியும் கூற்றமே. 8136

சசு. சுடர்த்தலை நெடும்பொறி சொரியும் கண்ணன
அடற்றலை நெடுமரம் அற்ற கையன
உடல்தலை வயிரவேல் உருவி உற்றவர்
மிடற்றினைத் தடிந்துடன் விளிந்து போவன. 8137

சஎ. அடர்ந்தன கரிகளை அசனி ஏறெனத்
தொடர்ந்தது மழைமதத் தும்பிக் கொம்புகள்
இடந்தன மூளைகள் இனிதின் உண்டன
கடந்தன பரிகளைக் கரடி காந்தியே. 8138

சஅ. கொலைமதக் கரியன குதிரை மேலான
அலைமணித் தேரன ஆளின் மேலன
சிலைகளின் குடுமிய சிரத்தின் மேலன
மலைகளில் பெரியன குரங்கு வாவுவ. 8139

*சக. தண்டுகொ டரக்கர் தாக்கத் தகர்ந்துடல் தலைகள் தள்ளித்
துண்டங்கள் ஆக வாளால் துணிந்தபேர் உடல்கள் தூங்கக்
கொண்டெழு மலைக ளோடுங் குரக்கினப் பிணத்தின் குப்பை
மண்டுவெங் குருதி ஆறுய் மறிகடல் மடுத்த மாதோ. 8140

ரும. தாக்கிய திசைகள் தோறும் தலைத்தலை மயங்கிப் பின்னும்
நூக்கிய களிறும் தேரும் புரவியும் நூழில் செய்ய
ஆக்கிய செருவை நோக்கி அமரரோ டசுரர் போரைத்
தூக்கிய முனிவர் என்னே இதுக்கது தோற்கும் என்றார். 8141

ரூக. எடுத்தது நிருதர் சாயை இரிந்தது குரங்கின் ஈட்டம்
தடுத்தனர் முகங்கள் தாங்கித் தனித்தனி தலைவர் தள்ளிப்
படுத்தனர் அரக்கர் வேலை பட்டது படவும் பாராக்
கடுத்தனர் அரக்கர் பின்னும் காய்ந்தனர் கவியின் வீரர். 8142

ரூஉ. பனிவென்ற பதாகை என்றும் பல்லுளைப் பரிமா என்றும்
தனுவென்றும் வாளி என்றும் தண்டென்றும் விட்டேறென்றும்
சினவென்றி மதமா என்றும் தேர் என்றும் தெரிந்த தில்லை
அனுமன்கை வயிரத்தண்டால் அரைப்புண்ட அரக்கர் தாயை.

ரூங. பொங்குதேர் புரவியாயை பொருதொழில் நிருதர் என்னச்
சங்கையும் இலாத வண்ணம் தன்னுளே தழுவிக் கூற்றம்
எங்குள உயிரென் றெண்ணி இயைக்கையால் கிளர்ப்பதென்ன
அங்கதன் மரங்கொண் டெற்ற அழிந்துபட் டொழிந்த தாயை.

ரூச. சூலமும் மழுவும்தாங்கி தோள்இரு நான்கும் தோன்ற
மூலம்வந் துலகை உண்ணும் உருத்திர மூர்த்தி என்பான்
நீலன்நின் றுழியே நின்றுன் நிரந்தரக் கணங்க ளோடும்
காலன்என் றொருவன் யாண்டும் பிரிந்திலன் பாசக்கையான்

காற்றலன் புனலும் அல்லன் கனல்அல்லன் இரண்டுகையான்
ஆற்றலன் ஆற்றுகின்ற அரும் சமம் இதுவே ஆகில்
ஏற்றம்என் பலவும் சொல்லி என்பதம் இழப்பன் என்னைக்
கூற்றமும் வெருவி அஞ்ச வெஞ்சினக் குமுதன் கொன்றான்.

நுசு. மறிகடல் புடைசூழ் வைப்பின் மானவன் வாளிபோன
செறிபலீ மரமே நின்ற மரங்களில் தெரியச் செப்பும்
குறியுடை மலைகள் தம்மில் குலவரைக் குலமே கொள்ள
எறிதலோ டறைதல் வேண்டி இடபன்அன் றெடுத்தி லாத

நுஎ. வாம்பரீ மதமா மான்தேர் வாள்எயிற் றரக்கர் மாளப்
பாம்பினும் வெய்யோர் சாலப் பல்குதல் பயம்இன் றெய்த்த
தூம்புறழ் குருதி மண்டச் சுடர்நெடு மரங்கள் சுற்றிச்
சாம்புவன் கொல்லச் சாம்பும் எண்றுகொண் டமரர்ஆர்த்தார்

பொருங்குலப் புரவி பொற்ரச்த் திரள்களும் பொலன் பொற் றேரும்
இருங்களி யானை யான மலைகளும் இரியல் போக
நெருங்கிய படைகள் ஆன மீன்குலம் நெரிந்து சிந்தக்
கருங்கடல் கலக்கும் முத்தில் பனசனும் கலக்கிப் புக்கான். 8149

மயிந்தனும் துமிந்தன் தானும் மழைக்குலங் கிழிய வானத்
துயர்ந்தெழும் எருவை வேந்தர் உடன்பிறந் தவரை ஒத்தார்
கயங்குடைந் தாடும் வீரக் களிரெறுத்தான் கவையன் காலால்
பெயர்ந்திலன் உற்ற தல்லால் கேசரி பெரும்பொற் றேளான்.

பெரும்படைத் தலைவர் யாரும் பெயர்ந்திலர் பிணத்தின்குப்பை
வரம்பில பரப்பி ஆர்த்து மலைகின்ற போதின் வந்துற்
றிரிந்தன கவியுங் கூடி எடுத்தன எடுத்த லோடும்
சரிந்தன நிருதர் தானை தாங்கினன் அரக்கன் தானே. 8151

பூணைறிந்தகுவடனையதோள்கள் இரு புடைபரந்துயரமிடைவலத்
தூணைறிந்தனையவிரல்கள்கோதையொடு செவிடெறிந்ததொருதொழில்பட
சேணைறிந்துநிமிர் நிரைகளோடுமலை செவிடெறிந்துடையவிறல்வலோன்
நாண் எறிந்துமுறை முறை துடர்ந்துகடல் உலகம் யாவையும் நடுக்கினன்.

நுஉ. சிங்கவேறுகடல் போல்முழங்கிநிமிர் தேர்கடாய்நெடிது செல்கென
வங்க தந்திய ரனுங்க வானவர்கள் அஞ்ச வெஞ்சின அனந்தன் மாச்
சங்க பாலகுளி காளி வாளெயி றதுக்கி வெவ்விடம் உமிழ்ந்துசால்
செங்கண்நாகம்என வேகமாய்உரும சிந்துவெங்கணைகள் சிந்தினன்.

நுஉ. சுற்றும் வற்றகவி வீரர்வீசிய சுடர்த் தடங்கல்வரை தொல்மரம்
இற்றெ டிந்துபொடி யாய்உடைந்தன எரிந்து மண்டை இழிந்தபோய்
வெற்றி வெங்கணை படப்படத்தலைகள் விண்ணின் ஊடுதிசை மீதுபோய்
அற்றெழுந்தன விழுந்து மண்ணிடை அழுந்துகின்றன அனந்தமால். 8154

சுச. சிலைத் தடம்பொழி வயக்கடுங்கணைகள் செல்லஒல்லினர் சினத்தினுல்
உலைத்தெ றிந்திட எடுத்தகுன்றுகொ டடற்பரங்கள்கொ டொடுங்கினர்
நிலைத்து நின்றுசின முற்றுசெல்லலதிர் சென்றுசென்றுற நெருக்கலால்
மலைத்த லங்களொ டுரத்தலங்கிழிய ஊடுசென்றபல வாளியே. 8155

முழுத்தம் ஒன்றின்ஒரு வெள்ளவானர முடிந்ததுள்ளன கடிந்துபோய்க்
கழுத்த கையகிமிர் கால வாலபல கண்ட மானபடி கண்டுநேர்
எழுத்தொ டார்ந்தஅீர் தோள்க ளால்எறிய எற்றஅற்றன எழுந்துமேல்
விழுந்த பைந்தலைகள் வேணு மால்வரைகள் வீச வீசஉடல் வீழுமால்.

அற்றபைந்தலை அரிந்துசென்றன அயில்கடுங்கணை வெயில்கொள்போல்
புற்ற டார்ந்தொரு வெவ்வ ராவின்ஒடு நாக லோகம்அது புக்கவால்
வெற்றவெள்ளிடை விரைந்துபோவதொரு மேடுபள்ளம்வெளி இன்மையில்
உற்றபைங்குருதி வெள்ளம்அள்ளுதிரை ஓதவேலையொடும் ஒத்ததால்.

விழிக்குமேல்விழியின் நிற்குமார்பிடையின்வீழுமென்முதுகை மேனியைக்
கழிக்கு மேல்உயர ஓடு மேல்நெடிய கால்கள் வீசுகிமிர் கையவாய்ந
தெழிக்கு மேல்அகவு காவுசிந்தைஎன உண்ணு மேல் சிகரம் யாவையும்
பழிக்கு மேனிய குரங்குமேலவன் விடுங் கொடும்பகழி பாயவே. 8158

மொய் எடுத்தகணை மாரி யால்இடை முடிந்த தொன்றுமுறை கண்டிலார்
எய்யும்விற்கைஎறியும் நாணின்ஓசைஅலதி யாதும்ஒன்றுசெவி உற்றிலார்
மெய்எடுத்தகவி வெள்ளம் யாவையும் விளிந்து போனஎனும் விம்மலால்
கைஎடுத்தன குரங்கினுெடும்உறை கண்டதேவர்கள் கலங்கினுர்.

கண்டவான ரம்அனந்தகோடிமுறை கண்டமான படிகண்டஅக்
கண்டமாமிருவர் இன்மைகண்டுகணை டாறினன்வி தெல்அன்னதால்
கண்டகாலையில்விலங்கி னுன்இரவி காதலன்சமர்செய் கர்தலால்
கண்டகார்சிதையமீ துயர்ந்ததொளிர்மராமரம்சுலவுகையினுன்.

எய்உடைந்து நன்படை உலைந்துசிந்திஉயிர் ஒல்கவெல்செரு உடற்றலால்
கடைந்துதெள்ளமுதுகொள்ளும்வண்ணமென மேலிமிர்ந்ததோர்கடுப்பினு
இடைந்து சென்றவணை எய்தினப்தரிய காவல்பெற்றிகலி ஆற்றுவான் [ன்
மிடைந்து நின்றபடை வேலைகால்தனர வீசி னுன்நிருதர் கூசினுர். 8161

எக. சுற்று நின்றபடை சிந்தி ஓடஓர் மரா மரங்கொடு துகைத்துளான்
வெற்றி கண்டுவலி நன்றுநன்றென வியந்து வெங்கணை விரைந்தவன்
நெற்றி பின்தலை இரண்டு மார்பிடைஓர் அஞ்சுநஞ்சென நிறுத்தினுன்
பற்றி வந்தமரம் வேறுகூறுற நுறுக்கி நுண்பொடி படுத்தினுன். 8162

எஉ. அக்கணத்தனுமன் ஆலகாலம்என ஆனதொர்வெகுளி யண்ணினனன்
புக்கனைத்துலக முங்குலுங்க உயர் தோள் புடைத்துருமு போல்உரு
இக்கணத்தி னிறக்கும் என்பதொரு சூன்றெ டுத்துமிசை ஏவினன்
உக்கதக்கிரி சொரிந்த வாளிகளின் ஊழி லாதசிறு பூழியாய். 8163

எக. நில் எடாசிறிது நில் எடாஉனை நினைத்து வந்தனன் முனைக்கு நான்
வில் எடாமைஉன தாண்மை பேசிஉயி ரோடு நின்றுவிளை யாடினைப்
கல் எடாநெடு மரங்க ளோடிரு கரத்நின் என்வலி கடக்கவோ
சொல் எடாஎன இயம்பி னன்இகல் அரக்கன் ஐயன்இவை சொல்வினன்.

எச. வில்லெடுக்கவும்உரித்தெம்மையர்சிலர்வீரர்இங்கும்உளர்மெல்லியோம்
கல்எடுக்கஉரி யோமும் நின்றனம் அதின்று நாளைஇடை காணலாம்
எல்எடுத்தபதி இந்திரா தியர்உனக் குடைக் துயிர்கொ டேகினர்
புல்எடுத்தவர்கள் அல்லம் வென்றுசில போர் எடுத்திடை புகுந்துளோம்.

என்னெடே பொருதி யோஅதன்றெனில் இலக்குவப்பெயர்என் எம்பிரான்
தன்னெடே பொருதி யோசொல் உன்தைதலை தள்ள நீன்றதனி வள்ளலாம்
மன்னெடே பொருதி யோஉரைத்தது மறுக்கி லோம்என வழங்கினன்
பொன்னெடே பொருவ தன்றிவேறெரு பொருப் படாஉயர் புயத்தினன்.

எசு. எங்கு நின்றனன் இலக்கு வப்பெயரன் ஏழைஎம்பிஅதி காயனும்
சிங்கம் வந்ததனை வென்று தன்உயிர் எனக்கு வைத்ததோர் சிறப்பினன்
அங்க வன்தனை மலிந்து கொன்றுமுனி வாற வந்தனன் அதன்றியே
உங்கள்தன்மையின் அடங்கு மோஉல கொடுக்கும்வெங்கணைதொடுக்கிலே.

எள. யாரும் என்பகைஞர் எய்தல் அன்றி அயல் ஏகயானும்ஒரு வில்லும்ஓர்
தேரில் நின்றுமை அடங்க லுந்திரள் சிரம் துணிப்பன்இது திண்ணமால்
வாரும்உங்களுடன்வானுளோர்களையும்மண்ணுளோரையும்வரச்சொலும்
போரும்இன்றெரு பகல்கணேபொருது வெல்வன்வென்றலது போகலேன்

என்று வெம்பகழி ஏழு தூறும்எழு தூறும் வெஞ்சிலையின் ஏவினன்
சூன்று நின்றனைய வீர மாருதிதன் மேனி மேல்அவை குழுக்களாய்ச்
சென்று சென்றுருவ லோடும் வாள்எயிறு தின்று நின்றதொரு சேவகன்
சூன்று நின்றது பிடித்தெ டுத்தவனை எய்திகொய்தின்இவை கூறினன்.8169

தும்பிஎன்றுலகில் உள்ள யாவைஅவை யாவையும்தொகுதி உள்ளதான்
வெம்பிவெஞ்சின மடங்கல்ஒன்றைவெரு நாய்கள்மற்றதனை வெல்லுமே
கம்பி தம்பிஎன தெம்பி ரான்வரு துணைத் தருக்கிலை கடத்தியேல்
அம்பின்முந்திஉன தாவி உண்ணும்இது காளடா சிலைவல் ஆண்மையால்.

அஎ. செருப்பயிற்றிய தடக்கைஆளிசெல விட்டகுன்றுதிசை யாணையின்
மருப்பைஉற்றஇரள் தோள்இராவணன் மகன்தன்மார்பின்நெடு வச்சிரப்
பொருப்பைஉற்றதொர்பொருப்பெனக்கடிதொடிந்துதிசைபோனதால்
நெருப்பைஉற்றதொர் இரும்புகூடம்உற நீறுபட்டது நிகர்த்தவால். 8171

அக. விலங்கல்மேல்வர விலங்கல்வீசிய விலங்கல்நீறுபடும் ஏல்வையில்
சலங்கைமேல்நிமிர வெஞ்சினம்திருகி வஞ்சன்மேனிமிர் தருக்கினன்
வலங்கொள்பேருவகை மேருவோடுடன் மறிக்குமாருதின் வாசநா
றலங்கல்மார்பும்உயர் தோளும்ஊடுருவ ஆயிரம்சரம் அழுத்தினன். 8172

அஉ. ஒன்று போல்வனஓர் ஆயிரம்பகழி ஊடு போய்உருவ ஆடகக்
குன்று கால்எறிய மேல்இழிந்திடை குலுங்க நின்றஎன கொள்கையான்
மன்றல் நாறுதட மேனி மேல்உதிர வாரி சோரவரு மாருதி. 8173
நின்றுதேறும்அள வின்கண்வெங்கண் அடல் நீலன்வந்திடை நெருக்கினன்.

அங. நீலன்நின்றதொரு நீலமால்வரை நெடுந் தடக்கையின் இடந்துசோர்
மேல்எழுந்தெரி விசும்புசெல்வதொரு வெம்மை யோடுசெல வீசலும்
சூலம்அந்தகன் எறிந்த தன்னது துணிந்து சிந்தவிடை சொல்லுறும்
காலம்ஒன்றும்அறி யாமல்அம்புகொடு கல்லினன்வலிய வில்லினன். 8174

அச. ஊகம் எங்கும்உயி ரோடு நின்றனவும் ஓடவானவர்கள் உள்ளமும்
மேகம் எங்கும்உள ஆக மேருவினும் மும்ம டங்குகிர் தன்மையா
னாகம் எங்கும்வெளி யாக வெங்குருதி யாறு பாயவனல் அஞ்சுவாய்
நாக வெங்கண்நகு வாளிபாய்தொறு நடுங்கினன்மலி பிடுங்கினன். 8175

அடு. மேருமேருஎன அல்லஅல்லஎன வேரினோடுநெடு வெற்பெலாம்
மார்பின்மேலும்உயர் தோளின்மேலும்உற வாலிகாதலன் வழங்கினன்
சேருமேஅவை தனுக்கைகிற்களிர் செல்லுமேகடிது செல்லினும்
பேருமேகொடிய வாளியான்முறி பெறுக்கொணைவகை நுறுக்கினன். 8176

நெற்றிமேலும்உயர் தோளின்மேலும்நெடு மார்பின்மேலும்நிமிர் தாளினும்
புற்றின்ஊடுநுழை நாகம்அன்னபுகை வேகவாளிகள் புகப்புகத்
தெற்றிவாள்எயிறு திண்றுகைத்துணை பிசைந்துகண்கள்எரி நீபுக
வற்றியோடுதிர வாரிசோர்வுற மயங்கினன்நிலம் முயங்கினன். 8177

மற்றைவீரர்கள்தம்மார்பின்மேலும்உயர்தோளின்மேலும்மழைமாரிபோல்
கொற்றவெங்கணை உலக்கைஎய்தவை குளிப்பநின்றுடல் குலுங்கினர்
இற்றவிந்தது பெரும்பதாதிஉயிர் உள்ளதெங்கணும் இரிந்தபப்
பெற்றிகண்டிலாய வள்ளல்உள்ளரி பிறந்தகண்ணன்இவை பேசினன்

*பிழைத்தது கொள்கை போகப் பெரும்படைத் தலைவர் யாரும்
உழைத்தனர் குருதி வெள்ளத் துவந்ததும் உலப்பிற் றன்றே
அழைத்திவன் தன்னை யானே ஆருயிர் கொடப் படாதே
இழைத்தது பழுதே [1]அன்றே வீடணன் என்னச் சொன்னான்.

அக. ஐயகேள் அதன்ன தேயால் ஆயிர கோடி தேவர்
எய்தினர் எய்தி னர்கள் ஈடுபட் டிரிந்த தல்லால்
செய்திலர் இவனை ஒன்றும் நீஇது தீர்ப்பின் அல்லால்
உய்திறம் உண்டோ மற்றிவ் உலகினுக் குயிர்கொ டென்றான்.

கம. என்பது சொல்லக் கேட்ட இந்திர ஜித்தி னோடும்
பொன்புரை மேகம் ஒன்று வருவது போல்கின் றானை
முன்பணை முன்பு நோக்கி இவன்கொலாம் பரதன் முன்னோன்
தம்பெருந் தம்பி என்றான் ஆம்எனச் சாரன் சொன்னான்.

கக. தீயவன் இளவல் தன்னைச் சேர்வதன் முன்னம் செல்கென்
றேயினர் ஒருவர் இன்றி இராக்கதத் தலைவர் எங்கள்
நாயகன் மகனைக் கொன்றாய் நண்ணினை நாங்கள் காணப்
போய்இனி உய்வ தெங்கே என்றெரி விழித்துப் புக்கார்.

கோடிநூ றமைந்த கூட்டத் திராக்கதர் கொடித்தின் தேரும்
ஆடல்மாக் களிறும் மாவும் அடங்கலும் ஆர்த்து மண்டி
மூடினர் மூடி னரை முறைமுறை துணித்து வாகை
சூடினன் இராமன் பாதம் சூடிய தோன்றல் தம்பி. 8183

கூஉ. அதிர்ந்தன உலகம் எங்கும் அனல்பொறி அசனி என்னப்
பிதிர்ந்தன மலையும் பாரும் பிளந்தன பிணத்தின் குன்றத்
துதிர்ந்தன தலைகள் மண்டி ஓடின உதிர நீத்தம்
விதிர்ந்தன அமரர் கைகள் விளைந்தன கொடிய வெம்போர்.

கூச. விட்டனன் விசிக வேகம் விடாதன வீரர் மார்பில்
பட்டன உலகம் எங்கும் படர்ந்தன பதாகைக் காட்டைச்
சுட்டன துரக ராசி துணித்தன பணைக்கை மாலை
அட்டன கூற்றம் என்ன அடர்ந்தன அனந்தம் அம்மா. 8185

உலக்கின்றூர் உலக்கின் றுரை எண்ணுவான் உற்ற வானோர்
கலக்குறு கண்ணர் ஆகிக் கடைஉறக் காண லாற்றூர்
விலக்கரும் பகழி மாரி வீழ்கின்ற விளைவை நோக்கி
இலக்குவன் சிலைகண் டேயோ எழிலியும் பயின்ற தென்பார்.

1 [பிரதி] அன்னை.

கூசு. ஒளியொண் கணைகள் தோறும் உந்திய வேழம்ஒற்றை
வாளியின் றலைய பாரின் மறிந்திவன் மலையில் சூழ்ந்த
வாளியில் துளக்கி வீரர் மாக்களத் தார்த்து மண்டும்
தூளியின்தொகையும்வள்ளல்சொரிகணைத்தொகையும்அஃதே.

கூள. பிறவியில்பெரியநோய்க்கும் பிசிதமுண் டுழலும்பெற்றிச்
சிறைஎன என்ன நோக்கித் தேவரும் திகைப்பத் தேற்றித்
துறைதொறும் தொடர்ந்துவானம் வெளிஅறத்துவன்றி வீழும்
பறவையில் பெரிது பட்டோர் பிணத்தின்மேல் படியும் அம்மா.

கூஅ. திறந்தரு கவியின் சேனை செறிகழல் அரக்கர் சீற
இறந்தது கிடந்த வெள்ளம் எழுபதில் பாகம் என்னப்
பறந்தலை முழுதும் பட்ட வஞ்சகர் படிவ மூடி
மறைந்தன குருதி ஓடி மறிகடல் மடுத்த மாதோ. 8189

கூக. கைஅற்றார் கால்கள் அற்றார் கழுத்தற்றார் கவசம் அற்றார்
மெய்அற்றார் குடல்கள் அற்றார் விசையற்றார் விழியும் அற்றார்
மையல்தார்க் கரியும் தேரும் வாசியும் அற்று மற்றார்
உய்யச்சார்ந் தோடி உற்றார் உயிர்உள்ளார் ஆகி உள்ளார்.

ஈ. வற்றிய கடலுள் நின்ற மலைஎன மருங்கின் யாரும்
சுற்றினர் இன்றித் தோன்றும் தசமுகன் தனியன் உள்ளம்
தெற்றிய புருவக் கோளான் மனம்எனச் செல்லும் தேரான்
உற்றனன் இனைய காலை அனுமனும் உடன்வந் துற்றான்.

ஈக. தோளின்மேல் ஆதி ஐய என்றடி தொழுது நின்றான்
ஆளிபோல் மொய்ம்பி னானும் ஏறினன் அமரர் ஆர்த்தார்
கூளியே அனைய காலன் கொலையன கண்ணின் வெய்ய
வாளிமேல்வாளி தூர்த்தார் மழையின்மேல்மழைவீழ்ந்தென்ன.

ஈஉ. இடித்தன சிலையின் நாண்கள் எறிந்தன திசைகள் இற்று
வெடித்தன அண்டம் விண்டு பிளந்தது விசும்பு மேன்மேல்
பொடித்தன உலகம் எங்கும் பொரிந்தன பொறிகள்பொங்கிக்
கடித்தன கணைக ளோடும் கணைகள்தம் அயில்வாய்கவ்வி. 8193

ஈஙு. அம்பினோ டம்பொன் றொன்றை அறுத்தன அறுத்திலாத
வெம்புவெஞ் சரங்கள் தம்மில் வெந்தன கரிந்து வீழ்ந்த
உம்பரும் பிறரும் நீக்கி ஓங்கின உலகம் யாவும்
கம்பமுற் றிறைஞ்ச வேலைக் கலம்எனக் [1]கலங்கிற் றண்டம்.

1 [பிரதி] கலங்கித் தண்டம்.

ாசை. அரிஇனம் பூண்ட தேரும் அனுமனும் அனந்த சாரி
புரிதலும் இலங்கை ஊரும் புரிந்தது புலவ ரேயும்
எரிகணைப் படலம் மூடி இலர்உளர் என்னும் தன்மை
தெரிகிலர் செவிடு செல்லக் கிழிந்தது திசைகள் எல்லாம். 8195

ாரு. நாண்பொரு வரிவில் செங்கை நாமநூல் நவின்ற கல்வி
மாண்பொரு வகையிற் றன்று வலிக்கிலை அவதி வானச்
சேண்பொருள் என்று நின்ற தேவரும் இருவர் செய்கை
காண்பொருள் அன்றென் காட்சி கையற வெய்திற் றன்றே.

என்செய்தார் என்செய் தார்என் றியம்புவார் இன்ன தன்மை
முன்செய்தார் யாவர் என்பார் முன்வது பின்வ தென்பார்
கொன்செய்வேல் வீரர் இன்ன திசையினர் என்றும்கொள்ளார்
பொன்செய்தார் மவுலிவிண் ணோர் உணர்ந்திலர் புகுந்தொன் றும்

ாஎ. ஆயிர கோடி பல்லம் அயில்எயிற் றரக்கன் எய்தான்
ஆயிர கோடி பல்லம் அவைதொடுத் தறுத்தான் ஐயன்
ஆயிர கோடி நாகக் கணைதொடுத் தரக்கன் எய்தான்
ஆயிர கோடி நாகக் கணைதொடுத் தறுத்தான் அண்ணல்.

ாஅ. கோட்டியின் தலைய கோடி கோடிஅம் பரக்கன் எய்தான்
கோட்டியின் தலைய கோடி கோடியால் குறைத்தான்கொண் டல்
மீட்டிரு கோடி கோடி தொடுத்திகல் அரக்கன் விட்டான்
வீட்டிரு கோடி கோடி தொடுத்தவை தடுத்தான் வீரன்.

ாகூ. கங்கபத் திரமோர் கோடி கைவிசைத் தரக்கன் எய்தான்
கங்கபத் திரமோர் கோடி கணைதொடுத் திளவல் காத்தான்
திங்களில் பாதி கோடி இலக்குவன் தெரிந்து விட்டான்
திங்களில் பாதி கோடி தொடுத்தவை அரக்கன் தீர்த்தான்.

கோரையின் தலைய கோடி கொடுங்கணை அரக்கன் கோத்தான்
கோரையின் தலைய கோடி தொடுத்தவை இளவல் கொய்தான்
பாரையின் தலைய கோடி பரப்பினன் இளவல் பார்மேல்
பாரையின் தலைய கோடி அரக்கனும் பரக்க எய்தான்.

ாகo. தாமரைத் தலைய வாளி தாமரைக் கணக்கில் சாரத்
தாமரைக் கணத்தின் உந்தித் தசமுகன் தனையன் ஆர்த்தான்
தாமரைத் தலைய வாளி தாமரைக் கணக்கில் சாரத்
தாமரைக் கணத்து வீழ்த்தான் தாமரைக் கண்ணன் தம்பி.

நாகஉ. வச்சிரப் பகழி கோடி வலாளையிற் றரக்கன் எய்தான்
வச்சிரப் பகழி கோடி துரந்தவை அனகன் மாய்த்தான்
முச்சிரப் பகழி கோடி இலக்குவன் முடுக்கி விட்டான்
முச்சிரப் பகழி கோடி யால்கண்டன் முறையில் கொய்தான்.

நாகஙு. அஞ்சலி அஞ்சு கோடி தொடுத்திகல் அரக்கன்எய்தான்
அஞ்சலி யைஞ்சுகோடி யால்தொடுத் தறுத்தான் ஐயன்
குஞ்சர கன்னங் கோடி இலக்குவன் சிலையில் கோத்தான்
குஞ்சர கன்னங் கோடிதொடுத்தவைஅரக்கன்என் கொய்தான்.

நாகச. எய்யவும் எய்த வாளி விலக்கவும் உலகம் எங்கும்
மொய்கணைக் கானம் ஆகி முடிந்தது முழங்கு வேலை
பெய்கணைப் பொறிக ளாலே வளர்ந்தது பிறந்த கோபம்
கைமிகக் கனன்ற தல்லால் தளர்ந்திலர் காளை வீரர். 8205

நாகரு. வீழியின் கனிபோல் மேனி நிறைபட அனுமன் வீரச்
சூழ்எழு அனைய தோள்மேல் ஆயிரம் பகழி தூவி
ஊழியின் நிமிர்ந்த செந்தீ உருமினை உமிழ்வ தென்ன
ஏழ்இரு நூறு வாளி இலக்குவன் கவசத் தெய்தான். 8206

மூற்கொண்டான் அரக்கன்என்னு முளரிவாள்முகங்கள்தேவர்
பிற்கொண்டார் இளையகோவைப்பெயர்கொண்டான்பெருந்தோள்நின்றும்
கற்கொண்டார் கிரியின்மேல்வார் அருவிபோல் குருதிகண்டார்
வில்கொண்டால் இவனே என்ன வெருக்கொண்டார் விண்ணோர்எல்லாம்.

நாகள. சிறிநூல் தெரிந்த சிந்தை இலக்குவன் சிலைக்கை வாளி
நூறுநூ றேவி வெய்தின் நுடங்குளை மடங்கல் மாவும்
வேறுகூ றியற்றி வீரக் கொடியையும் அறுத்து வீழ்த்தி
ஆறுநூ றம்பு செம்பொன் கவசம்புக் கழுந்த எய்தான். 8208

நாகஅ. காளமே கத்தைச் சார்ந்த கதிரவன் என்னக் காந்தித்
தோளின்மேல் மார்பின் மேலும் சுடர்விடு கவசம் சூழ
நீளநீள் பவள வல்லி நிரைத்தென வீழ்ப்ப என்ன
வாளிவாய் தோறும் வந்து பொடித்தன உதிர வாரி. 8209

பொன்னுறு தடந்தேர் பூண்ட மடங்கல்மாப் புரண்ட போதும்
மின்னுறு பதாகை யோடு சாரதி வீழ்ந்த போதும்
தன்நிறத் துருவ வாளி தடுப்பில சார்ந்த போதும்
இன்னதென் றறியான் அன்னான் இளையதோர்மாற்றம்சொன்னான்.

ாஉ0. அன்னரன் அல்லன் ஆகில் நாரணன் அனையன் அல்லால்
பின்அரன் பிரமன் என்பான் பேசுக பிறந்து வாழும்
மன்னர்தம் பதியின் வந்து வரிசிலை பிடித்த கல்வி
இன்னரன் தன்னை டொப்பார் யார்உளர் ஒருவர் என்றான்.

ாஉக. வாயிடை நெருப்புக் கால உடல் நெடுங் குருதி வார
தியிடை நெய்வார்த் தன்ன வெகுளியான் உயிர்தீர்ந் தாலும்
ஓய்விடம் இல்லான் வல்லை ஓர்இமை ஒடுங்கா முன்னம்
ஆயிரம் புரவி பூண்ட ஆழியந் தேரின் ஆனான். 8212

*ாஉஉ. ஆசை எங்கணும் அம்புக வெம்புபோர்
ஓசை விம்ம உருத்திர ரும்உடல்
கூச ஆயிர கோடி கொலைக்கணை
ஏசி விண்ணை வெளியில தாக்கினான். 8213

ாஉங. அத்தி றத்தினில் ஐயனும் ஆயிரம்
பத்தி பத்தியின் எய்துவ பல்கணை
சித்தி ரத்தினில் சிந்தி இராவணன்
புத்தி ரற்கும்ஓர் ஆயிரம் போக்கினான். 8214

ாஉச. ஆயி ரங்கணை பாய்தலும் ஆற்றரும்
காயெ ரிப்படு நெய்எனக் காந்தினான்
தீய வன்பெருஞ் சேவகன் சென்னிமேல்
தூய வெங்கணை நூறுடன் தூவினான். 8215

ாஉசு. நெற்றி மேலும்ஓர் நூறு நெடுங்கணை
உற்ற போதினும் யாதும்ஒன் றுற்றிலான்
மற்ற வெந்தொழி லோன்மணி மார்பிடை
முற்ற வெங்கணை நூறு முடுக்கினான். 8216

ாஉசு. நூறு வெங்கணை மார்பின் நுழைதலும்
ஊறு சோரியொ டுள்ளமும் சோர்தரத்
தேற லாம்துணை யுஞ்சிலை ஊன்றியே
ஆறி னின்றனன் ஆற்றலில் தோற்றிலான். 8217

ாஉஎ. புதையும் நன்மணிப் பொன்உருள் அச்சொடும்
சிதைய ஆயிரம் பாய்பரி சிந்திட
வதையின் மற்றொரு கூற்றென மாருதி
உதையி னுல்அவன் தேரை உருட்டினான். 8218

ஈஉஅ. பேயொர் ஆயிரம் பூண்டது பெய்மணி
ஏய தேரின் இமைப்பிடை ஏறினன்
தூய வன்சுடர் தோளிணை மேல்சுடத்
தீய வெங்கணை ஐம்பது சிந்தினன். 8219

ஈஉக. ஏறி ஏறி இழிவதல் லால்இகல்
வேறு செய்திலன் வெய்யவன் வீரனும்
ஆறு கோடி பகழியில் ஐஇரு
நூறு தேர்ஒரு நாழிகை நூறினன். 8220

ஈஉங. ஆசி கூறினர் ஆர்த்தனர் ஆய்மலர்
வீசி வீசி வணங்கினர் விண்ணவர்
ஊசல் நீங்கினர் உத்தரி கத்தொடும்
தூசு வீசினர் நன்னெறி துன்னினர். 8221

ஈஉச. அக்க னைத்தினெர் ஆயிரம் ஆயிரம்
மிக்க வெங்கண் அரக்கர்தம் வீரனே
டொக்க வந்துற் றெருவழி நண்ணினர்
புக்க மூந்தினர் போரிடை ஆற்றுவார். 8222

ஈஉஉ. தேரர் தேரின் இவுளியர் செம்முகக்
காரர் காரின் இடிப்பினர் கண்டையின்
தாரர் தாரணி யும்விசும் பும்தவழ்
பேரர் பேரி முழக்கன்ன பேச்சினர். 8223

ஈஉஊ. பார்த்த பார்த்த திசைதொறும் பன்மழை
போர்த்த வானத் திடிஎனப் போர்த்தனர்
ஆர்த்த ஓதையும் அம்பொடு வெம்படை
தூர்த்த ஓதையும் விண்ணிணைத் தூர்த்ததால். 8224

ஈஉசு. ஆளி ஆர்த்தன வாளரி ஆர்த்தன
கூளி ஆர்த்த குதிரைகள் ஆர்த்தன
வாளி ஆர்த்தன வானவர் மண்டலம்
தூளி ஆர்த்தில வால்பிணம் துன்னவே. 8225

ஈஉரு. வந்த ணைந்ததொர் வாளரி வாவுதேர்
இந்தி ரன்தனை வென்றவன் ஏறினன்
சிந்தி னன்சரம் மாருதி மேல்செல
அந்தி வண்ணனும் அம்பின் அகற்றினன். 8226

ாநசு. சுற்றும் வந்து படர்ந்து தொடர்ந்தவர்
எற்ற கின்றன எய்த எறிந்தன
அற்று திர்ந்தன ஆயிரம் வன்தலை
ஒற்றை வெங்கணை யோடும் உருட்டினன். 8227

ாநள. குடர் கிடந்தன பாம்பெனக் கோள்மதக்
திடர் கிடந்தன சிந்தின தேர்த்திரள்
படர் கிடந்தன பல்படைக் கையினர்
கடல் கிடந்தன போன்ற களத்தினே. 8228

ாநஅ. குண்ட லங்களும் ஆரமும் கோவையும்
கண்ட நாணும் கழலும் கவசமும்
சண்ட மாருதம் வீசத் தலத்துகும்
விண்ட லம்செறி மீனின் விளங்குமால். 8229

ாநக. அரக்கன் மைந்தன் அடுகணை அம்பினுல்
கரக்க நூறி எதிர்பொரு கண்டகர்
சிரக்கொ டுங்குலக் குன்று திரட்டினுன்
இரக்கம் எய்திவெங் காலனும் எஞ்சவே. 8230

ாசய. சுற்று வால்கொடு தூவும் துகைக்கும் விட்
டெற்றும் வானில் எடுத்தெறி யும்எதிர்
உற்று மோதும் உதைக்கும் உமிக்குமால்
கொற்ற வில்லியன் றேறிய கூற்றமே. 8231

ாசக. பார்க்கும் அஞ்ச உறுக்கும் பகட்டினுல்
தூர்க்கும் வேலையைத் தோள்புடை கொட்டினின்
முர்க்கும் ஆயிரம் தேர்பிடித் தங்ஙையால்
ஈர்க்கும் ஐயன்அன் றேறிய யானையே. 8232

ாசஉ. மாவும் யானையும் வாளுடைத் தானையும்
பூவும் நீரும் புனைதளி ரும்எனத்
தூவும் அள்ளும் பிசையும் துகைக்குமால்
சேவ கன்தெரிந் தேறிய சீயமே. 8233

ாசங. உரகம் பூண்ட உருளை பொருந்தின
இரதம் ஆயிரம் ஏயெனும் மாத்திரை
சரதம் ஆகத் தரைப்படச் சாடுமால்
வரதன் அன்றுவந் தேறிய வாசியே. 8234

ாசச. அவ்வி டத்தினி னுய்மருந் தால்அழல்
வெவ்வி டத்தினீ உண்டவர் மீண்டென
எவ்வி டத்தினும் வீழ்ந்தன வீனத்தலைத்
தெவ்வ டக்கும் வலியவர் தேறினர். 8235

ாசரு. தேறி னர்கண் நெருப்புகச் சீறினர்
ஊறி னர்வந் திளவலை ஒன்றினர்
மாறி மாறி மலையும் மரங்களும்
நூறும் ஆயிர முங்கொடு தூறினர். 8236

ாசசு. விகட முற்ற மரனெடு வெற்பினம்
பொகட உற்ற பொறுத்தன போவன
துகட அத்தொழில் செய்துறை கம்பியர்
சகடம் ஒத்த தாரணி தோள்எலாம். 8237

ாசள. வாலி மைந்தன்ஓர் மால்வரை வாங்கினன்
காலின் வந்த அரக்கனைக் காஇது
போலும் உன்உயிர் உண்பது புக்கெனு
மேல்இ வர்ந்து நெருப்புக வீசினன். 8238

ாசஅ. ஏர் அழித்தது செய்தவன் ஈண்டெழில்
சீர் அழித்தவர் தாம்எனத் தேவர்கள்
ஊர் அழித்த உயர்வலித் தோளவன்
தேர் அழித்தோர் இமைப்பிடைச் சென்றதால். 8239

ாசக. அந்த வேலையில் ஆர்த்தெழுந் தாடினர்
சிந்தை சால உவந்தனர் தேவர்கள்
தந்தை தந்தையன் றுற்ற சமக்கெலாம்
எந்தை தீர்த்தனன் என்பதோர் ஏம்பலால். 8240

ாரும. அழிந்த தேரினன் அந்தரத் தக்கணத்
தெழுந்து மற்றேர் இரதம்உற் றேறினான்
கழிந்து போகலி னில்எனக் கைகளே
பொழிந்து சென்றனன் தீஎனப் பொங்கினன். 8241

ாருக. இந்தி ரன்மகன் மைந்தனீ இன்உயிர்
தந்து போகெனச் சாற்றலுற் றான்தனீ
வந்து மற்றைய வானர வீரரும்
மூண்டு போர்க்கு முறைமுறை முற்றினர். 8242

மரமும் குன்றும் மடிந்த அரக்கர்தம்
சிரமும் தேரும் புரவியும் திண்கரிக்
கரமும் வாரிக் கடிந்தவன் ஏவிய
சரமும் தாழ்த்தர வீசினர் தாங்கினர். 8243

அனைய காலையில் ஆயிரம் ஆயிரம்
வினைய வெங்கண் அரக்கரை வீண்ணவர்
நினையும் மாத்திரத் தாருயிர் நீக்கினன்
மனையும் வாழ்வும் உறக்கமும் மாற்றினன். 8244

ஆனை யும்தடந் தேரும்தன் ஆருயிர்த்
தானை யும்பரி யும்படும் தன்மையை
மான வெங்கண் அரக்கன் மனக்கொளாப்
போன வென்றியன் தீனைப் பொங்கினன். 8245

சீர்த்த டம்பெருஞ் சில்லியங் தேரினைக்
காத்து நின்ற இருவரைக் கண்டனன்
ஆர்த்த அப்பெருஞ் சேனைகொண் டண்டம்மேல்
ஈர்த்த சோரிப் பரவையின் றேற்றலால். 8246

நேர்செ லாதிடை நின்றன நீள்நெடும்
கார்செ லாஇருள் கீறிய கண்அகல்
தேர்செ லாது விசும்பினில் செல்வதோர்
பேர்செ லாது பிணத்தின் பிறங்கலால். 8247

அன்று தன்அயல் நின்ற அரக்கரை
ஒன்ற நோக்கிஒரு வில்லின் ஆற்றலான்
நன்று நம்படை நாற்பது வெள்ளமும்
கொன்று நின்ற படிஎனக் கூறினன். 8248

ஆய வீரரும் ஐய அமர்த்தலை
நீயும் நாற்பது வெள்ள நெடும்படை
மாய வெங்கணை மாரி வழங்கினை
ஓயும் வெஞ்செரு ஒக்கும்என் றேதினர். 8249

ஆறும் ஏழும் அறுபதும் ஐம்பதும்
நூறும் ஆயிர முங்கணை நூக்கிவந்
தூறி னுரை உணர்வு தொலைத்துயிர்
தேறி னுரை நெடுநிலம் சேர்த்தினன். 8250

ரசும. வந்து நேர்ந்தனன் மாருதி மேல்வரும்
அந்தி வண்ணனும் ஆயிரம் ஆயிரம்
சிந்தினன் சரம் தேவரை வென்றவன்
முந்து போர்க்கு முறைமுறை முந்தினன். 8251

ரசுக. கதிரின் மைந்தன் முதலினர் காந்தினர்
உதிர வெள்ளத்தின் ஒல்கி ஒதுங்கலும்
எதிரில் நின்ற இராவணி ஈடுற
வெதிரின் காட்டெரி போல்சரம் வீசினன். 8252

ரசுஉ. உளவு தோன்ற இராவணி ஒல்கினன்
கிளையில் நின்ற இருவர் கிளத்தரும்
அளவில் சேனை அவிதர ஆரியற்
கிளைய வீரன் சுடுசரம் ஏவினன். 8253

*ரசுஙு. தெரிகணை மாரி பாயத் தேர்களும் சினைக்கை மாவும்
பரிகளும் தாமும் அன்று பட்டனர் கிடப்பக் கண்டாங்
கிருவரும் நின்றார் மற்றை இராக்கதர் என்னும் பேர்கள்
ஒருவரும் நின்றார் இல்லை உள்ளவர் ஓடிப் போனார். 8254

ரசுச. ஓடிய அரக்கர் தண்ணீர் உண்ணைசை உலர்ந்த வாயர்
தேடினர் தெரிந்து கையால் முகிலினை முகந்து தேக்கிப்
பாடுறு புண்கள் எல்லாம் அப்புனல் பாயப் பாய
வீடினர் சிலவர் சில்லோர் பெற்றிலர் விளிந்து வீழ்ந்தார்.

ரசுரு. வெங்கணை திறந்தமெய்யர்விளிந்திலர்வீரைந்துசென்றார்
செங்குழல் கற்றை சோரத் தெரிவையர் எதிர்ப்பத் தெய்வப்
பொங்குபூம் பள்ளி புக்கங் கவர்உடல் பொருந்தப் புல்லி
அங்கவர் ஆவி யோடும் தம்உயிர் போக்கி அற்றார். 8256

பொறிக்கொடும் பகழி பாயப் போயினர் இடங்கள் புக்கார்
மறிக்கொளும் சிறுவர் தம்மை மற்றுள சுற்றத் தோரைக்
குறிக்கொளும் என்னக் கூறி அவர்முகம் குழைய நோக்கி
நெறிக்கொளும் கூற்றை நோக்கி ஆருயிர் நெடிதில் நீத்தார்.

ரசுள. தாமரைக் சண்ணன் தம்பி தன்மைஈ தாகின் மெய்யே
வேமரைக் கணத்தின் இவ்வூர் இராவணி விளிதன் முன்னம்
மாமரக் காவில் குன்றில் மறைந்துநீ மறைய வல்லே
போம்அரைக்கணத்தெதம் உள்ளீர் எனச்சொல்லி ஆவிபோனார்.

எசுஅ. வரையுண்ட மதுகை மேனி மருமத்து வள்ளல் வாளி
இரையுண்டு துயிலச் சென்றார் வாங்கிடில் இறப்பம் என்றூர்
பிரையுண்ட பாவின் உள்ளம் பிறிதுறப் பிறர்முன் சொல்லா
உரையுண்ட நல்லோர் என்ன உயிர்த்துயிர்த் துளைப்ப தானூர்.

தேரிடைச் செல்லார் மானப் புரவியில் செல்லார் செங்கட்
காரிடைச் செல்லார் காலில் கால்எனச் செல்லார் காவல்
ஊரிடைச் செல்லார் நாணுல் உயிரிடை உடைய அன்பால்
போரிடைப் போகார் நின்று நடுக்கினர் புறத்தும் போகார்.

எஅ. நொய்தினில் சென்று கூடி இராவணி உரைவை நோக்கி
வெய்தினித் துணித்து வீழ்ப்பன் என்பதோர் வெகுளி வீங்கிப்
பெய்துழிப் பெய்யு மாரி அனையவன் பிணங்கு கூற்றின்
கைகளில் பொரிய அம்பால் கவசத்தைக் கழித்து வீழ்த்தான்.

எக. கவசத்தைக் கழித்து வீழ்ப்பக் கசப்புறு கடன்இன் முகி
அவசசதை அடைந்த வீரன் அறிவுவந் தடையு முன்னம்
துவசத்தின் புரவித் திண்தேர் கடிதினில் தூண்டி யாம்அத்
திவசத்தின்முடித்தும்வெம்போர் எனச்சினம்திருகிச்சென்றூர்.

எஉ. மாருதி மேலும் ஐயன் மார்பினும் தோளின் மேலும்
தேரினின் றிருவர் சென்றூர் செந்தழல் பகழி தூவ
ஆரியன் வாகை வில்லும் அச்சுடைத் தேரும் அத்தேர்
ஊருவான் உயிரும் பூட்டும் புரவியின் உயிரும் உண்டான்.

எஎ. இருவரும் இழந்த வில்லர் எழுமுனை வயிரத் தண்டால்
உருமெனக் கடிதின் ஓடி அனுமனை இமைப்பின் உற்றூர்
பொருகனல் பொறிகள் சிந்தப் புடைத்தனர் புடைத்த லோடும்
பருவலிக்கரத்தினுல்தண்டிரண்டையும் பறித்துக்கொண்டான்.

எசு. தண்டவன் கைய தான தன்மையைத் தறுகண் ணாளர்
கண்டவர் ஆண்டு செய்யல் ஆவதோ ஒன்றும் காணூர்
கொண்டிவன்எறிந்துநம்மைக் கொல்லும்என் றச்சம்கொண்டார்
உண்டசெஞ் சோறு நோக்கார் உயிருக்கே உதவி செய்தார்.

எஏ. காற்றுவந் தசைத்த தாலும் காலம்அன் றுத லாலும்
கூற்றுவந் துயிரைக் கொள்ளும் கோளின்மை குறித்த லாலும்
தேற்றம்வந் தெய்தி நின்ற மயக்கமும் நோவும் தீர்ந்தார்
ஏற்றமும் வலியும் பெற்றூர் எழுந்தனர் வீரர் எல்லாம். 8266

ளகூ. அங்கதன் குமுதன் நீலன் சாம்புவன் அருக்கன் மைந்தன்
பங்கமில் மயிந்தன் தம்பி சதவலி பனசன் முன்னோன்
சிங்கவே றணைய வீரர் யாவரும் சிகரம் ஏந்தி
மங்கலம் வானோர் சொல்ல மழைஎன ஆர்த்து வந்தார். 8267

ளஎ. அத்தனை வோரும் குன்றம் அளப்பில அசனி ஏற்றே
டொத்தன நெருப்பு வீசும் உரும்என ஒருங்க உய்த்தார்
இத்தனை போலும் செய்யும் இகல்என முறுவல் எய்தி
சித்திர வில்லி னானும் சின்னபின் னங்கள் செய்தான். 8268

ளஅ. மரங்களும் மலையும் ஏந்தி மழைஎன வழங்கி வந்து
நெருங்கினர் நெருங்கக் கண்டும் ஒருதனி நெஞ்சும் வில்லும்
சரங்களும் துணையாய் நின்ற நிசாசரன் தன்மை நோக்கி
இரங்கினன் என்ன மேல்பால் குன்றுபுக் கிரவி நின்றான். 8269

ளஎ. வாழிய வேத நான்கும் மனுமுறை வந்த நூலும்
வேள்வியும் மெய்யும் தெய்வ வேதியர் விதியும் அஃதே
ஆழியங் கமலக் கையன் ஆதியம் பரமா என்னு
ஏழையர் உள்ளம் போல இருண்டன திசைகள் எல்லாம். 8270

ளகூ. நாகமே அனைய நம்பி நாழிகை ஒன்று தான்கு
பாகமே கால மாகப் படுத்தியேற் பட்டான் அன்றேல்
வேகவேல் அரக்கர் காலம் விளைந்தது விசும்பின் வஞ்சன்
ஏகுமேல் வெல்வன் என்ப திராவணற் கிளவல் சொன்னான்.

ளகூ. அத்தனை வீரர் மேலும் ஆண்தகை அனுமன் மேலும்
எத்தனை கோடி வாளி மழைஎன எய்யா நின்ற
வித்தக வில்லி னானைக் கொல்வது கருதி வீரன்
சித்திரத் தேரைத் தெய்வப் பகழியால் சிதைத்து வீழ்த்தான்.

அழித்ததேர் அழுந்தா முன்னம் அம்பொடுங் கிடந்து மண்டி
உழைத்துயிர் விடுவ தல்லால் இளைச்செயல் ஒன்றே என்னப்
பிழைத்திவர் போகா வண்ணம் பாசத்தால் பிணிப்பன் என்னு
விழித்திமை யாத முன்னம் வில்லொடும் விசும்பில் சென்றான்.

பொன்குலா மேனி மைந்தன் தன்னொடும் புகழ்தற் கொத்த
வன்கொலாம் இயற்றி நின்றான் மற்றொரு மனத்தன் ஆகி
மின்கொலாங் கழல்கால் வீரன் விண்ணிடை விரைந்த தன்மை
என்கொலாம் என்ன அஞ்சி வானவர் இரியல் போனார்.

தாங்குவில் கரத்தான் தூணி தழுவிய புறத்தான் தன்னுள்
ஓங்கிஉற் றெரியா நின்ற வெகுளியன் உயிர்ப்புத் தீயன்
தீங்கிழைப் பவரை எண்ணின் சீரியோன் மாயைச் செல்வன்
வீங்கிருட் பிழம்பின் உம்பர் மேகத்தின் மீதின் ஆனன். 8275

ஈஅரு. தணிவறப் பண்டு செய்த தவத்தினும் தருமத் தானும்
பிணிஅறுப் பவனிற் பெற்ற வரத்தினும் பிறப்பி னாலும்
மணிநிறத் தரக்கன் செய்த மாயமந் திரத்தி னாலும்
அணுவெனச் சிறிய தாங்கோர் ஆக்கையும் உடையன் ஆனன்.

ஈஅசு. வாங்கினன் மலரின் மேலான் வானக மணிநீர்க் கங்கை
தாங்கினன் உலகம் தாங்கும் சக்கரத் தவனென் றாலும்
வீங்குவான் தோளின் வீக்கின் வீழ்த்தன்றி மீள்க லாத
ஓங்குவாள் அரவின் நாமத் தொருதனிப் படையை உன்னு

ஈஅஎ. ஆயினகாலத் தார்த்தார் அமர்த்தொழிற்கஞ்சி அப்பால்
போயினன் என்ப துன்னி வானர வீரர் போல்வார்
நாயகற் கிளைய கோவும் அன்னதே நயந்து நக்கான்
மாயையைத் தெரிய உன்னூர் அமர்த்தொழில் மாறி நின்றார்.

அதுகணத் தனுமன் தோள்நின் றையனும் இழிந்துவெய்ய
கதுவலிச் சிலையை வென்றி அங்கதன் கையி தாக்கி
முதுகுறச் சென்று நின்ற கணையெல்லாம் முறையின் வாங்கி
விதிர்விதிர்ப் பாற்றல் உற்றான் விளைகின்ற துணர்கி லாதான்.

கஅசு. விட்டனன் அரக்கன் வெய்ய படையினை விடுத லோடும்
எட்டினை டிரண்டு திக்கும் இருள்இரிந் திரிய ஓடிக்
கட்டின தென்ப மன்னோ காகுத்தற் கிளைய காளை
வட்டவாண் வயிரத் திண்தோள் மலையினை உலைய வாங்கி. 8280

ககூ.இறுகுறப் பிணித்த லோடும் யாவையும் எதிர்ந்த போதும்
மறுகுறக் கடவன் அல்லன் மாயமென் றுணர வல்லான்
உறுகுறைத் துன்பம் இல்லான் ஓடுங்கினன் செய்வ தோரான்
அறுகுறைக் களத்தை நோக்கும் அந்தரம் அதனை நோக்கும்.

ககக. மற்றையோர் தம்மை எல்லாம் வாள்எயிற் றரவம் வந்து
சுற்றின வயிரத் தூணின் மலைஎனப் பெரிய தோள்கள்
இற்றன இற்ற என்ன இறுக்கின இளகா உள்ளம்
தெற்றென உடைய வீரர் இரிந்தனர் செய்வ தோரார். 8282

ககூஉ. காலுடைச் சிறுவன் மாயக் கள்வனைக் கணத்தின் காலை
மேல்விசைத் தெழுந்து நாடிப் பிடிப்பன்என் றுறுக்கும் வேலை
ஏலஅப் பாசம் மேல்நாள் இராவணன் புயத்தை வாலி
வால்பிடித் தென்னச் சுற்றிப் பிணித்தது வயிரத் தோளை.

ககூங. மலைஎன வீழ்வர் வீழா மண்ணிடைப் புரள்வர் வானில்
தலைகளை எடுத்து நோக்கித் தழல்எழ விழிப்பர் தாவி
அலைகிளர் வாலால் பாரில் அடிப்பர்வாய் மடிப்பர் ஆண்மைச்
சிலைஅவற் கிளைய கோவை நோக்குவார் உள்ளம் தீய்வார்.8284

வீடணன் முகத்தை நோக்கி வீணையுண் டோஇதனுக் கென்பார்
மூடிய கங்குல் மாலை இருளினை முனிவர் மொய்ம்பின்
ஈடுறத் தக்க போலாம் நம்எதிர் என்று வேந்தன்
ஆடகத் தோளை நோக்கி நொந்துநொந் தழுங்கி நைவார். 8285

ககூடு. ஆர்இது தீர்க்க வல்லார் அஞ்சனை பயந்த வள்ளல்
மாருதி பிழைத்தான் கொல்லோ என்றனர் மறுகி நோக்கி
வீரனைக் கண்டு பட்ட திதுகொலாம் என்று வீம்மி
வார்கழல் தம்பி தன்மை காணுமோ வள்ளல் என்பார். 8286

என்சென்ற தன்மை சொல்லி எறுழ்வலி அரக்கன் எய்தான்
மின்சென்ற தென்ன வானத் துருமினம் வீழ்வ என்ன
பொன்சென்ற வடிம்பின் வாளி புகையொடும் பொறியும் சிந்த
முன்சென்ற பின்புசெல்ல முதுகுற மார்பை முற்ற 8287

ாகூஎ. மலைத்தலைக் காலமாரி மறித்தெறி வாடை மோதத்
தலைத்தலை மயங்கி வீழ்ந்த தன்மையில் தலைகள் சிந்துங்
கொலைத்தலை வாளி பாயக் குன்றன குவவுத் தோளார்
நிலைத்தலை குலைந்து சாய்ந்தார் நிமிர்ந்தது குருதி நீத்தம்.

ாகூஅ. ஆயிர கோடி மேலும் அம்புதன் ஆகத் தோடும்
போயின போதும் ஒன்றும் துடித்திலன் பொடித்த மானந்
தீயெரி சிதறுஞ் செங்கண் அஞ்சனைச் சிங்கந் தெய்வ
நாயகன் தம்பிக் குற்ற துயர்சுட நடுங்கு கின்றான். 8289

ாகூக. வேறுள வீரர் எல்லாம் வீழ்ந்தனர் உருமின் வெய்ய
நூறுமா யிரமும் வாளி உடலிடை நுழையச் சோரீ
ஆறுபோல் ஒழுக அண்ணல் அங்கதன் அனந்த வாளி
ஏறிய மெய்ய னேறும் இருந்தனன் இடைந்திலா தான். 8290

உஉ. கதிரவன் காதல் மைந்தன் கழலிளம் பசுங்காய் என்ன
எதிர்எதிர் பகழி தைத்த யாக்கையன் எரியும் கண்ணன்
வெதிர்நெடும் கானம் என்ன வேகின்ற மன்த்தன் வெய்ய
உதிரஒண் கடலில் தாதை உதிக்கின்ருன் தன்னை ஒத்தான்.

உஉக. வெப்பாரும் பாசம் வீக்க வெங்கணை துளக்கு மெய்யான்
ஒப்பாரும் இல்லான் தம்பி உணர்ந்திருந் தின்னல் உய்ப்பான்
இப்பாசம் மாய்க்கு மாயம் யான்வல்லன் என்னத் தேர்ந்தும்
அப்பாசம் வீசல் ஆற்ரு தழிந்தஅல் அறிவு போன்ருன். 8292

*உஉஉ. அம்பெலாம் கதிர்க ளாக அழிந்தழிந் தலைக்கும் ஆழிச்
செம்புனல் வெயிலில் தோன்றத் திசையிருள் இரியச் சீறிப்
பம்புபே ரொளிய நாகம் பற்றிய வடிவத் தோடும்
உம்பர்நா டிழிந்து வீழ்ந்த ஒளியவன் ஏயும் ஒத்தான். 8293

மயங்கினுன் வள்ளல் தம்பி மற்றையோர் முற்றும் மண்ணில்
முயங்கினுர் மேனி எல்லாம் மூடினுர் அரக்கன் மைந்தன்
தயங்குபேர் ஆற்ற லானும் தன்உடல் தைத்த வாளிக்
குயங்கினுன் உளைந்தான் வாயால் உதிரநீர் உமிழா நின்ருன்.

உஉச. சொற்றது முடித்தேன் நாளை என்உடல் சோர்வைநீக்கி
மற்றது முடிப்பன் என்னு எண்ணினன் மனிதர் வாழ்க்கை
இற்றது குரங்கின் தானை இற்ந்ததென் றிரண்டு பாலும்
கொற்றமங் கலத்தின் ரூர்ப்ப இராவணன் கோயில் புக்கான்.

உஉடு. ஈர்க்கடை பகழி மாரி இலக்குவன் என்ன நின்ற
நீர்க்கடை மேகம் தன்னை நீங்கியும் செருவை நீங்கான்
வார்க்கடை மதுகைக் கொங்கை மணிக்குறு முறுவல்மாதர்
போர்க்கடைக்கருங்கண்வாளிபுயத்தொடும்பொழியப்போனுன்.

உஉசு. ஐயிருகோடி செம்பொன் மணிவிளக் கங்கை ஏந்தி
மைஅறு வான் நாட்டு மாதரும் மற்றை நாட்டுப்
பைஅர வல்கு லாரும் பலாண்டிசை பரவத் தங்கள்
தையலர் அறுகு தூவி வாழ்த்தினர் தழுவச் சார்ந்தான். 8297

உஉள. தந்தையை எய்தி ஒன்னுர்க் குற்றுள தன்மை சாரச்
சிந்தையின் உணர்த்தி மற்றும் தீயிடர் தீர்த்து நோக்கி
நொந்தனன் ஆக்கை நொய்தின் ஆறிமேல் நுவல்வன் என்னுப்
புந்தியில் அனுக்கம் தீர்வான் தன்னுடைக் கோயில் புக்கான்.

உ0அ. இத்தலே இன்னல் உற்ற வீடணன் இசைப்ப தோரான்
மத்துறு தயிரின் உள்ளம் மறுகினன் மயங்கு கின்ருன்
அத்தலேக் கொடியோன் என்னே அட்டிலன் அளியத்தேன்நான்
செத்திலன் வலியன் இன்றே என்றுபோய் வையம் சேர்வான்.

உ0கூ. பாசத்தால் ஐயன் தம்பி பிணிப்புண்ட படியைக் கண்டு
நேசத்தார் எல்லாம் வீழ்ந்தார் யான்ஒரு தமியன் நின்றேன்
தேசத்தார் என்னே என்னே சிந்திப்பார் என்று நையும்
வாசத்தார் மாலே மார்பன் வாய்திறந் தரற்றல் உற்ருன். 8300

கொல்வித்தான்உடனேநின்றங் கென்பரோகொண்டுபோனுன்
வெல்வித்தான் மகனே என்று பகர்வரோ வீலுவிற் கெல்லாம்
நல்வித்தாய் நடந்தான் முன்னே என்பரோ நயந்தோர் தத்தம்
கல்வித்தாம்வார்த்தைஎன்னக்கரைவித்தான்உயிரைக்கண்ணுல்

உகக. போரவன் புரிந்தபோதே பொருவரும் வயிரத் தண்டால்
தேரொடும் புரண்டு வீழச் சீறிஎன் சிந்தை செய்ய
வீரமும்தெரிந்தேன் அல்லேன் விளிந்திலேன்மெலிவும்இல்லேன்
ஆருமு வாகத் தக்கேன் அளியத்தேன் அழுந்து கின்றேன்.8302

உகஉ. ஒத்தலேந் தொக்க ஒடி உய்வினும் உய்வித் துள்ளம்
கைத்தலே நெல்லி என்னக் காட்டிலேன் கழிந்தும் இல்லேன்
அத்தலேக் கல்லேன் யான்ஈண் டபையம்என் றடைந்து நின்ற
இத்தலேக் கல்லே னல்லேன் இருதலேச் சூலம்போல்வேன்.8303

உகங. அனேயன பலவும் பன்னி ஆகுலித் தரற்று வானே
வினேயுள பலவும் சொல்லத் தக்கனே வீர நீயும்
நினேவிலார் போல நின்று நினேத்தியோ மன்ன என்னு
இனேயன சொல்லித் தேற்றி அனலன்மற் றினேய சொன்னுன்

நீஇவண் இருத்தி யான்போய் நெடியவற் குரைப்பன் என்னுப்
போயினன் அனலன் யாணர்ப் புண்ணியன் பொலன்கொள்பாதம்
மேயினன் வணங்கி உற்ற வினேஎலாம் விளங்கச் சொன்னுன்
ஆயிரம்நாமத் தண்ணல் அருந்துயர்க் கடலுள் ஆழ்ந்தான்.8305

உரைத்திலன் ஒன்றும் தன்னே உணர்ந்திலன் ஒன்றும் ஓடக்
கரைத்திலன் கண்ணி னீரில் கண்டிலன் யாதுங் கண்ணுல்
அரைத்திலன்உலகைஎல்லாம் அங்கையால்பொங்கிப்பொங்கி
இரைத்திலன் உளனென் றெண்ணி இருந்தனன் விம்மி ஏங்கி

விம்மினன் வெதும்பி வெய்துற் றேங்கினன் இருந்த வீரன்
இம்முறை இருந்துசெய்யல் ஆவதொன் றிலன்என் றெண்ணிப்
போம்எனும் விம்ம லோடும் பொருக்கென எழுந்து போனான்
தெம்முனை துறந்து வென்ற செங்கள மருங்கில் சென்றான்.8307

உகள. இழிந்தெழு காள மேகம் எறிகடல் இனைய மற்றும்
ஒழிந்தன நீல வண்ணம் உள்ளன எல்லாம் ஒக்கப்
பிழிந்தன கால மாகக் காளிமப் பிழம்பு போதப்
பொழிந்தது போன்ற அந்தப் பொங்கிருள் கங்குல் போர்வை.

உகஅ. ஆரிருள் அனைய தாக ஆயிர நாமத் தண்ணல்
சீரிய அனலின் தெய்வப் படைக்கலம் சிலையில் சேர்த்திப்
பாரிய எடுத்த லோடும் பகைஇருள் இரிந்து பாறச்
சூரியன் உச்சி உற்றுல் ஒத்ததவ் உலகின் சூழல். 8309

படையுறு பிணத்தின் பம்பற் பருப்பதம் துவன்றிப் பல்வே
றிடையுறு குருதி வெள்ளத் தெறிகடல் எழுநீர் பொங்கி
உடைபுலித்தடக்கைஅண்ணல் உயிர்எல்லாம்ஒருங்கஉண் ணும்
கடையுறு காலத் தாழி உலகன்ன களத்தைக் கண்டான்.

உஉம.பிணப்பெருங் குன்றின்ஊடும் குருதிநீர்ப்பெருக்கினூடும்
நிணப்பெருஞ் சேற்றினூடும் படைக்கல நெருக்கி னூடும்
மணப்பெருங் களத்தின் மோடி மங்கல வாழ்க்கை வைப்பில்
கணத்தினும் பாதிப் போதில் தம்பியைச் சென்று கண்டான்.

ஐயன்தான் அவன்மேல் வீழ்ந்தான் அழுந்துற மார்பில் புல்லி
உய்யலன் என்ன வாடி உய்த்துயிர்த் துயங்கு கின்றான்
பெய்யிரு தாரைக் கண்ணீர்ப் பெருந்துளி பிறங்க வானின்
வெய்யவன் தன்னைச் சேர்ந்த நீல்நிற மேகம் ஒத்தான். 8312

உழைக்கும்வெய்துயிர்க்கும்ஆவி உருகும்போய்உணர்வுசோரும்
இழைக்குவ தரிதில் தேற்றான் இலக்குவா இலக்குவா என்
றழைக்கும்தன் கையை மூக்கின் வாயின்வைத் தறியும் ஐயா
பிழைத்தியோ என்னும் ஆவி பிறந்தேயும் பிறந்தி லாதான்

உஉங. தாமரைக்கையால்தாழ்த் தைவரும் குறங்கைத் தட்டும்
தூமலர்க் கண்ணைநோக்கும் மார்பிடைத் துடிப்புண்டென்னும்
ஏமுறு விசும்பை நோக்கும் எடுக்கும்தன் கையால் ஏந்தும்
பூமியின் வளர்த்துங் கள்வன் போய்அகன் றானே என்னும்.

உஉச. வில்லினை நோக்கும் பாச வீக்கினை நோக்கும் வியா
அல்லினை நோக்கும் வானத் தமரரை நோக்கும் பாரைக்
கல்லுவன் வேரோ டென்னும் பவளவாய் அதுக்கிக்கற்றோர்
சொல்லினை நோக்கும் தன்கைப் பகழியை நோக்கும் தோளான்.

உஉடு. வீரரை எல்லாம் நோக்கும் விதியினை நோக்கும்வீரப்
பாரவெஞ் சிலையை நோக்கும் பகழியை நோக்கும் பாரில்
யார்இது பட்டார் யானே எளிவந்த வண்ணம் என்னும்
நேர்இது பெரிதென் றோதும் அளவையின் நிமிர நின்றான்.

எடுத்தபேர் இலங்கை வேந்தன் மைந்தனே டிளைய கோவுற்
றடுத்தபோ தென்னை இங்கே அழைத்திலை அரவின் பாசம்
தொடுத்தகை சரத்தி னோடும் துணித்துயிர் குடிக்க என்னைக்
கெடுத்தனை வீட ணாநீ என்றனன் கேடி லாதான். 8317

உஉள. அவ்வுரை அருளக் கேட்டாங் கழுகின்ற அரக்கன் தம்பி
இவ்வழி அவன்வந் தேற்ப தறிந்திலேன் எதிர்ந்த போதும்
வெவ்வழி அவனே தோற்கும் என்பதை விரும்பி நின்றேன்
தெய்வவான் பாசம் செய்த செயல்இந்த மாயச் செய்கை.

உஉஅ. அற்றதி காயன் ஆக்கை தலையில தாக்கி ஆண்டவ்
வெற்றியன் ஆக்கி வீரன் மீண்டிலன் இலங்கை மேல்நாள்
பெற்றவன் எய்தும் என்னும் பெற்றியை உன்னிப் பிற்போ
துற்றனன் மைந்தன் தானை நாற்பது வெள்ளத் தோடும்.

உஉக. ஈண்டுநம் சேனை வெள்ளம் இருபதில் பாக மாளத்
தூண்டினன் பகழி மாரி தலைவரைத் தொலைத்துச் சோர
மூண்டெழு போரில் பாரின் மும்முறை முடித்தான் பின்னர்
ஆண்டகை யோடும் உற்றான் ஆயிரம் மடங்கல் தேரான்

உஙஎ. அனுமன்மேல் நின்ற ஐயன் ஆயிரம் தேரு மாளத்
தனுவலி காட்டிப் பின்னர் நாற்பது வெள்ளத் தானை
பனியினைப் படுவித் தன்னான் வலத்தையும் குறைத்துப்பட்டான்
இனிஎன வயிர வாளி எண்ணிலா நிறத்தில் எய்தான். 8321

உஙக. ஏவுண்ட பகுவா யோடும் குருதிநீர் இழிய நின்றான்
தூவுண்ட தானை முற்றும் படஒரு தமியன் சோர்வால்
போவுண்ட தென்னின் ஐயா புணர்க்குவன் மாயம் என்பை
பாவுண்ட கீர்த்தி யானுக் குணர்த்தினேன் பருதி பட்டான்.

மாயத்தால் இருண்ட தாழி உலகெலாம் வஞ்சன் வானில்
போயத்தான் உடைய வஞ்ச வரத்தினுல் ஒளித்துப் பொய்யின்
ஆயத்தால் பாசம் வீசி அயர்வித்தான் அம்பின் வெம்பும்
காயத்தான் என்னச் சொல்லி வணங்கினுன் கலுழுங் கண்ணுன்

உஉங.பின்னரும் வணங்கி ஏதும் பிழைத்திலன் பெருமை யாரும்
இன்னுயிர் இறந்தார் இல்லை இறுக்கிய பாசம் இற்ருல்
புன்னுணப் பகழி கொல்லும் தரத்ததோ புலம்பி உள்ளம்
இன்னல்உற் றயரல் வெல்லா தறத்தினைப் பாவம் என்ருன்.

உஉச. யாரிது கொடுத்த தேவர் என்னைய திதனைத் தீர்க்கும்
காரணம் யாது நின்னுல் உணர்ந்தது கழறிக் காணென்
ருரியன் அருள அண்ணல் அடிமலர் வணங்கி அண்மிச்
சீரிதென் றதனை உள்ள வாறெலாம் செப்பல் உற்ருன். 8325

ஆழியஞ் செல்வ பண்டிவ் அகல்இடம் அளித்த அண்ணல்
வேழ்வியில் படைத்த ஈசன் வேண்டினன் பெற்று வெற்றித்
தாழ்வறு சிந்தை யோனுக் களித்தனன் தவத்தின் ஐய
ஊழியின் உயர்ந்த காலத் துருமின தூற்றம் ஈதால். 8326

உஉசு. அன்னதின் ஆற்ற லாலே ஆயிரங் கண்ணி னுனைப்
பின்னுற வயிரத் திண்தோள் பிணித்தது பெயர்த்தொன் றெண்ணல்
என்னினி அனுமன் தோளை இறுக்கிய திதனுல் யாண்டும்
பொன்னுல காளும் செல்வம் துறந்தது புலவர் எல்லாம். 8327

உஉள.தான்வீடில் விடுவ தன்றிச் சதுமுகன் முதல்வராய்ந்த
வான்விடில் விடாது மற்றிம் மன்னரீ எண்ணி என்னை
ஊன்விட உயிர்போய் நீங்க நீங்கும்வே றுய்வ தில்லைத்.
தேன்விடு துளவத் தாராய் இதுஇதன் செய்கை என்ருன்:8328

உஉஅ. ஈந்துள தேவர் மேலே எழுகெனை உலகம் யாவும்
தீய்ந்துக நூறி வானும் தீக்கெனை இலங்கை சிந்தப்
பாய்ந்தவர் சுற்றம் முற்றப் படுக்கெனை இயல்வு பண்டே
ஏய்ந்தது பகர்தி என்ருன் இமையவர் இடுக்கண் தீர்ப்பான்.

உஉக. வரங்கொடுத் தினைய பாசம் வழங்கினுர் தாமே வந்துற்
றிரங்கிடத் தக்க துண்டேல் இகழிலன் இல்லை என்னில்
உரங்கெடுத் துலக மூன்றும் ஒருவனுர் அம்பில் சுட்ட
புரங்களில் நிரக் காண்பேன் பொடிஒரு கடிகைப் போழ்தில்.

உசம்.எம்பியே இறக்கும் ஆகில் இனிஎனக் கிலங்கை வேந்தன்
தம்பியே புகழ்தான் என்ன பழிஎன்ன அறந்தான் என்ன
நம்பியே என்னைச் சேர்ந்த நண்பரும் நல்லவா மேல்
உம்பரும் உலகத் துள்ள உயிர்களும் உதவி பார்க்கில். 8331

என்றுகொண்டியம்பிஈண்டிங் கொருவன்ஓர் இடுக்கண்செய்ய
வென்றவன் உலகை மாய்த்தால் விதியன்ருல் என்று விம்மி
நின்றுநின் றுன்னி உன்னி நெடிதுயிர்த் தலக்கண் உற்ருன்
தன்துணைத் தம்பி மேல்தன் துணைவர்மேல் தாழ்ந்த அன்பால்.

உசஉ.மீட்டும்வந் திளையவீரன் வெற்பன்ன விசயத் தோளைப்
பூட்டிய பாசம் தன்னைப் பன்முறை புரிந்து நோக்கி
வீட்டிய தென்னில் பின்னர் வீப்பன்என் றெண்ணும் வேதத்
தோட்டியில் துவக்கி நிற்கும் துளக்கைமால் யானை அன்ஞன்.

*இத்தன்மைஎய்தும் அளவின்கண்நின்ற இமையோர்கள் அஞ்சிஇதுபோய்
எத்தன்மைஎய்தி முடியும்கொல்என்று குலைகின்றஎல்லை இதன்வாய்
அத்தன்மைகண்டு புடைநின்றஅண்ணல் கலுழன்தன் அன்பின் மிசையால்
சித்தம்கலங்கும் இதுதீரமெள்ள இருளூடுவந்து தெரிவான். 8334

உசச. அசையாதசிந்தை அரவால்அனுங்க அழியாதஉள்ளம் அழிவான்
இசையாஇலங்கை அரசோடும்அண்ணல் அருளின்மைகண்டு கயவான்
விசையால்அனுங்க வடமேருவையம் ஒளியால்விளங்க இமையாத்
திசையாணைகண்கள் முகிழாஒடுங்க கிறைகால்வழங்கு சிறையான். 8335

காதங்கள்கோடிகடைசென்றுகாணும் நயனங்கள்வாரிகலுழக்
கேதங்கள்கூர அயர்கின்றவள்ளல் திருமேனிகண்டுகிளர்வான்
சீதங்கொள்வேலை அலைசிந்தஞால இருள்சிந்தவந்த சிறையான்
வேதங்கள்பாட உலகங்கள்யாவும் வினைசிந்தநாக மெலிய.8336

அல்லைச்சுருட்டி வெயிலைப்பரப்பி அகல்அசைஎங்கும் அழியா
வில்லைச்செலுத்தி நிலவைத்திரட்டி விரிகின்றசோதி மிளிர
எல்லைக்குயிற்றி எரிகின்றமோலி இடைநின்றமேரு எனுமத்
தொல்லைப்பொருப்பின் மிசையேவிளங்கு சுடரோனின்மும்மை கடர.

உசஎ.நன்பால்விளங்கு மணிகோடியோடு நளிர்போதுசெம்பொன்முதலாத்
தன்பால்இயைந்த நிழல்கொண்டமைந்த தழுவாதுவந்து தழுவ
மின்பால்இயைந்த தொருகுன்றம்வானின் விழுகின்றதென்ன வெயிலோன்
தென்பால்எழுந்து வடபால்நிமிர்ந்து வருகின்றசெய்கை தெரிய. 8338

உசஅ.பன்னகர்சென்னி மணிகோடிகோடி பலகொண்டுசெய்த வலையால்
மின்னல்இயன்ற தெனலாய்விளங்கு மிளிர்பூண்வயங்கும் வெயில்கால்
பொன்னும் இபன்ற நகையோடை பொல்க வனமாலை மார்பு புரளத்
தொன்னுளி பிரிக்த துயர்நீர அண்ணல் திருமேனி கண்டு தொழுவான்.

முடிமேல்நிமிர்ந்தமுகிழ்எ றுகையன்முகில்மேல்நிமிர்ந்தஒளியான்
அடிமேல்விழுந்துபணியாமல்நின்ற நிலைஉன்னிஉன்னி அழிவான்
கொடிமேல்இருந்திவ் உலகேழொடேழு தொழுகின்ற கோளும் இலனெய்ப்
படிமேல்எழுந்து வருவான்விரைந்து பலகால்கிணேக்து பணிவான். 8340

வந்தான்மறந்துபிரிவால்வருந்து மலர்மேல்அயன்தன் முதலோர்
தந்தாதைதாதைஇறைவாமறைந்து விளையாடுகின்றதனியோய்
சிந்தாகுலங்கள் களைவாய்தளர்ந்து துயர்கூர்ல்என்னசெயலோ
எந்தாய்பொருந்தல் உடையாய்வருந்தல் எனஇன்னபன்னி மொழிவான்.

உருக.தேவாதிதேவர் பலராலுமுந்து திருநாமம்ஓது செயலோய்
மூவாதநாளும்உலகேழொடேழும்அரசாளும்மேன்மைமுதல்வா
மேவாதஇன்பம் அவைமேவிமேய நெடுவீடுகாட்ட முடியாய்
ஆவாவருந்தி அழிவாய்கொல்ஆரிவ் அதிரேகமாயை அறிவார்.

எழுவாய்எவர்க்கு முதலாகிஈறு டிடையாகிஎங்கும்உளையாய்
வழுவாதவர்க்கும் வரமீயவல்லை அவரால்வரங்கள் பெறுவாய்
தொழுவாய்உணர்ச்சி தொடராததன்மை உருவாய்மறைந்து துயரால்
அழுவாய்ஒருத்தன் உளைபோலும்ஆரிவ் அதிரேகமாயை அறிவார். 8343

உன்னைக்கவைத்த இருவர்க்கும்ஒத்தி ஒருவர்க்கும் உண்மை உரையாய்
முன்னைக்கநிற்றி உலகொக்கஒத்தி முடிவொக்கின் ஒன்று முடியாய்
என்னைக்கும்இன்ன செயலோஇதென்னில் இருளொக்குமென்று விடியா
அன்னைப்பமேகொல் பிறிதேகொல்ஆரிவ் அதிரேகமாயை அறிவார்.

உருச. வானுள்அளித்தி முடியாமல்நீதி வருநாளும்கிற்றி மறையோய்
பேணைஉனக்கொர்பொருள்வேண்டுமென்று பெறுவான்அருத்திபிழையாய்
ஊனுஉயிர்க்கும் உயிராகிநிற்றி உணர்வாய பெண்ணின் உருவாய்
ஆனதி மற்றும் அலியாகி யாரிவ் அதிரேக மாயை அறிவார். 8345

உருடு. தான்அந்தம் இல்லை பலஎன்னும்ஒன்று தனியென்னும்ஒன்று தவிரா
ஞானம்தொடர்ந்த சுடர்என்னும்ஒன்று நயனம்தொடர்ந்த ஒளியால்
வானம்தொடர்ந்த பதமென்னும்உன்னை மறைநாலின்வந்த முறையால்
ஆனந்தம் என்னும் அயல்என்னும் ஆரிவ் அதிரேக மாயை அறிவார்.

உடுசு. மீளாதவேக முடிவின்கண்நின்னை மெய்யாகமெய்யின் நினையும்
கேளாதவென்று பிறனன்றுசொன்ன கெடுவார்கள் சொன்ன கடவான்
மாளாத நீதி திகழாமல் நின்கண் அபிமானம் இல்லை வறியோர்
ஆளாயும் வாழ்நி அரசாள்நி யாரிவ் அதிரேக மாயை அறிவார். 8347

சொல்லொன்று மைத்தி பொருளாதி தூய மறையும்துறந்து நிரிவாய்
வில்லொன்றெடுத்தி சரமொன்றெடுத்தி மிளிர்சங்கம் அங்கை உடையாய்
கொல்லென்றுரைத்திகொலையுண்டுகிற்றி கொடியாய்உன்மாயை அறியேன்
அல்லென்று நிற்றி பகலாதி யாரிவ் அதிரேக மாயை அறிவார். 8348

உருஅ. மறைத்தாயும்ஒத்தி மறவாயும்ஒத்தி மயலாரும்யானும் அறியேம்
துறைத்தாயும் ஒத்தி துறவாயும் ஒத்தி ஒருதன்மை சொல்ல அறியாய்
பிறைத்தாயும் ஒத்தி பிறவாயும் ஒத்தி பிறவாமல் கல்கு பெரியோய்
அறைத்தா னிறுத்தல் அரிதாகியாரிவ் அதிரேக மாயை அறிவார். 8349

வினைவர்க்கமுற்றும் உடனேபடைத்தி அவைஎய்திஎன்றும் விளையா
நினைவர்க்குநெஞ்சின் உறுகாமமுற்றி அறியாமல்நிற்றி மனமா
முனைவர்க்கும்ஒத்தி அமரர்க்கும்ஒத்தி முழுமூடர் என்றிம் முதலோர்
அனைவர்க்கும்ஒத்தி அறியாமல்ஆரிவ் அதிரேகமாயை அறியார். 8350

உசுபி. எறிந்தாரும்ஏறு படுவாரும்இன்ன பொருள்கண் டிரங்கு பவருஞ்
செறிந்தாரின்உண்மை எனலாயதன்மை தெரிகின்ற தன்ன திடையே
பிறிந்தார்பிறிந்த பொருளோடு போதி பிறியாத நிற்றி பெரியோய்
அறிந்தார் அறிந்த பொருளாதியாரிவ் அதிரேக மாயை அறிவார். 8351

உசுக. பேராயிரங்கள் உடையாய்பிறந்த பொருள்தோறும்நிற்றி பிரியாய்
தீராய்பிரிந்து நிரிவாய்நிறந்தொ றவைதேற்றும் என்று தெளியாய்
கூராழிஅங்கை உடையாய் நிரண்டொர் உருவாதி கோடல் உரிபோல்
ஆராயின்ஏதும் இலையாதியாரிவ் அதிரேகமாயை அறிவார். 8352

உசுஉ. என்றின்னபன்னி அழிவான்எறிந்த எரிசோதிகிற இருள்போய்ப்
பொன்துன்னிஅன்ன வெயில்வீசுகின்ற பொருள்கண்டுகின்ற புகழோன்
நின்றுன்னிஉன்னி இவன்யாவனென்று நினைகின்றஎல்லை நிமிரச்
சென்றுன்னிமுன்னர் உடனாயினன்இவ் உலகேழும்ஏழு சிறையான். 8353

உசுக. வாசம்கலந்த மறைநாளதூலின் வகைஎன்பதென்ன மழையென்
நேசம்கைகொண்ட கொடைமீளிஅண்ணல் சராசாமன்வெண்ண அணுகுந்
தேசம்கலந்த மறைவாணர்செஞ்சொல் அறிவாளர் என்றிம் முதலோர்
பாசம்கலந்த பசிபோல்அகன்ற பத்கன்துரந்த உரகம். 8354

உசுச. பல்லாயிரத்தின் முடியாதபக்கம் அவைவீச வந்துபடர்கால்
செல்லாகிலத்தின் இருளாதல்செல்ல உடனின்றவாளி சிதைவும்
றெல்லாவிதத்தும் உணர்வோடுண்ணி இவனேபிழைக்கும் எனவோர்
வல்லான் ஒருத்தன் இடையேபடுத்த வடுவான மேனி வடுவும். 8355

உசுடு. தருமத்தினென்றும் ஒழுகாதசெய்கை தழுவிப்புணர்ந்த தகையால்
உருமொத்த வெங்கண் வீணேதியவஞ்சர் உடலுய்த்த நில்லை உலகின்
கருமத்தின்நின்ற கவிசேணவெள்ள மலர்மேல்அவ்வள்ளல் கடைகாள்
நிருமித்ததென்ன உயிரோடெழுந்து நிலைநின்றதெய்வ நெறியான். 8356

இளையான்எழுந்து தொழுவானேஅன்போ டிணையாரமார்பின் அணையா
விளையாததுன்பம் விளைவித்ததெய்வம் வெளிவந்ததென்ன வியவாக்
கிளையாரின்இன்ன துணையோரைஆவி கெழுவாஎழுந்து தழுவா
முளையாதநிங்கள் உகிரான்முன்வந்து முறைநின்றவீரன் மொழிவான்.

*உசுஎ. ஐயா யாரே எங்கள் அருந்தவப் பயத்தி னுல்வந்
தெய்தினீ உயிரும் வாழ்வும் ஈய்ந்தனீ எம்ம னோரால்
கையுறை கோடற் கொத்த காட்சியை அல்லை மீட்சி
செய்திறம் இல்லை என்றான் தேவர்க்கும் தெரிக்கொ ணாதான்.

உசுஅ. பொருளினீஉணர வேறு புறத்திறன்உண்டோ புந்தித்
தெருளினீ உடையை ஆகிச் செயல்அருங் கருணைச் செல்வ
மருளினீ வரவில் வந்த வாழ்க்கையீ தாயின் வாயால்
அருளினீ என்னில் எய்த அரியன உளவோ ஐயா. 8359

கண்டிலை முன்பு சொல்லக் கேட்டிலை கடன்ஒன் றெம்பால்
கொண்டிலை கொடுப்ப தல்லால் குறையிலை இதுநின்கொள்கை
உண்டிலை என்ன நின்ற உயிர்தந்த உதவி யோனே
பண்டிலை நண்பு நாங்கள் செய்வதென் பகர்தி என்றான். 8360

பறவையின் குலங்கள் காக்கும் பாவகன் பழைய நின்னை
டுறவுள தன்மை எல்லாம் உணர்த்துவன் அரக்க ரோட்டை
மறவினீ முடித்த பின்னீ வருவன்என் றுணர்த்தி மாயப்
பிறவியின் பகைஞ நல்கு விடைஎனப் பெயர்ந்து போனான்.

உஎக. ஆரியன் அவனை நோக்கி ஆருயிர் உதவி யாதும்
காரியம் இல்லான் போனான் கருணையோர் கருமம் ஈதால்
பேரிய லாளர் செய்கை ஊதியம் பிடித்தும் என்றான்
மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வையம் என்றான்.

இறந்தனன் இளவல் என்றுல் இறைவியும் இடுக்கண் எய்தும்
மறந்தனர் உறங்கு கின்ற வஞ்சகர் மறுகி மீளப்
பிறந்தனர் என்று சாலப் பெரும் [1]பயம் பிடிப்பர் அன்றே
அறந்தரு சிந்தை ஐயா ஆர்த்தும்என் றனுமன் சொன்னுன்.

அழகிதென் றண்ணல் கூற ஆர்த்தனர் கடல்கள் அஞ்சிக்
குழைவுற அனந்தன் உச்சிக் குன்றின்மின் றண்ட கோளம்
எழுமிசை உலக மேன்மேல் ஏங்கிட வீரிந்து சிந்தி
மழைவிழ மலைகள்கீற மாதிரம் பிளப்ப மாதோ. 8364

உளச. பழிப்பறு மேனி யாள்பால் சிந்தனைபடரக் கண்கள்
விழிப்பவன் மேனி சால வெதும்பினன் ஈச னுலும்
குழிப்பரி தாய மார்பை மன்மதன் கொற்ற வாளி
கிழித்திட உயிர்ப்பு வீங்கிக் கிடந்தவாள் அரக்கன் கேட்டான்.

உளரு. தாதைசொல் தலைமேல்கொண்ட தாபதன் தருமமூர்த்தி
சதைகள் தீர்க்கும் நாமத் திராமனை எண்ணி எங்கும்
சீதையும் அவனை உன்னிச் சிந்தையுள் துயரம் தீராப்
பேதையும் அன்றி அவ்வூர் ஆருளர் துயில் பெறுதார். 8366

உளசு. சிங்கவே றசனி ஏறு கேட்டலும் சிற்றத் தெய்வம்
போங்கின தென்ன மன்னன் பொருக்கென எழுந்து போரின்
மங்கினர் பகைஞர் என்ற வார்த்தையே வலிய தென்னு
அங்கையோ டங்கை கொட்டி அலங்கல்தோள் குலுங்க நக்கான்.

இடிக்கின்ற அசனி என்ன இசைக்கின்ற இராமன் வல்வில்
வெடிக்கின்ற தண்டம் என்னப் படுவது தம்பி வில்நாண்
அடிக்கின்ற தென்னை வந்து செவிதொறும் அனுமன் ஆர்ப்புப்
பிடிக்கின்ற துலகம் எங்கும் பருதிசேய் ஆர்ப்பின் பெற்றி.

அங்கதன் அவனை ஆர்த்தான் அந்தரம் ஆர்க்கின் ருனும்
வெங்கத நீலன் மற்றை வீரரும் வேறு வேறு
பொங்கினர் ஆர்த்த ஓசை அண்டத்தின் புறத்தும் போன
சங்கையென் றின்றித் தீர்ந்தார் பாசத்தைத் தருமம் நல்க. 8369

என்பது சொல்லிப் பன்னி சேக்கையின் எழுந்து வேந்தன்
ஒன்பது கோடி வாட்கை அரக்கர்வந் துழையில் சுற்றப்
பொன்பொதி விளக்கங் கோடி பூங்குழை மகளிர் ஏந்தத்
தன்பெருங் கோயில் நின்றும் மகன்தனிக் கோயில் சார்ந்தான்.

---

1 [பிரதி] பயன்.

உஅம. தாங்கிய துகிலர் மெல்லச் சரிந்துவீழ் குழலைத் தாங்கி
வீங்கிய உயிர்ப்பர் விண்ணே விழுங்கிய முலையர் விம்மித்
தூங்கிய விழியர் தள்ளித் துளங்கிய நடையர் வல்லி
வாங்கிய மருங்குல் மாதர் அனந்தராய் மருங்கு வந்தார். 8371

உஅக. பானமும் துயிலும் கண்ட கனவும்பண் கனிந்த பாடல்
கானமும் தள்ளத் தள்ளிக் கனியொடுங் கழறக் கற்ற
மீனினும் பெரிய வாட்கண் விழிப்பது முகும்ப்ப தாக
வானவர் மகளிர் போனார் மழலையஞ் சதங்கை மாழ்க. 8372

உஅஉ. மழைவிழை நீலம் ஊட்டி வாசமும் புகையும் ஊட்டி
உழைஉழை சுருட்டி மென்பூக் குவித்திடைக்கிடையூறென்னப்
பிழையுடை வீதியார் செய்த பெருங்குழல்கருங்கண் செவ்வாய்
இழைஇழை மகளிர் தாழ்ந்தார் அனந்தராய் இடங்கள் தோறும்.

உஅங. தேனிடைக் கரும்பில் பாலில் அமுதினில் கிளவி தேடி
மானிடைக் கயலின் வானின் மலரிடை நயனம் வாங்கி
மேனடை அனைய மற்றும் நல்வழி நல்க வேண்டி
வானுடை அண்ணல் செய்த மங்கையர் மருங்கில் சென்றார்.

துடங்கிய ஆர்ப்பின் ஓசை செவிப்புலம் தொடர்த லோடும்
இடங்கரின் வயப்போத் தன்ன எறுழ்வலி அரக்கர் யாரும்
மடங்கலின் முழக்கம் கேட்ட வான்கரி ஒத்தார் மாதர்
அடங்கலும் அசனிகேட்ட வளைஉறை அரவம் ஒத்தார். 8375

உஅஙு. அரக்கனும் மைந்தன் வைகும் ஆடகத் தமைந்த மாடம்
பொருக்கெனச்சென்றுபுக்கான் புண்ணினீர்க்குமிழிபொங்கத்
தருக்கிலன் மடங்கல் ஏற்றல் அலைப்புண்டு சாய்ந்து போன
கருக்கிளர் மேகம் அன்ன களிறனை யானைக் கண்டான். 8376

எழுந்தடி வணங்கல் ஆற்றான் இருக்கையும் அரிதின் ஏற்றித்
தெழுந்தொழி லானைநோக்கி துயர்உற்ற மனத்தன் தோன்றல்
அழுந்தினை வந்ததென்னை அடுத்ததென்றெடுத்துச்சொன்னான்
புழுங்கிய புண்ணி னானும் இனையன புகல்வ தானான். 8377

உஅள. உருவின உரத்தை முற்றும் உலப்பில உதிரம் வற்றப்
பருகின வளப்பி லாத பகழிகள் கவசம் பற்றற்
றருகின பின்னர் சால அலசின கணைகள் ஐய
செருகின அன்றே யான்இம் மாயையில் தீர்ந்திலேனேல். 8378

உஅஅ. இளையவன் தன்மை ஈதால் இராமன தாற்றல் எண்ணில்
தளைஅவிழ் அலங்கல் மார்ப நம்வயிற் றங்கிற் றன்ருல்
விளைவுகண் டுணர்வ தல்லால் வென்றியும் விளையும் அன்ருே
உளைவுதன் றென்ன சொன்னுன் உற்றுள துணர்ந்திலாதான்.

இந்திரன் விடையின் பாகன் எறுழ்வலிக் கலுழன் ஏறும்
சுந்தரன் அருக்கன் என்றித் தொடக்கத்தார் தொடர்ந்தபோது
நொந்திலன் ஐய ஒன்றும் நுவன்றிலன் மனிதன் நோன்மை
மந்தரம் அனைய தோளாய் வரம்புடைத் தன்று மன்னுே.

உகூ. வென்றது பாசத் தாலும் மாயையின் வினையி னுலும்
கொன்றது குரக்கு வீரர் தம்மொடுங் கொற்றத் தோனை
நின்றனன் இராமன் இப்பால் நிகழ்ந்தவா நிகழ மேன்மேல்
என்றனன் என்னக் கேட்ட இராவணன் இதனைச் சொன்னுன்.

உகூக. வார்கலிக் கழல்கால் வீர இலக்குவன் வயிர வில்லில்
பேரொலி அரவம் விண்ணைப் பிளந்திடக் குரங்கு போந்து
காரொலி அடங்க வேலை கம்பிக்கக் களத்தின் ஆர்த்த
ஆர்கலி ஐய ஒன்றும் அறிந்திலை போலும் என்ருன். 8382

ஐயகேள் பாசம் தன்னுல் ஆர்ப்புண்டார் அசனி என்னப்
பெய்யும்வெஞ் சரத்தால்மேனி பிளப்புண்டார்உணர்வுபோந்தார்
உய்யும்என் றுரைத்த போத துண்மையோ ஒழிக ஒன்ருே
செய்யும்நம் எண்ணத் தெய்வம் சிறிதன்ருே தெரியின்என்ன

உகூங. ஈதுரை நிகழும் வேலை எய்திய திதிரே நின்ற
தூதுவர் விரைவின் வந்தார் புகுந்தடி தொழுத லோடும்
யாதவன் நிகழ்ந்த தென்ன இராவணன் இயம்ப வீறின்
ருேதிய கல்வி யாளர் புகுந்துள துரைக்கல் உற்ருர். 8384

பாசத்தால் பிணிம்புண் டாரைப் பகழியால்அறுப்புண்டாரைத்
தேசத்தார் ஈசன் மைந்தன் வந்திடை சினத்து நோக்கி
ஏசத்தான் இரங்கிப் பின்னை உலகெலாம் எரிப்பன் என்ருன்
வாசத்தார் மாலை மார்ப வான்உறை கலுழன் வந்தான்.

உகூடு. அன்னவன் வரவு காணு அயில்எயிற் றரவம் எல்லாம்
சின்னபின் னங்கள் ஆன புண்ணெடு மயக்கம் தீர
முன்னையின் வலியர் ஆகி மொய்கொள நெருங்கி மொய்த்தார்
இன்னது நிகழ்ந்த தென்ருர் அரக்கன்ஈ தெடுத்துச் சொன்னுன்.

உகூசு. ஏத்தருந் தடந்தோள் அண்ணல்என்மகன் எய்த பாசம்
காத்திடைக்கழித்துத்தீர்த்தான்கலுழனும்காண்மின்காண்மின்
வார்த்தையீ தாயி னன்றுல் இராவணன் வாழ்ந்த வாழ்க்கை
மூத்தது கொள்கை போலாம் என்னுடை முயற்சி எல்லாம்.

உகூஎ. உண்டுல கேழும் ஏழும் உமிழ்ந்தவன் என்னும்ஊற்றம்
கொண்டவன்என்னேடேற்றசெருவினின்மறுக்கம்கொண்டான்
மண்டலம் திரிந்த போதும் மறிகடல் மடுத்த போதும்
கண்டிலன்போலும்சொற்ற கலுழன்அன்றென்னைக்கண்ணுல்.

உகூஅ. கரங்களில் நேமி சங்கம் தாங்கிய கரியோன் காக்கும்
புரங்களும் அழியப் போன போதில்என் சிலையில் பொங்கி
உரங்களில் முதுகில் தோளில் உறைவன சிறையில் உற்ற
சரங்களும் நிற்க வேகொல் வந்தனன் அருணன் தம்பி. 8389

உகூக. ஈண்டிது கிடக்கமேன்மேல் இயைந்தவா றியைக எஞ்சி
மீண்டவர் தம்மைக் கொல்லும் வேட்கையேவேண்டும்அன்றே
ஆண்தகை நீயே இன்னும் ஆற்றுவ தருமை போர்கள்
காண்டலும்நானேஎன்றன் மைந்தனும்கருத்தைச்சொன்னன்.

இன்றெரு பொழுதும் தாழ்த்தே இகல்பெரும் சிர்மம் நீக்கிச்
சென்றெரு கணத்தில்நாளை நான்முகன் படைத்த தெய்வ
வென்றிவெம் படையி னுல்உன் மனத்துயர் மீட்பன் என்றன்
நன்றென அவனும் போய்த்தன் நளிர்மணிக் கோயில் புக்கான்.

கஅ-வது, நாகபாசப்படலம் — முற்றிற்று.
ஆகப்படலம் 110-க்கு திருவிருத்தம் 8391

ககூ-வது, படைத்தலைவர் படலம்.

க. ஆர்த்தெழும் ஓசை கேட்ட அரக்கரும் முரசம் ஆர்ப்பப்
போர்த்தொழில் வேடம்பூண்டுபொங்கினர்புகுந்துமொய்த்தார்
தார்த்தட மார்பன் தன்னைத் தாவிடை என்னச் சார்ந்தார்
பார்த்தனன் முனிந்து மன்னன் இனையன பகர்வதானுன். 8392

உ. மாபெரும் பக்க னேடும் வான்புகைக் கண்ண நீயும்
ஏகுமின் என்னப் பாரா அவர்முகம் இனிது நோக்கி
போவது புரிதிர் என்னப் புகல்தலும் பொருத தூதர்
தேவமற்றிவர்கள்செய்கை கேள்எனத்தெரியச்சொன்னர்.

ங. ஆனையும் பரியும் தேரும் அரக்கரும் அமைந்த வாழ்த்
தானையும் வீய நின்ற தலைமகன் தனிமை ஓரார்
மானவன் வாளி வாளி என்கின்ற மழலை வாயர்
போனவர் மீள வந்து புகுந்தனர் போலும் என்றூர். 8394

*ச. அற்றவர் கூறலும் ஆர்அழ லிற்றுய்
முற்றிய கோப முருங்க முனிந்தான்
இற்றவர் போல்இவர் சேவகம் என்னுப்
பற்றுமின் என்றனன் வெம்மை பயின்றான். 8395

ஞ. என்றலும் எய்தினர் கிங்கரர் என்பார்
பின்றலி லோரை உடன்று பிடித்தார்
நின்றனர் ஆயிடை நீல நிறத்தான்
கொன்றிடு வீரலிர் கொண்மினிர் என்றான். 8396

ஙு. ஏற்றம் இனிச்செயல் வேறிலை யிர்வீர்
நாற்றம் நுகர்ந்துயர் நாசியை நாமக்
கோற்றொரு திண்பணை கொட்டினர் கொண்டேர்
சாற்றுமின் அஞ்சினர் என்றுரை தந்தே. 8397

எ. அக்கண மேஅரி வாளினர் ஆனேர்
மிக்குயர் நாசியை யீர விரைந்தார்
புக்கனர் அப்பொழு தில்புகழ் தக்கோய்
தக்க தென்றனன் மாலி தடுத்தான். 8398

அ. அஞ்சமம் அஞ்சி அழிந்துளர் ஆனுல்
வெஞ்சமம் வென்றலும் வென்றியர் அன்றே
துஞ்சலும் என்றிவை தொல்லைய அன்றே
தஞ்சென ஆருளர் ஆண்மை தகைந்தோர். 8399

கூ. அந்தரம் ஒன்றும் அறிந்திலை அன்றே
வந்தனர் நம்வயின் எத்தனை மன்னு
தந்திர வானவர் தானவர் என்றும்
இந்திரன் அஞ்சினன் எண்ணுதி அன்றே. 8400

ஙி. வருணன் நடுங்கினன் வந்து வணங்கி
கருணை பெறுந்துணை யும்உயிர் கால்வான்
இருள்நிற வஞ்சகர் எங்குளர் உய்ந்தார்
பருணிதர் தண்டம்இ தன்று பகர்ந்தாய். 8401

ஙக. பத்தொரு நாலு பகுத்த பரப்பின்
அத்தனை வெள்ளம் அரக்கர் அடைந்தார்
ஒத்தொரு மூவர் பிறிந்தனர் உய்ந்தார்
வித்தக ஆருளர் வீரம் விளைப்பார். 8402

மஉ. பாசமும் இற்றது பாதியின் மேலும்
நாசமும் உற்றது நம்பி நடந்தாய்
பூசன் முகத்தொரு கான்முளை போத
நீசரை ஈருதி யோநெடு நாசி. 8403

மஊ. வாழி இலக்குவன் என்று மறுக்குற்
ருழி அரக்கர்தம் வாயில் அடைப்பார்
ஏழு கடல்துணை யோஇனி நாசி
ஊழி அறுத்திடி லும்உல வாதால். 8404

மஎ. தூது கடந்தவ ணேத்தொழு தன்னுர்
ஓதுநெ டுஞ்செரு வஞ்சி உடைந்தார்
தீதிலர் நின்றுளர் சேனையின் உள்ளார்
பாதியி னன்றுயர் நாசி படைத்தார். 8405

மஏ. விட்டிலே சிதையை யாம்எனில் வீரர்
ஓட்டிய போரினில் ஆருளர் ஓடார்
வெட்டுதி நாசியை வெந்தொழில் வல்லார்
பட்டிலர் என்னலே என்று பகர்ந்தாய். 8406

மஐ. ஆறினன் என்ன அறிந்தனர் அன்னுர்
தேறினர் அன்னது சிந்தை உணர்ந்தார்
சீறிய நெஞ்சினர் செங்கணர் ஒன்றே
கூறினர் தங்கிலே செய்கை குறித்தார் 8407

மஒ. உன்மகன் அஞ்சி ஒதுறுங்கினன் அன்றே
மின்நகு வானிடை ஏகி விரைந்தான்
அன்னது மாயை இயற்றி அகன்றுன்
இன்னகர் எய்தினன் உய்ந்தனன் எந்தாய். 8408

மஅ. இப்பகல் அன்றெனில் நாளையின் அல்லால்
முப்பகல் தீர்கிலம் ஆவி முடிப்போம்
வெப்பக லாவெரி வெந்தழல்வெந்த
செப்பகல் வெண்ணெயின் நோன்மை தெரிந்தாய். 8409

மக. விட்டினி எம்மை விடுத்தணை வெய்யோர்
பட்டனர் ஒன்று படுத்தனர் ஒன்றே
கெட்டனர் என்பது கேளினி என்றூர்
ஓட்டினர் ஆவி முடிக்க உகந்தார். 8410

உம். அன்னவர் தம்மொடும் ஐஇரு வெள்ளம்
மின்னு படைக்கை அரக்கரை விட்டான்
சொன்ன தொகைக்கமை யாஅை சுடர்த்தேர்
துன்னும் வயப்பரி யோடும் வகுத்தான். 8411

உக. நெய்எரி வேழ்வி நெடும்பகை நேர்விண்
டைவரு சூரிய சத்துரு வென்றோர்
பேய்கழல் மாலி பிசாசன் எனும்பேர்
வெய்யவன் வச்சிரம் என்ற வெயிற்றான். 8412

உஉ. என்றவ ரோடும் எழுந்துல கேழும்
வென்றவன் ஏவலின் ஏகி விரைந்தார்
சென்றனர் மால்கரி தேர்பரி செல்லக்
குன்றினும் உயரிய வீரியர் கோட்பால். 8413

உங. விண்ணை விழுங்கிய தூளியின் விண்ணோர்
கண்ணை விழுங்குத லிற்கரை காணை
எண்ணை விழுங்கி எழுந்துயர் சேணை
மண்ணை விழுங்க உணர்ந்திலர் வாளோர். 8414

உச. கால்கிளர் தேரொடு கார்வரை யோடு
மேல்கிளர் பல்கொடி வெண்திரை வீச
மால்கடல் ஆனது மாமழை வானப்
பால்கிளர் மின்னிடை ஓடிய பண்பால். 8415

உரு. பேரி கலித்தன பேருல கைச்சூழ்
ஏரி கலித்தன ஆம்என யாணைக்
காரி கலிக்கட லோடு கவிப்ப
மாரி கலித்தென வாசி கலித்த 8416

உசு. சென்றன சென்றன சுவட்டின செல்லா
நின்று பிணங்கின கல்வியின் நில்லா
தொன்றிணை ஒன்று தொடர்ந்தன ஓடைக்
குன்று நடந்த போற்கொலை யாணை. 8417

உள. மாக நெடுங்கரம் வானின் வழங்கா
மேக நெடும்புனல் வாரின மேன்மேல்
போக விலங்கினர் விண்ணவர் போதக்
காக நெடுங்களி யாணை களிப்பால். 8418

உஅ. எறிந்தெழு பல்படை இன்ஒளி யாணர்
அருங்கலம் நன்னிழல் தேர்பரி யாஅன
பொருந்திய பண்ஒளி தார்ஒளி பொங்க
இருந்தன பேர்இருள் எண்திசை எங்கும். 8419

உக. எய்திய சேனையை ஈசன் எதிர்ந்தான்
வெய்திவண் வந்தவன் மாயையின் வெற்றி
செய்தவ னேகொல் தெரித்திஇ தென்ரூன்
ஐயன்அவ் வீடணன் அன்ன துரைப்பான். 8420

*உ. முழைக்குலச் சியம் மொய்ப்போர் வேட்டது முனிந்ததென்னப்
புழைப்பிறை எயிற்றுப் பேழ்வாய் இடிக்குலம் பொடிப்ப ஆர்த்துத்
தழல்பொறி வாளிப் புட்டில் கட்டிவில் தாங்கிச் சார்வான்
மழைக்குரல் தேரின் மேலான் மாபெரும் பக்கன் மன்னோ. 8421

*உக. சிகைநிறத் தனல்பொழி தெறுகண் தீயினன்
பகைநிறத் தவர்உயிர் பருகும் பண்பினன்
நகைநிறப் பெருங்கடை வாயை நக்குவான்
புகைநிறக் கண்ணவன் பொலம்பொற் றேரினன். 8422

உஉ. பிச்சரில் திகைத்தன பெற்றிப் பேச்சினன்
முச்சிரத் தயலினன் மூரித் தேரினன்
இச்சிர மும்மதே எனவந் தெய்துவான்
வச்சிரத் தெயிற்றவன் மலையின் மேனியான். 8423

உங. சூரியன் பகைஞன் முன்றுரகத்த தேரினன்
சோரியும் கனல்களும் சொரியும் கண்ணினன்
நீரிரு முழக்கினன் நெருப்பின் வெம்மையான்
ஆரிய வேழ்வியின் பகைஞன் ஆம்அரோ. 8424

உச. காலையு மனத்தையும் பிறகு காண்பதோர்
வாலுளைப் புரவியான் மடித்த வாயினன்
வேலையின் ஆர்ப்பினன் விண்ணை மீக்கொளும்
சூலம்ஒன் றுடையவன் பிசாசன் தோன்றினன். 8425

உரு. சாலியின் கதிர்நிகர் புரவித் தானையான்
மூலிவெங் கொடுமையான் தவத்தின் முற்றினன்
சூலியும் வெருக்கொளத் தேரில் தோன்றுவான்
மாலியென் றடியிணை வணங்கிக் கூறினன். 8426

நசு. ஆர்த்தெதிர் நடந்ததவ் அரியின் ஆர்கலி
தீர்த்தணை வாழ்த்தியுற் றிரண்டு சேனையும்
போர்த்தொழில் புரிந்தன புலவர் போக்கிலார்
வேர்த்துயிர் பதைத்தனர் நடுங்கி விம்மினர். 8427

நஎ. கல்லெறிந் தனகடை உருமின் கார்என
வில்லெறிந் தனகணை விசும்பின் மேகத்துச்
செல்லெறிந் தனஎனச் சிதறி வீழ்ந்தன
பல்லெறிந் தனதலை மலையின் பண்பென. 8428

நஅ. கடம்படு களிறுபடப் புரவிக் கால்பட
இடம்படு சில்லியின் எழினித் தேர்பட
உடம்படும் அரக்கரை அனந்தன் உச்சியில்
படம்படும் எனப்படும் கவியின் கற்பல. 8429

நக. கொலையொடுங் காநெடும் புயத்தின் குன்றெடும்
நிலைநெடுங் காலொடும் நிமிர்ந்த வாலொடும்
மலையொடும் மரத்தொடும் கவியின் மன்னெடும்
தலையொடும் போம்விசைத் தெறிந்த சக்கரம். 8430

சம. சில்லியந் தேர்க்கொடி சிதையச் சாரதி
பல்லொடு நெடுந்தலை மடியப் பாதகர்
வில்லொடும் கழுத்தறப் பகட்டை வீட்டுமால்
கல்லெனக் கவிக்குலம் வீசும் கல்லரோ. 8431

சக. ஆண்டகைக் கவிக்குல வீரர் ஆக்கைகள்
கீண்டன புவியீணக் கிழித்து மாதிரம்
தாண்டுவ குலப்பரி மனத்திற் றூய்மிகத்
தூண்டுவ கைவிசைத் தெறிந்த சக்கரம். 8432

சஉ. காகமுந் தியமலை முழையில் கண்செவி
ஊகமுந் தினஎன ஒளிக்கும் ஓள்ளிலை
அரகமுந் தினநெடுங் கவிகள் ஆக்கையிற்
றூகமுந் தினர்எடுத் தெறியும் தோமரம். 8433

சந. வால்பிடித் தடிக்கும்வா னரத்தை மால்கரி
கால்பிடித் தடிக்கும்அக் காரிக ளாக்கவி
தோல்பிடித் தரக்கரை எறியும் சூர்முசு
வேல்பிடித் தெறிவர்அம் முசுவை வெங்களிர். 8434

சச. முற்படு கவிக்குலம் முடுக வீசிய
கற்படக் களம்படும் அரக்கர் கார்க்கடல்
பற்படு தலைபடப்[1] படுவ பாதகர்
விற்படு கணைபடக் குரக்கு வேலையே. 8435

சடு. இச்சுறு கிரிபடக் கிளர்பொன் தேர்நிரை
அச்சிறச் செல்கில ஆடல் மாப்பரி
எச்சுறு துயரிடை எய்த வீத்துணை
முச்சறு வாழ்க்கையின் மூண்டு ளோர்என. 8436

சசு. மீயவர் யாவரும் வீய வெங்கரீ
சேயிருங் குருதியில் திரிவ சேர்வில
ஆயத னுள்எலாம் அவிய அம்பிகள்
பாயொடும் வேலையில் திரியும் பண்பென. 8437

சஎ. படையொடு மேலவர் மடியப் பல்பரி
இடைஇடை தரளமுந் திழிந்த பண்ணன
கடல்நெடுங் குருதிய கனலி கால்வுறு
வடவையே நிகர்த்தன உதிர வாயன. 8438

சஅ. எயிற்றொடு நெடுந்தலை இட்ட காலொடும்
வயிற்றிடை புக்கபல் பகலும் வைகிய
பயிற்சியர் ஆயினும் தெரிக்கும் பண்பிலார்
அயிர்ப்பர்தங் கணவரை அணுகி அந்நலார். 8439

*சக. தூமக் கண்ணனும் அனுமனும் எதிர்எதிர் தொடர்ந்தார்
தாமத் தங்கதன் மாபெரும் பக்கணைத் தடுத்தான்
சேமத் திண்சிலை மாலியும் நீலனும் செறுத்தார்
வாமப் போர்வயப் பிசாசனும் பனசனும் மலைந்தார்.

சுஎ. சூரியன் பெரும் பகைஞனும் சூரியன் மகனும்
நேர் எதிர்ந்தனர் நெருப்புடை வேழ்வியின் பகையும்
ஆரி யன்தனித் தம்பியும் எதிர்அடர்த் தனரால்
வீர வச்சிரத் தெயிற்றனும் இடபனு மிடைந்தார்.

சுக. வெங்கண் வெள்ளயிற் றரக்கரில் கவிக்குல வீரர்
சிங்கம் அன்னபோர்த் தலைவரில் தலைவராய்ச் செறிந்தார்
அங்க மர்க்களத் தொருவரோ டொருவர் சென்றடர்த்தார்
பொங்கு வெஞ்செருத் தேவரும் நடுக்குறப் பொருதார்.

---

1 [பிரதி] படுவர்.

(உ). இன்ன காலையின் ஈரைந்து வெள்ளம்வந் தேற்ற
பின்னும் வெள்ளையிற் றரக்கர்தம் சேனையில் வீரன்
அன்ன வெஞ்சமத் தாறுவெள் ளத்தையும் அறுத்தான்.
சொன்ன நாலையும் இலக்குவன் பகழியால் தொலைத்தான்.

(ங). உப்பு டைக்கடல் மடுத்தது குருதியின் ஓதம்
அப்பொ டொத்தன தடித்தில ஆர்கலி முழுதும்
செப்பு ருக்கெனத் திரிந்தது மீன்குலம் செருக்கித்
துப்பொ டொத்தன முத்தினங் குன்றியில் துவன்றி.

(ச). தத்து நீர்க்கடல் முழுவதுங் குருதியில் தழங்கிச்
சித்தி ரக்குலப் பன்னெடு மணிகளும் சேந்த
ஒத்து வேற்றுருத் தெரிக்கில உயர்மதத் தோங்கல்
மத்த கத்துறு தரளமும் அத்தகை மானும். 8445

(ஞ). அதிரும் வெஞ்செரு வன்னதொன் றமைக்கின்ற அளவில்
கதிர வன்செழுங் சேய்ஒளிக் கற்றையங் கரத்தால்
எதிரும் வல்இருள் கரிஅறுத் தெழுமுறை முழுகி
உதிர வெள்ளத்தின் எழுந்தனன் ஆம்என உதித்தான்.

(ட). அரக்கர் என்றபேர் இருளினை இராமனும் அருக்கன்
துரக்க வெஞ்சுடர்க் கதிரவன் புறத்திருள் தொலைக்கப்
புரக்கும் வெய்யவர் இருவரும் ஒருவரே போல
நிரக்கும் நல்ஒளி பரத்தலின் உலகெலாம் நிமிர. 8447

(ண). நிலைகொள் பேரிருள் நீங்கலும் நிலத்திடை நின்ற
மலையும் வேலையும் வரம்பில வயின்தொறும் பரந்த
தொலையும் தன்மைய தோன்றுவ போன்றன சோரி
அலைகொள் வேலையும் அரும்பிணக் குன்றமும் அனைவி.

(அ). நிலந் தவாதசெந் நீரிடை நிணக்கொழுஞ் சேற்றில்
புலர்ந்த காலையில் பொறிவரி அம்பெனும் தும்பி
கலந்த தாமரைப் பெருவனம் கதிரவன் கரத்தால்
மலர்ந்த தாம்எனப் பொலிந்தன உலந்தவர்வதனம். 8449

(கூ). தேரும் யானையும் புரவியும் விரவின தேவர்
ஊரு மானமும் மேகமும் உடுக்களும் உலகும்
பேரும் மானவெங் காலத்துக் கால்பொரப் பிணங்கிப்
பாரின் வீழ்ந்தன போன்றன பரந்தன கிடந்த. 8450

சுமை. எல்லி சுற்றிய மதிநிகர் முகத்தியர் எரிவீழ்
அல்லி சுற்றிய கோதையில் களம்புகுந் தடைந்தார்
புல்லி முற்றிய உயிரினர் பொருந்திடக் கிடந்தார்
வல்லி சுற்றிய மராமரம் நிகர்த்தனர் வயவர். 8451

சுக. வணங்கு நுண்ணிடை வனமுலைச் செக்கர்வான் கூந்தல்
அணங்கு வெள்ளயிற் றரக்கியர்அமர்க்களம் அடைந்தார்
குணங்க டந்ததம் கணவர்தம் பசுந்தலை கொடாது
பிணங்கு பேய்களின் வாய்களைப் பிளந்தனர் பிடித்தே.

சுஉ. சுடரும் வெள்வளைத் தோளிதன் கணவனைத்தொடர்வாள்
உடலும் அங்கமும் கண்டுகொண் டொருவழி உய்ப்பாள்
குடரும் ஈருளும் கண்ணும்ஓர் குறுநரி கொள்ளத்
தொடர ஆற்றலள் நெடிதுயிர்த் தாருயிர் துறந்தாள்.

சுங. பெரியவாள்தடங் கண்ணியர் கணவர்தம் பெருந்தோள்
நரிகள் ஈர்த்தன வணங்கிட வணங்கிட நல்கா
இரியல் போவன தொடர்ந்தயல் இனப்படை கிடந்த
அரிய நொந்திலர் அலத்தகச் சிறடி அயர்ந்தார். 8454

சுச. நலங்கொள் நெஞ்சினர் தந்துணைக் கணவரை நாடி
விலங்கல் அன்னவான் பெரும்பிணக் குப்பையின் மேலார்
அலங்கல் ஓதியர் அருந்துணை பிரிந்துயின் றயர்வின்
பொலங்கொள்மாமயில் வரையின்மேல் திரிவனபோன்றார்.

சுரு. சிலவர் தம்பெரும் கணவர்தம் செருத்தொழில் சினத்தால்
பலரும் வாய்மடித் துயிர்துறந் தார்களைப் பார்த்தார்
அலைவில் வெள்ளயிற் றுல்இதழ் மறைத்துள தயலாள்
கலவி யின்குறி காண்குதும் யாம்எனக் கனன்றார்.

சுசு. நவசெய் வன்தலை இழந்தனர் நண்பரை நணுகி
அவசம் எய்திய மங்கையர் உருத்தெரிந் தறியாள்
துவசம் அன்னதங் கூர்உகிர்ப் பெருங்குறி தோள்மேல்
கவசம் நீக்கினர்க் கண்டுகொண் டாருயிர் கழிந்தார்.

சுஎ. மாரி யாக்கிய கண்ணியர் கணவர்தம் வயிரப்
போரி யாக்கைகள் நாடினர் பொருகளம் புக்கார்
பேரி யாக்கையைப் பெரும்பிணக் குன்றிடைப் பிறந்த
சோரி யாற்றிடை ஒழுக்கினர் இன்னுயிர் துறந்தார்.

*சுஅ. வகையின் உயர்தோள் நெடுமா ருதியும்
புகைவெங் கணனும் பொருவார் பொரவே
மிகைசென் றிலர்பின் றிலர்வென் றிலராள்
சிகைசென் றுதிரம் பியதீ உமிழ்வார். 8459

சுஆ. ஐயஞ்சயில் வாளி அழல் கொடியோன்
மெய்அஞ்சனை கான்முளை மேனியின் மேல்
வையஞ்சலி பாய வழங்கின னுல்
மெய்அஞ்சன மேகம் முனிந்தனை யோன். 8460

எஇ. பாழிப் புயம்அம் புபுகப் படலும்
வீழிக் கனிபோல் புனல்வீச வெகுண்
டாழிப் பொருதே ரைஅழித் தனனுல்
ஊழிப் பொருகால் நிகர்ஒண் திறலான். 8461

எக. சில்லிப் பொருதேர் சிதையச் சிலையோ
டெல்லில் பொருவின் ணின்விரைந் தெழுவான்
வில்லிற் றதிலக் குவன்வெங் கணையால்
புல்லித் தரையிட் டனன்நேர் பொருவான். 8462

எஉ. மலையில் பெரியா னுடன்மண் ணிடையிட்
டுலையக் கடல்தா வியகால் கொடுதைத்
தலையத் திருகிப் பகுவாய் அனல்கால்
தலைகைக் கொடெறிந் துதணிந் தனனுல். 8463

எங. மாபக் கனும்அங் கதனும் மலைவார்
தீபத் தின்எரிந் தெழுசெங் கணினுர்
கோபத் தினர்கொல் லநினைந் தடர்வார்
தூபத் தின்உயிர்ப் பர்தெடர்ந் தனரால். 8464

எச. ஐம்பத் தொருவெங் கணைஅங் கதன்மா
மொய்ம்பில் புகஉய்த் தனன்மொய் தொழிலோன்
வெம்பிக் களியோ டுவிளித் தெழுதிண்
கம்பக் கரிஉண் டைகடா யெனவே. 8465

எரு. ஊரோ டும்எடுத் தொளியோனை உறுங்
காரோடு நிறக் கதநா கம்அனுன்
தேரோடு எடுத் துயர்திண் கையினுல்
பாரோடும் எடுத் தெறிபண் பிடையே. 8466

எசு. வில்லேச் செலவீ சிவீழுந் தழியும்
எல்லில் பொலிதே ரிடைநின் றிழியாச்
சொல்லில் பிழையாத தோர்சூ லம்அவன்
மல்லில் பொலிமார் பில்வழங் கினனுல். 8467

எஎ. சூலம் எனில்நின் றதுதொல் லிவரும்
காலம் எனஉன் னுகருத் தினனுல்
ஞாலம் உடையான் அதுநா மறவோர்
ஆலம் முகஅம் பின்அறுத் தனனுல். 8468

எஅ. உளந்தான் நினையா தமுன்உற் றுதவாக்
கிளந்தா னேஇரண் டுகிழித் துணையாய்ப்
பிளந்தான் உலகே ழினுேடே ழுபெயர்ந்
தளந்தான் வலிநன் றெனஅங் கதனே. 8469

எசு, மாமா லியும்நீ லனும்வா னவர்தம்
கோமா னுேடுதா னவர்கோன் இகலே
ஆமா றுமலேந் தனர்என் றிமையோர்
பூமா ரிபொழிந் துபுகழ்ந் தனரால். 8470

அம. கல்ஒன்று கடாவிய காலே அவன்
வில்ஒன்று இரு கூறின் விழுந்திட லும்
மல்ஒன்றிய தோளினன் வாளி னுேடு
நில்என்றிடை சென்று நெருக் கினனுல். 8471

அக. அற்றத் தொழில்எய் தலும்அக் கணனே
மற்றப் புறநின் றவன்வந் தணுகாக்
கொற்றக் குழுதன் ஒருகுன் றுகொளா
எற்றப் பொருதேர் பொடி எய்தியதால். 8472

அஉ. தாளார் மரநீ லன்எறிந் ததனே
வாளான் மடிவித் துவலித் தடர்வான்
தோளா சறவா ளிதுரந் தனனுல்
மீளா வினைநூ றும்விடைக் கினையான். 8473

அங. மின்போல் மிளிர்வா ளொடுதோள் விழவும்
தன்போர் தவிரா தவனைச் சலியா
என்போ லியர்போ ரெனில்அன் றிதுஓர்
புன்போர் எனநின் றயல்போ யினனுல். 8474

அச. நீர்வீ ரையனுன் எதிர்நேர் வரவும்
பேர்வீ ரணிவா சிபிடித் தவனே
யார்வீ ரதையின் னசெய்தார் கள்ளனப்
போர்வீ ரர்உவந் துபுகழ்ந் தனரால். 8475

அடு. வேள்விப் பகையோ டும்வெகுண் டடரும்
காழ்வித் தகமுற் றகடுங் கணையால்
வாழ்வித் தணைன்றவன்மார் பகலம்
போழ்வித் தனன்ஆ ருயிர்போ யினனுல். 9476

அசு. மல்லில் தடமார் பன்வயக் கணையால்
எல்லிற் றுயர்வேள் வியிரும் பகைஞன்
வில்லிற் றதுதோ ளெனமே னியிருங்
கல்லிற் றகழுத் தொடுகால் களொடும். 8477

அள. தன்தா தையைமுன் புதடுத் தொருநாள்
வென்று னைவிலங் கலின்மே னியணைப்
பின்று தவலத் துயர்பெற் றியணைக்
கொன்றுன் கவியின் குலம்ஆ ளுடையான். 8478

அஅ. இடவன் தனிவெஞ் சமமுற் றெதிரும்
விடவெங் கணையிற் றவன்விண் அதிரக்
கடவுங் கதழ்தேர் கெடவா ளிணைடும்
படஅங் கொருகுன் றுபடர்த் தினனுல். 8479

அக. திண்தேர் ஓறியச் சிலைவிட் டொருதன்
தண்டே கொடிமுந் துதலத் தினனுய்
உண்டோ உயிர்என் னஉருத் திரனும்
எண்தோ ளனும்உட் கிடஎற் றினனுல். 8480

கம. அடியுண்ட வன்ஆவி உலைந் தபரா
இடியுண்ட மலைக்குவ டிற்றது போல்
முடியும்எனும் எல்லையின் முற்றின னுல்
நெடியன் குறியன் எனும்நீர் மையினுல். 8481

கக. கிடைத்தான் இகன்மா ருதியைக் கிளர்வான்
மிடைத்தான் எனமீ துயர்ஆக் கையிணைப்
படைத்தா னைநெடும் புகழ்ப்பைங் கழலான்
புடைத்தான் அகல்மார்பு பொடிச் சிதற. 8482

கூஉ. எற்றிப் பெயர்வாணை இடக்கையி னுல்
பற்றிக் கிளர்தண்டு பறித் தெறியா
மற்றைக் கிளர்கைக் கொடுமை வலிமொய்
மூற்றத் தனிகுத்த முடிந்தன னுல். 8483

கூஙு. காத்தோர் மரம்வீ சுறுகைக் கழுதன்
போத்தோர் புலிபோல் பனசன் புரளத்
தேத்தோ டநெடுங் குருதிப் புனல்திண்
மாத்தோ மரம்மார் பின்வழங் கினனுல் 8484

கூச. கார்மே வினனே கடல்மே வினனே
பார்மே வினனே பகல்மே வினனே
ஆர்மே வினனே எனவென் றறியாப்
போர்மே வினன்வா சிளனும் பொறியான். 8485

கூஞ. நூரு யிரகோ டிகொலென் றுகொலென்
ரூரு யிரம்வா னவரும் அறிவில்
தேரு வகைகின் றுதிரிந் துளதால்
பாரு டுகளத் தொருபாய் பரியே. 8486

கூசு. விசைகண் டுயர்வா னவர்விண் இரியக்
குசைதங் கியகோன் எனவா சியுடன்
திசைளங் கணும்மின் றுதிரிந் துளதால்
பசைதங் குகளத் தொருபாய் பரியே. 8487

கூள. கண்ணில் கடுகும் மனனில் கடுகும்
விண்ணில் படுகா லின்மிகக் கடுகும்
உள்ளிற் கும்எனில் புறனிற் கும்உலாய்
மண்ணில் திரியாத வயப் பரியே. 8488

கூஅ. மாப்புண் டரவா சியின்வட் டணையால்
ஆப்புண் டனர்ஒத் தனர்ஆ விஅலால்
பூப்புண் டரஆ விபுரத் தகலக்
கோப்புண் டனவா னரவெங் குழுவே. 8489

கூகூ. நூறும் இருநூ றும்நொடிப் பளவில்
ஏறுந் திறல்வே லின்இறைப் பொழுதில்
சீறுங் கவிசே னைசிதைக் கும்எனு
ஆறுந் திறல்உம் பரும்அஞ் சினரால். 8490

ஈ. தோற்றும் உருஞன் றெனவே துணியா
கூற்றின் கொலையால் உழல்கொள் கையனை
ஏற்றும் சிலையா னேஇலக் குவன்வெங்
காற்றின் படைகொண் டுகடந் தனனுல். 8491

ஈக. குலையப் பொருகூ லநெடுங் கொலையும்
உலைவுற் றிலஉய்த் தலும்ஓய் விலதோள்
தலைஅற் றுகவும் தரைஉற் றிலனுல்
இலையப் பரிமேல் கொள்இருக் கையினுன். 8492

ஈஉ. இன்றூ தியம்உண் டெனஇன் னசையால்
சென்றூ தினகூ ளிகள்தென் திசையான்
வன்தூ தரும்வ கினர்வஞ் சனையான்
தன்தூ தரும்வ கினர்தன் னகர்வாய். 8493

ஈகூ–வது, படைத்தலைவர் படலம் – முற்றிற்று.

ஆகப்படலம் 111-க்கு திருவிருத்தம் 8493

உ0-வது, மகரக்கண்ணன்வதைப் படலம்

க. ஏகித் தனிமன் னன்இருந் தழிபுக்
கோதைப் பொருள்கேள் எனஉற் றுழிவாய்
வேகத் தடல்வீ ரர்விளிந் ததெலாம்
சோகத் தொடிறைஞ் சினர்சொல் லினரால். 8494

உ. சொன்னுர் அவர்சொல் செவியில் தொடர்கொண்
டின்னுத மனத்தன் இலங்கையர் கோன்
வெங்நாகம் உயிர்த்தென விம்மின னுல்
அன்னுன்நிலை கண்டயல் நின்றறை வான். 8495

ஊ. முந்தேஎன தந்தையை மொய் அமர்வாய்
அந்தோஉயிர் உண்டவன் ஆருயிர் மேல்
உந்தாய்எனை யாதும் உணர்ந் திலையோ
எந்தாய் ஒருநீ இடர்கூ ருதியோ. 8496

ச. யானேசெல எண்ணுவன் ஏவுதி யேல்
தானே அதுநின்று தடுப்பரி தாம்
வானே நிலனே முதல்மற் றும்எலாம்
கோனே எனைவெல் வதொர்கொள் கையதோ. 8497

நு. அருந்துயர்க் கடலு ளான்என் னம்மனை அழுத கண்ணுள்
பெருந்திருக் கழித்தி லாதாள் கணவனைக் கொன்றுபேர்ந்தோன்
கருந்தலை தரைவீழ்ந்தல்லால் கடன்கழி யேன்நான் என்றுள்
பருந்தினுக் கிளிய வேலாய் இன்னருள் பணித்தி என்றுன்.

கூ. அவ்வுரை மகரக் கண்ணன் உரைத்தலும் அரக்கன் ஐயா
செவ்வழி சேறி சென்றுன் பறம்பகை தீர்த்தி என்ருன்
வெவ்வழி அவனும்பெற்ற விடையினன்தேர்மேல்கொண்டான்
வவ்விய வில்லான் போனுன் அமர்பெற்று வளர்ந்ததோளான்

எ. தன்னுடைச் சேனை கோடி ஐந்துடன் தழுவத் தானை
மன்னுடைச் சேனைவெள்ளம் நாலிலந்தும் மழையில் பொங்கிப்
பின்னுடைத் தாகப் பேரிக் கடல்படப் பெயர்ந்த தூளி
பொன்னுடை சிமையத் துச்சிக் குச்சியும் பொதியப்போனுன்.

அ. சோணிதக் கண்ணை ஞெடு சிங்கனும் துருதத் திண்தேர்த்
தாண்முதல் காவல் பூண்டு செல்கெனத் தக்க தென்ஞ
வாண்முதல் தானை யோடும் அனைவரும் தொடர வந்தான்
நாண்முதல் திங்கள் தன்னைத் தழுவிய அனைய நண்பர். 8501

கூ. பல்பெரும் பதாகைப் பத்தி மீமிசைத் தொடுத்த பந்தர்
ஒல்வன சுடரோன் கற்றை முற்றவும் தோன்ரு வண்ணம்
தொல்வன யானை அங்கை விலாளிநீர்த் துவலை தூற்றிச்
செல்வன கவியின் சேனை அமர்த்தொழில் சிரமந் தீர்ந்த. 8502

எ. முழங்கின வானை வாசி மொய்த்தன முரசின் பண்ணை
தழங்கின வ்யவர் ஆர்த்தர் என்பதோர் முறைமை தள்ளி
வழங்கின பதலை ஓதை அண்டத்தின் வரம்பின் ருனும்
புழுங்கின உயிர்கள் யாண்டுங் கால்புகப் புரையின் ருகி. 8503

அ. வெய்தினின் உற்ற தானை முறைவிட நூழில் வெம்போர்
செய்தனர் செருக்கில் சென்று நெருக்கினர் தலைவர் செற்றிக்
கையொடு ங்கைகள் உற்றுக் கலந்தன கல்லும் வில்லும்
எய்தன எறிந்த வானை ஈர்த்தன சோரி வெள்ளம். 8504

கூ. வானர வீரர் விட்ட மலைகளை அரக்கர் வவ்வி
மீனெடு மேகம் சிந்த விசைத்தனர் விட்டு வீசக்
கானகம் இடியுண் டென்னக் கவிக்குலம் மடியும் கவ்விப்
போனகம் நுகரும் பேய்கள் வாய்ப்புறம் புடைப்போ டார்ப்ப.

எ. மைநிறத் தரக்கர் வண்மை வயிரவாள் வலியின் வாங்கி
மெய்நிறத் தெறிந்து கொல்வார் வானர வீரர் வீரர்க்
கைநிறத் தெடுத்த கல்லும் மரமும்தம் கரத்தின் வாங்கி
மொய்நிறத் தெறிந்து பற்றி முருக்குவார் அரக்கர் மொய்ம்பர்.

மி ஈ. வண்டுலாம் அலங்கல்மார்பமகரக்கன் மலைவ தென்னும்
திண்திறல் அரக்கன் கொற்றப் பொற்றடம் சில்லித் தேரைத்
தண்டலை மருத வைப்பில் கங்கைநீர் தழுவும் நாட்டார்
கொண்டல்மேல் ஓட்டிச் சென்றான் குரக்கினப் பரப்பைக் கொன்றான்.

மரு. இந்திரன் பகைஞன்கொல்லாம்என்பதோர்அச்சம்எய்தித்
தந்திரம் இரிந்து சிந்தப் படைட்பெருந் தலைவர் தாக்கி
எந்திரம் எறிந்த தென்ன ஏவுண்டு புரண்டார் எய்தச்
சுந்தரத் தோளி னீன நோக்கினின் றினைய சொன்னான். 8508

மசு. என்னுடைத்தாதை தன்னை இன்உயிர் உண்டாய் என்னும்
உன்னுடைத் தாய தீய முழைப்பகை மூவர்க் கன்றி
நின்னுடைத் தாய தாமே இன்றிது நேர்வர் என்றான்
பொன்னுடைத் தாதை வண்டு குடைந்துண்ணும் பொலம்பொற்சரன்.

மஎ. தீயவன் பகர்ந்த மாற்றம் சேவகன் தெரியக் கேட்டான்
நீகரன் புதல்வன் கொல்லாம் நெடும்பகை நிமிர வந்தாய்
ஆயது கடனே யான தாண்பிறந் தமைந்தார்க் கையம்
ஏயது சொன்னாய் என்றான் இசையினுக் கிசைந்ததோளான்.

உரும்இடித் தென்ன வில்நாண் ஒலிபடுத் துன்னெடுந்தை
செருமுடித் தென்கண் நின்ற சினமுடித் தமைவன் என்னுக்
கருமுடித் தெழுந்த மேகங் கால்பிடித் தெழுந்த காலம்
பெருமுடிக் கிரியில் பெய்யும் தாரைபோல் பகழி பெய்தான்.

சொரிந்தன பகழி எல்லாம் சுடர்க்கடுங் கணைகள் தூவி
அரிந்தனன் அகற்றி மாற்றி ஆண்தகை அலங்கல் ஆகத்
தெரிந்ததார் பகழி பாய ஏவினன் இராமன் ஏவ
நெரிந்தெழு புருவத் தோன்தன் நிறத்துற நின்ற தன்றே.

உம. ஏவுண்டு துளக்கம் எய்தா விலைத்தகப் பருதி ஈன்ற
பூவுண்ட கண்ணன் வாயில் புகைஉண்ட துமிழ்வ போல்வான்
தேவுண்ட கீர்த்தி அண்ணல் திருவுண்ட கவசம் சேரத்
தூவுண்ட வயிர வாளி ஆயிரம் தூவி ஆர்த்தான். 8513

உக. அன்னது கண்டு வானோர் அதிசயம் உற்றார் ஆழி
மன்னனும் முறுவல் எய்தி வாய்அம்போர் ஆறு வாங்கிப்
பொன்னெடுந் தடந்தேர் பூண்ட துரகதக் குரங்கள் போக்கி
வின்னடு வறுத்துப் பாகன் தலையையும் நிலத்தில் வீழ்த்தான்.

உஉ. மார்பிடை நின்ற வாளி வாயிடை வெரினின் வாரும்
சோரியன் விசும்பின் ஊடோர் இமைப்பிடை மறைந்த தோன்றல்
கார்உரும் ஏறுங் காற்றும் கனலியும் கடைநாள் வையம்
பேர்வுறும் காலம் என்னப் பெருக்கினன் தவத்துப் பெற்றான்.

உந. உருமுறை அனந்த கோடி உதிர்ந்தன ஊழி நாளின்
இருமுறை காற்றுச் சீறி எழுந்தது எழுந்த எங்கும்
கருமுறை மேகம் எங்கும் கலந்தன கவித்த மாரி
பொருமுறை மயங்கிச் சுற்றி இரியலில் கவிகள் போன. 8516

போயின திசைகள் எங்கும் புகையொடு நெருப்புப் போர்ப்பத்
தீயின மழையைச் செல்லும் மாயமா மாரி சிந்த
ஆயிர கோடி மேலும் அவிந்தன கவிகள் ஐயன்
மாயமோ வரமோ என்றான் வீடணன் வணங்கிச் சொன்னான்.

நோற்றுடைத் தவத்தின் நோன்மை நோக்கினர் கருணை நோக்கக்
காற்றுடைச் செல்வன் தானும் மழையுடைக் கடவுள் தானும்
மாற்றலர் ஈய்ந்த தெய்வ வரத்தினால் வந்த தென்றான்
நூற்றிதழ்க் கமலக் கண்ணன் அகற்றுவன் நொடியின் என்றான்.

உசு. காலவன் படையும் தெய்வக் கடலவன் படையும் காலக்
கோலவன் சிலையில் கோத்து கொடுங்கணை யோடும் கூட்டி
மேலவன் துரத்த லோடும் விசும்பினில் தெளிந்து வெய்தின்
மாவிருங் கடலின் வீழ்ந்து மறைந்தன மழையும் காற்றும். 8519

உஎ. அத்துணை அரக்கன் நோக்கி அந்தரம் வானம் எல்லாம்
ஒத்ததன் உருவே ஆக்கித் தான்மறைந் தொளித்துச் சூலப்
பத்திகள் கோடி கோடி பரப்பினன் அதனைப் பார்த்து
வித்தகன் ஒருவன் செய்யும் வினையம்என் றினைய சொன்னான்.

மாயத்தால் வகுத்தான் யாண்டும் வரம்பிலா உருவத் தான்எத்
தேயத்தான் என்னு வண்ணம் கரந்தனன் தெரிந்தி லாத
காயத்தால் இனைய தென்று கீக்கலாம் கருத்தன் அல்லன்
தீயத்தான் திறத்தில் என்னே செயல்எனச் சிந்தைசெய்தான்.

உக. அம்பின்வாய் ஆறு சோரும் அரக்கன தருளில் யாக்கை
உம்பரில் பரப்பித் தான்வே ருளித்தனன் என்ன ஓர்வான்
செம்புனல் சுவடு நோக்கி இதுநெறி என்று தேவர்
தம்பிரான் பகழி தூண்டத் தலைஅற்றுத் தரையின் வீழ்ந்தான்.

அயில்படைத் துருமில் செல்லும் அம்பொடும்அரக்கன்ஆக்கை
புயல்படக் குருதி வீசப் படியிடைப் புரள லோடும்
வெயில்படைத் திருளை ஓட்டும் காலத்தின் வீளை ஒத்த
துயில்படக் கனவு மாய்ந்தால் ஒத்ததச் சூழ்ந்த மாயை. 8523

குருதியின் கண்ணன் வண்ணக் கொடிநெடுந்தேரன் கோடைப்
பருதியின் நடுவண் தோன்றும் பரம்சுடர் நயனப் பண்பன்
எரிகணை சிந்திக் கால்போல் எதிர்ந்தவன் தன்னை டேற்றன்
விரிகடல் தட்டான்கொல்லன்வெஞ் சினத்தச்சன்வெய்யோன்.

அன்றவ ணலும் வில்நாண் அலங்கல்தோள் குலுங்க வாங்கி
ஒன்றல பகழி மாரி ஊழித்தீ என்ன உய்த்தான்
நின்றவன் நெடிய தாங்கோர் தருவினுல் அடித்து நீக்கிச்
சென்றனன் கரியின்வாரிக் கெதிர்படா சீயம்அன்னன். 8525

நஙு. கரத்தினில் திரியா நின்ற மரத்தினைக் கண்டம் ஆகச்
சரத்தினில் துணித்து வீழ்த்த தறுகணன் தன்னை நோக்கி
உரத்தினைச் சுருக்கிப் பாரில் ஒடுங்கினன் தன்னைத் தேரோன்
சிரத்தினில் குதித்தான் தேவர் திசைமுகம் கிழிய ஆர்த்தார்.

நஎ. எரியவன் குன்றி னும்பர்இந்திர வில்லிட் டென்னப்
பெரியவன் தலைமேல் நின்ற பேரெழி லாளன்சோரி
சொரியவெங் கண்ணின் மூக்கில் செவிகளில் மூளை தூங்க
நெரியவன் தலையைக் காலால் உதைத்துமா நிலத்தில் இட்டான்.

அங்கவன் உலத்த லோடும் அழல்கொழுந் தொழுகுங் கண்ணன்
சிங்கன்வெங் கணையன் வில்லன் தாரணி தேரின் மேலான்
எங்கடா போதி என்னு எய்தினன் தன்னை டெய்திப்
பங்கமில் மேரு ஆற்றல் பனசன்வந் திடையில் பாய்ந்தான்.

நகூ. பாய்ந்தவன் தோளில் மார்பில் பல்லங்கணல்ல பார்ப்போ
டாய்ந்தன அசனி என்ன ஐயிரண் டழுந்த எய்யக்
காய்ந்தெழு கனலி நெய்யில் கனன்றது போலக் காந்தி
ஏய்ந்தெழு தேரி னுேடும் இமைப்பிடை எடுத்துக் கொண்டான்

நஏ. தேரொடும் எடுத்தலோடும் நிலத்திடைக்குதித்தசெங்கண்
மேருவில் தோன்றத் தான்தன் உச்சிமேல் அதனை வீசிப்
பாரிடை வீழ்த்த லோடும் மானவன் அம்பில் பரய்ந்து
சோரியும் உயிரும்சோரத் துகைத்தனன் வயிரத்தோளான்.

நஅ: தராதல வேந்தன் மைந்தர் சரத்தினுங் கவியின் தானை
மராமரம் மலைஎன் றின்ன வழங்கவும் வலைந்த தானை
பராவரும் கோடி ஐந்தும் வெள்ளநா லைந்தும் பட்ட
திராவணன் தூதர் போனூர் படைக்கலம் எடுத்தி லாதார்.

உலி-வது மகரக்கண்ணன் வதைப்படம் முற்றிற்று.

ஆகப்படலம் 112-க்கு திருவிருத்தம் 8531

உகூ-வது, பிரமாத்திரப் படலம்

க. கரன்மகன் பட்ட வாறும் குருதியின் கண்ணன் காலில்
சிரம்நெரிந் திற்ற வாறும் சிங்கனும் செறிந்த சேனைப்
பரம்இனி உலகுக் காகா என்பதும் பகரக் கேட்டான்
வரன்முறை துறந்தான் வல்லை தருதிர்என் மகனை என்றான்.

உ. கூயினன் உந்தை என்றூர் குன்றெனக் குவிந்த தோளான்
போயின நிருதர் யாரும் பொன்றினர் போலும் என்றான்
ஏயின பின்னர் மீள்வார் நீஅலது இயாவர் என்ன
மேயது சொன்னூர் தூதர் தாதைபால் வீரைவின் வந்தான்.

ங. வணங்கினன் ஐய நொய்தின் மாண்டனர் அரக்கர் என்ன
உணங்கலை இன்று காண்டி உலப்புறு குரங்கின் ஓங்கல்
பிணங்களின் குப்பை மற்றை நரர்உயிர் பிரிந்த யாக்கை
கணங்குழை சீதை தானும் அமரரும் காண்பர் அன்றே. 8534

ச. வலங்கொடு வணங்கி வான்செல் ஆயிரம் மடங்கல் பூண்ட
பொலங்கொடி ஆடு தேர்மேல் போர்ப்பணைபொலியப்போனான்
அலங்கல்வாள் அரக்கர் தானை அறுபது வெள்ளம் யானைக்
குலங்களும் தேரும் மாவும் குழாங்கொளக் குழீஇய தன்றே.

ரு. கும்பிகை திமிலை செண்டை குறடுமாப் பேரி கொட்டி
பம்பைமா முரசம் சங்கம் பாண்டில்போர்ப் பணவந் தூரி
கம்பிலி உறுமை தக்கை கரடிகை துடிகை கண்டை
அம்பிலி தடுமை ஊமை சகடையோ டார்த்த அன்றே. 8536

கூ. யானைமேல் பறைகீழ்ப் பட்ட தெறிமணி அயிர்த்த காழி
மானமாப் புரவிப் பொற்றூர் மாக்கொடி கொண்ட பண்ணை
சேனையோர் கவிப்பத் தாவிச் சென்றதேர் உருமின் கில்லி
வானகத் தோடும் ஆழி மலைஎன வளர்ந்த தன்றே. 8537

எ. வில்லொலி வயவர் ஆர்க்கும் விளிஒலி தெறிப்பின் ஓசை
ஒல்லொலி வீரர் பேசும் உரைஒலி உரப்பிச் சொல்லும்
சொல்லொலி நிரன்தோள் கொட்டும் தோளொலி நிலத்தில் செல்லும்
கல்லொலி யோடும் கூடக் கடல்ஒலி கடந்த தன்றே. 8538

அ. சங்கொலி வயிரின் ஓதை யாகுளி தழங்கு காளம்
பொங்கொலி வரிதாட் பீலிப் பேரொலி வேயின் பொம்மல்
சிங்கத்தின் முழக்கம் வாசிச் சிரீப்புத்தேர் இடிப்புத் திண்கை
மங்குலின் அதிர்ப்பும்வான மழையொடு மலிந்த அன்றே. 8539

க. நாற்கடல் அனைய தானை நடந்திடக் கிடந்த பாரின்
மேற்கெடுத் தெழுந்த தூளி விசும்பின்மேல் தொடர்ந்து வீச
மாற்கடல் சேனை காணும் வானவர் மகளிர் மானப்
பாற்கடல் அனைய வாட்கண் பனிக்கடல் படைத்த தன்றே.

ம. ஆயிர கோடித் திண்தேர் அமரர்கோன் நகரம் என்ன
மேயின சுற்றத் தானோர் கொற்றப்பொற் றேரின் மேலான்
தூயபொற் சுடர்கள் எல்லாம் சுற்றிட நடுவட் டோன்றும்
நாயகப் பருதி போன்றான் எவரையும் நடுக்கங் கொண்டான்.

சென்றுவெங்களத்தைஎய்திச் சிறையொடு துண்டம்செங்கண்
ஒன்றிய கழுத்து மேனி கால்உகிர் வாலின் ஒப்பம்
பின்றலில் வெள்ளத் தானை முறைபடப் பரப்பிப் பேழ்வாய்
அன்றிலின் உருவ மாக அணிவகுத் தமைந்து நின்றான். 8542

மஉ. புரந்தரன் செருவில் தந்து போயது புணரி ஏழும்.
உரந்தையுற் றூழி பேரும் காலத்துள் ஒலிக்கும் ஓதை
கரந்தது வயிற்றில் கால வலம்புரி கையில் வாங்கிச்
சிரம்பொதிந் தமரர் அஞ்ச ஊதினன் திசைகள் சிந்த.

மங. சங்கத்தின் முழக்கம் கேட்ட வயப்பெரும் தானை யானை
சிங்கத்தின் முழக்கம் கேட்ட தொத்தன விரிந்து சிந்தி
எங்குத்தம் உயிரி னோடும் இருந்ததீ தன்றி ஏழை
பங்கத்தன் மலிவில் அன்ன சிலைஒலி பரப்பி ஆர்த்தான். 8544

மச. கீண்டன செவிகள் நெஞ்சம் கிழிந்தன கிளர்ந்து செல்லா
மீண்டன கால்கள் கையின் விழுந்தன மரமும் வெற்பும்
பூண்டன சிங்கம் வாய்கள் புலர்ந்தன மயிரும் பொங்க
மாண்டனம் அன்றே என்ற வானரம் எவையும் மாதோ.

மடு. செங்கதிர்ச் செல்வன் சேயும் சமீரணன் சிறுவன் தானும்
அங்கதப் பெயரி னோனும் அண்ணலும் இனைய கோவும்
வெங்கதிர் மழுவிச் செங்கண் வீடணன் முதல வீரர்
இங்கிவர் நின்றார் அல்ல திரிந்தது சேனை எல்லாம். 8546

படைப்பெரும் தலைவர் நிற்பப் பல்பெருஞ் சேனை வெள்ளம்
உடைப்புறு புனலின் ஓட ஊழி நாள் உவரி ஒத்தை
கிடைத்திடப் பொங்கி ஆர்த்துக் கிளர்ந்தெழு நிருதர் சேனை
அடைத்தன திசைகள் எல்லாம் அன்னவர் அகத்தர் ஆனார்.

மை. மாருதி அலங்கல் மாலை மணிஅணி வயிரத் தோள்மேல்
வீரனும் வாலி சேய்தன் விறல்கெழு சிகரத் தோள்மேல்
ஆரியற் கிளைய கோவும் ஏறினர் அமரர் வாழ்த்தி
வேரியம் பூவின் மாரி சொரிந்தனர் இடைவி டாமல். 8548

விடையின்மேல் கலுழன் தன்மேல் வில்லினர் விளங்கு கின்ற
கடையின்மேல் உயர்ந்த காட்சி இருவரும் கடுத்தார் கண்ணுற்
றடையின்மேருவையும்சாய்க்கும் அனுமன்அங்கதன்என்றன்னார்.
தொடையின்மேன் மலர்ந்த தாரார் தோளின்மேல் தோன்றும்வீரர். 8549

மக. நீலனே முதலாய் உள்ள நெடும்படைத் தலைவர் நின்றார்
தாலமும் மலையும் ஏந்தித் தாக்குவான் சமையும் காலை
ஞாலமும் விசும்பும் காத்த நாளிலக் கிழவன் மைந்தன்
மேலவாம் வினையை உன்னி விலக்கினன் விளம்பல் உற்றான்.

உம. கடவுளர் படைகள் நும்மேல் வெய்யவன் துரந்தகாலைத்
தடையுள வல்ல தாங்கும் தன்மையர் அல்லீர் தாங்கள்
கிடையுள தென்பான் நல்கிப் பின்னுற நிற்றிர் ஈண்டிப்
படையுள தனையும் எம்பி வில்தொழில் பார்த்திர் என்றான்.

உக. அருண்முறை அவரும் நின்றார் ஆண்தகை வீரர் ஆறி
உருண்முறை தேரின் மாவின் ஓடைமான் வரையின் ஊழின்
இருண்முறை நிருதர் தம்மேல் ஏவினர் இமைப்பி லோரும்
மருண்முறை எய்திற் றென்ப சிலைவழங் கசனி மாரி. 8552

உஉ. இமைப்பதன் முன்னம் வந்த இராக்கத வெள்ளந் தன்னை
குமைத்தொழில்புரிந்தவீரர் தனுத்தொழில்குறித்தின்றெம்பால்
அமைப்பதென்பிறிதொன்றீண்டு மேருவின்அமைந்த வில்லால்
உமைக்கொரு பாகன் எய்த மரங்களி னெருங்கி வீழ்ந்த. 8553

உங. தேரின்மேல் சிலையி னின்ற இந்திர சித்தென் றோதும்
வீரருள் வீரன் கண்டான் விழுந்தன விழுந்த என்னும்
பாரின்மேல் நோக்கின் அன்றேல் பட்டனர் பட்டார் என்னும்
போரின்மேல் நோக்கி லாத இருவரும் பொருத பூசல். 8554

யானைபட் டனவோ என்ருன் இரதம்இற் றனவோ என்ருன்
மானமா வந்த தெல்லாம் மடிந்தொழிந் தனவோ என்ருன்
ஏனைவர்ள் அரக்கர் யாரும் இல்லையோ எடுக்க என்ருன்
வானுயர் பிணத்தின் குப்பை மறைத்தலால் மயக்கம் உற்ருன்.

செய்கின்ருர் இருவர் வெம்போர் சிதைகின்ற சேனை நோக்கில்
ஐகின்ரும் இல்லை வெள்ளம் அறுபதும் அவிக என்று
வைகின்ருர் அல்லர் ஆகில் வரிசிலை வலத்தான் மாள
எய்கின்ருர் அல்லர் ஈதொர் இந்திர சாலம் எனருர். 8558

அம்பின்மா மழையை நோக்கும் உதிரத்தின் ஆற்றைநோக்கும்
உம்பரின் அணவி நின்ற பிணக்குன்றின் ஒழுக்கை நோக்கும்
கொம்பற உதிர்ந்த முத்தின் குப்பையை நோக்கும் கொன்ற
தும்பியை நோக்கும் வீரர் சுந்தரத் தோளை நோக்கும். 8557

உஎ. ஆயிரம் தேரை ஆடல் ஆனையை அலங்கல் மாலை
ஆயிரத் தலையை ஆழிப் படைகளை அறுத்தும் அப்பால்
போயின பகழி வேகத் தன்மையைப் புரிந்து நோக்கும்
பாயும்வெம் பகழி என்னும் கணைக்கிலாப் பரப்பைப் பார்க்கும்.

உஅ. வயிறலைத் தோடி வந்து கொழுனர் மேல் மகளிர் மாழ்கிக்
குயில்தலைத் துக்க என்னக் குழைகின்ற குழைவை நோக்கும்
எயிறலைத் திடிக்கும் பேழ்வாய்த் தலையிலா ஆக்கை சட்டம்
பயிறலைப் பறவை பாரில் படிகிலாப் பரப்பைப் பார்க்கும்.

உக. அறுபது வெள்ள மாய அரக்கர்தம் ஆற்றற் கொத்த
எறிவன எய்யப் பெற்ற தெற்றுறு படைகள் யாவும்
பொறிவனம் வெந்த போலச் சாம்பராய்ப் போய தல்லால்
செறிவன வில்லா வற்றைச் சிந்தையால் தெரிய நோக்கும்.

உம. அஞ்சுதர் அனந்த கோடி உளர்எனும் அனுமன் என்பார்க்
கிங்கினி உலகம் யாவும் இடம்இலை போலும் என்பான்
எங்கும்இம் மனிதர் என்பான் இருவர்கொல் என்க என்னும்
சிங்கமே றனைய வீரர் கடுமையைத் தெரிக்கி லாதான். 8561

ஆர்க்கின்ற தேவர் தம்மை நோக்கும்ஆங் கவர்கள் அள்ளித்
தூர்க்கின்ற பூவை நோக்கும் துடிக்கின்றஇடத்தோள்நோக்கும்
பார்க்கின்ற திசைகள்எங்கும் பெரும்பிணப் பரப்பைநோக்கும்
ஈர்க்கின்ற குருதி யாற்றின் யானையின் பிணத்தை நோக்கும்.

நஉ. மலைகளே நோக்கு மாபோல் வான்உறக் குவித்த வன்கட்
டலைகளே நோக்கும் வீரர் சரங்களே நோக்கும் தாக்கும்
உலைகொள்வெம் பொறியின் உக்க படைக்கலத் தொழுக்கை நோக்கும்
சிலைகளே நோக்கு நாண்ஏற் றிடிகளைச் செவியின் எற்கும் 8563

நஊ. ஆயிர கோடி தேரும் அரக்கரும் ஓழிய வல்ல
மாயிருஞ் சேனை எல்லாம் ஆய்ந்தவா கண்டும் வல்லை
போயின குரங்கின் தானை புகுந்தில அன்றே பொற்றேர்த்
தீயவன் தன்மேல் உள்ள பயத்தினுல் சிறுமை தீர்ந்தார். 8564

நச. தளப்பருஞ் சேனை வெள்ளம் அறுபதும் தலத்த தாக
அளப்பரும் தேரின் உள்ள ஆயிர கோடி யாகத்
துளக்கமில் ஆற்றல் வீரர் பொருதபேர்த் தொழிலை நோக்கி
அளப்பருந் தானைக் கொட்டி அஞ்சனை மதலை ஆர்த்தான்.

நரு. ஆரிடை அனுமன் ஆர்த்த ஆர்ப்பொலி அசனி கேளாத்
தேரிடை நின்றும் வீழ்ந்தார் சிலர்சிலர் படைகள் சிந்திப்
பாரிடை இழிந்து வீழ்ந்து பதைத்தனர் பைம்பொன் இஞ்சி
ஊரிடை நின்று ளார்தம் உயிரொடும் உதிரம் கான்றார். 8566

நகூ. அஞ்சினீர்போமின்என்றன் ஆர்ப்பொலிக் கழியல் பாலீர்
வெஞ்சமம் விலைப்ப தென்னே நீவிரும் வீர ரோடு
அஞ்சினீர் போலும் என்றன் றவர்முகஞ் சுழிய நோக்கி
மஞ்சினுங் கரிய மெய்யான் இருவர்மேல் ஒருவன் வந்தான்.

நஎ. அக்கணத் தார்த்து மண்டி ஆயிர கோடி தேரும்
புக்கன நேமிப் பாட்டிற் கிழிந்தன புவனம் என்னத்
திக்கணி நின்ற வானை சிரம்பொதிர் எறியப் பாரின்
உக்கன விசம்பின் மீன்கள் உதிர்ந்திடத் தேவர் உட்க. 8568

நஅ. மாற்றம்ஒன் றிலையவன் மறைவில் செங்கரத்
தேற்றினை வணங்கின்றி யம்பு வான்இகல்
ஆற்றலன் அரவுகொண் டடைப்ப ஆர்அமர்
தோற்றனன் என்றெனை உலகம் சொல்லுமால். 8569

நகூ. காக்கவும் கற்றிலன் காதல் நண்பரைப்
போக்கவும் கற்றிலன் ஒருவன் போய்ப்பிணி
ஆக்கவும் கற்றிலன் வென்றி ஆருயிர்
நீக்கவும் கற்றிலன் என்று நின்றதால். 8570

சஅ. இந்திரன் பகைஎனும் இவனை என்சரம்
அந்தரத் தருந்தலை அறுக்க லாஎனில்
வெந்தொழில் செய்கையர் விருந்து மாய்நெடு
மைந்தரில் கடைஎனத் திரிவன் வாழியாய். 8571

சஆ. நின்னுடை முன்னர்யான் நெறியில் நீர்மையான்
தன்னுடைச் சிரத்தைஎன் சரத்தில் தள்ளினுல்
பொன்னுடை வரிகழல் பொலம்பொற் றேரினுய்
என்னுடை அடிமையும் இயையிற் றும்அரோ. 8572

சஇ. கடிதினில் உலகெலாம் கண்டு நிற்கஎன்
சுடுசரம் இவன்தலை துணிக்க லாஎனில்
முடியநின் றுணர்த்தினன் உனக்கு யான்முயல்
அடிமையின் பயன்இழந் தறுக வாழியாய். 8573

சஈ. வல்லவன் அவ்வுரை வழங்கும் போழ்தினில்
அல்லலே நீங்கிய அமரர் ஆர்த்தனர்
எல்லையில் உலகங்கள் எவையும் ஆர்த்தன
நல்அறம் ஆர்த்தன நமனும் ஆர்த்தனன். 8574

சஉ. முறுவல் வாண் முகத்தினுன் முளரிக் கண்ணனும்
அறிவன்நீ அடுவைஎன் றமைதி யாம்எனில்
இறுதியும் காவலும் இயற்றும் ஈசனும்
வெறுவியர் வேறினி விளைவ யாதென்றுன். 8575

சஊ. செல்லது கேட்டபின் தொழுது சுற்றிய
பல்பெருந் தேரொடும் அரக்கன் பண்ணையைக்
கொல்வன்இங் கன்னது காண்டி கொல்எனு
ஒல்லையின் எழுந்தனன் உவகை உள்ளத்தான். 8576

சஎ. அங்கதன் ஆர்த்தனன் அசனி ஏறென
மங்குல்நின் றதிர்ந்தன வயவன் தேர்புனை
சிங்கமும் நடுக்குற திருவின் நாயன்
சங்கம்ஒன் றூதினன் கடலும் தள்ளுற. 8577

சஏ. எழுமரச் சக்கரம் ஈட்டி தோமரம்
முழுமுரல் தண்டுவேல் முசுண்டி மூவிலைக்
கழுஅயில் கப்பணம் கணிகல் கன்னகம்
விழுமமைக் கிரட்டிவிட் டரக்கர் வீசினர். 8578

சஅ. மீன்எலாம் விண்ணின்நின் றிருருங்கு வீழ்ந்தென
வான்எலாம் மண்எலாம் மறைய வந்தன
கான்எலாம் துணிந்துபோய்த் தகர்ந்து காந்தின
வேனிலான் அனையவன் பகழி வெம்மையால். 8579

சக. ஆயிரம் தேர்ஒரு தொடையின் அச்சிறும்
பாய்பரிக் குலம்படும் பாகர் பொன்றுவர்
நாயகர் நெடுந்தலை துணியும் நாமமத்
தீஎழும் புகைஎழும் உலகும் தீயுமால். 8580

சுஎ. அடியிறுந் தேர்முரன் ஆழி அச்சிறும்
வடிநெடுஞ் சிலைஇறும் கவச மார்பிறும்
கொடியிறுங் குடையிறுங் கொற்ற வீரர்தம்
முடியிறும் முரசிறும் முழுதும் சிந்துமால். 8581

சுக. இன்னதோர் உருப்பிவை இனைய தேர்பரி
மன்னவர் இவர்இவர் படைஞர் மற்றுளார்
என்னவோர் தன்மையும் தெரிந்த தில்லையால்
சின்னபின் னங்களாய் மயங்கிச் சிந்துமால். 8582

சுஉ. தந்தையர் தேரிடைத் தனையர் வன்தலை
விந்தன தாதையர் வயிர வான்சிரம்
சிந்தின காதலர்க் கியைந்த தேரிடை
அந்தரத் தம்பொடும் அற்றெ ழுந்தன. 8583

சுங. செம்பெருங் குருதியில் திகழ்ந்த செங்கண்மீன்
கொம்பொடும் பரவையின் திரியும் கொட்பெனத்
தும்பியந் தொடைமலர்த் தடக்கை தூணிவாங்
கம்பொடும் துணிந்தனர் இலையொ டற்றன. 8584

சுச. தடிவன நெடுஞ்சரம் தள்ளத் தள்ளுற
மடிவன கொடிகளும் குடையும் மற்றவும்
முடிவறு பெரும்பிணக் கணத்தின் மொய்த்தன
படிவன ஒத்தன பறவைப் பான்மைய. 8585

சுசு. சிந்து ரங்களின் பருமமும் பகழியும் தேரும்
குந்து வன்நெடுஞ் சிலைமுதல் படைகளும் குடையும்
இந்த னங்களாய் இறந்தவர் விழிக்கனல் பிறங்க
வெந்த வெம்பிணம் அருந்தின கழுகினம் விரும்பி. 8586

ருசு. சில்லி ஊடறச் சித்தின சிலசில சேர்ந்த
வல்லி ஊடற மறிந்தன புரவிகள் மறியப்
புல்லி மண்ணிடைப் புரண்டன சிலசில போராள்
வில்லி சாரதி யொடும்படத் திரிந்தன எறிய. 8587

ருள. அலங்கு பன்மணிக் கதிரினங் குருதியின் அழுந்த
விலங்கு வெஞ்சுடர் வீடுவன வெளியின்றி மிடைந்த
குலங்கொள் வெய்யவர் மறுகிடத் தீயிடைக் குளித்த
இலங்கை மாநகர் மாளிகைக் கொத்தன இரதம். 8588

ருஅ. ஆன காலையில் இராமனும் அயில்முகப் பகழி
சோனை மாரியில் சொரிந்தனன் அனுமனைத் தூண்டி
வான மானங்கள் மறிந்தெனத் தேர்எலாம் மடியத்
தானும் தேருமே ஆயினன் இராவணன் தனியன். 8589

ருக. பல் விலங்கொடு புரவிகள் பூண்டதேர்ப் பரவை
வல் விலங்கல்போல் அரக்கர்தம் குழாத்தொடும் மடிய
வில் விலங்கிய வீரரை நோக்கினன் வெகுண்டான்
சொல் விலங்கில சொல்லினன் இராவணன் தோன்றல்.

சுரு. இருவர் என்னுடன் பொருதிரோ அன்றெனில் வற்ற
ஒருவர் வந்துயிர் தருதிரோ உம்படை யோடும்
பொருது பொன்றுதல் புரிதிரோ உறுவது புகலும்
தருவன் இன்றுமக் குற்றுள தொன்றெனச் சலித்தான்.

சுக. வாளில் திண்சிலை மல்லினில் தோளினில் மற்றை
ஆளுற் றெண்ணிய படைக்கலம் எவற்றினும் அமரில்
கோளுற் றுன்னெடு குறித்தமர் செய்துயிர் கொள்ளச்
சூளுற் றேன்இது சாதமன் றிலக்குவன் சொன்னான்.

சுஉ. முன் பிறந்தஉன் தம்முனை முன்தவிர்ந் துனக்குப்
பின் பிறந்தவன் ஆக்குவன் பின்பிறந் தோனை
முன் பிறந்தவன் ஆக்குவன் இதுமுடி யேனேல்
என் பிறந்தது னல்பயன் இராவணற் கென்றான். 8593

சுந. இலக்கு வன்எனும் பெயர்உனக் கியைவதே என்னில்
இலக்கு வன்கனை காக்குவன் இருபுகுந் திடையே
விலக்கு வன்என விடையவன் விலக்கினும் வீரம்
கலக்கு வன்இது கரும்உன் தமையனும் கண்ணுல்.

சுச. அறுவ தாக்கிய அரக்கர்தம் வெள்ளத்தை அம்பால்
இறுவ தாக்கிய இரண்டுவில் லீரும்கண் டிரங்க
மறுவ தாக்கிய எழுபது வெள்ளமும் மாள
வெறுவ தாக்குவன் உலகும்ஓர் கணத்தினேர் வில்லால். 8595

சுடு. கும்ப கன்னன்என் றிருருவன்நீர் அமரிடைக் கொன்ற
தம்பி அல்லன்நான் இராவணன் மகன்ஒரு தமியேன்
எம்பி மாருக்கும் என்சிறு தாதைக்கும் இருவர்
செம்பு னீர்கொடு கடன்கழிப் பேன்என்று தீர்ந்தான். 8596

அரக்கர் என்பதோர் பெயர்படைத் தீர்க்கிலாம் அடுத்துப்
புரக்கும் நன்கடன் செயஉளன் வீடணன் போந்தான்
கரக்கும் உந்தைக்கும் நீசெயக் கடவன கடன்கள்
இரக்கம் உற்றுனக் கவன்செயும் என்றனன் இளங்கோ. 8597

சுஎ. ஆன காலையில் அயில்எயிற் றரக்கன்நெஞ் சழன்று
வானும் வையமும் திசைகளும் யாவையும் மறையப்
பான வேலையைப் பருகுவ சுடர்முகப் பகழி
சோனை மாரியின் இருமடி மும்மடி சொரிந்தான். 8598

சுஅ. அங்கதன் தன்மேல் ஆயிரம் அவற்றினுக் கிரட்டி
வெங்கண் மாருதி மேனிமேல் வேறுள வீரர்
சிங்கம் அன்னவர் ஆக்கைமேல் உலப்பில சிலுத்தி
எங்கும் வெங்கணை ஆக்கினன் இராவணன் சிறுவன். 8599

சுசு. இளைய மைந்தன்மேல் இராமன்மேல் இராவணி இகலி
விளையும் வன்தொழில் வானர வீரர்மேல் மெய்யுற்
றுளைய வெஞ்சரம் சொரிந்தனன் நாழிகை ஒன்றில்
வளையும் மண்டலப் பிறைஎன நின்றதவ் வரிவில். 8600

எம. பச்சி மத்தினும் மூகத்தினும் மருங்கினும் பகழி
உச்சி முற்றிய வெய்யவன் கதிர்என உமிழக்
கச்ச முற்றவன் கைத்தொழில் கடுமையைக் காணூ
அச்ச முற்றனர் கண்புதைத் தடங்கினர் அமரர். 8601

எக. மெய்யில் பட்டன படப்படா தனஎலாம் விலக்கித்
தெய்வப் போர்க்கணைக் கத்துணைக் கத்துணை செலுத்தி
அய்யற் காங்கிளங் கோளரி அறமிலான் அறைந்த
பொய்யில் போம்படி ஆக்கினன் கடிதினில் புக்கான். 8602

எஉ. பிறகில் நின்றனன் பெருந்தகை இளவலைப் பிரியான்
அறன் இதன்றென அரக்கன்மேல் சரந்துரந் தருளான்
இறவு கண்டிலர் இருவரும் ஒருவரை ஒருவர்
விறகின் வெந்தன விசும்பிடைச் சென்றன விசிகம்.

எங. மாடை மூன்றெரீந் திருவர்தஞ் சரங்களின் மயங்கிக்
காடை ரீந்தன கனவரை எரிந்தன கனக
வீடை ரீந்தன வேலைகள் எரிந்தன மேகம்
ஊடை ரீந்தன ஊழியின் எரிந்தன உலகம். 8604

எச. படங்கொள் பாம்பணை துறந்தவற் கிளையவன் பகழி
விடங்கொள் வெள்ளத்தின் மேலவன் விடுவன விலக்கி
இடங்கர் ஏறென எறுழ்வலி அரக்கன்தேர் ஈர்க்கும்
மடங்கல் ஐயிரு நூற்றையும் கூற்றின்வாய் மடுத்தான்.

எரு. தேர் அழிந்திடச் சேமத்தேர் பிறிதிலன் செறிந்த
ஊர் அழிந்திடத் தனிநின்ற கதிரவன் ஒத்தான்
பார் அழிந்தது குரங்கெனும் பெயர்எனப் பதைத்தார்
சூர் அழிந்திடச் சொரிந்தநல் சுடுசரம் சொரிந்தான்.

எசு. அற்ற தேரின்மேல் நின்றுபோர் அங்கதன் அலங்கல்
கொற்றத் தோளினும் இலக்குவன் புயத்தினும் குளிப்ப
முற்ற வெண்நிலா மூரட்கணை துரந்தனன் முரட்போர்
ஒற்றைச் சங்கெடுத் தூதினான் உலகெலாம் உலைய.

எள. சங்கம் ஊதிய தசமுகன் தனிமகன் தரித்த
கங்க ணத்தொடும் கவசமும் மூட்டறக் கழல
வெங்க ணுங்கணை ஐயிரண் டுரும்என வீசிச்
சிங்க வேறென இலக்குவன் சிலையைநாண் எறிந்தான்.

எஅ. கண்ட கார்முகில் வண்ணனும் தமலக்கண் கலுழத்
துண்ட வெண்பிறை நிலவென முறுவலும் தோன்ற
அண்டம் உண்டதன் வாயினுள் ஆர்மின்என் றருளா
விண்ட தண்டம்என் றுலைந்திட ஆர்த்தனர் வீரர். 8609

கண்இமைப்பதன் முன்னம்போய்விண்ணிடைக் கரந்தான்
அண்ணல் மற்றவன் ஆக்கைகண் அறிகிலன் ஆழிப்
பண்ணை வற்கிவன் பிழைக்குமேல் படுக்கும்வெம் புடையே
எண்ணம் மற்றிலை அயன்படை தொடுப்பன்என் றிசைத்தான்.

அ. ஆன்ற வன்னிலை பகர்தலும் அறனிலை வழாதாய்
ஈன்ற அந்தணன் படைக்கலம் தொடுக்கில்இவ் உலகம்
மூன்றை யும்சுடும் ஒருவனுல் முடியுமோ என்னச்
சான்ற வன்னது தவிர்ந்தனன் உணர்வுடைத் தம்பி. 8611

அக. மறைந்து போய்நின்ற வஞ்சனும் அவருடை மனத்தை
அறிந்து தெய்வவான் படைக்கலம் தொடுப்பதற் கமைந்தான்
பிறிந்து போவதே கருமம்இப் பொழுதெனப் பெயர்ந்தான்
செறிந்த தேவர்கள் ஆவலங் கொட்டினர் சிரித்தார். 8612

அஉ. செஞ்ச ரங்கொடு சேண்கதிர் விசும்பிடைச் செல்வான்
மஞ்சின் மாமழை யோயின தாம்என மாற
அஞ்சி னுன்மறைந் தான்அகன் ருன்என ஆர்த்தார்
வெஞ்சி னந்தரு களிப்பினர் வானர வீரர். 8613

அங. உடைந்த வானரச் சேனையும் ஓதநீர் உவரி
அடைந்த தாம்என வந்திரைத் தார்த்தெழுந் தாடித்
தொடர்ந்து சென்றது கொற்றமென் றிளவற்குத் தோற்ருன்
கடைந்த வேலியில் கலங்குறும் இலங்கையில் கரந்தான்

எற்கொள் நான்முகன் படைக்கலம் இவர்என்மேல் விடுமுன்
முற்கொள் வேன்எனும் முயற்சியான் மறைமுறை மொழிந்த
சொற்கொள் வேள்விபோய்த் துடங்குவான் துணிந்தவன் துணிவை
மற்கொள் தோளவர் உணர்ந்திலர் அமர்த்தொழில் மறைந்தார்

அரு. அனுமன் அங்கதன் தோளின்நின் றிழிந்தனர் ஆகித்
தனுவும் வெங்கணைப் புட்டிலும் கவசமும் தடக்கைக்
கினிய கோதையும் துறந்தனர் இருந்தனர் இமையோர்
புனித லர்ப்பொழிந் தார்த்தனர் வாழ்த்தினர் பலகால். 8616

அசு. ஆர்த்த சேனையின் அமலைபோய் விசும்பினை அலைக்க
ஈர்த்த தேரொடும் கடிதுசென் ருன்அந்த இரவி
தீர்த்தன் மேலவன் திசைமுகன் படைக்கலம் செலுத்தப்
பார்க்கி லேன்முந்திப் படுவன்என் பான்எனப் பட்டான். 8617

அள. இரவு நன்பக லும்பெரும் செருவினை இயற்றி
உரவு நம்படை மெலிந்துள அருந்துதற் குணவு
வரவு தாழ்த்தது வீடணு வல்லியின் எய்தித்
தரவும் வேண்டின தென்றனன் தாமரைக் கண்ணன். 8618

அஅ. இன்ன தேகடி தியற்றுவன் எனத்தொழு தெழுந்தான்
பொன்னின் மோலியன் வீடணன் தமரொடும் போனான்
கன்னல் ஒன்றின்ஓர் கங்குலின் வேலையைக் கடந்தான்
அன்ன காலையில் இராமன்ஈ திளையவற் கறைந்தான்.

அக. தெய்வ வான்பெரும் படைகட்கு வரன்முறை திருத்து
மெய்கொள் பூசனை இயற்றினன் விடுவது விதியால்
ஐய நான் அவை ஆற்றினன் வருவதோர் அளவும்
கைகொள் சேனையைக் காஎனப் போர்க்களங் கடந்தான்.

கஅ. தந்தை யைக்கண்டு புகுந்துள தன்மையும் தன்மேன்
முந்த நான்முகன் படைக்கலம் தொடுக்குற்ற முறையும்
சிந்தை யுள்புகச் செப்பினன் அனையவன் திகைத்தான்
எந்தை யேஇனிச் செயத்தக்க தாம்என இசைத்தான்.

கக. தன்னைக் கொல்லுகை துணிவரேல் தனக்கது தகுமேல்
முன்னர்க் கொல்லிய நலம்என அறிஞரோ மொழிந்தார்
அன்னற் போரவர் அறிவுரு வகைமறைந் தயன்தன்
வென்னற் போர்ப்படை விடுவதே நலன்இது விதியால்.

கஉ. தொடுக்கின்றேன்என்ப தறிவரேல் அப்படைதொடுத்துத்
தடுப்பர் காண்பரேல் சொல்லவும் வல்லவர் தவத்தோர்
இடுக்கொன் றுகின்ற தில்லைநல் வேழ்வியின் இயற்றி
முடிப்பன் அன்னவர் ஆவியோர் கணத்தென முடித்தான்

கங. என்னை அன்னவர் மறைந்திலன் என்றிகல் இயற்றத்
துன்னு போர்ப்படை முடிவில அரைவயிற் றூண்டிப்
பின்னை நின்றது புரிவன்என் றனையவன் பேச
மன்னனும் திறல் மகோதரற் கிம்மொழி வழங்கும். 8624

கச. வெள்ள நூறுடை வெஞ்சினச் சேனையை வீர
அள்ளல் அப்படை அகம்பனே முதலிய அரக்கர்
எள்ளில் எண்ணலார் தம்மொடும் விரைந்தனை எய்திக்
கொள்ளும் வெஞ்செரு இயற்றுதி மனிதரைக் குறுகி.

கரு. மாயை என்றன வல்லன யாவையும் வழங்கித்
தீயி ருட்பெரும் பிழம்பினைத் திகழ்வுறத் திருத்தி
நீயொ ருத்தனே உலகொரு மூன்றையும் நிமிர்வாய்
போயு ருத்தவர் உயிர்குடித் துதவெனப் புகன்றான். 8626

கக. என்ற காலியில் என்றுகொல் ஏவுவ தென்று
நின்ற வாள்எயிற் றரக்கனும் உவகையின் நிமிர்ந்தான்
சென்று தேர்மிசை ஏறினன் இராக்கதர் செறிந்தார்
குன்று சுற்றிய மதகரிக் குலம் அன்ன குறியார். 8627

கஎ. கோடி கோடிநூ றாயிரம் ஆயிரங் குறித்த
ஆடல் யானைகள் அணிதொறும் அணிதொறும் அமைந்த
ஓடு தேர்க்குலம் உலப்பில கோடிவந் துற்ற
ஆடல் வாம்பரி கணக்கையும் கடந்தன அடைந்த. 8628

கஅ. படைக்க லங்களும் பருமணிப் பூண்களும் பகுவாய்
இடைக்க லந்தன எயிற்றிளம் பிறைகளும் எறிப்பப்
புடைப்ப ரந்தன எயிற்களும் நிலாக்களும் புரள
விடைக்கு லங்கள்போல் அரக்கர்தம் பதாதியும் மிடைந்த.

கக. கொடிக்கு ழீஇயன கொழுந்தெடுத் தெழுந்துகொள் விசும்பின்
இடிக்கு ழீஇயன மழைப்பெருங் குலங்களே இரித்த
அடிக்கு ழீஇடும் இடத்தொடும் அதிர்ந்தெழுந் தார்த்த
பொடிக்குழீ இயண்ட.ம்படைத்தவன் கண்ணீயும்புதைத்த.

ஈ. ஆனை என்னுமா மலைகளின் இழிமத அருவி
வான யாறென வாசியின் விலாளியின் மயங்கித்
கான மாமரம் கல்லொடும் ஈர்த்தன கடிதில்
போன போதரும் பெருநதி புணரியில் புக்க. 8631

ஈக. தடுத்து மீன்குலம் விசும்பிடைத் தயங்கின சலத்தின்
மடித்த வாயினர் வாள்எயிற் றரக்கர்தம் வலத்தில்
பிடித்த திண்படை விதிர்த்திட விதிர்த்திடப் பிறழ்ந்து
பொடித்தவெம்பொறி கொதித்துமுன் போவனபோன்ற.

ஈஉ. சொன்ன நூறுடை வெள்ளம்என் றிராவணன் துரந்த
அன்ன சேனையவ் வாயிலூ டுமிழ்கின்ற அமைதி
முன்னம் வேலிகள் முழுவதும் குடித்தது முறையீ
தென்ன மீட்டுமிழ் குறுமுனி ஒத்ததவ் விலங்கை. 8633

ஈஊ. சங்கும் பேரியும் காளமும் தாளமும் தலைவர்
சிங்க நாதமும் சிலையில்நாண் ஒலிகளும் சினமாப்
பொங்கும் ஓதையும் புரவியின் ஓதையும் பொலந்தேர்
வெங்கண் ஓலமு மாலென விழுங்கிய துலகை. 8634

ாசை. புக்க தால்பெரும் போர்ப்படை பறந்தலைப் புறத்துத்
தொக்க தால்நெடு வானரச் சேனையும் துவன்றி
ஒக்க ஆர்த்தன உறுக்கின தெழித்தன உருமின்
மிக்க வான்படை விடுகணை மாமழை விலக்கி. 8635

ாஞ. குன்று கோடியும் கோடிமேல் கோடியும் குமித்த
வென்றி வானர வீரர்கள் முகந்தொறும் விலங்கல்
ஒன்றி னுல்வரும் ஐவரும் இராக்கதர் உலந்தார்
பொன்றி வீழ்ந்தன மதகரி பாய்பரி பொலந்தேர். 8636

ாகூ. மழுவும் சூலமும் வளையமும் நாஞ்சிலும் வாளும்
எழுவும் சுட்டியும் தோட்டியும் எழுமுனைத் தண்டும்
தழுவும் வேலொடும் கணையமும் பகழியும் தாக்க
குழுவி னுடுபட் டுருண்டன வானரக் குலங்கள். 8637

ாஎ. முற்க ரங்களும் முசலமும் முசுண்டியும் முனையும்
சக்க ரங்களும் பிண்டிபா லத்தொடு தண்டும்
கப்ப ணங்களும் கணையமும் கவண்உமிழ் கல்லும்
வெற்பி னங்களோ நுறுக்கின கவிகளை வீழ்த்த. 8638

ாஅ. கதிர் அயில்படைக் குலம்வர முறைமுறை கடவ
அதிர் பிணப்பெருங் குன்றுகள் படப்பட அழிந்த
உதிர முற்றபேர் ஆறுகள் திசைதிசை ஓட
எதிர் நடக்கில குரங்கினம் அரக்கரும் இயங்கார். 8639

ாகூ. யாவர் இங்கிகல் வானரம் ஆயினர் எவரும்
தேவர் ஆதலின் அவருடன் விசும்பினில் திரிந்தார்
மேவு காதலின் மெலிவுறு மங்கையர் விரும்பி
ஆவி ஒன்றிடத் தழுவினர் பிரிவுநோய் அகன்றார். 8640

ாஅ. கரக்கு மாயமும் வஞ்சமும் களவுமே கடனு
இரக்க மேமுதல் தருமத்தின் நெறிஒன்றும் இல்லா
அரக்க ரைப்பெருந் தேவர்க ளாக்கின தமலன்
சரத்தின் மேல்இனிப் பவித்திரம் உளதெனத் தகுமோ.

ாஅக. அந்த கன்பெரும் படைக்கலம் மந்திரித் தமைந்தான்
இந்து வெள்ளையிற் றரக்கரும் யானையும் தேரும்
வந்த வந்தன வானகம் இடம்பெரு வண்ணம்
சிந்தி னன்சரம் இலக்குவன் முகம்தொறும் திரிந்தான்.

ரரூஉ. கும்ப கன்னன் அன் றிட்டது வயிரவான் குன் றின்
வெம்பு வெஞ்சுடர் விரிப்பது தேவரை மேல்நாள்
தும்பை யின்தலை துரந்தது சுடர்மணித் தண்டொன்
றிம்பர் ஞாலத்தைத் தடுத்தது மாருதி எடுத்தான். 8643

*ரரூங. காற்றன் றிது கணலாம்என இமையோர்இடை காணு
ஏற்றங்கடு விசையோடுயர் கொலீநீடிய இயல்பால்
சிற்றம்தனி உருவாயிடை தேருததிதார் மாருங்
கூற்றம்கொடுமுனைவந்தெனக்கொன்றுன் இகல்வென்றுன்.

ரரூச. வெங்கண்மத மலிமேல்விரை பரிமேல்விடு தேர்மேல்
சங்கம்தரு படைவீரர்கள் உடன்மேலவர் தலைமேல்
எங்கும்உளன் ஒருவன்என இருநான்மறை தெரியும்
செங்கண்ணவன் இவனேஎனத் திரிந்தான்கலிதெரிந்தான்

கிளர்ந்தாரையும்கிடைத்தாரையும்கிழித்தான்கனல்விழித்தான்
களந்தான்ஒரு குழம்பாம்வகை அரைத்தான் இரு கரத்தால்
வளர்ந்தானிலை உணர்ந்தான்உல கொருமூன்றையும் வலத்தால்
அளந்தானுமுன் இவனேஎன இமையோர்களும் அயிர்த்தார்.

ரகசு. மத்தக்கரி நெடுமத்தக மதிர்பட்டுக மணிமேல்
முத்திற்பொலி முழுமேனியன் முகில்விண்தொடு மெய்யான்
ஒத்தக்கடை யுகமுற்றுழி உறுகால்பொர உடுவின்
தொத்திப்பெயர் கனகக்கிரி வெயில்சுற்றிய தொத்தான். 8647

இடித்தான்நிலம் விசும்போடுடன் இட்டான்அடி எழுந்தான்
பொடித்தான்கடல் பெருஞ்சேனையைப் பொலன்தண்டுதன் வலத்தால்
பிடித்தான்மத கரிதேர்பரி பிழம்பாய்உறு குழம்பாய்
அடித்தான்உயிர் குடித்தான்எடுத் தார்த்தான்பகை தீர்த்தான்.

ரரூஅ. நூறுயிர மதமால்கரி ஒருநாழிகை நுவல்போ
தாறுநெடுங் கடுஞ்சோரியில் அன்றும்வகை அரைப்பான்
ஏறுயிரம் எனலாய்வரும் வயவீரரை இடறித்
தேறுதுறு கொலைமேவிய திசையானையில் திரிந்தான். 8649

ரரூரு. தேரேறினர் பரிவேறினர் விடைவேறினர் சினவெங்
காரேறினர் மழைவேறினர் கலிவேறினர் பலவெம்
போரேறினர் புகழேறினர் புகுந்தார்புடை வளைந்தார்
நேரேறினர் விசும்பேறிட நெரித்தான்கதை திரித்தான். 8650

*ஈஉம். அரிகுல மன்னன் நீலன் அங்கதன் குமுதன் சாம்பன்
பருவலிப் பனசன் என்றிப் படைத்தலை வீரர் யாரும்
பொருசினந் திருகி வெற்றிப் போர்க்கள மருங்கில் புக்கார்
ஒருவரை ஒருவர் காணூர் உயர்படைக் கடலின் உள்ளார். 8651

தொகும்படை அவுணர்வெள்ளம் துறைதொறும்அள்ளித்தூவி
நகம்படை யாகக் கொல்லும் நரசிங்கம் நடந்த தேபோல்
மிகும்படைக் கடலுள் செல்லும் மாருதி வீர வாழ்க்கை
அகம்பனைக்கண்டான்தண்டால்அரக்கரை அரைக்கும்கையான்

மலைப்பெருங் கழுதைஐ ஞூற் றிரட்டியான் மனத்தில்செல்லும்
தலைத்தடந் தேரன் வில்லன் சாருகன் என்னும் தன்மைக்
கொலைத்தொழில் அவுணன் பின்னோர் இராக்கத வேடங் கொண்டான்
சிலைத்தொழில் குமரன் கொல்லத் தொல்லோகர் செருவில் தீர்ந்தான்.

ஈஉங. பாகசா தனனு மற்றப் பகையடு திகிரி பற்றும்
ஏகசா தனனும் மூன்று புரங்கள்பண் டெரித்து ளானும்
போகதாம் ஒருவர் மற்றிக் குரங்கொடு போர்கற் றுரே
ஆககூற் றுவிஉண்ப திதனின்மேற் றுகும் என்றான். 8654

யான்தடேன் என்னின் மற்றிவ் எழுதிரை வளாகம் என்றும்
வான்தடா தரக்கர் என்னும் பெயரையும் மாய்க்கும் என்னு
ஊன்தடா நின்ற வாளி மழைதுரந் துரத்து வந்தான்
மீன்தடா நின்ற திண்தோள் அனுமனும் விரைவின் வந்தான்.

ஈஉரு. தேரொடு களிறு மாவும் அரக்கரும் நெருக்கிச் செற்றிக்
காரொடு காலுங் காற்றுங் கிளர்ந்ததோர் காலம் என்ன
வாரொடு தொடர்ந்த பைம்பொற் கழலினன் வருத லோடும்
சூரொடும்தொடர்ந்ததண்டைச்சுழற்றினன்வயிரத்தோளான்.

ஈஉசு. எற்றின எறிந்த வல்லே ஏயின எய்த போர்கண்
முற்றின படைகள் யாவும் முறைமுறை முரிந்து சிந்தச்
சுற்றினன் வயிரத் தண்டால் துகைத்தனன் அமரர் துள்ளக்
கற்றிலன் அன்று கற்ருன் கதையினுல் வதையின் கல்வி. 8657

ஈஉஎ. அகம்பனும் காணக் காண ஐயிரு கோடி கைமா
முகம்பயில் கலினப் பாய்மா முனிஎயிற் றரக்கர் மூரி
துகம்பயில் தேரி னோடு துறுக்கினு னூழில் தீர்த்தான்
உகம்பெயர் ஊழிக் காற்ருல் உலைவிலா மேரு ஒப்பான். 8658

இன்றிவன் தன்னை விண்ணில் ஏற்றிவான் இலங்கை வேந்தை
வென்றியன் ஆக்கி மற்றை மனிதரை வெறியர் ஆக்கி
நின்றுழி நெடிய துன்பம் அமரர்பால் நிறுப்பன் என்னுச்
சென்றனன் அரக்க னன்று வருகென அவனும் சேர்ந்தான்.

8662. படுகளப் பரப்பை நோக்கிப் பாழிவாய் மடித்த ஊழின்
சுடுகனல்பொறிகள்வெங்கண் தோன்றிடக்கொடித்தேர்தூண்டி
விடுகனல் பகழி மாரி மழையினும் மும்மை வீசி
முடுகுறச் சென்று குன்றின் முட்டினுன் முகிலின் ஆர்ப்பான்.

8663. சொரிந்தன பகழி மாரி தோளினும் மார்பின் மேலும்
தெரிந்தன அசனி போலத் தெறுபொறி பிதிர்வ திக்கின்
விரிந்தன எருவை மானச் சிறைகளாம் வீர மார்பை
அரிந்தன வடிம்பு பொன்கொண் டணிந்தன வாகும் என்ன.

8664. மார்பினும் தோளின் மேலும் வாளிவாய் மடுத்த வாயில்
சோர்பெருங் குருதி கக்கித் தொன்னிறம் சிவந்து தோன்றத்
தேர்இரண் டருகுபூண்ட கழுதையும் அச்சும் சிந்தச்
சாரதி புரள வீரத் தண்டினுல் துண்டம் செய்தான். 8662

8665. வில்லினுல் இவனை வெல்லல் அரிதென நிருதன் வெய்ய
மல்லினுல் இயன்ற தோளான் வலியினுல் வாய்த்த தச்சன்
கொல்லினுல் அமைந்த தாங்கோர்சுடர்மணித்தண்டுகொண்டான்
அல்லினுல் வகுத்த தன்ன மேனியான் இடிப்பின் ஆர்ப்பான்

8666. தாக்கினுர் வந்து மற்றெவ் விடத்தினும் திரிந்து சாரி
போக்கினுர் தெழிப்பின் ஆர்ப்புக் கொட்டினுர் கிட்டினுர்கீழ்த்
தூக்கினுர் சுழற்றி னுர்மேல் சுற்றினுர் எற்ற வெற்றி
நீக்கினுர் நெருக்கி னுர்மேல் நெருங்கினுர் நீங்கினுர் மேல். 8664

8667. தட்டினுர் தடவி னுர்மேல் தாவினுர் தரையி னேடும்
கிட்டினுர் கிடைத்தார் வீசிப் புடைத்தவை கீழும் மேலும்
கட்டினுர் காத்தார் ஒன்றும் காண்கிலார் அறிவு கண்ணுற்
றெட்டினுர் மாறி வட்டம் ஓடினுர் சாரி போனுர். 8665

8668. மையொடும் பகைத்துநின்ற நிறத்தினுன் வயிரமார்பில்
பொய்யொடு பகைத்து நின்ற குணத்தினுன் புகன்று மோத
வெய்யவன் அதனைத் தண்டால் விலக்கினுன் விலக்க லோடும்
கையொடும் அற்று மற்றக் கதைகளங் கிடந்த தன்றே. 8666

ாஙசு. கையொடு தண்டு நீங்கக் கடல்எனக் கலக்க முற்று
மெய்யொடு நின்ற வெய்யோன் மிடல்உடை இடக்கை வீசி
ஐயனை அலங்கல் ஆகத் தடித்தனன் அடித்த லோடும்
மெய்யொளி வயிரக் குன்றத் துருமின்வ றிடித்த தொத்த.8667

ாஙள. அடித்தவன் தன்னை நோக்கி அசனிவ றனைய தண்டு
பிடித்துகின் றேயும் எற்ருன் வெறுங்கையான் பிழையிற் றென்னை
மடித்துவாய் இடத்துக் கையால் மார்பிடைக் குத்த வாயில்
குடித்துநின் றுமிழ்வான் என்னக் கக்கினன் குருதி வெள்ளம்.

மீட்டும்அக் கையால் வீசிச் செவித்தலத் தெற்ற வீழ்ந்தான்.
கூட்டினர் உயிரை விண்ணோர் குமாத்திடை அரக்கர் கூட்டம்
காட்டில்வாழ் விலங்கு மாக்கள் கோளரி கண்ட என்ன
ஈட்டமுற் றெதிர்ந்த எல்லாம் இரிந்தன திசைகள் எங்கும்.

மாண்டனன் அகம்பன் மண்மேல் மடிந்தன நிருதர் சேனை
மீண்டனர் குரக்கு வீரர் விழுந்தன சினக்கை வேழம்
தூண்டின கொடித்திண் தேர்கள் துணிந்தன பொருப்பு வாசி
ஆண்தகை இளைய வீரன் அடுசிலை பொழியும் அம்பால்.

ாசம. வீசினர் நிருதர் சேனை வேலையில் தென்மேல் திக்கின்
ஓசனை ஏழு சென்ருன் அங்கதன் அவனுக் கப்பால்
ஆசையின் இரட்டி சென்ருன் அரிகுல மன்னன் அப்பால்
ஈசனுக் கிளைய வீரன் இரட்டிக்கும் இரட்டி சென்ருன்.

ாஙக. மற்றையோர் நாலும் ஐந்தும் ஓசனை மலைந்து புக்கார்
கொற்றமா ருதியும் வள்ளல் இலக்குவன் நின்ற சூழல்
முற்றினன் இரண்டு மூன்று காவதம் ஒழியப் பின்னும்
சுற்றிய சேனை நீர்மேல் பாசியின் மிடைந்து துன்ன. 8672

ாஙஉ. இளையவன் நின்ற சூழல் எய்துவன் விரைவின் என்னு
உளைவுவந் துள்ளம் தூண்ட ஊழிவெங் காலில் செல்வான்
களைவரும் துன்பம் நீங்கக் கண்டனன் என்ப மன்னை
விளைவன செருவில் பல்வே ருக்கின குறியி தென்ன. 8673

ாஙங. ஆனையின் கோடும் பீலித் தழைகளும் ஆரத் தோடு
மானமா மணியும் பொன்னும் முத்தமும் கொழித்து வாரி
மீன்என அங்கும் இங்கும் படைக்கலம் மிளிர விசிப்
பேனவெண் குடைய வாய உதிரப்பேர் ஆறு கண்டான். 8674

ஈசஎ. ஆசைகள் தோறும் சுற்றி அலைக்கின்ற அரக்கர்தம்மேல்
வீசிய பகழி அற்ற தலையொடும் விசும்பை முட்டி
ஓசையின் உலகம் எங்கும் தான்இறும் ஊழி நாளில்
காசறு கல்லின் மாரி பொழிவபோல் வீழக் கண்டான். 8675

ஈசஏ. மானவேல் அரக்கர் விட்ட படைக்கல மான வாரி
ஆனவன் பகழி சிந்தப் பொறியொடும் திசையோ டற்ற
மீனினம் விசும்பின் நின்று மீச்செல வீழ்வ போலக்
கானகம் தொடர்ந்த தீயில் சுடுவன பலவுங் கண்டான். 8676

ஈசஐ. அருளுடைக் குரிசில் வாளி அந்தரம் எங்கும் தானுய்த்
தெருளுறத் தொடர்ந்து வீசச் செல்வன தேவர் காண
இருளுடைச் சுடலை யாடும் எண்புயத் தண்ணல் வண்ணச்
சுருளுடைச் சடையன் கற்றைச் சுற்றென‌ச் சுடர்வ கண்டான்.

நெய்யுறக் கொழுத்தப்பட்ட நெருப்பெனப் பொருப்பின்ஓங்கு
மெய்யுறக் குருதித் தாரை விசும்புற விளங்கி நின்ற
வையகங் கங்குல் மாலை ஆச்சென அறிந்து காலன்
கைவிளக் கெடுத்ததென்னக் கவந்தத்தின்காடுகண்டான். 8678

ஈசஅ. ஆளொலாம் இழந்த தேரும் ஆனையும் ஆடல் மாவும்
நாளெலாம் எண்ணி னுலும் தொலைவிலா நாதர் இன்றித்
தாளெலாம் குலைய ஓடித் திரிவன தாங்க லாற்றும்
கோளிலா மன்னன் நாட்டில் குடிஎனக் குலைவ கண்டான்.

ஈசஆ. மிடல்கொளும் பகழி வானின் மாரியின் மும்மை வீசி
மடல்கொளும் அலங்கன்மார்பன் மலைந்திடஉலைந்துமாண்டார்
உடல்களும் உதிர நீரும் ஒளிர்படைக் கலமும் உற்ற
கடல்களும் நெடிய கானும் கார்தவழ் மலையுங் கண்டான். 8680

சுழித்தெறி ஊழி காலத் துருமெனத் தொடர்ந்து தோன்றத்
தழீத்தழீக் குருதி வேலை தாவிவான் தனிப்பேர் அண்டம்
கிழித்தது கிழித்த தென்னும் நாணுரும் ஏறு கேட்டான்
அழித்தொழி காலத்தார்க்கும் ஆர்கலிக் கிரட்டி ஆர்த்தான்.

ஈருக. ஆர்த்தபேர் அமலை கேளா அணுகினன் அனுமன்எல்லா
வார்த்தையுங் கேட்க லாகும் என்றுள மகிழ்ந்து வள்ளல்
பார்த்தவன் முன்னம் சென்று பணிந்தனன் விசையப் பாவை
தூர்த்தனை இலைய வீரன் தழுவினன் இனைய சொன்னான்.

ஈருஉ. அரிகுல வீரர்ஐயா யாண்டையான் அருக்கன் மைந்தன்
திருவினைச் செய்ய நீலன் அங்கதன் பெயர்ந்த தெங்கே
விரிஇருள் பரவை வேலை வெள்ளத்து விளைந்த தென்றும்
தெரிகில துரைத்தி என்ரூன் சென்னியில் கையன் சொன்னான்.

ஈருஊ. போயினர் போன வாறும் போயின தன்றிப் போரில்
ஆயினர் ஆன வாறும் அறிந்திலன் ஐய யாரும்
மேயினர் மேய போதே தெரியலாம் விளைந்த தென்ரூன்
தாயினன் வேலை யோடும் அயிந்திரப் பரவை தன்னான் 8684

ஈருஎ. மந்திரம் உளதால் ஐய உணர்வுறு மாலைத் தாறும்
சிந்தையின் உணர்ந்து செய்யற் பாற்றெனில் செய்திதெவ்வர்
தந்திரம் இதனைத் தெய்வப் படைகளால் சமைப்பின் அல்லால்
எந்தையின் அடியர் யாரும் எய்தலர் நின்னை என்ரூன். 8685

ஈருஏ. அன்னது புரிவன் என்ன ஆயிர நாமத் தண்ணல்
தன்னையே தொழுது வாழ்த்திச் சரங்களைத் தெரிந்து வாங்கிப்
பொன்மலை வில்லி னுன்தன் படைக்கலம் பொருந்தப் பற்றி
மின்எயிற் றரக்கர் தம்மேல் ஏவினன் வில்லின் செல்வன்.

முக்கணன் படையை மூட்டி விடுதலும் மூங்கில் காட்டில்
புக்கதோர் ஊழித் தீயில் புறத்தெதான்று போகா வண்ணம்
அக்கணத் தெரித்து வீழ்த்தான் அரக்கர்தம் படையை ஆழித்
திக்கெலாம் இருளும் தீர்த்தான் தேவரும் இடுக்கண் தீர்ந்தார்.

ஈருஐ. தேவர்தம் படையை விட்டான் என்பது சிந்தை செய்யா
மாபெருந் தேரின் நின்ற மகோதரன் மறையப் போனான்
ஏவரும் இரிந்தார் எல்லாம் மேன்மழை என்ன ஆர்த்துக்
கோவிளங் களிற்றை வந்து கூடினர் ஆடல் கொண்டார்.

ஈருஅ. யாவர்க்கும் தீதிலாமை கண்டுவந் துவகை எய்தித்
தேவர்க்குந் தேவன் தம்பி திருமனத் தையம் தீர்ந்தான்
காவல்போர்க் குரங்கின் சேனை கடல்எனக் கிளர்ந்து சூற்றப்
பூவற்கம் இமையோர் தூவப் பொலிந்தனன் தூதர் போனார்

ஈருகூ. இலங்கையர் கோனை எய்தி எய்திய துரைத்தார் நீங்கள்
விலங்கினீர் போலும் வெள்ளம் நூற்றையோர் வில்லால் வீழக்
குலங்களி னோடுங் கொல்லக் கூடுமோ என்னக் கொன்றை
அலங்கலான் படையின் என்ரூர் அன்னதேல் ஆகும் என்ரூன்.

ாசும. வந்திலன் இராமன் வேரூர் மலையினன் உம்பி மாயத்
தந்திரம் தீர்ப்பான் போனுன் உண்பன தாழ்ப்பத் தாழான்
எந்தையீ தியன்ற தென்ரூர் மகோதரன் யாண்டை என்ரூன்
அந்தரத் திடையான் என்ரூர் இராவணன் அழகிதென்ரூன்.

*ாசுக. காலம்ஈ தென்னக் கருதிய இராவணன் மைந்தன்
ஆலமா மரம் ஒன்றினை விரைவினில் அடைந்தான்
மூல வேழ்விக்கு வேண்டுவ கலப்பைகள் முறையில்
கூல நீங்கிய இராக்கதப் பூசுரர் கொணர்ந்தார், 8692

ாசுஉ. அம்பி னுல்பெரும் சமிதைகள் அமைத்தனன் அனலில்
தும்பை மாமலர் தூவினன் காரிஎள் சொரிந்தான்
கொம்பர் பல்லொடுங் காியவெள் ளாட்டிருங் குருதி
வெம்பு வெந்தசை முறையில்இட் டெண்ணெயால்வேட்டான்.

ாசுஙு. வலஞ் சுழித்துவந் தெழுந்தன உவகையின் வணங்கி
நலஞ் செறிந்தன பெருங்குறி எனநின்று நல்கிக்
குலஞ் சுரந்தன கொடுமையன் முறைவரன் கொண்டான்
நிலஞ் சுரந்துயர் வென்றிஎன் றும்பரின் நிமிர்ந்தான். 8694

ாசுச. விசும்பு போயினன் மாயையின் பெருமையான் மேலைப்
பசும் பொருட்டவர் நாட்டமும் உள்ளமும் பதைத்தார்
அசும்பு விண்ணிடை அடங்கினன் முனிவரும் அறியார்
தசும்பு நுண்ணெடு காலமுங் கோளொடுஞ் சார, 8695

ாசுடு. அனையன் நின்றனன் அவ்வழி மகோதரன் அறிந்தோர்
வினையம் எண்ணினன் இந்திர வேடத்தை மேவித்
துனைவலத் தயிராபதக் களிற்றின் மேல் தோன்றி
முனைவர் வானவர் எவரோடும் போர்செய மூண்டான். 8696

ாசுசு. அரக்கர் மானிடர் குரங்கெனும் அவைஎலாம் அல்லா
உருக்க ளாய்உள யாவையும் உலகத்தின் உலைவாத்
தருக்கும் போர்க்குடன் வந்தன வாம்எனச் சார்ந்தான்
வெருக்கொ ளப்பெருங் கவிப்படை குலைந் துதவிலங்கி. 8697

கோடு நான்குடைப் பால்நிறக் களிற்றைமேல் கொண்டான்
ஆடல் இந்திரன் அல்லவர் யாவரும் அமரர்
சேடர் சிந்தனை முனிவர்கள் அமர்பொரச் சீறி
ஊடு வந்துற்ற தென்கொலோ ஆம்என உலைந்தார். 8698

ாசுஅ. அனுமன் வாண்முகம் நோக்கினன் ஆழியை அகற்றி
தனுவ லங்கொண்ட தாமரைக் கண்ணவன் தம்பி
முனிவர் வானவர் முனிந்துவந் தேயமர் முயன்ற
துனிகள் என்கொலோ சொல்லுதி உணர்ந்தெனச் சொன்னான்.

ாசுக. இன்ன காலையில் இலக்குவன் மேனிமேல் எய்தான்
முன்னை நான்முகன் படைக்கலம் இமைப்பதன் முன்னம்
பொன்னின் மால்வரைக் குரீஇனம் மொய்ப்பன போலப்
பன்ன லாந்தரம் அல்லன கடுங்கணை பாய்ந்த. 8700

ாஎம. கோடி கோடி நூ ருயிரஞ் சுடர்க்கணைக் குழாங்கள்
மூடி மேனியை முற்றுறச் சுற்றின மூழ்க
ஊடு செய்வதொன் றுணர்ந்திலன் உணர்வுபுக் கொடுங்க
ஆடன் மாக்கரி சேவகம் அமைந்தென அயர்ந்தான். 8701

ாஎக. அனுமன் இந்திரன் வந்தவ னேகொல்இ தமைத்தான்
இனிய வன்களிற் றினனெடும் எடுக்கென எழுவான்
தனுவின் ஆயிரங் கோடிவெங் கணைபல தைப்ப
நினையும் செய்கையும் மறந்துபோய் நெடுநிலம் உற்றான். 8702

ாஎஉ. அருக்கன் மாமகன் ஆடகக் குன்றின்மேல் அலர்ந்த
முருக்கின் கானக மாம்எனக் குருதிநீர் மூடத்
தருக்கும் வெஞ்சரம் தலைத்தலை மயங்கின தைப்ப
உருக்கும் செம்பெனக் கண்ணினன் நெடுநிலம் உற்றான். 8703

ாஎக. அங்க தன்நெடி தாயிரம் அயில்கணை அழுந்திச்
சிங்க ஏறிடி யுண்டென நெடுநிலம் சேர்ந்தான்
சங்கம் ஏறிய பெரும்புகழ்ச் சாம்பனும் சார்ந்தான்
துங்க மார்பையும் தோளையும் வடிக்கணை துளைப்ப. 8704

ாஎஏ. நீலன் ஆயிரம் வடிக்கணை நிறம்புக்கு நெருங்கக்
கால னுர்முகம் கண்டனன் இடவன்வீண் கலந்தான்
ஆல மேஅன்ன பகழியால் பனசனும் அயர்ந்தான்
கோல மேனிமால் வரைஅன்ன குமுதனும் குறைந்தான். 8705

ாஎடு. வேலை தட்டவன் ஆயிரம் பகழியால் வீழ்ந்தான்
வாலி நேர்வலி மயிந்தனும் தம்பியும் மாண்டார்
கால வெந்தொழில் கவையனும் வானகங் கண்டான்
மாலை வாளியில் கேசரி மண்ணிடை மடிந்தான், 8706

விந்தம் என்னும்தோள் சரபனில் சுசேடணன் வினதன்
கெந்த மாதனன் இடும்பன்வன் ததிமுகன் கிளரும்
துங்க வார்கணை கோடிதம் உடல்முற்றும் துளைப்பத்
தந்த நல்உணர் வொடுங்கிட மண்ணுறச் சாய்ந்தார். 8707

ளஎஎ. கனகன் ஆயிரம் கணைபட விண்ணிடைக் கலந்தான்
அனகன் ஆயின சங்கனும் அக்கணத் தயர்ந்தான்
முனையின் வாளியில் சதவலி என்பவன் முடிந்தான்
புனையும் அம்பினில் தம்பனும் பொருப்பெனப் புரண்டான்.

ளஎஅ. மற்றை வீரர்கள் யாவரும் வடிக்கணை மழையால்
முற்றும் வீழ்ந்தனர் முழங்குபேர் உதிரத்தின் முந்நீர்
எற்று வான்திரைக் கடலொடும் பொருதுசென் றேற்ற
ஒற்றை வார்கணை ஆயிரங் குரங்கினை உருட்ட. 8709

ளஎக. தனித்து வைத்தது சதுமுகன் பெரும்படை தள்ளி
ஒளிக்க மற்றொரு புகலிடம் உணர்கிலர் உருமின்
வனைத்து வித்திய வாளியான் மண்ணெடும் திண்ணை
முனைப் புடைத்தன ஒத்தன வானரம் முடிந்த. 8710

ளஅம. குவளைக் கண்ணியர் வானர மடைந்தையர் கோடி
துவளப் பாரிடைக் கிடந்தனர் குருதிநீர் சுற்றித்
திவளக் கீழொடு மேல்புடை பரந்திடை செறியப்
பவளக் காட்டுடைப் பாற்கடல் ஒத்ததப் பரவை. 8711

ளஅக. விண்ணில் சென்றது கவிக்குலப் பெரும்படை வெள்ளம்
கண்ணில் கண்டனர் வானவர் விருந்தெனக் கலந்தார்.
உண்ணிற் கும்பெருங் களியினர் அளவளா உவந்தார்
மண்ணில் செல்லுதிர் இக்கணத் தேளனும் மனத்தார். 8712

ளஅஉ. பார் படைத்தவன் படைக்கொரு பூசனை படைத்தீர்
நீர் படக்கட வீர்அலீர் வரிசிலை நெடியோன்
பேர் படைத்தவர்க் கடியருக் கடியரும் பெறுவார்
வேர் படைத்தவெம் பிறவியில் துவக்குணு வீடு. 8713

ளஅங. நங்கள் காரியம் இயற்றுவான் உலகிடை நடந்தீர்
உங்கள் ஆருயிர் எம்உயிர் உடல்பிறி துற்றீர்
செங்கண் நாயகற் காகவெங் களத்துயிர் தீர்ந்தீர்
எங்கள் நாயகர் நீங்கள்என் றிமையவர் இசைத்தார். 8714

ாஅச. வெங்கண் வானரக் குழுவொடும் இளையவன் வீழ்ந்தான்
இங்கு வந்திலன் அகன்றனன் இராமன்என் றிசைத்தான்
சங்கம் ஊதினன் தாதையை வல்லியில் சார்ந்தான்
பொங்கு போரிடைப் புகுந்துள பொருள்எலாம் புகன்றான்.

இறந்தி லன்கொலாம் இராமன்என் றிராவணன் இசைத்தான்
துறந்து நீங்கினன் அல்லனேல் தம்பியைத் தொலைத்துச்
சிறந்த நண்பரைக் கொன்றுதன் சேனையைச் சிதைப்ப
மறந்து நிற்குமோ மற்றவன் திறமென்றான் மதலை. 8716

ாஅசு. அன்ன தேஎன அரக்கனும் ஆதரித் தமைந்தான்
சொன்ன மைந்தனும் தன்பெருங் கோயிலைத் தொடர்ந்தான்
மன்னன் ஆணையில் போயின மகோதரன் வந்தான்
என்னை ஆளுடை நாயகன் வேறிடத் திருந்தான். 8717

*ஆர்க்கின்ற குரலுங் கேளான் இலக்குவன் அசனி ஏற்றைப்
போர்க்கின்ற சிலையின் நாணின் போர்ஒலி கேளான் வீரன்
யார்க்கின்னல் உற்றதென்ன உணர்கிலன் இசைப்பார் இல்லைப்
போர்க்குன்றம் அனையதோளான் இனையதோர் பொருமல்உற்றான்

*ாஅஅ செய்ய தாமரை நாண்மலர் கைத்தலம் சேப்பத்
துய்ய தெய்வவான் படைக்கெலாம் முறைமுறை துரக்க
மெய்கொள் பூசனை விதிமுறை இயற்றிமேல் வீரன்
மொய்கொள் போர்க்களத் தெய்துவன் இனிஎன முயன்றான்.

ாஅஎ. கொள்ளி யில்சுடர்ப் பகழியின் அங்கிகைக்கொண்டான்
அள்ளி நுங்கலாம் ஆரிருட் பிழம்பினை அழித்தான்
வெள்ள வெங்களப் பரப்பினைப் பொருக்கென விழித்தான்
தள்ளித் தாமரைச் சேவடி நுடங்கிடத் தளர்ந்தான். 8720

ாகூஏ. நோக்கி னுன்பெருந் திசைதொறும் முறைமுறை நோக்கி
தூக்கி னுன்தடந் தாமரைத் திருமுகத் துதிரம்
போக்கி னுன்னிணப் பறந்தலை அழுவத்தில் புக்கான்
காக்கு வானரத் தலைவரைத் தனித்தனி கண்டான். 8721

ாகூக. சுக்கி ரீவனை நோக்கித்தன் தாமரைத் துணைக்கண்
உக்க நீர்த்திரள் ஒழுகிட நெடிதுனின் றுயிர்த்தான்
தக்க வோஎனக் கென்றுதன் தனிமனம் தளர்ந்தான்
பக்க நோக்கினன் மாருதி தன்மையும் பார்த்தான். 8722

ாகூஉ. கடல் கடந்துபோய் அரக்கரைக் கருமுதல் கலக்கி
இடர் கடந்துநான் இருப்பநீ நல்கிய திதுவோ
உடல் கடந்தன வோஉன்னை அரக்கன் வில்உதைத்த
அடல் கடந்தபோர் வாளிஎன் முகுலித் தழுதான். 8723

ாகூஊ. முன்னைத் தேவர்தம் வரங்களும் முனிவர்தம் மொழியும்
பின்னைச் சானகி உதவியும் பிழைத்தன பிறந்த
புன்மைச் செய்தொழில் என்வினைக் கொடுமையால் புகழோர்
என்னைப் போல்பவர் ஆருளர் ஒருவர்என் றிசைத்தான். 8724

ாகூச. புன்தொ ழில்புலை அரசினை வவ்வினன் பூண்டே
கொன்றெருக்கினன் எந்தையைச் சடாயுவைக் குறைத்தேன்
இன்றெ ருக்கினன் இத்துணை வீரரை இருந்தேன்
வன்தொ ழிற்கும்ஓர் வரம்பும்உண் டாய்வர வற்றே. 8725

ாகூடு. தமைய னைக்கொன்று தம்பிக்கு வானரத் தலைமை
அமைய நல்கினன் அடங்கலும் வீய்ப்பதற் கமைந்து
கமைபி டித்துநின் றுங்களை இத்துணை கண்டேன்
சுமையு டற்பொறை சுமக்கவந் தேன்எனச் சொன்னான். 8726

ாகூசு. விடைக் குலங்களின் நடுவொரு விடைகிடந் தென்னக்
கடைக்கண் தீயுக அங்கதக் களிற்றினைக் கண்டான்
படைக்க லஞ்சுமந் துழல்கின்ற பதகனேன் பழிபார்த்
தடைக்க லப்பொருள் காத்தவா றழகிதென் றழுதான். 8727

ாகூள. உடலிடை தைத்த பகழியின் ஒளிர்கதிர்க் கற்றைக்
சுடரிடைப் பெருங் குருதியில் பாரம்போல் சுமந்த
மிடலுடைப் பண மீமிசைத் தான்பண்டை வெள்ளக்
கடலிடைத் துயில் வான்அன்ன தம்பியைக் கண்டான். 8728

பொருமி னுன்அகம் பொங்கினுன் உயிர்முற்றும் புகைந்தான்
குரும ணித்திரு மேனியும் மனமெனக் குலைந்தான்
தரும னின்றதன் கண்புதைத் தலைஞரச் சாய்ந்தான்
உருமி னுலிடி யுண்டதோர் மராமரம் ஒப்பான். 8729

ாகூக. உயிர்த்திலன் ஒரு நாழிகை உணர்ந்திலன் ஒன்றும்
வெயர்த்திலன் உடல் விழித்திலன் கண்ணினை விண்ணோ
அயர்த்தனன் கொல்என் றஞ்சினர் அங்கையும் தாளும்
பெயர்த்திலன் உயிர் பிரிந்திலன் கருணையால் பிறந்தான். 8730

உஉ. தாங்குவார் இல்லைத் தம்பியைத் தழீக்கொண்ட தடக்கை
வாங்குவார் இல்லை வாக்கினுல் தெருட்டுவார் இல்லை
பாங்கர் ஆயினுர் யாவரும் பட்டனர் பட்ட
தீங்குமால் இறைத் தமியனே யார்துயர் தீர்ப்பார். 8731

உஉக. கவந்த பந்தமும் கழுகும்தங் கணவரைக் காணுர்
சிவந்த கண்ணினர் தேடினர் திரிபவர் திரளும்
உவந்த சாதகர் ஈட்டமும் ஓரியின் ஓழுக்கும்
நிவந்த அல்லது பிறிதில்லைக் களத்திடை நின்ருர். 8732

உஉஉ. வான நாடியர் வயிறலைத் தழுதுகண் மழைநீர்
சோனை மாரியில் சொரிந்தனர் தேவரும் சோர்ந்தார்
ஏனை நிற்பவும் திரிபவும் இரங்கின எவையும்
ஞான நாயகன் உருவமே ஆதலின் நடுங்கி. 8733

உஉங. முகையி ணுண்மலர்க் கிழவற்கும் முக்கணன் தனக்கும்
நகையும் நீக்கிய திருமுகம் கருணையின் நலிந்த
தொகையி னின்றவர்க் குற்றுள துணர்த்தினன் தொடர்ந்த
பகையும் பார்த்தன்று பாவமுங் கலுழ்ந்தது பரிவால். 8734

உஉச. அண்ண லும்சிறி துணர்வினே டயர்வுயிர்ப் பணுகக்
கண்வி ழித்தனன் தம்பியைத் தெரிவுறக் கண்டான்
விண்ணி யுற்றனன் மீள்கிலன் என்றகம் வெதும்பிப்
புண்ணி னுற்றனன் வேலன்ன துயரினன் புலம்பும். 8735

*உஉரு. எந்தை இறந்தான் என்றும் இருந்தேன் உலகெல்லாம்
தந்தனன் என்றுங் தொள்கை தவிர்ந்தேன் தனிஅல்லேன்
கந்தன் இருந்தாய் நீஎன நின்றேன் தனிகாணேன்
வந்தனன் ஐயா வந்தனன் எம்பி இனிவாழேன். 8736

உஉசு. தாயோ நீயே தந்தையும் நீயே தவம் நீயே
சேயோ நீயே செய்பொருள் நீயே திருநீயே
போயோ நின்ருய் என்னை இகழ்ந்தாய் புகழ் பாராய்
நீயோ யானே நின்றன நெஞ்சம் வலியே மால். 8737

உஉள. ஊருய்நின்ற புண் ணுடை யாய்பால் உயிர்கா ணேன்
ஆரு நின்றேன் ஆவி சுமந்தேன் அறிகின் றேன்
ஏறை இன்னும் உய்யினும் உய்வேன் இருகூ ருய்ச்
சீரு நெஞ்சம் பெற்றனன் அன்றே கெடுவேன் நான். 8738

உ0அ. பயிலும் காலம் பத்தொடு நாலும் பயில் கானத்
தயில்கின் றேனுக் காயவை நல்கி அயிலா தாய்
வெயில்என் றுன்னுய் நின்று தளர்ந்து மெலிவெய்தித்
துயில்கின் றாயோ இன்றி உறக்கம் துறவாயோ. 8739

உ0கூ. அயிரா நெஞ்சும் ஆவியும் ஒன்றே எனும்அச் சொல்
பயிரா எல்லைப் பதகன் எனக்கும் பரிவுண்டோ
செயிரோ வில்லாய் நின்னை இழந்து திரிகின்றேன்
உயிரோ யானே ஆர்இனி உன்னை டுறவையா. 8740

உகo. வேழ்விக் கெய்தி வில்லும் இறுத்தோர் விடமம்மா
வாழ்விக் கும்என் றெண்ணினன் முன்னே வருவித்தேன்
சூழ்வித் தென்னைச் சுற்றின ரோடும் சுடுவித்தேன்
தாழ்வித் தேனை இத்தனை கேடுந் தருவித்தேன். 8741

உகக. மாண்டாய் நீயோ யான்ஒரு போதும் உயிர் வாழேன்
ஆண்டான் அந்தோ நானிலம் அன்றே பரதன் தாள்
பூண்டார் எல்லாம் பொன்றுவர் துன்பம் பொறை ஆற்றூர்
வேண்டா வோநான் நல்அறம் அஞ்சி மெலிவுற்றுல். 8742

உகஉ. சான்றோர் மாதைத் தக்க அரக்கன் சிறை தட்டால்
ஆன்றோர் சொல்லும் நல்லறம் அன்னுன் வசமா னுல்
மூன்றுய் நின்ற பேருல கொன்றுய் முடியா வேல்
தோன்று வோஎன் வில்வலி வீரத் தொழில் அம்மா. 8743

உகங. மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்கும்
புண்மேல் வைத்த தீயன துன்பம் புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலின் இப்பே றுகள்பெற்றேன்
எண்மேல் வைத்த என்புகழ் அன்றுல் எளியேனே. 8744

உகச. இருந்தே னுனுல் இந்திர சித்தே முதலாய
பெருத்தே ரோரைக் கொன்று பிழைக்கப் பெறுவேனேல்
மருந்தே நான்நீ வெல்லும தென்றே வலிகொண்டேன்
பொருந்தேன் அன்றே பொய்ப்பிறவிக்குப் பொருள் அல்லேன்.

உகடு. மாதா வும்நம் சுற்றமும் நாடும் மறையோரும்
ஏதா னுரோ என்று தளர்ந்தே இறுவாரைத்
தாதாய் கணச் சால நினைந்தே தளர்கின்றேன்
போதாய் ஐயா பொன்முடி என்னைப் புனைவிப்பாய். 8746

உகசு. பாசமு முற்றச் சுற்றிய போதும் பகையாலே
நாசமு முற்றிப் போது நடந்தேன் உடன் அல்லேன்
நேசமும் அற்றோர் செய்வன செய்தேன் தனிநின் றேன்
தேசமும் மற்றென் கொற்ற நலத்தைச் சிரியாரோ. 8747

உகள. கொடுத்தேன் என்றே வீடண னுக்குக் குலம்ஆளும்
முடித்தோர் செல்வம் யான்முடி யாதே முடிகின்றேன்
படித்தேன் அன்றே பொய்மை குடிக்குப் பழிபெற்றேன்
ஒடித்தேன் அன்றே என்புகழ் நானே உணர்வற்றேன். 8748

உகஅ. அறந்தாய் தந்தை சுற்றமும் மற்றை யனஎல்லா
மறந்தாய் என்று மெய்மை மறந்தாய் உடன்வந்து
பிறந்தாய் என்னைப் பின்பு தொடர்ந்தாய் பிரிவாற்றாய்
இறந்தாய் உன்னைக் கண்டும் இருந்தேன் எளியனே. 8749

உகசு வேலைப் பள்ளக் குண்டக ழிக்கும் விரதிக்கும்
காலில் செல்லாக் கவந்தன் உயிர்க்கும் கரனுக்கும்
மூலப் பொத்தைச் சொத்தை மரத்தேழ் முதலுக்கும்
வாலிக் கும்மே ஆயின தென்றன் வலியம்மா. 8750

உஉஎ. என்றென் றேங்கும் விம்மும் உயிர்க்கும் இடைஎய்த
சென்றென் றென்றே டிந்தியம் எல்லாம் சிதைவெய்தப்
பொன்றும் என்னைத் தம்பியை மார்பத் தொடுபுல்லி
ஒன்றும் பேசான் தன்னை மறந்தான் துயில்உற்றான். 8751

கண்டார் விண்ணோர் கண்கள் புடைத்தார் கலுழ்கின்றார்
கொண்டார் துன்பம் என்முடி வென்னைக் குலைகின்றார்
அண்டா ஐயா எங்கள் பொருட்டால் அயர்கின்றாய்
உண்டோ உன்பால் துன்பமும் அன்றே உரைசெய்தார். 8752

*உன்னை உள்ள படிஅறியோம் உலகம்உள்ள திறம்உள்ளோய்
பின்னை அறியோம்முன்ன றியோம் இடையும்அறியோம்பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த நெறியே நிற்கும் அதுஅல்லால்
என்னை அடியோம் செயல்பால தின்ப துன்பம் இல்லோனே.

அரக்கர் குலத்தை வேரறுத்தெம் அல்லல் நீக்கி அருளாய்என்
றிரக்க எம்மேல் கருணையினுல் ஏயாஉருவம் தனில் எய்திப்
புரக்கமன்னர்குடிப்பிறந்துபோந்தாய்இந்தப்பொறைதீர்ப்பான்
கரக்க நின்ற நெடுமாயை எமக்குங் காட்டக் கடவாயோ. 8754

ஈன்ரூய் இடுக்கண் துடைத்தளிப்பான் இரங்கி அரசரிற்பிறந்து
மூன்ரும் உலகத் துயர்தீர்த்தி என்னும் ஆசை முயல்கின்றேம்
ஏன்றும் அறிந்தேம் அவன்அல்லன் மனிதன் என்றேஇம்மாயம்
போன்ற தில்லை ஆளுடையாய் பொய்யும் புகலப் புக்காயோ.

அண்டம் பலவும் அணுத்துயிரும் அகத்தும் புறத்தும் அளவாகி
உண்டும்உமிழ்ந்தும்அளந்திடந்தும்உள்ளும்புறத்தும்உளையாகிக்
கொண்டும் சிலம்பி தன்வயிற்றில் நூல்போல் இயையக் கூடியற்றிப்
பண்டும் இன்றும் அமைக்கின்ற படியை [1]ஒருவாய் பரமேட்டி.

துன்ப விளையாட்டிதுவேயும் நின்னைத் துன்பம்தொடர்வின்மை
இன்ப விளையாட்டாம்எனினும் அறியாதோருக்கிடர்உறுமால்
அன்பின் விளைவும் அருள் விளைவும் அறிவின் விளைவும் அது எல்லாம்
முன்பு பின்பு நடுவில்லாய் முடிந்தால் அன்றி முடியாதால்.

உஉள. வருவாய் போல வாராதாய் வந்தாய்என்றுமனம்களித்து
வெருவா திருந்தேம் நீஇடையே துன்பம் விளைப்பமெலிகின்றேம்
கருவாய் கழிக்கும் கலைகண்ணே நீயே இடரைக் காவாயேல்
திருவாழ் மார்பா நின்மாயம் எம்மால் தீர்க்கத் திருமோ. 8758

உஉஅ. அம்ப ரீடற் கருளியதும் அயனூர் மகனூர்க் களித்ததுவும்
எம்பி ரானே எமக்கின்று பயந்த தாமென் றேமுறுவேம்
வெம்பு துயர நீஉழக்க வெளி காணுது மெலிகின்றேம்
தம்பி துணைவா நீஇதனைத் தவிர்ந்தெம் உளர்வைத் தாராயோ.

என்ப பலவும் எடுத்தியம்பி இமையாதாரும் இடர் [2]உழந்தார்
அன்பு மிகுதி யால்ஐயன் ஆவி உள்ளே அடங்கினுன்
துன்ப மனிதர் கருமமே புனர முன்னே துணிந்தமையால்
புன்கண் நிருதர் பெருந்தூதர் போனூர் அரக்க னிடம்புக்கார்.

என்வந் ததுநீ ரென்றரக்கர்க் கிறைவன் இயம்ப வெறிசெருவில்
நின்மைந் தன்தன் கெடுஞ்சரத்தால் துணைவர் எல்லாம் நிலம் சேர்ந்தார்
பின்வந் தவனு முன்மடிந்த பிழையை நோக்கி பின்னவற்காய்
முன்வந் தவனும் பின்மடிந்தான் பகையும் முடிந்த தெனமொழிந்தார்.

உக-வது, பிரமாத்திரப்படலம் – முற்றிற்று.

ஆகப்படலம் 113-க்கு திருவிருத்தம் 8761

---

1 [பிரதி], ஒருவாப். 2. உழந்தே.

உ உ-வது, சீதைகளங் காண்படலம்

பொய்யார் தூதர் என்பதனுல் பொங்கி எழுந்தஉவகையினுன்
மெய்யார் நிதியின் பெருவெறுக்கை வெறுக்கவீசி விலைந்தபடி
கையார் வரைமேன் முரசேற்றி நகரம் எங்கும் களிகூரப்
நெய்யார்ஆடல்ஆட்டென்றுநிகழ்த்தும்என்ருன்நெறியில்லான்

உ. அந்த நெறியை அவர்செய்ய அரசன் மருத்தன் தனைக்கூவி
முந்த ஈபோய் அரக்கருடன் முழுதுங் கடலின் முடுக்கிநின்
சிந்தை ஒழியப் பிறர்அறியில் சிரமும் வரமும் சிந்துவன்என்
றுந்தஅவன்போய்அரக்கருடன் முழுதுங்கடலின்உள்ளிட்டான்

தெய்வ மானத் தேர்ஏற்றி மனிதர்க் குற்ற செயல்எல்லாம்
தையல்அறியக் காட்டுமின்கள் கண்டால்அன்றித் தனதுள்ளத்
தையம் நீங்காள் என்றுரைப்ப அரக்கர் மகளிர் இரைத்தீண்டி
உய்யும் உணர்வும் நீத்தாளே நெடும்போர்க் களத்தின் இடைஉய்த்தார்

கண்டாள் கண்ணுல் கணவன்உரு வன்றி ஒன்றுங் காணுதாள்
உண்டாள்விடத்தை எனஉயிர்த்தாள் உடலும் உணர்வும் உடன்ஓய்ந்தாள்
தண்தா மரைப்பூ நெருப்புற்ற தன்மை ஒத்தாள் தரியாதாள்
பெண்தான் உற்றபெரும்பீடைஉலகுக்கெல்லாம் பெரிதன்றே.

மங்கை அழுவும்வான்நாட்டுமயில்கள் அழுதாள்மழவிடையோன்
பங்கில் உறையும் குயில்அழுதாள் மலர்மேல் இருந்தாள் பரிந்தழுதாள்
கங்கை அழுதாள் நாமடந்தை அழுதாள்கமலத்தடங்கண்ணுன்
தங்கை அழுதாள் இரங்காத அரக்கி மாரும் தளர்ந்தழுதார்.

பொன்தாழ் குடையாள் தனைஈன்றபூமாமடந்தை புரிந்தழுதாள்
குன்ரு மழையும் தருமமும்மெய் குலைந்து குலைந்து விழுந்தழுத
பின்ரு துடற்றும் பெரும்பாவம் அழுதபின்என்பிறர்செய்கை
நின்ரூர் நின்ற படி அழுதார் நினைப்பும் உயிர்ப்பும் நீங்கினுர்.

நினைப்பும் உயிர்ப்பும் நீத்தாளைநீரால் தெளித்துநெடும்போதின்
இனத்தின் அரக்கர் மடவார்கள் எடுத்தார்உயிர்வந்தேதங்கினுள்
கனத்தின் நிறத்தான் தனைப்பின்னும் கண்டாள் கயலைக் கலத்தால்
சினத்தின் அலைத்தால்எனக்கண்ணீச்சீதைகையால்மோதினுள்

அடித்தாள் முலைமேல் வயிறலைத்தாள் அழுதாள் தொழுதாள் அனல்விழுந்த
கொடித்தாள்என்னமெய்சுருண்டாள்கொதித்தாள்பதைத்தாள் குலைவுற்றுள்
துடித்தாள் மின்போல் உயிர்கரப்பச் சோர்ந்தாள் சுழன்ருள் துள்ளினுள்
குடித்தாள் உயிரை உரையோடும் குழைந்தாள் உழைத்த குயில்அன்னுள்.

விழுந்தாள்புரண்டாள்உடல்முழுதும்வெயர்த்தாள் அயர்த்தாள்வெய்துயிர்த்
தெழுந்தாள் இருந்தாள்தளிர்க்கரத்தைநெரித்தாள்சிரித்தாள்ஏங்கினுள் [தாள்
கொழுந்தா என்ருள் அயோத்தியர்தங் கோவே என்ருள் ஏழ்உலகும்
தொழுந்தாள் அரசே யோஎன்ருள் சோர்ந்தாள் அரற்றத் தொடங்கினுள்.

மை. உறமே வியகா தலுனக் குடையார்
புறமே துயிலா ரொடுபூண் முலையான்
மறமே புரிவார் வசமா யினையோ
அறமே கொடியாய் இதுவோ அருள்தான். 8771

மக. முதியோர் உணர்வேத மொழிந்த கலார்
கதியே தும்இலார் துயர்கா ணுதியோ
மதியேன் மதியேன் உனவாய் மையினுல்
விதியே கொடியாய் விளையா டுதியோ. 8772

மஉ. கொடியேன் இவைகா ணகிலேன் உயிர்கோள்
முடியாய் நமனே முறையோ முறையோ
விடியா இருளா கெனவீ சினையோ
அடியேன் உயிரே அருள்நா யகமே. 8773

மங. எண்ணு மயலோ டும்இருந் ததுநின்
புண்ணு கியமேனி பொருந் திடவோ
மண்ணேர் உயிரே இமையோர் வலியே
கண்ணே அமுதே கருணை கரனே. 8774

மச. மேவிக் கனன்முன் மிதுலைப் பதிஎன்
பாவிக் கைபிடித் ததுபண் ணவநின்
ஆவிக் கொருகோள் வரவோ அலர்வாழ்
தேவிக் கமுதே மறையின் தெளிவே. 8775

மரு. உய்யாள் உயிர்கோ சலைதன் உயிரும்
வெய்யா ளில்சுமித் திரைமா நகர்வாய்
மெய்யா வினைஎண்ணி விடுத்த கொடுங்
கைகே சிகருத் திதுவோ களிறே. 8776

மசு. தகைவா னகர்நீ தவிர்வாய் எனவும்
வகையா துதொடங் தொருமான் முதலாய்ப்
புகையா டியகா டுபுகுந் துடனே
பகையா டியவா பரிவே துமிலேன். 8777

மள. இன்றீ கலிமேல் பிறர்இல் விடைவாய்ப்
பன்றீ எனவும் பரிவோ டடியேன்
நின்றீ வதுநின் னீ நெடுஞ் செருவில்
கொன்றீ வதுகொள் கைகுறித் ததிலை. 8778

மஅ. நெய்யார் அழல்வேழ் விரிரப் பிநெடும்
செய்யார் புனல்நா டுதிருத் துதியால்
மெய்யா கியவாய் மையும்மீ தியும்மீ
பொய்யா னளன்மே னிபொருந் துதலால். 8779

மக. மேதா இளையோய் விதியார் விளைவால்
போதா நெறிளம் மொடுபோ துறுநாள்
மூதா ன்வன்முன் னர்முடிந் திடெனும்
மாதா உரையின் வழிநின் றனையோ. 8780

உம. பூவும் தளிரும் தொகுபொங் கணைமேல்
கோவின் துயிலைத் தவிர்வாய் கொடியார்
ஏவின் தலைவந்த துருங் கணையா
மேவுங் குளிர்மெல் லணைமே வினையோ. 8781

உக. மழுவாள் வரினும் பிளவா மனனே
டெழுவேன் இனிஎன் இடர்ஆ றிடநான்
விழுவேன் அவன்மே னியின்மீ தின்எனு
எழுவாளை விலக்கி இயம்பின ளால். 8782

*உஉ. மாடுற வளைந்து நின்ற வாள்எயிற் றரக்கி மாரைப்
பாடுற நீக்க நின்ற பாவையைத் தழுவிக் கொண்டு
கூடினள் என்ன நின்று செவியிடைக் குறுகிச் சொன்னாள்
தேடிய தெய்வம் அன்ன திரிசடை மறுக்கம் தீர்ப்பாள். 8783

உங. மாயமான் விடுத்த வாறும் சனகனீ வகுத்த வாறும்
போயநாள் நாக பாசம் பிணித்தது போன வாறும்
நீயமா நினையாய் மாள நினைத்தியோ நெறி இலாதார்
ஆயமா மாயம் ஒன்றும் அறிந்திலை அன்னம் அன்னாய். 8784

உச. கண்டஅக் கனவும் பெற்ற நிமித்தமும் நினது கற்பும்
தண்டவாள் அரக்கர் செய்யும் தகைமையும் தருமம் தாங்கும்
அண்டர்நா யகர்தம் வீரத் திண்மையும் அயர்த்தாய் போலும்
புண்டரீ கற்கும் உண்டோ இறுதிஇப் புலையர்க் கல்லால்.

ஆழியான் ஆக்கை வாணுய் அம்பொன்றும் உறுகி லாமை
ஏழைநீ காண்டி அன்றே இளையவன் வதனம் இன்னும்
ஊழிநாள் இரவி என்ன ஒளிர்கின்ற துயிருக் கீனம்
வாழியார்க் கில்லை வாளா மயங்கலை மண்ணில் வந்தாய்.

உசு. ஓய்ந்துளன் இராமன் என்னில் உலகம்ஓர் ஏழும் ஏழும்
தீய்ந்துறும் இரவி பின்னைத் திரியுமே தெய்வம் என்னும்
வீய்ந்துறும் விரிஞ்சன் முன்னு உயிர்எல்லாம் வெருவல்அன்னை
ஆய்ந்தவர் உள்ள போதே அவர்உள்ளார் அறமும் உண்டால்.

உஎ. மாருதிக் கில்லை அன்றே மங்கைகின் வரத்தி னுலே
ஆருயிர் நீங்கில் நின்பால் கற்புக்கும் அழிவுண் டாமால்
சீரிய தொன்றி தன்றே திசைமுகன் படையின் செய்கை
பேரும்இப்பொழுதே தேவர் எண்ணமும் பிழைப்ப துண்டோ.

தேவரைக் கண்டேன் பைம்பொன் செங்கரம் சிரத்தின் ஏற்றி
மூவரைக் கண்டால் என்ன இருவரை முறையில் நோக்கி
ஆவலில் பெரிது நின்றார் அயர்த்திலர் அஞ்சல் அன்னை
கூவலில் புக்கு வேலை கோட்படும் என்று கொள்ளேல். 8789

உக. மங்கலம் நீங்கி னுரை ஆருயிர் வாங்கி னுரை
நங்கைஇக் கடவுள் மானம் தாங்குதல் நவையிற் றன்றால்
இங்கிவை அளவை யாக இடர்க்கடல் கடத்தி என்றன்
சங்கையாள் ஆய நங்கை சிறிதுயிர் தரிப்ப தானுள்.

உம. அன்னைநீ உரைத்த தொன்றும் அழிந்தில ஆதலாலே
உன்னையே தெய்வமாக இத்தனை காலம் உய்ந்தேன்
இன்னம் இவ்இரவு முற்றும் இருக்கின்றேன் இறத்தல்என்பால்
முன்னமே முடிந்த தன்றே என்றனள் முளரி நீத்தாள். 8791

நாண்எலாம்துறந்தேன் இல்லின்நன் மையும்நல்லோர்க்கெய்தும்
பூண்எலாம் ஆகின்ற குணங்களும் பொதுவிற் போகக்
காணைலாம் என்னும் ஆசை கருதிஎன் ஆவி காத்தேன்
ஏண்இலா உடலம் நீக்க எளிதெனக் கென்று சொன்னாள்.

தையலை இராமன் மேனித் தைத்தவாள் தடங்க ணுளைக்
கையினைப் பற்றிக் கொண்டு விமானத்தைக் கடாவு கின்றார்
மெய்உயிர் உலகத் தாக விதியையும் வலிந்து விண்மேல்
பொய்உடல் கொண்டு செல்லும் நமனுடைத் தூதர் போன்றார்

உஉ-வது, சீதைகளங் காண்படலம் – முற்றிற்று.
ஆகப்படலம் 114-க்கு இருவிருத்தம் 8793

உங-வது, மருந்துப் படலம்.

போயினள் ஆண்டை இப்பால் புகுந்துளன் புலவர் கோமான்
ஏயின கருமம் நோக்கி ஏகிய இலங்கை வேந்தன்
மேயின உணவு கொண்டு மீண்டவை உறையுள் விட்ட
தாயின தாகத் தான்வந் தமர்ப்பெருங் களத்தன் ஆனான். 8794

நோக்கினுன் கண்டான்பண்டிவ் உலகினைப்படைக்கநோற்றுன்
வாக்கினுன் மாண்டார் என்ன வானர வீரர் முற்றும்
தாக்கினுர் எல்லாம் பட்ட தன்மைஅவ் இடத்தைத் தானே
தேக்கினுன் என்ன நின்று தியங்கினுன் உணர்வு தீர்ந்தான்.

விளைந்தவா றுணர்கி லாதான் வீங்கினுன் வெதும்பினுன்போய்
உளைந்துளைந் துயிர்த்தான் ஆவி உண்டிலை என்ன ஒய்ந்தான்
வளைந்தபேய்க் கணமும் நாயும் நரிகளும் இரிய வந்தான்
இளங்கிளை யோன்மேல்சாய்ந்த இராமனை இடையில்கண்டான்

என்பென்பதி யாக்கை என்ப துயிர்என்ப திவைகள் எல்லாம்
பின்பென்ப அல்ல வேனும் தன்னுடை நிலையில் பேரா
முன்பென்ப உளவென் றுலும் முழுவதும் தெரிந்த வாற்றல்
அன்பென்ப தொன்றின் தன்மை அமரரும் அறிந்த தன்றே

சு. ஆயினும் இவருக் கில்லை அறிவெனும் இதனுல் ஆவி
போயின தில்லை வாயால் புலம்பலன் பொருமிப் பொங்கித்
தீயினும் எரியும் நெஞ்சன் வெருவலன் தெரிய நோக்கி
நாயகன் மேனிக் கில்லை வடுஎன நடுக்கம் தீர்ந்தான். 8798

சூ. அந்தணன் படையால் வந்த தென்பதும் ஆற்றல் சான்ற
இந்திர சித்தே எய்தான் என்பதும் இனையோற் காக
நொந்தனன் இராமன் என்னும் நுண்மையுநொய்தில்நோக்கிச்
சிந்தையின் எண்ணி எண்ணிச் செய்வதோர் உபாயந்தேர்வான்

எ. உள்ளுறு துன்பம் ஊன்ற ஊற்றனன் உறக்கம் ஒன்றே
தெள்ளிதின் உணர்ந்த பின்னைச் சிந்தனை தெரிவன் அன்றுல்
வள்ளலோ தம்பி மாளில் வாழ்கின்றுன் அல்லன் வஞ்சக்
கள்வரோ வென்றுர் என்ன மழைஎனக் கலுழுங் கண்ணன்.

பாசம்போய் இற்றுல் போலப்பதுமத்தோன் படையும் இன்னே
நாசம்போய் எய்தும் நம்பி தம்பிக்கு நடுக்க மில்லை
வீசும்போர்க் களத்து வீய்ந்த வீரரும் மீள்வர் வெய்ய
நீசன்போர் வெல்வ துண்டோ என்றனன் நெறியின் 1நின்றுன்.

கூ. உணர்வதன் முன்னர் இன்னே உற்றுழி உணர்தற் கொத்தி
துணைவர்கள் துஞ்சல் இல்லார் உளர்எனில் துருவித் தேடிக்
கொணர்குவன் விரைவின் என்னைக் கொள்ளிஞன் றகைகொண்டான்
புணரியின் உதிரவெள்ளத் தொருதனி விரைவில் போனுன்.

---

1 [பிரதி] நின்றார்.

மை. வாய்மடித் திரண்டு கையும் முறுக்கித்தன் வயிரச் செங்கண்
தீயுகக் கனகக் குன்றில் திரண்டதோள் மலையைத் தீண்ட
ஆயிரகோடி யாணைப் பெரும்பிணைத் தமளி மேலான்
காய்சினத் தனுமன் என்னும் கடல்கடந் தானைக் கண்டான்.

மக. கண்டுதன் கண்களூடு மழைஎனக் கலுழி சோர
உண்டுயிர் என்ன உன்னி உடல்கணை ஒன்றொன் றுக
விண்டநீர்ப் புண்ணின் நின்று மெல்லெனக் கையால் வாங்கி
கொண்டல்நீர் முகந்து வீரன் முகத்தினைக் குளிரச் செய்தான்.

மஉ. உயிர்ப்புமுன் உதித்த பின்னர் உரோமங்கள் சிலிர்க்கஊடு
வியர்ப்புள வாகக் கண்கள் விழித்தன மேனி மெல்லப்
பெயர்த்துவாய் புனல்வந் தூற விக்கலும் பிறந்த வாக
அயர்த்திலன் இராமன் நாமம் வாழ்த்திலன் அமரர்ஆர்த்தார்.

மங. அழுகையோ டுவகை உற்ற வீடணன் ஆர்வங் கூரத்
தழுவினன் அவனைத் தானும் அன்பொடு தழுவித் தக்கோய்
வழுவிலன் அன்றே வள்ளல் என்றனன் வலியன் என்றன்
தொழுதனன்உலகம்மூன்றும்தலையின்மேல்கொள்ளும் தோளான்

மச. அன்புதன் தம்பி மேலாய் அறிவினை மயக்க ஐயன்
துன்பினன் துயில ஞானன் உணர்வினைத் தொடர்ந்த பின்னர்
என்புருந் தெய்தும் என்ப தறிகிலன் என்ற லோடும்
தன்பெருந் தன்மைக் கொத்த சாம்பன்எத் தகையன்என்றான்.

மடு. அறிந்திலன் அவனை யாண்டுங் கண்டிலன் ஆவி யாக்கை
பிறிந்திலதுள தென்றொன் றும்தெரிந்திலன் பெயர்ந்தேன்என்று
செறிந்ததார் நிருதர் வேந்தன் உரைசெயக் காவின் தோன்றல்
இறுந்திறன் அவனுக் கில்லை நாடுதும் ஏகி என்றான். 8808

அன்னவன் தன்னைக் கண்டால் ஆணையே அரக்கர்க் கெல்லாம்
மன்னவ நம்மை எல்லாம் வாழ்விக்கும் உபாயம் வல்லன்
என்னலும் உய்ந்தோம் ஐய ஏதுதும் விரைவின் என்ன
மின்னிற ஒளியில் சென்றார் சாம்பனை விரைவில் கண்டார்.

மஎ. எரிகின்ற மூப்பி னாலும் ஏவுண்ட புண்ணி னாலும்
அரிகின்ற துன்பத் தாலும் ஆருயிர்ப் படங்கி யாதும்
தெரிகின்ற தில்லை மம்மர்ச் சிந்தையன் எனினும் வீரர்
வருகின்ற சுவட்டை ஓர்ந்தான் செவிகளால்வயிரத்தோளான்.

(இ). அரக்கனை என்னை ஆளும் அண்ணலோ அனுமன் தானை
இரக்கமுற் றருள வந்த தேவரோ முனிவ ரேயோ
வரக்கட வார்கள் எல்லா மாற்றலர் மலிந்து போனார்
புரக்கஉள் ளாரே என்னக் கருதினன் பொருமல் தீர்ந்தான்.

(கூ). வந்தயல் நின்று குன்றின் வார்ந்துவீழ் அருவி மானச்
சிந்திய கண்ணீர் எங்கும் சிந்துவார் தம்மை நோக்கி
அந்தமில் குணத்தீர் யாவர் அணுகினீர் என்ற ருன் ஐய
உய்ந்தனம் உய்ந்தோம்என்ற வீடணன்உரையைக்கேட்டான்.

(எ). மற்றயல் நின்றார் யாவர் என்னமா ருதியும் வாழிக்
கொற்றவ அறுமன் நின்றேன் தொழுதனன் என்று கூற
இற்றனம் ஐய எல்லோம் எழுந்தன எழுந்தோம் என்றென்
றுற்றபேர் உவகை யாலே ஓங்கினன் ஊற்ற மிக்கான். 8813

விரிஞ்சன்தன் படைஎன் ரூலும் வேதத்தின் வேதம் அன்ன
அரிந்தமன் தன்னை ஒன்றும் ஆற்றல தென்னும் ஆற்றல்
தெரிந்தனன் முன்னேஎன்னுல் செய்ததென்தெரித்திஎன்ற ருன்
பெருந்தகை துன்ப வெள்ளத் துயில்உளான் பெருமஎன்ற ருன்.

அன்னவன் தன்னைக் கண்டால் ஆற்றுமோ ஆக்கை வேறே
இன்உயிர் ஒன்றே மூலத் திருவரும் ஒருவ ரேயால்
இன்னது கிடக்கத் தாழின் இனிஇலை இமைப்பின் முன்னம்
பொன்இயல் வயிரத்தோளாய் மருந்துபோய்க் கொணர்தி என்ருன். 8815

(உசு). எழுபது வெள்ளத் தாரும் இராமனும் இளைய கோவும்
முழுவதிவ் உலகம் மூன்றும் நல்லற மூர்த்தி தானும்
வழுவிலா மறையும் உன்னுல் வாழ்ந்தன வாகும் மைந்த
பொழுதிறை தாழா தென்சொல் தேறுதி கடிது போதி. 8816

*பின்புளதிக் கடல்என்னப் பெயர்ந்ததற்பின் யோசனைகள் பேசாநின்ற
ஒன்பதினு யிரங்கடந்தால் இமையமீம் என்னும் குலவரையை உறுதிஉற்ருல்
தன்பெருமை ஓர்இரண்டா யிரம்உளயோ சனையதுபின் தவிரப்போனல்
முன்புளஓ சனைஎல்லாம் முற்றினைபொற் கூடம்சென் றுறுதிமுன்ப. 8817

அம்மலைக்கும் ஒன்பதினு யிரம்உளவாம் யோசனையில் நிடதம்என்னும்
செம்மலைஅம் மலைக்கும்அள வத்தனையே அதுகடந்தால் சென்றுகாண்டி
எம்மலைக்கும் அரசான வடமலையை அம்மலைபினைதகலம் எண்ணில்
மொய்ம்மலைய திரள்தோளாய் முப்பத்தீ ராயிரம்யோ சனையின்மூற்றும்.

மேருவினைக் கடந்தப்பால் ஒன்பதினு யிரம்உளஒ சீனையை விட்டால்
கேர்அணுகும் நீலகிரி தான்இரண்டா யிரமூளஒ சீனையில் நிற்கும்
மாருதிமற் றதற்கப்பால் யோசனைநா லாயிரத்து மருந்து வைகும்
கார்வரையைக் காணுதிமற் றதுகாணில் இத்துயர்க்குக் கரையுங் காண்டி.

மாண்டாரை உய்விக்கும் மருந்தொன்றும் உடல்வேறு வகிர்க ளாகக்
கீண்டாலும்பொருந்துவிப்ப தொருமருந்தும் படைக்கலங்கள்கிளப்பதொன்
மீண்டேயும் தம்உருவை அருள்வதொரு மெய்மருந்தும் உளது வீர [றும்
ஆண்டேகிக்கொணர்கினை அடையாளத்தொடுமுரைத்தான் அறிவுமிக்கான்

இன்னமருந் தொருநான்கும் பயோததியை கலக்கியஞான் றெழுந்ததேவர்
உன்னிஅமைத் தார்மறைக்கும் எட்டாத பரஞ்சுடர்இவ் உலகம்யாவும்
தன்இருதாள்உள் அடக்கிப்பொலிபோழ்தில் யான்மூரசம்சாற்றும்அன்னாள்
அன்னதுகண்டுரைத்தலும்தொல்முனிவர் அதன் திறம்ஒக்க அறிவித்தாரான்.

இம்மருந்து காத்துறையும் தெய்வங்கள் எண்ணிலவால் இரங்காயார்க்கும்
நெய்மருங்கு படராகில்லா நெடுநேமிப் படையும்அவற் றுடனே நிற்கும்
பொய்மருங்கும்இல்லாதார் புரிகின்றகாரியத்தின்பொதுமைநோக்கிக் [ருன்.
கைமருந்துதொடர்ந்துன்னைக் காயாவாம் அப்புறம்போய்க் காக்கும்என்

ஈங்கிது பணியாகில் இறந்தாரும்பிறந்தாரேஎங்கோற்கியாதும்
தீங்கிடையூறெய்காமல்தெருட்டுதிர்போய் எனச்சொல்லியவரைத்தீர்ந்தான்
ஓங்கினன்வான் நெடுமுகட்டை உற்றனன்பொற் றேளிரண்டும் திசையோ
[டொப்ப
வீங்கினஆ காசத்தை விழுங்கினனே எனவளர்ந்தான் வேதம் போல்வான்.

கோளோடு தாரகைகள்கோத் தமைந்த மணியாரக் கோவை போன்ற
தோளோடு தோள்அகலம் ஆயிரம்யோ சீனைஅகன்ற சொல்லஒண்ணாத்
தாளோடு தாள்பெயர்க்க இடம்இலதா கியஇலங்கை தடக்கை வீசி
நீளோடத் திசைபோதா வீசைத்தெழுவான் உருவத்தின் நிலைஈ தம்மா.

கூஉ. வால்விசைத்துக் கைநிமிர்த்து வாயினையும் சிறிதகல மடித்துமானக்
கால்கிலத்தின் இடைஊன்றி ஒருமித்துக் குழுத்தினையும் சுருக்கித் தூண்டித்
தோல்மயிர்க்கொந் தளம்சிலிர்ப்ப விசைத்தெழுந்தான் அவ்இலங்கை க
துளங்கிச் சூழ்ந்த
வேலையில் புக்கழுந்தியதோர் மரக்கலம்போல்கிரிந்துலையவிசையதோளான்

கிழிந்தனமா மழைக்குலங்கள் கீண்டனகீண் டகல்வேலைகிழக்கும்மேற்கும்
பொழிந்தனபின் தொடர்ந்தெழுந்த பொருப்பினமும் தருக்குலமும் பிறவும்
அழிந்தனவா னவர்நகரம் ஆகாசத்திடைவனபோல் அசனிஎன்ன[பொங்கி
விழுந்தனநீர்க் கடல்அழுந்த வேறினமேல்கீறினபோய்த்திசைகள்எல்லாம்.

கடல்முன்னேநிமிர்ந்தோடக்கால்பின்னேதொடர்ந்தோடக்கடிதில்செல்வான்
உடல்முன்னேசெல்லும்உள்ளம்கடைக்குழையாய்வான்செல்வான்உருவை
[நோக்கி
அடல்முன்னே துடங்கியநான் ஆழ்கடல்சூழ்இலங்கைஎனும்அரக்கர்வாழும்
திடர்முன்னீர் இடைப்படுத்துப் பறித்தனன்கம் துயர்என்றார்தேவர்எல்லாம்.

பாய்ந்தனன் அப்பொழுதத்தே பருவரைகள் எனைப்பலவும் வடபாகத்துச்
சாய்ந்தனபேர் உடற்பிறந்த சண்டமா ருதம்விசையில் தாதைசால
ஓய்ந்தனன்என் றுரைசெய்ய விசும்பூடு படர்கின்றான் உருவே கத்தால்
காய்ந்தனவே லோகள்மேகங் கரிந்தனவெங் தெரிந்தபெருங் கானம்எல்லாம்.

கசு. மேகத்தின் பதங்கடந்து வெங்கதிரும் தண்கதிரும் விரகிற்செல்லும்
மாகத்தின் நெறிக்கப்பால் வானமீன் குலம்வழங்கும் வரைப்பும் நீங்கிப்
போகத்தின் நெறிகடந்தோர் புகல்இடங்கள் பிற்படப்போய்ப் பூவின்வந்த
ஏகத்தம் தணன்இருக்கை இனிச்சேய்த்தன் றும்என்ன எழுந்துசென்றான்.

கஎ. வானகாட் டுறைகின்றார் வயக்கலுழன் வல்விசையான்மாயன்வைகும்
தானகாட் டெழுகின்றான் என்றுரைத்தார் சிலர்சிலர்கள்விரிஞ்சன்தான்தன்
ஏனகாட் டெழுகின்றான் என்றுரைத்தார் சிலர்சிலர்கள் ஈசன்அல்லால்
போனகாட் டிடைபோக வல்லரோ இவன்முக்கண் புனிதன் என்றார்.

வேண்டுருவங் கொண்டெழுந்து விளையாடு கின்றான்மெய் வேதநான்கும்
தீண்டுருவன் அல்லனேல் திருமாலே இவன்என்றான் தெரிய நோக்கிக்
காண்டிடுமுன்னினைப்பதன்முன் கட்புலமும்கடந்தகலும் இன்னம்காண்மின்
மீண்டுவரும் தரம்அல்லன் வீட்டுலகம் புகும்என்றார் மென்மேல் உள்ளார்.

கக. உருவென்றார் சிலர்சிலவர் ஒளிஎன்றார் ஒளிஎன்ன ஒளிருமேலும்
அருவென்றார் சிலர்சிலவர் அண்டத்துக் கப்புறம்நின் றுலகம் காக்கும்
கருவென்றார் சிலர்சிலவர் காற்றென்றார் அன்றயில் கடலைத் தாவிச்
செருவென்று னிலைஒருவர் தெரிகிலர்கள் உலகனைத்தும் தெரியும் தேவர்.

சo. வாசகாண் மலரவன்தன் உலகளவும் நிமிர்ந்தனமேல் வான மான
காசமா யினதெல்லாம் கரந்தனன துருவிடையே கனகத் தோள்கள்
வீசவான் முகடுரிஞ்ச விசைத்தெழுவான் உடல்பிறந்த மூழக்கம் விம்ம
ஆசைகா வலர்தலைகள் பொதிர்எறிந்த இடைபிளந்த தண்டகோளம்.

*தொடுத்தநாண் மாலிவானோர் முனிவரர் தொல்லை நல்லோர்
அடுத்தநான் மறைகள் ஓதி வாழ்த்தலால் அவுணர் வேந்தன்
கொடுத்தநாள் அளந்துகொண்ட குறளனூர் குறிய பாதம்
எடுத்தநாள் ஒத்ததண்ணல் எழுந்தநாள் உலகுக் கெல்லாம்.

தேவரும் முனிவர்தாமும் சித்தரும் தெரிவை மாரும்
மூவகை உலகுளோரும் உவகையால் தொடர்ந்து மொய்த்தார்
தூவின மணியும் சாந்தும் சுண்ணமு மணியும் தொத்தப்
பூவுடை அமரர்தெய்வத் தருவென விசும்பில் போனான். 8835

இமையமால் வரையையுற்றான் அங்குள இமைப்பி லோரும்
கமையுடை முனிவர்தாமும் தன்நெறி கலந்தோர் எல்லாம்
அமைகனின் கருமம்என்று வாழ்த்தினர் அதனுக் கப்பால்
உமைஒரு பாகன்வைகும் கயிலைகண் டுவகை உற்றான். 8836

சச. வடகுண திசையில்தோன் றும்மழுவலான் ஆண்டுவைகும்
தடவரை அதனை நோக்கித் தாமரைச் செங்கை கூப்பிப்
படர்குவான் தன்னை அன்பால் பரமனும் விசும்பில் பார்த்தான்
தடமுலை உமைக்குக் காட்டி வாயுவின் தனையன் என்றான்.

சடு. என்இவன் எழுந்த தன்மை என்றுல கின்றுள் கேட்ப
மன்னவன் இராமன் தூதன் மருந்தின்மேல் வந்தான் வஞ்சர்
தென்னகர் இலங்கை தீமை தீர்வது திண்ணம் சேர்ந்து
நன்னுதல் நாமும் வெம்போர் காணுதும் நாளை என்றான்.

சசு. நாமயோ சனைகள் சொன்ன ஆயிர நடுவு நீங்கி
ஏமகூ டத்தின் உம்பர் எய்தினன் இறுதி இல்லாக்
காமமே நுகரும் செல்வக் கடவுளர் ஈட்டம் கண்டான்
நேமியின் விசையில் செல்வான் நிடதத்தின் நெற்றி யுற்றான்.

சஎ. எண்ணுக்கும் அளவிலாத அறிவினே டிரைத்து நோக்கும்
கண்ணுக்கும் கருதும் தெய்வ மனத்துக்குங் கடியன் ஆனான்
மண்ணுக்கும் திசைகள் வைத்தவரம்புக்கும் மலரோன் வைகும்
விண்ணுக்கும் அளவை யான மேருவின் மீது சென்றான். 8840

யாவது நிலைமைத் தன்மை இன்னதென் றுமையா நாட்டத்
தேவரும் தெரிக்க லாத வடமலைக் கும்பர்ச் சென்றான்
நாவலம் பெருந்தீ வென்னும் நளிர்கடல் வளாக வைப்பில்
காவல்மூன் றுலகும் மோதும் கடவுள்மா மரத்தைக் கண்டான்.

அன்னமா மலையின் உம்பர் உலகெலாம் அமைத்த அண்ணல்
நன்னகர் அதனை நோக்கி அதன்நடு நாப்பண் ஆய
பொன்மலர்ப் பீடந்தன்மேல் நான்முகன் பொலிந்துதோன் றும்
தன்மையும் கண்டு கையால் வணங்கினன் தருமம் போல்வான்.

நும். தருவனம் ஒன்றி வானோர் தலைத்தலை மயங்கித் தாழ்ந்து
பொருவரு முனிவர் வேதம் புகழ்ந்துரை ஓதை பொங்க
மருவிரி துளவ மோலி மாதிலக் கிழத்தி யோடும்
திருவொடும் இருந்தமூலத் தேவையும் வணக்கம் செய்தான்.

நுக. ஆயதன் வடகீழ் பாகத் தாயிரம் அருக்கர்க் கான்ற
காய்கதிர் பரப்பி ஐந்து கதிர்முகக் கமலம் காட்டித்
தூயபே ருலக மூன்றும் தூவிய மலரில் சூழ்ந்த
சேயிழை பாகத் தெண்தோள் ஒருவனே வணக்கம் செய்தார்.

நுஉ. சந்திரன் அனைய கொற்றத் தனிக்குடை தலைமேல் ஆகச்
சுந்தர மகளிர் அங்கைச் சாமரை தென்றல் தூவ
அந்தர வான நாடர் அடிதொழு முரசம் ஆர்ப்ப
இந்திரன் இருந்த தன்மை கண்டுவந் திறைஞ்சிப் போனான்.

பூவலர் அமைந்த பொற்பில் கிரணங்கள் பொலிந்து பொங்கத்
தேவர்தம் இருக்கை யான மேருவின் சிகர வைப்பின்
மூவகை உலகும் சூழ்ந்து முரட்டிசை முறையில் காக்குங்
காவலர் எண்மர் நின்ற தன்மையும் தெரியக் கண்டான். 8846

நுசு. அத்தடங் கிரியை நீங்கி அத்தலை அடைந்த அண்ணல்
உத்தர குருவை உற்றான் ஒளியவன் கதிரை ஊன்றிச்
செத்திட இருளிற் றுக வினங்கிய செயலை நோக்கி
வித்தகன் விடிந்த தென்னு முடிந்ததென் வேகம் என்றான்.

நுடு. ஆதியான் உணரா முன்னம் அருமருந் துதவி அல்லில்
பாதியின் அனைய துன்பம் ஆற்றுவான் பாவித் தேற்குச்
சோதியான் உதையஞ் செய்தால் உற்றது துணிதல் தேற்றேன்
ஏதியான் செய்வ தென்னு இடர்உற்றான் இணையி லாதான்.

காற்றிசை சுருங்கச் செல்லும் கடுமையான் கதிரின் செல்வன்
மேற்றிசை எழுவான் அல்லன் விடிந்ததும் அன்று மேரு
மாற்றினன் வடபால் தோன்றும் என்பது மறைகள் வல்லோர்
சாற்றினர் என்று துன்பம் தணிந்தனன் தவத்தின் மிக்கான்.

நுஎ. இருவரே தோன்றி என்றும் ஈறிலா ஆயுள் எய்தி
ஒருவரோ டொருவர் ஒன்றும் உயிரொடும் ஒன்றே ஆகப்
பொருவரும் இன்ப துன்பம் புண்ணியம் புரிந்தோர் வைகும்
திருஉறை கமலம் அன்ன நாட்டையும் தெரியக் கண்டான்.

நுஅ. வன்னிநாட் டியபூமோலி வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச்சேர்ந்த கண்ணனும் ஆளும்காண்இச்
சென்னிநாட் டெரியல்விரன் தியாகவி னேதன்தெய்வப்
பொன்னிநாட் டுவமைவைப்பைப் பொலன்கொளநோக்கிப்போனன். 8851

நுசு. விரியவான் மேருஎன்னும் வெற்பினும் மீது செல்லும்
பெரியவன் அயனூர் செல்வம் பெற்றவன் பிறப்பும் போந்தான்
அரியவன் உலகம் எல்லாம் அளந்த நாள் அளந்து தோன்றும்
கரியவன் என்னநின்ற நீலமால் வரையைக் கண்டான். 8852

சுய. அற்குன்றம் அலங்குசோதி அம்மலை அகலம் போனன்
பொற்குன்றம்அனையதோளான்நோக்கினுன் புலவுவ்சொன்ன
நற்குன்றம் அதனைக் கண்டான் உணர்ந்தன னுக முற்ற
என்குன்ரு தெரியும் தெய்வ மருந்தடை யாளம் என்ன. 8853

சுக. பிரிந்தனன் பாய்த லோடும் அம்மலை பாதளத்துச்
சாய்ந்தன காக்கும் தெய்வம் சலித்தன தடுத்து வந்து
காய்ந்தன நீதான் யாவன் கருத்தென்னை கழறு கென்ன
ஆய்ந்தவன் உற்றதெல்லாம் அவற்றினுக் கறியச்சொன்னன்.

கேட்டவை ஐய வேண்டிற் றியற்றிப்பின் கெடாமல் என்பால்
காட்டென உரைத்து வாழ்த்திக் கரந்தன கமலக் கண்ணன்
வாட்டலை நேமி தோன்றி மறைந்தன மண்ணின் நின்றும்
தோட்டினன் அனுமன் மற்றைக் குன்றினை வயிரத் தோளால்.

*சுஙு. இங்குநின் றின்னமா மருந்தென் றெண்ணினுல்
சிங்குமால் காலம்என் றுணருஞ் சிந்தையான்
அங்கது வேரொடும் அங்கை தாங்கினுன்
பொங்கிய விசும்பிடை கடந்து போகுவான். 8856

சுஉ. ஆயிரம் யோசனை அகன்று மீஉயர்ந்
தாயிரம் யோசனை ஆழ்ந்த அம்மலை
ஏயெனும் மாத்திரத் தொருகை ஏந்தினுன்
தாயினன் உலகெலாம் தழுவும் கீர்த்தியான். 8857

சுடு. அத்தலை அன்னவன் அனையன் ஆயினுன்
இத்தலை இருவரும் இசைய எய்தினுர்
கைத்தலத் தால்அடி வருடுங் காலையின்
உத்தமற் குற்றதை உணர்த்து வாம்அரோ. 8858

சுசு. வண்டென மடந்தையர் மனத்தை வேரொடும்
கண்டன கெழீவருங் கருணைத் தாம்எனக்
கொண்டன கொடுப்பன வரத்தைக் கோளிலாப்
புண்டரீ கத்தடம் தருமம் பூத்தென. 8859

சுஎ. நோக்கினன் கரடிகட் கரசு நோன்கழல்
ஆக்கிய நிருதனும் அழுத கண்ணினீர்
தூக்கிய தலையினர் தொழுத கையினர்
எக்கழுற் றருகிருந் திரங்கு வார்களை. 8860

சுஅ. ஏவிய காரியம் இயற்றி வந்தனை
நோவிலை வீடணை என்று நோக்கிப்பின்
தாவரும் பெரும்புகழ்ச் சாம்பன் தன்னைநீ
ஆவிவந் தணைகொல்என் றருளி னன்அரோ. 8861

சுக. ஐயன்மீர் நங்குலத் தழிவி தாதலால்
செய்வகை பிறிதிலா உயிரில் தீர்ந்தவர்
உய்கிலர் இனிச்செயல் உரிய துண்டெனில்
பொய்யிலீர் புகலுவீர் புலமை உள்ளத்தீர். 8862

எம. சீதைஎன் றெருத்தியால் உள்ளம் தீர்விலாப்
பேதைஎன் சிறுமையால் உற்ற பேதமை
யாதென உணர்த்துகேன் உலகொ டேர்வுறுக்
காதைவன் பழியொடு நிறுத்திக் காட்டினேன். 8863

எக. மாயையின் மான்என எம்பி வாய்மையன்
தூய்மையின்உணர்த்தினுன் உணர்த்தச்சொற்கொளேன்
போயின பெண்ணுரை மருது போதலால்
ஆயதிப் பழியுடை மரணம் அன்பினீர். 8864

எஉ. கண்டனன் இராவணன் தன்னைக் கண்களால்
மண்டமர் புரிந்தனன் வலியி னுருயிர்
கொண்டிலன் உறவிலாம் கொடுத்து மாளநான்
பண்டுடைத் தீவினை பயந்த பண்பினுல். 8865

எஉ. தேவர்தம் படைக்கலம் தொடுத்துத் தீயவன்
சாவது காண்மின்என் றிளவல் சாற்றவும்
ஆவதை அறிந்திலென் அவையின் நின்றமர்
மேவுதல் உறுவதோர் விதியின் வெம்மையால். 8866

எச. நின்றிலன் உடன்ஒரு படைக்கு நீதியால்
ஒன்றிய பூசனை இயற்ற உன்னினேன்
பொன்தினர் நமர்எலாம் இளவல் போயினன்
வென்றிலன் அரக்கனை விதியின் வெம்மையால். 8867

எடு. ஈண்டிவன் இருந்திவை இயம்பும் ஏழமை
வேண்டுவ தின்றினி அமரின் வீடிய
ஆண்தகை அன்பரை அமரர் நாட்டிடைக்
காண்டலே நலம்இனிக் கண்ட தில்லையால். 8868

எசு. எம்பியைத் துணைவரை இழந்து யான்இனி
வெம்புபோர் அரக்கரை முருக்கி வேர்அறுத்
தம்பினுல் இராவணன் ஆவி பாழ்படுத்
தும்பருக் குதவிமேல் உறுதல் நன்றரோ. 8869

எள. இலையவன் இறந்துபின் எவ்வம் என்னைனக்
களவறு கீர்த்திஎன் அறம்என் ஆண்மைஎன்
கிலையுறு சுற்றம்என் அரசென் கேண்மைஎன்
விலைவுதான் என்மறை விதிஎன் வேழ்விஎன். 8870

எஅ. இரக்கமும் பாழ்பட எம்பி ஈறுகண்
டரக்கரை முருக்கினின் முண்மை ஆள்வனேல்
மரக்கண்வன் கள்வனேன் வஞ்ச னேன்இனிக்
கரக்குவ தல்லதோர் கடன்உண் டாகுமோ. 8871

எக. தாதையை இழந்துபின் சடாயு இற்றபின்
காதலில் துணைவரும் மடியக் காத்துழல்
கோதறு தம்பியும் மடியக் கோளில்என்
சீதையை உவந்துளான் என்பர் சீரியோர். 8872

அம. வென்றனன் அரக்கரை வெருவி வீய்ந்தறக்
கொன்றனன் அயோத்தியை குறுகி னன்குணத்
தின்துணைத் தம்பியை இன்றி யான்உளன்
நன்றர சாளுமால் சால நன்றரோ. 8873

அக. படியின்மேற் காதலின் யாதும் பார்க்கிலன்
முடிகுவன் யான்என முடியக் கூறலும்
அடியிணை வணங்கிய சாம்பன் ஆழியாய்
நொடிகுவ துளதென நுவல்வ தாயினன். 8874

அஉ. உன்னீநீ உணர்கிலை அடிய னேன்உனை
முன்னமே அறிகுவன் மொழிதல் தீதது
என்னெனில் இமையவர் எண்ணுக் கினமாம்
பின்னரே தெரிகுதும் தெரிவில் பெற்றியோய். 8875

அங. அம்புயத் தயன்படை ஆதல் தேறினன்
உம்பியை உலப்பரும் வலத்தை ஓய்த்தது
வெம்புபோர்க் களத்திடை வீழ்த்த வென்றியால்
எம்பெரும் தலைவரின் மெய்மை எய்தலால். 8876

அச. அன்னவன் படைக்கலம் அமரர் தானவர்
தன்னையும் விடில்உயிர் குடிக்கும் தாழ்க்கிலா
துன்னைஒன் றிழைத்தில ஒழிந்து வீங்கிய
தின்னமும் உவகைவே றெண்ண வேண்டுமோ. 8877

அடு. பெருந்திறல் அனுமன்ஈண் டுணர்வு பெற்றுத்தன்
அருந்துயர் அளவிலா தரற்று வானெயான்
மருந்திறைப் பொழுதினில் கொணர்கு வாய்எனப்
பொருந்தினன் வடதிசைக் கடிது போயினன். 8878

அசு. பனிவரை கடந்தனன் பருப்ப தங்களில்
தனிஅர சின்புறம் தவிரச் சார்ந்துளான்
இனிஒரு கணத்தின்வந் தெய்தும் ஈண்டவன்
துனிவரும் துன்பம்நீ துறத்தி தொல்லையோய். 8879

அஎ. யான்அலால் எந்தையால் உலகம் ஈன்றவன்
தான்அலால் சிவன்அலால் நேமி தாங்கிய
கோன்அலால் எனைவரும் கோளி லார்களால்
வேனிலான் மேனியா மருந்து மெய்யுற. 8880

அஅ. ஆர்கலி கடைந்தநாள் அமுதின் வந்தன
கார்நிறக் கண்ணன்தன் நேமி காப்பன
மேருவின் உத்தர குருவின் மேலுளோர்
ஆரும்மற் றணுகலா அரணம் எய்தின. 8881

அக. தோன்றிய நாள்முதல் யாரும் தொட்டில
ஆன்றபேர் அமுதின்அவ் அளவின் ஆற்றல
மூன்றினை டொன்றுள உலகம் முன்னைநாள்
ஈன்றவன் இறப்பினும் உயிரை ஈயுமால். 8882

கூம. சல்லியம் அகற்றுவ தொன்று சந்துகள்
புல்லுறப் பொருத்துவ தொன்று போயின
நல்லுயிர் ஈகுவ தொன்று நன்னிறம்
தொல்லைய தாக்குவ தொன்று தொல்லையோய் 8883

கூக. வரும்அது திண்ணம்நீ வருந்தல் மாருதி
தரும்நெறி தருமமே காட்டும் தாழ்க்கிலன்
அருமைய தன்றெனு அடிவ ணங்கினன்
இருமையும் துறப்பவன் ஏம்பல் எய்தினன். 8884

கூஉ. பொன்மலை மீதுபோய் போக பூமியின்
நன்மருந் துதவும்என் றுரைத்த நல்லுரை
அன்வயம் இல்லைஎன் றயிர்க்கின் றேன்அலேன்
என்னலும் விசும்பிடை எழுந்த தீட்டொலி. 8885

கூஎ. கடல்கிளர்ந் தெழுந்துமேல் படரக் கார்வரை
இடையிடை பறிந்துவிண் ணேற வீற்றிடை
தடையில துற்றெரு சண்ட மாருதம்
வடதிசை வந்ததோர் மறுக்கம் உற்றதால். 8886

கூஏ. மீன்குலம் குலைந்துக வெயிலின் மண்டலம்
தான்குலைந் துயர்மழை தழுவித் தன்னுழை
வான்குலம் வெருக்கொள தெற்கு மண்டுவான்
தேன்குலம் கலங்கிய நறவில் சென்றவால். 8887

கூஐ. வேர்த்துள தூரொடு விசும்பை மீச்செலப்
போர்த்தன மலையொடும் வானம் போல்வன
தூர்த்தனன் வேலையைக் காவின் தோன்றலும்
ஆர்த்தனன் அணையவர் அரந்தை ஆற்றுவான். 8888

கூசு. மழைகளும் கடல்களும் மற்றும் முற்றுமண்
உழையவும் விசும்பின்மேல் ஓலிவந் தொத்துள
குழைதலின் குழீஎன கொள்கை கொண்டான்
உழையையை நிகர்த்தவன் ஆர்த்த ஓசையே. 8889

கூள. எறிதிரைப் பெருங்கடல் கடைய ஏற்றநாள்
செறிசுடர் மந்தரம் தருதி சென்றென
வெறிதுல கெனக்கொடு விசும்பின் மேல்செலும்
உறுவலிக் கலுழனே ஒத்துத் தோன்றினன். 8890

கூஅ. பூதலத் தரவொடு மலிந்து போனநாள்
ஓதிய வென்றியென் றுடற்றும் ஊற்றத்தன்
ஏதமில் இலங்கையங் கிரிகொண் டெய்திய
தாதையும் ஒத்தனன் உவமை தற்கிலான். 8891

கூக. தோன்றினன் என்பதோர் சொல்லின் முன்வந்
தூன்றினன் நிலத்தடி கடவுள் ஓங்கல்தான்
வான்தனி நின்றது வஞ்சர் ஊர்வர
என்றில ஆதலால் அனுமன் எய்தினன். 8892

ஈ, காற்றுவந் தசைத்தலும் கடவுள் நாட்டவர்
போற்றினர் விருந்துவந் திருந்த புண்ணியர்
ஏற்றமும் பெருவலி அழகொ டெய்தினர்
கூற்றினை வென்றுதம் உயிருங் கூடினர். 8893

ஈஅக. அரக்கர்கள் ஆக்கைகள் அழிவில் ஆழியில்
கரக்கலுற் றிருந்தன ஒழியக் கண்டன
மரக்கலம் முதலவும் உய்ந்து வாழ்ந்தன
குரக்கினம் உயர்ந்தது கூறல் வேண்டுமோ. 8894

ஈஅஉ. கழன்றன நெடுங்கணை கரந்த புண்கடுத்
தழன்றில குளிர்ந்தன அங்கம் செங்கண்கள்
சுழன்றில உலகெலாம் தொழுத சொங்கலில்
குழன்றபூங் குஞ்சியான் உணர்வு கூடினன். 8895

ஈஅங. யாவரும் எழுந்தனர் ஏத்த ஏழ்கடல்
தாவரும் பேரொலி செவியில் சார்தலும்
தேவர்கள் வாழ்த்தொலி கேட்ட செங்கணான்
யோகம்நீங் கினன்என இளவல் ஓங்கினன். 8896

ஈஅச. ஓங்கிய தம்பியை உயிர்வந் துள்ளுற
வீங்கிய தோள்களால் தழுவி வெந்துயர்
நீங்கினன் இராமனும் உலகில் நின்றவர்
தீங்குள தேவரும் மறுக்கம் தீர்ந்தனர். 8897

ஈஅடு. அரம்பையர் வாழ்த்தொலி அமுத வழிசை
நரம்பயர் கின்னரர் முதல்வர் நாண்உற
நிரம்பின உலகெலாம் உவகை நெய்விழா
விரும்பின முனிவரும் வேதம் பாடினர். 8898

ராoசு. வேதம்நின் ரூர்த்தன வேத வேதியர்
தாதைநின் ரூர்த்தன தருமம் ஆர்த்தன
ஓதம்நின் ரூர்த்தன ஓத வேலையில்
சீதம்நின் ரூர்த்தன தேவர் ஆர்த்தனர். 8899

ராoள. உந்தினை பின்கொலை ஒழிவில் உண்மையும்
தந்தனை நீஇது நினக்குச் சான்றெனச்
சுந்தர வில்லியைத் தொழுது சூழவந்
தந்தணன் படையும்நின் றகன்று போயதால். 8900

*ராoஅ. ஆயின காலையின் அமரர் ஆர்த்தெழத்
தாயினும் அன்பனைத் தழுவி னுன்தனி
நாயகன் பெருந்துயர் நாளும் நாம்அறத்
தூயினன் காதல்நீர் துளங்கு கண்ணினுன். 8901

*ராகூ. எழுது குங்குமத் திருவின் ஏந்துகோ
டுழுத மார்பினுன் உருகி உள்ளுறத்
தழுவி நிற்றலும் தாழ்ந்து தாள்உறத்
தொழுத மாருதிக் கினைய சொல்லினுன். 8902

ராம. முன்னில் தோன்றினோர் முறையின் நீங்கலா
தென்னில் தோன்றிய துயரின் ஈறுசேர்
மன்னில் தோன்றினும் முன்னம் மாண்டுளோம்
நின்னில் தோன்றினும் நெறியில் தோன்றினுய். 8903

ராமக. அழியுங் காற்தரும் உதவி ஐயனே
மொழியுங் காற்தரும் உயிரும் காத்தனை
பழியும் காத்துநம் பகையுங் காத்தனை
வழியுங் காத்துநம் மரபுங் காத்தனை. 8904

ராமஉ. தாழ்வும் ஈங்கிறைப் பொழுதும் தக்கதே
வாழ்வு எம்பிமேல் அன்பு மாட்டிவான்
ஏழும் வீழும்என் பகர்வ தெல்லைவாய்
ஊழி காணும்நீ உதவி னுய்அரோ. 8905

ராமங. இன்று வீகலா தெவரும் எம்மொடு
நின்று வாழுநாள் நெடிது நல்கினுய்
ஒன்றும் இன்னல்நோய் உறுகி லாதுநீ
என்றும் வாழ்த்தியால் இனிதென் எவலால். 8906

ரசி. மற்றை யோர்களும் அனுமன் வண்மையால்
பெற்ற ஆயுளார் பிறந்த காதலார்
சுற்றும் எய்தினர் தொழுது வாழ்த்தினர்க்
குற்ற வாறெலாம் உணரக் கூறினன். 8907

ரசு. உய்த்த மாமருந் துதவ ஒன்றலாப்
பொய்த்த சிந்தையார் இறுதி போக்குமால்
மொய்த்த குன்றைஅம் மூல ஊழிவாய்
வைத்து மீள்தியால் வரம்பில் ஆற்றலாய். 8908

ரகசு. என்று சாம்பன்ஆண் டியம்ப ஈதரோ.
நன்று சாலவென் றுவந்தோர் நாழிகைச்
சென்று மீள்வன்என் றெழுந்து தெய்வமாக்
குன்று தாங்கிஅக் குரிசில் போயினன். 8909

உடு-வது, மருத்துமலைப் படலம் – முற்றிற்று.
ஆகப்படலம் 115-க்கு திருவிருத்தம் 8909

உசு-வது, களியாட்டுப் படலம்

க. இன்னதித் தலையவாக இராவணன் எழுந்து பொங்கித்
தன்னையுங் கடந்து நீண்ட உவகையன் சமைந்த கீதம்
கின்னரர் முதல்வர் பாட முகத்திடைக் கிடந்த கெண்டைக்
கன்னிநன் மயில்அன் னுரை நெடுங்களி ஆட்டங் கண்டான்.

உ. அரம்பையர் வீஞ்சை மாதர் அரக்கியர் அவுணர் மாதர்
குரும்பையங் கொங்கைநாகர் கோதையர் இயக்கர் கோதில்
கரும்பினும் இனிய சொல்லார் சித்தர்தங் கன்னி மார்கள
வரம்பறு சும்மை யோர்கள் மயில்குலம் மருளவந்தார். 8911

மேனகைவிஞ் சைவாட்கண் திலோத்தமை அரம்பை மெல்லென்
தேனகு மழலை இன்சொல் உருப்பசி முதலாம் தெய்வ
வானவர் மகளிர் வந்தார் சில்லரி மழலை பம்ப
ஆனக முரசம் சங்கம் முரட்டொடும் இரட்ட ஆட. 8912

ச. தோடுண்ட சுருளும் தூண்டுங் குழைகளும் சுருளில்தோய்ந்த
ஏடுண்ட பசும்பொன் பூவும் திலகமும் இலவச் செவ்வாய்
[1]மூடுண்ட முறுவல் முத்து முள்ளுண்ட முளரிச் செங்கேழ்
காடுண்டு பரந்ததென்ன முனிந்தது கறைவெண் திங்கள். 8913

முளைக்கொழுங் கதிர்ன்கற்றை முறுவல்வெண் நிலவின் மூரி
ஒளிப்பிழம்பொழுகு பூணின் உமிழ்இள வெயிலும் ஒண்பொன்
விளக்கையும் விளக்கு மேனி மிளிர்கதிர்ப் பரப்பும் வீச
வளைத்தபே ரிருளும் கண்டோர் அறிவென மயங்குமாதோ.

1 [பிரதி] ஊடுண்ட.

கூ. நற்பெருங் கல்விச் செல்வம் நவையறு நெறியின் நண்ணி
முற்பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி முற்றிப்
பிற்பயம் உணர்தல் தேற்றாப் பேதைபால் வஞ்சன் செய்த
கற்பனை என்ன ஓடிக் கலந்தன கள்ளின் வேகம்.

எ. பலபட முறுவல் வந்து பயந்தன பனித்த மெய்வேர்
விலவிதழ் துடித்த முல்லை எயிறுவெண் நிலவை ஈன்ற
கொலைபயில் நயனவேல்கள் கொழுங்கடை சிவந்த கொற்றச்
சிலைநிகர் புருவம் தெற்றிக் குனித்தன வெளுத்த செவ்வாய்.

அ. கூந்தல்அம் பாரக்கற்றைக் கொந்தளக் காலக் கொண்டல்
ஏந்தகல் அல்குல் தேரை இகந்து போய் இறங்கி யாணர்ப்
பூந்துகி லோடும் பூசல் மேகலை சிலம்பு பூண்ட
மாந்தளிர் எய்த நொய்தின் மயங்கினர் மழலைச் சொல்லார்.

கூ. கோத்ததே கலையினோடும் துகின்மணிக் குறங்கைக் கூடக்
காத்தன கூந்தல் கற்றை உற்றஅத் தன்மை கண்டு
வேத்தவை கீழ் ளோரும் கீழ்மையே விளைத்தார் மேலாம்
சீர்த்தவர் செய்யத் தக்க கருமமே செய்தார் என்ன. 8918

ம. பாணியில் தள்ளிக் கால மாத்திரைப் படாது பட்ட
நாணியின் முறையில் கூடா தொருவழி நடையில் செல்லும்
ஆணியின் அழிந்து பாடல் நவின்றனர் அனங்க வேள்தன்
தூணியின் அடைத்த அம்பில்தொடுந்தொழில்துறந்த கண்ணார்.

மக. வங்கியம் வகுத்த கான மாறுகொண் மலைத்த தாக
சங்கைபில் பெரும்பன் உற்ற நிறத்துறை திறம்பத்தள்ளிச்
சிங்கலில் அழுதி னெடு புளியளாந் தேறல் என்ன
வெங்குரல் எடுத்த பாடல் விளித்தனர் மயக்கம் வீங்க. 8920

மஉ. ஏனைய பிறவும் கண்டார்க் கிந்திர சாலம் என்னத்
தானவை உருவில் தோன்றும் பாவனைத் தகைமை சான்ற
மானமர் நோக்கி னுரை மைந்தரைக் காட்டி வாயால்
ஆனையை விளம்பித் தேரை அபிநயந் தெரிக்க லுற்றார். 8921

மஊ. அழுகுவர் நகுவர் பாடி ஆடுவர் அயல்நின் றுரைத்
தொழுகுவர் துயில்வர் தள்ளித் தூங்குவர் துவர்வா யில்தேன்
ஒழுகுவர் ஒல்கி ஒல்கி ஒருவர்மேல் ஒருவர் புக்கு
முழுகுவர் குருதி வாட்கண் முகிழ்த்திடை மூரிபோவார். 8922

உயிர்ப்புறத் துற்றதன்மை உணர்த்தினும் உள்ளத் துள்ள
தயிர்ப்பினுல் அறிதிர் அன்றே அதுகளி யாட்ட மாகச்
செயிர்ப்பறு தெய்வச் சிந்தைத் திருமுறை முனிவர்க்கேயும்
மயிர்ப்புறந் தோறும் வந்து பொடித்தன காம வாரி. 8923

மரு. கயல்வரு காலன் கைவேல் காமவேள் கணைஎன் ரூலும்
இயல்வரு கிற்கிலாத நெடுங்கணூர் இணைமென் கொங்கை
துயல்வரு கனக நாணும் காஞ்சியும் துகிலும் வாங்கிப்
புயல்வரு கூந்தல் பாரக் கற்றையில் புனையல் உற்றூர். 8924

மசு. மாப்பிறழ் நோக்கி னூர்தம் மணிக்கடுங் குவளைவாட்கண்
சேப்புறவாய்த்த செவ்வாய்ச் செங்கிடை வெண்மை சேரக்
காப்புறழ் படைக்கைக்கள்ள நிருதர்க்கோர் இறுதி காட்டிப்
பூப்பிறழ்ந் துருவம் வேறுய் மலர்ந்ததோர் பழனம் போன்ற.

மள. முத்தன்மை மொழிய லாகா முகிழ்இள முறுவல் நல்லார்
இத்தன்மை எய்த நோக்கி அரசுவீற் றிருந்த வேலை
அத்தன்மை அரியின் சேனை ஆர்கலி ஆர்த்த ஓசை
மத்தன்மெய் மயக்கவந்து செவிதொறும் மடுத்ததன்றே. 8926

மஅ. ஆடலுங் களியின்வந்த அமலையும் அளவி லாத
பாடலும் அளவில் தெய்வப் பாணியும் பவள வாயார்
ஊடலும் கடைக்கண் நோக்கம் முதலவெவ் வுரையும் எல்லாம்
வாடன் மென்மலரே ஒத்த ஆர்ப்பொலி வருத லோடும். 8927

மக. தறிபொரு களிநல் யானை சேவகம் தள்ளி ஏங்கத்
துறுசுவற் புரவி தூங்கித் துணுக்குற அரக்கர் உட்கச்
செறிகழல் இருவர் செய்த சிலையொலி சிறந்த தன்றே
எறிகடல் கடைந்த மேல்நாள் எழுந்தபேர் ஒலிகொல் என்ன.

முத்துவாண் முறுவல் மூரல் முகத்தியர் முழுக்கண் வேலால்
குத்துவார். கூட்டம் எல்லாம் வானரக் குழுவில் தோன்ற
மத்துவார் கடலின் உள்ள மறுகுற வதனம் என்னும்
பத்துவான்மதிக்கும் அந்நாள் பகல்ஒத்த திரவும் பைய. 8929

உக. ஈதிடையாக வந்தார் அலங்கன்மேல் ஏறி னூர்போல்
ஊதினூர் வேய்கள் வண்டின் உருவினூர்உற்ற தன்மை
தீதிலார் பகைவர் என்னத் தீகின்ற மனத்தன் தெய்வப்
போதவிழ் சோலை நின்று மந்திர இருக்கை புக்கான். 8930

உச–வது, களியாட்டுப் படலம் - முற்றிற்று.

ஆகப்படலம் 116-க்கு திருவிருத்தம் 8930

உஉ.-வது, மாயா சீதைப்படலம்

க. மைந்தனும் மற்று ளோரும் மகோதரப் பெயரி னனும்
தந்திரத் தன்மை யோரும் முதியரும் தழுவத் தக்க
மந்திரர் எவரும் வந்து மருங்குறப் பரந்தார் பட்ட
தந்திரம் எழுந்த தன்மை தானவர்க் கறியச் சொன்னன், 8931

உ. இலங்கையின் நின்று மேருப் பிற்பட இமைப்பில் தாவி
வலங்கிளர் மருந்து நின்ற மலையொடுங் கொணர வல்லான்
அலங்கலந் தடந்தோள் அண்ணல் அனுமனே ஆதல் வேண்டும்
கலங்கலின் உலகுக் கெல்லாம் காரணம் கண்ட வாற்றல்.

ங. நங்கிளை உலந்த தெல்லாம் உய்ந்திட நணுகும் அன்றை
வெங்கொடுந் தீமை தன்னுல் வேலியில் இட்டி லோமேல்
இங்குள தெல்லாம் மாள்தற் கினிவரும் இடையூ றில்லைப்
பங்கயத் தண்ணல் மீளாப் படைபழு துற்ற பண்பால். 8933

ச. நீரினைக் கடக்க ஓங்கி இலங்கையாய் நின்ற குன்றைப்
பாரினைச் சுழிக்க வீசில் ஆருளர் பிழைக்கல் பாலார்
போர்இனிப் பொருவ தெங்கே போயின அனுமன் பொன்மா
மேருவைக் கொணர்ந்திவ்வூரில் இடும்எனில் விலக்கலாமோ.

முறைகெடவென்றுவேண்டின் நினைத்தகேமுடிப்பன்முன்னில்
குறையிலை குணங்கட் கென்னை போலிலா வேதங் கூறும்
இறைவர்கள் மூவர்என்ப தீதண்ணமோ எண்ணில் அந்த
அறைகழல் அனுமனோடும் முதல்வர்ஓர் நால்வர் அம்மா. 8935

ஞ. இறந்தனர் இறந்து தீர இனிஒரு பிறவி வந்து
பிறந்தன மாகில் உள்ளோம் உய்ந்தனம் பிழைக்கும் பெற்றி
மறந்திலம் எனினும் இன்னம் சனகியை மரபின் ஈய்ந்தே
அறந்தரு சிந்தை யோரை அடைக்கலம் புகுதும் ஐயா. 8936

எ. வாலியை வாளி ஒன்றுல் வானிடை வைத்து வாலி
வேலையை வென்று கும்ப கருணனை வீட்டி னானை
ஆலியின் மொக்குள் அன்ன அரக்கரோ அமரின் வெல்வார்
சூலியைப் பொருப்பி னோடும் துளக்கிய விசையத் தோளாய்.

அ. மறிகடல் குடித்து வான மண்ணெடு மறிக்க வல்ல
எறிபடை அரக்கர் எல்லாம் இறந்தனர் இலங்கை ஊரில்
சிறுவனும் நீயும் அல்லால் ஆருளர் ஒருவர் தீர்ந்தார்
வெறிதுநம் வென்றி என்றுன் மாலிமேல் விளைவ தோர்வான்.

கூ. கட்டுரை அதனைக் கேளா கண்ளரி கதுவ நோக்கி
பட்டனர் அரக்கர் என்னில் படைக்கலம் படைத்த தெல்லாம்
கெட்டன என்னில் யாக்கை கெடாதெனில் கிளிய னுனை
விட்டிட எண்ணி யோநான் பிடித்தது வேட்கை வீய 8939

மைந்தன்என் மற்றை யோர்என் அஞ்சினீர் வாழ்வு வேண்டில்
உய்ந்துநீர் போமின் நாளை ஊழிவெந் தீயின் ஓங்கிச்
சிந்தனை மனித ரோடும் குரங்கினைத் தீர்வன் என்தன்
வெந்திறல் காண்மின்என்ரூன் மகன் இவைவிளம்பல்உற்ரூன்.

உளதுநான் உணர்த்தல் பால உணர்ந்தனை கோடல் உண்டேல்
தளமலர்க் கிழவன் தந்த சரப்படை தழலில் சாத்தி
அளவில தமைய விட்ட திராமனை நீக்கி அன்ரூல்
விளைவில தனையன் மேனி தீண்டில மீண்ட தம்மா. 8941

மானவன் அல்லன் தொல்லை வானவன் அல்லன் மற்று
மேனிமிர் முளிவன் அல்லன் வீடணன் மெய்யில் சொன்ன
யானென தென்னல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன் அன்றே
தேனுறு தெரியல் மன்னு சிக்குறத் தெரிந்த தன்றே. 8942

மஉ. அனையது வேறு நிற்க அன்னது பக்தல் ஆண்மை
விளையன அன்று நின்று வீழ்ந்தவர் வீழ்க வீர
இளையது மூண்டி யான்போய் நிகும்பலை விரைவின் எய்தித்
துனியறு வேழ்வி வல்லை துடங்கினுல் முடியுந் துன்பம். 8943

மச.அன்னது நல்லதேயால் அமைதிஎன் றரக்கன் சொன்னுன்
நன்னெறி உம்பி கூற நண்ணுவான் கண்டு நண்ணி
முன்னிய வேள்வி முற்ரு வகைசெரு முயல்வன் என்ரூன்
என்னவர் எய்தா வண்ணம் இயற்றலாம் உறுதி என்ரூன்.

மரு. சானகி வடிவ மாகச் சமைத்தவள் தன்மை கண்ட
வானுயர் அனுமன் முன்னே வாளினுல் கொன்று மாற்றி
யான்நெடும் சேனையோடும் அயோத்திமேல்எழுகேன் என்னப்
போனபின் புரிவு தொன்றும் தெரிகிலர் துன்பம் பூண்பார்.

மசு. இத்தலைச் சீதை மாண்டாள் பயன்இவை இல்லைஎன்பார்
அத்தலைத் தம்பி மாரும் தாயரும் அடுத்து ளோரும்
உத்தம நகரு ளோரும் என்பதோர் அச்சம் ஊன்றப்
பொத்திய துன்பத் தோடும் செனையும் தாமும் போவார்.

எ. போகலர் என்ற போதும் அனுமனே ஆண்டு போக்கி
ஆகிய தறிந்தால் அன்றி அருந்துயர் ஆற்ற லாற்றூர்
ஏகிய கருமம் முற்றி யான்இவண் விரைவின் எய்தி
வேகவெம் படையிற் கொன்று தருகுவன் வெற்றி என்ருன்.

அன்னது புரிவை நன்றென் றரக்கனும் அருள அஞ்சொல்
பொன்உரு அமைக்கு மாயம் இயற்றுவான் மைந்தன்போனுன்
இன்னதித் தலைய வாக இராமனுக் கிரவி செம்மல்
தொன்னகர் அதனை வல்லைக் கடிகெடச் சுடுதும் என்ருன்.

அத்தொழில் புரிதல் நன்றென் றருளினன் இராமன் அண்ணல்
தத்தினன் இலங்கை மூதூர் கோபுரத் தும்பர்ச் சார்ந்தான்
பத்துடன் ஏழு சான்ற வானரக் குழுவும் பற்றி
கைத்தலத் தாலோர் கொள்ளி எடுத்ததெவ் உலகுங் காண.

*உ. எண்ணில கோடிப் பல்கவி யாவும்
மண்ணுறு காவல் திண்மதில் தாவி
வெண்ணிற மேகம் மின்னினம் வீசி
நண்ணின போலத் தொன்னகர் நாமம். 8950

உக. ஆசைகள் தோறும் அள்ளின கொள்ளிக்
காசறு தானைக் கார்க்கடல் வெள்ளம்
நாசம்இவ் வூருக் குண்டென நாளின்
வீசின வானில் மீன்விழும் என்ன. 8951

உஉ. வஞ்சனை யாளன் வாழும் இலங்கை
குஞ்சரம் அன்னுர் வீசின கொள்ளி
அஞ்சன வண்ணன் ஆழியில் ஏவும்
செஞ்சரம் என்னச் சென்றது மென்மேல். 8952

உங. கையகல் இஞ்சிக் காவல் கலங்கச்
செய்ய கொழுந்தீச் சென்று நெருங்க
ஐய நெடுங்கார் ஆழியை அம்பால்
எய்ய எரிந்தால் ஒத்த திலங்கை. 8953

உச. பரற்றுறு தொல்பழு வத்தெரி பற்ற
நிரற்றுறு பல்பற வைக்குலம் நெஞ்சில்
உறற்றின விண்ணில் ஒலித்தெழும் வண்ணம்
அரற்றி எழுந்த தடங்க இலங்கை. 8954

உடு. மூவுல கத்தவ ரும்முத லோரும்
ஏவல் வலத்தொழில் வீரன் இராமன்
தீபம் எனச்சில வாளி செலுத்தக்
கோபுரம் முற்றும் முறிந்தது குன்றின். 8955

உசு. இத்தலை இன்ன மிகழ்ந்திடு வேலை
கைத்தலை யில்கொடு காலின் எழுந்தான்
உய்த்த பெருங்கிரி மேருவின் உப்பால்
வைத்து நெடுங்கிரி மாருதி வந்தான். 8956

உள. அறையர வக்கழல் மாருதி ஆர்த்தான்
உறையர வஞ்சிறை உற்றுள தவ்வூர்
சிறையர வக்கலு முன்கொடு சீறும்
இறையர வக்குலம் ஒத்த திலங்கை. 8957

உஅ. மேல்திசை வாயிலை மேவின வெங்கண்
காற்றின் மகன்தனை வந்து கலந்தான்
மாற்றலின் மாயை வகுக்கும் வலத்தான்
கூற்றையும் வெங்குய வட்டனை கொண்டடான். 8958

உக. சானகி யாம்வகை கொண்டு சமைத்த
மானனை யாளை வடிக்குழல் பற்றி
ஊனகு வாள்ஒரு கைக்கொ டுருத்தான்
ஆனவன் இன்னன சொற்கள் அறைந்தான். 8959

உஎ. வந்திவள் காரண மாக மலைந்தீர்
எந்தை இகழ்ந்தனன் யான்இவள் ஆவி
சிந்துவன் என்று செறுத்துரை செய்தான்
அந்தமில் மாருதி அஞ்சி அயர்ந்தான். 8960

உக. கண்டவ ளேஇவள் என்பது கண்டான்
விண்டது போகநம் வாழ்வென வெந்தான்
கொண்டிடை தீர்வதோர் கோளறி கில்லான்
உண்டுயி ரோஎன நாவும் உலர்ந்தான். 8961

உஉ. யாதும் இனிச்செயல் இல்லென எண்ணி
நீதி உரைப்பது நேரென ஓராக்
கோதில் குணத்தொரு நீகுணம் மிக்காய்
மாதை வதைத்தல் வசைத்திறம் என்றான். 8962

நஙு. நான்முக னுக்கொரு நால்வரின் வந்தாய்
நூன்முக முற்றும் நுணங்க உணர்ந்தாய்
பான்முக முற்ற பெரும்பழி அன்றே
மான்முக முற்றொரு மாதை வதைத்தல். 8963

நசு. மண்குலை கின்றது வானும் நடுங்கிக்
கண்குலை கின்றது காணுதி கண்ணல்
எண்குலை நெஞ்சில் இரங்கல் துறந்தாய்
[1]பெண்கொலை செய்தல் பெரும்பழி அன்றே. 8964

நஞ. என்வய நல்கினை ஏகினை என்றல்
உன்வய மாம்உலகி யாவையும் நீயின்
அன்மயம் ஒன்றும் அறிந்திலை ஐயா
புன்மை துடங்கல் புகழ்க்கழி வன்றே. 8965

நட. எந்தை உவந்த இலங்கிழை மாணத்
தந்தனன் என்று தரும்புகழ் உண்டோ
சிந்துவன் வாளினில் என்று செயிர்த்தான்
இந்திர சித்தியல் இன்னன சொன்னான். 8966

ந஠. போமினெ டாஇவள் போயினள் போலாம்
ஆம்எனில் இன்னம் அயோத்தியை நண்ணிக்
காமினெ டாகன லாய்க்கரி யாக
வேமினெ டாஇனி மீள்கில தன்றே. 8967

ந஡. தம்பியர் தம்மொடு தாயரும் ஆயோர்
உம்பர் விலக்கிடி னும்இவர் உய்யார்
வெம்பு கடுங்கனல் வீசிடு மென்கை
அம்புகள் ஒன்றும் அறிந்திலர் அம்மா. 8968

ந஢. இப்பொழு தேகடி தெய்துவன் யான்இப்
புட்பக மானம் அதில்கொடு நின்றேன்
தப்புவ ரேஅவர் தாம்இனி என்கை
வெப்புறு வாளிக ளோடும் விரைந்தால், 8969

சஅ. ஆளுடை யாய்அரு ளாய்அரு ளாய்என்
ஏழைவ ணங்குறு சொல்லின் இரங்கான்
வாளின் எறிந்தனன் மாகடல் போலும்
நீளுறு சேனையின் ஊடு நிமிர்ந்தான். 8970

---

1 [பிரதி] பெண்குலை.

சக. தென்திசை நின்று வடாதிசை யின்கண்
பொன்திகழ் புட்பகம் மேல்கொடு போனான்
ஒன்றும் உணர்ந்திலன் மாருதி உட்கா
வென்றி நெடுங்கிரி போல விழுந்தான். 8971

சஉ. போயவன் மாறி நிகும்பலை புக்கான்
தூயவன் ஆவி தொலைந்து சுருண்டான்
ஓய்வொரு சாரி ஒருங்க உணர்ந்தான்
ஏயன பன்னினன் இன்னன சொன்னான். 8972

* அன்னமே என்னும் பெண்ணின் அருங்கலக் குலமே என்னும்
என்னமே என்னும் தெய்வம் இல்லையோ யாதும் என்னும்
சின்னமே செய்யக் கண்டும் தீவினை நெஞ்சம் பாவி
பின்னமே ஆன தில்லை என்னும்பேர் ஆற்றல் பேர்ந்தான்,

சஙி. எழுந்தவன் மேலே பாய எண்ணும்பேர் இடரில் தள்ளி
விழுந்துவெந் துயிர்ப்ப மேனி வீங்கும்போய் மெலியும் வெந்தீக்
கொழுந்துக அயிர்க்கும் யாக்கை குலைவுறும் தலையே கொண்டுற்
றழுந்தரை தன்னைப் பின்னும் இனையன உரைப்ப தானான்.

சஞ. முடிந்தது நம்தம் எண்ணம் மூவுல குக்கும் மூடி
விடிந்ததென் றிருந்தேன் மீள வெந்துயர் இருளின் வெள்ளம்
படிந்தது வினையச் செய்கை பயந்தது பாவி வாளால்
தடிந்தனன் திருவை அன்றே தவிர்ந்தது தருமம் அம்மா. 8975

பெருஞ்சிறைக் கற்பி னாளைப் பெண்ணினைக் கண்ணில்கொல்ல
இருஞ்சிறை இற்ற புட்போல் யாதும்ஒன் றியற்ற லாற்றேன்
பருஞ்சிறை அழந்து நின்றேன் எம்பிரான் தேவி பட்ட
அருஞ்சிறை மீண்ட வண்ணம் அழகிது பெரிதும் அம்மா.

சட. பாதக அரக்கன் தெய்வப் பத்தினித் தவத்து ளாளைப்
பேதையைக் குலத்தின்வந்த அறம்பிழைத் திலாளைப்பெண்ணை
சீதையைத் திருவை மீண்ட சில்லரித் தடங்கண் ணாளைக்
காதலும் கண்டு நின்ற கருமமே கருணைத் தாமால். 8977

சஅ. கல்விக்கு நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் தூதன் ஆகிச்
சொல்விக்க வந்து போந்தேன் ஆதலில் துயர்கள் செய்தேன்
வெல்விக்க வந்து நின்னை மீட்பிக்க அன்று வெய்தில்
கொல்விக்கவந்தேன் அன்றேகொடும்பழிகூட்டிக்கொண்டேன்.

சகூ. வஞ்சியை எங்கும் காணுத் துயரிடை மறந்தான் என்னச்
செஞ்சிலை உரவோன் ஓடித் திரிகின்ருன் உள்ளந் தேற
அஞ்சொலாள் இருந்தாள் கண்டேன் என்றனன் அரக்கன் கொல்லத்
துஞ்சினள் என்றும் சொல்லத் தோன்றினேன் தோற்றம் தீர்ந்தேன்.

நும. அருங்கடல் கடந்திவ் ஊரை அனல்எரி ஊட்டிவெள்ளக்
கருங்கடல் தட்டு மேருக் கடந்தொரு மருந்து காட்டிக்
குரங்கினி என்னே டொப்ப தில்லெனக் களிப்புக்கொண்டேன்
பெருங்கடல் கோட்டங் தேய்த்த தாயதென் அடிமைப் பெற்றி

நுக விண்டுநின் முக்கை சிந்திப் புல்உயிர் விட்டி லாதேன்
கொண்டுநின் முனைக் கொல்லக் கூசினேன் எதிரே கொல்லக்
கண்டுநின் றேன்மற் றின்னும் கைகளால் கனிகள் வெவ்வே
றுண்டுநின் றுய்ய வல்லேன் எளியனே ஒருவன் உள்ளேன்.

என்ன நின் றிரங்கிக் கள்வன் அயோத்திமேல் எழுவன் என்று
சொன்னசொல்உண்டுபோனசுவடுண்டுதொடர்ந்துசொல்வீன்
மன்னன்இங் குற்றதன்மை உணர்கிலன் வருவ தோரேன்
பின்னிது முடிப்பதி யாதென் றிரங்கினுன் உணர்வுபோந்தான்

நுஉ. உற்றதை உணர்த்திப்பின்னை உலகுடை ஒருவனேடும்
இற்றுறில் இற்று மாள்வன் அன்றெனில் என்னை ஏவில்
சொற்றது செய்வன் வேறோர் பிறிதில்லைத் துணிவதென்னும்
பொற்றடந்தோளோன்வீரன் பொன்னடிமருங்கில் போனுன்.

நுசு. சிங்கவே றனையவீரன் செறிகழல் பாதஞ் சோர்ந்தான்
அங்கமும் மனமுங் கண்ணும் ஆவியும் அலக்கண் உற்றுன்
பொங்கிய பொருமல்வீங்கிஉயிர்ப்பொடும் புறத்தைப் போர்ப்ப
வெங்கணீர் அருவிசிந்த மால்வரை என்னவீழ்ந்தான். 8984

நுரு. வீழ்ந்தவன் தன்னை வீரன் விளைந்தது விளம்புகென்னத்
தாழ்ந்ததன் தடக்கை பற்றி எடுக்கவும் தரிக்கி லாதான்
ஆழ்ந்தெழு துன்பத் தாளை அரக்கன்தன் அயில்கொள் வாளால்
போழ்ந்தனன் கூறாய் என்னப் புரண்டனன் பொருமுகின்ருன்

துடித்திலன் உயிர்ப்பும் இல்லை இமைத்திலன் துள்ளிக்கண்ணீர்
பொடித்திலன் யாதும் ஒன்றும் புகன்றிலன் பொருமி ஒன்றும்
வெடித்திலன் விம்மிப் பாரில் விழுந்திலன் விளிந்தான் அல்லன்
அடுத்துளான் தன்னை ஒன்றும் அறிந்திலன் அமலனேயும்.

ருள. சொற்றது கேட்ட போது துணுக்குறு உணர்வு சோர
நற்பெரு வாடை உற்ற மரங்களின் நடுக்கம் எய்தாக்
கற்பகம் அனைய வள்ளல் கருங்கழல் கமலத் தாள்மேல்
வெற்பினம் என்ன வீழ்ந்தார் வானர வீரர் எல்லாம். 8987

ருஅ. சித்திரத் தன்மை உற்ற சேவகன் உணர்வு தீர்ந்தான்
வித்தகர் வதனம் நோக்கி இளையவன் வினவப் பேசான்
பித்தரும் இறை பொருத பேரபி மானம் என்னும்
சத்திர மார்பில்தைக்க உயிரிலன் என்னச் சாய்ந்தான். 8988

ருக. நாயகன் தன்மைகண்டும் தனக்குற்ற நாணம் பார்த்தும்
ஆயின கருமம் மீள அழிவுற்ற அதனைப் பார்த்தும்
வாயொடு மனமும் கண்ணும் யாக்கையும் மறந்து சாம்பி
தாயினை இழந் தகன்றில் தம்பியும் தலத்தன் ஆனான், 8989

சுரு. தொல்லைய துணரத் தக்க வீடணன் துளக்கம் உற்றான்
எல்லையில் துன்பம் உற்ற விடைஒன்றும் தெரிக்கி லாதான்
வெல்லுமது அரிது நாசம் இவள்தன்னால் விளைந்த தென்னைக்
கொல்லவும்அடுக்கும் என்று மனத்தினோர் ஐயங் கொண்டான்.

சுக. சீதநீர் முகத்தின் அப்பிச் சேவகன் மேனி தீண்டிப்
போதம்வந் தெய்தல் பால யாவையும் புரிந்து பூம்பொற்
பாதமும் மெய்யும் கையும் பற்றினன் வருட லோடும்
வேதமும் காணு வள்ளல் விழித்தனன் உயிர்ப்புவீங்க. 8991

சுஉ. ஊற்றுவார் கண்ணி னெடும் உள்ளழிந் துற்ற தெண்ணி
ஆற்றுவான் அல்லன் ஆகி அயர்கின்றான் போலும் ஐயன்
மாற்றுவான் அல்லன் மானம் உயிருக வருந்தும் என்னத்
தேற்றுவான்தீனைந்து தம்பி இவைஇவைசெப்பல்உற்றான். 8992

சுங. முடியுநாள் தானே வந்து முற்றுநாள் துன்பம் முன்னிப்
படியுமாம் சிறியோர் தன்மை உனக்கிது பழியிற் றுமால்
குடியும்மா சுண்ட தென்னில் அறத்தொடும் உலகைக்கொன்று
கடியுமா றன்றிச்சேர்ந்து கழியுமோ கருத்தி லார்போல். 8993

சுச. தையலைத் தீணியி லாளை தவத்தியைத் தருமக் கற்பின்
தெய்வதந் தன்னை மற்றுன் தேவியைத் திருவைத் தீண்டி
வெய்யவன் கொன்றான் என்றுல் வேதனை உழப்பதெல்லாம்
உய்யவோ எளிமை தானுந் தருமத்தோ டுறவும்உண்டோ. 8994

சுரு. அரக்கர்என் அமரர்தான்என் அந்தணர் தாம்என் அந்தக்
குருக்கள்என் முனிவர்தாம்என் வேதத்தின்கொள்கைதான்என்
செருக்கினர் வலியர் ஆகி நெறிநின்றார் சிதைவர் என்றால்
இருக்கும தென்னை இம்மூன் றுலகையும் எரிம டாதே. 8995

முழுவதேழ் உலகம் இன்ன முறைமுறை செய்கை மேல்மூண்
டெழுவதென் அமரர் இன்னம் இருப்பதென் அறம்உண் டென்று
தொழுவதென் மேகவாரி சுரப்பதென் சோர்ந்து நாம்வீழ்ந்
தழுவதென் நன்று நம்தம் வில்தொழில் ஆற்றல் அம்மா. 8966

புக்கிவ்வூர் இமைப்பின் முன்னம் பொடிபடுத் தரக்கர் போன
திக்கெலாம் சுட்டு வானோர் உலகெலாம் தீத்துத் தீரத்
தக்கநாங் கைகள் நாற்றி தலீசுமந் திருந்து தாவித்
துக்கமா யுழைப்ப தெல்லாம் சிறுமையில் தோன்றும் அன்றே.

சுஅ. அங்கும்இவ் வறமே நோக்கி அரசிழந் தடவி எய்தி
மங்கையை வஞ்சன்பற்ற வரம்பழி யாது வாழ்ந்தோம்
இங்கும்இத் துன்பம் எய்தி இருத்துமேல் எளிமை நோக்கிப்
பொங்குவெந் தனீயில் பூட்டி ஆட்செயப் புகுவர்அன்றே. 8998

சுக. மன்றலங் கோதையாளை நம்எதிர் கெணர்ந்து வாளில்
கொன்றவர் தம்மைக் கொல்லும் கோளிலர் நாணம் கூரப்
பொன்றினர் என்பர் ஆவி போக்கினுல் பொதுமைபார்க்கின்
அன்றிது தருமம் என்னீர் அயர்கின்றீர் அறிவிலார்போல். 8999

எம. அனீயவன் அன்னகூற அருக்கன்சேய் அயர்கின் றுன்ஓர்
கனவுகண் டனனே என்னக் கதும்என எழுந்து காணும்
வினீயினி உண்டோ வல்லே விளக்கின்வீழ் விட்டில் என்ன
மனீயுறை அரக்கர் மார்பில் குதிக்கும்நாம் வம்மின்என்றான்.

எக. இலங்கையை இடந்துவெங் கண்இராக்கதர்என்கின்றுரைப்
பொலங்குழை மகளிர் ரோடும் பால்நுகர் புதல்வ ரோடும்
குலங்களோடடங்கக்கொன் றுகொடுந்தொழில்குறித்துநம்மேல்
விலங்குவர் என்னில் தேவர் விண்ணையும் மண்ணில் வீழ்த்தும்.

எஉ. அறங்கெடச் செய்தும்என்றே அமைந்தனம் ஆகின்ஐய
புறங்கிடந்தூளப்ப தென்இப் பொழுதிறை புவனம் மூன்றும்
கறங்கெனத் திரிந்து தேவர் குலங்களைக் கட்டும் என்னு
மறங்கிளர் வயிரத் தேளான் இலங்கைமேல் வாவல் உற்றான்.

எங. மற்றைய வீரர் எல்லாம் மன்னனின் முன்னம் தாவி
எற்றுதும் அர்க்கர் தம்மை எயிலொடும் எடுத்தென் றேக
உற்றனர் உறுத லோடும் உணர்த்துவ துளதென் றுன்னுச்
சொற்றனன் அனுமன் தீயோன் அயோத்திமேல்போன சூட்சி.

எச. தாயரும் தம்பி மாரும் தவம்புரிந் தோரும் சாரப்
போயினன் என்ற மாற்றஞ் செவித்துளே புகுத லோடும்
மேயின வடுவின் நின்ற வேதனைக் கிடையே வெந்த
தீயிடை தணிந்த தென்னச் சீதைபால் துயரம் தீர்ந்தான். 9004

எஙு. அழுந்திய பாலின் வெள்ளத் தாழிநின் றனந்தர் நீங்கி
எழுந்தனன் என்னத் துன்பக் கடலில்நின் றேறி ஆறுக்
கொழுந்துறு கோபத் தீயி னுடுமுன் மனத்தைக் கூட
உழுந்துருள் போதுந் தாழா விரைவினுன் மறுக்கம் உற்றான்.

எசு. திரும்இச் சீதை யோடும் என்கில தன்றென் தீமை
வேரொடும் முடிப்ப தாக விளைந்தது வேறும் இன்னம்
யாரொடும் தொடரும் என்ப தறிகிலேன் இதனை ஐய
போரிட அவதி உண்டோ எம்பியர் பிழைக்கின் றாரோ. 9006

எஎ. நினைவதன்முன்பு செல்லும் மானத்துள் நெடிதுபோனுன்
வினையொரு கணத்தின்முற்றி மீள்கின்றான் வினையேன் வந்த
மனைபொடி பட்ட தங்கு மாண்டன தாரம் ஈண்டும்
எனையன துடங்கும் என்ப துணர்கிலேன் இறப்புங் காணேன்.

எஅ. தாதைக்கும் சடாயு வான தந்தைக்கும் தமியள் ஆன
சீதைக்கும் கூற்றங் காட்டித் தீர்ந்தில தொருவன் தீமை
பேதைப்பெண் பிறந்து பெற்ற தாயர்க்கும் பிழைப்பில் லாத
காதல்தம் பிப்பர்க்கும் ஊர்க்கும் நாட்டுக்குங் காட்டிற் றன்றே.

எக. உற்றதொன் றுணர்கிலாதார் அறிந்துவந் துருத்தாரேனும்
வெற்றிவெம் பாசம் வீசி விசித்தவன் கொன்று வீழ்ந்தால்
மற்றைவெம் புள்ளின் வேந்தன் வருகிலன் மருந்து நல்கக்
கொற்றமா ருதியங் கில்லை ஆருயிர் கொடுக்கற் பாலார். 9009

அம. மாகவான் நகரஞ் செல்ல வல்விசை வயிரத் தோளாய்
ஏகுவான் உபாயம் உண்டேல் இயம்புதி நின்ற தெல்லாம்
சாகமற் றிலங்கைப் போரும் தவிர்கஅச் சழக்கன் கண்கள்
காகம்உண் டதற்பின்மீண்டு முடிப்பென்என் கருத்தை என்றான்.

அக. அவ்விடத் திளவல் ஐய பரதனீ அமரின் வெல்ல
எவ்விடற் குரியான் போன இந்திர சித்தே என்று
தெவ்விடக் கிமைப்பின் மும்மை உலகமும் தீய்ந்த ருதே
வெவ்விடர்க் கடலின் வைகல் கேள்என விளம்பல் உற்ருன்.

அஉ. தீக்கொண்ட வஞ்சன் வீசத் திசைமுகன் பாசம்தீண்ட
வீக்குண்டு வீழ யானே பரதனும் வெய்ய கூற்றைக்
கூய்க்கொண்டு குத்துண்டன்னன் குலத்தொடு நிலத்தன் ஆதல்
போய்க்கண்டு கோடி அன்றே என்றனன் புழுங்கு கின்ருன்.

அங. அக்கணத் தனுமன் நின்ருன் ஐயஎன் தோளின் ஆகக்
கைத்துணைத் தலத்தே ஆக ஏறுதிர் காற்றுந் தாழா
திக்கணத் தியோத்தி மூதூர் எய்துவன் இடம்உண்டென்னில்
திக்கணத்தினினும்செல்வன் யானேபோய்ப் பகையும்தீர்வான்.

எழுபிதுவெள்ளத்தோடும்இலங்கையைஇடந்தென் தோள்மேல்
தழுவுற வைத்தின்றேகென் றுரைத்தியேல் சமைவன்தக்கோய்
பொழுதிறை தாழ்ப்ப தென்னே புட்பகம் போசா முன்னம்
குழுவொடுங் கொண்டுதோள்மேல் கொணர்கெனில் குதிப்பன் கூற்றின்.

அரு. கொல்லவந் தானே நீதிகூறினன் விலக்கிக் கொள்வான்
சொல்லவும் சொல்லி நின்றேன் கொன்றபின் துன்பம்என்னே
வெல்லவெந்தரையில்வீழ்வுற் றுணர்ந்திலன்விரைந்துபோனன்
இல்லைஎன்றுளதேல் தீயோன்பிழைக்குமோ இழுக்கம்உற்றேன்.

அசு. மனத்தின்முன் செல்லும் மானம் போவது வழிய தாக
நினைப்பின்முன் அயோத்திபுக்கு வருநெறி பார்த்து நிற்பன்
இனிச்சில தாழ்ப்ப தென்னே ஏறுதிர் இரண்டு தோளும்
புனத்துழாய் மாலை மார்பீர் புட்பகம் போதல் முன்னம். 9016

அள. ஏறுதிர் என்ன வீரர் எழுதலும் இறைஞ்சி ஈண்டுக்
கூறுவ துளது துன்பம் கோள்உறக் குலுங்கி உள்ளம்
தேறுதல் அருமை செய்கை மறந்தனன் திகைத்து நின்றேன்
ஆறினன் இதனை ஐயா மாயம்என் றயிர்க்கின் றேனுல். 9017

அஅ. பத்தினி தன்னைத் தீண்டிப் பாதகன் கொன்றபோது
முத்திறத் துலகும் வெந்து சாம்பராய் முற்றும் அன்றே
அத்திற மான தேனும் அயோத்திமேல் போன வார்த்தை
சித்திரம் இதனை எல்லாம் தெரிக்கலாம் சிறிது போழ்தில்.

இமையிடைப் பொழுதின் யான்போய் ஏந்திழை இருக்கை எய்தி
அமைவுற நோக்கி உற்ற தறிந்துவந் தறைந்த பின்னர்ச்
சமைவது செய்வ தென்று வீடணன் விளம்பத் தக்க
தமைகளன் றிராமன் சொன்னான் அந்தரத் தவனும் போனான்.

வண்டின துருவம்கொண்டான் வானவன் மனத்தில் போனான்
தண்டலை இருக்கை தன்னைப் பொருக்கெனச் சார்ந்து தானே
கண்டனன் என்ப மன்னோ கண்களால் கருத்தில் ஆவி
உண்டிலை என்ன நின்ற ஓவியம் ஒக்கின் றாளே. 9020

கூக. தீர்ப்பதுதுன்பம்நான்என் உயிரொடென்றுணர்ந்தசிந்தை
பேர்ப்பன செஞ்சொ லாள்அத் திரிசடை பேசப் போந்தாள்
கார்ப்பெரு மேகம் வந்து கடையுகம் கலந்த தென்ன
ஆர்ப்பொலி அமுத மாக ஆருயிர் ஆற்றி னாளே. 9021

கூஉ. வஞ்சனை என்ப துன்னி வான்உயர் உவகை வைகும்
நெஞ்சினன் ஆகி உள்ளம் தள்ளுறல் ஒழிந்து நின்றான்
வெஞ்சிலை மைந்தன் போனான் நிகும்பலை வேள்வி யாஎன்
றெஞ்சலில் அரக்கர்சேனை எழுந்தெழுந் தேகக்கண்டான். 9022

கூங. வேள்விக்கு வேண்டல்பால கலப்பையும் விறகும் நெய்யும்
வாள்விக்குந் தாள்வில் அன்ன வானவர் மறுக்கங் கண்டான்
சூழ்வித்த வண்ணம்ஈதோ நன்றெனத் துணிவுகொண்டான்
தாழ்வித்த முடியன் வீரன் தாமரைச் சரணம் தாழ்ந்தான்

கூச. ஓருந்தனள் தேவி யானே எதிர்ந்தனன் கண்க ளால்நம்
அருந்ததி கற்பி னுளுக் கழிவுண்டோ அரக்கர் கம்மை
வருந்திட மாயஞ் செய்து நிகும்பலை மருங்கு புக்கான்
முருங்கழல் வேள்விமுற்றி முதலற முடிக்கைமூண்டான். 9024

கூடு. என்றலும் உலகம் ஏழும் ஏத்தின எல்லை யாக
ஒன்றிய கடல்கள் ஏழும் உடன்எழுந் தார்க்கும் ஓதை
அன்றென வாகும் என்ன அமரரும் அயிர்க்க ஆர்த்துக்
குன்றினம் இடியத் துள்ளி ஆடின குரங்கின் கூட்டம். 9025

உடு-வது, மாயா சீதைப்படலம் - முற்றிற்று.
ஆகப்படலம் 117-க்கு திருவிருத்தம் 9025

உசு-வது, நிகும்பலை யாகப்படலம்

க. வீரனும் ஐயம் தீர்ந்தான் வீடணன் தன்னை மெய்யோ
டார்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி ஐய
தீர்வது பொருளோ துன்பம் நீஉள தெய்வம் உண்டு
மாருதிஉளன் நாம்செய்த தவம்உண்டு வலியும்உண்டால். 9026

உ. என்றலும் இறைஞ்சி யாகம்முற்றுமேல் ஆரும் வெல்லார்
வென்றியும் அரக்கர் மேற்றே விடைஅருள் இளவலோடும்
சென்றவன் ஆவி உண்டு வேழ்வியும் சிதைப்பன் என்ரூன்
நன்றது புரிதிர் என்னு நாயகன் நவில்வ தானுன். 9027

ங. தம்பியைத் தழுவி ஐய தாமரைத் தவிசின் மேலான்
வெம்படை தொடுக்கும் ஆகில் வீலக்குவ தன்றி வெய்தின்
அம்புஈ துரப்பாய் அல்லை அன்னது நடந்த காலை
உம்பரும் உலகும் எல்லாம் விளியுமை தொழிதி என்ரூன். 9028

ச. முக்கணுன் படையும் ஆழி முதலவன் படையு முன்னி
ஒக்கவே விடுமே விட்டால் அவற்றினுல் அவற்றை ஓய்த்து
தக்கவா றியற்றி மற்றுன் சிலைவலித் தருக்கி னுலே
புக்கவன் ஆவி உண்டு போதுதி புகழின் மிக்கோய். 9029

ரு. வல்லை மாய விஞ்சை வகுத்தன மறிந்து மாளக்
கல்லுதி தருமம் என்னும் கன்னகங் கருத்தில் கொண்டாய்
பல்பல பேர்நஞ் செய்து வருந்தலை அற்றம் பார்த்துக்
கொல்லுதி சீர்மைத் தாக மேல்நின்ற குற்ற மற்ரூய். 9030

சு. பதைத்தவன் வெம்மை யாடிப் பல்பெரும் பகழி மாரி
விதைத்தவன் விதையா நின்று விலக்கினை மெலிவு மிக்காய்
உதைப்பன சிலையின் வாளி மருமத்தைக் கருதி ஓட்டி
வதைத்தொழில் புரிதி சாப நூல்நெறி மறப்பி லாதாய். 9031

தொடுப்பதன் முன்னம்வாளி தொகுத்தவை துறைகள்தோறும்
தடுப்பன தடுத்தி எண்ணங் குறிப்பினுல் உணர்ந்து தக்க
கடுப்பினும் விளம்பும் ஆற்றற் கதியினுங் கணக்க ளாற்றின்
விடுப்பன அவற்றை நோக்கி விடுதியால் வீர கின் மிக்காய்.

அ. என்பன முதல் உபாயம் யாவையும் இயம்பி ஏற்ற
முன்பினை நோக்கி ஐய மூவகை உலகும் தானுய்த்
தன்பெரும் தன்மை தானும் அறிகிலா ஒருவன் தாங்கும்
வன்பெரும் சிலைஈ தொன்றே வணங்குதி வலமுங் கொண்டே.

கூ. இச்சிலை இயற்கைமேல்நாள் தமிழ்முனி இயம்பிற் றெல்லாம்
அச்செனக் கேட்டி அன்றே ஆயிர நாமத் தண்ணல்
மெய்ச்சிலை விரிஞ்சன் தானை வேழ்வியின் வேட்டுப்பெற்ற
கைச்சிலை கோடி என்று கொடுத்தனன் கவசத் தோடும். 9034

மி. ஆணிஇவ் உலகுக் காய ஆழியான் புறத்தி னுற்கும்
தூணியும் கொடுத்துமற்றும் உறுதிகள் பலவும் சொல்லித்
தாணுவின் தோற்றத் தாணைத் தழுவினன் தழுவ லோடும்
சேணுயர் விசும்பில் தேவர் தீர்ந்ததெம் சிறுமை என்றார். 9035

மக. மங்கலம் தேவர் கூற வானவர் மகளிர் வாழ்த்திப்
பங்கமில் ஆசி கூறிப் பலாண்டிசை பரவப் பாகத்
திங்களின் மோலி அண்ணல் திரிபுரம் எரியச் சிறிப்
பொங்கினன்என்னத்தோன்றிப் பொலிந்தனன்போர்மேல்போவான். 9036

மஉ. மாருதி முதல்வ ராய வானரத் தலைவ ரோடும்
வீரரீ சேறி என்று விடைகொடுத் தருளும் வேலை
ஆரியன் கமல பாதம் அகத்துத்தன் புறத்தும் ஆகச்
சீரிய சென்னி சேரச் சேர்த்தினன் தருமச் செல்வன். 9037

பொலங்கொண்டல் அனைய மேனிப் புரவலன் பொருமிக் கண்ணீர்
நிலங்கொண்டு படர நின்று நெஞ்சழி வாணைத் தம்பி
வலங்கொண்டு வயிர வல்வில் இடங்கொண்டு வஞ்சன் மேலே
சலங்கொண்டு கடிதுசென்றான் தலைகொண்டு தருவன் என்ன.

மசு. தான்பிரி கின்றி லாத தம்பிவெங் கடுப்பில் செல்வான்
ஊன்பிரி வுடைய தான உயிர்என மறைத லோடும்
வான்பெரு வேழ்வி காக்க வளர்கின்ற பருவ மாலைத்
தான்பிரி கின்ற நாளில் தசரதன் தன்னை ஒத்தான். 9039

*மடு. சேனை பதியே முதல்சே வகர்தாம்
ஆனைர் நிமிர்கொள் ளிகொளங் கையினர்
கானைர் மலையும் நெறியுங் கழியப்
போனைர் கள்நிகும் பலைபுக் கனரால். 9040

மசூ. உண்டாய தொராால் உலகுள் ஒருவன்
கொண்டான் உறைகின் றதுபோல் குலவி
விண்டா லம்விழுங் கவிரிந் ததனைக்
கண்டார் அவ்வரக் கர்கருங் கடலை. 9041

மஎ. நேமிப் பெயரூக நிரைத்து நெடுஞ்
சேமித் துறைகின் றதுதீ வினையோன்
ஓமக் கனல்வெவ் வடவைக் குடனே
பாமைக் கடல்நின் றதொர்பான் மையதே. 9042

எஅ. காரா யினவெங் களிதேர் பரிஆள்
தாரா யினகோடி தழீஇயன போர்
நீரா ழியொடா ழிநிறீஇ யனபோல்
ஓரா யிரமால் புடையுள் ளதனீ. 9043

எக. பொற்றேர் பரிமால் களிமா பொருதார்
எற்றே படைவீ ரரைஎண் ணிலவால்
உற்றே வியபூ பமுலோ கமுடைச்
சுற்ரு யிரமூ டுசுலா யதனீ. 9044

உஅ. வண்ணக் கருமேனி யின்மேன் மழைவாழ்
விண்ணீத் தொடுசெம் மயிர்வீ சுதலால்
அண்ணற் களியான் அனலம் படவெம்
பண்ணீக் கடல்போல் வதொர்பான் மையதே. 9045

உக. வழங்கா சிலைநாண் ஒலிவா னில்வரும்
பழங்கார் முகம்ஓத் தபணீக் குலமும்
தழங்கா கடல்வாழ் வனபோல் தகைசால்
முழங்கா முகில்ஓத் தனமும் முரசே. 9046

உஉ. வலியா யஇரா கவன்வாய் மொழியால்
சலியா தநெடுங் கடல்தான் எனலாய்
ஒலியா துயர்சே னையைஉற் ரெருநாள்
மெலியா தவர்ஆர்த் தனர்விண் கிழிய. 9047

உங. ஆர்த்தார் எதிர்ஆர்த்த அரக்கர் வலம்
போர்த்தார் முரசங்கள் புடைக்க முகம்
தூர்த்தார் இவர்கற் படைசூல் முகிலின்
நீர்த்தா ரையின்அம் பவர்மீட் டினரால். 9048

உச. மின்னும் படைவீ சினர்வெம் பகைமேல்
பன்னுங் கவிசே னைபடிந் துளதால்
துன்னும் துறைநீர் நிறைவா விதொடர்ந்
தன்னங் கள்படிந் தனவாம் எனலாய். 9049

உடு. வில்லும் மழுவும் எழுவும் மிடலோர்
பல்லும் தலையும் உடலும் படியில்
செல்லும் பொறிசிந் தினசென் றனவால்
கல்லும் மரமும் கரமும் கதுவ. 9050

உசு. வாலும் தலையும் வயிறும் உடலும்
காலுங் கரமும் கரைகண் டிலவால்
கோலும் மழுவும் எழுவும் கொழுவும்
மேலுங் கணையும் வளையும் விசிற. 9051

உள. வென்றிச் சிலைவீ ரணைவீ டணன்நீ
நின்றிக் கடைதா முதல்நீ தியதோ
சென்றிக் கடிவேள் விசிதைக் கிலையேல்
என்றிக் கடல்வெல் லுதும்யாம் எனலும் 9052

உஅ. தேவா தியரும் திசைநான் முகனும்
மூவா முதல்ச சனும்மூ உலகின்
கோவா கியகொற் றவனும் முதலாய்
மேவா தவர்இல் லைவிசும் புறைவார். 9053

உக. பல்லார் படைநின் றதுபல் அணியார்ப்
பல்லார் படைநின் றதுபல் பிறைவெண்
பல்லார் படைநின் றதுபல் லியமும்
பல்லார்ப படைநின் றதுபல் படையே. 9054

உஎ. அக்கா லிலைலக் குவன்அப் படையுள்
புக்கான் அயில்அம் புபொழிந் தனனுல்
உக்கார் கள்அரக் கர்கள்ஊர் ஒழியப்
புக்கார் நமனூர் உறைதென் புலமே. 9055

உக. தேரு மதமால் கரிதேர் பரிமா
நூரு யிரமா யிரநூ றிழில்படச்
சேரூர் குருதிக் கடலில் திடராய்க்
கூரும் உகவா ளிகுறைத் தனனுல். 9056

உஉ. வாமக் கரிதாள் அழிவார் குழிவன்
தீமத் தசரக் கர்கள்செம் மயிரின்
தாமத் தலைஉக் கதழங் கெரியின்
ஓமத் தைநிகர்த் தஉலப் பிலவால். 9057

உங. சிலையின் கணையூ டுதிறந் தனதிண்
கொலைவெங் குலமால் கரிசெம் புனல்கொண்
டுலைவின் றுகிடந் தனஒத் தனவால்
மலையும் சுனையும் வயிறும் உடலும். 9058

நச. விற்றொத் தியவெங் கணைஎண் கின்வியன்
பற்றொத் தியபோற் படியப் பலவும்
மூற்றச் சுடர்மின் மினிமொய்த் துளவன்
புற்றொத் தமுடித் தலைபூ முியன. 9059

நடு. படுமா ரிநெடுங் கணைபாய் தலினுல்
விடுமா றுதிரந் புனல்வீழ் வனவன்
தடுமா றுநெடுங் கொடிதாழ் கடல்வாய்
நெடுமா முகில்வீழ் வரிகர்த் தனவால். 9060

நசு. மின்னூர் கணைதாள் அறவீ சவிழுந்
தந்நாள் உதிரத் துள்அழுந் துதலால்
ஒன்னூர் முழுவெண் குடைஓத் துளவால்
செந்நா கம்வீழுங் கியதிங் களிதை. 9061

நஎ. கரிஉண்ட களத்திடை உற்றன கார்
நரியுண்டை அகப்பட நண்ணின வால்
இரியுண்டி டைஇன் னியம்இட் டிடரால்
மரியுண்ட உடற்பொறை மானின வால். 9062

நஅ. வரயில் கடுவெங் கனல்வா ளியினம்
பாயப் பருமக் குலம்வே வனவால்
வேயுற் றநெடுங் கிரிமீ வயினுர்
தீயுற் றனஒத் தசினக் கரியே. 9063

நஉ. கொடுநீள் சுரிகை யொடுதாள் குறையப்
படுநீள் குருதிப் படர்கின் றனவால்
அடுநீள் உயிரின் மையின்ஆழ் கிலவான்
நெடுநீ ரின்இடங் கர்நிகர்த் தனவால். 9064

சுரு. அலைவே லைஅரக் கரைஎண் கின்உகிர்
தலைமே வுமுடித் தலைதள் ளுதலான்
மலைமேல் உயர்புற் றிணைவள் உகிரால்
நிலைபே ரமறிப் பரிகர்த் தனவால். 9065

சக. மாவா ளிகள்மா மழைபோல் வரலால்
மாவா ளிகள்போர் தெறுமா மறவோர்
மாவா ளிகள்வன் தலையின் தலைவாழ்
மாவா ளிகளோ டுமறிந் தனவால். 9066

சஉ. அங்கங்க மிகத்துலை பட்டத னுல்
அங்கங்க மிகுத்த அமர்த்துறை வாய்
அங்கங்கழி செம்புனல் அங்கம் அமைந்
தங்கங்கள் நிரம்பி அலம் பியதால். 9067

சஙு. வன்தா னையை வார்கணை மாரியினுல்
அன்ரு யிரமோலி அனந்தன் எழாப்
பின்ரு எதிர்தான் அவர்பேர் அணியைக்.
கொன்ரூன் எனஎய்து குறைத் தனனுல் 9068

*சச. மலைகளும் மழைகளும் வான மீன்களும்
அலையவெங் கால்பொர அழிந்த வாம்என
உலையவெங் கனல்பொதி ஓம முற்றலால்
தலைகளும் உடல்களும் சரமும் தாவின. 9069

சடு. வாரணம் அனையவன் துணித்த வான்படர்
தாரணி முடிப்பெருந் தலைகள் தாக்கலால்
ஆரண மந்திரம் அமைய ஓதிய
பூரண மணிக்குடம் உடைந்து போயதால். 9070

சசு. தெரிகணை விசும்பிடைத் துணித்த செம்மயிர்
வரிகழல் அரக்கர்தம் தடக்கை வாளொடும்
உரும்என விழுதலின் அனலி னேக்கிய
எருமைகள் மறிந்தன குறிப்பு வீய்ந்தவால். 9071

சஎ. தாறுகொள் மதகரி சுமந்து தாமரை
சீறிய முகத்தலை உருட்டிச் செந்நிறத்
தூறுகள் சொரிந்தபே ருதிரத் தோங்கலை
ஆறுகள் முறுங்கனல் அவியச் சென்றதால். 9072

சஅ. காறலைத் தலத்தொடுங் துணியக் காய்கதிர்க்
கோறலைத் தலையற மறுக்கங் கூடினுர்
வேறலத் தூன்றின விளங்கு மெய்யினர்
நாறலைக் குடலினர் பலரும் நண்ணினுர். 9073

சகூ. அங்கடங் களித்தபே ரருவிக் குன்றினின்
றங்கடங் கழித்தவர் நளித்த ஆடவர்
அங்கடங் கழிபடர் குருதி ஆழியின்
அங்கடங் கினர்தொடர் பகழி அஞ்சினுர். 9074

ருல. பொங்குடல் துணிந்ததம் புதல்வர் போக்கிலர்
தொங்குடைத் தோள்மிசை சுமந்து சோர்வுற
அங்குடற் றம்பியைத் தழுவி அண்மினர்
தங்குடர் முதுகிடை சொரியத் தள்ளுவார். 9075

ருக. மூடிய நெய்யொடு நறவு முற்றிய
சாடிகள் பொரியோடு தகர்ந்து தள்ளுறக்
கோடிகள் பலபடுங் குழாங் குழாங்களாய்
ஆடின அறுகுறை அரக்கர் யாக்கையே. 9076

ருஉ. காலெனக் கடுவெனக் கலிங்கக் கம்மியர்
நூலென உயிர்ப்பொறை தொடர்ந்து நோய்எனப்
பாலுறு பிறைஎனக் கலந்து பன்முறை
வேலுறு சேணையைத் துணித்து வீழ்த்தினன். 9077

ருங. கூண்டனன் திசைதொறும் நோக்கிக் கண்ணகல்
மண்டல மறிகடல் அன்ன மாப்படை
விண்டெறி கால்பட மறிந்து வீற்றுறு
தண்டலை யாம்எனக் கிடந்த தன்மையே. 9078

ருச. மிடலின்வெங் கடகரிப் பிணத்தின் விண்தொடு
திடரும்வெம் புரவியும் தேரும் எஞ்சினர்
உடலும்வன் தலைகளும் உதிரத் தோங்கலைக்
கடலும்அல் லால்இடை ஒன்றுங் கண்டிலன். 9079

ருடு. நூறுநு றுயிரங் கோடி நோன்கழல்
மாறில்போர் அரக்கரை ஒருவன் வாட்கணை
கூறுகூ றுக்கிய குவையும் சோரியின்
ஆறுமே அன்றிஓர் ஆக்கை கண்டிலன். 9080

ருசு. நஞ்சினும் வெய்யவர் நடுங்கி நாஉலர்ந்
தஞ்சினர் சிலர்சிலர் அடைகின் றுர்சிலர்
வெஞ்சின வீரர்கள் மீண்டி லாதவர்
துஞ்சினர் துணையிலர் எனத் துடங்கினுர். 9081

ருள. ஓமவெங் கனல்அவிந் துழைக் கலப்பையும்
காமர்வண் திரவியக் குலமுங் கட்டற
வாமமந் திரத்தொழில் மறந்து மற்றவன்
தூமவெங் கனல்எனப் பொலிந்து தோன்றினன். 9082

நூஅ. அக்கணத் தடுகளத் தப்பு மாரியாய்
உக்கவர் ஒழிதர உயிரு ளோர்எலாம்
தொக்கனர் அரக்கனைச் சூழ்ந்து சுற்றுறப்
புக்கது கவிப்பெஞ் சேனைப் போர்க்கடல். 9083

நூக. ஆயிர கோடியின் அளவில் அப்படை
ஏயெனும் மாத்திரத் திற்ற கொற்றமும்
தூயவன் சிலைவலித் தொழிலும் துன்பமும்
மேயின வெகுளியும் கிளர வெம்பினான். 9084

நூஎ. மெய்குலத் திருநில மடந்தை விம்முறச்
செய்குலத் தொழிலையும் சென்ற தீயவர்
மொய்குலத் திறுதியும் முனிவர் கண்டவர்
கைகுலை கின்றதுங் கண்ணில் நோக்கினான். 9085

நூக. மானமும் பாழ்பட வகுத்த வேள்வியின்
மோனமும் பாழ்பட முடிவி லாமுரட்
சேனையும் பாழ்பட சிறந்த மந்திரத்
தேனையும் பாழ்பட இனைய கூறினான். 9086

நூஉ. வெள்ளமை ஐந்துடன் விரிந்த சேனையின்
[1]உள்ளதக் குரோணியீ ரைந்தொ டோயுமாள்
எள்ளரும் வேள்வியின் றினிலுயற் றுதல்
பிள்ளமை அனையது சிதைந்து பேர்ந்ததால். 9087

நூங. துடங்கிய வேள்வியின் தூம வெங்கனல்
அடங்கிய தவிந்துள தமையு மாம்அன்றே
விடங்கொள்வெஞ் செருத்தொழில் வென்றிராளொடும்
அடங்கிய தென்பதுக் கேது வாய்மையால். 9088

நூச. அங்கது கிடக்கநான் மனிதற் காற்றலன்
சிங்கினன் என்பதோர் எளிமை தேய்வுற
இங்குநின் றிவைஇவை நினைவ தென்இனிப்
பொங்குபேர் ஆற்றற்கென் தோளும் போனவோ.

நூடு. மந்திர வேள்விபோய் மடிந்த தாம்எனச்
சிந்தையின் நினைந்துநான் வருந்தும் சிற்றியல்
அந்தரத் தமரரும் மனிதர்க் காற்றலன்
இந்திரற் கோஇவன் வலிஎன் றேசவோ. 9090

1 [நூவடி] உள்ளதக் கொணி.

சுசு. என்றின பகர்கின்ற எல்லே வல்விசைக்
குன்றெடு மரங்களும் பிணத்தின் கூட்டமும்
பொன்றின கரிகளும் கவிகள் போக்கின
சென்றன பெரும்படை இரிந்து சிந்திட. 9091

சுஎ. ஒதுங்கினர் ஒருவர்கீழ் ஒருவர் புக்குறப்
பதுங்கினர் நடுங்கினர் பகழி பாய்தலில்
பிதுங்கினர் குடர்உடல் பிளவு பட்டனர்
மதம்புலர் களிறெனச் சீற்ற மாறினூர். 9092

சுஅ. வீரன்வெங் கணையொடு முதல்வர் வீசிய
கார்வரை அரக்கர்தம் கடலின் வீழ்ந்தன
போர்நெடுங் கால்பொரப் பொழியு மாமழைத்
தாரையும் மேகமும் படியும் தன்மைய. 9093

சுசு. திரைக்கடல் பெரும்படை இரிந்து சிந்திட
மரத்தினில் புடைத்தடர்த் துருத்த மாருதி
அரக்கனுக் கணித்தென அணுகி அன்னவன்
வரக்கதம் சிறப்பன மாற்றம் கூறுவான். 9094

*எம். தடந்திரைப் பரவை அன்ன சக்கர யூபம் புக்குக்
கிடந்தது கண்ட. துண்டோ நாண்ஒலி கேட்டி லாமோ
தொடர்ந்துபோய்அயோத்தி தன்னோக்கிஓயொடுந்துணிய நூறி
நடந்ததெப் பொழுது வேம்வி முடிந்ததே கருமம் நன்றே.

எக. ஏந்தகன் ஞாலம் எல்லாம் இனிதுறைந் திவரத் காங்கும்
பாந்தளில் பெரிய திண்தோள் பரதனைப் பழியில் தீர்ந்த
வேந்தனைக் கண்டு நீர்நும் வில்வலி காட்டி மீண்டு
போந்ததே அளவை அன்றே போனவை பொருந்திற் றன்றே.

எஉ. அம்பியைத் தமைந்த வல்வில் சம்பரன் ஆவி வாங்கி
உம்பருக் குதவி செய்த ஒருவனுக் குதையஞ் செய்த
நம்பியர் முதல்வ ரான மூவர்க்கு நால்வ ரான
தம்பியைக் கண்ட துண்டோ அவனெடும் தாக்கி னீரோ. 9097

எங. தீயொத்த வயிர வாளி உடல்உறச் சிவந்த சோரி
காயத்தும் செவியின் ஊடும் வாயினும் கண்கள் தானும்
பாயப்போய் இலங்கை புக்கு வஞ்சனை பரப்பிச் செய்யும்
மாயப்போர் ஆற்றல் எல்லாம் இன்றெடு மடியும் அன்றே.

எச. பாசமோ மலரின்மேலான் பெரும்படைக் கலமோபண்டை
ஈசனுர் படையோ மாயோன் நேமியோ யாதோ இன்னும்
வீசநீர் விரும்பு கின்ற தகற்குநாம் வெருவிச் சாலக்
கூசினேம் போதும் போதும் கூற்றினுர் குறுக வந்தார். 9099

எடு. வரங்கள்நீர் உடைய வாறும் மாயங்கள் வல்ல வாறும்
பரங்கொள்வா னவரில் தெய்வப் படைக்கலம் படைத்தவாறும்
உரங்களோ டுன்னி அன்றே உம்மைநாம் உயிரி னேடும்
சிரங்கொளத் துணிந்த தன்ன துண்டது திறம்பி னேமோ.

எசு. விடந்துடிக் கின்ற கண்டத் தண்ணலும் விரிஞ்சன் தானும்
படந்துடிக் கின்ற நாகப் பாற்கடற் பள்ளி யானும்
சடந்துடிக் கிலராய் வந்து தாங்கினும் சாதல் திண்ணம்
இடந்துடிக் கின்ற துண்டே என்இருந் தெழுகி லீரோ. 9101

கொல்வென்என் றுன்னீத்தானேகுறித்தொருசபதங்கொண்ட
வில்லிவந் தருகு சார்ந்துன் சேனையை முழுதும் வீட்டி
வல்லியேல் வாவா என்று விளிக்கின்ருன் வரிவில் நாணில்
ஒல்லொலி ஐய செய்யும் ஓமத்துக் குறுப்புண் டாமோ. 9102

எஅ. மூவகை வினையின் நின்ற முழுமுதல் தலிவர் முன்னும்
தேவர்கள் முனிவர் மற்றும் திறத்திறத் துலகம் சேர்ந்தார்
யாவரும் காண நிற்றூர் இனிஇறை தாழ்ப்ப தென்னே
சாவது சரதம் அன்றே என்றனன் தருமம் போல்வான். 9103

அன்னவா சகங்கள் கேளா அனலுயிர்த் தலங்கல் பொற்றேர்ள்
மின்னுகப் பகுவா யூடு நகையுக வெயில்போய் வீங்கு
முன்னரே வந்திம் மாற்றம் ஆற்றலின் மொழிந்த வாறே
என்னதோ நீங்கள் என்னை இகழ்ந்ததென் றினைய சொன்னன்,

அம. மூண்டபோர் தோறும் பட்டு முடிந்தநீர் முறையில் தீர்ந்து
மீண்டபோ ததனை எல்லாம் மறத்திரோ விளிதல் வேண்டி
ஈண்டவோட் டென்னு நின்ருய் இத்தனை வீரும் இன்னம்
மாண்டபோ துயிர்தந் தீயும் மருந்துவைத் தனையோ மான. 9105

அக. இலக்குவ னுக மற்றை இராமனே ஆக மீண்டு
விலக்குவர் எல்லாம் வந்து விலக்கினும் குரக்கின் வெள்ளம்
குலக்குல மாக மாளும் கொற்றமும் மனிதர் சொள்ளும்
அலக்கணும் முனிவர் தம்மோ டமரரும் காண்பர் அன்றே. 9106

யானுடை வில்லும் என்பொற் றேர்களும் இருக்க இன்னும்
ஊனுடை உயிர்கள் யாவும் உய்யுமே உயிரு ணுவே
கூனுடைக் குரங்கி னேடும் மனிதரைக் கொன்று நின்ற
வானிடைத்தொடர்ந்துங் கொல்வன் மருந்தினும் உய்யமாட்டீர்.

வேட்கின்ற வேழ்வி அன்றே பிழைத்தது வென்றேம் என்று
கேட்கின்ற வீரம் எல்லாம் கிளத்துதல் கிளத்தல் அம்மா
தாட்கின்ற தில்லை நும்மைத் தனித்தனி தலைகள் சிந்த
சூட்கின்ற வீதியார் செய்கை தொடங்குமின் துணிந்ததெல்லாம்.

மற்றெலா நும்மைப் போல வாயினல் சொல்ல மாட்டேன்
வெற்றிதான் இரண்டும் தந்தீர் விரைவது வெல்லக் கொல்லாம்
உற்றநான் உருத்த காலத் தொருமுறை எதிரே நிற்க
கிற்றிரோ இன்று மாண்டு கிடத்திரோ கடத்தி ரோதான். 9109

அரு: நின்மின்கள் நின்மின் என்னு நெருப்பெழ விழித்துநீண்ட
வின்மின்கொள் கவசம் இட்டான் வீக்கினன் தூணி வீரப்
பொன்மின்கொள் கோதை லகையில் பூட்டினன் பொறுத்தான் போர்வில்
என்மின்கொள் வயிரத் தின்தேர் ஏறினன் எறிந்தான் நாணி. 9110

அசு. ஊதினன் சங்கம் வானத்தொண் டொடி மகளிர்ஓண் கண்
மோதினர் கணத்தின் முன்னே முழுவது முருக்கி முற்றக்
காதினன் என்ன வானோர் கலங்கினர் கயிலை யானும்
போதினன் தானும் வல்லே புகுந்தது பெரும்போர் என்றன்.

அள. இழைத்தபேர் யாகந் தானே யாம்செய்த தவத்தி னுலே
பிழைத்தது பிழைத்த தேனும் வானரம் பிழைக்க லாற்ரு
அழைத்தது விதியே கொல்லென் றஞ்சினர் அம்பி னேடும்
உழைத்தது காண்கின் றேம்என் றுணங்கினர் உம்பர் உள்ளார்.

அஅ. நாண்தொழில் ஓசை வீசிச்செவிதொறும்நடத்தலோடும்
ஆண்தொழில் மறந்து கையின் அடுக்கிய மரமுங் கல்லும்
மீண்டன மறிந்து சோர வீழ்ந்தன வீழ்ந்த மெய்மை
மாண்டனம் எனவே உன்னி இரிந்தன கவியின் மாலை. 9113

அக. படைப்பெருந் தலைவர் நின்ரூர் அல்லவர் இறுதி பற்றும்
அடைப்பெருங் காலக் காற்ரூல் ஆற்றல வாகிக் கீறி
உடைத்திரிந் தோடும் வேலைப் புனல்என விரியல் உற்ரூர்4
இடைத்தபேர் அனுமன் ஆண்டோர்நெடுங்கிரிகிழித்துக்கொண்டான். 911

கூடி. நில்லடா நில்லு நில்லு நீயெடா வர்சி பேசிக்
கல்லெடா நின்ற தென்னைப் போர்க்களத் தமரர் காண
கொல்லலாம் என்றே நின்று குரங்கென்ருல் கூடும் அன்றே
கல்லையே பொரவா என்ருன் நமனுக்கு நமனுய் நின்ருன். 9115

கூக. வில்லெடுத் துருத்து நின்ற வீரருள் வீரன் நேரே
கல்லெடுத் தெறிய நின்ற அனுமனைக் கண்ணில் நோக்கி
மல்லெடுத் தமைந்த தோளாற் கென்கொலாம் வருவ தென்னைச்
சொல்லெடுத் தமரர் சொன்னுர் தாதையும் துணுக்கம் உற்ருன்.

வீசினன் வயிரக் குன்றம் வெறிபொறிக் குலங்கள் விண்ணில்
ஆசையின் நிமிர்ந்து செல்ல ஆயிரம் உரும்ஒன் ருகப்
பூசின பிழம்பி தென்ன அன்னதின் புரிவை நோக்கிக்
கூசின உலகம் எல்லாம் குலைந்தன அரக்கர் கூட்டம். 9117

கூங. குண்டலம் நெடுவில் வீச மேருவில் குவிந்த தோளான்
அண்டமுங் குலுங்க ஆர்த்தம் மாருதி அசனி அஞ்ச
விண்டலத் தெதிர்ந்த குன்றை வெறுங்துகள் ஆக்கி வீழக்
கண்டனர் எய்ததன்மை கண்டிலர் இமைப்பில் கண்ணுர். 9118

கூச. மாமிருரு குன்றம் வாங்கி மறுகுவான் மார்பில் தோளில்
காறரு காலில் கையில் கழுத்தினில் நுதலில் கண்ணில்
ஏறின என்ப மன்னே எரிமுதல் கடவுள் வெம்மை
சீறின பகழி மாரி தீய்க்கடு விடத்தில் தோய்ந்த. 9119

கூடு. வெதிரொத்த சிகரக் குன்றம் மருங்குற விளங்க லாலும்
எதிரொத்த இருளைச் சிறி எழுகின்ற இயற்கை யாலும்
கதிரொத்த பகழிக் கற்றைக் கான்ஒளி காட்ட லாலும்
உதிரத்தின் செம்மையாலும் உதிக்கின்ற கதிரோன் ஒத்தான்.

கூசு. ஆயவன் அயர்த லோடும் அங்கதன் முதல்வர் ஆனேர்
காய்சினந் திருகி வந்து கலந்துளார் தம்மைக் காணு
நீயிர்கள் நின்மின் நின்மின் இருமுறை நெடிய வானில்
போயவன் எங்கே நின்ருன் என்றனன் பொருட்செ யாதான்.

வெம்பினர் பின்னு மென்மேல் சேறலும் வெகுண்டு சீயம்
தும்பியைத் தொடர்வ தல்லால் குரங்கினைச் சுளிவ துண்டோ
அம்பினை மாட்டி என்னை சிறிதுபோர் ஆற்ற வல்லான்
தம்பியைக் காட்டித் தாரீர் சாதிரோ சலத்தின் என்ருன்.

கூஅ. அனுமனீனக் கண்டி லீரோ அவனினும் வலியீ ரோஎன்
தனுவலம் அன்ரே தோளும் அவையல தவிர்ந்த துண்டோ
இனிமுனம் நீர லீரோ எவ்வலி ஈட்டி வந்தீர்
மனிதரைக் காட்டி நுந்தம் மலிதோறும் வழிக்கொ ளீரே.9123

என்றுரைத் திளவல் தன்மேல் எழுகின்ற இயற்கை நோக்கிக்
குன்றமும் மரமுங் கல்லும் குறுகின குழாங்கள் தோறும்
சென்றன பகழி மாரி மேருவை உருவித் தீர்வ
தொன்றல கோடி கோடி நுழைந்தன வலியும் ஓய்ந்தார். 9124

ஈ. படுகின்ற தன்ரே மற்றுன் பெரும்படை பகழி மாரி
விடுகின்ற தன்ரே வென்றி அரக்களுங் காள மேகம்
இடுகின்ற வேழ்வி மாண்ட தினிஇவன் பிழைப்பு ருமே
முடுகென்ரான் அரக்கன் தம்பி நம்பியும் சென்று மூண்டான்.

*ஈக. வந்தான் நெடுந்தகைமாருதி மயங்கா முக மலர்ந்தான்
எந்தாய் கடி தேரு ப்என திருதோள் மிசை என்ரான்
அந்தா வற உவந்தையனும் அமைவா யினன் இமையோர்
சிந்தா குலந் துறந்தா ரவன் நெடுஞ்சாரிகை திரிந்தான். 9126

ஈஉ. காரா யிரம் உடன்ஆயின எனல் ஆயின கரியோன்
ஓரா யிரம் பரிபூண்டதொர் உயர்தேர் மிசை உருத்தான்
நேரா யிரம் இருவோர்களும் நெடுமா ருதி நிமிரும்
பேரா யிரம் உடையான்எனத் திசைஎங்கணும் பெயர்ந்தான்.

ஈஊ. தீஒப்பன உரும்ஒப்பன உயிர்வேட் டெனத் திரியும்
பேய்ஒப்பன பசிஒப்பன பிணிஒப்பன பிழையா
மாயக்கொடு வினைஒப்பன மனம்ஒப்பன கழுகின்
தாய்ஒப்பன சிலவெங்கணை துறந்தான்துயில் துறந்தான். 9128

ஈஎ. அவ்வம்பையும் அவ்வம்பினில் அறுத்தான்அடல் அரக்கன்
எவ்வம்பினி உலகத்துள என்னும்படி எய்தான்
வெவ்வம்பரம் வையந்திசை மலிவேலைகள் பிறவும்
வெளவுங்கடை யுகமாமழை பொழிகின்றது மான. 9129

ஈஏ. ஆயோன்நெடுங் குருவிக்குலம் என்பான்என அம்பால்
போயோவிடத் துரந்தான்அவை பொறியோஎன மறியத்
தாயோனும்அத் துணைவாளிகள் தொடுத்தான்அவைதடுத்தான்
தீயோனும்அக் கணத்தாயிரம் நெடுஞ்சாரிகை திரிந்தான்.9130

ஈசு. கல்லும்நெடு மலையும்பல மரனுங்கடை காணும்
புல்லும்சிறு கொடியும்இடை தெரியாவகை புரியச்
செல்லும்நெறி முறைசென்றன தெறுகால்புரை மறவோன்
சில்லும்உதிர் தேரும்கவி வயமாருதி காலும். 9131

இருவீரரும் இவன்இன்னவன் இவன்இன்னன்என நிலையாத்
திருவீரரும் தெரியாவகை திரிந்தார்கணை சொரிந்தார்
ஒருவீரரும் இவர்தேர்கிலர் எனவானவர் உவந்தார்
பொருவீரையும்பொருவீரையும் பொருதால்எனப்பொருதார்.

ஈஅ. விண்செல்வன செல்கின்றன விசிகம்என இமையோர்
கண்செல்கில மனம்செல்கில கணிதமுறும் எனில்ஓர்
எண்செல்கில நெடுங்காவலன் இடைசெல்கிலன் உடனே
புண்செய்வன அல்லால்ஒரு பொருள்செய்வன தெரியா. 9133

ஈகூ. எரிந்தேதறின திசையாவையு மலையாவையும் இடியா
நெரிந்தேதறின நெடுநாண்ஒலி படவாரிறை யுருமில்
சொரிந்தேதறின துரந்தேதறின சுடுவெங்கணை முழுதும்
கரிந்தேதறின உலகியாவையும் கனல்வெம்புகை கதுவ. 9134

ஈடி. வெடிக்கின்றன மலைகின்றன விழுகின்றன விழுவந்
திடிக்கின்றன சிலைநாண்ஒலி இருவாய்களும் எதிராக்
கடிக்கின்றன கனல்வெங்கணை கலிவான்உற விசைமேல்
பொடிக்கின்றனபொறிவெங்கனல் இவைகண்டனர்புலவோர்.

ஈகக. கடல்வற்றின மலைஉக்கன பருதிக்கனல் பருகுற்
றுடல்வற்றின மறமுற்றன அனல்பட்டன உதிரம்
சுடர்வற்றின சுறுமிக்கது துணிபட்டுதிர் கலியின்
திடர்பட்டது பரவைக்குழி திரிவுற்றன புவனம். 9136

ஈகஉ. எரிகின்றன இருவெங்கணை இருசேணையும் இரியத்
திரிகின்றன புடைகின்றில திசைசென்றன சிதறிக்
கரிபொன்றின பரிமங்கின கவிசிந்தின கடல்போல்
சொரிகின்றன பொருசெம்புனல் தோலிகின்றனகொலையால்.

புரிந்தோடின பொறிந்தோடின புகைந்தோடின புகைபோய்
எரிந்தோடின எதிர்ந்தோடின இடம்ஓடின வலமே
திரிந்தோடின இரிந்தோடின செறிந்தோடின திசைமேல்
விரிந்தோடின கருங்கோளரிக் கிளையான்விடு விசிகம். 9138

ாகஏ. நீரொத்தன நெருப்பொத்தன பொருப்பொத்தன நிமிரும்
காரொத்தன உரும்ஒத்தன கடல்ஒத்தன கதிரோன்
தேரொத்தன விடைமேலவன் சிரிப்பொத்தன உலகின்
வேரொத்தன செருவொத்திகல் அரக்கன்விடு விசிகம். 9139

ாகடு. ஏமத்தடங் கவசத்திகல் அகலத்தன இருவோர்
வாமப்பெருந் தோள்மேலன வதனத்தன வயிரத்
தாமத்துணை குறங்கோடிரு சரணத்தன தத்தம்
காமக்குல மடமங்கையர் கடைக்கண்ணெனக் கணைகள். 9140

ாகசு. என்னுளினில் எத்தேவர்கள் எத்தானவர் இவரே
இன்னுர்செரு வினத்தார்என இமையோர்எடுத் தழைத்தார்
பொன்னுர்சிலை இருகால்களும் ஒருகால்பொறை உயிரா
முன்னுளினில் இரண்டாம்பிறை முளைத்தால்என வளைத்தார். 9141

ாகள. வீகின்றன உலகிங்கிவர் விடுகின்றன விசிகம்
போகின்றன சுடர்கின்றன இமையோர்களும் புலர்ந்தார்
ஆகின்றதெதார் அழிகாலமி தாம்என்றென அயிர்த்தார்
நோகின்றன திசையானைகள் சிலைநாண்ஒலி நுழைய. 9142

ாகஅ. மீனுக்கது நெடுவானகம் வெயில்உக்கது சுடரும்
மானுக்கது முழுவெண் மதி மறைஉக்கன வானம்
தானுக்கன குலமால்வரை தலைஉக்கன தரைசால்
ஊனுக்கன உயிர்உக்கன உலகந்தினுள் எவரும். 9143

ாகக. அக்காலையில் அயில்வெங்கணை ஐயைந்துபுக் கழுந்தத்
திக்காசற வென்றுன்மகன் இளங்கோஉடல் செறித்தான்
கைக்கார்முகம் வளையச்சில கதிர்வெஞ்சரம் கவசம்
புக்காமும் கழன்றோடிட இளங்கோளரி பொழிந்தான். 9144

ாஉம. தெரிந்தான்சில சுடர்வெங்கணை தெய்வேந்திரன்சினமா
இரிந்தோடிடத் துரந்தோடின இமையோரையும் அன்னுள்
அரிந்தோடின எரிந்தோடின அவைகோத்தடல் அரக்கன்
சொரிந்தான்அவை நெடுமாருதி தோள்புக்கன தோன்ரு. 9145

ாஉக. குருதிப்புனல் சொரியக்குணங்குணிப்பில்லவன்குணபால்
பருதிப்படி பொலிவுற்றதை இளங்கோளரி பார்த்தான்
ஒருதிக்கினும் பெயராவகை அவன்தேரினை உதிர்த்தான்
பொருதிக்கணம் வென்றேறன்எனச் சரமாரிகள் பொழிந்தான்.

அத்தேர் அறிந் திடநோக்கினர் இமையோர்எடுத் தார்த்தார்
முத்தேவரும் உவந்தார்முதல் உரும்ஏறொடு முனிந்தான்
தத்தாஒரு தடந்தேரினைத் தொடர்ந்தான்சரந் தலைமேல்
பத்தேவினன் அவைபாய்தலும் இளங்கோளரி பதைத்தான்.

ஈஉங. பதைத்தான்உட னிலைத்தான்சில பகுவாய்அயில் பகழி
விதைத்தான்அவைவிலக்காதமுன் விடைமேல்வருசடையோன்
மதத்தான்என வருகாலினை ஒருகால்உற மருமத்
துதைத்தான்எனத்தனித்தேர்கணை அவன்மார்பிடைஉய்த்தான்.

ஈஉச. கவசத்தையும் நெடுமார்பையும் கடந்தக்கணை கழியச்
அவசத்தொழில் அடைந்தான்அதற் கிமையோர்எடுத் தார்த்தார்
திவசத்தெழு சுடரோன்எனத் தெரிகின்றதொர் கணையால்
துவசத்தையும்துணித்தான்அவன்மணித்தோளையும்துளைத்தான்

ஈஉரு. உள்ளாடிய உதிரப்புனல் கொடுந்தீயினை டுமிழ்ந்தான்
தள்ளாடிய வடமேருவில் சலித்தான்உடல் தரித்தான்
தொள்ளாயிரம்கடும்போர்க்கணை துரந்தான்அவைசுடர்போல்
வில்லாநெடுங் கவசத்திடை நுழையாதுக வெகுண்டான்.9150

ஈஉசு. மறித்தாயிரம் வடிவெங்கணை மருமங்களை மதியாக்
குறித்தாயிரம் பரித்தேரவன் துரந்தான்அவை குறியாத்
தறித்தான்நெடுஞ் சரத்தால்ஒரு தனிநாயகற் கிளையான்
செறித்தான்உதைசிலபோர்க்கணை சிலைநாண்உறத்தெரிந்தான்

ஈஉள. வில்லிங்கிது நெடுமால்சிவன் எனுமேலவர் தலைவே
கொல்என்றுகொண் டுயிர்த்தான்நெடுங்கவசத்தையும்கொலைபாள்
செல்லுங்கடுங் கணைபாவையும் சிதையாமையும் தெரிந்தான்
வெல்லும்தரம் அல்லாமையும் அறிந்தான் அகமெலிந்தான்.9152

அத்தன்மையை அறிந்தான்அவன் சிறுதாதையும் அணுகா
முத்தன்முகம் நோக்காஒரு மொழிகேள்என மொழிந்தான்
எத்தன்மையும் இமையோர்களை வென்றுன் இகல் வென்றுய்
பித்தன்மகன் தளர்ந்தான்இனிப் பிழையான்எனப் பகர்ந்தான்.

கூற்றின்படி கொதிக்கின்றஅக் கொலைவாள்எயிற் றரக்கன்
ஏற்றும்சிலை நெடுநாண்ஒலி உலகேழினும் எய்தச்
சீற்றம்தலைச் தலைசென்றுற இதுதீர்எனத் தெரியாக்
காற்றின்படை துரந்தான்அவன் அதுவேகொடுகாத்தான். 9154

அனலின்படை தொடுத்தான் அவன் அதுவேகொடு காத்தான்
புனலின்படை தொடுத்தான் அவன் அதுவேகொடுபொறுத்தான்
கனவெங்கதி ரவன்வெம்படை துரந்தான்மனங் கரியோன்
சினவெந்திறல் இளங்கோளரி அதுவேகொடு தீர்த்தான். 9155

ஈஙக. இதுகாத்திகொல் என்னுளடுத் திசிகப்படை எய்தான்
அதுகாப்பதற் கதுவேஉள என்னுத்தொடுத் தமைத்தான்
செதுகாப்படை துரவேன்என நினைந்தான்திசை முகத்தோன்
முதுகாப்படை துரந்தான்நனி முடிந்தான்என மொழிந்தான்.

ஈஙஉ, வானின்தலை நின்ரூர்களும் மழுவாளியும் மலரோன்
தானும்முனி வரரும்பிற தவத்தோர்களும் அறத்தோர்
கோனும்பிற பிறதேவர்கள் குழுவும்மனங் குலைந்தார்
ஊனம்இனிஉளதாகும்இவ்இளங்கோக்கென உரைத்தார். 9157

ஈஙங. ஊழிக்கடை இறுதித்தலை உலகியாவையும் உண்ணும்
ஆழிப்பெருங் கனல்தன்ஒரு சுடர்என்னவும் ஆகப்
பாழிச்சிகை பரப்பித்தனி படர்கின்றது பார்த்தான்
வாழித்தனி முதல்நாயகற் கினையான்அது மதித்தான். 9158

மாட்டான்இவன் மலரோன்படை முதற்போதுதன்வலத்தால்
மீட்டான்அவன் தடுத்தான்அவன் முடிந்தான்என விட்டான்
காட்டாதினிக் கரந்தல்லது கருமம்அல என்னுத்
தாட்டாமரைமலரோன்படை தொடுப்பேன்எனச்சமைந்தான்.

ஈஙரு. நன்றுகுக உலகுக்கென முதலோன்மொழி நவின்றான்
பின்றுதவர் உயிர்மேல்விடல் ஒழிஎன்பது பிடித்தான்
ஒன்றுதனிம் முதலோன்படை தணிமாய்க்கஎன் றுரைத்தான்
நின்றுனது துரந்தானவன் நலம்வானவர் நினைந்தார். 9160

ஈஙசு. தான்விட்டன மலரோன்படை எனமற்றிடை தருமே
வான்விட்டது மண்விட்டது மறவோன்உடல் இறுமே
தேன்விட்டுகு மலரோன்படை தீர்ப்பாய்எனத் தெரிந்தான்
ஊன்விட்டவன் மறம்விட்டிலன் எனவானவர் உவந்தார். 9161

ஈஙஎ. உரும்எறுவந் திழிந்தால்அதன் எதிரேநெருப் புய்த்தால்
வரும் ஆங்கது தவிர்ந்தால்என மறவோன்படை. மாயத்
திருமால்தனக் கினையான்படை உலகேழையும் தீய்க்கும்
அருமாசனல் எனநின்றது விசும்பெங்கணும் ஆகி. 9162

ாஙஅ. படைஅங்கது படராவகை பகலோன்குல மருமான்
உடைஎன்றெடுத் தொடுக்கும்படி அதனுள்உறு களிற்றை
இடைஒன்றணைப் பவன்போல்அமைத் திறுவாய்இனிஎன்றுன்
விடம்ஒன்றுகொண் டொன்றீர்ந்தது போற்றீர்ந்தது வேகம்.

ாஙக. விண்ணோர்அது கண்டார்வய வீரற்கினி மேன்மேல்
ஒண்ணுதன உளவோஎன மனந்தேறினர் உவந்தார்
கண்ணோர்நுதல் பெருமான்இவர்க் காதோஎனக் கடைபார்த்
தெண்ணுதிவை பகர்ந்தீர்பொருள் கேளீர்என இசைத்தான்.

ாசஅ. நாராயணர் நரர்என்றிவர் உளராய்நமக் கெல்லாம்
வேராய்முழு முதல்காரணப் பொருளாய்விண கடிந்தார்
ஆராயினும் தெரியாததோர் நெடுமாயையின் அகத்தார்
பாராயண மறைநான்கையும் கடந்தார்இவர் பழையார். 9165

ாசக. அறத்தாறழி வுளதாம்என அறிவும்தொடர்ந் தீணுகாப்
புறத்தார்புகுந் தகத்தார்எனப் புகுந்தன்னது புரப்பார்
மறத்தார்முதல் குலம்வேர்அற மாய்ப்பான்இவண் வந்தார்
திறத்தால்அவை தெரிந்தியாவரும் தெரியாவகை திரிவார்.9166

உயிர்தோறும்உற் றுளன்தோத்திரத் தொருவன்எனஉரைக்கும்
அயிராணிலை உடையான்என அவன்இவ்உல கணைத்தும்
தயிர்தோய்பிரை எனலாம்வகை கலந்தேதறிய தலைவன்
பயிராததோர் பொருள்இன்னதென் றுணர்வீர்இது பரமால்.

ாசங. நெடும்பாற்கடல் கிடந்தாரும்பண் டிவர்நீர்குறை நேர
விடும்பாக்கியம் உடையார்களைத் தவத்தோடற வீட்டி
இடும்பாக்கியத் தறங்காப்பதற் கியைந்தார்என இதெலாம்
அடும்பாக்கியத் தொடைசெஞ்சடை முதலோன்பணித் தமைத்தான். 9168

அறிந்தேஇருந் தறியோம்அவன் நெடுமாயையின் அயர்ப்போம்
பிறிந்தோம்இனி முழுதையமும் பெருமான்உரை பிடித்தேம்
எறிந்தேம்பகை முழுதும்இனி திருந்தோம்இடர் கடிந்தேம்
செறிந்தோர்விண பகைவர்எனத் தொழுதார்நெடுந்தேவர்.9169

ாசரு. மாயோன்நெடும்படைவாங்கியவலிவாள்எயிற்றரக்கன்
நீயோஇது தடுத்தாய்எனில் உனக்கார்எதிர் நிற்பார்
போயோவிசும் படைவாய்இது பிழையாதெனப் புகலாத்
தூயோன்மிசை உலகியாவையும்தடுமாறிடத்துரந்தான்.9170

ாசசு. சேமித்தனர் இமையோர்தமைச் சிரத்தேந்தியகரத்தால்
ஆமித்தொழில் பிறர்யாவரும் அடைந்தார்பழு தடையாக்
காமிப்பது முடிவிப்பது படர்வுற்றது கண்டான்
நாமத்தனி அரிதான்என நினைந்தான்அது நயத்தான். 9171

ாசள. தீக்கின்றதிவ் வுலகேழையும்எனச்சேறலும்தெளிந்தான்
நீக்கும்தரம் அல்லால்முழு முதல்தான்என நினைந்தான்
மீச்சென்றில தயல்சென்றது விலங்காவலங் கொடுமேல்
போய்ச்சங்கது கனல்மாண்டது புகைவீய்ந்ததுபொதுவே.9172

ாசஅ. ஏத்தாடினர் இமையோர்களும் கவியின்குலம் எல்லாம்
கூத்தாடினர் அரமங்கையர் குனித்தாடினர் தவத்தோர்
காத்தாய்உல கனைத்தும்எனக் களித்தாடினர் கமலம்
பூத்தானுடன் மழுவாளியும் முழுவாய்கொடு புகழ்ந்தார். 9173

ாசக. அவன் அன்னதுகண்டான் இவன் ஆரோஎன அயிர்த்தான்
இவன் இன்னது முதலேயுடை இறையோஎன வியவா
எவன்என் இனி நன்றுகுக இனிஎண்ணலன் என்னச்
சிவன்நன்படை தொடுப்பேன்உயிர் முடிப்பேன்எனத் தெளிந்தான். 9174

ாடும, பார்ப்பான்தரும் உலகியாவையும் ஒருகால்ஒரு பகலே
தீர்ப்பான்படை தொடுப்பேன்எனத் தெரிந்தான் அது தெரியா
மீய்ப்பாவிய இமையோர்குலம் வெருவுற்றதிப் பொழுதே
மாய்ப்பான்என உலகியாவையும் மறுகுற்றன மயங்கி. 9175

ாடுக, நானேசிவன் தரப்பெற்றது தவம்நாள்பல உழந்தேன்
தானேபிறர் அறியாதது தந்தேன்எனச் சமைந்தான்
ஆனால்இவன் உயிர்கோடலுக் கையம்இலை என்னு
ஏனளுமி தானுல்எதிர் தடையில்லதை எடுத்தான். 9176

மனத்தால்மலர் புனல்சாந்தமொ டவிதீபமும் வகுத்தான்
நினைத்தான்இவன் உயிர்கொண்டீன நிமிர்வாய்என நெஞ்சால்
இனத்தால்நெடும் சிலைநாண்தடம் தோள்மேல்உறச் செலுத்தா
எனைத்தாயதொர்பொருளால்இடை தடையில்லதை விட்டான்.

ாடுங. சூலங்களும் மழுவும்சுடு கணையும்கனல் சுடரும்
ஆலங்களும் அரவங்களும் அசனிக்குலத் தெவையும்
காலன்தன துருவங்களும் கரும்பூதமும் பெரும்பேய்ச்
சாலங்களும் நிமிர்கின்றன உலகெங்கணும் தானுய். 9178

ஈரு ஈ. ஊழிக்கனல் ஒருபால் அதன் உடனே தொடர்ந் துடற்றும்
சூழிக்கடுங் கொடுங்காற்றதன் அயலேவர துடங்கும்
ஏழுக்கும் அப் புறத்தாயுள பெரும்போர்க்கடல் இழிந்தாங்
காழித்தலை கிடந்தாங்கணை நெடுந்தூங்கிருள் அடைய. 9179

ஈருடு. இரிந்தார்குல நெடுந்தேவர்கள் இருடிக்குலத் தெவரும்
பரிந்தார் அது [1]பழுதாகில திறுவான்எனும் பயத்தால்
நெரிந்தாங்கழி குரங்குற்றது பகருந்துணை நெடிதே
திரிந்தார் இரு சுடரோடுல கொருமூன்றுடன் திரிய. 9180

ஈருசு. பார்த்தான தன் எதிர்வீடணன் உயிர்கால்வுறு பயத்தால்
வேர்த்தான் இது விலக்குந்தரம் உளதோமுதல் வீரா
தீர்த்தாஎன அழைத்தான் அதற் கிளங்கோளரி சிரித்தான்
போர்த்தார்உடல் கவிவீரரும் அவன்தாள் இணை புகுந்தார்.

அவையம்உனக் கவையம்எனும் அணைவோரையும் அஞ்சல்
கவையம்உமக் கென்தோளிணை எனக்கைத்தலங் கவித்தான்
உபையம்உறும் உலகின்பயம் உணர்வான்இனி ஒளியேன்
சிவனின்மன முடையான்படை தொடுப்பேன்எனத் தெளிந்தான். 9182

அப்போர்ப்படை மனத்தானிணைத் தருச்சித்துவைத் தறிப்பாய்
இப்போர்ப்படை தணைமற்றொரு செயல்செய்யலை என்னத்
துப்போர்ப்பதார் கணைகூட்டினன் துரந்தான் இடைதாடரா
வெப்போர்ப்பெரும்படையும்புகவிழுங்குற்றதார் இமைப்பில்.

ஈருகூ. விண்ணூர்த்தது மண்ணூர்த்தது மேலோர்மணி முரசின்
கண்ணூர்த்தது கடலார்த்தது மழையார்த்தது கலியோர்
எண்ணூர்த்தது மறைஆர்த்தது விசையம்என இயம்பும்
பெண்ணூர்த்தது அறமார்த்தது பிறஆர்த்தது பெரிதால். 9184

ஈசுஅ இறுகாலையில் உலகியாவையும் வீப்பான் இகல்படையை
மறுகாவகை புரிந்தான்அது வாங்கும்படி வல்லான்
தெறுகாலனில் கொடியோனுமற் றதுகண்டகந் திகைத்தான்
அறுகாவயக் கவிவீரரும் அரியாம்வகை அறிந்தார். 9185

ஈகூக. தெய்வப்படை முழுதிற்றது எனக்கூசுதல் சிதைவால்
எய்வித்தகம் உள அன்னது பிழையோஎன இசையாக்
கய்வித்தகம் அதனுள்சில கணைவித்தினன் அவையும்
மொய்வித்தகன் தடந்தோளினும் நுதற்சூட்டினும் மூழ்க. 9186

---

1 [பிரதி] பழுதாகிய.

ராசூஉ. வெய்யோன்மகன் முதலாகிய மிடலோர் மிகுதிறலோர்
கய்யோய்விலர் மழைமாரியின் நிருதக்கடல் கடப்பார்
உய்யார்என வடிவாளிகள் சதகோடிகள் உய்த்தான்
செய்யோன்அயல் தனிநின்றதன் சிறுதாதையைச் செறுத்தான்

*ராசூஙஉ. முரட்டடந்தண்டும்வந்தி மனிதரைமுறைமைகுன்றப்
பிரட்டரில் புகழ்ந்து பேதை அடியரில் தொழுது பின்சென்
றிரட்டுறு முரசம் என்ன இசைத்ததே இசைக்கின் முயைப்
புரட்டுவன் தலையை ஒன்றே பழியொடும் ஒழிவன் போலாம்.

ராசூசு. விழிபட முதல்வர் எல்லாம் வெதும்பினர் ஒதுங்கி வீழ
வழிபட உலகம் மூன்றும் அடிபட வந்த தேனும்
அழிபடை தாங்க லாற்றும் ஆடவர் யாண்டும் வைகார்
பழிபட வந்த வாழ்வை யாவரே நயக்கல் பாலார். 9189

ராசூருஉருள தீனையே உள்ள மின்ன நிருதர் எல்லாம்
வேறுள தீனியும் வீவர் இராவண னேடும் மீளார்
ஊருள தொருவன் நின்முய் நீஉளே உறைய நின்னே
டாருளர் அரக்கர் நிற்பார் அரசுவீற் றிருக்க ஐயா. 9190

ராசூரு. முந்தைநாள் உலகந்தந்த மூர்த்திவா னோர்கட்கெல்லாம்
தந்தையார் தந்தையாரைச் செருவிடை சாயத் தள்ளிக்
கந்தனூர் தந்தையாரைக் கயிலையோ டொருகைக் கொண்ட
எந்தையார் அரசு செய்வ திப்பெரும் பெலங்கொண்டேயோ.

ராசூஎ. பனிமலர்த்தவசின்மேலான் பார்ப்பன குலத்துக்கெல்லாம்
தனிமுதல் தலைவன் ஆனுய் உன்னைவந் தமரர் தாழ்வார்
மனிதருக் கடிமை செய்வாய் இராவணன் செல்வம் ஆள்வாய்
இனிதுள தெண்ணம் எந்தாய் எங்களோ டடங்கிற் றன்முல்.

ராசூஅ.சொல்வித்தும்பழிதந்துங்கைமூக்கிணைத்துணிந்தோராலே
எல்வித்தும் படைக்கை உங்கள் தமையனை எங்க ளோடு
கொல்வித்தும் தோற்று நின்ற கூற்றினூர் குலத்தை எல்லாம்
வெல்வித்தும் வாழும் வாழ்வில் வெறுமையே விழுமி தன்றே.

எழுதியேர் அணிந்த திண்தோள் இராவணன் இராமன் அம்பால்
புழுதியே பாயலாகப் புரண்டநாட் புரண்டு மேல்வீழ்ந்
தழுதியோ நீயும் கூட ஆர்த்தியோ அவனை வாழ்த்தித்
தொழுதியோ யாதோ செய்யத் துணிந்தனவிசையத்தோளாய்

ஈஎம். ஊனுடை உடம்பு நீக்கி மருந்தினுல் உயிர்பெற் றுய்யும்
மானிடர் இலங்கை வேந்தைக் கொல்வரே நீயும் அன்னுன்
தானுடைச் செல்வந் துய்க்கத் ததுதியோ சரத்தி னேடும்
வானிடைப் படுதி அன்றே யான்பழி மறுக்கில் என்ருன்.

ஈஎக. அவ்வுரை அமையக் கேட்ட வீடணன் அலங்கல் மோலி
செவ்விதில் துளக்கி மூரல் முறுவலும் தெரிவ தாக்கி
வெவ்வினை பாவம் சாலத் தருமமே விழுமி தையா
இவ்வுரை கேட்டி என்னு இனையன வீளம்பல் உற்ருன். 9196

ஈஎஉ. அறத்துணை ஆக அல்லால் அநுநர கமைய நல்கும்
மறத்துணை ஆக மாயாப் பழியொடும் வாழ மாட்டேன்
துறத்திலன் மெய்மை பொய்மை உம்மையே துறப்பதல்லால்
பிறத்திலன் இலங்கை வேந்தன் பின்னவன் பிழைத்த போதே.

உண்டிலன் நறவம் பொய்மை உரைத்திலன் வலியால் ஒன்றும்
கொண்டிலன் மாய வஞ்சம் குறித்திலன் யாரும் குற்றம்
கண்டிலர் என்பால் உண்டேல் நீயிருங் காண்டி ரன்றே
பெண்டிரில் திறம்பினுரைத்துறந்ததுபிழையிற்ருமோ. 9198

ஈஎச. மூவகை உலகும் ஏத்தும் முதல்வனே எவர்க்கும் மூத்த
தேவர்தம் தேவன் தேவி கற்பினில் சிறந்து ளாளே
நோவது செய்தல் தீதென் றுரைப்ப நுன் தாதை சீறிப்
போவெனப் போந்தேன் இன்று நரகத்தைப் பொருந்துவேனே,

ஈஎரு. வெம்மையில் தருமம் நோக்கீர் வேட்டதே வேட்டு ளீயும்
உம்மையே புகழும் பூணத் துறக்கமும் உமக்கே ஆக
செம்மையில் பொருந்தி மேலோர் ஓழுக்கினேடறத்தைத்தேறும்
எம்மையே பழியும் பூண நரகமும் எமக்கே ஆக. 9200

ஈஎசு. அறத்தினைப் பாவம்வெல்லா தென்னும் அதறிந்துதானே
திறத்தினும் உறும்என் றெண்ணித் தேவர்க்கும் தேவைச் சோந்தேன்
புறத்தினிப் புகழே ஆக பழியொடும் புணர்க போகச்
சிறப்பினிப் பெறுக போக என்றனன் சீற்றம் தீர்ந்தான். 9201

பெறுஞ்சிறப் பெல்லாம் என்கைப் பிறைமுக வாளி பெற்ருல்
இறுஞ்சிறப் பல்லால் அப்பால் எங்கினிப் பெறுதி என்னுத்
தெறுஞ்சிறைக் கலுழன் அன்ன தெறுகணேதெரிந்துசெம்பொன்
உறுஞ்சுடர்க் கழுத்தை நோக்கி நூக்கினன் உருமின் வெய்யோன். 9202

ஈஎஅ. அக்கணை அசனி என்ன அன்றென ஆலம்உண்ட
முக்கணன் சூலம் என்ன முடுகிய முடிவை நோக்கி
இக்கணத் திற்றுன் இற்றுன் என்கின்ற இடையே எய்தான்
கைக்கணை ஒன்றுல் வள்ளல் அதணைக்கண் டங்கள் கண்டான்.

கோல்ஒன்று துணித லோடும் கூற்றுக்கும் கூற்றம் அன்ன
வேல்ஒன்று வாங்கி விட்டான் வெயில்ஒன்று விழுந்த தென்ன
கால்ஒன்று மூன்று மான புவனங்கள் நடுங்க லோடும்
நூல்ஒன்று வரிவில் வல்லான் அதணையும் நுறுக்கி வீழ்த்தான்.

வேல்கொடு வெல்லல் உற்றுன் என்றெரு வெகுளி தோன்றக்
காலொடு காலில் கூடி கைதொடர் கனகத் தண்டால்
கோல்கொளும்ஒருவனேடும் அவன்நெடுங்கொடித்திண்தேரின்
பால்கொளும் புரவி எல்லாம் பரப்பினுன் துடிப்பும் பாற.9205

ஈஅக. அழிந்ததேர் மீது நின்றுன் ஆயிர கோடி அம்பு
பொழிந்தவன் தோளின் மேலும் இலக்குவன் புயத்தின்மேலும்
ஒழிந்தவர் உரத்தின் மேலும் உதிரநீர் உவரி ஓதம்
இழிந்திழிந் தோட நோக்கிப் பகிரண்டம் இடிய ஆர்த்தான்.

ஆர்த்தவன் அணையபோழ்தில் அழிவிலாத்தேர்கொண்டன்றிப்
போர்த்தொழில்வெல்லல் ஆகா தென்பதோர்பொருளே உன்னி
பார்த்தவர் இமையாமுன்னம் விசும்பிடைப் படர்ந்தான் என்னும்
வார்த்தையைநிறுத்திப்போனுன் இராவணன்மருங்குபுக்கான்.

உசு–வது நிகும்பலையாகப் படலம் – முற்றிற்று.

ஆகப்படலம் 118-க்கு கவி 9207

உஎ-வது இந்திர சித்துவதைப் படலம்.

க. விண்ணிடைக்கரந்தான்என்ன வஞ்சனைவினைக்கும்என்பார்
கண்ணிடை கலக்க நோக்கி ஐயுற உழக்குங்காலை
புண்ணுடை ஆக்கை செந்நீர் இழிதரப் புக்குநின்ற
எண்ணுடை மகனே நோக்கி இராவணன் இனைய சொன்னுன்.

உ. துடங்கியவேள்விமுற்றுப் பெற்றிலாத்தொழில்உன்தோள்மேல்
அடங்கிய அம்பே தோன்ற அறைந்தன அயர்வில் ஆக்கை
நடுங்கினே போலச் சாலத் தளர்ந்தனே கலுழன் நண்ணப்
படங்குறை அரவம் ஒத்தாய் உற்றது பகர்தி என்றுன். 9209

கூ. சூழ்வினை மாயம் எல்லாம் உம்பியே துடைக்கச்சுற்றி
வேழ்வியைச் சிதைய நூற வெகுளியால் எழுந்து வீங்கி
ஆழ்வினை ஆற்றல் தன்னுல் அமர்த்தொழில் துடங்கி யார்க்கும்
தாழ்விலாப் படைகள்மூன்றும்தொடுத்தனன்தடுத்துவிட்டான்.

சா. நிலம்செய்துவிசும்பும்செய்து நெடியமால் படைநின் ரூனை
வலம்செய்து போயிற் றென்ரூல் மற்றினி வலிய துண்டோ
குலம்செய்த பாவத் தாலே கொடும்பகை தேடிக் கொண்டோம்
சலம்செயின் உலக மூன்றும் இலக்குவன் முடிக்கும் தானே.9211

ஞ. முட்டிய செருவில் முன்னம் முதலவன் படையை முன்பா
விட்டிலர் உலகை அஞ்சி ஆதலால் வென்று மீண்டேன்
கிட்டிய போது காத்தார் இன்னமுங் கிளர வல்லார்
சுட்டிய வலியி னுலே கோறலைத் துணிந்து நின்ரூர். 9212

கூ. ஆதலால் அஞ்சி னேன்என் றருளலை ஆசை தான்அச்
சீதைபால் விடுதி ஆயின் அன்னவர் சிற்றம்தீர்வர்
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்ரூன் உலகெலாம்கலக்கிவென்ரூன்.

எ. இயம்பலும் இலங்கை வேந்தன் எயிற்றன நிலவும் எய்தப்
புயங்களும் குலுங்க நக்குப் போர்க்கினி ஒழிதீ போத
மயங்கினை மனமும் அஞ்சி வருந்தினை வருந்தல் ஐய
சயங்கொடு தருவன் இன்றே மனிதரைத் தனுஒன் ரூலே. 9214

அ. முன்னையோர் இறந்தார்எல்லாம்இப்பகைமுடிப்பர்என்றும்
பின்னையோர் நின்ரூர் எல்லாம் வென்றனர் பெயர்வர்என்றும்
இன்னம்நீ அவரை வென்று தருதிஎன் றுணர்ந்தும் இன்ரூல்
என்னையேநோக்கிநான்இந் நெடும்பகைகொண்டதென்ரூன்.

கூ.பேதைமை உரைத்தாய்பின்னாய்உலகெலாம்பெயரப்பேராக்
காதையன் புகழி னுெடு நிலைபெற அமரர் காண
மீதழு மொக்குள் அன்ன ஆக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோஇருபதுதிண்தோள்உண்டால்.9216

ஙி. வென்றிலன் என்ற போதும் வேதமுள் ளளவுநானும்
நின்றுளன் அன்றே மற்றவ் விராமன்பேர் நிற்கும் ஆகில்
பொன்றுதல் ஒருகா லத்தும் தவிருமோ பொதுமைத் தன்ரூே
இன்றுளார் நாளை மாள்வர் புகழுக்கும் இறுதி உண்டோ.9217

மக. விட்டனன் சனகி தன்னை என்றலும் விண்ணோர்நண்ணிக்
கட்டுவ தல்லால் என்னை யான்எனக் கருது வாரோ
பட்டனன் என்ற போதும் எளிமையில் படுகி லேனுல்
எட்டுமோ டிரண்டும் ஆன திசைகளை எறிந்து கொண்டேன்.

சொல்லியென் பலவும்நீயின் இருக்கையைத்தொடர்ந்துதோளில்
புல்லிய பகழி வாங்கிப் போர்த்தொழில் சிரமம் போக்கி
எல்லியுங் கழித்தி என்னு எழுந்தனன் எயிற்றுப் பேழ்வாய்
வல்லிய முனிந்த தென்ன வருகதேர் தருக என்றான். 9219

மங. எழுந்தவன் தன்னை நோக்கி இணையடி இறைஞ்சிளைத்தாய்
ஒழிந்தருள் சீற்றம் சொன்ன உரையைப் பொறுத்தி யானுங்
கழிந்தனன் என்ற பின்னும் நல்லவா காண்டி என்னு
மொழிந்துதன் தெய்வத் தேர்மேல் ஏறினன் மூடியல் உற்றான்

மச. படைக்கல விஞ்சை மற்றும் படைத்தன பலவும் தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன் அளித்தன தேர்மேல் ஆக்கிக்
கொடைத் தொழில் வேட்டோர்க் கெல்லாம் கொடுத்தபின் கொடியோன்
தன்னைக், கடைக்கண்ணுல் நோக்கி நோக்கிப் பிரிவினுல்
கலுழ்ந்து போனுன். 9221

இலங்கையின் நிருதர் எல்லாம் எழுந்தனர் விரைவின் எய்தி
விங்கலந் தோளாய் நின்னைப் பிரிகிலம் விளிதும் என்று
வங்கொடு தொடர்ந்தார் தம்மை மன்னனைத் காமின் யாதும்
கலங்கலீர் இன்றே சென்று மனிதரைக் கடப்பன் என்றான்.

வணங்குவார் வாழ்த்து வார்கள் வடிவினை நோக்கித் தம்வாய்
உணங்குவார் உயிர்ப்பார் உள்ளம் உருகுவார் வெருவல் உற்ற
கணங்குழை மகளிர் ஈண்டி இரைத்தவர் கடைக்கண் என்னும்
அணங்குறை நெடுவேல் பாயும் அமர்கடந் தரிதில் போனுன்.

மஎ. ஏயினன் இன்னன் ஆக இலக்குவன் எடுத்த வில்லன்
சேயிரு விசும்பை நோக்கி வீடண ஜியோன் அப்பால்
போயினன் ஆதல் ஒன்றும் புரிந்திலன் ஆகும் என்பான்
ஆயிரம் புரவி பூண்ட தேரின்பேர் அரவங் கேட்டான். 9224

*மஅ. குன்றிடை நெரிதர வடவரையின் குவடுருள்குவதெனமுகடுதொறும்
பொன்றிணிகொடியனதிடிஉரு மின்பொ திர்தரன்முரல்வதுபுனமணியின்
மின்திணி விரிசுடர் கடல்பரு கும்வட வனல்வெளி யுறவரு வதனைச்
சென்றது திசைதிசை உலகியத்திரி புவனமும் உறுகிற லிரதம். 9225

மகூ. கடல்மறு கிடஉல குலீயகெ டுங்கரி யிரிதர வெகீர்கவி குலமும்
குடர்மறு கிடமலீ உலீயகெ டுங்குழி யொடுகிழி படகிலீ குலீய
இடமறு கியபடி முடுகிட லும்இருள் உளதென எழும்இகல் அரவின்
படமறு கிடளதிர் விரவிய தவ்விருள் பகல்உற வருபகை இரதம். 9225

உல. ஆர்த்தது நிருதர்தம் அனிகமு டன்றம ரரும்வெரு வினர்கவி குலமும்
வேர்த்தது வெருவலோ டலமர லும்விடி கணிசித றினன்அடுதொழிலோன்
தீர்த்தனும் அவன்எதிர் முடுகிகெ டுங்கிசை செவிடெறி தரவிசை கெழுதிண்
போர்தொழில் புரிதலும்உலகெடும்புகையொடுசிகை அனல்பொதுளியதால்

வீடணன் அமலனீ விறல்கெழு போர்விடலீயைபினியிடைவிடல்உளதேல்
சூடலீ துறுமலர் வாகை எனத்தொழு தனன்அவ் வளவழ கணும்அக்
கோடணீ வரிகிலீ உலகுலீ யக்குல வரைபிதிர் படநில வரையும்
சேடனும்வெருவுற உரும்உறழ் திண்தெறு கணிமுறை முறைசித றிடலும்.

ஆயிரம் அளவின அவன்முக வாய்அடி கணிஅவன் விடஇவன் விடஅக்
தீயினும் எரிவன உயிர்பரு கிச்சித றினகவி களொடின நிருதர்
போயின போயின திசைநிறை யப்புரள் பவர்முடி வீலர்பொரு திறலோர்
ஏயின ஒருவரை ஒருவர் குறித்தெறி கணிஇரு மழைசொரிவனபோல்.9229

உஙு. அற்றன அனல்விழி நிருதன்வ ழங்கரி கணியிடை யிடைஅரி யினிளங்
கொற்றவன் விடுகணிய முடுகிய ன்உடல் பொதிர்குருதி கள்பருகினகொண்
டுற்றன ஒளிகிளர் கவசநு நைந்துறு கிலதெறு கில்அனு மனுடல்
பற்றிடை அரவென நுழைய நெடும்பொரு சரம்அவன் விடஉணர்கிலனால்.

உச. ஆபிடை இளையவன் விடநிணி வானவன் இடுகவ சமும்அழி வுபடத்
தூயினன் அயில்முக விசிகம்நெ டுந்துளை படவிழி புனல்சொரி யமுகந்
தேயின நிருதன தெரிகணிதாளிட னிலபடு வனவிடை இடைவந்
தோய்வுறு வனவது தெரிவுற லால்உர றினரீமையவர்உவ கையினால்.9230

வில்வினின் வலிதர வருமையி னால்வெயி லினுமினிவதோர் அயில்விரைவில்
செல்என மிடல்கொடு கடவினன் மற்றது திசைமுகன் மகன்உத வியதால்
எல்லீயை வெளிபட வருவது கண்டிளை யவன்எழு வகைமுனி வரர்நம்
சொல்லினும் வலியதொர் சுடுகணிய யால்நடு விருதுணி படஉர றினனால்.

உசு. ஆணியி னிலீபவன் விசிகது ழைந்தா யிம்உடல் புகஅழி வுபடும்
சோணித நிலம்உற உலறிட வுந்தொடு கணிதொடு வனமிடல் கெழுதிண்
பாணிகள் கடுகின முடுகிட லும்பக லவன்மரு மகன்எரி கணிவன்
தூணியின் உரும்உறழ் பகழிக ளால்துணி படமுறை முறைசித றினனால்.

தேருளதெனில்இவன்வலிதொலை யான்எனும்இதுதெரிகுறஉணர்குறுவான்
போருறு புரவிகள் படுகில தன்பிணி துணிகில அதுபொரு கணையால்
சீரிது பெரிதிதன் நிலைமைஎ னத்தெரி பவன்ஒரு தெறுசுடு கணையால்
சாரதி மணிபுரை தலையைஎ டுத்தரை யிடைஇடி தலுமுறை திரிய. 9233

*உ அ. கைவினை ஒருவன் தூண்டான் உலத்தலில் தவத்தை நண்ணி
ஐவினை நலிய நைவான் அறிவிற்கும் உவமை ஆகி
மெய்வினை அமைந்த காமம் விற்கின்ற விரகிற் றேராம்
பொய்வினை மகளிர்கற்பும்போன் றதப்பொலம்பொற்றிண் தேர்.

உகூ. துள்ளுபாய் புரவித் தேரும் முறைமுறை தானே தூண்டி
அள்ளினன் பறிக்கும் தன்பேர் ஆகமே யாவமாக
வள்ளல்மேல் அனுமன் தன்மேல் மற்றையோர் மாத்திண் தோள்மேல்
உள்ளுறப் பகழி தூண்டி ஆர்த்தனன் எவரும் உட்க. 9235

உஅ. வீரர்என் பார்கட் கெல்லாம் இனிமற்றிவ் வீரர் வீரன்
பேரர்என் பார்க ளாகப் பெற்றியில் பெற்றித் தாமே
சூரர்என் றுரைக்கற் பாலார் துஞ்சும்போ துணர்வில் சோராத்
தீரன்என் றமரர் பேசிச் சிந்தினர் தெய்வப் பொற்பூ. 9236

உக. எய்தவன் பகழி எல்லாம் பறித்திவன் என்மேல் எய்யும்
கைதடு மாறு துள்ளம் உயிர்இன்னும் கலங்கா தியாக்கை
மொய்கணை கோடி கோடி மொய்க்கவும் முடிகின் றில்லான்
ஐயனும் இவனே டெஞ்சும் ஆண்தொழில் ஆற்றல் என்ருன்.

தேரினைக் கடாவி விண்மேல் செல்லினும் செல்லும் செய்யும்
போரினைக் கடந்து மாயை புணர்க்கினும் புணர்க்கும் அப்பால்
காரினைக் கடந்து வஞ்சம் கருதினும் கருதும் காண்டி
வீரமெய்ப்பகலில் அல்லால்விளிகிலன் இருளில்வெல்வான். 9238

உகூ. என்றெடுத் திலங்கை வேந்துக் கிளையவன் இயம்பஇன்னே
பொன்றுவ தல்லால் அப்பால் இனிஒரு போக்கும் உண்டோ
சென்றுழிச் செல்லும் அன்றே தெறுகணை வலியில் தீர்ந்தான்
வென்றிஇப் பொழுதே கோடும் காண்என விளம்பும் வேலை.

உசு. செம்புனல் சோரிச் செக்கர்திசை உறச்சே ரலாலும்
அம்புடற் றுற்றகொற்றத் தாயிரங் கதிர்க ளாலும்
வெம்புபொற் றேரில்தோன் றும்விசையினும்அரக்கன்மெய்யோ
டும்பரில் செல்கின் றுன்ஒத் துதிக்கின்ருன் அருக்க னும்பால்.

நடு. விடிந்ததுபொழுது வெய்யோன்விளங்கினன்உலக மீதாய்
இடுஞ்சுடர் விளக்கம் என்ன அரக்கராம் இருளும் வீயக்
கொடுஞ்சின மாயச் செய்கை வலியொடும் குறைந்து குன்ற
முடிந்தனன் அரக்கன் என்னு முழங்கின தும்பர் முற்றும்.9241

நசு. ஆரழி யாத ஆலத் தந்தணன் அருளில் ஈந்த
தேரழி யாத போதும் சிலைகரத் திருந்த போதும்
போர்அழி யான்இவ் வெய்யோன் புகழ்அழி யாத பொற்றேள்
வீரஇ தாணை என்முன் வீடணன் விளைவ தோர்வான். 9242

நஎ. பச்சைவெம் புரவி வீயாப் பல்லியச் சில்லிப் பாரும்
நிச்சயம் அன்றி நீங்கா தென்பது நிகழ்ந்து வில்லின்
விச்சையின் கணவன் ஆன வன்மையால் வயிரம் இட்ட
அச்சிலை டாணி வெவ்வே முக்கினுள் ஆணை நீக்கி. 9242

நஅ. மணிநெடுந் தேரின் கட்டு விட்டது மறித தோடும்
அணிநெடும் புரவி எல்லா மாற்றலா முன அன்றே
திணிநெடு மரம்ஒன் முழி வாள்மழுத் தாக்கச் சிந்திப்
பணியொடு முதலும் நீங்கப் பாங்குறை பறவை போலும். 9243

நகூ. அழிந்ததேர்த் தட்டில் நின்றும்ஆங்குள படைகள்அள்ளிப்
பொழிந்தவை இளைய வீரன் கணைகளால் துணித்துப் போக்க
மொழிந்ததோர் அளவில் விண்ணை மூட்டினுன் உலம் மூன்றுங்
கிழிந்தன என்ன ஆர்த்தான் கண்டிலர் ஓசைகேட்டார். 9244

சஅ. மல்லின்மா மாரி யன்ன தோளினுன் மழையின் வாய்ந்த
கல்லின்மா மாரி பெற்ற வரத்தினுல் சொரியும் காலைச்
செல்லுவான் திசைகள் ஓரார் சிரத்தினை டுடலம் சிந்தப்
புல்லினுர் நிலத்தை நின்ற வானர வீரர் போல்வார். 9245

சக. காண்கிலன் கல்லின் மாரி அல்லது காலை வீரன்
சேண்கலந் தொளித்து நின்ற செயலினைத் தெளிந்து நோக்கிப்
மாண்கலந் தமைந்த மாயன் வடிவென முழுதும் வவ்வி
ஏண்கலந் தமைந்த வாளி ஏவினுன் இடைவி டாமல். 9246

சஉ. மறைந்தன திசைகள்எல்லா மாயம்போய்மறையுமாற்றும்
குறைந்தனன் இருண்டமேகக் குழாத்திடைக் குருதிக்கொண்மூ
உறைந்துள தென்ன நின்றுன் உருவினை உலகம் எல்லாம்
நிறைந்தவன் கண்டான் காணு னினையதோர் நினைப்ப தானுன்.

சிலைஅரு தெனினும் மற்றத் திண்ணியோன் திரண்டதோளாம்
மலைஅரு தொழியா தென்னு வடிக்கணை ஒன்று வாங்கிக்
கலைஅருத் திங்கள் அன்ன வாளியால் கையைக் கொய்தான்
விலைஅரு மணிப்பூ ணுடும் வில்லொடும் நிலத்து வீழ. 9248

சசு.பாகவான் பிறைபோல் வெவ்வாய்ச் சுடுகணைபடுத லோடும்
வேகவான் கொடுங்கால் எற்ற முற்றும்போய் விளியும்நாளின்
மாகவான் தடக்கை மண்மேல் விழுந்தது மணிப்பூண் மின்ன
மேகம்ஆ காசத் திட்ட வில்லொடும் வீழ்ந்த தென்ன. 9249

சஙு. படித்தலம் சுமந்தநாகம் பாகவான் பிறையைப் பற்றிக்
கடித்தது போலக் கோல வில்களால் இறுகக் கட்டிப்
பிடித்த வெஞ்சிலையி னோடு பேர்எழில் வீரன் பொற்றோள்
துடித்தது மரமுங் கல்லும் துகள்படக் குரங்கும் துஞ்ச. 9250

சஙூ. அந்தரம் அதனின் நின்ற வானவர் அருக்கன் வீழச்
சந்திரன் வீழ மேரு மால்வரை தகர்ந்து வீழ
இந்திர சித்தன் பொற்றோள் இற்றிடை விழுந்த தென்றால்
எந்திரம் அனைய வாழ்க்கை இனிச்சிலர் உகப்ப தென்னே, 9251

சஎ. மொய்யற மூர்த்தி யன்ன முன்பினுன் அம்பி னுல்அப்
பொய்யறச்சி றிதென்றெண் ணும்பெருமையான்புதல்வன் பூத்த
மையறக் கரிய தென்னும் மனத்தினுன் வயிரம் அன்ன
கையறத் தலையற் றுர்போல் கலங்கினுர் நிருதர் கண்டார். 9252

சஅ. அன்னது நிகழும் வேலை ஆர்த்தெழுந் தரியின் வெள்ளம்
மின்னெயிற் றரக்கர் சேனை யாவரும் மீளா வண்ணம்
கொன்னகக் கரத்தால் காலால் மரங்களால் மானக் குன்றால்
பொன்னுடை நாட்டை எல்லாம் புதுக்குடி ஏற்றிற் றன்றே.

காலங்கொண் டெழுந்த மேகக் கருமையான் செம்மை காட்டும்
ஆலங்கொண் டிருண்ட கண்டத் தமரர்கோன் அருளில் பெற்ற
சூலங்கொண் டெறிவன்என்று தோன்றினன் பகையிற்றோன்ற
மூலங்கொண் டுணரா நின்ஙை முடித்தன்றி முடியேன் என்னு.

காற்றென்ன உரும்ஏ றென்னக் கனல்என்னக்கடைநாள்உற்ற
கூற்றமோர் சூலங் கொண்டு குறுகிய தென்னக் கொல்வான்
தோற்றினுன் தன்னைக் காணு இனித்தலை துணிக்குங் காலம்
ஏற்றதென் றயோத்தி வேந்தற் கிளையவன் இனைய செய்தான்.

ருக. மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கல் பாலோன்
இறையவன் இராம னேஅந் நல்அற மூர்த்தி என்னில்
பிறைஎயிற் றிவனைக் கோறி என்றொரு பிறைவாய் வாளி
நிறைவுற வாங்கி விட்டான் உலகெலாம் நிறுத்தி நின்றான்.

ருஉ. நேமியுங் குலிச வேலும் நெற்றியின் நெருப்புக் கண்ணுன்
நாமவேல் தானு மற்றை நான்முகன் படையும் நாணத்
தீமுகங் கதுவ ஓடிச் சென்றவன் சிரத்தைத் தள்ளிப்
பூமழை மாரி சிந்தப் போந்ததப் பகழிப் புத்தேள். 9259

ருங. அற்றவன் தலைமீ தோங்கி அண்டமுற் றணுகா முன்னம்
பற்றிய சூலத் தோடும் உடல்உறை பகழி யோடும்
எற்றிய காலக் காற்றுல் மின்னெடும் இடியி னேடும்
இற்றொரு காளமேகம் வீழ்ந்தென வீழ்ந்த யாக்கை. 9260

ருச. விண்டலத் திரண்டு திங்கள் இரண்டென மின்னின் வீசும்
குண்டலத் துணைக ளோடும் கொந்தளக் குஞ்சி சிங்கேழ்ச்
சண்டவெங் கதிரின் கற்றைத் தழையொடும் இரவி தான்அம்
மண்டலம் வீழ்ந்த தென்ன வீழ்ந்தது தலையும்மண் மேல். 9261

ருரு. உயிர்புறத் துற்ற காலை உள்நின்ற உணர்வி னேடும்.
செயிர்அறு பொறியும் மற்றைக் கரணமும் சிந்து மாபோல்
அயில்எயிற் றரக்கர் உள்ளார் ஆற்றலர் ஆகி ஆற்ற
வெயிலுடை இலங்கை நோக்கி இரிந்தனர் படையும் விட்டார்.

ருசு. வில்லாளர் ஆனுர்க் கெல்லாம் மேலவன் விளித லோடும்
செல்லாதவ் இலங்கை வேந்தற் கரசெனக் களித்த தேவர்
எல்லாரும் தூசு நீக்கி ஏறிட ஆர்த்த போது
கொல்லாத விரதத் தார்தங் கடவுளர் கூட்டம் ஒத்தார். 9263

ருள. வரந்தரு முதல்வன் மற்றை மான்மறிக் கரத்து வள்ளல்
புரந்தரன் முதல்வ ராய நான்மறைப் புலவர் ஆனேர்
நிரந்தரம் தோன்ற நின்ருர் அருளினுல் நிறைந்த நெஞ்சர்
கரந்திலர் அவரை யாக்கை கண்டன குரங்கு கண்ணுல். 9264

அறந்தலை நின்ருர்க் கில்லை அறிவென்ப தறிஞர் வார்த்தை
சிறந்தது சரங்கள் பாயச் சிந்திய சிரத்தர் ஆகிப்
புறந்தலை அதனின் வந்த பாதக அரக்கன் கொல்ல
இறந்தன கவியும் எல்லாம் எழுந்தன இமையோர்ஏத்த. 9265

சுக. ஆக்கையி லின்று வீழ்ந்த அரக்கன்செந் தலையை அங்கை
தூக்கினன் துள்ளுங் கூத்தன் வாளிசேய் தூசி செல்ல
மேக்குயர்ந் தமரர் வெள்ளம் இடைவிடார் வீசு கின்ற
பூக்கிளர் பந்தர் நீழல் அனுமன்மேல் இளவல் போனான். 9266

சுஎ. வீங்கிய தோளன் தேய்ந்து மெலிகின்ற விழியன் மீதுற்
றோங்கிய முடியன் திங்கள் ஒளிபெறு முகத்தன் உள்ளால்
வாங்கிய துயரன் மீப்போய் வளர்கின்ற புகழன் வந்துற்
றோங்கிய உவகை யாளன் இந்திரன் உரைப்ப தானான். 9267

எல்லிவாண் மதியின் உற்ற கரைஎன இரண்டு மென்தோள்
புல்லிய வடுவும் போகா தென்றகம் புழுங்கு கின்றேன்
வில்லியர் [1]ஒருவர்கல்க துடைத்துறும் வெறுமை தீர்ந்தேன்
செல்வமும் பெறுதற் குண்டே குறையினிச் சிறுமை யாதோ.

சுஉ. தென்றலை ஆடி தொட்டோன் சேயருள் சிறுவன் செம்மல்
வென்றலைத் தென்னை ஆர்த்துப் போர்த்தொழில் கடந்த வெய்யோன்
தன்தலை எடுப்பக் கண்டு தானவர் தலைகள் சாய
என்தலை எடுத்தேன் இன்னம் தனிக்குடை எடுப்பன் என்றான்.

சுஙு. வரதன் போய் மறுகாகின்ற மன்னன்மா மாயத்தோனைச்
சரதம்போர் வென்று மீளும் தருமமே தாங்க என்பான்
வீரதம்பூண் டுயிரி னோடும் தன்னுடை மீட்சி நோக்கும்
பரதன்போன் றிருந்தான்தம்பி வருகின்ற பரிசைப் பார்த்தான்

சுச. வன்புலங் கடந்து மீளும் தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயனம் என்னும் தாமரை சொரியும் தாரை
அன்புகொல் கழிகண் நீர்கொல் ஆனந்த வாரியே கொல்
என்புற உருகிச் சோரும் கருணைகொல் யார தோர்வார். 9271

சுரு. விழுந்தழி கண்ணி னீரும் உவகையும் களிப்பு வீங்க
எழுந்தெதிர் வந்த வீரன் இணையடி முன்னர் இட்டான்
கொழுந்தழி சுடரின் கற்றைக் குழாங்கொள எயிற்றின் கூட்டம்
அழுந்துறக் கடித்த பேழ்வாய்த் தலையடி உறைஒன் றுக. 9272

சுசு. தலையினை நோக்கும் தம்பி கொற்றவை தழுவு பொற்றோள்
மலையினை நோக்கும் நின்ற மாருதி வலியை நோக்கும்
சிலையினை நோக்கும் தேவர் செய்கையை நோக்கும் செய்த
கொலையினை நோக்கும் ஒன்றும் உரைத்திலன் களிப்புக் கொண்டான்.

---

1 [பிரதி] ஒருவர்கல்க.

சுஎ. காளமே கத்தில் செக்கர் கலந்தெனக் கரிய குன்றின்
நாள்வெயில் பரந்த தென்ன நம்பிதன் தம்பி மார்பில்
தோளின்மேல் உதிரச் செங்கேழ் சுவடுதன் உருவில் தோன்றத்
தாளின்மேல்வணங்கினானைத் தழுவினன் தனித்தோன்றில்லான்.

சுஅ. தூக்கினன் தூணி வாங்கித் தோளொடும் மார்பில் சுற்றித்
வீக்கிய கவச பாசம் விசித்தது வீரகில் நீக்கித்
தாக்கிய பகழிக் கூர்வாய் தடிந்தபுண் தழும்பும் இன்றிப்
போக்கினன் தழுவிப் பல்கால் பொற்றடந் தோளின் ஒற்றி.

ஆடவர் திலக நின்னுல் அன்றிந்த அனுமன் என்னும்
சேடனுல் அன்று மற்றோர் தெய்வத்தின் சிறப்பும் அன்று
வீடணன் தந்த வெற்றி ஈதென விளம்பி மெய்மை
ஏடவிழ் அலங்கல் மார்பர் இருந்தனர் இனிதின் இப்பால்.9276

உஎ-வது இந்திர சித்துவதைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 119-க்கு கவி 9276

உஅ-வது இராவணன் சோகப்படலம்.

க. ஓத ரோதமர் வேலை கடந்துளார்
பூத ரோதரம் புக்கெனப் போர்த்திழி
சீத ரோதக் குருதித் திசையொரீஇ
தூதர் ஓடினர் தாதையில் சொல்லுவான். 9277

உ. அன்றி லங்கரும் பேடைக ளாம்என
முன்றில் எங்கும் அரக்கியர் மொய்த்தழ
இன்றி லங்கை அழிந்ததென் றேங்குவார்
சென்றி லங்கையில் தாதையில் சேர்ந்துளார். 9278

ங. பல்லும் வாயும் மனமும்தம் பாதமும்
நல்ல யிர்ப்பொறை யோடு நடுங்குவார்
இல்லை ஆயினன் உன்மகன் இன்றெனச்
சொல்லு வார்பயம் சுற்றத் துளங்குவார். 9279

சு. மாடி ருந்தனர் வானவர் மாதர்கள்
ஈடில் நுண்ணிடை யார்மற்றி யாவரும்
வீடும் இன்றிவ் வுலகென விம்முவார்
ஓடி எங்கணும் சிந்தி ஒளித்தனர். 9280

ரு. சுடர்க்கொ ழும்புகை தீவிழி தூண்டிடத்
தடத்து வாள்உரு வித்தருந் தூதரை
மிடற்று வீசலு ருவிழுந் தானரோ
கடற்பெ ருந்திரை போற்கரஞ் சேரவே. 9281

சு. வாய்ப் பிறந்தும் உயிர்ப்பின் வளர்ந்துவான்
காய்ப் புறுந்தொறும் கண்ணிடை காந்தியும்
போய்ப் பிறந்திவ் வுலகைப்பொ தியும்வெந்
தீய்ப்பி றந்துள தின்றெனச் செய்ததால். 9282

எ. படம் பிறங்கிய பாந்தளும் பாரும்பேர்ந்
திடம் பிறங்கி யலம்பெயர்ந் தீடுற
உடம் பிறங்கிக் கிடந்துதைத் தோங்குதீ
விடம் பிறந்த கடல்என வெம்பினான். 9283

அ. திருகு வெஞ்சினத் தீநிகர் சீற்றமும்
பெருகு காதலும் துன்பும் பிறழ்ந்திட
இருப தென்னும் எரிபுரை கண்களும்
உருகு செம்பென ஊறின தூற்றுநீர். 9284

கூ. கடித்த பற்குலம் கற்குலம் கண்ணற
இடித்த காலத் துரும்என எங்கணும்
அடித்த கைத்தலத் தம்மலை ஆழிநீர்
வெடித்த வாய்தொறும் பொங்கின மீச்செல. 9285

எ. மைந்த வோஎனும் மாமக னேஎனும்
எந்தை யோஎனும் என்மக னேஎனும்
முந்தி னேன்உனை நான்உளை னேஎனும்
வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான். 9286

எக. புரந்த ரன்பகை போயிற்றன் றேஎனும்
அரந்தை வானவர் ஆர்த்தன ரோஎனும்
கரந்தை சூடியும் பால்கடல் கள்வனும்
நிரந்த ரம்பகை நீங்கின ரோஎனும். 9287

எஉ. நீறு பூசியும் நேமியும் நீங்கினர்
மாறு குன்றெடு வேலை மறைந்துளார்
ஊறு நீங்கின ராய்உவ ணத்திலை
டேறும் ஏறி யுலாவுவர் என்னுமால். 9288

மஉ. வான மானமும் வானவர் ஈட்டமும்
போன போன திசையிடை புக்கன
தான மானவை சார்கில சார்குவ
தூன மானிடர் வென்றிகொண் டோஎனும். 9289

மச. எழும் இருக்கும் நடக்கும் இரக்கமுற்
றழும் அரற்றும் பரக்கும் அழைக்கும்போய்
விழும் விழிக்கும் முகுழ்க்கும்தன் மேனியால்
உழு நிலத்தை உருளும் புரளுமால். 9290

மடு. கெட்ட தூதர் கிளத்தினர் போயொரு
கட்ட மானிடன் சொல்லஎன் காதலன்
பட்டொ ழிந்தன னேஎனும் பன்முறை
விட்ட ழைக்கும் உழைக்கும் வெதும்புமால். 9291

மசு. அய்ய னேஎனும் ஓர்தலை யான்இனம்
செய்வ னேஅர சென்னும்அங் கோர்தலை
கைய னேஉனைக் காட்டிக் கொடுத்தயான்
உய்வ னேஎன் றுரைக்கும்அங் கோர்தலை. 9292

மஎ. எழுவிற் கோலம் எழுதிய தோள்களால்
தழுவிக் கொள்கிலை யோஎனும் ஓர்தலை
உழுவைப் போத்தை உழைஉயிர் உண்பதோ
செழுவிற் சேவக னேஎனும் ஓர்தலை. 8293

மஅ. காகம் ஆடு களத்திடைக் காண்பனேல்
பாக சாதனன் மோலியோ டும்பறித்
தோகை மாதவ உச்சியின் வைத்தநின்
வாகை நாண்மலர் என்னும்மற் றோர்தலை. 9294

மக. நீலங் காட்டிய கண்டனும் நேமியும்
மேலுங் காட்டில் எறிந்த படைஎலாம்
தோலுங் காட்டித் துரந்தனை மீண்டுநின்
கோலங் காட்டிலை யோஎனும் ஓர்தலை. 9295

உம. சேல் இயல்கண் இயக்கர்தம் தேவிமார்
மேல் இனித்தவிர் கிற்பர்கொல் வீரநுங்
கோல விற்குரல் கேட்டுக் குலுங்கித்தந்
தாலி யைத்தொடல் என்னுமற் றோர்தலை. 9296

உக. துஞ்சும் போது துணைபிரிந் தேன்எனும்
வஞ்ச மோஎனும் வாரலை யோஎனும்
நெஞ்சு நோவ நெடுந்தனி யேகிடந்
தஞ்சி னேன்என் றரற்றும்அங் கோர்தலை. 9297

உஉ. கூற்றம் உன்னெதிர் வந்துயிர் கொள்வதோர்
ஊற்றம் தானுடைத் தன்றெனீ யும்ஓழித்
தேற்ற வெவ்வுல குற்றனீ எல்லையில்
ஆற்ற லாய்என் றுரைக்கும்அங் கோர்தலை. 9298

உங. இன்ன வாறழைத் தேங்குகின் றுன்எழுந்
துன்னு மாத்திரத் தோடினன் ஊழிநாள்
பொன்னின் வானன்ன போர்களம் புக்கனன்
நன்ம கன்றன தாக்கையை நாடுவான். 9299

உச. தேவ ரேமுத லாகிய தேவர்கள்
ஏவ ரும்உட னேதொடர்ந் தேகினர்
மூவ கைப்பே ருலக முறைமையும்
யாவ தாகும்இன் றென்ன இரங்குவார். 9300

உரு. அழுத வால்சில அன்பினர் போன்றடி
தொழுத வால்சில துலங்கின வால்சில
உழுத வாணப் பிணம்புக் கொளித்தவால்
கழுதும் புள்ளும் அரக்கனைக் காண்டலும். 9301

உசு. கோடி கோடி குதிரையின் கூட்டமும்
ஆடல் வென்றி அரக்கர்தம் ஆக்கையும்
ஓடை ஒண்கரி தேரும் உழக்கினன்
நாடி னுன்தன் மகன்உடல் நாள்எலாம். 9302

உள. மெய் கடந்து விழிவழி நீர்உக
நெய் கடந்த கனல்புரை நெஞ்சினன்
மொய் கிடந்த சிலையொடு மூரிமாக்
கை கிடந்தது கண்டனன் கண்களால். 9303

உஅ. பொங்கு தோள்வலி யும்வீரல் புட்டிலோ
டங்க தங்களும் அம்பும் இலங்கிட
வெங்கண் நாகம் எனப்பொலி மெய்க்கையைச்
செங்கை யால்எடுத் தான்சிரம் சேர்த்தினன். 9304

உக. கற்றிண் மார்பில் தழுவும் கழுத்திறச்
சுற்றும் சென்னியில் சூட்டும் சுழற்கணே
டொற்று மோந்துள் ளுருகும் உழைக்குமால்
முற்று நாளில் விடுநெடு மூச்சினான். 9305

நம. கைகண் டான்பின் கருங்கடல் போன்றவம்
மெய்கண் டான்அதில் மேல்விழுந் தான்அரோ
பெய்கண் டாரை அருவிப் பெருந்திரை
உய்கண் டார்திரை வேலியின் ஓட்டுவான். 9306

நக. அப்பு மாரி அழுத்திய மார்பைத்தன்
அப்பு மாரி அழுதிழி யாக்கையில்
அப்பு மார்பில் அணைக்கும் அரற்றுமால்
அப்பு மான்உற்ற தியாவர்உற் றார்அரோ. 9307

நஉ. பறிக்கும் மார்பில் பகழியைப் பன்முறை
முறிக்கும் மூர்ச்சிக்கும் மோக்கும் முயங்குமால்
எறிக்கும் வெங்கதி ரோடுல கேழையும்
கறிக்கும் வாயில்இட் [1]டின்றெனக் காந்துவான். 9308

நங. தேவ ரோடு முனிவரும் சீரியோர்
ஏவ ரோடும் உடன்திரி கின்றிலர்
மூவ ரோடும் உலகொரு மூன்றெடும்
போவ தேகொல் முனிவெனும் பொம்மலார். 9309

நச. கண்டி லன்தலை காதிய மானிடர்
கொண்டி றந்தனர் என்பது கொண்டவன்
புண்டி றந்தனன் நெஞ்சம் பொருமலன்
விண்டி றந்திட விம்மி அரற்றினான். 9310

*நசு. நிலையின்மா திரத்து நின்ற யானையும் நெற்றிக் கண்ணன்
தலையும்ஆ ருயிருங் கொண்டார் எனஉடல் தாங்கி நின்ற
புலையனேன் எனினும் ஆவி சுமக்கின்றேன் போலும் போலும்.

நஎ. எரிஉண அளகை மூதூர் இந்திரன் இருக்கை எல்லாம்
பொரிஉண உலக மூன்றும் பொதுவறப் புரந்தேன் போலாம்
அரிஉணும் அலங்கல் மோலி என்மகன் அழிந்த யாக்கை
நரிஉணக் கண்டேன் ஊரில் நாய்உணும் உணவு நன்றால். 9312

---

1 [பிரதி] டென்றெனக்

நஎ. பூண்டொரு பரைமேல் புக்கென் புத்திர னேடும்போனூர்
மீண்டிலர் விளிந்து வீழ்ந்தார் விரதியர் இருவ ரோடும்
ஆண்டுளர் குரங்கும் ஒன்றும் அமர்க்களத் தாரும் வந்து
மாண்டிலர் இனிமற் றுண்டோ இராவணன் வீர வாழ்க்கை.

நஅ. கந்தற்பர் இயக்கர் சித்தர் அரக்கர்தம் கன்னி மார்கள்
சிந்தொக்கும் சொல்லி னூர்உன் தேவியர் திருவின் நல்லார்
வந்துற்றென் கணவன்தன்னைக் காட்டென்று மருங்குவீழ்ந்தால்
வெந்தொக்கஅரற்றவோநான்கூற்றையும்வெற்றிகொண்டேன்.

நகூ. சினத்தொடு கொற்ற முற்றி இந்திரன் செவ்வள் தேவி
நிகீனத்தது முடித்து நின்றேன் நேரிழை ஒருத்தி கீரால்
எனக்குநீ செய்யத் தக்க கடன்எலாம் இரங்கி ஏங்கி
உனக்குநான் செய்வதானேன் என்னில்யார் உலகின் உள்ளார்.

சஎ. என்பன பலவும் பன்னி எடுத்தழைத் திரங்கி ஏங்கி
அன்பினன் மகனைத் தாங்கி அரக்கியர் அரற்றி வீழப்
பொன்புனை நகரம் புக்கான் கண்டவர் புலம்பும் பூசல்
ஒன்பது திசையும் மற்றை ஒருதிக்கும் உற்ற தன்றே. 9316

சக. கண்களைச் சூழ்கின் றருரும் கழுத்தினைத் தடிகின் றருரும்
புண்படத் துறந்து மார்பில் ஈருளைப் போக்கு வாரும்
பெண்கள்புக் குருகி நாவை உயிரொடும் பிடுங்கு வாரும்
எண்களில் பெரியர் இந்த இருந்துயர் பொறுக்க லாதார்.

சஉ. மாதிரம் கடந்த வீரன் மைந்தன்தன் மகுடச் சென்னி
போதலர் துறந்த யாக்கை பொறுத்தனன் போதக் கண்டார்
ஓதநீர் வேலை உள்ளார் கண்களால் உகுத்த வெள்ளக்
காதல்நீர் ஓடிப் பார்சூழ் கருங்கடல் மடுத்த தன்றே. 9318

சங. ஆவியின் இனிய காதல் அரக்கியர் முதல்வ ராய
தேவியர் குழாங்கள் சுற்றிச் சிரத்தின்மேல் தளிர்க்கைசேர்த்தி
ஓவியம் வீழ்ந்து வீழ்ந்து புரள்வன ஒப்ப ஒல்லை
கோவியல் கோயில் புக்கான் குருதிநீர்க் குமிழிக் கண்ணன்

சச. கருங்குழல் கற்றைப் பாரங் கால்தொடக் கமலப் பூவால்
குரும்பையைப்புடைக்கின் றுள்போல்கைகளால்முலையில்கொட்டி
அருங்கலத் தளிர்ப்பொற் பாதம் நிலத்தொடு மதுவே என்று
மருங்குலும் உண்டுண் டென்ன மயன்மகள் மறுகி வந்தாள்.

தலையின்மேல் சுமந்தகையாள் தழலின்மேல் மிதிக்கின் றுள்போல்
நிலையின்மேல் பதைக்கும் தாளாள் ஏக்கத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேல் குறித்த வேடன் கூர்ங்கணை உயிரைக் கூட
மலையின்மேல் மயில்வீழ்ந் தென்ன மயன்மகள் மறுகிவீழ்ந்தாள்.

உயிர்த்திலள் உணர்வும் இல்லாள் உயிர்இலள் கொல்லோ என்னப்
பெயர்த்திலள் யாக்கை ஒன்றும் பேசலள் அல்லதி யாதும்
வெயர்த்திலள் நெடிது போது விம்மினள் மெள்ள மெள்ள
அயர்த்தனள் அரிதில் தேறி வாய்திரந் தரற்றல் உற்றாள். 9322

சள. கலையினுல் திங்கள் என்ன வளர்கின்ற காலத் தேஉன்
கிலையினுல் அரியை வெல்லக் காண்பதோர் தவமும் செய்தேன்
தலையிலா ஆக்கை காண எத்தவம் செய்தேன் அந்தோ
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவனே நினைவி லாதேன்.

சஅ. அய்யனே அமுக னேஎன் அரும்பெறல் மருந்தே ஆரிக்
கையனே மழுவ னேஎன் றிவர்வலி கடந்த காலை
மொய்யனே முளரி அன்ன நின்முகம் கண்டி லாதேன்
உய்வனே உலக மூன்றிற் கொருவனே சிலைவ லோனே. 9324

சக. தாளரிச் சதங்கை ஆர்க்கும் பருவத்தே தளிர்க்கை தன்னுல்
கோளரி இரண்டு பற்றிக் கொணர்ந்தனை கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்தி மாட முன்றிலின் முறையி னுேடு
மீளரும் விளையாட் டின்னும் காண்பனே விதியி லாதேன். 9325

சுஎ. அம்புலி அம்ம வாஎன் றழைத்தலும் அவிர்வெண் திங்கள்
நம்பஉன் தாதை ஆணைக் கஞ்சினன் மருங்கு நண்ண
வம்புறு மறுவைப் பற்றி முயல்என வாங்கும் வாழ்க்கை
எம்பெரும் களிறே காண வேசற்றேன் எழுந்தி ராயோ. 9326

சுக. இயக்கியர் அரக்கர் மாதர் விஞ்சையர் ஏழை மார்கள்
முயற்கறை யிலாத திங்கள் முகத்தியர் முழுதும் நின்னை
நயக்குனர் மருள நீநின் நளிர்முகம் காட்டி நல்காய்
அயர்த்தனை உறங்கு வாயோ அமர்பொரு தலசி னுயோ. 9327

சுஉ. முக்கணுன் முதலி னுேரை உலகொரு மூன்றி னுேடும்
புக்கபோர் எல்லாம் வென்று நின்றனன் புதல்வன் போலாம்
மக்களில் ஒருவன் கொல்ல வாழ்வதே வான மேரு
உக்கமென் காலால் வேரோ டொடிவதும் உளதே அம்மா.

ருக. பஞ்செரீ உற்றதென்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்ட தில்லை
அஞ்சினேன் அஞ்சினேன்அச் சீதைஎன் றமுதால் செய்த
நஞ்சினுல் இலங்கை வேந்தன் நாளோஇத் தகையன்அன்றே.

ருச. என்றழைத் தேங்க நோக்கி இத்துயர் எமர்கட் கெல்லாம்
பொன்தழைத் தணைய அல்குல் சீதையால் புகுந்த தென்ன
வன்தழைக் கல்லின் நெஞ்சின் வஞ்சகத் தாளோ வாளால்
கொன்றிழைத் திடுவன்என்னு ஓடினன் அரக்கர் கோமான்.

ருடு. ஓடுகின் றானை நோக்கி உயர்பெரும் பழியின் உச்சி
சூடுகின் றன்என் றஞ்சி மகோதரன் துணிந்த நெஞ்சன்
மாடுசென் றடியின் வீழ்ந்து வணங்கிஉன் புகழ்க்கு மன்னு
கேடுவந் துற்ற தென்ன இனையன கிளக்க லுற்றான். 9331

ருசு.மங்கையைக் குலத்துளாளைத் தவத்தியை முனிந்து வாளால்
சங்கையொன் றின்றிக் கொன்றுல் குலத்துக்கே தக்கான் என்று
கங்கையஞ் சென்னி யானும் கண்ணனும் கமலத் தானும்
செங்கையும் கொட்டி உன்னைச் சிரிப்பரால் சிறியை என்னு.

ருள. நீருள தனையும் சூழ்ந்த நெருப்புள தனையும் மீண்ட
பாருள தனையும் காயப் பரப்புள தனையும் காலின்
பேருள தனையும் பேராப் பெரும்பழி பிடித்தி போலாம்
போருள தனையும் வென்று புகழ்உள தனையும் உள்ளாய்.

ருஅ. தெள்ளருங் கால கேயர் சிரத் தொடுங் திசைக்கை யானை
வெள்ளிய மருப்புச் சிந்த வீசிய விசைய ஒள்வாள்
வள்ளிய மருங்குல் செவ்வாய் மாதர்மேல் வைத்த போது
கொள்ளுமோ தான வாவி நாணத்தால் குறைவ தல்லால். 9334

ருக. நிலத்தியல் பன்று வானின் நெறியன்று புறத்தின் நின்ற
தலத்தியல் பன்று மேலோர் தருமமேல் அன்று தக்க
புலத்தியன் மரபில் வந்து புண்ணிய விரதம் பூண்டாய்
வலத்தியல் பன்று மாயாப் பழிகொள மறுகு வாயோ. 9335

சுரு. இன்றுநீ இவளை வாளால் எறிந்தனை மனிதன் தன்னை
வென்றுமீண் டிலங்கை மூதூர் எய்தினை வெதும்பு வாயோ
பொன்றினள் சீதை இன்று புரவல புதல்வன் தன்னைக்
கொன்றவர் தம்மைக் கொல்லக் கூசினை கொள்க என்னான்.

கூக. என்னலும் எடுத்த கூர்வாள் இருநிலத் திட்டு மீண்டு
மன்னவன் மைந்தன் தன்னீ மாற்றலா வலியில் கொண்ட
சின்னமும் அவர்கள் தத்தம் சிரமுங்கொண்டன்றிச் சேர்த்தேன்
துன்னெறி தயிலத்தோணி வளர்த்துமின் என்னச் சொன்னான்.

உஅ–வது, இராவணன் சோகப்படலம் – முற்றிற்று.

சோகப்படலம், 120-க்கு கவி 9337.

உகூ-வது, மூலபல வரவு காண்படலம்

க. அத்தொழில் அவரும் செய்தார் ஆயிடை அனைத்துத்திக்கும்
பொத்திய நிருதர் தானை கொணரிய போன தூதர்
ஒத்தனர் அணுக வந்து வணங்கினர் இலங்கை யுன்னூர்
பத்தியின் அடைந்த தானைக் கிடம்இல்லை பணிஎன் என்றார்.

உ. ஏம்பலுற் றெழுந்த மன்னன் எவ்வழி எய்திற் றென்னக்
கூம்பலுற் றெழுந்த னையர் ஒருவரி கூற லாமோ
வாம்புனல் பரவை ஏழும் இறுதியின் வளர்ந்த தென்னத்
தாம்பொடித் தெழுந்ததானைக் குலகிடம்தரம் இல்என்றார்.

ங. மண்ணுற நடந்த தானை வளர்ந்தமா தூளி மண்ட
விண்ணுற நடக்கின் றாரும் மிதித்தனர் ஏக மேன்மேல்
கண்ணுற அருமை காணக் கற்பத்தின் முடிவில் கார்போல்
எண்ணுற அரிய சேனை எய்திய திலங்கை நோக்கி. 9340

ச. வாட்டனில் வயங்க மின்னு மழையதில் இருள மாட்டா
வீட்டிய முரசின் ஆர்ப்பை இடிப்பெதிர் முழங்க மாட்டா
மீட்டினி உவமை இல்லை வேலைமேல் சென்ற என்னில்
தீட்டிய படையு மாவும் யானையும் தேரும் செல்ல. 9341

உலகினுக் குலத போய்ப்போய் ஒன்றின் ஒன் றெதுங்கஉற்ற
தொலைவருந் தானை மேன்மேல் எழுந்தது தொடர்ந்து சுற்ற
நிலவினுக் கிறையும் மீனும் நீங்கின நிமிர நின்ற
அலரிய முந்து செல்லும் ஆறுநீத் தஞ்சி அப்பால். 9342

சு. மேற்பட விசும்பை மூட்டி மேருவின் விளங்கி விண்ட
நாற்பெரு வாயி லூடும் இலங்கைஊர் நடக்குந் தானை
காற்றடங் கடலை மற்றோர் இடத்திடை காலன் தானே
சோர்ப்பது போன்ற தியாண்டுசுமைபொரு துலகம்என்ன.

எ. நெருக்கிடை வாயில் ஊடு புகும்எனில் நெடிது காலம்
இருக்கும்அத் தகைமையே என்னு மதிலினுக் கும்பர் எய்தி
அரக்கர தலங்கை உற்ற அண்டங்கள் அனைத்தின் உள்ள
கருக்கிளர் மேகம் எல்லாம் ஒருங்குடன் கலந்த தென்ன.

அ. அதுபொழு தரக்கர் கோனும் ஆகில்அத் தாணி புக்கான்
பொதுவுற நோக்கல் உற்றான் ஒருவழி போகப் போக
விதிமுறை காண்பன் என்னும் வேட்கையான் வேலை வீழும்
கதுமென ஓழுங்கு நோக்கும்பதையில் ஈதல்கொண்டான்.

கூ. மாதிரம் ஒன்றின் நின்று மற்றொரு திசைமேல் மண்டி
ஓதநீர் செல்வ தென்னத் தானையை உணர்வு கூட்ட
வேதவே தாந்தங் கூறும் பொருளினை விரிக்கின் முற்போல்
தூதுவர் அணிகள் தோறும் வரன்முறை காட்டிச் சொல்வான்

*எ. சாகத் தீவினில் உறைபவர் தாபதர் சமைத்த
யாகத் திற்பிறந் தியைந்தவர் தேவரை எல்லாம்
மோகத் திற்புக முடித்தவர் மாயையின் முதல்வர்
மேகத் தைத்தொடும் மெய்யினர் இவர்என விதித்தார்.

ஙக. குசையன் தீவினில் உறைபவர் கூற்றிற்கும் விதிக்கும்
வசையும்மென் மையும் வளர்ப்பவர் வானநாட் டுறைவோர்
இசையும் செல்வமும் இருக்கையும் இழந்துதிங் கிவர்தம்
விசையந் தான்என நின்றவர் இவர்நெடு விறலோய். 9348

ஙஉ. இலவத் தீவினில் உறைபவர் இவரிடம் இறையாப்
புலவர்க் கிந்திரன் பொன்னகர் அதிதரப் பொருதார்
நிலவைக் செஞ்சடை வைத்தவன் வரந்தர நிமிர்ந்தார்
உலவைக் காட்டுறு தீஎன வெகுளிபெற் றுடையார். 9349

ஙஊ. அன்றில் தீவினில் உறைபவர் இவர்பண்டை அமரர்க்
கென்றைக் கும்இருந் துறைவிடம் எனவட மேருக்
குன்றைக் கொண்டுபோய்க் குரைகடல் இடல்உறக் குலத்தோர்
சென்றித் தன்மையைத் தவிரும்என் றிரந்திடத் தீர்ந்தார். 9350

ஙசு. பவளக் குன்றிடை உறைபவர் வெள்ளிபண் பழித்தே
குவளைக் கண்ணியோர் இராக்கதக் கன்னியைக் கூட
அவளில் தோன்றினர் ஐயிரு கோடியர் நொய்தில்
திவளப் பாற்கடல் வறள்படத் தெக்கினர் சிறுநாள். 9351

மடு. கந்த மாதனம் என்பதிக் கருங்கடற் கப்பால்
மந்த மாருதம் ஊர்வதோர் கிரியினில் வாழ்வார்
அந்த காரத்தும் ஆலகா லத்தொடும் பிறந்தார்
இந்த வாள்எயிற் றரக்கர்எண் ணிறந்தனர் இறைவ. 9352

மசு. மலையம் என்பது பெர்தியின் அல் லாதினி மறவோர்
நிலையம் அன்னது சாகரத் திடையிடை நிற்கும்
குலையும் இவ்உல கெனக்கொண்டு நான்முகன் கூற
உலவி வீர்இதில் உறைந்திரும் என்றிட உறைந்தார். 9353

மள. முற்க ரக்கையர் மூவிலை வேலினர் முசுண்டி
சக்க ரத்தினர் சாபத்தின் தனிநின்ற தலைவர்
நக்க ரக்கடல் நாலொடு மூன்றிற்கு நாதர்
புட்கரப் பெருந் தீவிடை உறைபவர் புகழோய். 9354

மஅ. மறலியைப் பண்டு தன்பெருந் தாய்சொல வலியால்
புறநிலத் தருஞ் சக்கர மால்வரைப் பொருப்பின்
விறல்கெ டச்சிறை இட்டயன் இரந்திட விட்டார்
இறலியப் பெருந் தீவிடை உறைபவர் இவர்கள். 9355

மக. வேதா ளக்கரத் தீவர்பண் டுலகிடம் விரிவு
போதா புக்குமற் றெழுவகை யாய்நின்ற புவனம்
பாதா ளத்துறை வீர்என நான்முகன் பணிக்க
நாதா புக்கிருந் தனர்உனக் கரிதினில் நடந்தார். 9356

உம. நிருதி தன்குலப் புதல்வர்நின் குலத்துக்கு நேரே
பருதி தேவர்கட் கெணத்தக்க பண்பினர் யாஅனக்
குருதி பெற்றில ரேல்கடல் ஏழையும் குடிப்பார்
இருணி றத்தவர் ஒருவரே மலையிஅ எடுப்பார். 9357

உக. பார்அ ணித்தவெம் பன்றியைப் பன்பிறை பார்த்த
கார ணத்தினின் ஆதியர் பயந்தபைங் கழலோர்
பூர ணத்தடந் திசைதொறும் இந்திரன் புலரா
வார ணத்தினீ நிறுத்திய திவர்வர வஞ்சி. 9358

உஉ. மறக்கண் வெஞ்சின மலைஎன விண்ணின்ற வயவர்
இறக்கங் கீழிலாப் பாலத் துறைகின்ற இகலோர்
அறக்கண் டுஞ்சிலன் ஆயின னந்தலை அநந்தன்
உறக்கந் தீர்ந்தனன் உணர்கின்ற திவர்வர வொறுக்க. 9359

உங. காளி யைப்பண்டு கண்ணுதல் காட்டிய காலை
மூள முற்றிய சினக்கடுந் தீயிடை முகீத்தோர்
கூளி கட்டுநல் உடன்பிறந் தார்பெருங் குழுவாய்
வாளி மைக்கவும் வாள்எயி றிமைக்கவும் வருவார். 9360

உச. பாபந் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்
தீபந் தோன்றிய முழைஎனத் தெறுசுடர்க் கண்ணர்
கோபந்தோன்றிடில் தாயையும் உயிர்உணும் கொடியோர்
சாபந் தோன்றிட வடதிசை மேல்வந்து சார்வார். 9361

உஙு. சீற்ற நான்முகன் முகத்திடை உலகெலாம் தீர்ப்பான்
ஏற்ற நாள்மற்ற வெரியொடும் தோன்றினர் இவரால்
கூற்ற மாகிய கொம்பினம் பாலிடைக் கொடுமைக்
கேற்ற மாகப்பண் டுதித்துளோர் என்பவர் இவரால். 9362

உசு. காலன் மார்பிடைச் சிவன்கழல் படப்பண்டு கான்ற
வேலை யேஅன்ன குருதியில் தோன்றிய வீரர்
சூலம் ஏந்திய கையினர் இன்னின்ற தொகையார்
ஆல காலத்தும் அமுதினும் பிறந்தபோர் அரக்கர். 9363

உஎ. வடவைத் தீயினில் வாசுகி கான்றமாக் கடுவைத்
திடவத் தீயிடை எழுந்தவர் இவர்இன மழையைத்
தடவத் தீநிகர் குஞ்சியர் இறையவர் தனித்தேர்
கடவத் தீய்ந்தவெம் புரத்திடை தோன்றிய கழலோர். 9364

உஅ. இனையர் இன்னவர் என்பதொன் றிந்திரற் கேயும்
நினைய வும்குறித் துரைக்கவும் அரிதிவர் நிறைந்த
வினைய் மும்பெருந் தவங்களும் வரங்களும் விளம்பில்
அனைய பேருகம் ஆயிரத் தளவினும் அடங்கா. 9365

உக. ஒருவ ரேசென்ற உறுதிறல் குரங்கையும் உறவோர்
இருவர் என்றவர் தம்மையும் ஒருகையோ டெற்றி
மருவர் மற்றினிப் பகர்வதென் வானவர்க் கரிய
நிருப என்றனர் தூதுவர் இராவணன் நிகழ்த்தும். 9366

உஙு. எத்தி றத்த தெண்ணெனத் தொகைவகுத் தியன்ற
இத்தி றத்தினை அறைதிர்என் றுரைசெய அவர்கள்
ஒத்த வெள்ளம்ஓர் ஏழுநூ ரும்என உரைப்பர்
பித்தர் இப்படைக் கெண்சிறி தென்றனர் பெயர்ந்தார்.

நக. படைப்பெ ருங்குலத் தலைவரைக் கொணருதிர் என்பால்
கிடைத்த நாள்அவர்க் குற்றுள பொருள்எலாங் கிளத்தி
அடைத்த நல்லுரை விளம்பினன் அளவளாய் உவந்தே
உடைத்த பூசனை வரன்முறை இயற்றவென் றுரைத்தான்.

நஉ. தூதர் கூறிடத் தினதொறும் திசைதொறும் தொடர்ந்தார்
ஓத வேலையின் நாயகர் எவரும்வந் துற்றார்
போது தூவினர் வணங்கினர் இராவணன் பொலந்தாள்
மோது மோலியின் பேரொலி வானினை முட்ட. 9369

நஊ. அனையர் யாவரும் அருகுசென் றடிமுடி வணங்கி
வினைய மேவினன் அருகின்அங் கிருந்ததோர் வேலை
நினையு நல்வர வாகநும் வரவென நிரப்பி
மனையு மக்களும் வலியரோ என்றனன் மறவோன். 9370

நஎ. பெரிய திண்புயம் ஆயிரந் தவம்வரம் பெறிதால்
உரிய வேண்டிய பொருள்எலாம் முடிப்பதற் கொன்றே
இரியல் தேவரைக் கண்டனம் பகைபிறி தில்லை
அரிய தென்நமக் கென்றனர் அவன்கருத் தறிவார். 9371

நஏ. மாத ராரும்எம் மைந்தரும் உன்மருங் கிருந்தார்
பேது றுதவர் இல்லைநீ வருந்தினை பெரிதும்
யாது காரணம் அருள்என அனையவர் இசைத்தார்
சீதை காதலில் புகுந்துள பரிசெலாம் தெரித்தான். 9372

நஐ. கும்ப கன்னனே டிந்திர சித்தையும் குலத்தின்
வெம்பு வெஞ்சினத் தரக்கர்தங் குழுவையும் வென்றூர்
அம்பி னுல்சில மனிதரே நன்றுநம் ஆற்றல்
நம்ப சேனையும் வானர மேஎன நக்கார். 9373

நகக. உலகைச் சேடன்தன் உச்சியின் றெடுக்கவன் றோள்எழ்
மலையை வேரொடும் [1]வாங்கவன் றங்கையால் வாரி
அலைகொள் வேலையை இறைக்கவன் றலைத்தது மலரோ
டிலைகள் கோதுமக் குரங்கின்மேல் ஏவக்கொல் எம்மை.

நகஅ. என்னக் கைமறித் திடியுரு வாம்என நக்க
மின்னும் வாள்எயிற் றரக்கரை அங்கையால் விலக்கி
வன்னி என்பவன் புட்கரத் தீவுக்கு மன்னன்
அன்ன தோர்ஞரர் வலியரென் றேயவர்க் கறைந்தான்.

1. [பிரதி] வாங்கவென்.

சுசு. மற்ற வாசகங் கேட்டலும் மாலிய வான்வந்
துற்ற தன்மையும் மனிதர தூற்றமும் உடனும்
கொற்ற வானரத் தலைவர்தந் தலைமையும் கூற
கிற்றுங் கேட்டிரேல்என் றனன்கிளத்துவான் துணிந்தான்.

சரு. ஆழிஅன்னநீர் அறிதிர்அன் றேகடல் அனைத்தும்
ஊழிக் காலெனக் கடப்பவன் வாலிஎன் போனை
ஏழு குன்றையும் எடுக்குறும் மிடுக்கனை இன்னுட்
பாழி மார்பகம் பிளந்துயிர் குடித்ததோர் பகழி. 9377

சசு. கரிய மால்வரை நிகர்கர தூடணர் கதிர்வேல்
திரிசி ராஅவர் திரைக்கடல் எனும்பெரும் சேனை
ஒருவி லால்ஒரு நாழிகைப் பொழுதினில் உலந்தார்
பரிய தோளுடை வீரமா ரீசனும் பட்டான். 9378

சரு. இங்கு வந்துநீர் வினையதென் எறிதிரைப் பரவை
அங்கு வெந்திலை வோசிறி தறிந்துமி லீரோ
கங்கை சூடிதன் கடுஞ்சிலை ஒடித்தஅக் காலம்
உங்கள் வான்செவி கேட்டில வோமுழங் கோதை. 9379

சரூ. ஆயிரம்பெரு வெள்ளம்உண் டிலங்கையின் அளவில்
தீயில் வெய்யபோர் அரக்கர்தஞ் சேனைஅச் சேனை
போய தந்தக புரம்புக நிறைந்தது போலாம்
ஏய மும்மைநூல் மார்பர்வந் தெய்தவில் இரண்டால் 9380

சசு. கொற்ற வெஞ்சிலைக் கும்பகன் னனும்உங்கள் கோமான்
பெற்ற மைந்தரும் பிரகத்தன் முதலியர் பிறரும்
மற்றை வீரரும் இந்திர சித்தொடு மடிந்தார்
இற்றை நாள்வரை யானுமற் றிவனுமே இருந்தோம். 9381

சருக. மூலத் தானையென் றுண்டது மும்மைநூ றமைந்த
கூலச் சேனையின் வெள்ளமற் றதற்கின்று குறித்த
காலச் செய்கைநீர் வந்துளீர் இனித்தக்க கழலோர்
சிலச் செய்கையும் சேனையின் செய்கையும் தெரிக்கின்.

சசுக. ஒருகு ரங்குவந் திலங்கையை மலங்கெரி யூட்டித்
திருகு வெஞ்சினத் தக்கனை நிலத்தொடும் தேய்த்துப்
பொருது தூதுரைத் தேகிய தரக்கியர் புலம்பக்
கருது சேனையும் கொன்றுமாக் கடலையும் கடந்து. 9383

சஎ, கண்டி லீர்கொலாம் கடலினை மலைகொண்டு கட்டி
மண்டு போர்செய வானரர் இயற்றிய மாற்கம்
உண்டு வெள்ளம்ஓர் எழுபதும் மருந்தொரு தொடியில்
கொண்டு வந்தது மேருவுக் கப்புறங் குதித்து. 9384

சஅ. இதுஇ யற்கைஓர் சீதைஎன் றிருந்தவத் தியைந்தாள்
பொதுஇ யற்கைதீர் கற்புடைப் பத்தினி பொருட்டால்
விதிவி லோத்ததிவ் வில்லியர் வெல்கநீர் வெல்க
முதுமொ ழிப்பதஞ் சொல்லின்ன் என்றுரை முடித்தான்.

சக. வன்னி மன்னனை நோக்கி இவரெலாம் மடிய
என்ன காரணம் இகல்செயா திருந்ததென் றிசைத்தான்
புன்மை நோக்கினன் நாணினன் பொருகிலன் என்றான்
அன்ன தேஇனி அமையும்எம் கடமைய தென்றான். 9386

ரும. மூது ணர்ந்தஇம் முதுமகன் கூறிய முயற்ச்சி
சீதை என்பவள் தனைவிட்டம் மனிதரைச் சேர்தல்
ஆதி யின்தலை செயத்தக்க தினிச்செயல் அழிவால்
காதல் இந்திர சித்தையும் மாய்வித்தல் கண்டும். 9387

ருக. விட்டம் மாதினை ஆயினும் வெஞ்சமம் விரும்பிப்
பட்ட வீரரைப் பெறுகிலம் பெறுவது பழியால்
முட்டி மற்றவர் குலத்தொடு முடிக்குவ தல்லால்
கட்ட மைத்தொழில் செருத்தொழில் இனிச்செயும் கடமை.

ருஉ. என்றெ ழுந்தனன் இராக்கதர் இருத்திநீ யாமே
சென்று மற்றவர் சில்உடல் குருதியும் தேக்கி
வென்று மீளுதும் வெள்குவ தென்மிடல் இல்லாப்
புன்தொ ழில்குலம் இன்றினி என்றவர் புகன்றார். 9389

உகூ-வது மூலபல வரவுகாண் படலம் முற்றிற்று.
ஆகப்படலம் 121-க்கு கவி 9389

ருஅ-வது மூலபல வதைப்படலம்

க. வான ரப்பெருஞ் சேனையை யான்ஒரு வழிசென்
றூன றக்குறைத் துயிர்உண்பன் நீயிர்போய் ஒருங்கே
ஆன வப்பெயர் இருவரைக் கோறிர்என் றறைந்தான்
தான வப்பெருங் கிங்களே வாள்கொடு தடிந்தான். 9390

உ. எனஉ ரைத்தலும் எழுந்துதாம் ஊர்திபோய் ஏறிக்
கனைக டற்பெருஞ் சேனையைக் கலந்தது காணூ
வினைய மற்றிலை மூலமாத் தானையை விரைவோ
டினையர் முற்செல ஏகுகென் றிராவணன் இசைத்தான்

கூ. ஏவி யப்பெரு சேனைமேற் ருனும் வேட் டெழுந்தான்
தேவர் மெய்ப்புகழ் தேய்த்தவன் சில்லியந் தேர்மேல்
காவல் மூவகை உலகமும் முனிவரும் கலங்க
பூவை வண்ணத்தன் சேனைமேல் ஒருபுறம் போனான்.9392

சு. எழுக சேனைஎன் றியானைமேல் மணிமுர செற்றி
வழுவில் வள்ளுவர் துறைதொறும் விளித்தலும் வல்லே
குழுவின் ஈண்டிய தென்பரால் குவலய முழுதும்
தழுவி விண்ணையும் திசையையும் தடவும்அத் தானை.9393

எ. அடங்கு வேலைகள் அண்டத்தின் அகத்தன மலையும்
அடங்கு மன்னுயிர் அனைத்தையும் வரைப்பிடை அவைபோல்
அடங்கு மேமமற்றப் பெரும்படை அரக்கர தாக்கை
அடங்கு மாயவன் குறள்உரு த்தன்மையால் அல்லால்.

கூ. அறத்தைத் தின்றருங் கருணையைப் பருகிவே றமைந்த
மறத்தைப் பூண்டுவெம் பாவத்தை மணம்புணர் மனுளர்
நிறத்திற் காரன்ன நெஞ்சினர் நெருப்புக்கு நெருப்பாய்ப்
புறத்திற் பொங்கிய பங்கியர் காலனும் புகழ்வார். 9395

எ. நீண்ட தாள்களால் வேலையைப் புறஞ்செல நீக்கி
வேண்டு மீனொடு மகரங்கள் வாயிட்டு விழுங்கித்
தூண்டு வார்உரும் ஏற்றினைச் செவிதொறும் தூக்கி
மூண்டு வான்மழை முரித்துடுத் துலாய்நடை முயல்வார்.

அ. உண்ணுந் தன்மைய ஊன்பிழைத் துளதெனின் உடனே
மண்ணின் நின்றமால் யானையை வாயிடும் பசியார்
தண்ணி னீர்முறை தப்பிடில் தடக்கையால் தடவி
விண்ணின் மேகத்தை வாரிவாய்ப் பெய்திடும் விடாயார்.

கூ. மால் வரைக்குலம் பரல்என மழைக்குலம் சிலம்பாக்
கால்வ ரைப்பெரும் பாம்புகொண் டசைத்தபைங் கழலார்
மேல்வ ரைப்படர் கலுழன்வெங் காற்றினும் வெய்யோர்
நால்வ ரைக்கொணர்ந் துடன்பிணைத் தால்அன்ன நடையார்.

எ. உறைந்த மந்தர முதலிய கிரிகளே உருவ
எறிந்து வேனிலே காண்பவர் இந்துவால் யாக்கை
சொறிந்து தீர்வுறு தினவினர் மலைஎனச் சுற்றி
அறைந்து கற்றமாத் தண்டினர் அசனியின் ஆர்ப்பார். 9399

மக. சூலம் வாங்கிடில் அடர்மழு ஏந்திடில் சூர்வாள்
கோலும் வெஞ்சிலை பிடித்திடில் கொற்றவேல் கொள்ளில்
கால வான்தண்டு தரித்திடில் சக்கரந் தரிக்கில்
காலன் மால்சிவன் குமரன்என் றிவரையும் கடப்பார். 9400

மஉ. ஒருவ ரேவல்லர் ஓர்உல கத்தினை உண்ண
இருவர் வேண்டுவ தேழுல கத்தையும் இறுக்கத்
திரிவ ரேல்உடன் திரிதரும் நெடுநிலம் செவ்வே
வருவ ரேல்அகல் கடல்களும் தொடர்ந்துபின் வருமால். 9401

மங. மேகம் எத்தனை அத்தனை மால்கரி விரிந்த
நாகம் எத்தனை அத்தனை நளிர்மணித் தேர்கள்
போகம் எத்தனை அத்தனை புரவியி னீட்டம்
ஆகம் எத்தனை அத்தனை அவன்படை அவதி. 9402

மச. இன்ன தன்மைய யாயினதேர் இவுளிஎன் றிவற்றின்
பன்னு பல்லணம் பருமமற் றுறுப்பொடு பலவும்
பொன்னும் நன்னெடு மணியுங்கொண் டல்லது புனைந்த
சின்னம் அல்லன அல்ல வேமுற்றும் தெரிந்தால். 9403

மரு. இப்பெ ரும்படை எடுத்திரைத் தேகமேல் எழுந்த
துப்பு நீர்த்தன தூளியின் படலமீ தூர்ப்பத்
தப்பில் கார்நிறம் தவிர்ந்தது கரிமதம் தழுவ
உப்பு நீங்கிய ஓங்குநீர் வீங்கொலி உவரி. 9404

மசு. மலையும் வேலையும் மற்றுள பொருள்களும் வானோர்
நிலையும் அப்புறத் துலகங்கள் யாவையும் நிரம்ப
உலவு முவகை உண்டுபண் டுமிழ்ந்தபே ருவமைத்
தலைவன் வாய்ஒக்க இலங்கையின் வாயில்கள் தருவ. 9405

மள. கடம்பொ ருமதக் களிறுதேர் பரியிடை கடவப்
படம்பொ ருமையி னனந்தலை அனந்தனும் பதைத்தான்
இடம்பொ ருதிரி அமரர்போல் குரங்கின மிதிக்கும்
இடம்பொ ருமையில் திரிந்துபோய் வடதிசை இறுத்த. 9406

மஅ. ஆழி மால்வரை வேலிசூற் றிடவகுத் தமைத்த
ஏழு வேலையும் இடுதிரை அரக்கரே யினமா
வாழி காலனும் விதியும்வெவ் வினையுமே மள்ளர்
தோழ மாமதில் இலங்கைமால் வேடைமேல் தொடர்ந்தான்.

எக. ஆர்த்த ஓசையோ அலங்குதேர் ஆழியின் ஆர்ப்போ
கார்த்திண் மால்கரி முழக்கமோ வாசியின் கலிப்போ
போர்த்த பல்லியத் தரவமோ நெருக்கினுல் புழுங்கி
வேர்த்த அண்டத்தை வெடித்திடப் பொலிந்தது மேன்மேல்.

எஎ. வழங்கு பல்படை மீனது மதகரி மகரம்
குழங்கு கின்றது முதுதிரை பரியது முரசம்
தழங்கு பேரொலி கலியது தறுகண்மா நிருதப்
புழுங்கு நெஞ்சினச் சுறவற நிறப்படைப் புள்ளி. 9409

எக. தசும்பில் பொங்கிய திரள்புயத் திராக்கதத் தாணை
பசும்பொற் றிண்கடல் விதித்தலில் கரிப்பு மதத்தின்
அசும்பில் சேறுபட் டளறுபட் டழுந்துபட் டழியும்
விசும்பில் சேறலில் கிடந்ததவ் விலங்கன்மேல் இலங்கை. 9410

எஉ. ப்டியைப் பார்த்தனர் பரவையைப் பார்த்தனர் படர்வான்
முடியைப் பார்த்தனர் பார்த்தனர் நெடுந்திசை முழுதும்
வெடியப் பார்ப்பதோர் வெள்ளிடை கண்டிலர் மிடைந்த
கொடியைப் பார்த்தனர் வேர்த்தனர் வானவர் குலைந்தார். 9411

எங. உலகி னுமலா உருவெலாம் இராக்கத உருவாய்
அலகி லாப்படை பிடித்தமர்க் கெழுந்தவோ அன்றேல்
விலகு நீர்த்திரை வேலையோ டேழுஞ்சேய் விதியால்
அலகில் பல்உருப் படைத்தன வோஎன அயிர்த்தார். 9412

எச. நடுங்கி நஞ்சுண்ட கண்டனை வானவர் நம்ப
ஒடுங்கி யாங்கரந் துறைவிடம் அறிகிலம் உயிரைப்
பிடுங்கி உண்குவர் யாரிவர் பெருமைபண் டறிந்தார்
முடிந்த தெம்வலி என்றனர் ஓடுவான் முயல்வார். 9413

எடு. ஒருவரைக் கொல்ல ஆயிரம் இராமர்வந் தொருங்கே
இருபதிற் றிரண் டாண்டுநின் றமர்செய்தால் என்னு
நிருதரைக் கொல்வ திடம்பெற்றே ரிடையினின் றன்றே
பொருவ திப்படை கண்டுதம் உயிர்பொறுத் தன்றே. 9414

எசு. என்றி றைஞ்சலு மணிமிடற் றிறைவனும் இனிநீர்
ஒன்றும் அஞ்சலீர் வஞ்சனை அரக்கரை ஒருங்கே
கொன்று நீக்கும்அக் கொற்றவன் இக்குலம் எல்லாம்
பொன்று விப்பதோர் விதிதந்த தாம்எனப் புகன்றான். 9415

உஎ. புற்றி னின்றுபல் லரவினம் புறப்படப் பொருமி
இற்ற தெம்வலி எனவிரைந் திரிதரும் எலிபோல்
மற்ற வானரப் பெரும்படை பயத்திடை மறுகிக்
கொற்ற வீரரைப் பார்த்தில திரிந்தது குலைவால். 9416

உஅ. அணையின் மேல்சென்ற சிலசில ஆழியை நீந்தப்
புணைகள் தேடின சிலசில நீந்தின போன
துணைக ளோடும்புக் கழுந்தின சிலசில தோன்றுப்
பணைகள் ஏறின மலைமுழை புக்கன பலவால். 9417

உகூ. அடைத்த பேரணை அளித்தது நமக்குயிர் அடைய
உடைத்துப் போதுமால் அவர்தொட ராமல்என் றுரைத்தார்
புடைத்துச் செல்குவர் விசும்பினும் என்றனர் போர்க்கப்
படைத்த திக்கெலாம் பரந்தனர் என்றனர் பயத்தால். 9418

உஙி. அரியின் வேந்தனும் அனுமனும் அங்கதன் தானும்
பிரிய கிற்றிலர் இறைவனை நின்றனர் பின்னர்
இரிய வுற்றனர் மற்றையோர் யாவரும் எறிநீர்
விரியும் வேலையும் கடந்தது நோக்கினன் வீரன். 9419

உக. இக்கொ டும்படை எங்குள தியம்புதி என்னுன்
மெய்க்க டுந்திறல் வீடணன் விளம்புவான் வீர
திக்க னைத்தினும் ஏழுமாத் தீவினும் தீயோன்
புக்க ழைத்திடப் புகுந்துள திராக்கதப் புணரி. 9420

உஉ. ஏழெ னப்படுங் கீழ்உள தலத்தினின் றேறி
ஊழி முற்றிய கடல்எனப் புகுந்ததும் உளதால்
வாழி மற்றவன் மூலமாத் தானைமுன் வருவ
ஆழி வேறினி அப்புறத் தில்லைவாள் அரக்கர். 9421

உங. ஈண்டிவ் அண்டத்தில் இராக்கதர் எனும்பெயர் எல்லாம்
மூண்டு வந்தது தீவினை முன்னின்று மூடுக்க
மாண்டு வீழ்பவர் என்பதெ னவைதி விதியார்
தூண்டு கின்றன ரென்றடி தொழுதனன் சொன்னுன். 9422

உச. கேட்ட அண்ணலும் முறுவலும் சிற்றமுங் கிளரக்
காட்டு கின்றனன் கானுதி ஒருகணத் தென்னை
ஓட்ட மேற்சென்ற தானையைப் பயந்துடைத் துரவோய்
மீட்டி கொல்என அங்கதன் ஓடினன் விரைந்தான். 9423

நடு. சென்று சேனையை உற்றனன் சிறைசிறை நடுவீர்
நின்று கேட்டுப்பின் நீங்குமின் எனச்சொல்லி நேர்வான்
ஒன்றுங் கேட்கிலம் என்றதக் குரங்கினம் உரையால்
வென்றி வெந்திறல் படைப்பெருந் தலைவர்கள் மீண்டார்.

நசு, மீண்டும் வேலையின் வடகரை ஆண்டொரு வெற்பின்
ஈண்டி னோர்களோ என்குறித் திரிவுற்றீர் என்றான்
ஆண்ட நாயக கண்டிலே போலும்நீ அவரை
மாண்டு செய்வதென் என்றுரை கூறினர் மறுப்பார். 9425

நஎ. ஒருவன் இந்திர சித்தென உள்ளவன் உளநாள்
செருவில் உற்றன கொற்றவ மறத்தியோ தெரியில்
பொருவில் மற்றவ னிற்றிரின் யாரொடும் பொருவீர்
இருவர் வில்பிடித் தியாவரைத் தடுத்துநின் றெய்வார். 9426

நஅ. பூரங் கடந்தஅப் புனிதனே முதலிய புலவோர்
வரங் கடந்துல களிப்பவர் யாவரும் மாட்டார்
கரந்த டங்கினர் இனிமற்றிவ் உலகினைக் கடப்பார்
குரங்கு கொண்டுவந் தமர்செயும் மானிடர் கொல்லாம். 9427

நகூ. ஊழி ஆயிர கோடிநின் றுருத்திர னோடும்
ஆயி யானுமற் றயனொடு புரந்தரன் அவனும்
சூழும் ஓடினுல் ஒருவனைக் கொன்றுதந் தோளால்
வீழு மாசெய்ய வல்லரே எனப்பி னன்றே. 9428

சஅ. என்னப் பாமற்றிவ் எழுபது வெள்ளமும் ஒருவன்
தின்னப் போதுமோ அவர்தம்மின் வலியமோ சிறியோம்
முன்னிப் பாரகம் படைத்தவன் நாளெலாம் முறைநின்
றுன்னிப் பார்த்துநின் றுறையிடப் போதுமோ யூகம். 9429

சக. நாய கன்தலை பத்துள கையும்நா லிலந்தென்
றேயும் உள்ளத்தேம் ஒருவன்மற் றிவண்வந்திங் குற்றூர்
ஆயி ரங்கையர் ஐஞ்ஞூறு தலையினர் ஐயா
பாயும் வேலையில் கூலத்து மணலினும் பலரால். 9430

சஉ. கும்ப கன்னன்என் றுளமற்றிங் கொருவன்கைக் கொண்ட
அம்பு தாங்கவும் மிடுக்கிலம் அவன்செய்த தறிதி
உம்பர் அன்றியே உணர்வுடை யார்பிறர் உளரோ
நம்பி நீயுன்றன் அருமையை அறிந்திலை நடந்தாய். 9431

சஉ. அனுமன் ஆற்றலும் அரசன்தன் ஆற்றலும் இருவர்
தனுவின் ஆற்றலும் தங்களைத் தாங்குவர் தாங்கார்
கனியும் காய்களும் உணவுள முழையுள கரக்க
மனிதர் ஆள்கில்என் இராக்கதர் ஆள்கில்என் வையம். 9432

சச. தாமு ளார்அல ரேபுகழ் திருவொடும் தரிப்பார்
யாமு ளோம்எனில் எங்களை உள்ளதெம் பெரும
போமு னீர்என்று விடைதரத் தக்கணை புரம்போய்ச்
சாமி னீர்என்றல் தருமம்அன் றென்றிடை தளர்ந்தார் 9433

*சஙு. சாம்பனை வதனம் நோக்கி வாலிசேய் அறிவு சான்றோய்
பாம்பனை அமல னேமற் றிராமன்என் றெமக்குப் பண்டே
ஏ ம்பல்வந் துதவச் சொல்லித் தேற்றினுய் இல்லை யோஈ
ஆம்பலம் பகைஞன் தன்னை டயிர்த்திடம் அமைந்தோன் அன்னுய்.

தேற்றுவாய்தெரிந்துசொல்லால் தெருட்டியித்தெளிவீலாரை
ஆற்றுவாய் அல்லை நீயும் அஞ்சினர் போலும் ஆவி
போற்றுவாய் என்ற போதும் புகழ்என்னும் புலமை என்னும்
கூற்றின்வாய் உற்றுல் வீரம் குறைவதோ இறைமை கொண்டாய்.

சஎ.அஞ்சினேம் பழியும் பூண்டோம் அம்பினுல் யாண்டும் ஆவி
துஞ்சுமா றன்றி வாழ ஒண்ணுமே நாண்மேல் தோன்றி
நஞ்சுவாய் இட்டால் அன்ன அமுதின்றே நம்மை அம்மா
தஞ்சம்என் றடைந்த வீரர் தனிமைநாம் சார்தல் நன்றே. 9436

சஅ. தானவ ரோடு மற்றைச் சக்கரத் தலைவ னேடும்
வானவர் கடைய மாட்டா மறிகடல் கடைந்த வாலி
ஆனவன் அம்பொன் முலை உலந்தமை அயர்த்த தென்னீ
மீனகு வேலை பட்ட துணர்ந்திலை போலும் மேலோய். 9437

சகூ. எத்தனை அரக்க ரேனும் தருமம்ஆண் டில்லை அன்றே
அத்தனை அறத்தை வெல்லும் பாவம்என் றறிந்த துண்டோ
பித்தரைப் போல நீயும் இவரொடும் பெயர்ந்த தன்மை
ஒத்திலை தென்னச் சொன்னுன் அவன்இவை உரைப்ப தானுன்

சரு. நாணத்தால் சிறிது போழ்து நலங்கினன் இருந்த பின்னர்
தூணொத்த திரள்தோள் வீர தோன்றிய அர்க்கர் தோற்றம்
காணத்தான் நிற்கத் தான்அக் கறைமிடற் றவனுக் காமோ
கோணற்பூ உண்ணும் யாக்கைக் குரங்கின்மேல் குற்றம் உண்டோ.

ருக. தேவரும் அவுணர் தாமும் பண்டுபோர் செய்த காலம்
ஏவவே என்னுல் காணப் பட்டிலர் இருக்கை ஆன்ற
மூவகை உலகின் உள்ளார் இவர்துணை ஆற்றல் முற்றும்
பாவகர் உளரோ கூற்றை அஞ்சினுல் பரியும் உண்டோ. 9440

ருஉ. மாலியைக் கண்டேன் பண்டை மாலிய வானைக் கண்டேன்
காலநே மியையுங் கண்டேன் இரணியன் தனையுங் கண்டேன்
ஆலமா விடமுங் கண்டேன் மதுவினை அனுச னுடும்
வேலையைக் கலக்கக் கண்டேன் இவர்க்குள மிடுக்கும் உண்டோ

ருங. வலியது மேலை பெற்ற வரத்தினர் மாயம் வல்லார்
ஒலிகடல் மணலின் மிக்க கணத்தினர் உள்ளம் நோக்கில்
கலியினுங் கொடியர் கற்ற படைக்கலக் கரத்தர் என்முல்
மெலிகுவ தன்றி உண்டோ விண்ணவர் மெலிவு கண்டால். 9442

ருச. ஆகிலும் ஐயம் உண்டாம் ஆகிலும் அமரில் அஞ்சிப்
போகிலும் போந்த தன்மை பழிதரு நரகில் போக்கும்
ஏகுமே மீள இன்னும் இயம்புவ துளதால் எய்தி
மேகமே அனையர் கண்முன் எங்ஙனம் விழித்து நிற்றும். 9443

ருரு. என்றெடுத் தெண்கின் தானைக் கிறையவன் இயம்ப லோடும்
வன்திறல் குலிசம் ஓச்சி வரைசிற கரிந்து வெள்ளிக்
குன்றிடை நீலக் கொண்மூ அமர்ந்தென மதத்தின் குன்றின்
நின்றவன் அளித்த மைந்தன் மகன்இவை நிகழ்த்தல் உற்முன்.

ருசு. எடுத்தலும் சாய்த்தல் தானும் இறக்கலும் எதிர்க்கோர் தம்மைப்
படுத்தலும் வீர வாழ்க்கை பற்றினர்க் குற்ற மேல்நாள்
அடுத்ததேல் ஆகும் நிற்க அன்றியும் ஒன்று கூறற்
கெடுத்தது கேட்டு மீண்டிங் கிருந்துளீர் ஏது நோக்கில். 9445

ருள. ஒன்றும்கீர் அஞ்சல் ஐய யாம்எலாம் ஒருங்கு சென்று
நின்றும்ஒன் றியற்ற லாற்றேம் நேமியோன் தானே நேர்ந்து
கொன்றுபோர் கடக்கு மாகில் கொள்ளுதும் வெற்றி அன்றே
பொன்றுதும் அவரே[1] பொன்முற் போதலே அழகிற்றென்முன்.

ருஅ. ஈண்டிய தானை நீங்கி நிற்பதென் யாமே என்று
பூண்டவெம் பழியி னுடும் போந்தனம் போதும் என்னு
மீண்டனர் தலைவர் எல்லாம் அங்கத னுடும் வீரன்
மூண்டவெம் படையை நோக்கித் தம்பிமேல் மொழிவ தானுன்.

ருகூ. அத்தகீ உணர்தி அன்றே அரக்கரே அவுண ரேதான்
எத்தனை உளவென் முலும் யான்சிலை எடுத்த போழ்து
தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்செனத் தொலையும் தன்மை
ஒத்ததோ இடையூ றுண்டோ உணர்விடை உதிப்ப தென்முன்.

---

1 [பிரதி] பொன்முர்

சுமை. காக்குனர் இன்மை கண்டால் கலக்கத்தால் கவியின் சேனை
போக்கறப் போகித் தத்தம் உறைவிடம் புகுதல் உண்டேல்
தாக்கிஇப் படையை முற்றும் தலைதுமிப் பளவும் தாங்கி
நீக்குதி நிருதர் ஆங்கு நெருக்குவார் நெருங்கா வண்ணம். 9449

சுஙக. இப்புறத் திணைய சேனை ஏவி ஆண் டிருந்த தியோன்
அப்புறத் தமைந்த சூட்சி அறிந்தனன் அயலே வந்து
தப்பறக் கொன்று நீக்கில் அவணையார் தடுக்கத் தக்கார்
வெப்புறு கின்ற துள்ளம் வீரனீ அன்றி வில்லோர். 9450

சுஉ. மாருதி யோடு நீயும் வானரக் கோனும் வல்லை
பேருதி சேனை காக்க என்னுடைத் தனிமை பேணிச்
சோருதி என்னின் வெம்போர் தோற்றுநாம் என்னச் சொன்னன்
வீரன்மற் றதனைக் கேட்ட இளையவன் விளம்பல் உற்றான். 9451

சுஙக. அன்னது கருமம் ஐய அன்றியும் அணைவோம் நின்றால்
என்னுனக் குதவி செய்வ திதுபடை என்ற போதில்
சென்னியில் சுமந்த கையர் தேவரைப் போல யாமும்
பொன்னுடை வரிவில் ஆற்றல் புறநின்று காண்டல் போக்கில்.

சுஊ. என்றவன் ஏகல் உற்ற காலையின் அனுமன் எந்தாய்
புன்தொழில் குரங்கெ னுதென் தோளின்மேல் ஏறிப் புக்கால்
நன்றெனக் கருது கின்றேன் நல்லது நாயி னேன்உன்
பின்தனி நின்ற போதும் அடித்தொழில் பிழைப்பில் என்றான்.

ஐயநிற் கொண்ணு துண்டோ இராவணன் அயலே வந்தால்
எய்யும்வில் கரத்து வீரன் இளையவன் தன்னை டேற்றான்
மொய்யமர்க் களத்து நின்னைத் துணைப்பெரு தொழியின்முன்ப
செய்யுமா வெற்றி உண்டோ சேனையும் சிந்தும் அன்றே. 9454

சுசு. ஏரைக்கொண் டனைந்தகுஞ்சி இந்திர சித்தென் பான்தன்
போரைக்கொண் டிநந்த மேல்நாள் இளையவன் தன்னைப் போக்கிற்
றுரைக்கொண் டுன்னல் அன்றே வென்றதன் றென்னச் சொன்னன்
விரற்கு விரன் நின்னைப் பிரிகிலன் வெல்லும் என்பேன். 9455

சுஎ. சேனையைக் காத்தென் பின்னே திருநகர் துறந்து போந்த
யானையைக் காத்து மற்றும் இறைவனைக் காத்தெண் ணுர்ந்த
வானிஇத் தலத்தி னுடு மறையொடும் வளர்த்தி என்றான்
ஏனைமற் றுரைக்கி லாதான் இளவல்பின் எழுந்து போனான்.

சுஅ. வீடண னீயும் மற்றுன் தம்பியோ டேகி வெம்மைக்
கூடினர் செய்யும் மாயம் தெரிந்தனை கூறிக் கொற்ற
நீடுறு தானை தன்னைத் தாங்கினை நில்லாய் என்னில்
கேடுள தாகும் என்ருன் அவன் அது கிடைப்புக் கொண்டான்.

சூரியன் சேயும் செல்வன் சொற்றதே என்னும் சொல்லால்
ஆரியன் பின்பு போனுன் அனைவரும் அதுவே நல்ல
காரியம் என்னக் கொண்டார் கடற்படை காத்து நின்ருர்
வீரியன் பின்னர்ச் செய்த செயல்எலாம் விரிக்கல் உற்றேன்.

எம.வில்லினைத் தொழுதுவாங்கி ஏற்றினுன் மெய்நாண் மேருக்
கல்லெனச் சிறந்த தேயும் கருணையங் கடலே அன்ன
எல்லொளி மார்பில் தீராக் கவசம்இட் டிமையோர் வேதச்
சொல்லெனத் தொலியா வாளித் தூணியும் புறத்துத் தூக்கி.

எக. ஓசனை நூற்றின் வட்டம் இடையரு துற்ற சேனைத்
தூசிவந் தண்ணல் தன்னைப் போக்கற வளைந்து சுற்றி
வீசின படையும் அம்பும் மிடைதலும் விண்ணோர் யாக்கை
கூசின பொடியா வேனும் குமிழ்த்தன இரோமக் கூட்டம்.

எஉ. கண்ணனே எளியோம் இட்ட கவசமே கடலே அன்ன
வண்ணனே அறத்தின் வாழ்வே மறையவர் வலியே மாரு
தொண்ணுமே நீஅ லாதார் ஒருவர்க்குப் படைமேல் ஊன்ற
எண்ணமே முடித்தி என்னு ஏத்தினர் இமையோர் எல்லாம்.

எங. முனிவரே முதல்வ ராய அறத்துறை முற்றி னோர்கள்
தனிமையும் அரக்கர் தானைப் பெருமையும் தரிக்கி லாதார்
பனிவரு கண்ணர் விம்மிப் பதைக்கின்ற நெஞ்சர் பாவத்
தனைவரும் தோற்க அண்ணல் வெல்கஎன் ருசிசொன்னுர்.9462

*எச. இரிந்துசேனை சிந்தியாரும் இன்றிவக நின்றுநம்
விரிந்தசேனை கண்டியாதும் அஞ்சல்இன்றி வெஞ்சமம்
தெரிந்தசேவ கந்திறம்பல் இன்றிஇன்ற செய்கையால்
புரிந்ததன்மை வென்றிமேலும் நன்றுமாலி பொய்க்குமோ.9463

எடு. புரங்கள்எய்த புங்கவற்கும் உண்டுதேர்பொ ருந்தினுர்
பரந்ததேவர் மாயன்நம்மை வேர றுத்த பண்டைநாள்
விரைந்துபுள்ளின் மீதுவிண்ணு ளோர்களோடு மேவினுன்
கரந்திலன்த னித்தொருத்தன் நேரும்வந்து காலினுல். 9464

எசு. தேருமாவும் யானையோடு சீயம்ஆளி ஆதியாய்
மேருமானும் மெய்யர்நின்ற வேலைஏழின் மேலவாய்
வாரும்வாரும் என்றழைக்கும் மானிடற்கிம் மண்ணிடைப்
பேருமாறும் நம்முழைப்பி ழைக்குமாறும் எங்ஙனே. 9465

எஎ. என்றுசென்றி ரைத்தெழுந்தொர் சீயவேற டர்ந்ததைக்
குன்றுவந்து சூழ்வளைந்த போல்தொடர்ந்து கூடலும்
நன்றிதென்று ஞாலம்ஏழும் நாகம்ஏழும் ஆனதன்
வென்றிவில்லை வேதநாதன் நாண்எறிந்த வேலைவாய். 9466

எஅ. கதம்புலர்ந்த சிந்தைவந்த காவல்யானை மாவொடு
மதம்புலர்ந்த நின்றவீரர் வாய்புலர்ந்த மாவெலாம்
பதம்புலர்ந்த மேகமாக வாளரக்கர் பண்புசால்
விதம்புலம்பு லர்ந்தவென்றி இன்றுசொல்ல வேண்டுமோ.

எகூ. எறித்திருந்து வாசியோடு சீயமாலி யாளியும்
செறித்தமைந்த சில்லிஎன்னும் ஆழியோடு தேரெலாம்
முறித்தெழுந்த முந்தயானை வீசிமூசு பாகரைப்
பிறித்திருந்து சிந்தைநொந்தோர் ஆகுலம்பி றந்ததால். 9468

அஅ. இன்னிமித்தம் இப்படைக்கி டந்துடித்த டுத்ததோர்
துன்னிமித்தம் என்றுகொண்டு வானுளோர்கள் துள்ளினுர்
அன்னிமித்தம் உற்றபோத ரக்கர்மேல வாங்குதன்
மின்னிமிர்த்த தன்னவாளி வேதநாதன் வீசினுன். 9469

அக. ஆளிமேலும் ஆளின்மேலும் ஆனைமேலும் ஆடன்மா
மீளிமேலும் வீரர்மேலும் வீரர்தேரின் மீதரும்
வாளின்மேலும் வில்லின்மேலும் மண்ணின்மேல்வ ளர்ந்தமாத்
தாளிமேலும் ஏறவேற வேறுவாளி தூவினுன். 9470

அஉ. மலைவிழுந்த வாவிழுந்த மானயானை மள்ளர்தம்
தலைவிழுந்த வாய்விழுந்த தாயவாசி தாளறும்
சிலைவிழுந்த வாய்விழுந்த திண்பதாகை திங்களின்
கலைவிழுந்த வாவிழுந்த வெள்ளையிற்ற காடெலாம். 9471

அங. வாடைநாலு பாலும்வீச மாகமோக மாலைவெங்
கோடைமாரி போலும்வாளி கூடியோட யானையும்
ஆடல்மாவும் வீரர்தோளும் ஆளும்மாள்வ தானவால்
பாடுபேரு மாறுகண்டு கண்செய்பண்பும் இல்லையால். 9472

அச. வீழித்தகண்கள் கைகள்மெய்கள் வேல்தலைக்கழுத்தினில்
தெறித்தவாய்கள் செல்லலுற்ற தாள்கள்தோள்கள் செல்லினைப்
பழித்தவாளி சிந்திநின்று பட்டதன்றி யிட்டதோல்
கழித்தஆய தங்கள்ஒன்று செய்ததில்லை கண்டதால். 9473

அரு. எட்டுவன்தி சைக்கண்நின்ற யாதும்அல்ல யாவரும்
கிட்டில்உய்ந்து போகிலார்கள் என்னநின்ற கேள்வியாய்
முட்டும்வெங்கண் மானயானை அம்புபாயும் முன்னமே
பட்டுவந்த போல்வீழுந்த தென்ன தன்மை பண்ணுமே. 9474

அசு. ஊரவுன்னின் முன்புபட்டு யர்ந்தவெம்பி ணங்களால்
பேரஉண்ப தன்றுபேரில் ஆயிரம்பெ ருஞ்சரம்
தூரஒன்று நூறுகூறு பட்டுகுத்த துயக்கலால்
தேர்கள்என்று வந்தபாவி என்னசெய்கை செய்யுமோ. 9475

அள. சுரந்துணிந்து கண்சிதர்ந்து பல்லணங்கு குலைந்துபேர்
உரம்துணிந்து வீழ்வதன்றி ஆவியோட உண்ணுமே
கரம்துணிந்த ஒன்றைநூறு சென்றுசென்று தள்ளினுல்
வரம்துணிந்து வந்தவீரர் போரின்உந்து வாசியே. 9476

அஅ. தொடுத்தவாளி யோடுவில்து ணிந்துவீழு முன்துணிந்
தெடுத்தவாள்க ளோடுதோள்கள் இற்றுவீழு மற்றுடன்
கடுத்தவாள்கள் கண்டமாகும் எங்ஙனேக லந்துநேர்
தடுத்தவீரர் தாமும்ஒன்று செய்யுமாச லத்தினுர். 9477

அக. வாவிகொண்ட புண்டரீகம் அன்னகண்ணன் வாளிஒன்
றேவில்உண்டை நூறுகோடி சொல்லும்என்ன எண்ணுவன்
பூவில்அண்டர் கோனும்எண்ம யங்கும்அன்ன போரின்வந்
தாவிகொண்ட காலனுர்க டுப்பும்என்ன தாகுமோ. 9478

கம. கொடிக்குலங்கள் தேரின்மேல யானைமேல சோடைநாள்
இடிக்குலங்கள் வீழுவெந்த காடுபோல்எ ரிந்தவான்
முடிக்குலங்கள் கோடிகோடி சிந்தவேக முற்றுரு
வடிக்குலங்கள் வாளியோட வாயினுெடு தீயினுல். 9479

கக. அற்றவேலும் வாளுமாதி ஆயுதங்கள் மீளழுந்
துற்றவேக முந்தஓடி ஓதவேலை ஊடுறத்
துற்றவெம்மை கைமிகச்சு றுக்கொளச்சு வைத்தலான்
மற்றரீர்வ றந்துபின்ம றிந்துமண்செ றிந்தவால். 9480

கூஉ. போரரிந்த மன்றுரந்த புங்கவாளி பொங்கினூர்
ஊரெரிந்த நாடுரந்த தென்னமின்னி ஓடலால்
நீரெரிந்த வண்ணமேநெ ருப்பெரிந்து நீள்நெடும்
தேரெரிந்து வீரர்தம்சி ரம்பொடிந்து சிந்துவே. 9481

கூந. பிடித்தவாள்கள்வேல்களோடு தோள்கள்பேரராவெனத்
துடித்தவான மீதிருந்து போர்துடங்கு சூரர்தம்.
மடித்தவாய்செ ழுந்தலைக்கு லம்புரண்ட வானின்மின்
இடித்தவாயின் இற்றமாம லைக்குலங்கள் என்னவே. 9482

கூச. கோரவாளி சீயமீளி கூளியோடு ஞாளியும்
போரவாளி னைடுதேர்கள் நூறுகோடி பொன்றுமால்
நாரவாளி ஞாலவாளி ஞானவாளி நாந்தகப்
பாரவாளி வீரவாளி வேகவாளி பாயவே. 9483

கூடு. ஆழிபெற்ற தேரழுந்தும் ஆளழுந்தும் ஆளொடும்
சூழிபெற்ற மாஅழுந்தும் வாசியும்சு ரிக்குமால்
பூழிபெற்ற வெங்களம்கு ளம்படப்பொ ழிந்தபேர்
ஊழிபெற்ற வாழிஅன்ன சோரிநீரின் உள்ளரோ. 9484

கூசு. அற்றுமேல்ள ழுந்தவன்சி ரங்கள்தம்மை அண்மிமேல்
ஒற்றும்என்ன அங்கும்இங்கும் விண்ணுளோர்ஓ துங்கினூர்
சுற்றும்வீழ்ந்த லைக்குலங்கள் சொல்லுகல்லு மாரிபோல்
எற்றும்என்று பாரின்எங்கும் வாழ்குவார்இ ரங்குவார். 9485

கூள. மழைத்தமேகம் வீழ்வதென்ன வானமானம் வாடையில்
சுழித்துவீழ்வ தென்னமண்ணின் மீதுவந்து துன்னுமால்
அழித்தொடுங்கு காலமாரி ஆழியன்ன வாழியால்
வீழித்தெழுந்து வாளின்ஊடு மொய்த்தபொய்யர் மெய்யெலாம்

*கூஅ.தெய்வநெடும்படைக்கலங்கள்விடுவர்சிலர்சுடுகணைகள்சிலையில்கோலி
எய்வர்சிலர் எறிவர்சிலர் எற்றுவாகுத் துவர்மலைகள் பலவும் ஏந்தி
பெய்வர்சிலர்பிடித்தும்எனக் கடித்துறுவர் படைக்கலங்கள்பெருதுவாயால்
வைவர்சிலர் தெழிப்பர்சிலர் வருவர்சிலர் நிரிவர்சிலர் வயவர் மன்னோ.

ஆர்ப்பர்பலர் அடர்ப்பர்பலர் அடுத்தடுத்த படைக்கலங்கள் அள்ளிஅள்ளித்
தூர்ப்பர்பலர் மூழிலேவல் துரப்பர்பலர் கரப்பர்பலர் சுடுதீத் தோன்றப்
பார்ப்பர்பலர் நெடுவரைகள் பறிப்பர்பலர் பகலோனைப் பற்றிச் சுற்றும்
கார்ப்பருவ மேகம்என வேகநெடும் படைஅரக்கர் கணிப்பி லாதார். 9488

ஈ.எறிந்தனவும் எய்தனவும் எடுத்தனவும் பிடித்தனவும் படைகள் எல்லாம் முறிந்தனவெங் கணைகள்பட முற்றினசுற் றினதேரு மூரிமாவும், நெறிந் தனகுஞ் சிகளோடு நெடுந்தலைகள் உருண்டனபேர் இருளி னீங்கிப், பிறிந்தனன்வெய் யவன்என்னப் பெயர்ந்தனன்மீ துயர்ந்ததடம் பெரிய தோளான். 9489

ஈக,சொல்லறுக்கும் வலிஅரக்கர் தொடுகவசம் துகள்படுக்கும் துணிக்கும் யாக்கை, வில்லறுக்கும் சரம்அறுக்கும் கலைஅறுக்கும் மிடல்அறுக்கும் மேன்மேல் வீசும், கல்லறுக்கும் மரம்அறுக்கும் கைஅறுக்கும் செய் யின்மள்ளர் கமலத் தோடு, நெல்லறுக்கும் திருநாடன் நெடும்சரம்என் றுல்எவர்க்கும் நிற்க லாமோ. 9490

காலிழந்த வாயிழந்த கையிழந்த கழுத்திழந்த பருமக் கட்டின் மேலிழந்த மருப்பிழந்த விழுந்தனவென் குணவல்லால் வேறு வேறு மாலுழந்த மழைஅணைய மதம்இழந்து வலிஇழந்து மலைபோல் வந்த தோல்இழந்த தொழில்ஒன்றும் சொல்லினர்இல்லைநெடும் சுரர்கள்எல்லாம்

*ஈஉ. வேல்செல்வன சதகோடிகள் விண்மேல்நிமிர் விசிகக் கோல்செல்வன சதகோடிகள் கொலைசெய்வன மலையத் தோல்செல்வன சதகோடிகள் துரந்தோடினர் இரதக் கால்செல்வன சதகோடிகள் ஒருவன்அவை கடிவான். 9492

ஈச. ஒருவில்லியை ஒருகாலியின் உலகேழையும் ஒறுக்கும் பெருவில்லிகள் முடிவில்லவர் சரமாமழை பெய்தார் பொருவில்லியர் கணைமாமழை பொடியாவன பொழுதத் திருவில்லிகள் தலைபோய்நெடு மலைபோல்உடல் சிதைவார்.

ஈரு. நூறுயிர மதஆனையின் வலியோர்என நுவல்வோர் மாறுயினர் ஒருகோல்பட மலைபோல்உடன் மறிவோர் ஆறுயிரம் உளதாகுவ அழிசெம்புனல் அதுபுக் கேறுவெறி கடல்பாய்வன சினமால்கரி இனமால். 9494

ஈசு. கோல்பொத்திய நெடுநாணியில் கோமான்தொடை நெகிழ வேல்பொத்திய நிருதக்குலம் வேரோடற விளியத் தோல்பொத்திய உயிர்யாவையும் துடக்கற்றுடன் மடியக் கால்பொத்தின கைபொத்தின காகுத்தன கணையால். 9495

ஈஎ. மழுவற்றுகும் வளையற்றுகும் மலையற்றுகும் வயிரத் தெழுவற்றுகும் எயிறற்றுகும் இலையற்றுகும் எறிவேல் பழுவற்றுகும் மதவெங்கரி பரியற்றுகும் இரதக் குழுவற்றுகும் ஒருவெங்கணை தொடைபெற்றதொர் குறியால்.

ஈஅ. ஒருகாலையின் உலகத்துறும் உயிர்யாவையும் உண்ணும்
வருகாலனும் அவன்தூதரும் நமன்தானும்அவ் வரைப்பில்
இருகாலுடை யவர்யாவரும் திரிந்தார்இளைத் திருந்தார்
அருகாயிரம் உயிர்கண்டுதம் மாறேகலர் அயர்த்தார். 9497

ஈக. அடுக்குற்றன மதயானைகள் அழிதேர்களும் பரியும்
தொடுக்குற்றுற விசும்பூடுறச் சுமந்தோங்கின எனினும்
மிடுக்குற்றன கவந்தக்குலம் எழுந்தாடலின் எல்லாம்
நடுக்குற்றன பிணக்குன்றுகள் உயிர்க்குற்றன என்ன. 9498

ஈம. பட்டார்உடல் படுசெம்புனல் திருமேனியில் படலால்
கட்டார்சிலை கருநாயிறு புரைவான்கடை யுகநாள்
சுட்டாசறுத் துலகுண்ணும் அச்சுடரோர் எனப்பொலிந்தான்
ஒட்டார்உடல் குருதிக்குளித் தெழுந்தாளினையும் ஒத்தான். 9499

ஈமக. தீயொத்தன உரும்ஒத்தன கரம்சிந்திடச் சிரம்போர்
மாயத்தமர் படுகின்றன எனவுமறங் குழையார்
காயத்திடை உயிர்உண்டிட உடன்மொய்த்தெழு களியால்
ஈயொத்தன நிருதக்குல நறவொத்தன னிறைவான். 9500

ஈமஉ. மொய்த்தானையொர் இமைப்பின்தலை முடுக்கத்தொடு சிலையால்
தைத்தான்அவர் கழல்திண்பசுங் காயொத்தனர் சரத்தால்
கைத்தான்வெங் களிறுங்கடுந் தேருங்களத் தழுந்தக்
குத்தான்அழி குழம்பாம்வகை புரிந்தான்கணக் குழுவால். 9051

ஈமங. பிரிந்தார்பலர் இறிந்தார்பலர் பிழைத்தார்பலர் உழைத்தார்
புரிந்தார்பலர் நெரிந்தார்பலர் புரண்டார்பலர் உருண்டார்
எரிந்தார்பலர் கரிந்தார்பலர் எழுந்தார்பலர் விழுந்தார்
சொரிந்தார்குடல் துணிந்தார்தலை கிடந்தாரெதிர் தொடர்ந்தார்.

ஈமச. மணிகுண்டலம் வலையங்குழை மகரம்சுடர் மகுடம்
அணிகண்டிகை கவசங்கழல் திலகம்முகம் அகலத்
துணிவுண்டவர் உடல்சிந்தின சுடர்கின்றன தொடரும்
திணிகொண்டலின் இடைமின்குலம் மிளிர்கின்றன சிவண.

ஈமடு. முன்னேஉளன் பின்னேஉளன் முகத்தேஉளன் அகத்தில்
தன்னேரினன் மருங்கேஉளன் தலைமேல்உளன் மலைமேல்
கொன்னேஉளன் நிலத்தேஉளன் விசும்பேஉளன் கொடியோர்
என்னேஒரு கடுப்பென்றிட இருஞ்சாரிகை திரிந்தான். 9504

ாமசு. என்னேரின னென்னேரின னென்றியாவரும் எண்ணப்
பொன்னேர்வரு வரிவில்கரத் தொருகோளரி பொருவான்
ஒன்னுர்நெடும் படைப்போர்க்கடல் உடைக்கின்றனன்எனினும்
அன்னேர்அவர் உடனேதிரி நிழலேஎனல் ஆனன். 9505

ாமஎ. பள்ளம்படு கடல்வழினும் படிவழினும் பகையின்
வெள்ளம்பல உளஎன்னினும் விணையம்பல தெரியாக்
கள்ளம்படு நெடுமாயையின் கரந்தான்உடன் பிறந்தார்
உள்ளன்றியும் புறத்தேயுமுற் றுளனும்என உற்றுன். 9506

ாமஅ. நானுவிதப் பெருஞ்சாரிகை திரிகின்றது நவில்வார்
போனுன்இடை புகுந்தான்எனப் புலங்கொள்கிலர் மறந்தார்
தானுவதும் உணர்ந்தான்உணர்ந் துலகெங்கணும் தானே
ஆனுன்விணை துறந்தான்என இமையோர்களும் அயிர்த்தார்.

ாமகூ. சண்டக்கடு நெடுங்காற்றிடை துணிந்தெற்றிடத்தரைமேல்
கண்டப்படு மலைபோல்நெடு மரம்போல்கடுந் தொழிலோர்
துண்டப்பட கடும்சாரிகை திரிந்தான்சரம் சொரிந்தான்
அண்டத்தினை அளந்தான்எனக் கிளர்ந்தான்நிமிர்ந் தகன்றுன்

ாஉ ம.களியானையும் நெடுந்தேர்களும் கடும்பாய்பரிக் கண்ணும்
தெளியாளியும் முரட்சீயமும சினவீரர்தம் சிரமும்
வெளிவானகம் இலதாம்வகை விழுந்தோங்கிய பிணப்பேர்
நளிர்மாமலை பலதாவினன் நடந்தான்கடல் கிடந்தான். 9509

*ாஉக. அம்பரங் கடொடுங் கொடி யாடையும்
அம்பரங் கடொடுங் கொடி யாணைகள்
அம்பரங்க அழுந்தின சோரியின்
அம்பரங்க வருங்கல மாழ்ந்தென 9510

ாஉஉ. கேட கங்க ணைவன்கை யொடுங்கிளர்
கேடகங்கள் துணிந்து கிடந்தன
கேடகங்கி ளர்கின்ற களத்தன
கேடகங்கண் மறிந்து கிடந்தவே. 9511

ாஉங. அங்க வங்களத் தற்றழிந் தாரொடும்
அங்க வங்களத் தற்றழி வற்றவால்
புங்க வன்கணைக் புட்டில் பொருந்தவப்
புங்க வன்கணைப் புற்றர வம்பொர, 9512

ாஉ ச. தன்ம னத்தர் சலத்தர் மலீத்தலீ
வெம்மை யுற்றெழுந் தேறுவ மீள்வன
தெம்மு னைத்தெரு மங்கைதன் செங்கையால்
அம்ம னைக்குலம் ஆடுவ போன்றவே. 9513

ாஉ டு. கயிறு சேர்கழல் கார்நிறக் கண்டகர்
எயிறு வாளிப டத்துணிந் தியாஞையின்
வயிறு தோறு மறைவன வானிடைப்
புயல்தொ றும்புகும் வெண்பிறை போன்றவால். 9514

ாஉசு. வென்றி வீரர் எயிறும் விடாமதக்
குன்றின் வெள்ளீ மருப்புங் குவிந்தன
வென்று மென்று மெழுந்த விளம்பிறை
ஒன்றி மாநிலத் துக்கவும் ஒக்குமால். 9515

ாஉள. ஓய்வில் காலும் தீஉ தி ரப்புனல்
பாய்வில் வேலீ உலகு பரத்தலால்
தீவு தோறும் இனிதுறை செங்கையார்
ஈய்வி லாத நெடுமலீ ஏறினர். 9516

ாஉஅ. விண்ணி றைந்தன மெய்உயிர் வேலீயும்
புண்ணி றைந்தபு னலினி றைந்தன
மண்ணி றைந்தன பேருடல் வானவர்
கண்ணி றைந்தன வில்தொழில் கல்வியே. 9517

ாஉகூ. செறுத்த வீரர் பெரும்படை சிந்தின
பொறுத்த சோரீ புகக்கடல் புக்கன
இறுத்த கானிற் செறித்தன எங்கணும்
அறுத்து மீனம் உதிர்ந்த அ னந்தமால். 9518

ாஙஅ. ஒல்வ தேஇவ் ஒருவனம் யூகத்தைக்
கொல்வ தேநின்று குன்றன்ன யாம்எலாம்
வெல்வ தேதுமி லாமையின் வன்மலீ
மெல்வ தேஎன வன்னி விளம்பினன். 9519

ாஙக. கோல் விழுந்தழுந் தாமுனங் கூடியாம்
மேல் விழுந்திடி னும்இவன் வீயுமால்
கால் விழுந்த மழைஅன்ன காட்சியீர்
மால் விழுந்துளீர் போல மயங்கினீர். 9520

ராகூ. ஆயி ரம்பெரு வெள்ளம் அரைப்படத்
தேய நிற்பது பின்பினி என்செயப்
பாயு முற்றுட னேஎனப் பன்னினன்
நாய கற்கொர் உதவியை நல்குவான். 9521

ராகூ. உற்ரு ருத்தொரு வெள்ளம் உடன்றெழாச்
சுற்று முற்றும் வளைந்தனர் தூவினர்
ஒற்றை மால்வரை மேல்உயர் தாரைகள்
பற்றி மேகம் பொதிந்தெனப் பல்படை. 9522

ராகூ. குறித்தெ றிந்தன எய்தன கூற்றிறத்
தறித்த தேருங் களிறும் தரைப்பட
மறித்து வாசி துணித்தவர் மாப்படை
தெறித்துச் சிந்தச் சரமழை சிந்தினன். 9523

ராகூ. வாய்வி ளித்தெழு பஃறலை வாளியில்
போய்வி ளித்த குருதிகள் பொங்குடல்
பேய்வி ளிப்ப நடப்பன பெட்புறும்
தீவி ளிப்புறு தீபம் நிகர்த்தவால். 9524

ராகூ. நெய்கொள் சோரி நிறைந்த நெடுங்கடல்
ஐய வாடையள் அன்னசெஞ் சாந்தினள்
வைய மங்கை பொலிந்தனள் மங்கலச்
செய்ய கோலம் புனைந்தன செய்கையாள். 9525

ராகூ. உப்புத் தேன்மது வெண்தயிர் பால்கரும்
பப்புத் தான்என் றுரைப்பன ஆறிகள்
துப்புப் போல்குரு திப்புனல் சுற்றலால்
தப்பித் தவ்வுரை யின்றெர் தறுவினுல். 9526

ராகூ. ஒன்று மேதொடை கோல்ஒரு கோடிகள்
சென்று பாய்வன திங்கள் இளம்பிறை
அன்று போல்வன ஆகிய அச்சிலை
என்று மாள்வ தெதிர்ந்த திராக்கதர். 9527

*ராகூ. எடுத்தவ னிரைத்தவர் எறிந்தவர் செறிந்தவர் மறங்கொ டெதிரே
தடுத்தவர் சலித்தவர் சரிந்தவர் பிரிந்தவர் தினிக்களிறு போல்
கடுத்தவர் கலிததவர் கறுத்தவர் செறுத்தவர் கலந்துசர மேல்
தொடுத்தவர் துணித்தவர் தொடர்ந்திலர் கிடந்தனர் துரந்தகணை யால்:

ராசஃ. தொடுப்பது சுடர்ப்பகழி ஆயிர நிறைத்தவை துரந்த துறைபோய்ப்
படுப்பது வயப்பகைஞர் ஆயிரரை அன்றுபதி ஞயிர வரைக்
கடுப்பது கருத்துமது கட்புல மனங்கருதல் கல்வியில வேல்
அடுப்பது படப்பெருவ தன்றி அவை செய்வதொரு நன்றிஉள தோ. 9529

ராசக. தூசியொடு நெற்றியிரு கையினெடு பேரணி கடைக்குழை தொகுத்
தூசிநுழை யாவெகு சரத்தணிவ குக்கும்வகை உண்ணும் உயிரை
ஆசைகளை உற்றுருவும் அப்புறமு மோகும்அதன் இப்புறம்உ ளார்
ஈசன்எதிர் உற்றுகுவ தல்லதிகல் முற்றுவதொர் கொற்றம் எவனே. 9530

ராசஉ. ஊன்நகு வடிக்கணைகள் ஊழிஅனல் ஒத்தன உலர்ந்தஉல வைக்
கானக நிகர்த்தனர் அரக்கர்மலை ஒத்தன களித்த மதமா
மானவன் வயப்பகழி வீசும்வலி ஒத்தன வலிக்குள் உளவாம்
மீனகுலம்ஒத்தன கடற்படை யினத்தொடும் விளிந்திறுத லால். 9531

ராசக. ஊழியிறு திக்கடுகு மாருதமும் ஒக்தனன் இராமன் உடனே
பூழிஎன வுக்குநிரு மால்வரையும் ஒத்தனர் அ ரக்கர்பொரு தார்
ஏழுலகும் ஒத்துயிர்கள் யாவையும் ஒறுக்கும்இறு திக்கணில் வரும்
ஆழியையும் ஒத்தனன் அம் மன்உயிரும் ஒத்தனர் அ லைக்கு நிறுதர். 9532

ராசச. மூலமுத லாய்இடையு மாயிறுதி யாய்எவையும் முற்றுமுய லும்
காலம்என லாயினன்இ ராமன்அவ் அரக்கர்கடை நாளில் விளியும்
கூலம்இல் சராசரம் அனைத்தினையும் ஒத்தனர் குரைக்கடல் எழும்
ஆலம்எனல் ஆயினன்அவ் வீரன்அவர் மீனம்என லாயினர்க ளால்.9533

ராசஙு.வஞ்சனை செய்துநெடு மன்றில்வளம் உண்டுகரி பொய்க்கு மறமா
நெஞ்சமுடை யோர்கள்குலம் ஒத்தனர்அ ரக்கர்அறம் ஒக்கும்நெடியோன்
நஞ்சநெடு நீரினையும் ஒத்தனன்அ டுத்ததனை நக்கினரை யும்
பஞ்சம்உறு நாள்வறுமை யோர்களையும் ஒத்தனர்அ ரக்கர்படு வார்.9534

ராசஞ. வெள்ளம்ஒரு தூறுபடும் வேலையில்அவ் வேலையும்இ லகைகநகரும்
பள்ளமொடு மேடுதெரி யாதவகை சேர்குருதி பம்பிஎழ லும்
உள்ளுமதி லுப்புறமும் ஒன்றும்அறி யாதபடி ஓடினர்க ளால்
கள்ளநெடு மான்விழி அ ரக்கியர்க லக்கமொடு கால்கள்குலை வார். 9535

நீங்கினர் நெருங்கினர் முருங்கினர் உலந்துலகின் நீளுமலை யில்
வீங்கின பெரும்பிணம் விசும்புற வசும்புபடு சோரி வீரிவுற்
றோங்கின நெடும்பர வையொத்தியைவ எத்திசையும் உற்றெதிர்உறத்
தாங்கினர் படைத்தலைவர் நூறுசத கோடியர் தடுத்தல் அரி யார்.

தேருமத மாவும்வய மாவும்வரை யாளியொடு சியம்முத லாய்
ஊரும்அவையாவையும்நடாயினர்க டாயினர்கள்உந்தினர்கமால்
காரும்உரு மேறும்எரி ஏறுங்கர் வெம்படையொ டம்புகடி தில்
தூருபவகை நூவினர் எய்தனர்எ றிந்தனர்தொ டர்ந்தனர்க ளால். 9537

வம்மின்எட வம்மின்எதிர் வந்துநும தாருயிர்வ ரங்கள்பல வும்
தம்மின்என இன்னனமொ ழிந்தெதிர்பொ ழிந்தனஞடுப்பரியாம்வ
வெம்மின்எனவெம்பகழிவேலெனஎ வினன்அவ் வெய்யவினே யோர்
தம்மினம னத்தையுமு னிந்தெதிர்த டுத்தனர்த னித்தனி யரோ

கரும். அக்கணையை அக்கணம்அ றுத்தனர்செ றுத்திகல்அ ரக்கர்அடை
யப், புக்கணையல் உற்றனர்ம றைத்தனர்ப யற்கதிகம் வாளி
பொழிவார், திக்கணைவ குத்தனர்எ னச்சிலர்நெ ருக்கினர்நெ
ருக்கமிசை யான், முக்கணனே யுற்றடிவ ணங்கிஇமை யோர்
இதுமொ ழிந்தனர்க ளால். 9539

எய்தகணை எய்துவதன் முன்பிடைஅ றுத்திவர்கள் ஏழுலகமும்
மொய்கொள்கணை மாமுகில்எ னும்படிவ ளைத்தனர்மு னிந்த
னர்க ளால், வைதகலின் அல்லது மறப்படைகொ டிப்படைக
டக்கும்வலி தான். செய்ததிரு மாலொடும்உ னக்கும்அரி
தென றனர்தி கைத்துவிரை வார். 9540

ாநுஉ. படைத்தலைவர் உற்றெருவர் மும்மடிஇ ராவணன்எ
னும்படிமை யோர், கிடைத்தனர் அவர்க்கொரு கணைக்கிலர்
வளைத்தனர் கிளைத்துலகெ லாம், அடைத்தனர் அழித்தனர்
தெழித்தனர் தனித்துளன் இராமன் அவரே, துடைத்தனர்எம்
வெற்றிஎன உற்றனர்இ னிச்செயல்ப னித்திசுட ரோய் 9541

அஞ்சிஅய ரேல்அவர்கள் எத்தனைவர் ஆயிடினும்அத்தனைவரும்
அஞ்சிஅனல் உற்றதென வெந்தழிவர்இந்த உரைபண்டும்உளதால்
நஞ்சம்அமு தத்தைநலி யாதுநனி நல்லறந டக்கும் அதனை
வஞ்சவினை யக்கருமம்வெல்லினும்இராமனை இவ்வஞ்சர்கடவார்.

அரக்கருளர் ஆர்சிலர்அவ் வீடணன்அல் லால்உலகில் ஆவிஉடை யார்
இரக்கம்உள தாகில்அது நல்அறம்எ ழுந்துவளர் கின்றதினி நீர்
கரக்கமுழை தேடிஉழல் கின்றிலிர்கள் இன்றெருக டும்பக விலே
குரக்குமுதல் நாயகனை ஆள்உடைய கோன்உமுவை கொல்லும் இவரை.

ாநடு. என்றுபர மன்பகர கான்முகனும் அன்னபொரு ளேஇசைத லும்
நின்றுநிலை யாதினர்கள் வானவர்கள் மானவனும் நேமிஎன லாம்
வென்றிகெடு வானினுழை வாளிபினு மேலனது ரத்துவிரை வில்
கொன்றுகுல மால்வரைகண் ஞாளுநனை மாமலைகு வித்தனன்அ ரோ.

*ாருசு. மகரம் எறிகடலின் வளையும் வயநிருதர்
சிகரம் அனையஉடல் சிதறி இருவர்உயிர்
பகர அரியபதம் விரவ அமரர்பழ
நகரம் இடமருக அணையர் நலிவுபட. 9545

ாருள. தினக ரணிஅனைய கொடிகள் திசைகளோடு
வனக சனியிலகு வயிரம் இலதணுக
அனக னெடும்அமரின் முடுகி எழுபவன
கனக வரைபொருவு கடிய பரியிரதம். 9546

ாருஅ. உகளும் இவுளிதலை துமிய உறுதலைகள்
தகளி உறவலிய தலைகள் அறுதலைவர்
துகளில் உடல்கள்விழ உயிர்கள் சுரர்உலகின்
மகளிர் வனமுலைகள் தழுவி அகமகிழ. 9547

ாருக. பாறு படுசிறகு கழுகு பகழிபட
நீறு படும்இரத நிரையின் உடல்தழுவி
வேறு தொடர்படர இரவி சுடர்மலைய
மாறு படஉலகம் நிரைகள் அளறுபட. 9548

ாசுஎ. மலையும் மறிமடலும் வனமும் வறுநிலனும்
உலைவில் அமரர்உறை உலகும் உயிர்களொடு
தலையும் உடலும்இடை தழுவு தவழ்குருதி
அலையும் அரியதொரு திசையும் இலதணுக. 9549

ாசுக. இனைய செருநிகழும் அளவில் எதிர்பொருத
வினைய முடைமுதல்வர் எவரும் உடன்விளிய
அனைய படைநெளிய அமரின் அழிகுருதி
துனையின் விசையின்எழு துவலை மழைபொழிய. 9550

ாசுஉ. இரியல் உறுபடையை நிருதர் இடைவிலகி
எரிகள் சொரியநெடு விழியர் இழுதையர்கள்
திரிக திரிகளன உரறு தெழிகுரலர்
கரிகள் பரிகள் அரி கடிதின் எதிர்கடவ. 9551

ாசுங. உலகு செவிடுபட மழைகள் உதிரஉயர்
அலகின் மலைகுலைய அமரர் தலைஅதிர
இலகு தொடுபடைகள் இடியொ டுரும்அனைய
விலகி யதுதிமிலம் விளையும் வகைவிளைய. 9552

ாசுச. அழகி தழகிதென அழகன் உவகையொடு
பழகு மதிதியரை எதிர்கொள் பரிசுபட
விழைவின் எதிரவதிர் எரிகொள் விரிபகழி
மழைகண் மழைசொரிய அமரர் மலர்சொரிய. 9553

ாசுடு. சிவனும் அயனும்எழு திகிரி அமரர்பதி
அவனும் அமரர்குலம் எவரும் முனிவரருங்
கவனம் உறுசரணம் ழுடுவ கழுதினமும்
நமனும் வரிசிலையு மறனும் நடம்நவில. 9554

ககுசு. கரிய திலதமலி திரிய அவிர்சுடர்கள்
இரிய ஒருவில்உடை இருகை ஒருகளிறு
திரிய விடுகுயவர் திரிகை எனஉலகு
தெரிய எழுகடலு முழுது முறைதிரிய. 9555

ககுள. தேவர் திரிபுவன நிலையில் செருவிதனை
ஏவர் அறிவுறுவர் இறுதி முதல்உணர்வின்
மூவர் தலைபொதிர்கள் எறிவர் அறமுதல்வ
பூவை நிறவவென வேத முறைபுகழ்வ. 9556

ககுஅ. அருகு கடல்திரிய அலகின் மலைதிரிய
உருகு சுடர்களிடை திரிய உரலுடைய
இருகை ஒருகளிறு திரிய விடுகுயவர்
திரிகை எனஉலகு முழுது முறைதிரிய. 9557

ககுக. எய்யும் ஒருபகழி ஏழு கடலும்ஓடும்
வெய்ய களிறுபரி ஆளொ டிரதம்விழ
ஒய்யின் ஒருகதியி னோட வுணர்அமரர்
கைகள் எனஅவுணர் கால்கள் கதிகுலைய. 9558

களம. அண்ணல் விடுபகழி யானை இரதமயல்
பண்ணு புரவிபடை வீரர் தொகுபகுதி
புண்ணி னெடுகுறிகள் புள்ளி எனவிரவி
எண்ணும் அளவணைய எல்லை யிலநுழைய. 9559

*களக. சுருக்கம்உற் றதுபடை சுருக்கத் தால்இனி
கரக்கும்உற் றிருருபுறத் தென்னும் கண்ணினுல்
அரக்கருக் கன்றுசெல் அரிய வாம்வகை
சரக்கொடு நெடுமதில் சமைத்திட் டான்அரோ. 9560

ாளஉ. மாலியை மாலிய வாணை மால்வரை
போல்உயர் கயிடணை மதுவைப் போன்றுள
சாலிகை யாக்கையர் தணப்பில் வெஞ்சர
வேலியைக் கடந்திலர் உலகை வென்றுளார். 9561

ாளஙு. மாண்டவர் மாண்டற மற்று ளோர்எலாம்
ஈண்டினர் ஒருதிசை ஏழு வேலியும்
மூண்டற முருக்கிய ஊழிக் காலத்தில்
தூண்டுறு சுடர்ச்சுடச் சுருங்கித் தொக்கபோல். 9562

ாளச. புரம்சுடு கடவுளும் புள்ளின் பாகனும்
அரம்சுடு குலிசவேல் அமரர் வேந்தனும்
உரம்சுடு சிற்சிலர் ஒருவ னும்உடை
வரம்சுடும் வலிசுடும் வாழு நாள்சுடும். 9563

ாளஞ. ஆயிரம் வெள்ளம்உண் டொருவர் ஆழிசூழ்
மாயிரு ஞாலத்தை மறிக்கும் வன்மையோர்
மேயின பெரும்படை இதணை ஓர்விலால்
ஏயினு மாத்திரத் தெய்து கொன்றனனன். 9564

ாளசு. இடைபடும் படாதன இமைப்பில் ஓர்படை
புடைபட வலங்கொடு விலங்கிப் போகுமால்
படைபடுங் கோடியோர் பகழி யால்பழி
கடைபடும் அரக்கர்தம் பிறவிக் கட்டமால். 9565

ாளள. பண்டுல குதித்தவ ளுடும் பண்ணமை
குண்டையின் பாகனும் பிறருங் கூடினூர்
அண்டர்கள் விசும்பின்னின் முர்க்கின் முர்உழை
கண்டிலம் இவன்நெடு மாயக் கள்வனுல். 9566

ாளஅ. கொன்றனன் இனிஒரு கோடி கோடிமேற்
றன்றெனில் பதுமம்மேற் முக வெள்ளமாய்
நின்றது நின்றினி நினைவ தென்பெற
ஒன்றென நினைகென வன்னி ஓதினுன். 9567

ாளகூ. விழித்துமோ இராவணன் முகத்து மீண்டியாம்
பழித்துமோ நம்மைநாம் படுத்தல் அஞ்சினுல்
அழித்துமோர் பிறப்புமு நெறிசென் றண்முவாம்
கழித்தும்இவ் ஆக்கையைப் புகழைக் கண்ணுற. 9568

கஅம. இடுத்தினிப் பெருந்துறை எண்ணு வோம்எனில்
தடுத்தகூர் வாளியி னுரைத் தாங்கலோம்
எடுத்தொரு முகத்தினுல் எய்தி யாம்இனிக்
கொடுத்துநம் உயிரைஎன் றுருமை கூறினுன். 9569

கஅக. இளக்கரு நெடுவரை ஈர்க்கு மாறெலாம்
அளக்கரில் பாய்ந்தனப் பதங்க மாரழல்
விளக்கினில் வீழ்ந்தென விதிகொண் டுந்தலால்
வளைத்திரைத் தடர்த்தனர் மலையின் மேனியார். 9570

கஅஉ. மழுஎழுத் தண்டுகோல் வளையம் நாஞ்சில்வாள்
எழுஅயில் குலிந்தம்வேல் ஈட்டி தோமரம்
கழுமுழு கப்பணம் முதல கைப்படை
தொழுவினில் புயலினுன் உடலில் தூவினுர். 9571

கஅங. கார்தருப் பம்மெனும் கடவுள் மாப்படை
வேந்தருக் கரசனும் விலக்கி நூக்கினுன்
பாந்தளுக் கரசெனப் பறவைக் கேறினப்
போந்துருத் ததுநெருப் பணைய போர்க்கணை. 9572

கஅச. மூன்றுகண் அமைந்தன ஐம்மு கத்தன
ஆன்றமெய் தழலன புனலும் ஆடுவ
வான்றொட ரிவர்வன வாளி மாமழை
தோன்றின புரம்சுடும் ஒருவன் தோற்றத்த. 9573

கஅசு. ஐயிரு கோடியர் அரக்கர் வேந்தர்கள்
மொய்வலி வீரர்கள் ஓழிய முற்றுற
எய்எனு மாத்திரத் தவிந்த தென்பரால்
செய்தவத் திராவணன் மூலச் சேணையே. 9574

கஅசு. மாப்பெருந் தீவுகள் ஏழு மாதிரப்
பாப்பரும் பாதலத் துள்ளும் பல்வகைக்
காப்பரு மலைகளும் பிறவுங் காப்பவர்
ஆப்புறு காதலர் இராவ ணற்கவர். 9575

கஅள. மாத்தட வையகம் அளந்த வானவன்
கோத்தகன் மார்பிடை அணிந்த கொள்கையர்
பூத்தவி சுகந்தவன் புகன்று பொய்யறு
நாத்தழும் பேறிய வரத்தை நண்ணினுர். 9576

கஅஅ. நம்முள்ளுண் டொருவரை வெல்லி னன்றிலார்
வெம்முனை இராவணன் தனையும் வெல்லுமால்
இம்மென உடன்எடுத் தெழுந்து சேறுமோ
செம்மையில் தனித்தனி செய்து மோசெரு. 9577

*கஅக. நில்லேம் எல்லாம் ஒன்றிவ ளைத்திங் நெடியோனை
வல்லே வல்ல போர்வலி முற்றி வளையோ மேல்
வெல்லேம் வெல்லேம் என்றணன் வன்னி மிடலோரும்
தொல்லோன் சொல்லே நன்றென அஃதே துணிவுற்றார்.

ககூ. அன்னார் தாமும் ஆர்கலி ஏழும் என ஆர்த்தார்
மின்னார் வானம் வீவுறும் என்றுல் விளி சங்கம்
கொன்னே ஊதி தோள்புடை கொட்டிக் கொடுசார்ந்தார்
என்னும் வையம் என்படும் வானம் திசை ஏதாம் 9579

ககக. ஆர்த்தார் அன்னார் அன்ன கணத்தே அவர் ஆற்றல்
தீர்த்தா னுந்தன் வெஞ்சிலை நாணைத் தெறிப்புற் றூன்
போர்த்தான் பொற்றேர்ள் முற்றும் அளந்தான் புகழ்சங்கம்
ஆர்த்தால் ஒத்த தவ்வொலி எல்லா உலகுக் கும். 9580

*ாகூஉ. பல்லா யிரகோடி பல்படை நூல்
வல்லா ரவைமெய்ம் மைவழங் கவல்லார்
எல்லா உலகங் களும்வ றியபோர்
வில்லா ளர்அரக் கரின்மே தகையார். 9581

ாகூக. வென்றூர் உலகங் களைவிண் ணவரோ
டொன்று உயர்தா னவர்யூ கம்எலாம்
கொன்றூன் நிமிர்கூற் றெனவெவ் உயிரும்
தின்றூர் எதிர்சென் றுசெறிந்தன ரால். 9582

ாகூச. வளைத்தார் மதயா னையைவன் தொழிலில்
தளைத்தார் எனவந்து தனித் தனியே
உளைத்தார் உரும்வ றெனஓன் லறபோர்
விளைத்தார் இமையோர் கள்வெலும் பினரால். 9583

ாகூடு. தேரார்ப் பொலிவீ ரர்தெழிப் பொலியும்
தாரார்ப் பொலியும் கழல்தாக் கொலியும்
போராற் சிலைநா ணிபுடைப் பொலியும்
காரார்ப் பொலியும் கடலார்ப் பொலியும். 9584

ஈகூசு. விட்டீ யவிளங் கியவெம் படையில்
சுட்டீ யகிமிர்ந் தசுடர்ச் சுடரும்
கட்டீ யும்ஓருங் குகலந் தெழலால்
உட்டீ யுறவெந் தனஏ முலகும். 9585

ஈகூள. எல்லா ரும்இரா வணனே அணையார்
வெல்லா உலகில் லவர்மெய் வலியால்
தொல்லார் படைவந் துதுடர்ந் ததெனை
நல்லா னும்உருத் தெதிர்நண் ணினனுல். 9586

ஈகூஅ. ஊழிக் கனல்போ லவருந் தினபேரர்
ஆழிப் படைஅம் பொடுமற் றகலப்
பாழிக் கடைநாள் விடுபன் மழைபோல்
வாழிச் சுடர்வா னிவழங் கினனுல். 9587

ஈகூக. சூரோ டுதுடர்ந் தசுடர்க் கணைதான்
தாரோ டகலங் கள்தடிந் திடலும்
தேரோ டும்விழுந் தனர்செங் கதிரோன்
ஊரோ டுமறிந் தனன்ஒத் துரவோர். 9588

உஈ. கொல்லோ டுசுடர்க் கணைகூற் றினரும்
பல்லோ டுதொடர்ந் தனபாய் தலினுல்
செல்லோ டெழுமா முகில்சிந் தினபோல்
வில்லோ டும்விழுந் தமிடற் கரமே. 9589

உ0க. செம்போ டுதிரத் திரையா றியின்வாய்
வெம்போ டரவக் குலமேல் நிமிரும்
கொம்போ டுமெழுந் தனஒத் ததுரைக்
தம்போ டும்விழுந் தவடற் குலமே. 9590

உ0உ. முன்னே டுதிரத் திரைமூ வுலகைப்
பின்னே டிவளைத் தபெருங் கடல்வாய்
மின்னே டும்எழுந் தனமே கம்எனப்
பொன்னே டைநெடுங் கரிபுக் கனவால். 9591

உ0ங. மறவெற் றிஅரக் கர்வலக் கையொடும்
நறவக் குருதிக் கடல்வீழ் நகைவாட்
சுறவொத் தனமீ துதுடித் தெதழலால்
இறவொத் தனவா வும்இனப் பரியே. 9592

உ0ச. தாமச் சுடர்வா ளிதடிந் தகலப்
பாமக் குருதிப் படிகின் றபடை
சேமப் பிடிகே டகமா கடல்சேர்
ஆமைக் குலம்ஓத் தனஅத் தணியால். 9593

உ0தி. காம்போ டுபதா கைகள்கார் உதிரப்
பாம்போ டுகடற் படிவுற் றனவால்
வாம்போர் நெடுவா டைமலைந் தகலச்
கூம்போ டுயர்பாய் கள்குறைந் தனபோல். 9594

உ0சு. மண்டப் படுசோ ரியின்வர ரியின்வீழ்
கண்டத் தகரத் தொகைகவ் விபதால்
முண்டக் கிளர்தண் டனமுட் டொகுவன்
துண்டச் சுறவொத் ததுடித் தனவால். 9595

உ0எ. தெளிவுற் றபளிங் குறுசில் லிகொள்தேர்
வெளிவிற் றுகவே றுறவீழ் வனவும்
அளிமுற் றியசோ ரியின் [1]வாரியிலாழ்
[2]ஒளிமுற் றியதிங் கள்ஓத் துளவால். 9596

உ0அ. நிலைகோ டலில்வென் றிஅரக் கரும்நேர்
கொலைகோ டிமனக் குறிகோ ளுறுமேல்
சிலைகோ டியதோ றுசினத் தினவன்
மலைகோ டியின்மே லுமறிந் திறுமால். 9597

உ0கூ. திண்மார் புமிசைச் செறிசா லிகையில்
கண்வா ளிகடைச் சிறைகா ணநுழைந்
தெண்வாய் அறம்ஓத் தனஇன் நகைஉம்
றுண்வாய் வரிவண் டினம்உய்த் தனவால். 9598

உகO. பாரு டுகளத் தொருவன் பகலீன்
கூரு கியகா லிலொர்கூ றிடையே
நூரு யிரம்யோ சனைநூ றிற்களம்
மாரு துழல்சா ரிகைவந் தனனால். 9599

உகக. மின்ரு ருடன்வந் துமிழ்ந்தீர்ந் தயலே
சென்ரூர் எதிர்சென் றுதிரிந் திடலால்
தன்தா தையையோர் வுறுதன் மகனே
கொன்ரூன் அவனே இவன்என் றுகொளா. 9600

---

1 [பிரதி] வாரியலாள், 2 ஓதி

உகஉ. இங்கே உளன்இங் குளன்இங் குளன்எங்
கங்கே உணர்கின் றவலக் கலியால்
வெங்கோ பர்நெஞ்ச் சரவெம் படைவிட்
டெங்கே னும்வழங் குவர்எய் குணரால். 9601

உகஙு. ஒருவன் எனஉன் னும்உணர்ச் கியிலீர்
இரவன் றிதுஓர் பகல்எய் தினரால்
கரவன் றிதிரா மர்கணக் களவப்
பரவை மணலில் பலர்என் பர்களால். 9602

உகச. ஒருவன் ஒருவன் மலைபோல் உயர்வோர்
ஒருவன் படைவெள் ளம்ஓரா யிரமும்
ஒருவன் ஒருவன் உயிர்உண் டதலால்
ஒருவன் உயிர்உண் டதும்உள் ளதுவோ. 9603

உகடு. தேர்மேல் உளர்மா வொடுசெந் தறுகட்
கார்மேல் உளமா கடன்மேல் உளர்இப்
பார்மேல் உளர்உம் பர்பரந் துளரால்
போர்மே லும்இரா மர்பகுக் கடர்வார். 9604

உகசு. என்னும் படிஎங் கணும்எங் கணுமாய்
துன்னும் திரியும் தொடரும் சுழலும்
பின்னும் மருகும் எதிரும் பிரியான்
மன்னன் மகன்வீ ரர்மயங் கினரால். 9605

*உகள படுமத கரிபரி சிந்தின பலிவரை இரதம் அவிந்தன
விடுபடை திசைகள் பிளந்தன விரிகடல் அளறதெ ழுந்தன
அடுபுலி அவுணர்தம் மங்கையர் அலர்விழி அருவிகள் சிந்தின
கடுமணி நெடியவன் வெஞ்சிலைக் கணைகளை கணைகளெ னுந்தொறும்.

உகஅ. ஆனை ஆயிரம் தேர்பதி னாயிரம் அடர்பரி ஒரு கோடி
சேனைகாவல் ஆ யிரம்பேர் படிவல் செழுமணிக் கவந்தம்ஒன் றும்
கானம்ஆயிரம் ஆயிர கோடிக்கு வீன்மணி கணிலென் னும்
ஏனை இம்மணி எழுரைகாழிகை இடாவிடா தாடிய தன்றே.

*உகக ஊனேறு படக்கைவீரர் எதிர்எதிர் உறுக்கும் தோறும்
கூனேறு சிலையும் தானும் குதிக்கின்ற கடுப்பின் கொட்பால்
வானேறு திணர்கள் தேரும் மலிகின்ற வயவர் தேரும்
தானேறி வந்த தேரே ஆக்கினன் தனிவ லன்னான். 9608

உஉல. காயிரும் சிலேஷன் றேனும் கணைப்புட்டில் ஆண்டு மேலும்
தூயெழும் பகழி மாரி மழைத்துளித் தொகையின் மேல
ஆயிரம் கைகள் செய்த செய்தன அமலன் செங்கை
ஆயிரம் கையும் கூடி இரண்டுகை ஆன தன்றே. 9609

உஉக. பொய்ஒரு மனத்தன் ஆகி மனிதனும் புனர்ப்பி தென்ன
மெய்அற உணர்ந்த வெள்ளம் ஆயிர மிடைந்த சேனை
செய்உறும் விஜயம் எல்லாம் ஒருமுகம் தெரிவ துண்டோ
ஐயிரு நூறு கோடி அனந்தமா முகங்கள் அம்மா. 9610

உஉஉ. கண்நுதல் பரமன் தானும் கான்முகக் கடவுள் தானும்
எண்உறும் தொடரா எய்த கோல்என எண்ணல் உற்றூர்
பண்ணியால் பகுக்க மாட்டார் தனித்தனிப் பரிக்கல் ஆற்றூர்
ஒண்ணுமோ கணிக்க என்றூர் உவகையின் உயர்ந்த தோளார்.

வெள்ளம்ஈ ரைந்து நூறே வீடுகணை அவற்றின் மிம்மை
உள்ளவா றுளதாம் என்றோர் உரைக்கணக் குணர்ந்து மேலும்
கொள்ளியோர் ஒருஐ நூறு கொண்டன பலவால் கொற்ற
வள்ளலே வழங்கி னானே என்றனர் மற்றை வானோர். 9612

சூடைக் கெல்லாம் கொடிகட் கெல்லாம் கொண்டெனக் குவிந்த கொற்றப்
படைக்கெல்லாம் பகழிக் கெல்லாம் யாதோதேர் பரிமா ஆதிக்
கடைக் கெல்லாம் துரந்த வாளிக் கணிதத்திற் களவைக் காட்டி
அடைக்கலம் அறிஞர் யாரே என்றனர் முனிவர் அப்பால்.

உஉசு. கண்டத்தில் கீழும்மேலும் கபாலத்தும் கடைக்கல் உற்ற
சண்டப் பேர் அரக்கர் தன்மைத் கொடர்ந்துகோட் புணருந் தன்மை
பிண்டத்தில் கருவா கும்தன் பேருருக் கலைய வந்த
அண்டத்தை நிறையப் பெய்து குலுக்கிய தனையன் அன்னன்.

உஉஎ. கோடியே இரண்டு தொக்க படைக்கல மள்ளர் கூடி
ஓடியோர் பாகம் ஆக உயிர்இழந் துறைத்த லோடும்
வீடிஈன் றிழிவ தென்னே விண்ணவர் படைகள் வீசி
மூடுதும் இவனை என்ன யாவரு முடுகி மொய்த்தார். 9615

உஉள. விண்டுவின் படையே யாதி வெய்யவன் படைஈ ருருகக்
கொண்டொருங் குடனே விட்டார் குலுங்கிய தகரர் கூட்டம்
அண்டமும் கீழும் மேலும் ஆகிய தகனி அண்ணல்
கண்டொரு முறுவல் காட்டி அவற்றினை அவற்றால் காத்தான்.

உஉஅ. தானவை தொடுத்த போது தடுப்பரி துலகும் தானை
பூநனி வடவைத் தீயில் புக்கெனப் பொரிந்தும் என்றுல்
ஆனவை மறந்த அண்ணல் அளப்பரும் கோடி அப்பால்
ஏனையர் தலைகள் எல்லாம் இடிஉண்ட மலையின் இட்டான்.

உஉகூ. ஆயிரம் வெள்ளத் தோரும் அடுகளத் தவிந்துவீழ்ந்தார்
மாயிரு ஞாலத் தாள்தள் வன்பொறைப் பாரம் நீங்கி
மீயுயர்ந் தெழுந்த தன்றே வீங்கொலி வேலை நின்றும்
போயொருங் கண்டத் தோடும் கோடியோ சனைகள் பொங்கி.

உஙம. நீனைந்தன முடித்தோம்என்னு வானவர் துயரம்நீத்தார்
பூனைந்தனன் வாகை என்பான் இந்திரன் உவகை பூத்தான்
வனைந்தன வல்லா வேதம் வாழ்வுபெற் றுயாந்த மாதோ
அனந்தனும் தலைகள் ஏந்தி அயாஉயிர்த் தல்லல் தீர்ந்தான்.

உஙக.தாய்படைத் துடைய செல்வம் ஈதெனத் தம்பிக் கீய்ந்து
வேய்புடைத் தனைய கானம் விண்ணவர் தவத்தின் மேவி
தோய்படைத் தொழிலால் யார்க்கும் துயர்துடைத் தாணைநோக்கி
வாய்படைத் துயர்ந்தோர் எல்லாம் வழுத்தினர் வணக்கம் செய்தார். 9620

தீமொய்த்த அனைய செங்கண் அரக்கரை முழுதும் சிந்திப்
பூமொய்த்த கமத்தர் ஆகி விண்ணவர் போற்ற நின்றுன்
பேய்மொய்த்து நரிகள் ஈண்டிப் பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தனியே நின்ற கறைமிடற் றிறைவன் ஒத்தான்.

உஙஙூ. அண்டமாக் களமும் வீய்ந்த அரக்கரே உயிரும் ஆகக்
கொண்டதோர் உருவம் தன்னுல் இறுதிநாள் வந்து கூடி
மண்டுநாண் மறித்துக் காட்ட மன்உயிர் அனைத்தும் வாரி
உண்டதான் தானே ஆன தன்னெரு மூர்த்தி ஒத்தான். 9622

உஙச. ஆகுலம் துறந்த தேவர் அள்ளினர் சொரிந்த வெள்ளச்
சேகறு மலருஞ் சாந்தும் செருத்தொழில் வருத்தம் தீர்க்க
மாகொலை செய்த வள்ளல் வாளமர்க் களத்தைக் கைவிட்
டேகினன் இளவ லோடும் இராவணன் ஏற்ற கைமேல். 9623

உஙஞ.இவ்வழி இயன்ற தெல்லாம் இயம்பினம் இருந்து போன
தெவ்வழி ஆற்றல் வெற்றிச் சேனையின் செயலும் சென்ற
வெவ்வழி அரக்கர் கோமான் செய்கையும் இனைய வீரன்
எவ்வமில் ஆற்றல் போரும் உற்றதும் இயம்பல் உற்றம். 9624

நஙஅ–வது மூலபல வதைப்படலம் – முற்றிற்று.
ஆகப்படலம் 122-க்கு கவி 9624

நகவது வேலேற்ற படலம்

க. பெரும்படைத் தலைவர் போன்ருர் யாம்எலாம் பிரிந்து போனேம்
விரும்பினேம் வாழ்க்கை என்ருல் யார்பழி விலக்கல் பாலார்
வரும்பழி துடைத்து மாண்டு வைகுதும் வானின் என்ரு
இருங்கடல் பெயர்ந்த தென்னச் சேனையும் மீண்ட தீப்பால்.

உ. சில்லி ஆயிரம் சில்லுடைப் பரியொடும் சேர்ந்த
எல்லி வான்கதிர் மண்டல மாறுகொண் டிமைக்கும்
செல்லும் தேர்மிசைச் சென்றனன் தேவரைத் தொலைத்த
வில்லும் வெல்கணைப் புட்டிலும் கொற்றமும் விளங்க. 9626

ங. நூறு கோடிதேர் நொறில்பறி நூற்றிரு கோடி
யாறு கோடுடை மால்களி றையிரு கோடி
ஏறு கோளரு பதாதியும் இவற்றிவற் றிரட்டி
ஈறு கோளரி ஏறனன் உடன்சென்ற சேனை. 9627

ச. மூன்று வைப்பினு முப்புறத் துலகினு முணையில்
ஏன்று கோளுறும் வீரர்கள் வம்மின்என் றிசைக்கும்
ஆன்ற பேரியும் அதிர்குரல் சங்கமும் அசனி
ஈன்ற காளமும் ஏழொடே முழகினும் இசைப்ப. 9628

ஞ. அணைய தாகிய அரக்கர்க்குப் அரக்கனை அவனைர்
விணைய வானவர் வெல்வினைப் பயத்தினை வீரர்
நினையு நெஞ்சையும் சுடுவதோர் நெருப்பினை நிமிர்ந்து
கணையும் கூற்றையும் குடிப்பதோர் கூற்றினைக் கண்டார். 9629

சு. கண்டு கண்களோ டணிவதுத் துருமுறழ் கற்கள்
தொண்டு கூற்றமு நடுக்குறத் தோள்புடை கொட்டி
அண்ட சோடிகள் அடுக்கழிந் துலைவுற ஆர்த்தார்
மண்டு போரிட மடிவதே நலன்என்று வலித்தார். 9630

எ. அரக்கன் சேனையும் ஆருயிர் வழங்குவான் அமைந்த
குரக்கு வேலையும் ஒன்றெடொன் றெதிர்எதிர் சோத்த
நெருக்கி நேர்ந்தன நெருப்பிடைப் பொடித்தனை நெருப்பின்
உருக்கு செம்பென அம்பரத் தோடின உதிரம். 9631

அ. அற்றவன் தலை அறுகுறை எழுந்தெழுந் தண்ட
ஒற்றைற் வானகம் உதையமண் டலமென ஒளிரச்
சுற்று மேகத்தைச் சுற்றிய குருதிநீர் தூளிப்ப
முற்றும் வையகம் பேர்க்கள மாம்என முயன்ம. 9632

கூ. தூவி யம்பெடை இரீவன சொரிதரச் சூறி
தூவி யம்பெடை படிந்தென சோரியுட் சுளிப்ப
மேவி யம்படை படப்படக் குருதியின் வீழ்ந்த
மேவி யம்படை கடலிடைக் குடரொடும் இழப்ப. 9633

மி. கண்டி றந்தனர் கணவர்தம் முகத்தவர் முறுவல்
கண்டி றந்னர் மடந்தையர் உயிரொடுங் கலந்தார்
பண்டி றந்தன பழம்புணர் வகம்புகப் பன்னிப்
பண்டி றந்தன புலம்பொலி சிலம்பொலி பனிப்ப. 9634

மெ. ஏழு மேழுமென் றுரைக்கின்ற உலகங்கள் யாவும்
ஊழி பேர்வதே ஒப்பதோர் உலைவுற உடற்று
நாழில் வெஞ்சமம் நோக்கிய இராவணன் நுவன்ரூன்
தாழில் என்படை தருக்கனும் என்பதோர் தன்மை. 9635

மே. மரமுங் கல்லுமே வில்லொடு வாள்மழுச் சூலம்
அரமுங் கல்லும்வேல் முதலிய இயல்படை அடுக்கிச்
சிரமுங் கல்லெனச் சிந்தலில் சிதைந்தன சேண
உரமுங் கல்வியும் உடையவன் செருநின்ற ஒருபால். 9636

மை. அழலும் கற்களோ டணியொடு துணிபடு மாலிச்
சுழலும் பல்பரித் தேரொடும் புரவியும் சுற்ற
கழலும் சோரிநீர் ஆற்றொடும் கடலிடைக் கலக்கும்
குழலு நாலும்போல் அனுமனும் தானும்அக் குமரன். 9637

மை. வில்லுங் கூற்றுவற் குண்டெனத் திரிகின்ற வீரன்
கொல்லுங் கூற்றெனக் குறைக்குமிந் நிறைப்பெருங் குழுவை
ஒல்லுங் கோளரி உருமன்ன குரங்கின துகிரும்
பல்லுங் கூர்த்தில அரக்கர்தம் படைகளைப் பற்றி. 9638

மொ. கண்டு நின்றிறைப் பொழுதினி காலத்தைக் கழிப்பின்
உண்டு கைவிடுங் கூற்றுவன் இருந்தபே ருயிரை
மண்டு வெஞ்செரு நான்ஒரு களத்திடை மடித்தே
கொண்டு மீள்குவன் கொற்றம்என் றிராவணன் கொதித்தான்.

மொ. ஊதை போல்வன உரும்உள திறலன உருவிப்
பூத லங்களைப் பிளப்பன அண்டத்தைப் பொதுப்ப
மாதி ரங்களை அளப்பன மாற்றருங் கூற்றின்
தூது போல்வன கடுங்கணை முறைமுறை துரந்தான். 9640

மெ. ஆளி ஒன்றுள தெரிந்தபோ தமர்களத் தடைந்தார்
நாளி போன்றுள தென்பதன் நாள்இருள் அடைந்த
காளி போன்றனன் இராவணன் வெள்ளரிடைக் கரந்த
பூசை போன்றதப் பொருசினத் தரிகள்தம் புணரி. 9641

மஅ. இரியல் போகின்ற சேனையை இலக்குவன் விலக்கி
அரிகள் அஞ்சன்மின் அஞ்சன்மின் என்றருள் வழங்கித்
திரியும் மாருதி தோள்எனும் தேர்மிசைச் சென்றான்
எரியும் வெஞ்சினத் திராவணன் எதிர்புகுந் தேற்றான். 9642

மக. ஏற்றக் கோடலும் இராவணன் எரிமுகப் பகழி
நூற்றுக் கோடியின் மேற்செல சிலைகொடு நூக்கக்
காற்றுக் கோடிய பஞ்சென அதைதொறுங் கரக்க
வேற்றுக் கோல்கொடு விளக்கினன் இலக்குவன் விசையால்.

உம. விலக்கி னுன்தடந் தோளினும் மார்பினும் விசிகம்
உலக்க உய்ந்தனன் இராவணன் ஐந்தொடைக் குருவக்
கலக்கம் உற்றிலன் இளவலும் உள்ளத்தில் கனன்றான்
அலக்கண் எய்துவித் தான்அடல் அரக்கனை அம்பால். 9644

உக. காக்க லாலாக் கடுப்பினில் தொடுப்பன கணைகள்
நூக்கி னுன்கலை நுறுக்கினன் அரக்கனும் நூறில்
ஆக்கும் வெஞ்சமத் தரிதிவன் தனைவெல்வ தம்பால்
நீக்கி என்இனிச் செய்வதென் றிராவணன் நினைந்தான். 9645

உஉ. கடவுள் மாப்படை தொடுக்கின்மற் றவைமுற் றுங்கடக்க
விடவு மாற்றவும் வல்லனேல் யாரையும் வெல்லும்
தடவு மாற்றலைக் கூற்றையும் தலையனைப் போலச்
சுடவு மாற்றுமெவ் வுலகையும் அவனுக்குந் தோலான். 9646

மோகம்ஒன் றுண்டு முதலவன் வகுத்தது முன்னுள்
ஆகமற்றது கொற்றமும் சிவன் தனை அறிப்ப
தேகமுற்றிய விஞ்சையை இவன்வயின் ஏவிக்
காக முற்றுறழ் களத்தினில் இடத்துவன் கடிதில். 9647

உச. என்ப துன்னிய விஞ்சையை மனத்திடை எண்ணி
முன்பன் மேல்வரத் துரந்தனன் அதுகண்டு முடுகி
அன்பின் வீடணன் ஆழியான் படையினில் அறுத்தி
என்ப தோதினன் இலக்குவன் அதுதொடுத் தெய்தான். 9648

உடு. வீடணன் சொல விண்டுவின் படைக்கலம் விட்டான்
மூடு வெஞ்சின மோகத்தை நீக்கலும் முனிந்தான்
மாடு நின்றவன் உபாயங்கள் மதித்திட வந்த
கேடு நந்தமக் கென்பது மனங்கொண்டு கிளர்ந்தான். 9649

உசு. மயன் கொடுத்தது மகளிடை வயங்கனல் வேழ்வி
அயன் படைத்தது வாழியுங் குலிசமும் அனைய
உயர்ந்த கொற்றமும் ஊழியும் கடந்துள துருமில்
சயந் தனைப்பொரும் தம்பியை உயிர்கொளச் சமைந்தான்.

உஎ. விட்ட போதினில் ஒருவனை வீட்டியே மீளும்
பட்ட போதவன் நான்முகன் ஆயினும் படுக்கும்
வட்ட வேல்அது வலங்கொண்டு வாங்கினன் வணங்கி
எட்ட நிற்கலத் தம்பிமேல் வல்விசைத் தெறிந்தான். 9651

உஅ. எறிந்த காலையில் வீடணன் அதன்நிலை எல்லாம்
அறிந்த சிந்தையன் ஐயஎன் தன்உயிர் அழிக்கும்
பிறிந்து செய்யலாம் பொருள்இல்லை என்றலும் பெரியோன்
அறிந்து போக்குவல் அஞ்சல்நீ என்றிடை அனைத்தான். 9652

உக. எய்த வாளியும் ஏவின படைக்கலம் யாவும்
செய்ய மாதவத் தொருவனைச் சிறுதொழில் தியோன்
வைத வைவினில் ஒழிந்தன வீடணன் மாண்டான்
உய்தல் இல்லைஎன் றும்பரும் பெருமனம் உலைந்தார். 9653

உஉ. தோற்பன் என்னினும் புகழ்நிற்கும் தருமமும் தொடரும்
ஆர்ப்பர் நல்லவர் அடைக்கலம் புகுந்தவன் உலக்கப்
பார்ப்ப தென்பிறப் பறிவந்து தொடர்வதன் முன்னம்
ஏற்பென் என்றனன் மார்பின்என் றிலக்குவன் எதிர்ந்தான்.

உக. இலக்கு வற்குமுன் வீடணன் புகும்இரு வரையும்
விலக்கி அங்கதன் மேற்செலும் அவனையும் விலக்கிக்
கலக்கும் வானரக் காவலன் அனுமன்முன் கடுகும்
அலக்கண் அன்னதை இன்னதென் றுரைசெய லாமோ. 9655

உஉ. முன்னி னுர்எலாம் பின்உறக் காலினும் முடுகி
நின்னில் யான்அது விலக்குவன் என்றுரை நேரா
பின்னும் வேவிடீர் விண்ணவர் கண்புடைத் திரங்கப்
பொன்னின் மார்பிடை ஏற்றனன் முதுகிடைப் போக. 9656

நக. எங்கு நீங்குதி நீஎன வீடணன் எழுந்தான்
சிங்கவே றன்ன சீற்றத்தால் இராவணன் தேரில்
பொங்கு பாய்பரி சாரதி யொடும்படப் புடைத்தான்
சங்க வானவர் தலைஎடுத் திடநெடுந் தண்டால். 9657

நச. சேய் விசும்பினில் நிமிர்ந்துநின் றிராவணன் சீறிப்
பாய் அடுங்கணை பத்தவன் உடற்புகப் பாய்ச்சி
ஆயி ரம்சரம் அனுமன்தன் உயிரிடை அழுத்திப்
போயினன்செரு முடிந்ததென் றிலங்கையூர் புகுவான். 9658

தேடிச் சேர்ந்தவென் பொருட்டினுன் உலகுடைச் செல்வன்
வாடிப் போயினன் நீஇனி வஞ்சனை மதியால்
ஓடிப் போகுவ தெங்கடா உன்னெடும் உடனே
வீடிப் போவன்என் றரக்கன்மேல் வீடணன் எழுந்தான். 9659

நசு. வென்றி என்வசம் ஆனது வீடணப் பசுவைக்
கொன்றி னிப்பயன் இல்லைஎன் றிராவணன் கொண்டான்
நின்றி லன்ஒன் றும்நோக்கலன் முனிவெலாம் நீத்தான்
பொன்றி னிந்தவன் மதில்உடை இலங்கைஊர் புக்கான். 9660

நஎ. அரக்கன் ஏகினன் வீடணன் வாய்திறந் தரற்றி
இரக்கந் தான்எனை இலக்குவன் இணையடித் தலத்தில்
கரக்கல் ஆகலாக் காதலில் வீழ்ந்தனன் கலுழ்ந்தான்
குரக்கு வெள்ளமும் தலைவரும் துயரிடைத் குளித்தார். 9661

நஅ. பொன்னி ரும்புறு கந்தமாப் பொருப்பினுற் பொன்ற
என்னி ருந்துகான் இறப்பன்இக் கணத்தினீ ஆளும்
மன்னி ருந்தினி வாழ்கிலன் என்றவன் மறுக
நின்னில் என்கின்ற சாம்புவன் உரைஒன்று நிகழ்த்தும். 9662

நக. அனுமன் நிற்கநாம் ஆருயிர்க் கிரங்குவ தறிவோ
நினையும் அத்துணை மாத்திரத் துலகெலாம் நிமிர்வான்
வினையின் நன்மரந் தளிர்க்கின்றுன் உயிர்க்கின்றுன் வீரன்
இனையும் அல்லல்உற் றழுங்கன்மின் என்றிடர் தீர்த்தான்.

சம. மருத்தின் காதலன் மார்பிடை அம்பெலாம் வாங்கி
இருத்தி யோகடி தேகலை இளவலை இங்ஙன்
வருத்தங் காணுமோ மன்னவன் என்றனன் மன்னன்
கருத்தை உன்னிய மாருதி உலகெலாம் கடந்தான். 9664

*சக.உய்த்தொரு திசையே ஒல்லை உலகெலாம் கடக்கப் பாய்ந்து
மெய்த்தரு மருந்து தன்னை வெற்பொடுங் கொணர்ந்த வீரன்
பொய்த்தலில் குறிகெ டாமே பொதுவுற நோக்கிப் பொன்போல்
வைத்தது வாங்கிக் கொண்டு வருதலில் வருத்தம் உண்டோ.

சஉ. தந்தனன் மருந்து தன்னைத் தாக்குதன் முன்னம் வேகம்
வந்தது மாண்டார்க் கெல்லாம் உயிர்தரும் வலத்த தென்ருல்
நொந்தது நோவு தீர்க்கச் சிறிதன்றே நொடித்தன் முன்னம்
இந்திரன் உலகம் ஆர்க்க எழுந்தனன் இளைய வீரன். 9666

சஙு.எழுந்துயின் றனுமன் தன்னை இருகையால் தழுவி எந்தாய்
விழுந்திலன் அன்றே ஈற்ற வீடணன் என்ன விம்மிக்
தொழுந்துணை அவனை நோக்கித் துணுக்கமும் துயரும் நீங்கிக்
கொழுந்தியும் மீண்டான் பட்டான் அக்கன்என் றுவகை கொண்டான்.

தருமம்என் றறிஞர் சொல்லும் தனிப்பொருள் தன்னை இன்னே
கருமம்என் றனுமன் ஆக்கி காட்டிய திறைய கண்டால்
அருமையே திராமற் கம்மா அறம் வெல்லும் பாவம் தோற்கும்
இருமையும் நோக்கில் என்னு இராமன்பால் எழுந்து போனுர்.

சடு. ஒன்றல பலவென் றோங்கும் உயர்பிணத் தும்ப ரோடும்
குன்றுகள் பலவும் சோரிக் குரைகடல் பலவும் தாவிச்
சென்றடைந் திராமன் செம்பொற் றிருவடி வணக்கம் செய்தார்
வென்றியின் தலைவன் கண்டான் உரைத்திடும் விளைந்த தென்ருன்.

சசு. உற்றது முழுதும் நோக்கி ஒறிவர உணர்வின் ஊன்றச்
சொற்றனன் சாம்பன் வீரன் அனுமனைத் தொடரப் புல்லிப்
பெற்றனன் உன்னை என்னை பெறுதன பெரியோய் என்று
மற்றிடை யூறு சொல்லா வாளினை யாதி என்ருன். 9670

புயல்மொழி அருவிக் கண்ணன் பொம்மலன் பொங்கு கின்ருன்
உயிர்புறத் தொழிய நின்ற உடம்பென்ன உருவில் தம்பி
துயர் நமக் குதவி மீளாத் துறக்கம்பெற் றுயர்ந்த தொல்லைத்
தயரதற் கண்டால் ஒத்த தம்மனைத் தொழுது சார்ந்தான். 9671

சஅ. [1]இளவலை நோக்கி ஐய இரவிவந் திசத்துக் கேற்ற
வளவிதம் அடைந்தார்த் தாங்கி மன்உயிர் கொடுக்கும் தன்மை
துளவியல் தொங்க லாய்நீ அன்னது துணிந்தாய் என்ருல்
அளவிய தன்று செய்தற் கடுப்பதே ஆகும் அன்றே. 9672

1 [பிரதி] இருள்வலி

புறவொன்றின் பொருட்டின் யாக்கை புண்ணுற அரிந்த புத்தேள்
அறவனும் ஐய நின்னே நிகர்க்கிலன் அப்பால் நின்ற
பிறவினி உரைப்ப தென்னே பேரரு ளாளர் என்பார்
கறவையும் கன்றும் ஒப்பார் தமர்க்கிடர் காண்கில் என்றான்.

இம. சாலிகை முதல ஆன போர்ப்பரந் தார்ங்கிற் றல்லால்
கீல்நிற ஞாயி றென்ன நெடியவன் முறையின் நீக்கிக்
கோல்சொரி தனுவும் கொற்ற அணிமன்கைக் கொடுத்துக் கொண்டல்
மேல்உறை குன்றம் ஒன்றின் மெய்மெலி வாற்றல் உற்றான்.

இக. ஆயவெங் கவியின் வேந்தும் அளப்பரும் தானை யோடும்
மேயினன் இராமன் பாதம் விதிமுறை வணங்கி வீந்த
ஜீயவர் பெருமை நோக்கி நடுக்கமும் திகைப்பும் உற்றார்
ஓய்வுறு மனத்தார் என்றும் உணர்நிலர் நாணம் உற்றார். 9675

மூண்டவெஞ் சேனை வெள்ளம் உலகொரு மூன்றின் மேலும்
நீண்டுள தகனை ஐய எங்ஙனம் நிமிர்ந்த தென்னத்
தூண்திரண் டனைய திண்தோள் சூரியன் சிறுவன் சொல்லக்
காண்டிரால் அரக்கர் வேந்தன் தன்னொடுங் களத்தை ஏன்றான்.

இக–வது வேலேற்ற படலம் – முற்றிற்று.
ஆரண்யபடலம் 123-க்கு கவி 9676

இஉ-வது வானரர் களங்காட்சிப் படலம்

க. தொழுதார் தலைவர் எல்லாம் தோன்றிய காதல் தூண்ட
எழுகென விரைவில் சென்றார் இராவணன் இளவ லோடும்
கழுகொடு பருந்தும் பாறும் பேய்களுங் கணங்கள் மற்றும்
குழுவிய கணத்தைக் கண்ணில் நோக்கினர் அனுக்கம் கொண்டார். 9677

உ. ஏங்கினர் நடுக்கம் உற்றார் இரைத் திரைத் துள்ளம்ஏற
வீங்கினர் வெருவ லுற்றார் விம்மினர் உள்ளம் வெம்பி
ஓங்கினர் மெள்ள மெள்ள உயிர்நிலைத் துவகை ஊன்ற
[1]ஆங்கனர் ஊற்ற தன்மை யார்அறிந் துரைய கிற்பார். 9678

ங. ஆயிரம் பருவங் கண்டும் காட்சிக்கோர் அளவிற் றன்றால்
போயின துறைகள் தோறும் விம்மினர் புலம்பல் அல்லால்
பாய்திரைப் பரவை ஏழும் சூண்குறும் பதகர் என்ன 9679
நீயிர்தேர்ந் துரைத்திர் என்றான்வீடணன் நெறியில்சொல்வான்

*ச. காகப் பந்தர்ச் செங்களம் எங்கும் செறிகால
வேகத் தும்பில் பொன்றின ஏனும் உடல்ஒன்றின்
மேகச் சங்கம் தொக்கன ஏழும் வெளியின்மை
நாகக் குன்றின் நின்றன காண்மின் நமரங்காள் 9680

1. [பிரதி] ஆங்கினர்.

ரு. வென்றிச் செங்கண் வெம்பை அரக்கர் மிசைஊர
ஒன்றுக் கொன்றுற் றம்புதலைப்பட் டுயிர்நுங்கப்
பொன்றிச் சிங்க நாக அடுக்கல் பொலிகின்ற
குன்றில் துஞ்சும் தன்மை நிகர்க்கும் குறிகாணீர், 9681

கூ. அளியில் பொங்கும் கங்க முதல்பல் குலமார்க்க
களியில் பட்டார் வாண்முகம் என்னும் கரையில்லாம்
புளினத் திட்டைக் கண்கனல் சோரிக் கடல்பூத்த
நளினக் காடே ஒத்தன பார்பின் நமரங்காள். 9682

எ. ஓழுகிப் பாயும் மும்மத வேழம் உயிரோடு
மெழுகிச் செல்லாச் செம்புனல் வெள்ளத் திடையிற்ற
பழுகிற் றல்லாப் பஃதிரை தாங்கும் படர்வேலை
முழுகித் தோன்றும் மீனிறை ஒக்கும் முறை நோங்கீர். 9683

அ. பூவாய் வாளிச் செல்லறி காலைப் பரிபொன்றிக்
கோவார் விண்வாய் வெண்கொடி திண்பா யொடுகூட
மாவார் திண்தேர் மண்டு குலாநீர் மறிவேலை
நாவாய் மானச் செல்வன காண்மின் நமரங்காள். 9684

கூ. கடக்கார் என்னப் பொங்கு கவந்தத் தொடுகைகள்
துடக்கா நித்தும் பேயிலை யத்தின் தொழில்பண்ண
மடக்கோ வில்லா வார்படி மக்கூத் தமைவிப்பான்
நடக்கோல் காட்டும் கண்ணுளர் ஒக்கும் நமரங்காள். 9685

ஐ. மழுவில் கூர்வாள் வன்பல் இடுக்கின் வயவீரர்
குழுவில் கொண்டன் னுடிது டிக்கப் பொறிகூடித்
தழுவிக் கொள்ளக் கள்ள மனப்பேய் அவை தம்மை
நழுவித் தள்ளிப் போவன காண்மின் நமரங்காள். 9686

ஙக. பொன்னின் ஓடை மின்பிறழ் நெற்றிப் புகர்வேழம்
பின்னும் முன்னும் மாறின வீழ்வில் பிணைஉற்ற
தன்னின் நேரா மெய்இரு பாலும் தலைபெற்ற
எள்ளும் தன்மைக் கேய்வன பல்வே றிவை காணீர்.

ஙஉ. நாமத் திண்போர் முற்றிய நாவின் நகைநாறும்
பாமத் தொன்னீர் அன்ன நிறத்தோர் பகுவாய்கள்
தூமத் தோடும் வெங்கனல் இன்னும் சுடர்கின்ற
ஓமக் குண்டம் ஒப்பன பல்வே றிவைகாணீர். 9688

மஉ. மின்னும் ஓடை ஆடல் வயப்போர் மிடல் வேழக்
கன்னம் மூலத் தற்றன வெண்சா மரைகாணீர்
மன்னர் மாளத் தாமரை மாலும் வதனத்த
அன்னம் பூவில் துஞ்சுவ ஒக்கின் றவைபாரீர். 9689

மஊ. வேளின் முற்ரு துற்றுயர் வேழத் தொளிர் வெண்கோ
டாளின் முற்ருச் செம்புனல் வெள்ளத் தவைகாணீர்
கோளின் முற்ருச் செக்கரு மேகக் குழுவின்கண்
காளின் முற்ரு வெம்பிறை போல்வ நமரங்காள். 9690

மரு. கொடியும் வில்லும் கோலொடு தண்டும் குவிதேரும்
துடியின் பாதக் குன்றின் மிசைத்தோ றுவர்ச் சூட்டோ
டொடியின் வெய்யோர் கண்ணெரி செல்ல உடன்வெந்த
தடியுண் டாடிக் கூளி தடிக்கின் றவைகாணீர். 9691

மக. சகரம் முந்நீர் செம்புனல் வெள்ளம் தடுமாறி,
மகர நன்மீன் வந்தன கண்டு மனம்உட்கிச்
சிகரம் அன்ன யாவைகொல் என்று சிலநாளின்
நகர நோக்கிச் செல்வன காண்மின் நமரங்காள். 9692

மள. வீண்ணில் செல்வார் வெற்புறழ் காயம் பலமென்மேல்
மண்ணில் செல்வார் மேனியின் வீழ மடிவுற்ரூர்
எண்ணில் தீரா அன்னவை தீரு மிடல்இல்லாக்
கண்ணில் தீயார் விம்மி உலைக்கும் படிகாணீர். 9693

மஎ. அச்சில் திண்தேர் ஆனையின் மாமேல் அகல்வானின்
மொச்சுச் சென்ரூர் மொய்க்குரு திதா ரைகண்மூட
உச்சிச் சென்ரூன ஆயினும் வெப்யோன் உதையத்தின்
குச்சிச் சென்ரூன் ஒத்துள தாகும் குடிகாணீர். 9694

மஏ. கால்தோய் மேனிக் கண்டகர் கண்டப் படுகாலே
ஆரோ ளென்ன விண் படர் செஞ்சோ ரியதாகி
வேரூய் நின்ற வெண்மதி செங்கேழ் நிறம் விம்ம
மாரோர் வெய்யோன் மண்டலம் ஒக்கும் அவை காணீர். 9695

*உ. வானனைய மண்ணனைய வளர்ந்தெழுந்த கொழுகுருதி மகரவேலை
தானனைய வற்றெழுமா றவைதெளித்த புதுமழையின் துளிதாங்கின்
மீனனைய நறும்போதும் விரைஅரும்பும் கறைவண்டு நிறம்வே றெய்திக்
கானகமும்நறும்பொழிலுமுறியின்ற போன்ஞெளிர்வகாண்மின்காண்மின்

உக. வரைபொருத மதயானை வலிமருப்புங் கிளைமுத்து மணியும் வாரித்
திரைபொருது புறங்குவிப்பத் திறல்கொள்பணை மரமுருட்டிச் சிறைப்புள்
ஆர்ப்ப, நுரை குடையும் வெண்கொடியும் சாமரமும் எனச்சுமந்து
பிணத்திரளை ஒன்மை, கரைபொருது கடன்மடுக்குங் கடுங் குருதிப் பேராறு
காண்மின் காண்மின். 9697

உஉ. கைக்குன்றப் பெருங்கரைய கிருதர்புயக் கற்செறிந்த கதலிக்கானம்
மொய்க்கின்ற பரித்திரைய மூரட்களிக்கைக் கோண்மாவ மூளரிக் காளிர்
வெய்க்கின்ற வாண்முகத்த விழுக்குடலின் பாசடையின் நிணமேல் செற்ற
உய்க்கின்ற உதிரநீர் அகன்குளங்கள் உலப்பிறந்த அவையும் காண்மின்.

வெடும்படைவாள் காஞ்சிலுழு நிணச்சேற்றின் உதிரநீர் நிறைந்தகாப்பில்
கடும்பகடு படிகிடந்த கடும்பாம்பி னிளமள்ளார் கலந்த கையுட்
படுங்கமல மலர்காறு முடிபரந்த பெருங்கிடக்கைப் பரந்த பண்ணைத்
தடம்பணையினறும்பழனத்தழுவியதே எனப்பொலிந்ததகையும்காண்மின்.

உச.வெளிநீர்த்த வரைபுரைவ மிடல்அரக்கர் உடல்வீழவும் வீரன்வில்லிற்
றெளிநீர்த்த முழுகெடுகாண் உரும்ஏறு பலபடவும் உலகம் கிண்டு
களிநீர்த்த நாகபுரம் புக்கழித்த பகழிதொறு கியின் ஓடிக்
களிநீர்த்துப் புகமண்டிக் கடிக்குருதித் தடம்சுனைகள் காண்மின் காண்மின்

கைத்தலமும் காத்திரமும் கடிங்கழுத்தும் கெடும்புயமும் உரமுங் கண்டித்
தெய்த்தில போய்த் திசைகள் தொறும் இருநிலத்தைக் கிழித்திழிந்த
தென்னினல்லான். மைத்தகளிற் றினமாவில் வாள்நிருதர் பேருடலின்
மற்றினவாளி, தைத்துணவான் நின்றதென ஒன்றேயுங் காண்பரிய நகை
யுங் காண்மின். 9701

*உசு. குமுத நாறு மதத்தன கூற்றன
சமுத ரோடு மடிந்தன சார்க்கரும்
திமிர மாவன்ன இன்ன இத்திறம்
அமுதின் வந்தன ஐயிரு கோடியே 9702

உஎ. ஏறு நான்முகன் வேள்வி எழுந்தன
ஊறு மாரியும் ஓங்கலே ஒகமும்
மாறு மாயினும் மாமத மாய்வரும்
ஆறு மாறில ஆறிரு கோடியே. 9703

உஅ. உயிர் வறந்தும் உதிரம் வரந்துதம்
மயர் மறந்து மதமற வாதன
புயல வன்திசைப் போர்மத யானையின்
இயல் பரம்பரை ஏழிரு கோடியே. 9704

உசு. கொடாது நீற்றலில் கொற்ற நெடுந்திசை
எடாது நிற்பன நாட்டம் இமைப்பில
வடாது திக்கினிற் கைவரை யின்வழி
கடாமுழு கூத்தமு ளரிக்க ணைக்கவால். 9705

உஅ. வான வர்க்கிறை வன்றிறை தந்தவற்
ருனை வற்கம தாயிர கோடியும்
தான வர்க்கிறை வன்றிறை தந்தன
ஏனை வற்கங் கணக்கிலை யாம்அரோ 9706

உக. பாற் கடல்பண் டமுது பயந்தநாள்
ஆர்த் தெழுந்தன ஆயிரம் ஆயிரம்
மாற் கணப்பரி யிங்கிவை மற்றவை
மேற் கில்வேலை வருணனை வென்றவால். 9707

உஉ. இருளி திக்கிழ வன்இழந் தேகிய
அரிவ யப்பரி ஆயிரம் ஆயிரம்
விரிசி னத்திகல் விஞ்சையர் வேந்தனைப்
பொருது பற்றிய தாமரை போலுமால். 9708

உங. என்று காணினும் காட்டினும் ஈதிறைக்
குன்று காணினும் கோளிலை தாதலான்
நின்று காணுதும் நேமியீ னுனைச்
சென்று காண்டுமென் றேகினர் செவ்வியோர். 9709

உச. ஆரி யற்றெழு தாங்கரும் பாங்கரும்
போரி யற்கை நினைந்தெழும் பொம்மலார்
பேரு யிர்ப்பொ டிருந்தனர் பின்புமும்
காரி யத்தி னிலைமை கழறுவாம். 9710

உஉ-வது, வானரர் களங்காட்சிப் படலம் – முற்றிற்று.
ஆகப்படலம் 124-க்கு கவி 9710.

உஎ-வது, இராவணன் களங்காட்சிப் படலம்

க. பொருந்து போர்ப்பெருங் கோலத்தில் போர்த்தொழில்
வருந்தி னார்க்குத்தம் அன்பினில் வந்தவர்
அருந்து தற்கமை வாயுற வாக்கிநல்
விருந்த மைக்க மிகுகின்ற வேட்கையான். 9711

[பிரதி] 1. ஊனர். 2. இழைத்திர்.

உ. வான நாட்டை வருகென வல்லைரைந்
தேனை நாட்டவ ரோடும்வந் தெய்தினூர்
ஆன நாட்டத்த போகம் அமைந்திர்மற்
[1]றான நாட்டின் இழத்திர் உயிர்என்றான். 9712

ங. நறவும் ஊனும் நவைஅற நல்லன
பிறவும் ஆடையும் சாந்தமும் பெய்மலர்த்
திறமும் நானப் புனலொடு செய்கையின்
புறமும் உள்ளும் நிறையப் புகுந்தவால். 9713

ச. நான நெய்யுரைப் பாரு நறும்புனல்
ஆன கோதற வட்டி அமுதொடு
பான மூட்டி அடிசில் பரப்புவான்
வான நாடியர் யாவரும் வந்ததால். 9714

ஞ. பாடு வார்கள் பயில்நடம் பாவகத்
தாடு வார்கள் அமளியின் இன்புறக்
கூடு வார்கள் முதல குறையறத்
தேடி னுன்எனப் பண்ணியில் சேர்ந்தவால். 9715

ட. அரசர் ஆதி அடியவர் அந்தமால்
வரைசெய் மேனி இராக்கதர் வந்துளார்
விரைவீல் இந்திர போகம் விளைவுறக்
கரைசெ லாத பெருவளங் கண்ணினுன் 9716

ண. இன்ன தன்மை அமைத்த இராக்கதர்
மன்னன் மாடுவந் தேத்தி வணங்கினூர்
அன்ன சேனைசள் பட்டதவ் வாறெலாம்
துன்னு தூதர் செவியிடைச் சொல்லுவார். 9717

த. நடுங்கு இன்ற உடலினர் நாவுலர்ந்
தொடுங்கு இன்ற உயிர்ப்பினர் உள்ளழிந்
திடுங்கு இன்ற விழியினர் ஏங்கினூர்
பிடுங்கு இன்ற உணர்வினர் பேசுவார். 9718

*கூ. இன்றியார் விருந்திங்குண் பார்இகல்முகத் திமையோர்தந்த
வென்றியாய் ஏவச் சென்ற ஆயிரம் வெள்ளஞ் சேனை
சென்றுளார் புறத்தர் ஆக இராமன்தன் திரள்கைச் சாபம்
ஒன்றினுல் இரண்டு மூன்று கடிகையின் உலகந்த தென்றூர்.

மி. வலிக்கடம் வானு ளோரைக் கொண்டுநீ வகுத்த புன்கம்
கலிக்கட னழிப்பான் என்று நிருதர்க்குக் கருதினையே
பலிக்கட னமைக்கற் பாலை அல்லதுன் குலத்துப் பாலோர்
ஒலிக்கடல் உலகத்தில்லை ஊர்உளர் உளரால் உள்ளார்.9720

மிக. ஏட்டரும் உவகை யீட்டி இருந்தவன் உரைத்த மாற்றம்
கேட்டலும் வெகுளி யோடுந் துணுக்கமும் இழிவும் கிட்டி
ஊட்டரக் கனைய செங்கண் நெருப்புக உயிர்ப்பு வீங்கத
தீட்டிய படிவம் என்னத் தோன்றினன் திகைத்த நெஞ்சன்.

மிஉ. என்னினும் வலீய ரான இராக்கதர் யாண்டும் யாரும்
உன்னினும் உலைப்பி லாதார் உவரியின் மணலின் மேலார்
பின்னொரு பெயரும் இன்றி மாண்டனர் பிறந்தோன் செய்த
வின்னிலை இதுவோ பொய்மை விளம்பினீர் விரைவின் என்றான்.

மிங. கேட்டயல் இருந்தமாலி ஈதொரு கிழமைத் தாமோ
ஓட்டுறு தூதர் பொய்யே உரைப்பரோ உலகம் யாவும்
வீட்டுவ திமைப்பின் அன்றே வீங்கெரி விரிந்த எல்லாம்
மாட்டுவன் ஒருவன் அன்றே இறுதியின் மனத்தால் அன்றே.

அளப்பரும் உலகம் யாவும் அளித்துண் டாத் தழிக்கின் றான்தன்
உளப்பெருந் தகைமை தன்னுள் ஒருவன்என் றுண்மை என்று
கிளப்புறக் கேட்டி அன்றே அரவின்மேல் கிடந்து மேல்நாள்
முனைத்தபேர் இராமன் என்ற வீடணன் மொழிபொய்த் தாமோ.

மிரு.ஒன்றினுள் அதனை உண்ணும் உலகத்துள் உயிர்ஒன் றேதி
னின்றன எல்லாம் பெய்தால் உடனுங்கு நெருப்புக் காண்டும்
குன்றெடு மரமும் மானும் பல் உயிர்க் குழுவுங் கொல்லும்
வன்றிறற் காற்றுங் காண்டும் வலிக்கொரு வரம்பும் உண்டோ.9725

மிசு. பட்டதும் உண்டே உன்னை இந்திர செல்வம் பற்று
விட்டது மெய்மை ஐய மீட்டொரு வினையம் இல்லைக்
கெட்டதுன் பொருட்டி னாலே நின்னுடைக் கேளிர்எல்லாம்
சிட்டது செய்தி என்றான் அதற்கவன் சீற்றம் செய்தான்.9726

கஎ. இலக்குவன் தன்னை வேலால் எறிந்துயிர் கூற்றுக்கீய்ந்தேன்
கலக்கணிற் றலைவர் எல்லாம் அழுந்தினர் அதனைக் கண்டால்
உலக்குமால் இராமன் பின்னர் உயிர்ப்பொறை உதவான் உற்ற
மலக்கமுண் டாகில் ஆகா வாசைகள் வசத்த தென்றான். 9727

மிஅ ஆண்டது கண்டு நின்ற தூதர்கள் ஐயமய்யே
மீண்டதவ் வளவில் ஆவி மாருதி மருந்து மேனி
தீண்டவும் தாழ்த்த தில்லை யாவரும் செங்க ணீனப்
பூண்டனர் தழுவிப் புக்கார் போதுதி காணின் என்றார் 9728

கக. தேறிலன் ஆத லாலே மறுகுறு சிந்தை தேய
ஏறினன் கனகத் தாரைக் கோபுரத் தும்பர் எய்தி
ஊறின சேனை வெள்ளம் உலந்தன பெருமை எல்லாம்
காறின உள்ளம் நோவக் கண்களில் தெறீயக் கண்டான்

உம. கொய்தலைப் பூசல் பட்டோர் குலத்தியர் குவலை யோடு
நெய்தலை வென்ற வாட்கண் குமுதத்தின் நேர்மை காட்டக்
கைதலை வைத்த பூசல் கடல்ஒலி நிமிரும் காலைச்
செய்தலை யற்ற ஓசை செயல்அது செவியில் கேட்டான். 9730

உக. எண்ணுநீர் கடந்த வானைப் பெரும்பிணம் ஏந்தி யாணர்
மண்ணுநீ ரளவுங் கல்லி நெடுமலை மறித்து மண்டும்
புண்ணுநீர் ஆறும் பல்பேய் புதுப்புனல் ஆடும் பொம்மல்
கண்ணுநீர் ஆறு மாறுக் கருங்கடல் மடுப்பக் கண்டான். 9731

உஉ. குமிழிநீர் ஓடும் சோரிக் கனலொடும் கொழிக்குங் கண்ணன்
தமிழ்நெறி வழக்க மன்னன் தனிச்சிலை வழக்கில் சார்ந்தார்
அமிழ் பெருங் குருதி வெள்ளம் ஆற்றுவாய் முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும் வேலை ஓதவந் துடற்றக் கண்டான். 9732

உங. விண்களில் சென்ற வான்றோட் கணவரை அலகை வெய்ய
புண்களில் கைகள் நீட்டிப் புதுமிணங் கவர நோக்கி
மண்களில் தொடர்ந்து வானில் பிடித்துவள் உகிரின் மானக்
கண்களைச் சூன்று நீக்கும் அரக்கியர் குழுவுங் கண்டான். 9733

உச. விண்பிளந் தொல்க வார்க்கும் வானரர் வீக்கம் கண்டான்
மண்பிளந் தழுந்த வாகும் கவந்தத்தின் வருக்கம் கண்டான்
கண்பிளந் தகல நோக்கும் வானவர் களிப்புங் கண்டான்
புண்பிளந் தனைய நெஞ்சன் கோபுரத் திழிந்து போந்தான். 9734

உடு. நகைபிறக் கின்ற வாயன் நாக்கொரு கடைவாய்க்கப்
புகைபிறக் கின்ற மூக்கன் பொறிபிறக் கின்ற சண்ணன்
மிகைபிறக் கின்ற நெஞ்சன் வெஞ்சினத் தீமேல் வீங்கிச்
சிகைபிறக் கின்ற சொல்லான் அரசியல் இருக்கை சேர்ந்தான்.

நஙு-வது இராவணன் களங்காட்சிப் படலம் முற்றிற்று
ஆகப்படலம் 125-க்கு கவி 9735

நசு-வது இராவணன் தேர் ஏறு படலம்

க. பூதரம் அனைய மேனிப் புகைநிறப் புறுவச் செங்கண்
மோதரன் என்னும் நாமத் தொருவனை முறையில் நோக்கி
யாதுள திறந்திலாத திலங்கையூர் இருந்த சேனை
யாதினை எழுகென் றுரை அணிமுர சறைகென் றென்றான். 9736

உ. எற்றிய முரசினெடும் எழிரு நூறு கோடி
கொற்றவாண் நிருதர் தாணை குழிஇயது கொடித்திண் தேறும்
சுற்றுறு துளக்கை மாவும் துரக்கமும் பிறவும் தொக்க
வற்றிய வேலை என்ன இலங்கை ஊர் வறளிற் முன. 9737

ங. ஈசனை இமையா முக்கண் ஒருவனை இருமைக் கேற்ற
பூசனை முறையே செய்து திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி மற்றும் வேட்டவர் வேட்ட தெல்லாம்
ஆசற நல்கி ஒல்காப் போர்த்தொழிற் கமைவ தானன். 9738

*ச. அருவி அஞ்சனக் குன்றிடை ஆயிரம் அருக்கர்
உருவி னெடும்வந் துதித்தனர் ஆமென ஒளிரும்
கருவி நான்முகன் வேழ்வியில் படைத்ததுங் கட்டிச்
செருவில் இந்திரன் தந்தபொற் கவசமும் சேர்த்தான். 9739

ஞ. வாள் வலம்பட மந்தரம் சூழ்ந்தமா சுணத்தில்
தாள் வலந்தொளிர் தமனியக் கச்சொடும் சாத்திக்
கோள் வலந்தன குவிந்துள வாயன்ன கொள்கை
மீள்வில் கிம்புரி மணிக்கடி சூத்திரம் வீக்கி. 9740

கூ. மறை விரித்தென வாடுறு மானமாக் கலுழன்
சிறை விரித்தெனக் கொய்யக மருங்குறச் சேர்த்தி
முறை விரித் தென முறுக்கிய சோசிக மருங்கில்
பிறை விரித்தென வெள்ளெயிற் றரிமுகம் பிணித்து. 9741

எ. மழைக் குலத்தொடும் வானவல் லேறலாம் வாரி
அழைத் தெடுத்தன அன்னவா னுடைமணி ஆர்த்து
முழைக் கிடந்தபல் அரியினம் முழங்குபோர் ஆர்ப்பில்
தழைக்கு மின்னெளி பொன்மலை சதங்கையும் சாத்தி 9742

அ. உருமி டித்தபோ தரவுறு மறுக்கம்வான் உலகின்
இருநி லத்திடை எவ்வுல கத்திடை யாரும்
புரித ரப்பெடும் பொலங்கழல் அலங்குறப் பூட்டிச்
சுரியு டைச்சுடர்ச் சாய்வலஞ் சார்வுறச் சாத்தி. 9743

கூ. நாலஞ் சாகிய கரங்களின் நனந்தலை அனந்தன்
ஆலஞ் சார்மிடற் றறுங்கறை கிடந்தென விலங்கும்
கோலஞ் சார்நெடுங் கோதையும் புட்டிலும் கட்டிச்
சாலஞ் சார்ந்தமா சுணம்எனக் கங்கணம் தழுவ. 9744

ம. கடல்க டைந்த மால் வரையினைச் சுற்றிய கயிற்றின்
அடல்கி டந்ததோள் அலங்குபோர் வலியங்கள் இலங்க
உடல்க டைந்தநாள் ஒளியவன் உதித்தபோற் கதிரில்
சுடர்த யங்குறு குண்டலம் செவியிடைத் தூங்க 9745

மக. உதைய குன்றத்தோ டொத்ததின் உலாவுறுங் கதிரிற்
றுதையுங் குங்குமத் தோளொடுந் தோளிடைத் தொடரப்
புதைஇ ருள்பகைக் குண்டலம் அனையவை பொலியச்
சிதைவில் திங்களும் மீனும்போல் முத்தினந் திகழ. 9746

மஉ. வேலை வாய்வந்து வெய்யவர் அனைவரும் வெடியும்
காலை உற்றுளர் ஆம்எனக் கதிர்க்குலஞ் சாலும்
மாலை பத்தின்மேல் மதியமூன் ஞாளிடைப் பலவாய்
ஏல முற்றிய முத்தவெண் குடைகள்இன் றிமைப்ப. 9747

மஙு. பகுத்த பல்கலைக் குன்றினின் முழையன்ன பகுவாய்
வகுத்த வான்கடை திசைதொறும் வலியெயி றீட்டம்
மிகுத்த நீலவான் மேகம்சூழ் விசும்பிடைத் தசும்போ
டுகுத்த செக்கரில் பிறைக்குலம் முளைத்தன ஒத்த. 9748

மச. ஒத்த தன்மையின் ஒளிர்வன தரளத்தின் ஒக்கத்
தத்து கின்றன வீரபட் டத்தொகை ததைந்த
முத்த ஓடைய முரட் டிசை மும்மதக் கரிபோல்
பத்து நெற்றியும் சுற்றின படர்எழில் படைப்ப. 9749

மரு. புலவி மங்கையர் பூஞ்சிலம் பரற்றடி போக்கித்
தலைமைக் கண்ணினர்த் தாழ்கிலர் மணிமுடித் தலங்கள்
உலகம் ஒன்றினை விளக்குறும் அருக்கனை ஓட்டி
அலகில் எவ்உல கத்தினும் வயங்கிருள் அகற்ற. 8750

மசு. நாக நானில நான்முக னெடென நயந்த
பாக மூன்றையும் வென்றுகொண் டமரர்முன் பணித்த
வாகை மாலையின் மருங்குற வரிவண்டொ டளவித்
தோகை அன்னவர் விழிதொடர் தும்பையும் சூட்டி. 9751

மள. அகழும் வேலையைக் காலத்தை அளக்கர்நுண் மணலை
நிகழும் ஆதியாம் விஞ்சையை நினைப்பதே நின்ற
இகழ்வில் பூதங்கள் இறப்பினும் இறுதிசெல் லாத்தன்
புகழ்ள னச்சரம் தொலைவிலாத் தூணியின் பூட்டி. 9752

மஅ. வருக தேர்என வந்தது வையமும் வானும்
உரக தேசமும் ஒருங்குடன் இவரினும் உச்சி
சொருகு பூவன்ன சுமையது துரகம்இன் றெனினும்
நிருதர் கோமகன் நினைந்துழிச் செல்வதோர் நிமைப்பில். 9753

மக. ஆயி ரம்பரி அமுதொடும் வந்ததும் அருக்கன்
பாய் வயப்பசுங் குதிரையின் வழியதும் படர்நீர்
வாய் மடுக்குமா வடவையின் வயிற்றின்வன் காற்றின்
நாய கற்குவந் துதித்தவும் பூண்டது நலத்தால். 9754

உம. பாரில் செல்வது விசும்பிடைச் செல்வது பரந்த
நீரில் செல்வது நெருப்பிடைச் செல்வது நிமிர்ந்த
போரில் செல்வது பொன்நெடு முகட்டிடை விரிஞ்சன்
ஊரில் செல்வதெவ் உலகினும் செல்வதோர் இமைப்பின். 9755

உக. எண்திசைப் பெருங் களிற்றிடை மணிஎன இசைக்கும்
கண்டை ஆயிர கோடியில் தொகையது கதிரோன்
மண்ட லங்களே மேருவில் குவித்தென வயங்கும்
அண்டம் விற்குநன் காசினுல் இயற்றிய தடங்க. 9756

உஉ. முனிவர் வானவர் முதலினர் அண்டத்து முதல்வர்
எனிவர் அன்னவர் ஈய்ந்தவும் இகலில்இட் டனவும்
வினையின் வெய்யவன் படைக்கலம் வேலென் றிசைக்கும்
சுனையின் நுண்மணல் தொகையன சுமந்தது தொக்க. 9757

உங. கண்ண னேமியுங் கண்ணுதல் கணிச்சியும் கமலத்
தண்ணல் குண்டிகைக் கலசமும் அழியினும் அறியாத்
திண்மை யான்றது தேவரும் உணர்வரும் செய்கை
உண்மை யாம்எனப் பெரியது வென்றியின் உறையுள். 9758

உச. அனைய தேரினை அருச்சனை வரன்முறை ஆற்றி
இனையர் என்பதோர் கணக்கிலார் மறையவர் எவர்க்கும்
வினையின் நன்னிதி முதலிய வளப்பரும் வெறுக்கை
நினையின் நீண்டதோர் பெருங்கொடை யருங்கடன் நேர்ந்தான்.

உரு. ஏறி னுன்தொழு திந்திரன் முதலிய இமையோர்
தேறி னுர்களும் தியங்கினுர் மயங்கினுர் திகைத்தார்
வேறு நான்சொலும் வினையிலை மெய்யில்ஐம் புலனும்
ஆறி னுர்களும் அஞ்சினுர் உலகெலாம் அறுங்க. 9760

உசு. மன்ற லங்குழல் சனகி மலர்க்கையால் வயிறு
கொன்ற லந்தலை யோடுதன் நெடுங்கணீர் குளித்தல்
அன்ற தென்றிடில் மயன்மகள் அத்தொழில் உழைத்தல்
இன்றி ரண்டினுென் றுக்குவன் தலைப்படின் என்றான். 9761

உள. பலக ளந்தலை மவுலியோர் டியங்கலில் பலதோள்
அலக ளந்தறி யாநெடும் படைகளோ டலங்க
விலக ளந்தரு கடல்தரை விசும்பொடும் வீய
உலக ளந்தவன் வளர்ந்தனன் ஆம்என உயர்ந்தான். 9762

உஅ. விசும்பு விண்டிரு கூறுறக் குலவரை வெடிப்ப
பசும்புண் விண்டெனப் புடைபடப் பகலவன் பசும்பொற்
றசும்பு நின்றிடை திரிந்திட மதித்தகை அமுதின்
அசும்பு சிந்திநொந் துலைவுறத் தோள்புடைத் தார்த்தான். 9863

உக. நணித்து வெஞ்சமம் என்பதோர் உவகையின் நலத்தால்
திணித்த டங்கிரி இரிந்திடச் சிலையைநாண் எறிந்தான்
மணிக்கொ டுங்குழை வான்வர் தானவர் மகளிர்
துணுக்கம் எய்தினர் மங்கல நாண்களைத் தொட்டார். 9764

நம. சுரித்து மண்டலந் தூங்குநீர்ச் சுழியுற வீங்கி
இரைக்கும் பல்உயிர் யாவையும் நடுக்கமுற் றிரிய
பரித்தி லன்புவி படர்சுடர் மணித்தலை பலவும்
விரித்தெ ழுந்தனன் அனந்தன்மீ என்பதோர் மெய்யன். 9765

நக. தோன்றி னுன்வந்து சுரர்களோ டசுரரே துடங்கி
மூன்று நாட்டினும் உள்ளவர் யாரொடும் முடிய
ஊன்றி னுன்செரு வென்றுயிர் உமிழ்தர உதிரம்
கான்று நாட்டங்கள் வடவனற் கிருமடி கனல. 9766

நஉ. உலகில் தோன்றிய மறுக்கமும் இமைப்பிலர் உலவும்
மலையும் வானமும் வையமும் நடுக்குறு மலவும்
அலைகொள் வேலைகள் அஞ்சின சலிக்கின்ற யாவும்
தலைவ னேமுதல் தண்டலை லோர்எலாம் கண்டார். 9767

நங. பீறிற் றும்அண்டம் என்பதோர் ஆகுலம் பிறக்க
வேறிட் டோர்பெருங் கம்பலை பம்பிமேல் வீங்க
மாறிப் பல்பொருள் வகுக்குறுங் காலத்து மறுக்கம்
ஏறிற் றுற்றுள தென்னைகொ லாம்என எழுந்தார். 9768

நசை. கடல்கள் யாவையுங் கன்மலைக் குலங்களும் காரும்
திடல்கொள் மேருவும் விசும்பிடைச் செல்வன சிவண
அடல்கொள் சேனையும் அரக்கரும் தேரும்வந் தார்க்கும்
குடல்கொள் போரொலிக் கம்பலை என்பதுங் கொண்டார்.

நடு. எழுந்து வந்தனன் இராவணன் இராக்கதர் தானைக்
கொழுந்து மூந்திய துற்றது கொற்றவ குலுங்கும்
றழுந்து கின்றது நம்பலம் அமரரும் அஞ்சி
வீழுந்து சிந்தினர் என்றனன் வீடணன் விரைவான். 9770

நசை–வது இராவணன் தேர் ஏறு படலம் – முற்றிற்று
ஆகப்படலம் 126-க்கு கவி 9770

நடு-வது இராமன் திருத்தேர் ஏறு படலம்

க. தொழுங்கையொடு வாய்குழறி மெய்முறை துளங்கி
விழுந்துகவி சேனைஇடு பூசல்மிக விண்ணோர்
அழுந்துபணி மீதமளி அஞ்சல்என அந்நாள்
எழுந்தபடி யேகடிதெ ழுந்தனன் இ ராமன். 9771

உ. கடக்களி றெனத்தகைய கண்ணெனெடு காலன்
விடக்கயி றெனப்பிறழும் வாள்வலம்வீ சித்தான்
மடக்கொடி துயர்க்குநெடு வானின்உறை வோர்தம்
இடர்க்கட லினுக்குமுடி வின்றென இசைப்பான். 9772

ங. தன்னகவ சத்துருவு தங்கஒரு தன்னில்
பின்னகவ சத்தபொருள் இல்லைபெரி யோனை
மன்னகவ சத்துறவ ரிந்ததென என்கோ
இன்னகவ சத்தையும்ஓர் ஈசன்என லாமால். 9773

ச. புட்டிலொடு கோதைமெய்ப்பு ழுங்கிளரி கூற்றின்
அட்டிலென லாய்அ மலன் அங்கையின்அ டங்க
கட்டிஉல கில்பொருளெ னக்கரையில் வாளி
வட்டில்புறம் வைத்தயல்வ யங்குறவ வித்தான். 9774

ஞ. இத்தலையன் ஆயதிகல் செய்திவனை இன்னே
கொத்துமுடி கொய்வன்என நின்றெதிர்கு றிப்பத்
தத்தமுறு வற்செயல்த விர்ந்ததென வானில்
சித்தர்கண்மு னித்தலைவர் சிந்தைமகிழ் வுற்றார். 9775

ஞ. மூண்டசெரு இன்றளவில் முற்றுமுனி வானும்
ஆண்டகையும் நும்மைஇனி அச்சம்அ டல் வுற்றீர்
பூண்டமணி ஆழிவய மாநிமிர்பொ லந்தேர்
ஈண்டவிடு வீர்அமரின் என்றயன்இ சைத்தான். 9776

எ. தேவர்இது கேட்டிதுசெ யற்குரிய தென்ரூர்
ஏவல்புரி இந்திரன்ள னத்தொடதி சைத்தான்
மூவுலகு முந்துமோர்க ணத்தின்மிசை முற்றிக்
கோவில்புரி கென்பொருவில் தேர்கெணர்தி என்ரூன். 9777

அ. மாதலிகொ ணர்ந்தனன்ம கோததிஅ ளாவும்
பூதலம்ள மூந்துபடர் தன்மையபொ லந்தேர்
ஈதமைதி மண்டலமும் ஏனைஉள தும்தன்
பாதமென நின்றதுப டர்ந்ததுவி சும்பில். 9778

கூ. வந்ததனை வானவர்வ ணங்கிவலி யோய்நீ
எந்தைதர வந்தனைள மக்குதவு கிற்பாய்
தந்தருள்வை வென்றிளன நின்றதவ மென்பூச்
சிந்தினர்கள் மாதலிக டாவிநனி சென்ரூன். 9779

ம. குலிக்கிரிகள் ஏழின்வலி கொண்டுயர்கொ டுஞ்சும்
அலக்கும்உயர் பாரின்வலி யாழியும்ந லத்த
கலக்கறவ குத்ததுக தத்தரவம் எட்டின்
வலக்கயிறு கட்டியது முட்டியது வானை. 9780

மக. ஆண்டிணெடு நாளும்ழ்டு திங்கள்அவை யாவும்
மீண்டனவும் மேலனவும் வீட்டிவிசி தட்டில்
பூண்டுளது தாரகைம ணிப்பொருவில் கோவை
நீண்ட்புனை தாரினது நின்றுளது குன்றின். 9781

மஉ. மாதிரம்அ னைத்தையும்ம ணிச்சுவர்க ளாகக்
கோதறவ குத்ததும மைக்குழுவை எல்லாம்
மீதுறுப தாகைளன வீசியது மெய்மைப்
பூதம்அவை ஐந்தின்வலி யிற்பொலிவ தம்மா. 9782

மங. மரத்தொடுதொ டுத்ததுகில் யாவும்உள வாரித்
தாத்தொடுதொ டுத்தகொடி தங்கியது சங்கக்
கரத்தொடுதொ டுத்தகடன் மீதில்நிமிர் காலத்
துரத்தொடுதொ டுத்தகதழ் ஓதையதன் ஓதை. 9783

மச. பண்டரிதன் உந்திஅயன் வந்தபழ முந்தைப்
புண்டரிக மொட்டனைய மொட்டினது பூதம்
உண்டவைவ யிற்றிடைஓ டுக்கிஉமிழ் கிற்போன்
அண்டசனி யச்சயனம் ஒத்ததக லத்தின். 9784

மரு. வேதம்ஒரு நான்கும்நிறை வேழ்விகளும் வெவ்வே
ரேதம்அவை ஏழும்உல கேழும்மலை ஏழும்
பூதம்அவை ஐந்தும்எரி மூன்றும்நனி பொய்தீர்
மாதவமும் ஆகுதியும் ஐம்புலனும் மற்றும். 9785

மசு. அருங்கரணம் ஐஞ்சுசுடர் ஐஞ்சும்மறை நான்கும்
ஒருங்கரணம் மூன்றும்உழல் வாயுஒரு பத்தும்
பெரும்பகலும் நீள்இரவும் என்றிவை பிணிக்கும்
பொரும்பரிகள் ஆகநனி பூண்டது பொலந்தேர். 9786

மஎ. வினைப்பகை மிசைக்கொடு விசும்புருவி மான
மனத்தின்மிசை பெற்றுளது வந்ததென வானே
டனைத்துலக முந்தொழ அடைந்ததம லன்பால்
நினைப்பும்இடை பிற்பட நிமிர்ந்தது நெடுந்தேர் 9787

மஅ. அலரிதனி யாழிபுனை தேரிதனில் அன்றுல்•
உலகின்முடி வில்பெரிய வோமொழியின் அன்றுல்
நிலைகொள்நெடு மேருகிரி அன்றுநெடி தம்மா
தலைவர்ஒரு மூவர்தனி மானம்இது தானே. 9788

மகூ. என்னைஇது நம்மைஇடை எய்தல்என எண்ணு
மன்னவர்கள் மன்னன்மகன் மாதலியை வந்தாய்
பொன்னின்ஒளிர் தேரிதுகொ டார்புகல என்றான்
அன்னவனு மன்னதனை யாகஉரை செய்தான். 9789

உஎ. முப்புரம் எரித்தவனும் நான்முகனும் முன்னுள்
அப்பகல் இயற்றியுள தாயிரம் அருக்கர்க்
கொப்புடைய ஊழிதிரி நாளும்உலை கில்லா
இப்பொருவில் தேர்வருவ திந்திரனில் எந்தாய். 9790

உக. நீரும்உள வேஅதனில் நீரில்எழு கிற்கும்
பாரும்உள தேஅதன் இரட்டிஅவை பண்பில்
பேரும்ஒரு காலைஒரு காலும்இடை பேராத்
தேரும்உள தேஇது வலால்உலகு செய்தோய். 9791

உஉ. அண்டம்இது போல்வன அளப்பில அடுக்கில்
கொண்டுபெய ருங்குறுகும் நீளும்இவை கோளுற்
றுண்டவன் வயிற்றினையும் ஒக்கும்உவ மிக்கில்
புண்டரிக நின்சரம் எனக்கடிது போதும். 9792

உக. கண்ணுமன மும்நெடிய காலும்இடை கண்டால்
உண்ணும்விசை யால்உணர்வு பிற்படர ஓடும்
விண்ணும்நில னும்என விசேடம்இல தஃதே
எண்ணுநெடு நீரினும் நெருப்பிடையும் எந்தாய். 9793

உச. தேவரு முனித்தலைவ ரும்சிவனும் மேல்நாள்
மூவுல களித்தஅவ னும்முடுகி முன்னின்
றேவினர் சுரர்க்கிறைவன் ஈய்ந்துளவன் என்ரூன்
மாவின்மனம் ஒப்பவுணர் மாதலி வலித்தான். 9794

உடு. ஐயன்அது கேட்டதவ் அரக்கன்மகன் மாயச்
செய்கைகொல் எனச்சிறுது சிந்தையின் நினைந்தான்
மெய்யவன் உரைத்ததென வேண்டிஇடை பூண்ட
மொய்யுரீ வயப்பரி மொழிந்தமுது வேதம். 9795

உசு. இல்லைஇனி ஐயம்என எண்ணிய இராமன்
நல்லவனை நீஎனது நாமநவில் கென்ன
வல்லிதனை ஊர்வதொரு மாதலி எனப்பேர்
சொல்லுவர் எனத்தொழுது நெஞ்சிலோடு சொன்னான். 9796

உஎ. மாருதியை நோக்கிஇள வாளரியை நோக்கி
நீர்கருது கின்றதை நிகழ்த்தும்என நின்ரூன்
ஆரியனை யேவணங்கி ஐயம்இலை ஐயா
தேரிது புரந்தரன தென்றனர் தெளிந்தார். 9797

உஅ. விழுந்துபுரன் தீவினை குலத்தொடும் துலங்கத்
தொழுந்தகைய நல்வினை கணத்திலொடு துள்ள
அழுந்துதுய ரத்தமரர் அந்தணர்கள் ழுந்துற்
றெழுந்துகரை ஏறினர் தேறினன் இராமன். 9798

நூடு–வது இராமன் திருத்தேர் ஏறு படலம் – முற்றிற்று.
ஆகப்படலம் 127-க்கு கவி 9798

நூசு–வது இராவணன் வதைப் படலம்

க. ஆழியந் தடந்தேர் வீரன் ஏறலும் அலங்கல் சில்லி
பூழியில் சுரித்த தன்மை நோக்கிய புலவர் எல்லாம்
ஊழிவெங் கார்றின் அன்ன கலுழனை ஒன்றும் சொல்லார்
வாழிய அனுமன் தோள்என் றேத்தினர் மலரும் தூவி. 9799

உ. எழுகதேர் சுமக்க எல்லா வலியும்புக் கின்றே ஒன்றி
விழுகபோய் அரக்கன் வெல்க வேந்தர்தம் வேந்தன் விம்மி
அழுகபேர் அரக்கி மார்என் றூர்த்தனர் அமரர் ஆழி
முழுகிமீ தெழுந்த தென்னச் சென்றது மூரித் தண்தேர். 9800

கூ. அன்னது கண்ணில் கண்ட அரக்கனும் அமரர் ஈய்ந்தார்
மன்நெடுந் தேர்என் றுன்னி வாய்மடித் தெயிறு தின்றான்
பின்னது கிடக்க என்னைத் தன்னுடைப் பெருந்திண் தேரை
மின்னகு வரிவில் செங்கை இராமன்மேல் விடுதி என்றான்.

சு. இரிந்தன கவிகள் எல்லாம் இமையவர் இரதம் ஈய்ந்தார்
அரிந்தமன் வெல்லும் என்றற் கையுற வில்என் றஞ்சார்
திரிந்தனர் மரமுங் கல்லும் சிந்தினர் திசையோ டண்டம்
பிரிந்தன கொல்என் றெண்ணப் பிறந்தது முழக்கின் பெற்றி.

எ. வார்ப்பொலி இயத்தின் ஓதை வாய்ப்புடை வயவர் ஓதை
போர்த்தொழில் களத்து மற்றும் முற்றிய பொம்மல் ஓதை
ஆர்த்திலா யாரும் பார்வீழ்ந் தடங்கினர் இருவர் ஆடற்
றேர்க்குரல் ஓதை பொங்கச் செவிமுற்றும் செவிடு செய்த.

கூ. மாதலி வதனம் நோக்கி மன்னர்தம் மன்னன் மைந்தன்
காதுதல் கருமம் ஒன்று கேட்டியால் களித்த சிந்தை
ஏதிலன் மிகுதி எல்லாம் இயற்றிய பின்றை என்தன்
சோதனை நோக்கிச் செய்தி துடிக்கலை என்னச் சொன்னான்.

ஏ. வள்ளல்தன் கருத்து மாவின் சிந்தையும் மாற்ற லார்தம்
உள்ளமு மிகையு முற்ற குற்றமு முறுதி தானும்
கள்ளமில் காலப் பாடும் கருமமும் கருதேன் ஆகில்
தெள்ளிதென் விஞ்சை என்றான் அலனும்செவ்வி தென்றான்.

அ.தோன்றினன் இராமன் ஈதால் புரந்தரன் துரந்த தேர்மேல்
ஏன்றிரு வருக்கும் வெம்போர் எய்திய திடையே வானோர்
சான்றென நிற்றல் குற்றம் தருதியால் விடைஈண் டென்றான்
வான்தொடர் குன்றம் அன்ன மகோதரன் இலங்கை மன்னன்.

கூ. அம்புயம் அனைய கண்ணன் தன்னையா னரியின் ஏறு
தும்பியைத் தொலைத்தால் என்னைத் தொலைக்குவன் தொடர்ந்து கின்ற
தம்பியைத் தடுத்தி ஆயில் தந்தனை கொற்றம் என்றான்
வெம்பிகல் அரக்கன் அஃதே செய்வன்என் றவனு மீண்டான்.

ஐ. மீண்டவன் இளவல் நின்ற பாணியின் விலங்கா முன்னம்
ஆண்தகை தெய்வத் திண்தேர் அணுகிய தணுகுங் காலை
மூண்டெழு வெகுளி யோடு மோதரன் முனிந்து மூட்டத்
நூண்டுதி தேரை என்றான் சாரதி தொழுது சொல்லும். 9808

மக. எண்ணருங் கோடி வெங்கண் இராவண ரேயும் இன்னம்
நண்ணின போது மீண்டு நடப்பரோ கிடப்ப தல்லால்
அண்ணல்தன் தோற்றம் கண்டால் ஐயரீ கமலம் அன்ன
கண்ணீர் ஒழிய அப்பால் போவதே கருமம் என்றான். 9809

என்றலும் எயிற்றுப் பேழ்வாய் மடித்தெடா எடுத்து நின்னைத்
தின்றனன் என்னில் உண்டாம் பழிஎனச் சீற்றம் தீர்ந்து
குன்றன்ன கொற்றத் தான்தன் கொடித்தடந் தேரின் நேரே
சென்றதவ் இராமன் திண்தேர் விலோந்தது திமிலத் திண்போர்.

மஉ. பொற்றடந் தேரும் மாவும் பூழ்க்கையும் புலவுண் வாட்கைக்
கற்றடந் திரள்தோ ளாரும் நெருங்கின கடல்கள் எல்லாம்
வற்றிய. இராமன் வாளி வடவனல் பருக வன்தாள்
ஒற்றைவன் தடந்தே ரோட்டி மகோதரன் ஒருவன் சென்றான்.

மஏ. அசனிஏ றிருந்த கொற்றக் கொடியின்மேல் அரவத்
தேர்மேல், குசைதொடு பாகன் தன்மேல் கொற்றவன் குவவுத்
தோள்மேல், விசையுறு பகழி மாரி வீசினன் விண்ணி னோடும்,
திசைமுகங் கிழிய ஆர்த்தான் தீர்த்தனும் முறுவல் செய்தான்.

மஙு. வில்ஒன்றல் கவசம்ஒன்றல் வீரனுடைக் கரம்ஓர் ஒன்றல்
கல்ஒன்று தோளும் தாளும் ஒருஒன்றல் கழுத்தும் ஒன்றல்
செல்லொன்று கணைகள் ஐயன் சிந்தினன் செப்பி வந்த
சொல்ஒன்றுச் செய்கை ஒன்றுத் துணிந்தனன் அரக்கன் துஞ்சி

மகூ. மோதரன் முடிந்த வண்ணம் மூவகை உலகும் முற்றும்
மாதிரத் தோடும் வென்ற வன்தொழில் அரக்கன் கண்டான்
சோதனை உண்ணக் கண்டான் செலவிடு செலவி டென்றான்
சூதனு முடுகத் தூண்டச் சென்றது உரகத் திண்தேர். 9814

மஎ. பனிப்படா நின்ற தென்னப் பரக்கின்ற சேனை பாறித்
தனிப்படான் ஆகில் உள்ளம் தாழ்கலன் என்னும் தன்மை
துனிப்படா நின்ற வீரன் இவன் ஒன்றும் நோக்காவண்ணம்
குனிப்படா நின்ற வில்லால் ஒல்என நூறிக் கொன்றான்.

அடல்வலி அரக்கர்க் கப்போழ் தண்டங்கள் அழுந்த மண்டும்
கடல்களும் வற்ற வெற்றிக் கால்கிளர்ந் துடற்றுங் காலை
வடவரை முதல வான மலைக்குலம் சலிப்ப மானச்
சுடர்மணி வலையம் சிந்தத் துடித்தன இடத்து பொற்றேர்.

*உக. உதிர மாரி சொரிந்த துலகெலாம்
அதிர வானம் இடித்த தருவரை
பிதிர வீழ்ந்த அசனி ஒளிபெருக்
கதிர வன்தனை ஊரும் கலந்ததால். 9817

உஎ. வாவும் வாசிகள் தூங்கின வாங்கலில்
ஏவும் வெஞ்சிலை நாண்இடை இற்றன
நாவும் வாயும் உலர்ந்தன நாண்மலர்ப்
பூவின் மாலை புலால்வெறி பூத்தவால். 9818

உக. இழுகும் வீணைகொ டேந்து பதாகைமேல்
கழுகும் காகமும் மொய்த்தன கண்கள்நீர்
ஒழுகு கின்றன ஓடின ஆடன்மாத்
தொழுவி னின்றன போன்றன சூழிமா. 9819

உஉ. இன்ன தன்மை இமையவர்க் கின்பம்செய்
துன்னி மித்தங்கள் தோன்றின தோன்றவும்
அன்ன தொன்றும் உணர்ந்திலன் ஆற்றுமோ
என்னை வெல்ல மனிதன்என் றெண்ணுவான். 9820

உங. வீங்கு தேர்செலும் வேகத்து வேலைநீர்
ஓங்கு நாளில் ஒதுங்கும் உலகுபோல்
தாங்கல் ஆற்ற கிலார்தடு மாற்றத்தால்
நீங்கி னார்இரு பாலும் நெருங்கினர். 9821

உச. கரும முங்கடை காண்குறு ஞானமும்
அருமை சேரும் அவிஞ்சையும் விஞ்சையும்
பெருமை சால்நெடும் பாவமும் பேர்கிலாத்
தரும மும்எனச் சென்றெதிர் தாக்கினர். 9822

உரு. சிரமொர் ஆயிரம் தாங்கிய சேடனும்
உரவு கொற்றத் துவணத் தரசனும்
பொரு உடன்றனர் போலப் பொலிந்தனர்
இரவு நண்பக லும்எனல் ஆயினர். 9823

உசு. துவனி வில்லின் பொருட்டொறு தொல்லைநாள்
எவனவ் ஈசன்என் பார்தொழ வேற்றெதிர்
புவன மூன்றும் பொலங்கழ லாற்றெடும்
அவனும் அச்சிவ னும்எனல் ஆயினர். 9824

1 [பிரதி] இழுக்கும்

உஎ. வென்றி யந்திசை யாகீன வெகுண்டன
ஒன்றை ஒன்று முனிந்தன ஒத்தனர்
அன்றி யும்நர சிங்கமும் ஆதிமாப்
பன்றி யும்பொரு மாறன்ன பண்பினர். 9825

உஅ. கண்ட சங்கரன் நான்முகன் கைத்தலம்
விண்ட சங்கிட அண்டம் வெடிபட
அண்ட சங்கத் தமரர்தம் ஆர்ப்பெலாம்
உண்ட சங்கை இராவணன் ஊதினன். 9826

உக. சொன்ன சங்கின தோசை துளக்குற
என்ன சங்கென் றிமையவர் ஏங்குற
அன்ன சங்கைப் பொருமையி னுல்அரி
தன்ன வெண்சங்கு தானும் முழங்கிற்றுல். 9827

உம. அப்யன் ஐம்படை தானும் அடித்தொழில்
செய்ய வந்தயல் நின்றன தேவரில்
மெய்யன் அன்னவை கண்டிடலன் வேதங்கள்
பொய்யில் தன்னைப் புறந்தெரி யாமைபோல். 9828

உக. ஆசையும் விசும்பும் அலை ஆழியும்
தேசமு மலையும் நெடுந் தேவரும்
கூச அண்டம் குலுங்கக் குலங்கொடார்
வாசவன் சங்கை மாதலி வாய்வைத்தான். 9829

உஉ. துயில வாளரி அரக்கன் துரப்பன
விமல வாயன்ன வீழ்ந்தன முன்னமே
கமல வாளன நாடியர் கட்கணி
அமலன் மேனியில் தைத்த அனந்தமால். 9830

உங. சென்ற தேரோர் இரண்டினும் சேர்த்திய
குன்றின் வெங்கட் குதிரை குதிப்பன
ஒன்றை ஒன்றுற் றெரியுற நோக்கின
தின்று தீர்வன போலுஞ் சினத்தன. 9831

உச. கொடியின் மேல்உறை வீணையும் கொற்றமால்
இடியின் ஏறு முறையின் இடித்தன
படியும் விண்ணும் பரவையும் பண்பற
முடியும் என்பதொர் மூரி முழக்கின. 9832

நடு. ஏழு வேலியும் ஆர்ப்பெடுத் தென்னலாம்
வீழி வெங்கண் இராவணன் வில்ஒலி
ஆழி நாதன் சிலைஒலி அண்டம்விண்
டேழி பேர்வுழி மாமழை ஒத்ததால். 9833

நசு. ஆங்கு நின்ற அனுமனீ ஆழியாய்
வீங்கு வெஞ்சின வீரர் விழித்தனர்
ஏங்கி நின்றதால் ஒன்றும் இழைத்திலர்
வாங்கு சிந்தையர் செய்கை மறந்துளார். 9834

நஎ. ஆவ தென்னைகொ லாம்என் றறைகுவர்
ஏவர் வெல்வர்என் றெண்ணுவர் ஏங்குவர்
போவர் மீள்வர் பதைப்பர் பொருமலால்
தேவ ருந்தங்கள் செய்கை மறந்துளார் 9835

நஅ. சேண வந்தர நோக்கிலும் திண்சிரம்
பூண முந்தின சிந்தின பூமழை
காண வந்த கடவுளர் கைஎலாம்
ஆண வந்தனீ யார்உளர் ஆவரோ. 9836

நக. ஈண்ட மின்னெடு வானிடு நீலவில்
பூண்டி ரண்டெதிர் நின்றன போன்றன
ஆண்ட வில்லிதன் வில்லும் அரக்கன்தன்
தீண்ட வல்லர் இலாத சிலையுமே. 9837

சம. அரக்கன் அன்றெடுத் தார்த்தன ஆர்ப்புடன்
உரப்பு மோவில் தெழிப்பும்உண் டேகொலாம்
குரக்கு வேலையும் மேகக் குழாங்களும்
இரைத்தி டிக்கின்ற தின்றும்ஓர் சூறிலா. 9838

சக. மண்ணில் செல்வன செல்லினு மாசற
விண்ணில் சூன்மழை அல்ல இராவணன்
கண்ணில் சிந்தின தீக்கடு வேகத்தின்
விண்ணில் செல்வன வெந்தன வீழ்வன 9839

சஉ. இக்க ணத்தும் எறிப்ப தடித்தன
செக்கர் மேகத் துதிக்கு நெருப்பெனப்
பக்கம் வீசும் படைச்சுடர் பஃறிசை
புக்கு போகப் பொடிப்பன போக்கில, 9840

சஅ. மால் கலங்கலில் சிந்தையன் மாதிரம்
நால் கலங்க நகுந்தொறு நாவொடும்
கால் கலங்குவர் தேவர் கணமழைச்
சூல் கலங்கும் விலங்கல் துளங்குமால். 9841

சச. குற்ற வித்கொடு கொல்லுதல் கோள்இலாச்
சிற்றை யாளனைத் தேவர்தந் தேரொடும்
பற்றி வானில் சுழற்றிப் படியின்மேல்
எற்று வேன்என் றிரைக்கும் இருக்குமால். 9842

சடு. தடித்து வைத்தன வெங்கணை தாக்கற
வடித்து வைத்தன மானுயர் தோள்வலி
ஓடித்துத் தேரை உதிர்த்தொரு வில்லொடும்
பிடித்துக் கொள்வன் சிறைஎனப் பேருமால். 9843

*சசு. பதைக்கின்றதொர் மனமும்பசை பிடிக்கின்றதொர் சினமும், விதைக்கின்றன பொறிபொங்கின விழியும்உடை வெய்யோன், குதைக்குன்றன நிமிர்வெஞ்சிலை குலையக்கடுங் கொடுங்காற், றுதைக்கின்றன எனவெங்கணை உரும்ஏறென எய்தான். 9844

சள. உரும்ஒத்தன கனல்ஒத்தன ஊற்றந்தரு கூற்றின்
மருமத்தினும் நுழைகின்றன மழைஒப்பன வானோர்
நிருமித்தன படைபற்றற நிமிர்வுற்றன அமுதப்
பெருமத்திணை முறைசுற்றிய பெரும்பாம்பெனப் பெரிய.

சஅ. துண்டப்பட நெடுமேருவைத் துணித்துள்ளிடை தொங்கா அண்டத்தையும் பொதுத்தேகும்என் றிமையோர்களும் அயிர்த் தார், கண்டத்தெறு கணைக்காற்றினைக் கருணைக்கடல் கனகச், சண்டச்சர மழைகொண்டவை யிடையேயறத் தடுத்தான்.

சக. உடையான்முயன் றுறுகாரியம் உறுதீவினை இயற்ற இடையூறுறச் சிதைந்தாங்கெனச் சரம்சிந்தின இறலும் தொடையூறிய கணைமாரிகள் தொகைதீர்ந்தன துரந்தான் கடையூறுறு கணமாமழை கால்வீழ்ந்தெனக் கடிவான். 9847

சுஏ. விண்போர்த்தன திசைபோர்த்தன மலைபோர்த்தன இமை யோர், கண்போர்த்தன கடல்போர்த்தன படிபோர்த்தன கலை யோர், எண்போர்த்தன எரிபோர்த்தன இருளபோர்த்தன என்னே, திண்போர்த்தொழில் என்முனையின் உரிபோர்த் தவன் திகைத்தான். 9848

ருக. அல்லாநெடும் பெருந்தேவரும் மறைவாணரும் அஞ்சி
எல்லார்களும் கரங்கொண்டிரு விழிபொத்தினர் இரிந்தார்
செல்லாயிரம் விழுங்கால்உகும் விலங்கொத்தது சேணை
வில்லாளனும் அதுகண்டவை விலக்கும்தொழில் வேட்டான்.

ருஉ. செந்தீவிணை மறையாளனுக் கொருவன்சிறு விலோசனாள்
முந்தீய்ந்ததொர் உலைவின்பயன் எனல்ஆயின முதல்வன்
வந்தீய்ந்தன வடிவெங்கணை அனையான்வகுத் தமைத்த
வெந்தீவிணைப் பயன்ஒத்ததவ் அரக்கன்விடு விசிகம். 9850

ருங. நூறுயிர வடிவெங்கணை நொடிஒன்றினில் விடுவான்
ஆறுவிடல் மறவோன்அவை தனிநாயகன் அறுப்பான்
கூறுயின கனல்சிந்துவ குடிக்கப்புனல் குறுகிச்
சேறுவன பொடியர்வன திடராயின கடல்தான். 9851

ருச. வில்லால்சரம் துரக்கின்றவற் றிடையேமிடல் வீம்போர்
வல்லான்மழு எழுத்தோமர மணித்தண்டிருப் புலக்கை
தொல்லார்அயின் வாள்சக்கரம் சூலம்இவை தொடக்கத்
தெல்லாநெடுங் கடக்கைஎடுத் தெறிந்தான் செரு வறிந்தான்.

ருரு. வேலாயிரம் மழுவாயிரம் எழுவாயிரம் விசிகக்
கோலாயிரம் பிறவாயிரம் ஒருகோல்படக் குறையுங்
காலாயின கனலாயின உருமாயின கழியின்
சூலாயின மழையன்தொடை பலவாயின தொடுக்க. 9853

ருசு. ஒத்துச்சில வலைக்கின்றதொர் அளவின்தலை யுடனே
பத்துச்சில எடுத்தான்கணை தொடுத்தான்பல முகில்போல்
தொத்துப்படி நெடுந்தாரைகள் சொரிந்தால்எனத் துரந்தான்
குத்துக்கொடு நெடுங்கோல்படு களிரும்எனக் கொதித்தான்.

ருள. ஈசன்விடு சரமாரியும் எரிசிந்துவ தறுகண்
நீசன்விடு கணைமாரியும் இடைஎங்கணும் நெருங்கத்
தேசம்முத லியபூதமும் செருக்கண்டனர் நெருக்கக்
கூசிம்மயிர் பொடிப்புற்றன எனலாயின குலைய. 9855

*ருஅ. மந்தரக் கிரிஎன மருந்து மாருதி
தந்தஅப் பொருப்பென பரங்கள் தான்எனக்
கந்தருப் பங்கர் விகம்பில் கண்டன
அந்தரத் தெழுந்ததவ் அரக்கன் தேர்அரோ. 9856

ருக. எழுந்துயர் தேர்மிசை இலங்கை காவலன்
பொழிந்தனன் சரமழை உருவிப் போகலால்
ஒழிந்தது மொழிகில தென்ன ஒல்லனக்
கழிந்தது கவிக்குலம் இராமன் காணவே. 9857

சுரு. முறுவடு தோளொடு முடியப் பஃறலை
விழவிடு குவன்இனி விசும்பு சேமமோ
மழவிடை அனையநம் பகைஞர் மாண்டனர்
எழவிடு தேரைஎன் றிராமன் கூறினான். 9858

சுக. அந்துசெய் குவன்என அறிந்த மாதலி
உந்தினன் தேர்எனும் ஊழிக் காற்றினே
இந்துமண் டலத்தின்மேல் இரவி மண்டலம்
வந்தென வந்ததம் மானத் தேர்அரோ. 9859

சுஉ. இரிந்தன மழைக்குலம் இழுகிக் திக்கெலாம்
உரிந்தன உடுக்குலம் உதிர்ந்து சிந்தின
நெரிந்தன நெடுவரைக் குடுமி நேர்முறை
திரிந்தன சாரிகை தேரும் தேருமே 9860

சுங. வலம்வரும் இடம்வரும் மறுகி வானெடு
நிலம்வரும் இடம்வல நீருண் வேலியும்
அலம்வரு குலவரை அனைத்தும் அண்டமும்
சலம்வருங் குயமகன் திகிரித் தன்மையே. 9861

சுச. எழும்புகழ் இறைவன்தேர் அரக்கன் தேர்இதென்
றுழுந்துருள் பொழுதினில் உலகம் சேர்வன
தழும்பிய தேவரும் தெரிவு தாங்கிலர்
பிழம்பனல் திரிவன என்னும் பெற்றியார் 9862

சுரு. உக்கிலா உடுக்களும் உருள்கள் தாக்கலின்
நெக்கிலா மலைகளும் நெருப்புச் சிந்தலில்
வக்கிலாத் திசைகளும் உதிரம் வாய்வழிக்
கக்கிலா உயிர்களும் இல்லைக் காண்பன. 9863

சுசு. இந்திரன் உலகத்தார் என்பர் என்றவர்
சந்திரன் உலகத்தார் என்பர் தாமரை
அந்தணன் உலகத்தார் என்பர் அல்லரான்
மந்தர மலையினர் என்பர் வானவர். 9864

சுஎ. பாற்கடல் நடுவண்ஓர் என்பர் பல்வகை
மாற்கடல் ஏழுக்கும் வரம்பி லார்என்பார்
மேற்கட லார்என்பார் கிழக்கு ளார்என்பார்
ஆர்ப்பிடை இதுஎன்பர் அறியு மாதவர். 9865

சுஅ. மீண்டன வோஎன்பார் விசும்பை விண்டுகக்
கீண்டன வோஎன்பார் கீழ வோஎன்பார்
பூண்டன புரவியோ புதிய காற்றென்பார்
மாண்டன உலகம்என் றுரைக்கும் வாயினூர். 9866

சுக. ஏழுடைக் கடலினும் தீவொர் ஏழினும்
ஏழுடை மலையினும் உலகம் ஏழினும்
சூழுடை அண்டத்தின் சுவர்கள் எல்லையாய்
ஊழியில் காற்றெனத் திரிந்த ஓய்வில. 9867

எம. உடைக்கடல் ஏழினும் உலகம் ஏழினும்
இடைப்படுந் தீவினும் மலையோர் ஏழினும்
அடைக்கலப் பொருள்என அரக்கன் வீசிய
படைக்கலம் மழைபடு துளியின் பான்மையால் 9868

எக. ஒறுத்துல கனைத்தையும் உழலு மோட்டிடை
இறுத்திலன் இராவணன் எறிந்த எய்தன
அறுத்ததும் தடுத்ததும் அன்றி ஆரியன்
செறுத்திடை ஒருதொழில் செய்த தில்லையால். 9869

எஉ. விலங்கலும் வேலையும் மேலுங் கீழரும்
அலங்கொளி திரிதரும் உலக னைத்தையும்
கலங்குறத் திரிந்ததோர் ஊழிக் காற்றென
இலங்கையை எய்திய இடைப்பின் வந்ததேர். 9870

எங. உய்த்துல கனைத்தையும் உழன்ற சாரிகை
மொய்த்துயர் கடலிடை மணலின் மும்மைய
வித்தகர் கடவிய விசையத் தேர்பரி
எய்த்தில உயிர்த்தில இரண்டு பாலுமே. 9871

எச. இந்திரன் தேரின்மீ துயர்ந்த வெந்தெழில்
உந்தலும் பெருவலி உருமின் ஏற்றினீச்
சந்திரன் அனையதோர் சரத்தி னுல்தரை
சிந்தினன் இராவணன் எரியும் சிந்தையான். 9872

எடு. சாய்ந்தவல் உருமும்போய் உவரிக் கார்க்கடல்
பாய்ந்தவெங் கனல்என முருங்கிப் பாய்தலும்
காய்ந்தபே ரிரும்பினன் கட்டிக் காலுறத்
தோய்ந்தநீர் ஆம்எனச் சுருங்கிற் றுழியே. 9873

எசு. எழுத்தெனச் சிதைவிலா இராமன் தேர்ப்பரிக்
குழுத்தனைக் கூர்ங்கணைக் குப்பை யாக்கிநேர்
வழுத்தரு மாதலி வயிர மார்பிடை
அழுத்தினன் கொடுஞ்சரம் ஆழ்ரு டாறரோ. 9874

எஎ. நீனிற நிருதர்கோன் எய்ய நீதியின்
சால்புடை மாதலி மார்பில் தைத்தன
கோலிரு மிலக்குவன் கோல மார்பின்வீழ்
வேலினும் வெம்மையை விளைத்த வீரற்கு. 9875

எஅ. மண்டல வரிசிலை மான வில்லொரு
துண்டவெண் பிறைஎனத் தோன்றத் தூவிய
உண்டைவெங் கடுங்கணை ஒருங்கு மூடலால்
கண்டிலன் இராமனை இமைப்பில் கண்ணினுர். 9876

எக. தோற்றன னேஇனி என்னும் தோற்றத்தால்
ஆற்றலர் அமரரும் அச்சம் எய்தினுர்
வேற்றலர் ஆர்த்தனர் மேலும் கீழரும்
காற்றியக் கற்றது கலங்கிற் றும்பரே. 9877

அம. அங்கியும் தன்ஒளி அடங்கிற் றூர்கலி
பொங்கில திமிர்த்தன விசும்பில் போக்கில
வெங்கதிர் தண்கதிர் விலங்கி மீண்டன
மங்குலின் நெடும்புயல் மழை வறந்ததால். 9878

அக. திசைநிலைக் கடக்கரி செருக்குச் சிந்தின
அசைவில வேலைகள் ஆர்க்க அஞ்சின
விசையொடு விசாலத்தை நெருக்கி ஏறின
குசைநெடு மேருவும் குலுக்கம் உற்றதே. 9879

அஉ. வானரத் தலைவனும் இளைய மைந்தனும்
ஏனைய தலைவனைக் காண்கிலா இனக்
கானகக் கரிஎன கலங்கி னுர்கடல்
மீன்எனக் கலங்கினுர் ஆர்ப்பு வீழ்ந்தநாள். 9880

அங. எய்தன சரம்எலாம் இமைப்பின் முந்துறக்
கொய்தனன் அகற்றிவெங் கோலின் கோவையான்
எய்தனன் விசும்பினை நிரம்பி நொந்தெனச்
செய்தனன் இராகவன் அமரர் தேறினார். 9881

*அச. தூணுடை நிரைபுரை கரம்அவை தொறும்அக்
கோணுடை மலைநிமிர் சிலையிடை குறையச்
சேணிடை நிமிர்கணை சிதறினன் உணர்வோ
டுணுடை உயிர்தொறும் உணர்வுடை ஒருவன். 9882

அடு. கயில்விரி கடைபுணர் கவசமும் உருவிப்
பயில்விரி குருதிகள் பருகிட வெயிலோ
டயில்விரி சுடுகணை கடவினன் அறிவில்
துயில்விரி விழியுணர் சுடரொளி ஒருவன். 9883

அசு. திசையுறு துகிலது செறிமழை சிதறும்
விசையுறு முகிழுது விரிதரு சிரனே
டிசையுறு கருவியின் இனிதுறை கொடியை
தசையுறு கணைகொடு தரையுற விடலும். 9884

அள. படையுக இமையவர் பருவரல் கெடவந்
திடையுறு சிறைதிசை இழுகுற வினைய
அடையுறு கொடிமிசை அணுவினன் அளவில்
கடையுக முடிவெழு கடல்புரை கலுழன். 9885

அஅ. பண்ணவன் உயர்கொடி யினைஒரு பறவைக்
கண்ணகன் உலகினை வலம்வரு கலுழன்
நண்ணலும் இமையவர் நமதுறு கருமம்
எண்ணலும் முனிவினன் இவறினன் எனவே. 9886

அக. ஆயதோர் அமைதியின் அறிவினின் அமைவான்
நாயகன் ஒருவனை நலிகில துணரான்
ஏயினன் இருள்உறு தாமதம் எனும்அத்
தீஎன வருபடை தெறுதொழில் மறவோன். 9887

கஅ. தீமுகம் உடையன சிலமுகம் உதிரம்
தோய்முகம் உடையன சுரர்முகம் உடைய
பேய்முகம் உடையன பிலமுகம் நுழையும்
வாய்முகம் வரிஅர வனையன வருவ. 9888

கூக. ஒருதிசை முதல்கடை ஒருதிசை அளவும்
இருதிசை எயிறுற வருவன எரியக்
கருதிய கருதிய புரிவன கனலும்
பருதியை மதியொடு பருகுவ பகழி. 9889

கூஉ. இருள்ஒரு திசைஒரு திசைஎரி எரியின்
சுருள்ஒரு திசைஒரு திசைமழை தொடரும்
உருள்ஒரு திசைஒரு திசைஉரு மிடலும்
மருள்ஒரு திசைஒரு திசையில வடரும். 9890

கூங. இனையன நிகழ்வுற எழுவகை உலகும்
சுனையிருள் கதுவிட உயிரிடை கதற
வினையற் றொழிலிடை விரவலும் விமலன்
நினைவுறு தகையினன் நெறியுறு முறையின். 9891

கூச. கண்ணுதல் ஒருவன தடுபடை கருதிப்
பண்ணவன் விடுதலும் அதுதனி பருக
எண்ணுவ கனவினு டுணர்வென இமையுற்
றுண்ணெனு நிலைமையி னெறிபடை தொலைய. 9892

*கூடு. விரிந்த தன்படை மேவிய வீந்தமை கண்டே
எரிந்த கண்ணினன் எயிற்றினைக் கடித்தனன் எறியத்
தெரிந்த வெங்கணைக் கங்கவெஞ் சிறையன்ன திறத்தால்
அரிந்த மன்திரு மேனிமேல் அழுத்திநின் றூர்த்தான். 9893

கூசு. ஆர்த்து வெஞ்சினத் தரக்கன்வெம் படைக்கலம் அமரர்
வார்த்தை யுண்டதின் உயிர்களான் மறலிதன் வயிற்றைத்
தூர்த்த திந்திரன் பெலந்தனைத் தொலைத்தது தொடுத்துத்
தீர்த்தன் மேல்செலத் துரந்தனன் உலகங்கள் திரிய. 9894

கூஎ. ஆசு ரப்பெரும் படைக்கலம் அமரரை அமரில்
ஏசு வித்பதெவ் வுலகையும் எவரையும் வென்று
வீசு வெற்பிறத் துரந்தவெங் கணையென விசையில்
பூசு ரர்க்கொரு கடவுள்மேல் சென்றது போலாம். 9895

கூஅ. நுங்கு கின்றதிவ் உலகையோர் நொடிவரை என்ன
எங்கும் எங்கும்நின் றலமரும் அமரர்கண் டிரைப்ப
மங்குல் வல்லுரு மேற்றின்மேல் எரிமடுத் தென்ன
அங்கி தன்நெடும் படைதொடுத் திராகவன் அறுத்தான். 9896

கக. கூற்றுக் கோடியும் கோடல கடல்எலாம்குடிப்ப
நீற்றுக் குப்பையின் மேருவை நூறுவ நெரியக்
காற்றுப் பின்செலச் செல்வன் உலகெலாங் கடப்ப
நூற்றுக் கோடிஅம் பெய்தனன் இராவணன் நொடியில். 9897

ா. என்ன கைக்கடுப் போஎன்பர் சிலர்சிலர் இயையும்
அன்ன மாயமாம் அம்பரம் புக்கதென் றயிர்த்தார்
இன்னம் உண்டுகொல் இடம்என்பர் சிலர்சிலர் இகல்போர்
முன்னம் இத்தனை முயன்றிலை னும்என்பர் முனிவர். 9898

ாக. மறை முதல்தனி நாயகன் வாளினை மறைத்த
சிறை யுடைக்கொடும் சரம்எலாம் இமைஒன்றில் தெரிய
அறை சிகைப்பொருந் தலினின்றும் புங்கத்தின் அளவும்
பிறைமுகச்சொடு நெடுங்கடுஞ் சரங்களால் பிளந்தான். 9899

ாஉ. அயன் படைத்தபேர் அண்டத்தின் அருந்தவம் ஆற்றிப்
பயன் படைத்தவர் யாரினும் படைத்தவன் பல்போர்
வியன் படைக்கலம் தொடுப்பன்நான் இனிஎன்று விரைந்தான்
மயன் படைக்கலம் தொடுத்தனன் தெசரதன் மகன்மேல். 9900

ாங. விட்ட னன்மயன் படைக்கலம் வேரொடும் உலைக்கச்
சுட்ட னன்எனும் துணுக்கமுற் றமரரும் சுருண்டார்
கெட்ட னம்என வானரத் தலைவரும் கிளர்ந்தார்
சிட்டர் தந்தனித் தேவனும் அதன்மிசை தெரிந்தான். 9901

ாச. பாந்தள் பஃறலை பரப்பதன் தவிசிடைப் பார்மேல்
மாந்தர்க் கில்லையால் வாழ்வென வருகின்ற அதனைக்
காந்தற் பமைனுங் கடுங்கொடுங் கணையினுல் கடந்தான்
ஏந்தல் பன்மணி எறுழ்வலித் திண்புயத் திராமன். 9902

ாரு. பண்டு நான்முகன் படைத்தது கனகன்இப் பாரைத்
தொண்டு கொண்டது மதுவெனும் அவுணனும் தொட்ட
துண்ட தென்பையில் இதுதுரந் துயிர்உண்பன் என்றத்
தண்டு கொண்டெறிந் தான்துரந்தா டைந்துணை தலையான்.

ாசு. தாரு கன்பண்டு தேவரைத் தகர்த்தது தனிமா
மேரு மந்தரம் புரைவது வெயிலினும் ஒளிய
ஓரு கம்செல உலகம்மின் நாடிடினும் உருளாச்
சீரு கந்தது நெரிந்தது தானவர் சிதைத்தை. 9904

எஎ. பசும்பு னல்பெரும் பரவைபண் டுண்டது பனிப்புற்
றசும்பு பாய்கின்ற தருக்களில் ஒளிர்கின்ற தண்டம்
குசும்பு போல்உடைந் தொழியும்என் றியாவரும் தளர
விசும்பு பாழ்படட வந்தது மந்தரம் வெருவ. 9905

எஅ. கண்டு தாமரைக் கடவுள்மாக் கதைதனைக் கழறு
அண்டர் நாயகன் ஆயிரத் தளவிலும் அடங்காப்
புண்ட ரீகத்தின் மொட்டென்ன புகர்முகக் கணையால்
உண்டை நூறுடை நூறுபட் டுளபொரிந் துதிர்ந்த. 9906

எக. தேய நின்றவன் சிலைவலங் காட்டினுன் தீராப்
பேயை என்பதிற் றுரப்பதிங் கிவன்பிழை யாமல்
ஆய தன்பெரும் படையொடுங் கிளையொடும் அவிய
மாயை யின்படை தொடுப்பன்என் றிராவணன் மதித்தான்.

எகம். பூச னைத்தொழில் புரிந்துதான் முறைமையில் போற்றும்
ஈச னைத்தொழு திருடியும் சந்தமும் எண்ணி
ஆசை பத்தினும் அந்தரப் பரப்பினும் அடங்கா
வீசி மேற்செல வில்விசைத் தொடைகொண்டு விட்டான். 9908

எகக. மாயம் பொத்தியஸ் வயப்படை விடுதலும் வரம்பில்
காயம் அத்தனை உளநெடுங் காயங்கள் கலுவ
ஆய் முற்றிமுழங் தார்என ஆர்த்தனர் அமரில்
தூய [1]கொற்றவர் சுடுசரத் தால்அமர் துணிந்தார். 9909

எகஉ. இந்திரற் கொரு பகைஞனும் அவற்கிளை யோரும்
தந்திரப் பெருந் தலைவரும் தலைத்தலை யோரும்
மந்திரச் சுற்றத் தவர்களும் வரம்பிலர் பிறரும்
அந்த ரத்தினை நிறைத்தனர் மழையுக ஆர்ப்பார். 9910

எகஉ. குடப்பெ ருஞ்செவிக் குன்றமும் மற்றுள குழுவும்
படைத்த மூலமாத் தாயையும் முதலினர் பட்டார்
விடைத்தெ ழுந்தனர் யாவரோ தேர் பரிமுதல் வெவ்வே
றடைத்த ஊர்திக ளனைத்தும்வந் தவ்வழி அடைய. 9911

எகச. ஆயி ரம்பெரும் வெள்ளம்என் றறிஞரே அறைந்தார்
கார்சி னப்பெருங் கடல்படை களப்பட்ட. தெல்லாம்
ஈச னில்பெற்ற வரத்தினுல் எய்திய தென்னத்
தேச முற்றவர்ந் தெரிந்தது திசைகளும் திகைப்ப. 9912

---

1 [பிரதி] கொத்தவர்.

ாகடு. சென்ற தெங்கணும் தேவரும் முனிவரும் சிந்த
வென்ற தெங்களைப் போலும்யாம் விளிவதும் உளதே
நின்று காட்டுதும் எய்துமின் எய்துமின் என்னுக்
கொன்ற கொற்றவர் தம்பெயர் குறித்தறை கூறி. 9913

ாகசு. பாரி டந்துகொண் டெழுந்தன வாம்எனும் படிய
பாரி டந்தொடர்ந் தெழுந்தன மலையன்ன படிவப்
பேரி டம்பெறல் அரிதினி விசும்பெனப் பிறந்த
பேரி டங்களின் கொடுங்குமை அணிந்தன பேய்கள். 9914

ாகள. தாம சத்தினில் பிறந்தவர் அறந்தெறுந் தகையர்
தாம சத்தினில் செல்கிலா சதுமுகத் தவர்க்குந்
தாம சத்திணைத் தொடர்ந்தவர் பரிந்தன தாழ்ந்தார்
தாம சத்திரஞ் சித்திரம் பொருந்திய தயங்க. 9915

ாகஅ. தாம விந்துமீ தெழுந்தவர்க் கிரட்டியின் தகையர்
தாம விந்துவில் பிளவன்ன தயங்குவாள் எயிற்றர்
தாம விஞ்சையால் கடப்பருந் தகையினர் தரளத்
தாம விஞ்சையர் துவன்றினர் திசைதொறும் தருக்கி. 9916

ாகக. தாம டங்கலும் முடங்குளா யாளியும் தருவார்
தாம டங்கலும் நெடுந்திசை உலகொடுந் தகைவார்
தாம டங்கலும் கடலும்ஓத் தார்தருந் தகைத்தார்
தாம டங்கலும் கொழுஞ்சுடர்ப் படையொடுந் தரித்தார்.

ாஉம. இனைய தன்மையை நோக்கிய இந்திரை கொழுநன்
வினைய மற்றிது மாயமோ விதியது விளைவோ
வினையும் வன்கழல் அரக்கர்தம் வரத்தினோ மற்றோ
நினைதி யாம்எனில் பகர்என மாதலி நிரப்பும். 9918

ாஉக. இருப்புக் கம்மியர்க் கிறைநுழை ஊசிஎன் றியற்றி
விருப்பிற் கோடிரால் விலக்கெனு மதகரி விட்டான்
கருப்புக் கார்நிற வண்ணவக் கடுந்திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய தோளவன் மீளரு மாயம். 9919

ாஉஉ வீக்கு வாய்அயில் வெள்ளெயிற் றரவின்வெவ் விடத்தை
மாய்க்கு மால்நெடு மந்திரந் தந்தோர் வலியும்
நோய்க்கு நோய்தரும் வினைக்குநின் பெரும்பெயர் நொடியின்
நீக்கு வாய்உனை நினைக்குவார் பிறப்பெனை நீங்கும். 9920

ாஉக. வரத்தின் ஆயினும் மாயையின் ஆயினும் வலியோர்
உரத்தின் ஆயினும் உண்மையின் ஆயினும் ஓடத்
துரத்தி யால்என ஞானமாக் கடுங்கணை துரந்தான்
சிரத்தி னின்மறை இறைஞ்சவும் தொடர்வரும் சேயான்.

ாஉஉ. துறத்த லாற்றுறு ஞானமாக் கொடுங்கணை தொடர
அறத்த லாறது சேறலால் அறிவுவந் தணுகப்
பிறத்த லாற்றுறு பேதமை பிணிப்புறத் தம்மை
மறத்த லால்தந்த மாயையின் மாயந்ததம் மாயை. 9922

*ாஉஊ. நீல்ந் தொண்டார் கண்டனும் நேமிப் படையானும்
மூலந் தொண்டார் கண்டகர் ஆவி முடிவிப்பார்
காலந் தொண்டார் கொண்டனர் முன்னே கழிவிப்பான்
குலம் தொண்டான்ன் அண்டரை எல்லாம் தொலைதொண்டான்.

ாஉசு. கண்டா குலமுற் றுயிரம் ஆர்க்கின் றதுகண்ணீல்
கண்டா குலமுற் றும்பர் அயர்க்கின் றதுவீரர்
கண்டா குலமுற் றும்சுடும் என்றக் கழல்வெய்யோன்
கண்டா வுதன்முன் செல்ல விசைத்துள் ளதுகண்டான். 9924

ாஉஎ. எரியா நிற்கும் பஃறலை மூன்றும் எரிசிந்தி
திரியா நிற்கும் தேவர்க ளோடே திரளோடும்
இரியா நிற்கும் எவ்வுல குந்தன் ஒளியே யாய்
விரியா நிற்கும் நிற்கில தார்க்கும் விதிசெல்லா. 9925

ாஉஅ. செல்வாய் வண்ணச் செல்ல விடுத்தான் இதுதீர்த்தற்
கொல்வாய் நீயே வேறெரு வர்க்கும் முடியாதால்
வல்வாய் வெங்கட் சூலம் எனுங்கா லனீவள்ளால்
வெல்வாய் வெல்வாய் என்றனர் வானோர் மெலிகின்றூர். 9926

ாஉக. துணையும் வேகத் தால்உரும் வறும் துண்என்ன
வணையும் காலில் செல்வன தன்மை மறவாதே
நிணையும் ஞானக் கண்ணுடை யார்மேல் நிணையாதார்
விணையும் போலச் சிந்தினன் வீரன் சரம்வெய்ய. 9927

ாஉஎ. எய்யு மெய்யும் தேவரு டைத்தின் படைஎல்லாம்
பொய்யு மெய்யும் ஒத்தவை சிந்தும் புவிதந்தான்
வையும் சாபம் ஒப்பன வொப்பின் வலிகண்டே
ஐயன் நின்றுன் செய்வகை ஒன்றும் அறிகில்லான். 9928

ாஙக. மறந்தான் செய்கை மாறெதிர் செய்யும் வகைஎல்லாம்
துறந்தான் என்னு உம்பர் துணுக்கம் தொடர்வுற்றார்
அறந்தான் அஞ்சிக் கால்குலை யத்தான் அறியாது
பிறந்தான் நின்றான் வந்தன சூலம் பிறர்அஞ்ச. 9929

ாஙஉ. சங்கா ரத்தால் கண்டை ஒலிப்பத் தழல்சிந்தப்
பொங்கா ரத்தான் மார்பெதிர் ஓடிப் புகலோடும்
வெங்கா ரத்தான் முற்று முனிந்தான் வெகுளிப்பேர்
உங்கா ரத்தால் உக்கது பன்னூ றுதிராகி. 9930

ாஙஙா. ஆர்ப்பார் ஆனூர் அச்சமுன் உற்றார் அலர்மாரி
தூர்ப்பார் ஆனூர் துள்ளல் புரிந்தார் தொழுகின்றார்
தீர்ப்பாய் நீயே தீயன நீயே வருதிமை
பேர்ப்பாய் போலாம் என்றனர் வாளினர் உயிர்பெற்றார். 9931

ாஙச. வென்றான் என்றே உள்ளம் வியந்தான் வீடுசூலம்
பொன்றான் என்னில் போகல தென்னும் பொருள்கண்டான்
ஒன்றும் உங்கா ரத்தீ உற்றே டுதல்காணூ
நின்றான் அந்நாள் வீடணன் சொல்நினை வுற்றான். 9932

ாஙடு. சிவனே அல்லன் நான்முகன் அல்லன் திருமாலாம்
அவனே அல்லன் மெய்வரம் எல்லாம் அடுகின்றான்
தவனே என்னில் செய்து முடிக்கும் தரம்அல்லன்
இவனே தான்அவ் வேதமுதல்கா ரணன் என்றான். 9933

ாஙசு. ஆரே னுந்தான் ஆகுக யான்என் தனிஆண்மை
பேரேன் நின்றே வென்றி முடிப்பன் அகலல்லேன்
நேரே செல்வன் சொல்லும் அரக்கன் நிமிர்வெய்தி
வேரே நிற்க மீள்கல தென்ன விடலுற்றான். 9934

ாஙள. நிருதித் திக்கின் வென்றவன் வென்றிப் படைநெஞ்சில்
கருதித் தன்பால் வந்தத வன்கைக் கொடுகாலன்
விருதைச் சிந்தி வில்லினில் உந்திச் செலவிட்டான்
குருதிச் செங்கண் தியுக ஞாலம் குலைவெய்த. 9935

ாஙஅ. வையம் துஞ்சும் வல்விட நாக மனம்அஞ்ச
பையுங் கோடி பல்தலை யோடும் அளவில்லா
மெய்யும் வாயும் பெற்றன மேருக் கிரிதானும்
நொய்தென் றோரும் தன்மைய வாகின் றுரைகிற்ப. 9936

ராகூ. வாய்வாய் தோறும் மாகடல் போலும் விடவாயி
போய்வாள் கின்ற வெங்கனல் கண்ணில் பொழிகின்ற
மீய்வான் எங்கும் வெள்ளிடை இன்றி இடைகின்ற
பேய்வாய் என்ன வெள்ளெயி றெங்கும் பிறழ்கின்ற. 9937

ராஅம. கடித்தே தீரும் கண்ணகல் ஞாலம் கடலோடும்
குடித்தே தீரும் என்றுயிர் எல்லாம் குலைகின்ற
முடித்தான் அன்றே வெங்கண் அரக்கன் முழுமுற்றும்
பொடித்தான் ஆகும் இப்பொழு தென்னப் புகைகின்றான்.

ராஅக. அவ்வா றுற்ற ஆடர வம்தன் அடல்வாயால்
கவ்வா கின்ற மால்வரை முற்றும் அவைகண்டான்
எவ்வாய் தோறும் எய்தின என்னு எதிர்எய்தான்
தவ்வா மெய்மெய்க் காருடம் என்னும் படைதன்னுள். 9939

ராஅஉ. *எவ்வ ளத்தன்மைத் தேஇன நாகத் தினம்என்னப்
பவணத் தன்ன வெஞ்சின வேகத் தொழில்பம்பச்
சுவணக் கோலத் துண்ட நகத்தோர் சிறைவெம்போர்
உவணப் புள்ளே ஆயின வாதேஎர் உலகெல்லாம். 9940

*கராஉ. அளக்கரும் புள்ளின மால மாரழல்
துளக்கரும் வாய்தொறும் எரியத் தொட்டன
விளக்கரும் இலங்கைதீ இடுது மீண்டென
விளக்கினம் எடுத்தது போன்ற விண்ணெலாம். 9941

கராக. குயின்றன சுடர்மணித் தழலின் குப்பையில்
பயின்றன சுடர்தரப் பதும நாளங்கள்
வயின்றொறுங் கவர்ந்தெனப் பணியை வாய்களால்
அயின்றன புள்ளினம் உகிரின் அள்ளின. 9942

கராஙு. ஆயிடை அரக்கனும் அழன்ற நெஞ்சினன்
தீயிடைப் பொடித்தெழும் உயிர்ப்பன் சீற்றத்தன்
மாயிரு ஞாலமும் விசும்பும் வைப்பறத்
தூயினன் சுடுசரம் உருமின் தோற்றத்தான். 9943

ராசசு. அங்கவெங் கடுங்கணை அயில வாய்தொறும்
வெங்கணை படப்பட விசையின் மீண்டன்
புங்கமே தலைஎனப் புக்க போலுமால்
துங்கவாள் அரக்கன துரத்தில் தோன்றலால். 9944

ராசள. ஒக்கலின் றெதிர்அமர் உடற்றுங் காலியில்
முக்கணன் தடவரை எடுத்த மொய்ம்பற்கு
நெக்கென விஞ்சையன் நிலையில் தீர்ந்தன
மிக்கன இராமற்கு வலியும் வேகமும். 9945

ராசஅ. வேதியர் வேதத்து மெய்யும் வெய்யவர்க்
காதியின் அணுகிய அற்ற நோக்கினன்
சாதியின் நிமிர்ந்ததோர் தலையைத் தள்ளினன்
பாதியின் பிறைமுகப் பகழி ஒன்றினல். 9946

ராசக. மேருவின் கொடுமுடி வீசு காலெனி
போரிடை ஓடித்துப் போய்ப் புணரிபுக்கென
ஆரியன் சரம்பட அரக்கன் வன்தலை
நீரிடை விழுந்தது நெருப்பொ டொன்றுபோய். 9947

ராரும். குதித்தனர் பாரிடைக் குன்று கூறுற
மிதித்தனர் வடகமும் தூசும் வீசினர்
துதித்தனர் பாடினர் ஆடித் துள்ளினர்
மதித்தனர் இராமனை வானு ளோர்எலாம். 9948

ராடுக. இறந்ததோர் உயிருடன் கருமத் தீட்டினல்
பிறந்துள தாம்எனப் பெயர்த்தும் ஓர்தலை
மறந்தில தெழுந்தது மடித்த வாயது
சிறந்தது தவம்அலால் செயல்உண் டாகுமோ. 9949

ராடுஉ. கொய்தது கொய்தில தென்னுங் கோள்நெறி
யைதது தெரிகுவ தமரர்க் காயினும்
செய்ததும் தெரிந்ததும் சிலைக்குத் தேவனை
வைததும் தெழிந்தது மழையின் ஆர்ப்பது. 9950

ராடுக. இடந்தது கிரிக்குவ டிடன்ன எங்கணும்
படர்ந்தது குரைகடல் பருகும் பண்பது
விடந்தரு விரியது முழுக வேலியில்
கிடந்ததும் ஆர்த்தது மழையின் கேளது. 9951

ராஙச. விழுத்தினன் தலைஎனும் வெருளி மீக்கொள
வழுத்தின உயிர்களின் மூதலின் வைத்தபேர்
எழுத்தினல் தோள்களின் ஏழொ டேழுகோல்
அழுத்தினன் அசனிவ றுயிர்க்கும் ஆர்ப்பினன். 9952

ஈருரு. தலையறில் தருவதோர் தவம்உண் டென்பதை
நிலையுற நோக்கிய நேமி யோன்மகன்
கலையுறு இங்களின் வலைவு காட்டிய
சிலையுறு கையையும் நிலத்தில் சேர்த்தினான். 9953

ஈருசு. கொற்றவெஞ் சரம்படக் குறைந்து போனகை
பற்றிய கிடந்தது சிலையைப் பாங்குற
மற்றொர்கைப் பிடித்தது போல வல்லிய
தற்றகைப் பிறந்தகை யார தோர்குவார். 9954

கருள. பொன்கயிற் றூர்தியான் வலியைப் போக்கென
முன்கயிற் றுறுமயிர் முள்ளிற் றுள்ளுற
பின்கையிற் கொண்டென வில்லை விட்டிலா
வன்கையைத் தன்கையின் வலியின் வாங்கினான். 9955

கருஅ. விளங்கொளி வயிரவாள் அரக்கன் வீசிய
தளங்களிர் தடக்கையில் மார்பில் தாக்கலும்
உளங்களிர் பெருவலி உலைவின் மாதலி
துளங்கினன் வாய்வழி உதிரம் தூவுவான். 9956

கருசு. மாமரத் தால்கையால் வருந்து வானையோர்
தோமரத் தால்உயிர் தொலைக்கத் தூண்டினான்
தாமரத் தால்பொறுத் தவரன் றென்னவும்
காமரத் தால்சிவன் கரத்து வாள்கொண்டான். 9957

*ஈசுரு. மாண்ட தின்றெறி மாதலி வாழ்வினை
மூண்ட வெங்கறல் கிந்த முடுகலும்
ஆண்ட வில்லியோர் ஐம்முக வெங்கணை
தூண்டி னான்நெடும் தோமரந் [1]தொய்வர. 9958

ஈசுக. ஓய கன்ற தொருகலை நூறுறை
போய கன்று புரளப் பொருகணை
ஆயி ரந்தொடுத் தான்திரு வின்தனி
நாய கன்கைக் கடுமை நடத்தியே. 9959

ஈசுஉ. நீர்த்த ரங்கள் தோறும் நிலம்தொறும்
சீர்த்த மால்வரை தோறும் திசைதொறும்
பார்த்த பார்த்த இடந்தொறும் பஃறலை
ஆர்த்து வீழ்ந்த அசனிகள் வீழ்ந்தென. 9960

---

1. [பிரதி] தொமவா.

ராசூங. தகர்ந்து மால்வரை சர்ய்வுறத் தாக்கின
மிகுந்த வாம்விசை யால்தலை வீழ்ந்தன
புகுந்த மாமக ரக்குலம் போக்கற
முகந்த வாரிப் புணரியை முற்றுற. 9961

ராசூச. பொழுது சொல்லினும் புண்ணியம் போனபின்
பழுது சொல்லுமன் றேமறைப் பண்பெலாம்
தொழுது சூழ்வன அதலில் தோன்றியே
கழுது சூழ்வன ராவணன் கண்ணெலாம். 9962

ராசூஙி. வாளும் வேலும் உலக்கையும் வச்சிரக்
கோலும் தண்டு மழுவெனும் கூற்றமும்
தோளின் பத்திகள் தோறும் சுமந்தன
மீளி மொய்ம்பன் உரும்என வீசினன். 9963

ராசூசு. அஞ்சி னைய சிந்திட ஆண்தகை வீரனும்
விஞ்சை யம்என் னிஞ்சி யாதுகொ லானஞ
நிஞ்சி னவன்நிஞ்சி னந்தான்நெடு மேனியைப்
புஞ்சி னவன் வாளியி னுல்என்று பொங்கினன். 9964

ராசூஎ. மஞ்ச ரங்கிய மார்பினும் தோளினும்
நஞ்ச ரங்கிய கண்ணினும் நாவினும்
வஞ்சன் மேனியை வார்கணை அட்டிய
பஞ்ச ரம்என லாம்படி பண்ணினன். 9965

ராசூஅ. வாய் நிறைந்தன கண்கள் மறைந்தன
மீய மேனிகள் எங்கும் மிடைந்தன
தோய்வ றுங்கணை செம்புனல் தோய்ந்திலை
போய்நி றைந்ததிவ் அண்டப் புறம்எலாம். 9966

ராசூகூ. மயிரின் கால்தொறும் வார்க்கணை மாரிபுக்
குயிரும் தீர உருவின ஓட்டலும்
செயிரும் சிற்றமும் நிற்கத் திறந்திரீங்
தயர்வு தோன்றத் துளங்கி அழுங்கினன். 9967

ராசூஙி. வாரி நீர்நின் றெதிர்மக ரம்படச்
சோரி சோர உணர்வு துளங்கினன்
தேரின் மேலிருந் தான்பண்டு தேவர்தம்
ஊரின் மேலும் பலரி உலாவினன். 9968

களக. ஆர்த்துக் கொண்டெழுந் தும்பர்கள் ஓடினர்
வேர்த்துத் தீவினை வெம்பி விழுந்தது
போர்த்துப் போந்தனன் என்று புலன்கொளதேர்
பேர்த்துச் சாரதி போயினன் பின்னுற. 9969

களஉ. கை துறந்த படையினன் கண்ணகன்
மெய் துறந்த உணர்விலன் வீழ்தலும்
எய் இறந்தவிர்ந் தான்இமை யோர்களும்
உய் இறந்துணிந் தான்தவம் உன்னுவான். 9970

களங. தேறி னுற்பின்னை யாதுஞ் செயற்கரி
தாறு தான்உற்ற போத உயிர்தினை
நூறு வாய்எனை மாதலி [1]நோக்கினன்
ஏறு சேவக னும்இதி யம்பினன். 9971

களச. படை துறந்து மயங்கினன் பண்பிலனென்
இடை பெறுந்துயர் பார்த்திகல் நீதியின்
நடை துறந்துயிர் கோடலும் நன்மையோ
கடை துறந்தது போர்என் கருத்தென்றான். 9972

களஞ. கூவி ரஞ்செறி பொற்கொடித் தேரொடும்
போவர் அஞ்சினர் அன்னதோர் போழ்தினில்
ஏவர் அஞ்சலி யாதவர் எண்ணுடைத்
தேவர் அஞ்ச இராவணன் தேறினன். 9973

களசு. உறக்க நீங்கி உணர்ச்சிஉற் றுன்னன
மறக்கண் வஞ்சன் இராமனீ வான்றலை
இறக்குந் தேரொடும் கண்டிலன் சீற்றத்தீப்
பிறக்க நோக்கினன் பின்னுற நோக்கினன். 9974

களட. தேர்தி ரித்தனீ தேவரும் காணவே
வீர விற்கை இராமற்கு வெஞ்சமை
போர உய்த்தனீ பேபிழைத் தாய்எனச்
சார திப்பெய ரோனைச் சலிப்புறு. 9975

களஅ. தஞ்சம் நான்உனைத் தேற்றத் தரிக்கிலா
வஞ்ச னீபெரும் சோபத்து வைகினை
அஞ்சி னுன்எனைச் செய்தனீ ஆதலால்
உஞ்சி போதிகொ லாம்என் றுருத்தெழா. 9976

[பிரதி] 1. நோக்கினன்.

களகூ. வாள் கடைக்கணித் தோச்சலும் வந்தவன்
தாள் கடைக்கணி யாத்தலை தாழ்வுறு
மூள் கடைக்குறுந் தீயினின் முன்னும்வந்
தோள் கடைத்தொன் றறிவிப்ப துண்டெனு. 9977

ளஅம. ஆண்டெ தாழில்துணி வோய்ந்தனை ஆங்கிறை
நீண்ட நிற்பினை யேன்நெடி யோய்உயிர்
மாண்டொ ழித்தி அனையது மாற்றுவான்.
மீண்ட தித்தொழில் எம்வினை மெய்மையால். 9978

ளஅக. ஓப்பும் ஊற்றமும் நோக்கி உயிர்ப்பொறை
சாய்வு நீக்குதல் சாரதி தன்மையால்
மாய்வு நிச்செயம் வந்துள வாளினால்
காய்வு தக்கதன் மூல்கடை காண்டியால். 9979

ளஅஉ. என்றி றைஞ்சலும் எண்ணரி இரங்கினான்
வென்றி யந்தடந் தேரினை மீள்எனச்
சென்றெ திர்ந்தது தேரும்அத் தேர்மிசை
நின்ற வஞ்சன் இராமனை நேர்வுறு. 9980

ளஅங. கூற்றின் வெங்கனை கோடியின் கோடிகள்
தூற்றி னான்வலி மும்முறை தோன்றினான்
வேற்றெ ருர் வாளரக் கன்என மேன்மையால்
ஆற்றி னான்செருக் கண்டவர் அஞ்சினர். 9981

ளஅச. எல்உண் டாகில் நெருப்புண் டெனும்இயல்
சொல்உண் டாயது போல்இவன் தோள்இடை
வில்உண் டாகில் வெலற்கரி தாம்எனச்
சொல்உண் டால்அன்ன தோற்கினை சிந்தினான். 9982

ளஅடு. நார ணன்படை ஆக நயப்புறும்
பார ணங்கினைத் தாங்குறும் பல்வகை
வார ணங்களை வென்றவன் வார்சிலை
ஆர ணங்கை இருதுணி ஆக்கினான். 9983

ளஅசு. அயன் படைத்தலில் ஆயிரம் பேரினான்
வியன் படைக்கலத் தால்அற்று வீழ்தலும்
உயர்ந் துயர்ந்து குதித்தனர் உம்பரும்
பயன் படைத்த பரிவுத் தால்என்பார். 9984

கஅள. மாறி மாறி வரிசிலை வாங்கினன்
நூறு நூறின் நொடிஇரு நூறவை
வேறு வேறு திசையுற வெங்கணை
நூறி நூறி இராமன் நுறுக்கிரன். 9985

கஅஅ. இருப்பு லக்கைவேல் தண்டுகோல் ஈட்டிவாள்
நெருப்பு லக்க வருநெடுங் கப்பணம்
திருப்பு லக்கஉற் றுன்திசை யாணையின்
மருப்பு லக்க வழங்கிய மார்பினன். 9986

கஅக. அவை அணைத்தும் அறுத்தகல் வேலையைக்
குவை அணைத்தும் எனக்குவித் தான்குறித்
திவை அணைத்தும் இவ்வெவல் லாளனு
நவை அணைத்தும் துறந்தவன் நாடினன். 9987

ககஅ. கண்ணில் நுண்மணீ யூடு கழிந்தன
எண்ணில் நுண்மண லில்பல வெங்கணை
புண்ணின் உள்நுழைந் தோடிய புந்தியோர்
எண்ணம் எண்ணில என்செயல் பாற்றினன். 9988

ககக. நார நாண்மலர் மேல்வந்த நான்முகன்
பார வெம்படை வாங்கிஇப் பாதகன்
மாரின் எய்வன்என் றெண்ணி வலித்தனன்
ஆர்வம் இல்லவன் ஆவி அகற்றுவான். 9989

ககஉ. முந்தி வந்துல கின்ற முதற்பொருள்
அந்த ணன்படை வாங்கி அருச்சியா
சுந்த ரன்சிலை நாணில் தொடுப்புரு
மந்த ரம்புரை தோள்உற வாங்கினன். 9990

ககந. புரஞ்சு டப்பண் டமைத்தது பொற்பணை
மரந் துளைத்தது வாலியை மாய்த்தன
அரஞ் சுடச்சுடர் அம்பத ஆற்றலான்
உரஞ் சுடச்சுடர் மேனியின் உந்தினன். 9991

ககச. காலும் வெங்கன லும்கடை காண்கிலா
மாலும் கொண்ட வடிக்கணை மாமுக
நாலும் கொண்டு நடந்தது நான்முகன்
மூல மந்திரம் தன்னொடு மூட்டலால். 9992

ககூடு. ஆழி மால்வரைக் கப்புறத் தப்புறும்
பாழி மால்கட லும்வெளி பாய்ந்ததால்
ஊழி நாயிறு மிம்மினி ஒப்புறும்
வாழி வெஞ்சுடர் போருள் வாரவே. 9993

ககூசு. அக்க ணத்தின் அயல்நின்ற ஆண்தகைச்
சக்க ரப்படை யோடுந் தரீஇச் சென்று
புக்க தக்கொடி யோன்உரம் பூமியும்
திக்க னைத்தும் விசும்பும் திரியவே. 9994

*ககூஎ. முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருவரமும் முனிவர்தாமே, எக்கோடி யவராலும் வெலப்படான் எனக் கொடுத்த வரமும் ஏனைத், திக்கோடெவ் உலகனைத்தும் செருக்கடந்த பெருவலியும் தின்றுமார்பில், புக்கோடி உயிர் பருகிப் புறம்போயிற் றிராகவன்தன் புனிதவாளி. 9995

ககூஅ. ஆர்க்கின்ற வானவரும் முனிவரரும் அந்தணரும் ஆசி கூறித், தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய் பாற்கடலில் தூய்நீர் ஆடித், தேர்க்கின்ற இராவணன்தன் செழுங்குருதிப் பெரும்பரவைத் திரைமேல் சென்று, கார்க்குன்றம் அனையான்தன் கடுங்கணைப்புட் டிலின்நடுவட் கரந்ததம்மா. 9996

ககூக. கார்நின்றும் மழைநின்றும் உரும்அதிர்வ தெனத்திணி தோள் காட்டி நின்றும், தார்நின்ற மலைநின்று மணிக்குலமும் பணிக்குலமும் தகர்ந்து சிந்தப், போர்நின்ற விழிநின்றும் பொறிநின்ற புகையோடும் குருதிபொங்கத், தேர்நின்று நெடு நிலத்துச் சிரமுகங்கிழப் படவிழுந்தான் சிகரம் போல்வான்.

உ00. மேவம் மடங்கல் வெகுண்டனைய தினமடங்க மனமடங்க வீணயம் வீயத், தெம் மடங்கப் பொருதடக்கைச் செயல் அடங்க மயல்அடங்க ஆற்றல் தேயத், தம் மடங்கு முனிவ ரையும் தலைஅடங்கா நிலைஅடங்கச் சாய்த்த நாளின், மும்ம டங்கு பொலிந்தனம் முறைதுறந்தான் உயிர்துறந்த முகங்கள் அம்மா.

உ0க. பூதலத்தை தாக்குவா யாகஇனிப் பொலந்தேரை என்ற போழ்தின், மாதலிப்பே ரவன்கடவ மண்தலத்தின் அப்பா ழுதே வருத லோடும், மீதலத்த பெருந்தாரை விசும்பளக்க கிடந்தான்தன் மேனி முற்றும், காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணுளான் தெரியக் கண்டான். 9999

உ0உ. தேரினீரே சொடுவிசும்பில் செல்கென்ன மாதலியைச் செலுத்திப் பின்னர்ப், பாரிடைப்போய் இனிதணுகித் தம்பி யொடும் படைத்தலைவர் எவரும் சுற்றப், போரிடைமீண் டொருவருக்கும் புறங்கொடாப் போர்விரன் பொருது வீழ்ந்த, சீரினையே மனம்உவப்ப 1உருமுற்றும் திருமார்பன் தெரியக் கண்டான்.

[பிரதி] 1. உருவமுற்றும்.

உ0ங. புலிமேலும் செலற்கொத்துப் பொதுளின்ற செல்வத்தின் புன்மைத் தன்மை. நிலிமேலும் இனிஉண்டே நீர்மேலில் கோலம்எனும் நீர்மைத்தன்றே. தலிமேலும் தோள்மேலும் தடமுதுகின் படர்புறத்தும் தாவி ஏறி. மலிமேல்நின் முடினபோல் ஆடியவால் வானரங்கள் வரம்பி லாத. 10001

உ0ச தோடுழுது நறுந்தெரியல் தொகைஉழுத கிளைவண்டின் சுழியில் தொங்கல். பாடுழுத படர்வெளினின் பணிஉழுத அணிநிகர்ப்ப பணைக்கை யாணைக், கோடுழுத நெடுந்தழும்புங் குவைதழுவி எழுமேகக் குழுவின் கோவைக், காடுழுத கொடும் பிறையில் கறைகழன்று கிடந்தனபோல் கிடந்த கண்டான்.

*உ0டு. தளர்இயல் பொருட்டின்வந்த சிற்றமும் தருக்கினன்கள் கிளர்இயல் உருவி னோடும் கிழிப்புறக் கிளர்ந்து தோன்றும் வளர்இயல் வகிரில் செம்மைத் தன்மையும் மருவின்ற முளர்இயல் கண்ணன் மூரல் முறுவலன் மொழிவ தானன்.

உ0கூ. வென்றியால் உலகம் மூன்றும் மேன்மையான் மேவினானும், பொன்றியான் என்று தோலைப் பொதுவறநோக்கும் பொற்பும், குன்றியான் தோற்றதன்றே இவனெதிர் குறித்த போதில், பின்றியான் முதுகில்பட்ட தழும்புள பிழம்பின் அம்மா. 10004

கார்த்தவீ ரியன்என் பானுல் கட்டுண்டான் என்னக் கற்கும் வார்த்தையுண் டதனைக் கேட்டு நாணுறும் மனத்தி னேற்குப் போர்த்தலைப் புறம்இட் டேற்ற புண்உடைத் தழும்பு போலாம் ஏற்றமுங் காணல் உற்ற ஈசனூர் இருக்கை நிற்க. 10005

மாண்டொழிந் துலகம் நிற்கும் வயங்கிசை வழங்க மாட்டார் ஊண்தொழில் உகந்து தெவ்வர் முறுவல்தம் புகழை உண்ணத் தூண்தொழில் துறந்த தோளால் தம்உயிர்க் குதவல் தோற்ற ஆண்தொழி லோரில் பெற்ற வெற்றியும் அழகிற் றென்றான்

உ0கூ. அவ்வுரைக் கிறுதி நோக்கி வீடணன் அருவிக் கண்ணன் வெவ்வுயிர்ப் பொடுங்கி நீண்ட விம்மலன் வெதும்பு நெஞ்சன் செவ்வியால் தொடர்ந்த வல்ல செப்பலி செல்வ என்னு எவ்வுயிர்ப் பொறையும் நீங்க இரங்கினின் றனைய சொன்னான்.

உகo. ஆயிரம் தோளி னானும் வாலியும் அரிதின் ஐய மேயின வென்றி விண்ணோர் சாபத்தின் விளைந்த மெய்ம்மைத் தாயினும் தொழுந்தக் காள்மேல் தங்கிய காதல் தன்மை நோயினின் முனிதும் அல்லால் வெல்வதோ நுவலல்பாலார்.

உகக. நாடுள தணியும் முற்றும் நவிந்தநாள் அரிமுன் ஆக
மாடுள தணியும் முற்றும் வவ்வின எல்லை யாணைக்
கோடுள தணியும் புக்குக் கொடும்புறத் தழுந்தும் புண்கோட்
பாடுள திவன்மேல் தெவ்வர் படைக்கலம் பட்டென் செய்யும்.

உகஉ. அப்பணை அணைத்து மார்பிற் கணிஎனக் கிடந்த வீரக்
கைப்பணை முழங்க முன்நாள் அமரிடைக் கலந்த காலத்
துப்பணை வயிர வாளி விசையினும் காலின் தோன்றல்
வெப்பணை குத்தி னூலே வெளிஇடைப் போய தன்றே. 10010

உகங. அவ்வடு இன்றி இந்த அண்டத்தும் புறுத்தும் ஆன்ற
தெவ்வடும் படைகள் அஞ்சா திவன்வயிற் செல்லிற் றேவ
வெவ்விடம் ஈசன் தன்னை விழுங்கினும் பறவை வேந்தை
அவ்விட நாகம் எல்லாம் அடுகினும் அணுகா தன்றே. 10011

உகச. வென்றியர் பிறிதும் உண்டே வேலிசூழ் ஞாலம் உண்டோர், பன்றியாய் எயிற்றுக் கொண்ட பரம்பரன் முதல பல்லோர், என்றியாம் இடுக்கண் தீர்வ தென்கின்றார் இவன் என் றுன்னுல். பொன்றியான் என்ற போதும் புலப்படார் பொய்கொல் என்பார். 10012

உகஞ. அன்னதோ என்ன வீரன் ஐயமும் நாணும் நீங்கித் தன்னதோ ளிணையை நோக்கி வீடண தக்க தன்றால் என்னதோ இறந்து ளார்மேல் வயிரஈ இவனுக் கீண்டச் சொன்னதோர் விதியி னூலே கடன்செயத் துணிதி என்றான்.

நகூ—வது இராவணன் வதைப்படலம் — முற்றிற்று.
ஆகப்படலம் 128-க்கு கவி 10013

நஎ-வது மண்டோதரி புலம்புறு படலம்

க. அவ்வகை அருள வள்ளல் அணைத்துல கங்கள் தோறும் எவ்வகை உள்ள தேவர் யாவரும் இரைத்துப் பொங்கிக் கௌவையில் தீர்ந்தார் வந்து விழ்கின்றார் தம்மைக் காணச், செவ்வையின் அவர்முற் சென்றான் வீடணன் இ தணை செய்தான். 10014

உ. போழ்ந்தன அரக்கன் செய்த புன்தொழில் பொறையின் ஆற்றல், வாழ்ந்தனீ இவனுக் கேற்ற வழிக்கடன் வகுத்தி என்னத், தாழ்ந்ததோர் கருணைத் தன்னுல் தலைமகன் அருளில் தள்ளி, வீழ்ந்தனன் அவன்மேல் வீழ்ந்த மலையின்மேல் மலை வீழ்ந் தென்ன. 10015

ங. ஏவரும் உலகத் தெல்லா உயிர்களும் இரங்கி ஏங்கத் தேவரும் முனிவர் தாமும் சிந்தையின் இரக்கம் செய்யத் தாவரும் பொறையி னுன்தன் அறிவினுல் தணைக்க நின்ற ஆவலும் துயரும் தீர அரற்றினுன் பதுவாய் ஆர. 10016

*ச. உண்ணுதே உயிர்உண்ண ஒருமருந்து சனகிஎன்னும் ஒரு நஞ்சுன்னைக், கண்ணுலே நோக்கவே போக்கியதே நீஉயிருங் களப்பட்டாயே, எண்ணுதே எண்ணியசொல் இன்றினித் தான் எண்ணுதியோ எண்ணிலாற்றல், அண்ணுவோ அண்ணுவோ அசுரர்கள்தம் பிரானேயமே அமரர் கூற்றே. 10017

ரு. ஓராசை ஒருவன்மேல் உயிர்ஆசைக் குலமகள்மேல் உற்ற காதல், தீராத வசைஎன்றேன் எனைமுனிந்த முனிவாறித் தேறினையோ, போராசைப் படஎழுந்த குலமுற்றும் பொன்றவந்தான் பொங்கா நின்ற, பேராசை பேர்ந்துதோ பெயர்ந்தாசைக் கிரிஇரியப் புருவம் பேர்த்தாய். 10018

கூ. அன்றெரியில் வீழ்மேவத வதிஇவள்காண் அமர்உலகுக் கன்னைஎன்று, குன்றேய நெடுந் தோளாய் கூறினேன் அது மனத்துக் கொள்ளா தேபோய், உன்றனது குலம்அடங்க உருத்தமரில் படக்கண்டும் உறவாகாதே, பொன்றினையே இராகவனுர் புயவலீ இன்றறிந்து போயினையே. 10019

எ. மன்றல்மா மலரானும் வடிமழுவாள் படையானும் வரங் கள்ளுய்ந்த, ஒன்றலா தனஉடைய முடியோடும் பொடியாகி உதிர்ந்து போன, அன்றுதான் உணர்ந்திலேய ஆனலும் அவர்நாட்டை அணுகா நின்ற, இன்றுதான் தெரிந்ததே இராமனுர் யாவருக்கும் இறைவர்ஆதல். 10020

அ. அருவினைவந் தெய்தியபோ தார்தடுப்பார் ஆரதனை அறி வார் வீட்டின், திருவினைநீ பெறுவதற்கிங் கிவன்திருநா மங் கள்தனைச் சிந்தித் தேத்த, ஒருபதுநா வுளவணங்க ஒண்முடி கள் பத்துளவே இறைஞ்ச மேரு, இருபதுகை உளஇலங்கை என்னுக உயிரோடும் இழந்திட் டாயே. 10021

கூ. வீரனடுற்றுயோ விரிஞ்சனும்யாவருக்கும்மேலாம் உன்தன், பேரனடுற்றுயோ பிறைசூடும் பெருமானுர் புரம்பெற் றுயோ, ஆரண நின்உயிரை அஞ்சாதே கொண்டகன்றுர் அதெலாம் நிற்க, மாரனுர் போராட்டம் தவிர்ந்தாரோ குளிர்ந்தானு மதியம் என்பான். 10022

ஙி. கொல்லாத மைத்துனனைக் கொன்றுய்என் றதுகுறித்துக் கொடுமை கூர்ந்து, பல்லாலே இதழ்மறைக்கும் கொடும்பாவி நெடும்பாரப் பகைதீர்ந்தாளோ, நல்லாரும் தீயாரும் நரகத் தார் சொற்கத்தார் நம்பி நம்மோ, டெல்லாரும் பகைஞரே யார் முகத்தே விழிக்கின்றுய் எளிமை ஆனுய். 10023

ஙக. போர்மகளைக் கலிமகளைப் புகழ்மகளைத் தழுவியவா பொருமை கூரச், சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந் தம் மோயைத் தெய்வக் கற்பின், பேர்மகளைத் தழுவாதுன் உயிர் கொடுத்துப் பழிகொண்ட பித்தா பின்னைப், பார்மகளைத் தழுவினையோ நிசையாலைப் பணிஇறுத்த பருதி மார்பால்.

மஉ. என்றேங்கி அரற்றுவான் தணைஎடுத்துச் சாம்புவனும்
எண்ணின்வேந்தன், குன்றேருங்கு நெடுந்தோளாய் விதிநிலைமை
மதியாதே கொள்கைத்தாகிச், சென்றேருங்கும் உணர்விலர்
போல் தேறுது வருந்துதியோ என்னத் தேறி, நின்றுன்அப்
புறத்தரக்கன் நிலைகேட்டாள் மயன்பயந்த நெடுங்கட் பாவை.

*மஙு. அனந்தநூ றுயிரம் அரக்கர் மங்கையர்
புனைந்தபூங் குழல்விரித் தரற்றும் பூசலார்
இனம்தொடர்ந் துடன்வர வெய்தி னுள்என்ப
நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினுள். 10026

மச. இரக்கமும் தருமமும் துணைக்கொண் டின்னுயிர்
புரக்கும்நன் குலத்துவந் தொருவன் பூண்டதோர்
பரக்கறி யாம்எனப் பரந்து நீண்டதால்
அரக்கியர் வாய்திரந் தரற்றும் ஓதையே. 10027

மரு. நூபுரம் புலம்பிடச் சிலம்பு கொந்தழக்
கோபுரம் தொறும்புரம் குறுகி னுர்சிலர்
ஆபுரந் தரன்பகை அற்ற தாம்என
மாபுரந் தவிர்ந்துவிண் வழிச்சென் றுர்சிலர். 10028

மசு. அழைப்பொலி முழக்கென அழகு மின்னிடக்
குழைப்பொலி நல்அணிக் குலவ்கள் வில்லிட
உழைப்பொலி யும்கணீர் சாரை மீதுக
மழைப்பெருங் குலம்என வான்வந் தார்சிலர். 10029

மஎ. தலைமிசைத் தாங்கிய கரத்தர் தாரைநீர்
முலைமிசைத் தூக்கிய முகத்தர் மொய்த்துவந்
தலைமிசைக் கடலின்வீழ் அன்னம் போலவன்
மலைமிசைத் தோள்கள்மேல் வீழ்ந்து மாழ்கினுர்.

மஅ. தழுவினர் தழுவினர் தலையும் தாள்களும்
எழுவுயர் புயங்களும் மார்பும் எங்கணும்
குழுவின முறைமுறை கூறுகூறு கொண்
டழுதிலர் உயிர்த்திலர் ஆவி தேர்திலார். 10031

மகூ. வருத்தம்வ தெனில்அது புலவி வைகலும்
பொருத்தமே வாழ்வெனப் பொழுது போக்குவார்
ஒருத்தர்மேல் ஒருத்தர்வீழ்ந் துயிரில் புல்லினுர்
திருத்தமே எனஅவன் சிகரத் தோளின்மேல். 10032

உ.ம. இயக்கியர் அரக்கியர் உரகர் ஏழையர்
மயக்கலில் சித்தியர் விஞ்சை மங்கையர்
முயக்கினர் முறைகெட முயங்கி னர்கடந்
துயக்கிலா அன்புகொண் டெவரும் சோரவே. 10033

உ க. அற்ந்திலை அறமனத் தடைத்த சீதையை
மறந்திலை யோஎன எமக்குன் வாய்மலர்
திறந்திலை விழித்திலை அருளும் செய்திலை
இறந்தனை யோஎன இரங்கி ஏங்கினர், 10034

உ உ. தரங்கநீர் வேலியில் தடித்து வீழ்ந்தென
உரங்களர் மதுகையான் உரத்தின் வீழ்ந்தனள்
மரங்களும் மலைகளும் உருக வாய்திறந்
திரங்கினள் மயன்மகள் இனைய பன்னினாள். 10035

உ ங. அன்னேயோ அன்னேயோ ஆகொடியோர்க் கென்னே நான் அரக்கர் வேந்தன், பின்னேயோ இறப்பதுமுன் பிடித் திருந்த கீருத்ததுவும் பெற்றிலேனே, முன்னேயோ விழுந்ததுவும் முடித்தலையோ படித்தலைவ முகங்காட் டாயோ, என்னேயோ என்னேயோ இராவணனுர் முடிந்ததுவும் இதுவோ பாவம். 10036

உ ச. வெள்எருக்கின் மலர்முடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும்கீழும், எள்இருக்கும் இடன்இன்றி உயிர்இருக்கும் இடம்நாடி இழைத்தவாறே, கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியைக் கடுஞ்சிறையில் வைத்தகாதல், உள்இருக்கும் எனக்கருதி உடல்பிளந்து தடவினவோ ஒருவன்வாளி. 10037

உ ரு. ஆரம்போர் பெருமார்பை அகல்முழைகள் எனத்திறந்தவ் உலகிற்கப்பால், தூரம்போ யினஒருவன் சிலைதுரந்த சரங் களே போரில்தோற்று, வீரம்போய் உரங்குறைந்து வரங் குறைந்து வீழ்ந்தானே ஏறேகெட்டேன். ஓரம்போ உயிர் பருகிற் றிராவணனே மானிடவன் ஊற்றம்ஈதோ 10038

உ சு. காந்தையருக் கணியான சானகியார் பேரழகும் அவர்தம் கற்பும், ஏந்துயுயத் திராவணனுர் காதலும்அச் சூற்பருகை இழந்த மூக்கும், வேந்தர்பிரான் தசரதனுர் பணியினுல் வெங் கானம் விரதம் பூண்டு, போந்ததுவும் கடைமுறைபோய்ப் புரந்தரனுர் பெருந்தவமாய்ப் போயிற்றன்றே. 10039

உ எ. தேவர்க்கும் திசைக்கரிக்கும் சிவனுர்க்கும் அயனுர்க்கும் மெங்கணுற்கும், ஏவர்க்கும் வலியானுக் கென்றுண்டாம் இறு தினை ஏமாப்புற்றேன், யாவர்க்கும் நீஉழந்த அருந்தவத்தின் பெருங்கடற்கும் வரம்ஏன்றுன்ற, காவற்கும் வலியானேர் மானிடனுர் உளர்என்னக் கருதினேனே. 10040

உ அ. அரைகடையிட் டமைவுற்ற கோடிமூன் றுயுப்பேர்
அறிஞர்க்கேயும், உரைகடையிட் டளப்பரிது பேராற்றல்
போராற்றற் குலப்போ வில்லேத். திரைகடையிட் டமைப்
பரிய வரம்என்னும் பாற்கடலைச் சிதைஎன்னும், பிரைகடை
யிட்டழிப்பதணை அறிந்தேனுைதவப்பயனின் பெருமைபார்ப்பேன்

உ கூ. ஆரனுர் உலகியற்கை அறிதற்கார் அவைஏழும் ஏழும்
அஞ்சும், வீரனுர் உடல்துறந்து விண்புக்கார் கண்புக்க வேழ
வில்லார், நாரநாண் மலர்க்கணையான் நாள்எல்லாம் தோள்
எல்லாம் நையஎய்யும், மாரனுர் தனிஇலக்கை அழித்தாரே
மனிதனுர் வரத்தினுலே. 10042

*உ மி. ஆரா அமுதாய் அலைகடலில் கண்வளர்ந்த
நாரா யணன்என் றிருப்பேன் இராமனைநான்
ஓராதே கொண்டகன்ருய் உத்தமனுர் தேவிதனைப்
பாராய்நீ இன்னுடைய மார்பகலம் பட்டதெல்லாம்.

*உ க. என்ற மைத்தனள் ஏங்கி எழுந்தவன்
பொன்ற மைத்த பொருவரு மார்பினைத்
தன்த மைக்கைக ளால்தழு வித்தனள்
நின்ற மைத்துயிர்த் தாள்உயிர் நீங்கினுள். 10044

உ உ. வான மங்கைய ரும்மற்றும் மற்றும்அத்
தான மங்கைய ருந்தவப் பாவலர்
ஆன மங்கைய ரும்அருங் கற்புடை
மான மங்கையர் தாமும் வழுத்தினுர். 10045

உ ங. பின்னர் வீடணன் பேரெழில் தம்முனை
மன்னி முன்னி வரன்முறை யால்மறை
சொன்ன ஈம விதிமுறை யால்தொகுத்
தின்ன னெஞ்சினு டிந்தனத் தேற்றினுன். 10046

உ ச. இந்த னத்தொடு சந்தனம் மேல்படுத்
தந்த மானம் அழகுடன் தான்அமைத்
தெந்த நாமமும் கீழ்உற ஆர்த்திடை
முந்து சங்கொலி ஓங்கி முழங்கிட. 10047

உ ரு. கொற்ற வெண்குடை யோடு கொடிமிடைந்
துற்ற விம்பி விதியின் உடன்படச்
சுற்று மாதர் தொடர்ந்துடன் சூழ்வர
மற்ற வீரன் மதியின் வழங்கினுன். 10048

நசு. கடன்செய் செய்கை முடித்துக் கணவனை
டுடைந்து போன மயன்மக ளோடுடன்
அடங்க வெங்கன லுக்கவி ஆக்கினன்
குடங்கொள் நீரினும் கண்சோர் குமிழியான். 10049

நஎ. மற்றை யோர்க்கும் வரன்முறை யால்வகுத்
துற்ற தீக்கொடுத் துண்குறு நீர்உகுத்
தெற்றை யோர்க்கும் இன்றியான் அல தில்லெனு
வெற்றி வீரன் குரைகழல் மேவினன். 10050

நஅ. வந்து தாழ்ந்த துணைவனை வள்ள லும்
சிந்தை வெந்துயர் தீர்இனித் தெள்ளியோய்
முந்தி ஓது முறைமையு ளோய்எனு
அந்தம் இல்இடர் பாரம் அகற்றினன். 10051

நஎ–வது, மண்டோதரி பலம்பறு படலம் முற்றும்.
ஆகப்படலம் 129-க்கு கவி 10051

நஅ–வது, வீடணன் முடிசூட்டு படலம்

க. வருந்தல் நீதி மனுநெறி யாவையும்
பொருந்து கேள்விப் புலமையி னுய்எனு
அருந்த வப்பய னுல்அடைந் தாற்கறைந்
திருந்த நல்லுரை யோற்கி தியம்பினன். 10052

உ. சோதி யான்மகன் வாயுவின் தோன்றல்மற்
றேதில் வானர வீரரோ டேகிநீ
அதி நான்முகன் ஆக்கிய நூல்முறை
நீதி யோனை நெடுமுடி சூட்டென்றான். 10053

ங. என்று கூறி இளவலோ டியாரையும்
வென்றி வீரன் விடைஅருள் வேலையில்
நின்ற தேவர் நெடுந்திசை யோரொடும்
சென்று தத்தம செய்கை புரிந்தனர். 10054

ச. சூழ் கடல்புண ரும்பல தோயமும்
நீள் முடித்தொகை யும்பிற நீர்மையும்
பாழி நற்றரீ பற்றிய பீடமும்
தாழ்வில் கொற்றத் தமரர்கள் தந்தனர். 10055

ஞ. வாச மாமல ரோன்சொல மான்முகன்
காசு மாநிதி யுங்கொடு கங்கைசூ
டிச னேதமு லோர்வியந் தேத்திடத்
தேசு லாமணி மண்டபம் செய்தனன். 10056

கூ. மெய்கொன் வேத விதிமுறை விண்ணுளோர்
தெய்வ நீர்ப்புனல் ஆடல் திருத்தினர்
ஐயன் ஆணையில் அங்கிளங் கோளரி
கையி னுல்மகு டங்கவித் தான்அரோ. 10057

எ. கரிய குன்று கதிரிணைச் சூடியோர்
எரிம ணித்தவி சிற்பொலிந் தென்னவே
விரியும் வெற்றி இலங்கையர் வேந்தன்அ
அரிய ணைப்பொலிந் தான்தமர் ஆர்த்தெழ. 10058

அ. தேவர் பூமழை சித்தர் முதலினோர்
மேவு காதல் விரைமலர் வேறிலா
மூவ ரோடு முனிவர்மற் றியாவரும்
நாவில் ஆசி நறைமலர் தூவினர். 10059

கூ. முடி புனைந்த நிருதர் முதலவன்
அடி வணங்கி இளவலை ஆண்டையின்
நெடிய காதலி னேற்குறு நீர்மையின்
இடிகொள் சொல்அன லற்கித் யம்பினன். 10060

ம. விலங்க ணுை மிடைதரு தோளினாய்
இலங்கை மாநகர் யாம்வரும் எல்லைநீ
கலங்க லாநெடுங் காவல் இயற்றெனு
அலங்கல் வீரன் அடியிணை எய்தினன். 10061

மக. குரக்கு வீரன் அரசிளங் கோளரி
அரக்கர் கோமக னேடடி தாழ்தலும்
பொருக்கெ னப்புகல் புக்கவற் புல்லிஅத்
திருக்கொள் மார்பன் இனையன செப்பினன். 10062

மஉ. உரிமை மூஉல குந்தொழ உம்பர்தம்
பெருமை நீதி அறன்வழி பேர்கிலா
திருமை யேஅர சாளுதி ஈறிலாத்
தரும சீலனன் றுன்மறை தந்துளான். 10063

மங. பன்னு நீதிகள் பற்பல கூறிமற்
றுன்அ டைந்தவ ரோடுயர் சீர்த்தியே
மன்னி வாழ்கென் றுரைத்தடல் மாருதி
தன்னை நோக்கினன் தாயர்சொல் நோக்கினன்.

கூ அ-வது, வீடணன் முடிசூடு படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 130-க்கு கவி 10064.

ஈக-வது, பிராட்டி திருவடி தொழுபடலம்

க. இப்பு றத்தின்ன செய்துறும் வேலியின்
அப்பு றத்ததை உன்னி அனுமனீத்
துப்பு றச்செய்ய வாய்மணித் தோகைபால்
செப்பு றிப்படி போய்எனச் செப்பினான். 10065

உ. வணங்கி அந்தமில் மாருதி வாரணம்
அணங்கு சேர்கடி காவுசென் றண்மினான்
உணங்கு கொம்புக் குயிர்வரு கீர்எனச்
சுணங்கு தோய்முலை யாட்கிவை சொல்லினான். 10066

ங. ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆழி யான அரக்கனீ ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம். 10067

ச. பாடி னான்மெய்ப் படித்தல மண்டலம்
கூடு சாரிகைக் குப்புற்றுக் கூத்துகின்
ருடி அங்கை இரண்டும் அலங்குறச்
சூடி னின்றனன் குன்றன்ன தோளினான். 10068

ஞ. தலை கிடந்தது தாரணி தாங்கிய
மலை கிடந்தன போன்மணித் தோள்எனும்
அலை கிடந்தன ஆழி கிடந்தென
நிலை கிடந்தது டல்நிலத் தேஎன்றான். 10069

ட. அண்ணல் ஆணையின் வீடண னும்அறக்
கண்ண லாதவன் காதல் தொடர்தலால்
பெண்ண லாது பிழைத்துள தாகும்என்
றெண்ண லாவதொர் பேரில தாம்என்றான். 10070

ண. ஒருக லைத்தனி ஒண்மதி நாளொடும்
வருக லைக்கு வருவது மானுறப்
பொருக லைக்குலம் பூத்தன போன்றன
பருக லுற்ற அமுது பயந்தநாள். 10071

அ. ஆம்பல் வாயும் முகமும் அலர்ந்தன
தேம்பு நுண்ணிடை தேயத் திரள்முலை
ஏம்பல் ஆசைக் கிரட்டிவந் தெய்தினாள்
பாம்பு கானற் பனிமதிப் பான்மையாள். 10072

கூ. புந்தி யோபே ருவகைப் பொருமலோ
உந்தி யோங்கும் ஒளிவளைத் தோள்களோ
சிந்தி ஓடு கலியுடைத் தேர்கொலோ
முந்தி ஓங்கின யாவை முலைகொலோ. 10073

ம. குனித்த கோலப் புருவங்கள் கொம்மைவேர்
பனித்த கொங்கை மழலைப் பனிமொழி
நுனிப்ப தொன்றுய் நுவல்வதொன் றுயிஞுள்
கனிக்க வின்களி கள்ளினில் காட்டுமால். 10074

மக. அனையள் ஆகி அனுமனை நோக்கிஞுள்
இனைய தின்னதி யம்புவ தென்பதோர்
நினைவி லாமை நெடிதிருந் தாள்நெடு
மனையின் மாசு துடைத்த மனத்திஞுள். 10075

மஉ. யாதி தற்கொன் றியம்பலம் என்பது
மீது யர்ந்த உவகையின் விம்மலோ
தூது பொய்க்கும்என் றுரைனச் சொல்லிஞுன்
ற்தி வித்தகன் நங்கை நிகழ்த்திஞுள். 10076

மங. மேக்கு நீங்கிய வெள்ள உவகையால்
ஏக்க முற்றிருன் றியம்புவ தியாதென
நோக்கி நோக்கி இருந்தனன் நொந்துளேன்
பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ. 10077

மச. முன்னம் நீக்குவன் மொய்சிறை என்றநீ
பின்னை நீக்கி ஒகையும் பேசினை
என்ன பேற்றினை ஈகுவன் என்பதை
உன்னி உன்னி உரைமறந் தோவினேன். 10078

மடு. உலகம் மூன்றும் உதவற் கொருதனி
வீலையி லாமையின் முன்னினன் மேலவை
நிலையி லாமை நினைந்தனன் நின்னைஎன்
தலையி ஞல்தொழ வந்தகுந் தன்மையோய், 10079

மசு. ஆதலான் ஒன்று உதவுதல் ஆற்றலேன்
யாது செய்வதென் றெண்ணி இருந்தனன்
வேத நாயகன் மேவிய செய்திடும்
தூத என்இனிச் செய்திறம் சொல்என்ருள். 10080

மஎ. எனக்க ளிக்கும்வரம் எம்பி ராட்டிநின்
மனக்க ளிக்கும்மற் றுன்னீ அம்மானவன்
தனக்க ளிக்கும்ப ணியினும் தக்கதோ
புனக்க ளிக்குல மாமயில் போன்றுளாய். 10081

மஅ. என உரைத்துத் திரிசடை யாள்எம்மோய்
மனீ யினில்சுடர் மாமுக மாட்சியாள்
தனீ ஒழித்திவ் அரக்கியர் தங்களீ
வினீ யினில்சுட வேண்டுவன் யான்என்றுன். 10082

மஉ. உரை அலாஉரை உன்னீ உரைத்துராய்
விரைய ஓடி விழுங்குவன் என்றுளார்
வரைசெய் மேனியை வள்ளுகி ரால்பிளந்
திரைசெய் வேன்மற லிக்கினி என்னுமால். 10083

உம. சூட்டீர் குறைத்துக் குருதி குடித்துவந்
திட முருக்கிஇட் டுண்குவன் என்றலும்
அடல் அரக்கியர் அன்னீநின் பாதமே
விடல மெய்ச்சரண் என்று வெருவலும். 10084

உக. அன்னீ அஞ்சன்மின் அஞ்சன்மின் நீர்எனை
மன்னு மாருதி மாமுக நோக்கிவே
றென்ன தீமை இவர்இழைத் தாரவன்
சொன்ன சொல்லின தல்லது தூய்மையோய், 10085

உஉ. யான் இழைத்த வினீயினின் இவ்விடர்
தான் அடுத்தது தாயினும் அன்பினுய்
கூனி யிற்கொடி யார்அல்ல ரேஇவர்
போன அப்பொருள் போற்றலீ புந்தியோய். 10086

உங. எனக்கு நீஅருள் இவ்வரம் தீவினீ
தனக்கு வாழ்விடம் ஆய சமுக்கியர்
மனக்கு நோய்செயல் என்றனள் மாமதி
தனக்கு லாமதி தந்த முகத்தினுள். 10087

உச. என்ற போதில் இறைஞ்சினின் றெம்பிரான்
தன்து ணீப்பெருந் தேவி தயாஎனை
நின்ற காலை நெடியவன் வீடணை
சென்று தாநம்தம் தேவியைச் சிரொடும். 10088

உடு. என்னுங் காலை இருளும் வெயிலும்கான்
மின்னு மோலி இயற்கைய வீடணு
உன்னுங் காலைக் கொணர்திஎன் றேதுஅப்
பொன்னின் கால்தளிர் சூடினன் போயினன். 10089

*உசு. வேண்டிற்று முடிந்த தன்றே வேதியர் தேவன்நின்னைக்
காணடற்கு விரும்பு கின்றுன் உம்பரும் காண வந்தார்
பூண்டகக் கோலம் வல்லே புனைந்தனை வருத்தம் போக்கி
ஈண்டுக்கொண்டணை தி என்றுன் எழுந்தருள் இறைவி என்றுன்.

உஎ. யான்இவண் இருந்ததன்மை இமையவர் குழுவும் எங்கள்
கோனும்அம் முனிவர்தங்கள் கூட்டமும் குலத்துக் கேற்ற
வான்உயர் கற்பின்மாதர் ஈட்டமும் கண்டால் மாட்சி
மேனனி கோலங் கொள்ளல் விழுமிய தன்றுவீர. 10091

உஅ. என்றனள் இறைவிகட்ட இராக்கதர்க் கிறைவன்நீதிக்
குன்றன தோளி னுன்தன் பணிஇனிக் குறிப்பென் என்றுன்
நன்றென நங்கை நேர்ந்தாள் நாயகக் கோலம் கொள்ளச்
சென்றனர் வான நாட்டுத் திலோத்தமை முதலர் சேர்ந்தார்.

உக. மேனகை அரம்பை மற்றை உருப்பசி வேறும் உள்ள
வானக நாட்டு மாதர் யாரும்மஞ் சனத்துக் கேற்ற
நானெய் பூட்பட் டாய நறுமலர் உறையர் தாங்கப்
போனகம் துறந்த தையல் மருங்குற நோக்கிப் புக்கார். 10093

*நம. காணியைப் பெண்ணைக் கெல்லாம் கற்பினுக் கமைந்த
மொற்பார். ஆணியை அமுதின்வந்த அமுதினை அறத்தின்
தாயைச். சேண்உயர் மறையை எல்லாம் முறைசெய்த செல்
வன் என்னு, வேணியை அரம்பை மெல்ல விரன்முறை
வகிர்ந்து விட்டாள். 10094

நக. பாகமர்ந் தமிர்து பல்கும் பவளவாய்த் தரளப் பத்தி
சேகர விளக்கி நானம் நீட்டிமண் சேர்ந்த காசை
வேகடம் செய்பு மாறின் மஞ்சன விதியின் வேதத்
தோகைமங் கலங்கள் பாட ஆட்டினர் உம்பர் மாதர். 10095

நஉ, உருவிலை பவள வல்லி பால்நுரை உண்ட தென்ன
மருவிலை கலவை ஊட்டிக் குங்கும முலையின் ஆட்டிக்
கருவிலை மலரிள் காட்சிக் காசறு தூசு காமன்
திருவிலை அல்குற் கேற்ப மேகலை தழுவச் செய்தார். 10096

நந. சந்திரன் தேவி மாரில் தகையுறு தரளப் பைம்பூண்
இந்திரன் தேவிக் கேற்ற இயைவன பூட்டி யாணர்ச்
சிந்துரப் பவளச் செவ்வாய்த் தேம்பசும் பார்கும் தீற்றி
மந்திரத் தயினி நீரால் வாழ்த்தினர் காப்பும் இட்டார். 10097

நச. மண்டல மதியின் நாப்பண் மான்இருந் தென்ன மானம்
கொண்டனர் ஏற்றி வான மடந்தையர் தொடர்ந்து கூட
உண்டைவா னரரும் ஒள்வாள் அரக்கரும் புறஞ்சூழ்ந் தோட
அண்டர்நா யகன்பால் அண்ணல் வீடணன் அருளில்சென்றான்.

*நரு. எச்சில்என் உடல்உயிர் ஏகிற் றேறினி
நச்சிலை என்பதோர் நவையி லாள்எதிர்
பச்சிலை வண்ணமும் பவள வாயுமாய்க்
கைச்சிலை ஏந்திநின் றூனைக் கண்ணுற்றாள். 10099

நசு. மீனமே தரம்பையர் சூழ வந்துளாள்
போனபே ருயிரீனைக் கண்ட பொய்யுடல்
தான்அது கவர்வுறும் தன்மைத் தாம்என
ஆனனங் காட்டுற அவனி எய்தினாள். 10100

நஎ. பிறப்பினும் துணைவனைப் பிறவிப் பேரிடர்
துறப்பினும் துணைவனைத் தொழுது நான்இனி
மறப்பினும் நன்றினி மாறு வேறுவீழ்ந்
திறப்பினும் நன்றென ஏக்கம் நீங்கினாள். 10101

நஅ. சிலைமுங் சாட்டிஎன் கணவன் சேவகக்
கோலமுங் காட்டிஎன் குணமுங் காட்டிஇஞ்
ஞாலமுங் காட்டிய கவிக்கு நாளுமுக்
காலமும் காட்டுமே கொல்என் கற்பென்றாள். 10102

*நகூ. இப்புறத் நிமையவர் முனிவர் ஏனையர்
துப்புறச் சிவந்தவாய்த் தெய்வத் தோகையர்
மூப்புறத் துலகினும் எண்ணில் முற்றிலார்
ஒப்புறக் குவிந்தனர் ஓகை கூறுவார். 10103

சம. அருங்குலக் கற்பினுக் கணியை அண்மினீர்
மருங்குபின் முன்செல வழியின் றென்னலாய்
நெருங்கினர் நெருங்குழி நிருதர் ஓச்சலால்
கருங்கடல் முழக்கெனப் பொலிந்த கம்பலை. 10104

சக. அவ்வழி இராமனும் அலர்ந்த தாமரைச்
செவ்வியாள் முகம்கொடு செயிர்த்து நோக்குரு
இவ்வொலி யாவதென் றியம்பு கிற்றிலைக்
கவ்வையின் முனிவரர் கழறி னூர்அரோ. 10105

சஉ. முனிவர்கள் வாசகம் கேட்பு ருதமுன்
நனிஇதழ் துடித்திட நகைத்து வீடணன்
தனைஎழ நோக்கிநீ தகாத செய்தியோ
புனிதநூல் கற்றுணர் புந்தியோய் என்றான். 10106

சஙு. கடுந்திறல் அமர்க்களம் காணும் ஆசையால்
நெடுந்திசைத் தேவரும் நின்ற யாவரும்
அடைந்தனர் உவகையின் அணிகின் ரூர்களைக்
கடிந்திட ஆர்சொனார் கருது நூல்வல்லார். 10107

*சச. பரசுடைக் கடவுள் நேமி பண்ணவன் பதுமத் தண்ணல்
அரசுடைத் தெரிவை மாரை இன்றியே அமைவ துண்டோ
கரைசெயற் குரிய தேவர் ஏனையோர் காண்கின் ரூரை
விரைசுறின் விலக்கு வாரோ வேறுளோர்க் கென்கொல் வீரா.

ஆதலால் அரக்கர் கோவே அடுப்பதன் றுனக்கும் இன்னே
சாதுரை மாந்தர் தம்மைத் தடுப்பதென் றருளிச் செங்கண்
வேதநா யகன்தான் நிற்ப வெய்துயிர்த் தலக்கண் எய்திக்
கோதிலா மனமு மெப்பும் குலுங்கினன் குணங்கள் தூயோன்.

சசு. அருந்ததி அனைய நங்கை அமர்க்களம் அணுகி ஆடல்
பருந்தொடு கழுகும் பேயும் பசிப்பிணி தீரு மாறும்
விருந்திடும் வில்லின் செல்வ விழாவணி விரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணும் நெஞ்சும் களித்திட விருப்பம் உற்றாள்.

*சஎ. கற்பினுக் கரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக் கணியினைப் புகழின் யாக்கையைத்
தற்பிறந் தருள்புரி தருமம் போலியை
அற்பினத் தலைவனும் அமைய நோக்கினான். 10111

சஅ. சுணங்குறு தூணமுலை முன்பிற் றூங்கிய
அணங்குறு நெடுங்கணீர் ஆறு வார்வுற
வணங்கியல் மயிலினைக் கற்பின் வாழ்வினைப்
பணங்கிளர் அரவென முனிவன் பண்ணவன். 10112

சகூ. ஊண்திறம் உவந்தீனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம் பரக்கன் மாண்நகர்
ஆண்டுறைந் தடங்கினை அச்சம் தீர்ந்திவண்
மீண்டதென் இவள்எனை விரும்பும் என்பதோ. 10113

ருஏ. உன்னைமீட் பான்பொருட் டுவரீ தூர்த்தொளிர்
மின்னைமீட் டுறுபகை அரக்கர் வேரற
பன்னிமீட் டுறுபகை க்டந்தி லேன்பழி
என்னைமீட் பான்பொருட் டிலங்கை எய்தினேன். 10114

ருக. மருந்தினும் இனியமன் உயிரின் வான்றசை
அருந்தினை யேறற வமைய உண்டியே
இருந்தனை யேனினி எமக்கும் ஏற்பன
விருந்துள வோஉரை வெறுமை நீங்கினுய். 10115

ருஉ. கல்தினில் பிறந்தமா மணியில் காந்துறு
நலத்தினில் பிறந்தது நடந்து நன்மைசால்
குலத்தினில் பிறந்திலை கோளில் கிட்டம்பொன்
நிலத்தினில் பிறந்தமை நிறப்பி னுப்அரோ. 10116

ருங. பெண்மையும் பெருமையும் பிறப்பில் கற்பெனும்
திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
உண்மையும் நீளனும் ஒருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததால். 10117

ருச. அடைப்பர்ஐம் புலன்களீ ஒழுக்க மாணியாய்ச்
சடைப்பரந் தவிர்ந்ததோர் தன்மை மாதவம்
படைப்பர்வந் திடைஒரு பழிவந் தால்அது
துடைப்பர்தம் உயிரொடும் குலத்தில் தோகையார்.

ருரு. ஏதியான் இயம்புவன் உணர்வை ஈடறச்
சேதியா னின்றதுன் ஒழுக்கச் செய்தியால்
சாதியால் அன்றெலில் தக்க தோநெறி
போதியால் என்றணன் புலவர் புந்தியான். 10119

ருசு. முனிவரும் அமரரும் மற்று முற்றிய
நினைவரு மகளிரும் நிருதர் என்றுளார்
எனைவரும் வானரத் தெவரும் வேறுளார்
அனைவரும் வாய்திறந் தரற்றி னுர் அரோ. 10120

ருள. கண்ணினை உதிரமும் புனலும் கான்றுக
மண்ணினை நோக்கிய மலரின் வைகுவாள்
புண்ணினைக் கோலுறுத் தனைய பொம்மலாள்
உள்ளினை வோடினின் றுயிர்ப்பு வீங்கினாள். 10121

ருஅ. பருந்தடை சுரத்திடைப் பருகு நீர்நசை
வருந்தருந் துயரினால் மாளல் உற்றமான்
இருந்தடங் கண்டதின் எய்து முவகைப்
பெருந்தடை உற்றெனப் பேதுற் றுள்அரோ, 10122

ருக. உற்றுளின் றுலகினை நோக்கி யோடரீ
முற்றுறு நெடுங்கணீர் ஆலி மொய்த்துக
இற்றது போலும்நான் இருந்து பெற்றபே
றுற்றதால் இன்றவம் என்றென் றேதுவாள். 10123

சுய. மாருதி வந்தனைக் கண்டு வள்ளல்தீ
சாருதி ஈண்டெனச் சமையச் சொல்லினுன்
யாரினும் மெய்மையான் இசைத்த தில்லையோ
சோரும்நான் நிலைஅவன் தூதும் அல்லனே. 10124

சுக. எத்தவம் என்நலம் என்தன் கற்புநான்
இத்தனை காலமாய் உழந்த ஈதெலாம்
பித்தென லாயவம் பிழைத்த தாம்அன்றே
உத்தம நின்மனத் துணர்ந்தி லாமையால். 10125

சுஉ. பார்க்கெலாம் பத்தினி பதுமத் தோனுக்கும்
பேர்க்கெலாம் சிந்தையள் அல்லள் பேதையேன்
ஆர்க்கெலாம் கண்ணவன் அன்றென் றுள்இனித்
தீர்க்கலாம் தகையதோ தெய்வம் தேறுமோ. 10126

சுங. பங்கையத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ, 10127

சுச. ஆதலில் புறத்துநான் ஆருக் காகனன்
கோதறு தவத்தினைக் கூறிக் காட்டுவேன்
சாதலில் சிறந்ததொன் றில்லைத் தக்கதே
வேதனின் பணிஇது விதியும் என்றனள். 10128

கூஇ. இளையவன் தனைஅழைத் திடுக தீஎன
வளைஒலி முன்கையாள் வாயில் கூறினள்
உளைவுறு மனத்தவற் குலகம் யாவைக்கும்
களைகளைத் தோளவன் கண்ணில் கூறினன். 10129

கூஈ. ஏங்கிய பொருமலின் இழிகண் ணீரினன்
வாங்கிய உயிரினன் அனைய மைந்தனும்
ஆங்கெரி விதிமுறை அமைவித் தான்அவள்
பாங்குற நடந்தனள் பதுமப் போதினுள். 10130

கூஉ. தீயினை அருகுறச் சென்று தேவர்க்கும்
தாய்தனி குறுகலும் தரிக்க லாமையால்
வாய்திறந் தரற்றின மறைகள் நான்கொடும்
ஐவில்நல் அறமும்மற் றுயிர்கள் யாவையும். 10131

கூஊ. வலம்வரும் அளவையில் மறுகி வான்முதல்
உலகமும் உயிர்களும் ஓலம் இட்டன
அலமரல் உற்றன அலறி ஐயனைச்
சலம்இது தக்கில தென்னச் சாற்றினர். 10132

கூஎ. இந்திரன் தேவியை முதல ஏழையர்
அந்தர வானின்நின் றரற்று கின்றவர்
செந்தளிர்க் கைகளால் சேயரிப் பெருஞ்
சுந்தரக் கண்களை எற்றித் துள்ளினர். 10133

எஅ. நடுங்கினர் நான்முகன் முதல நாயகர்
படங்குறைந் ததுபடி சுமந்த பாம்புவாய்
விடம்பரந் துளஎன வெதும்பிற் றுல்உல
கிடம்இரீந் தனசுடர் கடல்கள் ஏங்கின. 10134

எக. கனத்தினுல் கடைந்தபூண் முலைஅக் கைவளை
மனத்தினுல் வாக்கினுல் மறுவுற் றேன்எனில்
சினத்தினுல் சுடுதியால் தீச்செல் வாளன்றுள்
புனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினுள்.

எஉ. நீந்தரும் புனல்இடை நிவந்த தாமரை
ஏய்ந்ததன் கோயிலே எய்து வாள்எனப்
பாய்ந்தனள் பாய்தலும் பாலில் பஞ்செனத்
தீய்ந்ததவ் எரிஅவள் கற்பின் தீயினுல். 10136

எக. அழுந்தின நங்கையை அங்கை யால்எடுத்
தெழுந்தனள் அங்கம்வெங் தெரியும் மேனியான்
தொழுங்கரத் துணையினன் சுருதி ஞானத்தின்
கொழுந்தினைப் பூசலிட் டரற்றும் கொள்கையான்.

எச. அஞ்சினன் அஞ்சினன் ஐய அஞ்சினன்
பஞ்சிவர் மெல்லடிப் பதுமத் தாள்தன்மேல்
மிஞ்சிய கோபத்தால் விளையும் ஈதெலாம்
தஞ்சமோ மறைமுதல் தலைவ ஈதென்றான். 10138

எடு. ஊடின சீற்றத்தால் உதித்த வேர்களும்
வாடின இல்லிமற் றுணர்த்து மாறுண்டோ
பாடின வண்டொடும் பணித்த தேனெடும்
சூடின மலர்கணீர் தோய்ந்த போன்றவால். 10139

எசு. திரிந்தன உலகமும் செல்வை நின்றன
பரிந்துவர் உயிர்எலாம் பயத்தின் நீங்கின
அருந்ததி முதலிய மகளிர் ஆடுதல்
புரிந்தனர் நாணமும் பொறையும் நீங்கினார். 10140

எஎ. கனிந்துயர் கற்பெனுங் கடவுள் தீயைநீ
நினைந்திலை என்வயி நீக்கி ஞாயென
வினைந்தனை அங்கியீ மனத்தி னுள்எனை
முளிந்தனை யாம்என முறையிட் டான்அரோ. 10141

எஅ. இன்னதோர் காலையில் இராமன் யாரைநீ
என்னைநீ இயம்பிய தெரியுள் தோன்றிஇப்
புன்மைசால் ஒருத்தியைச் சுடாது போற்றினாய்
அன்னதார் சொல்லுஈ தறைதி யால்என்றான். 10142

எகூ. அங்கியான் என்னைஇவ் அன்னை கற்பெனும்
பொங்குவெங் தீசுடப் பொறுக்கி லாமையால்
இங்குனைந் தெனைஇ யற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ எவர்க்கும் சான்றுளாய். 10143

அம. வேட்பதும் மங்கையர் விலங்கி னுள்எனில்
கேட்பதும் பல்பொருட் கையங் கேடற
மீட்பதும் என்வயின் என்னும் மெய்ப்பொருள்
வாட்பெருந் தோளினாய் மறைகள் கூறுமால். 10144

அக. ஐயுறு பொருள்களே அரசின் மாசொரீஇக்
கையுறு நெல்லிஅங் கணியில் காட்டும்என்
மெய்யுறு கட்டுரை கேட்டு மீட்டியோ
பொய்யுரு மாருதி உரையும் போற்றலாய் 10145

அஉ. தேவரும் முனிவரும் திரிவ நிற்பவும்
மூவகை உலகமுங் கண்கள் மோதினின்
ரூஎனக் கேட்கிலை அறத்தை ஈக்கிவே
றேவம்என் ரொருபொருள் யாண்டு காண்டியோ.

அங. பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
செய்யுமே பொறைஅற நெறியில் செல்லுமே
உய்யுமே உலகிவள் உணர்வு சிறிஞல்
வையமேல் மலர்மிசை அயனும் மாயுமே. 10147

அச. பாடுறு பன்மொழி இனைய பன்னிநின்
ரூடுறு தேவரோ டுலகம் ஆர்த்தெழச்
சூடுறு மேனிய அங்கி தோகையை
மாடுறக் கொணர்ந்தனன் வள்ளல் கூறுவான். 10148

அரு. அழிப்பிலை சான்றுநீ உலகுக் காதலால்
இழிப்பிலை சொல்லிவந் திவளே யாதும்ஓர்
பழிப்பிலள் என்றனே பழியும் இன்றினிக்
கழிப்பிலள் என்றனன் கருணை உள்ளத்தான். 10149

*அசு. உணர்த்து வாய்உண்மை ஒழிவின்று காலம்வந் துளதால், புணர்த்து மாயையில் பொதுவற நின்றவை புராண. இணர்த்து ழாய்த்தொங்கல் இராமற்கென் றிமையவர் இசைப் பத். தணப்பில் தாமரைச் சதுமுகன் உரைசெயச் சமைந் தான். 10150

அள. மன்னர் தொல்குலத் தவதரித் தனைஒரு மனிதன்
என்ன உன்னினை உன்னைநீ இராமகேள் இதனைச்
சொன்ன நான்மறைத் துணிந்தஅத் துணிவு
நின்ன லாதிலை நின்னில்வே றுள்ளன நெடியோய். 10151

அஅ. பகுதிஎன் ரூளதி யாதினும் பழையது பயந்த
விகுதியால் வந்த வினைவுமற் றதற்குமேல் நின்ற
புகுதியா வர்க்கும் அரியஅப் புருடனும் நீயும்
மிகுதி உன்பெரு மாயையி னுல்வந்த வீக்கம். 10152

அசு. முன்பு பின்பிரு புடைஎனும் குணிப்பரு முறைய
தன்பெ ருந்தன்மை தான்தெரி யாமறைத் தலைய
மன்பெ ரும்பர மாற்பம்என் றுரைக்கின்ற மாற்றம்
அன்ப நின்னைஅல் லால்மற்றிங் காரையும் அறையா.

கூடி. எனக்கும் எண்வகை ஒருவற்கும் இமையவர்க் கிறைவன்
தனக்கும் பல்பெரு முனிவர்க்கும் உயிருடன் தரீஇய
அனைத்தி னுக்கும்மீ யேபரம் என்பதை [1]அறிவார்
விளைத்து டக்குடை வீட்டருந் தனைநின்று மீள்வார்.

கூக. என்னைத் தான்முதல் ஆகிய உருவந்த எவையும்
முன்னைத் தாய்தந்தை எனும்பெரு மாயையின் மூழ்கித்
தன்னைத் தான்அறி யாமையில் சலித்ததச் சலம்தீர்ந்
துன்னைத் தாய்என உணர்வது முற்றுவித் தொழிந்த.

கூஉ. ஐயைஞ் சாகிய தத்துவந் தெரிந்தறிந் தவற்றின்
மெய்யஞ் சாவகை மேல்நின்ற நினக்குமே லீயோர்
பொய்யஞ் சார்வில தென்னும்ஈ தருமறை புகலும்
வய்யஞ் சான்றிலைச் சான்றுக்குச் சான்றிலை வழுக்கில்.

கூங. அளவை யால்அளந் தாம்என்றென் றறிவுறும்அமைதி
உளவை யாவையும் உனக்கிலை உபநிட தத்துள்
களவை ஆய்ந்துறத் தெரிந்திலை தாயினும் கண்ணுல்
துளவை யாய்முடி மாயவன் உளன்எனத் துணியும்.

கூச. அரணம் என்றுள துன்னைவந் தறிவுகா ணுமற்
கரணம் அவ்வறி வைக்கடந் தகல்வரி தாக
மரணம் தோற்றம்என் றிவற்றிடை மயங்குறும் மற்றுன்
சரணம் அல்லதோர் சரண்இல்லை அன்னவை தவிர்ப்பான்.

தோற்றம் என்பதொன் றுனக்கில்லை நினக்கொன் றுதோற்றும்
ஆற்றல் சால்முகப் பருதிமற் றதனுளான் மாறக்
காற்றை முன்னுடைப் பூதங்கள் அவைசென்று கடைக்கால்
வீற்று வீற்றுற வீவுறு வீளன்றும் விளியாய். 10159

கூசு. மின்னைக் காட்டுதல் போல்வந்து விளியுமே உலகம்
தன்னைக் காட்டவும் தருமத்தை நாட்டவும் தனியே
என்னைக் காட்டுதி இறுதியுங் காட்டுதி எனக்கு
முன்னைக் காட்டிலை ஒளிக்கின்று மிலைமறை உரையால்.

[பிரதி] 1. அறியார்.

கூஎ. என்உருக் கொண்டிவ் வுலகினை ஈனுதி இடையே
உன்உருக் கொண்டு புகுந்துனின் றேம்புதி உமைகோன்
தன்உருக் கொண்டு துடைத்திமற் றதுதனி அருக்கன்
முன்உருக் கொண்டு பகற்செயும் தரத்தினை முதலோய். 10161

கூஅ. ஓங்கா ரப்பொரு ளோய்உனை உணர்வுறும் உரவோர்
ஓங்கா ரப்பொருள் என்றுணர்ந் திருவினை உருப்போர்
ஓங்கா ரப்பொரு ளாம்என்றென் றூழிக்ண் டாலும்
ஓங்கா ரப்பொருள் மெய்ப்பொருள் என்கிலர் உரவோர். 10162

கூக. இனைய தாகலின் எம்மைமூன் றுலகையும் ஈன்றிம்
மனையின் மாட்சியை வளர்த்தனம் மோயினை வாளா
முனியல் என்றது முடித்தனன் முந்துநீர் முளைத்த
சினையின் வந்தரும் பவுதிகம் அனைத்தையும் செய்தோன். 10163

ஈ. என்னு மாத்திரத் தேறமர் கடவுளும் இசைத்தான்
உன்னினீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால் உரவோய்
முன்னை ஆகிய மூர்த்திநீ மூவகை உலகின்
அன்னை சீதையாம் மாதுனின் மார்பின்வந் தமைந்தாள். 10164

ஈக. துறக்குந் தன்மையள் அல்லளால் தொல்லைஎவ் உலகும்
பிறக்கும் மென்மையிற் றன்மையிப் பெய்வளை பிழைக்கின்
இறக்கும் பல்உயிர் இராமன்நீ இவள்திறத் திகழ்ச்சி
மறக்கும் தன்மைய என்றனன் வரதர்க்கும் வரதன். 10165

ஈஉ. பின்னும் நோக்கினுன் பெருந்தகைப் புதல்வனைப் பிரிந்த
இன்ன லால்உயிர் துறந்திருந் துறக்கத்துள் இருந்த
மன்ன வற்சென்று கண்டுனின் மைந்தனை தெருட்டி
முன்னை வன்துயர் நீக்குதி என்பது முறையால். 10166

ஈஊ. என்ற வாசகம் எறுழ்வலித் தோளினுன் இயம்ப
மன்றல் தங்கிய மலரவன் வாசவற் கூவித்
துன்று தாரினுய் சுரருடன் துருவினை தொடரச்
சென்று மற்றவற் றருகென வணங்கினன் சென்றுன். 10167

ஈஎ. ஆதி யான்பணி அருள்பெற்ற அரசருக் கரசன்
காதல் மைந்தனைக் காணிய வந்ததோர் கருத்தால்
பூத லத்திடை புக்கனன் புகுதலும் பொருவில்
வேத வேந்தனும் அவன்மலர்த் தாளினை வீழ்ந்தான். 10168

ாடு. வீழ்ந்த மைந்தனை எடுத்துத்தன் விலங்கலா கத்தில்
ஆழ்ந்த ழுந்திடத் தழுவிக்கண் அருவிநீர் ஆட்டி
வாழ்ந்த சிந்தையன் மனங்களும் களிப்புற மன்னன்
போழ்ந்த துன்பங்கள் புறப்பட நின்றிவை புகன்ருன். 10169

அன்று கைகயன் மகள்கொண்ட வரம்என்னும் அயில்வேல்
இன்று காறும்என் இதயத்தின் இடைநின்ற தென்னைக்
கொன்று நீங்கில திப்பொழு தகன்றதுன் குலப்பூண்
மன்ற லாகமா மரகதத் தாணியின் வாங்க. 10170

ாஎ. மைந்த ரைப்பெற்று வானுயர் தோற்றத்து மலர்ந்தார்
சுந்த ரப்பெருந் தோளினுய் என்துணைத் தாளின்
பைந்து கட்களும் ஒக்கிலர் ஆம்எனப் படைத்தாய்
உய்ந்த வர்க்கருங் துறக்கமும் உயர்வும்பெற் றுயர்ந்தேன். 10171

ாஅ. பண்டு நான்தொழும் தேவரும் முனிவரும் பாராய்
கண்டு கண்டெனைக் கைத்தலங் குவிக்கின்ற காட்சி
புண்ட ரீகத்துப் புராதனன் தன்னெடும் பொருந்த
அண்ட மூலத்தொர் ஆசனத் திருத்தினை அழக. 10172

ாகூ. என்று மைந்தனை எடுத்தெடுத் திறுகுறத் தழுவிக்
குன்று போன்றுள தோளினுன் சீதையைக் குறுகத்
தன்று ணைக்கழல் வணங்கலும் கருணையால் தழுவி
நின்று மற்றிவை நிகழ்த்தினுன் நிகழ்த்தரும் புகழோன். 10173

ாகo. நங்கை மற்றுநின் கற்பினை உலகுக்கு நாட்ட
அங்கி புக்கிடன் றுணர்த்திய அதுமனத் தடையேல்
சங்கை உற்றவர் தேறுவ துண்டது சரதம்
கங்கை நாடுடைக் கணவனை முனிவெனக் கருதேல் 10174

பொன்னைத் தீயிடைப் பெய்வதப் பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மனக்கொளத் தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசிஎன் றுலகில்
பின்னைக் காட்டுவ தருமைஎன் றெண்ணியப் பெரியோன்.

ாகஉ. பெண் பிறந்தவர் அருந்ததி யேமுதல் பெருமைப்
பண் பிறந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்
மண் பிறந்தகம் உனக்குநீ வானின்றும் வந்தாய்
எண் பிறந்தினின் குணங்களுக் கினிஇழுக்கில்லை. 10176

ஈகஙு. எனக்கும் எண்வகை முனிவர்க்கும் இமையவர் உலகம்
தனக்கும் மற்றிவள் தாய்என மனக்கொளத் தகுதி
மனத்தின் யாவர்க்கு மறுவறுத் திடும்இவள் மலராள்
புனத்து ழாய்முடிப் புரவலன் நீஙின்ற புகழோய்.

ஈகச. என்னச் சொல்லிஅ ஏந்திழை திருமனத் தியாது
முன்னச் செய்ததோர் முனிவின்மை மனக்கொள உவந்தான்
பின்னச் செம்மல்அவ் இளவலே உள்ளன்பு பிணிக்கத்
தன்னைத் தான்எனத் தழுவினன் கண்கள்நீர் ததும்ப.

ஈகடு. கண்ணில் நீர்ப்பெருந் தாரைமற் றவன்சடைக் கற்றை
மண்ணில் த்தம்ஓத் திறிதரத் தழிஇஙின்று ைவந்த
எண்ணில் நீக்கரும் பிறவியும் என்நெஞ்சி லிறந்த
புண்ணும் நீக்கினை உமையனைத் தொடர்ந்துடன் போந்தாய்.

ஈகசு. புரந்தரன் பெரும் பகைஞனைப் போர்வென்ற துன்றன்
வரம்பு யர்ந்ததோள் ஆற்றலே தேவரும் பிறரும்
நிரந்த ரம்புகல் கின்றது நீஇந்த உலகின்
அரந்தை வெம்பகை துடைத்தற நிறுத்தினை ஐய.

ஈகள. எள்று பின்னரும் இராமனை யான்உனக் கிவை
தொன்று கூறுதி உயர்குணத் தோய்என அனையான்
சென்று வானிடைக் கண்டிடர் தீர்வன்என் றிருந்தேன்
இன்று காணப் பெற்றேன் இனிப்பெறுவ தென்என்றான்.

ஈகஅ. ஆயினும் உனக் கமைந்ததான் றுரைஎன அழகன்
தீயள் என்றுநீ துறந்தனன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந் தெடுத் தழைத்தன உலகெலாம் வழுத்தி.

ஈகக. வரத கேள்எனத் தயரதன் உரைசெயான் மறலில்
பரதன் அன்னது பெறுகதான் முடியினைப் பறித்திவ்
விரத வேடமற் றுதவிய பாவிமேல் விளிவு
சரதம் நீங்கில தாம்என்றான் தழீஇயகை தளர். 10183

ஈஉ0. ஊன் பிழைக்கிலா உயிர்நெடி தளிக்கநீள் அரசை
வான் பிழைக்கிது முதல்எனத் தளர்வதே மதித்த
யான் பிழைத்ததல் லால்எனை ஈன்றளம் பிராட்டி
தான் பிழைத்ததுண் டோஎன்றான் அவன்சலம் தவிர்ந்தான்.

*ாஉக. எவ்வரங்களும் கடந்தவன் அப்பொருள் இசையத்
தெவ்வரம்புறு கானிடைச் செலுத்தினுட் கீய்ந்த
அவ்வரங்களும் இரண்டவை யாற்றினுற் களித்த
இவ்வரங்களும் இரண்டென்றூர் அமரரும் இரங்கி. 10185

ாஉஉ. வரம்இரண் டளித் தறகனே இளவலே மலர்மேல்
விரவு பொன்னினே மண்ணிடை நிறுத்திவிண் இடையே
உரவு மானமீ தேகினன் உம்பரும் உலரும்
பரவு மெய்யினுக் குயிர்அளித் துறுபுகழ் படைத்தோன்,

ாஉங. கோட்டு வார்சிலைக் குரிசிலே அமரர்தங் குழாங்கள்
மீட்டும் நோக்குறு வீரனே வேண்டுவ வரங்கள்
கேட்டி யால்என அரக்கர்கள் கிளர்பெருஞ் செருவில்
வீட்ட மாண்டுள குரங்கெலாம் எழுகென விளம்பி. 10187

ாஉச. பின்னும் ஓர்வரம் வானரப் பெருங்கடல் பெயர்ந்து
மன்னும் அவ்வனம் மால்வரைக் குலங்கள்மற் றவர்கள்
துன்னி டங்கள்தேன் காய்கனி கிழங்கொடு துற்றி
மின்னு னீள்வர வாகமேல் விளம்பிடும் என்றான். 10188

ாஉடு. வரந்தரு முதல் மழுவலான் முனிவரர் வானோர்
புரந்த ராதிமற் றேனையோர் தனித்தனி புகல்வார்
அரந்தை வெம்பிறப் பறுக்குநா யகனின தருளால்
குரங்கினம் பெறுகென்றனர் உள்ளமுங் குளிர்ப்பார். 10189

ாஉசு. முந்தை நாண்முதல் கடைமுறை யாவையும் முடிந்த
அந்த வானரம் அடங்கலும் எழுந்துடன் ஆர்த்த
சிந்தை யோடுகண் களிப்புறச் செருவெலாம் நினையா
வந்து தாமரைக் கண்ணனே வணங்கின மகிழ்ந்த. 10190

ாஉள. கும்ப கன்னனே டிந்திர சித்துவெங் குலப்போர்
வெம்பு வெஞ்சினத் திராவணன் முதலிய வீரர்
அம்பின் மாண்டுள வானரம் அடங்கவந் தார்ப்ப
உம்பர் யாவரும் இராமனைப் பார்த்திவை உரைத்தார்.

ாஉஅ. இடை உவாவினில் சுவேலம்வந் திறுத்தெயில் இலங்கை
உடைய வாவுறை சேனையை வளாவுறப் போக்கிப்
படைய வாவுறும் அரக்கர்தங் குலமுற்றும் படுத்துக்
கடை உவாவினில் இராவணன் தன்னையுங் கட்டு. 10192

ாஉகூ. வஞ்சர்இல்லை இவ் அண்டத்தில் புறத்தென மடித்த
கஞ்ச நாண்மலர்க் கையினுன் அன்னைசொல் கடவா
தஞ்சொ டைந்து நாலெனும் ஆண்டுபோய் மூடிந்த
பஞ்ச மிப்பெயர் படைத்துள திதிஇன்று பயந்த. 10193

ாஉம். இன்று சென்றுநீ பரதனை எய்தலை என்னில்
பொன்று மால்அவன் எரியிடை அன்னது போக்க
வென்றி வீரநீ போதியால் என்பது விளம்பி
நின்ற தேவர்கள் ஏகினர் இராகவன் நினைந்தான். 10194

ாஉக. ஆண்டு பத்தொடு நாலும்இன் றேடறும் ஆகில்
மாண்ட தாம்என்றே என்குலம் பரதனை மாளும்
ஈண்டு போகலர் ஊன்திஉண் டோஎன இன்றே
தூண்டு மானம்உண் டென்றனன் வீடணன் தொழுதாள்

ாஉஉ. வாங்கி னுன்அது மாநிதி யொடும்தன மான
ஓங்கல் வெள்ளம்ஓர் எழுபதும் ஏறினுல் உன்னும்
ஈங்கு ளார்எல்லாம் ஏறுவ திதனைநீ ஏறிப்
பூங்கு லாநகர்ப் புகுதிஇப் பொழுதினில் என்றான். 10196

ாஉஙு. இயக்கர் வேந்தனுக் கருமறைக் கிழவன்அன் றீய்ந்த
துயக்கி லாதவர் மனம்எனத் தூய சுரர்கள்
வியக்க வான்செலும் புட்பக விமானம்உண் டென்றே
மயக்கி லான்சொலக் கொணருதி வல்லையின் என்றான்.

ாஉச. அண்ட கோடிகள் அனந்தம்ஒத் தாயிரம் அருக்கர்
விண்ட தாம்என விசும்பிடைத் திசைஎலாம் விளங்கக்
கண்டை ஆயிர கோடிகள் மழைஎனக் கலிப்பக்
கொண்ட னைந்தனன் நொடியினில் அரக்கர்தங் கோமான்.

ாஉரு. அனைய புட்பக மானம்வந் தவனியை அணுக
இனிய சிந்தனை இராகவன் உவகையோ டினிநம்
வினைய முற்றிய தென்றுகொண் டெழுந்தனன் விண்ணோர்
புனைமலர் பொழிந் தார்த்தனர் ஆசிகள் புகன்றார். 10199

ாஉசு. வணங்கு நுண்ணிடைத் திரிசடை வணங்குவான் கற்
பிற், கிணங்கர் இன்மையாள் நோக்கியோர் இடர்இன்றி
இலங்கைக், கணங்கு தான்என இருத்தினன் றையன்மா
டனைந்தான், மணங்கொள் வேல்இளங் கோளரி மானமீப்
படர்ந்தான். 10200

ாகஎ. அண்டம் உண்டவன் மணிஅணி உதரம்ஒத் தனிலன்
சண்ட வேகமும் குறைதர நிலைவெனும் தகைத்தாய்
வீண்ட லந்திகழ் புட்பக மானமா மதின்மேல்
கொண்ட கொண்டனன் துணைவரைப் பரிந்திது குனித்தான்.

ாகஅ. வீட ணன்தனை அன்புற நோக்குரு விமலன்
தோட ணிந்ததார் மௌலியாய் சொல்வதொன் றுளதுன்
மாட னைந்தவர்க் கின்பமே வழங்கிநீள் வீர
நாட னைந்தவர் புகழ்ந்திட வீற்றிரு நலத்தால். 10202

ாகக. நீதி யாதெனத் தெரிவுறு நிலைமைபெற் றுடையாய்
ஆதி நான்மறைக் கிழவன்உன் குலம்என அமைந்தாய்
ஏதி லார்தொழும் இலங்கைமா நகரிலுள் இனிநீ
போதி யால்எனப் புகன்றனன் நான்மறை புகன்றான். 10203

ாசஅ. சுக்கி ரீவனின் தோளுடை வன்மையி னிற்ற
சக்கிரீ வனைத் தடிந்துநம் படையினுல் தளர்ந்ததாய்
மிக்க வானரச் சேனையின் இளைப்பற மீண்டுர்ப்
புக்கு வாழ்கெனப் புகன்றனன் ஈறிலாப் புகழோன். 10204

ாசக. வாலி சேயினைச் சாம்பனைப் பனசனை மறப்போர்
நீலன் ஆதியாம் நெடும்படைத் தலைவரை நெடிய
காலின் வேலையைத் தாவிமீண் டருளிய கருணை
போலும் வீரனை நோக்கினின் றம்மொழி புகன்றான். 10205

ாசஉ. அய்யன் அம்மொழி புகன்றிடத் துணுக்கமோடவர்கள்
மெய்யும் ஆவியுங் குலைதர விழிகணீர் தளும்பச்
செய்ய தாமரைத் தாளினை முடிஉறச் சேர்த்தி
உய்கி லேம்உனை நீங்கின்என் றினையன உரைத்தார். 10206

ாசஙு. பார மாமதில் அயோத்தியில் எய்திநின் பைம்பொன்
ஆரா மாமுடிக் கோலமும் செவ்வியும் அழகும்
சோர்கி லாதியாங் காண்குறும் அளவையும் தொடர்ந்து
போர வேஅருள் என்றனர் உள்அன்பு பிணிப்பார். 10207

ாசச. அன்பி னுல்அவர் மொழிந்தவா சகங்களும் அவர்கள்
துன்பம் எய்திய நடுக்கமும் நோக்கிநீர் துளங்கல்
முன்பு நான்நினைந் திருந்ததப் பரிசுநும் முயற்சி
பின்பு காணுமா றுரைத்தெதன் றுரைத்தனன் பெரியோன்.

ரசரு. அய்யன் வாசகங் கேட்டலும் அரிக்குலத் தரசும்
மொய்கொள் சேனையும் இலங்கையர் வேந்தனும் முதல்ஏழ்
வையம் ஆள்உடை நாயகன் மலர்ச்சரண் வணங்கி
மெய்யி னோடருந் துறக்கம்உற் றார்என வியந்தார். 10209

ரசசு. அனைய ராகிய சேனையோ டரசனை அகிலன்
தனையன் ஆதியாம் படைப்பெருந் தலைவர்கள் தம்மை
வனையும் வார்கழல் இலங்கையர் மன்னனை வந்திங்
கினிதின் ஏறுமின் மானம்என் றிராகவன் இசைத்தான்.

ரசள. சொன்ன வாசகம் பிற்படச் சூரியன் மகனும்
மன்னு வீரரும் எழுபது வெள்ளம் வானரரும்
கன்னி மாமதில் இலங்கைமன் னெடுகடல் படையும்
துன்னி னூர்பெரும் புட்பகம் மீதொரு சூழல். 10211

நகூ–வது, பிராட்டி திருவடி தொழுபடல முற்றிற்று.
ஆகப்படலம் 131-க்கு கவி 10211

சயி-வசந்தன் உயிர்வரு படலம்

க. ஏறினுன் இளைய கோவும் இரவிசேய் சாம்பன் நீலன்
ஏறினுன் வாலி மைந்தன் என்றனர் பலரும் ஏறச்
சீறிய கும்ப கன்னன் சிதைந்திடச் சிதைந்து பட்ட
மாறிலா வசந்தன் சேனை நின்றது மாறி மன்மேல். 10212

உ. ஆறி வெள்ளம்ஓர் எழுபதும் அனுமனே முதலாம்
ஏழு மூன்றுமூன் றெனும்பெருந் தலைவரை இராமன்
சூழ நோக்கினன் சுக்கிரீ வன்தனைப் பாரா
வாழி மாப்படை அனைத்தும் வந்தனகொலோ என்றான். 10213

நக. என்றகாலையில் எழுந்தவன் இயற்கையை நோக்கி
நன்று நாயகன் அறிவொடு நினைவென நயந்தான்
சென்று சேனையை நாடினன் திரிந்துவந் தெய்தி
வென்றி வீரரில் வசந்தனைக் காண்டிலர் வெறுத்தார். 10214

சஅ. இரவி கான்முளை திரிந்துவந் திராமனை எய்திச்
சுருதி யாய்ஒரு பொருள்உள சொல்லுவ தொடர்ந்து
வருவ தானை நஞ் சேனையின் வசந்தன்என் றுரைக்கும்
ஒருவன் வந்திலன் கண்டருள் நீஎன உரைத்தான். 10215

சஉ. என்னுங் காலை இராமனும் யமபடர் யாரும்
மன்னுந் தொல்புரம் நோக்கியே மணிநகை முறுவல்
உன்னி நன்றிபான் தேவருக் குதவிசெய் தென்னைப்
பொன்னின் வார்சிலை எடுததனன் பொறுத்தனன் பொரவே.

கூ. எண்தி சாமுகம் இரிந்துக யமபுரங் குலைய
அண்ட கோளரை அடுக்கழிந் துலைவுற அழியாப்
புண்ட ரீகத்துப் புராதனன் முதலிய புலவோர்
தொண்டை வாய்உலர்ந் தலமரத் தொடுவில்நாண் எறிந்தான்.

எ. பாக வான்பிறை யாம்எனப் பலர்நின்று துதிப்ப
வாகை கொண்டவெஞ் சிலையினை வலைவுற வாங்கி
மேக சாலங்கள் குலைவுற வெயில்கதிர் மாட்சி
சோக மெய்திமெய் துளங்கிடச் சுடுசரம் துரந்தான். 10218

அ. வன் புலங்கிளர் நிருதரை வருக்கமோ டறுக்க
மிம் புலங்கொளும் உரும்என வீக்கிய வில்லைத்
தன் புலங்கையில் தாக்கியே தொடுத்தஅச் சரங்கள்
தென் புலங்களை நிறைத்தது தேவர்கள் இரிய. 10219

கூ. தரும ராசனும் காலனும் யமபடர் தாமும்
உருழ வீழ்ந்தென சரம்வந்து வீழ்ந்ததை உணர்ந்து
மருமை தாரையில் பட்டதோர் வடிக்கணை வாங்கி
நிருமி யாவிது இராகவன் சரம்என நினைந்தார். 10220

ஙி. கெட்ட தின்றினித் தென்புலம் கேடுவந் தெய்திப்
பட்ட னம்இனிப் பிறைப்பிலம் என்பதோர் பயத்தால்
முட்டம் எய்திய முயற்சியோ டியாவரும் மொய்ப்பச்
சிட்டர் தந்தனித் தேவனை வணங்கினர் சென்றார். 10221

*ஙக. சிறந்தனின் கருணை அல்லால் செய்தவம் பிறிது லார்மேல்
புறந்தரு முனிவு சாலப் போதுமோ புத்தேள் நின்னை
மரந்திறந் துப்ப துண்டோ மலர்மிசை அயனைத் தந்த
அறந்தரு சிந்தை ஐய அபையம்நின் அபையம் என்றார். 10222

*ஙஉ. ஐயனே எமை ஆளுடை அண்டர் நாயகனே
மெய்யனே எனச் சரணின்வந் தியாவரும் வீழ்ந்தார்
பொய்யினோர் செய்த பிழைபொறுத் தருள்எனப் போர்மூண்
டெய்ய நேரிலாச் சிலையினை மடக்கினன் இராமன். 10223

ஙஎ. வந்த டைந்துனக் கபையம்என் றடியினில் வணங்கி
என்த னிப்பிழை பொறுத்தினன் றியம்பிய இதனுல்
உன்தன் மேல்சலம் தவிர்ந்தனன் யூகநா யகன்தான்
தந்த சேனையில் வசந்தன்வந் திலன்தரு கென்றான். 10224

மச. அண்ணல் ஆரியன் தருதிஎன் றருளலும் அவர்போய்
விண்ண லாம்புகுந் தோடியே வசந்தனை விரைவில்
கண்ணில் நாடிநல் உயிரீனைக் காண்கிலா திருந்தார்
திண்ணன் யாக்கைஎங் கேஎனச் சாம்புவன் செப்பும். 10225

மடு. கசிந்த நானங்கள் கமழ்தலில் கழல்கும்ப கருணன்
இசைந்த போரின்வந் தெய்தலும் இவன்தனை எடுத்துத்
தசைந்த தோல்மயிர் எலும்பிவை தனைத்தெரி யாமல்
பிசைந்து மோந்துடல் பூசினன் பெருநுதற் கணிந்தான். 10226

*மசு. வரிசிலை இராமன் ஒலை மறம்புரி மறலி காண்க
எரிகொளும் இலங்கைப் பூசல் இன்உயிர் இழந்து பொன்றும்
செருவலி வசந்தன் தன்னைத் தெரிடியே கொணர்க அன்றேல்
உரியதன் பதமும் வாழ்வும் ஒழிப்பன்என் றுழதி விட்டான்.

மஎ. அக்கணத் தருகு நின்ற அனுமன்கைத் திருமு கத்தைத்
தக்கவன் கீட்ட வாங்கித் தாழ்ந்துதன் தலைமேல் சூடி
இக்கணம் வருவன் வாழ்க இராமன்என் றிருதோள் கொட்டி
மிக்கமா மடங்கல் போல விண்ணிடைப் பாயும் வேலை. 10228

*மஅ. அன்ன தேஎன அவனுயிர்க் கமரர்தம் பதிக்கே
முன்ன தோர்உடல் [1]கொண்டிவண் தருகென மொழியச
சொன்ன வாய்மைகேட் டனுமனும் துணைவனைப் பாராப்
பொன்னின் பாதுகம் பணிந்தனன் விடைஎனப் போனான்.

மக. மண்டிப் புக்கனன் மறலிதன் பெரும்பதம் நரகில்
தண்டிப் புண்டறுப் புண்டெரி யுண்டவர் தம்மைக்
கண்டு மாருதி கண்புதைத் தரிகரி என்ன
மிண்டி ஏறினர் நரகத்தில் வீழ்ந்தவர் எல்லாம். 10230

உம. துளங்கி அந்தகன் வந்தடி தொழுதலும் தோலா
வளங்கொள் மாருதி வசந்தனைக் காட்டென அவனும்
உளங் கலங்கியுன் நாயகன் அடியர்ஈங் குறுர்கள்
விளங்கு கீர்த்தியாய் தேடுவிண் ணவர்புறத் தென்றான். 10231

*உக. செல்வனே இன்னுங் கேளாய்நீயான்தெரி பாசக் கையால்
வல்எனும் அரக்கர் தம்மை வம்மின்என் றழைத்து மெல்ல
நல்இதழ்ப் [2]பரவை மேனி நாயகன் தமரைக் கண்டால்
மெல்லவே போமின் என்று விடுக்குவன் செவியில் செப்பி.

---

1. [பிரதி] கொண்டிவன். 2. பாவை.

*உஉ. சொன்ன கூற்றுவன் தன்னைத்தன் வாலிடை துவக்கிப்
போன்னின் கற்பகப் பதியிடைக் குதிகொண்டு போக
முன்னின் வந்துகண் டிந்திரன் முனிவனே என்ன
மன்னன் ஏகலன் காட்டுதி வசந்தனே என்றான். 10233

உங. வல்ல ரக்கரை மடித்தெமை எடுத்த மாருதியே
இல்லை இங்கயன் உலகில்உண் டேல்அறி என்று
சொல்ல அங்கவன் தன்னையும் வாலிடைச் சுருக்கிப்
பல்உயிர்த் திறம் படைத்தவன் உலகத்திற் பாய்ந்தான். 10234

உச. சிந்தை தூயவன் செலஉளம் நடுங்கிநான் முகனும்
வந்து கண்டெனை வாவென வரந்தனைப் பார்த்துச்
சுந்த ரத்தடந் தோள்வில்லி நின்றனன் அவன்தான்
இந்த நீள்பதத் துளதெனில் கொணர்திஎன் டென்றான். 10235

உரு. என்னு டைப்பதம் தனக்குத்தான் மேலவா எந்தை
தன்னு டைப்பரஞ் சோதியாம் தயாபர மூர்த்தி
மின்னி னுள்ஒளி விண்டுவின் பதத்தினுள் விறலோய்
அன்ன வன்தனைக் கொணருதி ஆங்கனைந் தென்றான். 10236

உசு. என்ற நான்முகன் தன்னையும் இயமன்இந் திரனை
டொன்ற வாலொடுந் துவக்கிமேல் ஒருகுதி கொள்ள
மின்தி கழந்தொளி விளங்கிடும் விண்டுவின் பதத்தே
சென்று கண்டுகொண் டிழிந்தனன் திசைமுகன் பதியில்.

உஎ. மலரின் மேல்அயன் வசந்தற்கு முன்உரு வழங்கக்
குலவும் வாலின்மேல் அவரைவிட் டிருநிலங் குறுகி
அலகில் வீரன்தன் அடியினை அவனெடும் வணங்கி
சலம் உதிர்ந்தவன் படையையுய்த் தனன்தடந் தோள்மேல்.

சுலு–வதுவசந்தன் உயிர்வரு படலம் – முற்றிற்று.

ஆகப்படலம் 132-க்கு, கவி 10238

சுகூ-வது திருஅணைச் சிறப்புப் படலம்

க. பத்து நாலென அடுக்கிய உலகங்கள் பலவும்
மெத்தி யோனிகள் ஏறினும் வெளியிடம் மிகுமால்
முத்த ரானவர் இதன்நிலை மொழிகுவ தல்லால்
இத்த ராதலத் தியம்புதற் குரியவர் யாரே. 10239

*உ. எழுபது வெள்ளத் தாரும் இரவிகான் முனையும் எண்ணில்
வழுவிலா இலங்கை வேந்தும் வான்பெரும் படையும் சூழ
தழுவுசீர் இளைய கோவும் சனகன்மா மயிலும் போற்ற
விழுமிய குணத்து வீரன் விளங்கினன் விமானத் தும்பர். 10540

ந: அண்டமே போன்ற தையன் புட்பகம் அண்டத் தும்பர்
எண்டருங் குணங்கள் இன்றி முதல்இடை ஈறின் முகிப்
பண்டைநான் மறைக்கும் எட்டாப் பரஞ்சுடர் பொலிவ தேபோல்
புண்டரீ கக்கண் வென்றிப் புரவலன் பொலிந்தான் மன்னோ.

சு. தேனுடை அலங்கல் மோலிச் செங்கதிர்ச் செல்வன் சேயும்
மீனுடை அகறி வேலை இலங்கையர் வேந்தும் வென்றித்
தானையும் பிறரும் மற்றைப் படைப்பெருந் தலைவர் தாமும்
மானிட வடிவங் கொண்டார் வள்ளல்தன் வாய்மை தன்னால்.

டு. குடதிசை மறைந்து பின்னர்க் குணதிசை உதையஞ் செய்வான், வடதிசை வெப்யோன் முன்னி வருவதே கடிப்ப மானம், தடைஒரு சிறிதின் முகித் தாவிவான் படரும் வேலை. படைஅமை விழியாட் கையன் இனையன பகரல் உற்றான்.10243

சூ. மன்னுபொற் கொடிகள் ஆட மாடமா ளிகையின் ஆங்கு
துன்னுமைப் பொழில்கள் சுற்றத் தோரணந் துவன்றி வாணர்
பொன்னகர் நிகர்க்கை என்று புகழ்தலில் புலவராலும்
பன்னரும் இலங்கை மூதூர்ப் பவளவாய் மயிலே பாராய். 10244

எ, வெதிர்எதிர் அஞ்சு மென்றோள் வெண்ணகைக் கனிவாய் வல்லி, எதிர்பொர வந்த விண்ணோர் இறைவனைச் சிறையில் வைத்த, அதிர்கழல் அரக்கன் தன்னை அஞ்சலில் ஆறு சொல்லாக், கதிர்மதி விலங்கி ஓடும் கடிமதில் மூன்றுங் காணாய். 10245

அ, வென்றிவேல் கருங்கண் மானே என்னெடும் இகலி வெய்ய
வன்திறல் அரக்கன் ஏறும் வடதிசை வாயில் நோக்காய்
கன்றிய அரக்கன் சேனை காவலன் தன்னை நீலன்
கொன்றுயிர் கூற்றுக் கீய்ந்த குணதிசை வாயில் நோக்காய்.

கூ. மறத்திறல் வாலி மைந்தன் வச்சிரத் தெயிற்றோன் தன்னைச்
செறுத்துயிர் செகுத்து நின்ற தென்திசை வாயில் நோக்காய்
அறத்தினுக் கலக்கண் செய்யும் அரம்பன்தன் உடலை ஆவி
வெறுத்திட அனுமன் நின்ற மேல்திசை வாயில் நோக்காய்.

ரு. மருங்கடர் பவளக் கொங்கை மதிநுதல் மிதிலை வல்லி
கருங்கடல் நிகர்ப்ப வான அகறிஓர் மூன்றுங் காணாப்
இருங்கட முகத்தயானை இவுளிதேர் காலாள் துஞ்சிப்
பொருங்கடர் நிறத்தர் வீய்ந்த போர்க்களம் அதனைப் பாராய்.

[பிரதி] 1. தானை.

மக. கொடிமதில் இலங்கை வேந்தன் கோபுரத் தும்பர்த்
தோன்ற, அடுதிறல் பருதி மைந்தன் அவன்நிலை குலையத்
தாக்கிச், சுடர்முடி பறித்த அந்நாள் அன்னவன் தொல்லை
வெம்போர்ப், படியினை நோக்கி நின்ற சுவேதமால் வரையைப்
பாராய். 10249

மஉ. பூக்கமழ் குழலி னுய்உன் பொருட்டியான் புகலா நின்ற
மேக்குயர் தச்சன் மைந்தன் நளன்இவன் விலங்க லால்அன்
றுக்கிய இதனை வெய்ய பாதகம் அனைத்தும் வந்து
நோக்கிய பொழுதே நூறுஞ் சேதுவை நீயும் நோக்காய்.

மங. மற்றதன் தூய்மை எண்ணில் மலர்அயன் தனக்கும்
எட்டாப், பொற்றொடித் தெரிவை நல்லாய் புகலுகேன்
அப்பால் தோன்றிப், பெற்றதாய் தந்தை யோடு தேசிகர்ப்
பிழைத்துச் சூழ்ந்த, சுற்றமும் கெடுத்துள் ளோரும் [1]எதிர்
தரில் சுரர்கள் ஆவார். 10251

மச. இந்திரற் கஞ்சி முன்னுள் இருங்கடல் புக்கீ நீங்காக்
கந்தமா சயிலத் தன்னைக் கண்டவர் வினைகள் தீர்க்கும்
கெந்தமா தனம்என் றேதும் கிளிஇவண் கிடப்பக் கண்டாய்
பைந்தொடிப் படைத்த சேதுப் பாவனம் ஆவ தென்றான்.

மரு. கங்கையொ டியமுனை கோதா விரிநரு மதைகா வேரி
பொங்குநீர்க் கன்னி யாவும் படிதலில் புன்மை போகா
சங்கெறி தரங்க வேலை தந்தஇச் சேது என்னும்
இங்கிதில் எதிர்ந்தோர் புன்மை எழுமையும் நீங்கும் அன்றே.

மசு. நெற்றியின் அழலும் செங்கண் நீரணிகடவுள் நீடும்
கற்றையின் சடையின் மேவுங் கங்கையும் சேது வாகப்
பெற்றிலம் என்று கொண்டே பெருந்தவம் புரிகின் றுளார்
மற்றிதன் தூய்மை எவ்வா றுரைப்பது மலர்க்கண் வந்தாய்.

மள. ஆங்கது காட்டக் கண்ட ஆயிழை கமலம் அன்ன
பூங்கழல் புயல்போல் மேனி புனிதனன் பொருட்டால் செய்த
சங்கிதற் கேற்ற தீயே இயம்பென விரதம் ஆங்கே
பாங்கினில் நிறுவி நின்றிங் கிவையிவை பகரல் உற்றான். 10255

மஅ. அந்தணர் தம்மைக் கொன்றோர் அருந்தவர்க் கிடுக்கண்
செய்தோர், செந்தழல் வேள்வி செற்றோர் தீமனை இடுவோர்
தம்பால், வந்திரந் தவர்க்கொன் றீயா வைக்கும்வன் நெஞ்சர்
பெற்ற, தந்தையைத் தாயைப் பேணுத் தறுகணர் பசுவைச்
செற்றோர். 10256

1. [பிரதி] எதிர்தலிற்.

உக.குருக்களே இகழ்வோர் கொண்ட குலமகள் ஒழியத் தங்கள் செருக்கினுல் கணிகை மாரைச் சேர்பவர் உயிர்கொல் தீம்பர் இருக்குடன் அமரும் தெய்வம் இகழ்பவர் ஊன்கள் தின்னும் பெருக்கிய உடலோர் பொய்மை பிதற்றுவோர் பீடை செய்வோர். 10257

உஉ. ஊரது முனிய வாழ்வோர் உண்ணும்போ துண்ண வந்தோர்க், கார்வமோ டளியா தில்லம் அடைப்பவர் அமணே சென்று, நீரினுள் இழிவார் பாவ நெறியிலே முயல்வோர் சான்றோர், தாரம தணிவோர் மூத்தோர் தமையிகழ் அறிவிலாதோர். 10258

உக. பின்னவா தருவன் என்று பேசித்தட் டிவிக்கும் பேதை கன்னியைக் கலக்கும் புல்லர் காதலிற் கள்ளுண் மாந்தர் துன்னிய கலிவல் லோரைச் சுழிந்துரைத் திகழ்வோர் சுற்றம் இன்னல்உற் றிடத்தான் வாழ்வோர் எளியோரை இன்னல் செய்வோர். 10259

உஉ.ஆண்டவன் படவுந் தங்கள் ஆருயிர் கொண்டு மீண்டோர் நாண்துறந் துழல்வோர் நட்பா னவரைவஞ் சிப்போர் நன்மை வேண்டிடர் திகழ்ந்து தீமை விளைப்பவர் விருந்தை ஈப்போர் பூண்டுமேல் வந்த பேதை அடைக்கலம் போக்கி வாழ்வோர்.

உங.கயிற்றிலாக் கண்டத் தாரைக் காதலித் தணிவோர் தங்கள் வயிற்றிடைக் கருவைத் தாமே வதைப்பவர் மாற்றூர் தம்மைச் செயிர்க்குவ தன்றிச் [1]சொந்த மாந்தரின் உயிரைச் செற்றோர் மயிர்க்குருள் ஒழியப் பெற்றம் வௌவுவோர் வாய்மை இல்லோர். 10261

உச. கொண்டவன் தன்னைப் பேணுக் குலமகள் கோயில் உள்ளே, பெண்டிரைச் சேர்வோர் தங்கள் பிதிர்க்களே இகழும் பேதை, யுண்டலோ தருமம் என்போர் உடைப்பொருள் உலோபர் ஊரை, எண்தர இகழ்வோர் என்றும் ஏற்றவற் கில்லை என்போர். 10262

உரு. தேவர்தா னங்கள் மாற்றித் தேவர்கள் தனங்கள் வௌவும், பாவகா ரிகள்தன் நெஞ்சில் பரிவிலா தவர்கள் வந்து, காவெனு அபையம் என்று கழல்அடைந் தோரை விட்டோர் பூவைமார் தம்மைக் கொல்லும் புல்லர்பொய்ச் சான்று பொய்த்தோர். 10263

உசு. முறையது முயக்கி வாழ்வோர் மூங்கைஅந் தகர்க்குத் தீயோர், மறையவர் நிலங்கள் தன்னை வன்மையால் வாங்கும் மாந்தர், கறைபடு மகளிர் கொங்கை கலப்பவர் கூட்டின் வாழும், பறவைகள் மிருகம் பற்றிப் பஞ்சரத் தடைக்கும் பாவர். 10264

1. [பிரதி] சேர்ந்த.

உஎ. கார்க்கன வரைசேர் கானில் படுகுழி கல்லுங் கட்டா
நீர்க்கரை அதனில் ஓட்டி நெடுங்கலை முயல்மான் கொல்வோர்
ஊக்கெழு கூவல் வீழ்ந்த உயிர்ப்பசு எடாதே போவோர்
வார்க்கெழு தனமின் னுரை வழியில்விட் டேகு மாக்கள். 10265

உஅ. ஆதியா மூவர்க் கந்நாள் அருமறை அறைந்த அந்த
நீதியாம் புராணந் தன்னை இகழ்பவர் நிறையக் கேளார்
பாதியில் விட்டு வைப்போர் படித்தவர் பிறியப் படுத்தார்
போதமில் லாதார் மற்றைச் சமையம்போல் லாத தென்பார்.

உக. என்றிவர் முதல் மற்றும் எழுநர கடையும் பாவம்
ஒன்றினர் நன்றி தன்னை மறந்தவர் ஓழிய உள்ளோர்
துன்றிய வினைகள் எல்லாம் சுடர்கண்ட இருளே போலத்
தென்திசை வந்து சேது தெரிசிக்கத் தீரும் என்றான். 10267

*உ. ஆங்கது கேட் டருந்ததியே அனையாளும் அவதியுடன்
தீங்ககல என மொழிந்தாய் செய்நன்றி கொன்றோரும்
தாங்கரும்பா வங்களையும் எனக்காகத் தவிர்க்க என
நீங்கிடுக அதுவும்என்றான் நிலமடந்தை பொறை தீர்ந்தாள்.

உக. பார்எழுவி வாழ்வோர்தம் பஞ்சபா தகமுதலாச்
சீர்கொழுவு திருவணையைத் தெரிசிக்கத் தீர்கஎன
கார்எழுவு திருமேனிக் கண்ணர்நினை வின்படியே
ஈரெழுபேர் நால்வர்எனும் இருடிகளும் எழுதினரால். 10269

உஉ. கப்பைஎனுங் கன்னியையும் கந்தனூர் தந்தையையும்
அப்பொழுதே திருவணைக்குக் காவலராய் அங்கிருத்தி
செப்பரிய சிலையாலே திருவணையை வாய்கீறி
ஒப்பரியாள் தன்னுடனே உயர்சேணைக் கடலுடனே. 10270

*உஉ. சேர்ந்து சேதுவின் தென்கரை கடந்துவந் தெய்திக்
கூந்தல் மானமேல் இருந்தவன் வடதிசைக் குறுகிப்
போந்து வானரப் புதுமையுஞ் சனகிக்குப் புகன்று
தீர்ந்த சேதுவின் கரையையுங் காட்டினன் தெரிந்தான். 10271

உஊ. நின்னை மீட்பதே நினைந்துநின் னெறியெலாம் நீந்தி
என்னை ஈட்டிய திறத்தினில் திருவுடன் இருப்பக்
கொன்ன வேற்படை அரக்கரைக் குறைத்தஇச் சேணை
மன்ன னுல்பெற்ற வழிஇது வென்றியும் அதனுல். 10272

*உரு. தெவ்வடுஞ் சிலைக்கை வீரன் சேதுவின் பெருமை எல்லாம்
வெவ்விடம் டொருது மீண்டு மிளிர்தரு கருங்கட் செவ்வாய்
நொவ்விடை மயில் அன்னாட்கு நுவன்றபின் வருணன் ஆணைன்
இவ்விடை வந்து கண்டான் சரண்என இயம்பிற் றென்றான்.

சக–வது, திருஅணைச் சிறப்புப் படலம் – முற்றிற்று
ஆகப்படலம் 133–க்கு கவி 10273.

சூ-வது, மீட்சிப் படலம்

க. மாருதி நின்னை நாடி வருபவன் நெறியைப் பாராய், பாரிடைக் குளித்து நின்ற பவளமால் வரையைப் பாராய், போரிடைப் புலன்கள் வென்றோர் புரவிகள் பொங்கிற் றென்ன. நீரிடைத் தரங்கம் ஓங்கும் நிரைகடல் அதனை நோக்காய். 10274

*உ. தேய்ந்த மாமதி போலுந் சிலைநுதல்
ஆய்ந்த மாமணி ஆயிழை யாய்மதி
வாய்ந்த வானர வாரண மாருதி
பாய்ந்த வெற்பு மகேந்திரம் பார்த்தியால். 10275

*ங. இதுதமிழ் முனிவன் வைகும் இகல்அறு குன்றம் முன்னு றதுவளர்ீ மணிமால் ஓங்கல் அப்புறத் துயர்ந்து தோன்றும் அதுகழல் அனந்த வெற்பன் றருடடர அமலன் தோன்றிற் றெதுஎன அணங்கைநோக்கி இற்றென இராமன் சொல்வான்.

ச. வாலீஎன் றளவில் ஆற்றல் வண்மையான் மகர கீர்சூழ் வேலியைக் கடக்க பாயும் விறலுடை அவனீ வீட்டி நூலியல் தரும நீதி நுனித்தறங் குனிக்கு மேலோர் போலியல் தபனன் மைந்தன் உறைதரு புரம்ஈ தென்றான். 10277

ஞ. கிட்கிந்தை இதுவேல் ஐய கேட்டியால் எனது பெண்மை மட்குந்தான் ஆய வெள்ளம் மகளிர்இன் றுகி வாளோர் உட்கும்போர்ச் சேனை சூழ ஒருத்தியே அயோத்தி எய்தக் கட்குந்தார்க் குழலி னுரை ஏற்றுதல் கடன்மைத் தென்றாள்.

ட. அம்மொழி இரவி மைந்தற் கண்ணல்தான் உரைப்ப அன்னான், மெய்ம்மைசேர் அனுமன் தன்னை நோக்கிீ விரைவின் வீர, மைமலி குழலி னுரை மரபினில் கொணர்தி என்னச், செம்மைசேர் உள்ளத் தண்ணல் கொணர்ந்தனன் சென்று மன்னோ. 10279

எ. வரிசையின் வழாமை நோக்கி மாருதி மாதர் வெள்ளம் உரைசெயல் அரிய வண்ணம் கொணர்ந்தனன் கணத்தின் முன்னம், விரைசெறி குழலி னூர்தம் வேந்தனை வணங்கிப் பெண்மைக், கரசியை ஐய னோடும் அடியினை தொழுது நின்றான். 10280

அ. மங்கல முதலாய் உள்ள வரம்பினில் கலங்கள் யாவும்
அங்கவர் கொணர்ந்து பெண்மைக் கரசியைத் தொழுது சூழ
நங்கையும் உவந்து வேறோர் நவையில்லை இனிமற் றென்னப்
பொங்கிய விமானம் தானும் மனம்என எழுந்து போன.

கூ. கடிகமழ் குழலி னுளேள கார்காலம் யாங்கள் வைகும்
வடிவுடைச் சிகரம் ஓங்கு மாலிய வானை நோக்காய்
அடுதிறல் பருதி மைந்தன் அரணின தழகு பாராய்
வடிவுலா மலேவ ழ்என்னும் மாமரம் ஏழை நோக்காய். 10282

எ. கனிவளர் பவளச் செவ்வாய்க் கனங்குழை நின்னைக்
காணுத், துனிவளர் துன்பம் நீங்கத் தோழமை நாங்கள்
கெண்ட, பனிவளர் இருள் அகற்றும் பகலவன் சேயும்
யாமும், நனிவளர் நட்புக் கொண்ட நலந்தரும் நாகம்
நோக்காய். 10283

மாழைஓண் கண்ணுய் உன்னைப் பிரிந்துயான் வருந்து நாளில்
தாழ்விலாத் துயரம் நீங்கத் தாமரை உந்தி யான்கை
ஆழியாம் ஆற்ற லானை அனுமனை அரக்கர் அஞ்சும்
பாழியான் தன்னைக் கண்ட பம்பையா றதனைப் பாராய்.10284

ஏஉ. பொய்வித்து வஞ்சங் காத்துப் புலைவினைத் தறத்தைத்
தின்றூர், கைவித்துஞ் சரத்தி னுல்நம் கடற்பெரும் படையை
எல்லாம், கைவித்து இரவு நன்கா மருந்துக்கும் நடந்து
நம்மை, உய்வித்த வீரன் தன்னைக் கண்டிடம் இதுகண்
டாயே. 10285

ஏஙு. சவரீய திருக்கை தானும் கவந்தனைத் தடிந்த கானும்
இவர்செயல் கண்டும் ஆற்றல் கரன்உயிர் இழந்த பாரும்
சவையுறு சுட்டன் மைந்தன் சரபங்கன் முதலோர் காதல்
கவையற முனிவர் தங்கள் இடங்களும் கருதி நோக்காய்.10286

ஏச. விரைகமழ் ஓதி மாதை விராதன்வந் தெதிர்ந்து போர்
செய், நிரைதவழ் அருவி ஓங்கும் நெடுவரை அதனை நோக்
காய், சரதம்நான் அரசு வேண்டேன் தடமுடி சூடு கென்று,
பரதன்வந் தழுது வேண்டும் பருவரை அதனைப் பாராய்.10287

ஏரு. வளைபயில் தளிர்க்கை மாதை வருபுனல் பெருக்கை கண்டு
துளைபுடை வேயின் தெப்பம் இயற்றியாம் துயரம் இன்றி
விளைதரு புனலை நோக்கி வியந்துடன் இருப்ப வெல்போர்
இளையவன் தனியே நீந்தும் யமுனையா றதனை நோக்காய்.

மசு. பயன்உறு தவத்தின் மிக்க பரத்துவன திருக்கை பாராய்
கயல்பொரு கங்கை யாறும் குகன்உறை நகருங் காணாய்
அயன்முதல் அமரர் போற்றும் அனந்தன்மேல் ஆதிமூலம்
துயிலுமால் அரங்கம் என்னும் அயோத்தியைத் தொழுது
நோக்காய். 10289

மஎ. என்றுரைத் திளவ லோடும் சனகியும் இரவி சேயும்,
வென்றிவீ டணனுஞ் சேனை வெள்ளமும் விளங்கித்
தோன்றப், பொன்திகழ் புட்ப கத்தேர் பூதலத் திறிய ஏவி,
இன்றுவண் பரத்து வாசன் இடவகை இழிந்தான் அன்றே.

சஉ–வது, மீட்சிப் படலம் – முற்றிற்று.

ஆகப்படலம் 133-க்கு, கவி 10290

சஙு-வது பரத்துவாசன் ஆசிரமப் படலம்

க. உன்னு மாத்திரத் துலகினை எடுத் தும்பர் ஓங்கும்
பொன்னின் நாடுவந் திறிந்தெனப் புட்பகம் தாழ
என்னை ஆள்உடை நாயகன் வல்லியின் எதிர்போய்ப்
பன்னு மாமறைத் தபோதனன் தாழ்மிசைப் பணிந்தான். 10291

உ. அடியின் வீழ்தலும் எடுத்துரல் ஆசியோ டணைத்து
முடியை மோயினன் நின்றஇம் முளரியங் கண்ணன்
சடில நீர்கழிந் திறிதரத் தனதுகண் அருவி
நெடிய காதலங் கலசம தாட்டினன் நெடியோன். 10292

ஙு. கருகும் வார்குழல் சனகியோ டிளவல்கை தொழுதே
அருகு சார்தர அருந்தவன் ஆசிகள் வழங்கி
உருகு காதலின் ஒழுகுகண் னீரினன் உவகை
பருகும் ஆரமு தொத்துளங் களித்தனன் பரிவால். 10293

ச. வான ரேசனும் வீடணக் குரிசிலும் மற்றை
ஏனை யோர்களும் தொழுந்தொறும் ஆசிகள் இயம்பி
ஞான நாதனைத் திருவுடன் நன்மனை கொணர்ந்தான்
ஆன மாதவர் குழாத்தொடும் ஆசிகள் பகர்ந்தே. 10294

ரு. பன்ன சாலையுள் புகுந்துநீ டருச்சனை பலவும்
சொன்ன நீதியில் புரிந்துபின் சூரியன் மருமான்
தன்னை நோக்கினன் பன்முறை கண்கள்நீர் ததும்ப
பின்னெர் வாசகம் உணர்த்தினன் தபோதரில் பெரியோன்.

ரு. முனிவர் வானவர் மூவுல கத்துளோர் யாரும்
துனிஇ றந்திடத் துணர்தரு கொடுமனத் தொழிலோர்
நனிம டிந்திட அலகைகள் நாடகம் நடிக்கக்
குவியும் வார்சிலைக் குரிசிலை என்னினிக் குணிப்பாம். 10296

*எ. விராதனும் கரனும் மானும் விறல்கெழு கவந்தன் தானும்
மராமரம் ஏழும் வாலி மார்பமும் மகர நீரும்
இராவணன் உரமும் கும்ப கருணன தேற்றம் தானும்
பராவரும் பகழி ஒன்ருல் அறுத்துல களித்தி என்ருன்.

*அ. இந்த வாசகம் இயம்பினன் பின்னரும் இசைப்பான்
எந்தை நீஇன்றிங் கிருந்துள வருத்தமும் போக்கிச்
சிந்தை அன்பு செய் திருநகர் நாளைநீ சேர்கென்
றந்த மில்பரத் துவன்சொல அவனிடத் தடைந்தான். 10298

கூ. அடைந்த மாமுனித் தலைவனை அருச்சனை செய்து
மிடைந்த சேனையம் பெருங்கடல் சூழ்தர மேல்நாள்
கடைந்த பாற்கடல் கண்துயில் கீங்கிவர னவர்கள்
படிந்து போற்றிட விருந்தெனப் பரிவுடன் இருந்தான். 10299

*ஙி. இருந்தபோ திராமன் தன்னை இருடியும் இயம்பும் எந்தாய்
பெருந்திறல் இலங்கை தன்னை எங்ஙனம் பெரியோய் நீயே
வருந்தினை குரங்கு கொண்டு மாயவல் அரக்கன் தன்னைத்
திருந்த அப் போரில் வென்று மீண்டவா செப்பு கென்ருன்.

ஙக இராகவன் அவனை நோக்கி இறந்தவாள் அரக்கர் எல்லாம்
அராவின்மா ருதியும் இந்த விடணன் தானும் ஆங்கே
குராவரும் சேனை எல்லாம் கொன்றிடக் கொற்றங் கொண்டு
விராவியே மீண்ட தென்று மீளவும் பகரல் உற்ருன். 10301

ஙஉ. தந்திரம் உற்ற சேனை தரைப்பட மறுப்ப டாமல்
அந்தரம் உற்ற போதே அருமருந் தனுமன் தந்தான்
மந்திர வித்தை எம்பி வரிசிலை வளைத்த போரில்
இந்திர சித்தும் பட்டான் இலங்கையும் அழிந்த தன்றே.

*ஙஊ. என்ற வாசகம் இருந்தவன் கேட்டிகல் இராமன்
தன்து ணைப்பெருந் தம்பியைத் தழுவினீ தக்கோய்
வென்று மீண்டிலை -ஆயில்நல் விண்ணவர் முனிவர்
பொன்று மாறன்றி யாருயிர் புரப்பதொன் றுளதோ. 10303

மாத வன்சொன்ன வாய்மையை மனங்கொண்ட மறையோன்
பாத முந்துற வணங்கிமா முனிவனைப் பாரா
எதும் யான்செய்த தில்லைஅவ் விலங்கைமேல் வெகுண்டு
வேத நாயகன் புருவத்தை நெரித்தனன் விளிந்தார். 10304

மரு. அன்றி யும்பிறி துள்ளதொன் றுரைசெய்வன் அதுஅத்
துன்று தார்புனை மாருதி பெரும்புயத் துணையால்
வென்றி கொண்டனம் யாங்கள்மேல் விளம்புவ தெவனே
என்றி யம்பினன் இருடிக்கும் இளவலும் இயைந்தே. 10305

மசு. அனுமன் என்பவன் வாண்முகம் நோக்கினன் அவனும்
புனித மாதவன் தணத்தொழாப் புண்ணியப் பொருளாம்
தனுவ லங்கொண்ட தாமரைக் கண்ணவன் தன்னை
எனும்அ தென்கொலோ யாவர்க்குந் தந்தைநீ என்றான்.

மள. அங்க வன்சொல அனுமனும் உரைசெய்வான் அருளைப்
பங்க யந்தனில் சீதையாம் பராபரை யாட்டி
சங்க ரன்அயன் தன்னையும் தணிஈ ரேழும்
தங்கு பொன்வயிற் றன்னைதன் தன்மையை நிகழ்த்தும். 10307

மஅ. இராக வன்பெருங் குலத்தையும் இப்பெருஞ் செல்வத்
தராத லம்புகழ்ச் சனகன்தன் மரபையும் தந்தென்
பராப ரத்தினீ பங்கயத் தயன்எனப் பணித்தாள்
புராத னர்க்கர சேஎன மாருதி புகன்றான். 10308

மக. அன்ன வாசகங் கேட்டலும் அந்தணர் கோவும்
என்ன வாசகம் சீதைக்கின் றியம்புவ தியாம்என்
றுன்னி வாசகம் உரைத்திலன் உள்ளன்பு குளிர
அன்னை வாசவன் திருவினைத் தந்ததென் றறைந்தான். 10306

உம. பண் குலாவிய சுக்கிரீ வன்தனைப் பார்ப்பக்
கண் குலாமனங் களித்தவன் கழல்மிசைப் பணிந்து
மண் குலாம்புகழ் வீடணன் நீலனே முதலாம்
எண்கின் வேந்தனும் அடைத்தனர் இலங்கையை என்றான்.

*உக. என்றவன் இயம்பக் கேட்ட திருந்தமா தவனும் இந்த
வென்றியாம் தாஜைக் கெல்லாம் விருந்திடுஞ் சயன மேவிக்
குன்றென வருக என்று கூறலும் இமையோர் நாட்டில்
அன்றினி அரம்பை மார்கள் அமுதெடுத் தாங்கு வந்தார். 10311

*உஉ. திருந்து மாதவன் செய்ததோர் பூசனை செயஆண்
டிருந்த போதுதன் திருவளத் திராகவன் நினைந்தான்
பொருந்து மாமுடி புனைகெனப் பொருந்துறும் போத
வருந்து தம்பிக்கு வருதும்யாம் என்றதோர் வாக்கை. 10312

உங. இன்று நாம்பதி போகலம் மாருதி ஈண்டச்
சென்று தீதின்மை செப்பிஅத் தீய்மையும் விலக்கி
நின்ற காலையில் வருதும்என் றேயினன் நெடியோன்
நன்றெனு அவன் மோதிரம் கைக்கொண்டு நடந்தான். 10313

சஙு-வது பரத்துவாசன் ஆச்சிரமப் படலம் – முற்றிற்று
ஆகப்படலம் 134-க்கு கவி 10313

சச-பரதன் விரதப் படலம்

க. தந்தை வேகமும் தனது நாயகன் தலிச்சிலையின்
முந்து சாயகக் கடுமையும் பிற்பட முடுகிச்
சிந்தை பின்வரச் செல்பவன் குகற்கும்அச் செய்யோன்
வந்த வாசகங் கூறவும் வான்வழிச் சென்றான். 10314

*உ. மானேர் விழியாள் உடனே வனமுன்
போனுர் ஒருநாள் வருநாள் இலதோ
தேனே அமுதே தெளிவே தெளிவின்
ஊனே உயிரே உலகா ளுடையாய். 10315

*ங. அம்பவளச் செவ்வாய் அணிகடக்கச் சேவகனே
வம்பவிழும் சோலைசூழ் கோசலநா டுடைவள்ளல்
எம்பெரு மான் என்னை இறிகுலத்து நாயேனைத்
தம்பியென உரைத்த தாசரதி தோன்றுனே. 10316

ச. வாழிமலைத் திண்தோள் சனகன்தன் மாமயிலை
ஏழ்உலகும் ஆளும் இறைவன் மருமகளைத்
தாழ்வில்பெ ருங்குணத்தாள் தான்உன் கொழுந்திநீ
தோழன்என உரைத்த தோன்றலார் தோன்றுரோ.

*ரு. துங்க வில்கரத் தோழனுர் சொன்னநாள்
இங்கு வந்திலர் யான்இறப் பேன்எனு
மங்கைமா ரும்படை யுமவன் சுற்றமும்
அங்குநீர்க் கங்கை அம்பியில் ஏற்றினுன். 10318

*சு. வேத நாதனும் வில்லியும் விரைமலர்த் திருவும்
ஏது செய்யினும் என்உயிர் முடிப்பன்என் றெண்ணி
ஓத நீரிடை ஓடம துடைத்துயிர் விடுவான்
காத லாருடன் கங்கையின் நடுவுறச் சென்றான். 10319

*எ. கண்ணும் தோளும் வலம்துடிக் குங்கரை
வண்ணப் புள்ளும் வலியும் வலத்திலை
பண்ணுங் காலைவந் தேதளிர்ல் மாருதி
அண்ணல் வந்தனன் என்றுரை யாடினுன். 10320

அ. உள்ள வான்கிளை ஏற்றி உயர்குகன்
வெள்ளக் கங்கையின் ஆக்கி விரைந்தவன்
உள்ளில் ஏற்றி உடைப்பள வில்புகும்
வள்ள லார்விடு மாருதி தோன்றினன். 10321

கூ. ஓங்கு வாலினை ஓட்டிஅவ் ஓடங்கள்
நீங்கு முவகை சுற்றிக் குறுகிநீர்
ஆங்கு நின்றங் கவைவவித் தான்அது
தீங்கி லாவகை தென்கரை சேர்ந்ததால். 10322

*எ. கையார் வெஞ்சிலைக் கருணை கரற்குக் காதலுடைத்
தோழா, மெய்யார் சிருங்க வேரிபுரம் உடையாய் மிதுகோ
சலைக்களிரு, மையார் நிறத்தான் வந்தொழிந்தான் மிதுலை
வல்லி அவளுடனே, அய்யா வந்தான் தம்பியொடும் அடி
யேம் உய்ய வந்தானே. 10323

*எக. ஆர்உனை உரைஎன அனுமன் கூறுவான்
சீரிய வாயுவின் தோன்றல் சிரியேய்
கூருடை இராமற்குத் தூதன் என்றுளை
தேருடைத் தலையின்மேல் எழுதப் பட்டுளேன். 10324

எஉ. பரதனைத் தியையும் விலக்கிப் பாருடை
வரதனை இராமனை மாறிக் காண்பது
சரதமே இனிஇறை தாழ்க்கொ ணுதெனுக்
கரதலத் தாழியும் காட்டிடப் போயினன். 10325

*எங. இன்றி சைக்கிடன் ஆய இராகவன்
தென்தி சைக்கரு மச்செயல் செப்பினும்
இன்றி சைக்கும் இனியஅ யோத்தியின்
நின்றி சைத்துள தன்மை நிகழ்த்துவாம். 10326

எச. நந்தி யின்பதி யின்தலை நாள்எலாம்
சந்தி யின்றி நிரந்தம் தம்முனூர்
பந்தி யங்கழல் பாதம் அருச்சியா
இந்தி யங்களை வென்றிருந் தான்அரோ. 10327

எரு. துன்பு ருக்கமும் சுற்றி உருக்கொணை
என்பு ருக்கும் தகைமையின் இட்டதாய்
முன்பு ருக்கொண் டொருவழி முற்றற
அன்பு ருக்கொண்ட தாம்எனல் ஆகுவான், 10328

ம சு. நினைந்த வுந்தருங் கற்பக நீரவாய்
நனைந்த தண்டலை நாட்டிருந் தேயும்அக்
கனைந்த மூலமும் காயும் கனியும்அவ்
வனைந்த வல்ல வருந்தலில் வாழ்க்கையான். 10329

ம எ. நோக்கில் தென்திசை அல்லது நோக்குறான்
ஏக்குற் றேக்குற் றிரவி குலத்துளான்
வாக்கிற் பொய்யான் வரும்வரும் என்றுயிர்
போக்கிப் போக்கி அழைக்கும் பொருமலான். 10330

ம அ. உண்ணு நீர்க்கும் உயிர்க்கும் உயர்வதே
எண்ணுங் கீர்த்தி இராமன் திருவடி
மண்ணு நீர்க்கும் வரம்புகண் டால்அன்றி
கண்ணின் நீர்க்குங் கரைஎங்குங் காண்கிலான். 10331

ம கூ. அனையன் ஆன பரதன் அலங்கலில்
புனையும் தம்முனூர் பாதுக பூசனை
நினையுங் காலை நினைந்தனன் ஆம்அரோ
மனையின் வந்தவன் எய்த மதித்தநாள். 10332

உ ம. யாண்டு வந்திங் கிறுக்கும்என் றெண்ணினான்
மாண்ட சோதிட வாய்மைப் புலவரை
ஈண்டு கூய்த்தரு கென்றனன் எய்தினூர்
ஆண் தகைக்கின் றவதிஎன் றூர்அரோ. 10333

உ க. என்ற போதத்தவ் இராமன் வனத்திடை
சென்ற போதெதத் தவ்வுரை செல்வத்தை
வென்ற போதத்து வீரனும் வீழ்ந்தனன்
கொன்ற போதத் துயிர்புக் குறைந்துளான். 10334

உ உ. மீட்டை முந்துவி ரைச்செழுந் தாமரை
காட்டை வென்றெழிர் கண்கலு ழிப்புனல்
ஓட்ட உள்ளங் உயிரினை ஊசல்நின்
றூட்ட வும்அவ லத்தறிந் தான்அரோ. 10335

உ ங. எனக் கியம்பிய நாளும்என் இன்னலும்
தனைப் பயந்தவள் துன்பமும் தாங்கிஅவ்
வனத் துவைகல்செய் யான்வந் தடுத்ததோர்
வினைக் கொடும்படை உண்டென விம்மினான். 10336

உச. மூவ கைத்திரு மூர்த்தியர் ஆயினும்
பூவ கத்தில் விசும்பில் புறத்தினில்
ஏவர் நிற்பர் எதிர்நிற்க என்னுடைச்
சேவ கற்கென ஐயமும் தேறினன். 10337

உடு. என்னே இன்னம் அரசியல் இச்சையன்
அன்ன் தாகில் அவன்அது கொள்களன்
றுன்னி னுன்கொல் உறுவது நோக்கினுன்
இன்ன தேநலம் என்றிருந் தான்அரோ. 10338

உசு, அனைத்தும் அங்கொன் றுயினும் ஆகுக
வனத்தி ருக்கஇவ் வையம் புகுதுக
நினைத்தி ருந்து துயரம் உழக்கிலேன்
மனத்து மாசென் உயிரொடும் வாங்குவேன். 10339

உஎ. என்னப் பன்னி இளவலை என்னுழைத்
துன்னச் சொல்லுதிர் என்னலும் தூதர்போய்
உன்னைக் கூயினன் உம்முன் எனுமுனம்
முன்னில் சென்றனன் மூவர்க்கும் பின்உளான். 10340

உஅ. தொழுது நின்றதன் தம்பியைத் தோய்கண்நீர்
எழுது மார்பத் திறுகத் தழுவினுன்
அழுது வேண்டுவ துண்டைய அவ்வரம்
பழுதில் வாய்மையி னுப்தரல் பாற்றென்றுன். 10341

உக. என்ன தாகுங்கொல் அவ்வரம் என்றியேல்
சொன்ன நாளில் இராவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான்நனி வீடுவென்
மன்னன் ஆணைஎன் சொல்லை மறுத்தன்றுன். 10342

நம. கேட்ட தோன்றல் கிளர்தடக் கைகளால்
தோட்ட தன்செவி பொத்தித் துணுக்குறூ
ஊட்ட நஞ்சம்உண் டான்ஒத் துயங்கினுன்
நாட்ட மும்மன மும்நடுங் காநின்றுன். 10343

நக. விழுந்து மேக்குயர் விம்மலன் வெய்துயிர்த்
தெழுந்து நான்உனக் கென்ன பிழைத்துளேன்
அழுந்து துன்பத்தி னுய்என் றருளினுன்
கொழுந்து விட்டு நிமிர்கின்ற கோபத்தான். 10344

நஉ. காஞ்ச நிலமகளைக் கைவிட்டுப் போனஞ்சைக் காத்துப் பின்பு, போனனும் ஒருதம்பி போனவன்தன் வரும்அவதி போயிற் றென்னு. ஆனுத உயிர்விடவென் றமைவானும் ஒருதம்பி அயலே ஆன. யானும்இவ் அரசாள்வென் என்னே இவ் அரசாட்சி இனிதே அம்மா. 10345

நஊ. மன்னிற்பின் வளநகரே புகல்ஒழிந் தானே அன்ரே பரதன் என்னும், சொன்னிற்கும் என்றஞ்சிப் புறத்தகன்றிவ் அருந்தவமே துடங்கினையே என்னிற்பின் இவன்உளனும் என்றேஉன் அடிமைஉனக் கிருந்த தேனும், உன்னிற்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ் இருந்ததுவும் ஒக்கும் என்ரான்.

நஎ. முத்துருக் கொண்ட மைந்தனைய முழுவெள்ளிக் கொழு நிறத்து முளரிச் செங்கட். சத்துருக்கன் அஃதுரைப்ப அவன் இங்குத் தாழ்க்கின்ற தன்மையான்இங், கொத்திருக்க வாமின் றேஉலந்ததற்பின் இவ்வுலகும் உலைய ஒட்டான். அத்திருக்குங் கேட்கவே புகுந்தாளும் அரசெரிபோய் அமைக்க என்ரான்.

நஏ. அப்பொழுதின் அவ்வுரைசென் றயோத்தியினில் இசைத்தலுமே அரியை ஈன்ற. ஓப்பெழுத ஓண்ணுத கற் புடையாள் வயிறுபுடைத் தலைக் தேங்கி, இப்பொழுதே உலகிறக்கும் .இயற்கையினை முடித்தொழிந்தாய் மகனே என்னு, வெப்பெழுதி னுல்அனைய மெலிவுடையாள் கடி தோடி விலக்க வந்தாள். 10348

நஐ. மந்திரியர் தந்திரியர் வளநகரத் தவர்மறையோர் மற்றுஞ் சுற்றச், சுந்தரியன் எனப்பலருங் கைதலையில் பெய்திரங்கித் தொடர்ந்து செல்ல. இந்திரனே முதலாய இமையவரும் முனிவரரும் இறைஞ்சி ஏத்த, அந்தரமங் கையர்வணங்க அழுதரற்றிப் பரதனைவந் தடைந்தான் அன்றே. 10349

நஒ. எரிஅமைத்த மயானத்தை எய்துகின்ற காதலனை இடை யே வந்து, விரிஅமைத்த நெடுவேணி புறத்தசைந்து வீழ்ந் தொசிய மேனிதள்ளச், சொரிவமைப்பற் றிருதாரை மழைக் கண்ணுள் தொடருதலும் துணுக்கம் எய்தப், பரிவமைத்த திருமனத்தான் அடிபணிந்தான் அவள்புகுந்து பற்றிக்கொண் டாள். 10350

*நஅ. மன் இழைத்ததும் மைந்தன் இழைத்ததும்
முன் இழைத்த விதியின் முயற்சியால்
பின் இழைத்ததும் எண்ணில பெற்றியால்
என் இழைத்தனை என்மக னேஎன்ரான். 10351

நகூ. நீய தெண்ணினை யேல்நெடு நாடெரி
பாயு மன்னருஞ் சேனையும் பாறுமால்
தாயர் எம்அள வன்று தனிஅறம்
தீயின் வீழும் உலகும் திரியுமால். 10352

சஅ. தரும நீதியின் தற்பய னுஸ்துன்
கரும மற்றொன்று கண்டிலன் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐயனின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ. 10353

சக. எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்அரு ளுக்கரு காவரோ
புண்ணியம் எனும் நின்உயிர் போயினுல்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ. 10354

சஉ. இன்று வந்தில னேல்இனி நாளையே
ஒன்று வந்துனை உன்னி உரைத்தசொல்
பின்றும் எண்ணுண்டி ரேல்பிழைத் தான்எனில்
பொன்றும் தன்மை புகுந்தது போல்என் றான். 10355

சங. ஒருவன் மாண்டனன் என்றுகொண் டேழிவாழ்
பெரு நிலத்துப் பெறல்அரு மன்னுயிர்க்
கருவு மாண்டறக் காணுதி யோகலைத்
தரும நீஅல தில்லெனும் தன்மையோய். 10356

சச. இறக்கை யுஞ்சிலர் ஏகலும் மோகத்தால்
பிறக்கை யுங்கடன் என்றுபின் பாசத்தை
மறக்கை காண்மக னேவலி யாவதென்
துறக்கை தானும்என் ருள்மனத் தூய்மையாள். 10357

சரு. மைந்தன் என்னை மறுத்துரைத் தான்எனில்
எந்தை மெய்மையும் இக்குலச் செய்கையும்
நைந்து போக உயிரினை நச்சிலேன்
முந்து சொன்ன சபதம் முடிப்பனுல். 10358

சசு. யானும் மெய்யினுக் கின்உயிர் ஈந்துபோய்
வானுள் எய்திய மன்னவன் மைந்தனுல்
காணுள் எய்திய மைந்தருக் கேகடன்
ஏனை யோர்க்கி திழுக்கில் வழக்கன்றே. 10359

சள. தாய்சொல் கேட்டலும் தந்தைசொல் கேட்டலும்
பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும்
ஈசற் கேகடன் யான்அ திழைக்கிலென்
மாசற் றேஇது காட்டுவன் மாண்டென்றான். 10360

சஅ. என்று தியினை எய்தி எழுந்தரைத்
தொன்று பூசலி டும்உல கோருடன்
நின்று பூசனை செய்கின்ற நெஞ்சற்குக்
குன்று போல்நெடு மாருதி கூடினான். 10361

சஆ. அய்யன் வந்தனன் ஆரியன் வந்தனன்
மெய்யின் மெய்யவ னின்னுயிர் வீட்டினுல்
உய்யு மேலவன் என்றுரைத் துள்புகாக்
கையி னுல்எரி யைக்கரி ஆக்கினான். 10362

சஇ. ஆக்கி மற்றவன் ஆய்மலர்த் தாள்களைத்
தாக்கித் தன்தலை தாழ்ந்து வணங்கிக்கை
வாக்கில் கூடப் புதைத்தொரு மாற்றமீ
தூக்கிக் கொள்ளத் தரும்என்று சொல்லினான். 10363

சஈ. இன்னம் நாழிகை ஏழுள தெம்பிரான்
உன்னை முன்னம்வந் தெய்த உரைத்தநாள்
அன்ன தில்லைய னில்அடி நாயினேன்
முன்னம் வீழ்ந்திவ் எரியின் முடிவனுல். 10364

சஉ. ஒன்று தான்உள துன்அடி யேன்சொலா
நின்று தாழ்த்திரு நேமிச் சுடர்நெடுங்
குன்று தாழ்வள வும்இது குன்றுமேல்
பொன்று நீயும் உலகமும் பொய்யிலாய். 10365

*சஊ. பரத்துவன் வருதலும் பரிந்து ராமனும்
கரத்துணை குவித்தனன் இளைய காளையோ
டெரித்திற முனியும்ஆ சிகள் இயம்பிட
விருப்பொடும் இடவகை இனிதின் மேயினான். 10366

*சஏ. எங்கள் நாயகற் கின்னமு தீகுவான்
பங்க யத்து பரத்துவன் வேண்டலால்
அங்கு வைகினன் அல்லது தாழ்க்குமோ
இங்க னல்லதொன் றின்னமுங் கேட்டியால். 10367

சஐ. அண்டர் நாதன் அருளி அளித்துள
துண்டொர் பேரடை யாளம் உனக்கது
கொண்டு வந்தனன் கோதறு சிந்தையாய்
கண்டு கொண்டரு ளாய்என்று காட்டினான். 10368

*ருசு. காட்டிய மோதிரம் கண்ணில் காண்டலும்
மூட்டுதீ நல்விட முறுக முற்றுவார்க்
கூட்டிய நன்மருந் தொத்த தாம்அரோ
ஈட்டிய உலகிற்கும் இளைய வேந்தற்கும். 10369

ருள. அழுகின்ற வாய்எலாம் ஆர்த்தெ ழுந்தன
விழுகின்ற கண்ணெலாம் வெள்ள மாறின
உழுகின்ற தலைஎலாம் உயர்ந்தெ ழுந்தன
தொழுகின்ற கையவாய்க் காலின் தோன்றலை.

ருஅ. மோதிரம் வாங்கித்தன் முடியின் மேல்அணைத்
தாதரம் பெறுவதற் காக்கை யோஎன
ஓதினன் நாண்உற ஓங்கி ஞன்தொழும்
தூதனை முறைமுறை தொழுது சொல்லுவான்.

ருக. ஆதிவெந் துயரினுல் அருந்தல் இன்மையால்
ஊதுறப் பறப்பதாய் உலர்ந்த யாக்கைபோய்
ஏதிலன் ஒருவன்கொல் என்ன லாயது
மாதிரம் அளந்தன வயிரத் தோள்களே. 10372

சுரு. அழும்நகும் அறுமனை ஆழிக் கைகளால்
தொழும்எழும் துள்ளும்மெய் களிது ளக்கலால்
விழும்அழிந் தேங்கும்போய் வீங்கும் வேர்க்கும்அக்
குழுவொடும் குனிக்கும்தன் தடக்கை கூப்புமால்.

சுக. ஆடுமின் ஆடுமின் என்னும் ஐயன்பால்
ஓடுமின் ஓடுமின் என்னும் ஓங்கிசை
பாடுமின் பாடுமின் என்னும் பாவிகாள்
சூடுமின் சூடுமின் தூதன் தாள்எனும். 10374

சுஉ. வஞ்சனை இயற்றிய மாயக் கேசியார்
துஞ்சுவர் என்றுதன் தோளைச் கொட்டுமால்
குஞ்சிதன் அடியின்மண் தலத்தில் கூட்டுற
அஞ்சனக் குன்றின்நின் றூடும் பாடுமால். 10375

சுங. வேதியர் தமைத்தொழும் வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்
ஏதும்ஒன் றுணர்ந்திலன் இருக்கும் நிற்குமால்
காதல்என் றிதுவும்ஓர் கள்ளில் தோன்றிற்றே. 10376

சுசு. அத்திறத் தாண்தகை அனுமன் தன்னோ
எத்திறத் தாய்எனக் கியம்பி ஈதியால்
முத்திறத் தவருளே ஒருவன் மூர்த்தியோ
டொத்திருந் தாய்என உரைக்கின் றேன்என்ரூன்.

சுரு. மறையவர் வடிவுகொண் டணுகி வந்தனே
இறைவனில் ஒருவன்என் றெண்ணு கின்றனன்
றுறைஎனக் கார்எனச் சொல்லு சொல்என்ரூன்
அறைகழல் அனுமனும் அறியக் கூறுவான். 10378

சுசு. காற்றினுக் கயல்வந்த கவிக் குலத்தினுள்
நோற்றுளாள் வயிற்றுவந் துதித்து நும்மூனேற்
கேற்றிலா அடித்தொழில் ஏவ லாளனேன்.
மாற்றினன் உருஒரு குரங்கு மன்னயான். 10379

சுள. அடித்தொழில் நாயினேன் அருப்ப யாக்னீகையைக்
கடித்தடந் தாமரைக் கண்ணில் காண்என
பிடித்தபொய் உருவினைப் பெயர்ந்து நீங்கினன்
முடித்தலம் வானவர் நோக்கி முற்றுவார். 10380

சுஅ. வெஞ்சிலை இருவரும் விரிஞ்சன் மைந்தனும்
எஞ்சலில் அதிசயம் இதுவென் றெண்ணினர்
துஞ்சல தென்னினும் சேனை துக்கமுற்
றஞ்சின அஞ்சனைச் சிறுவன் ஆக்கையால். 10381

சுக. ஈங்குநின் றுனக்குநான் இசைத்த மாற்றம்அத்
தூங்கிருங் குண்டலச் செவியின் சூழ்வர
ஓங்கல ஆதலின் உலப்பில் யாக்கையை
வாங்குதி விரைந்தென மன்னன் வேண்டினன். 10382

எம. சுருக்கிய உருவனுய்த் தொழுது முன்நின்ற
அருக்கன்மா ணாக்கனை ஐய மேயினன்
பொருக்கென வனத்திடை புகுந்த தன்மையை
ஒருக்கிஎன் உணர்வுற உரைத்தி யால்என்ரூன். 10383

எக. குன்றுறழ் வரிசிலைக் குரிசில் எம்பிரான்
தென்திசைச் சித்திர கூடம் தீர்ந்தபின்
வன்திறல் விராதனை மடித்து மாதவர்
துன்றிய தண்டக வனத்துத் துன்னினன். 10384

எஉ. ஆங்குறை தபோதனர் அரக்கர் ஆற்றலால்
நீங்கினம் தவத்துறை நீதி யோர்எனத்
தீங்குசெய் பவர்கூளச் செகுப்பன் திண்ணம்நீர்
வாங்குமின் மனத்துயர் வாய்மை யால்என்றான். 10385

எஙு. ஆறுநா லாண்டவன் வைகி அப்புறத்
தீறிலா முனிவரர் ஏவ ஆணையால்
மாறிலாத் தமிழ்முனி வனத்தை நண்ணினான்
ஊறிலா முனிவரன் உவந்து முன்வர. 10386

எச. குடங்கையில் வாரிதி அணைத்துங் கொண்டவன்
தடங்கணான் தனைஎதிர் தழுவிச் சாபமும்
கடுங்கணைப் புட்டிலும் கவசந் தானுமத்
திடம்படு சுரிகையும் சேர ஈய்ந்தனள். 10387

எரு. அப்புறத் தெருவையின் அரசைக் கண்ணுறுத்
துப்புறச் சிவந்தவாய்த் தோகை தன்னுடன்
மெய்ப்புகழ்த் தம்பியும் வீரன் தானும்போய்
மைப்பொழில் சூழ்பஞ்ச வடியின் வைகினர். 10388

*எசு. பல்பகல் இறந்த பின்றைப் பாதக அரக்கி தோன்றி
மெல்கிய இடையி னாளை வெகுண்டுழி இளையவீரன்
அல்கிய திருவைத் தேற்றி அவளுடைச் செவியும் மூக்கும்
மல்கிய முலையுங் கொய்தான் மறித்திவள் கரற்குச்சொன்னாள்.

எஎ. கரனெடு திரிசி ராவும் கரியதூ டணனும் காந்தி
எரியுமூன் றெயிலை ஒப்பார் எழுந்துவெஞ் சேனை யோடும்
விரவினர் ஐயன் செங்கை வில்லினை நோக்கு முன்போர்
எரிதழல் பஞ்சை ஒத்தார் அரக்கியும் இலங்கை புக்காள்.

எஅ. இருபது தடக்கை யான்மாட் டிசைத்தலும் எழுந்து பொங்கி, ஒருபது திசையும் உட்க வஞ்சக உழைஒன் றேவித், தருபதம் சமைந்த முக்கோல் தாபத வடிவும் கொண்டு, திரு வினை நிலத்தோ டேந்தித் தென்திசை இலங்கை புக்கான்.

போகின்ற பொழுது காத்த சடாயுவைப் புரட்டிப் போய்அ
வேகின்ற உள்ளத் தாளை வெஞ்சிறை அதனில் வைத்தான்
ஏகின்ற வஞ்ச மாமா ரீசற்கொன் றிளைவ லோடு
பாகின்ற சீர்த்தி அன்னான் தங்கையைப் பரிவில் கண்டான்.

அ. அன்னவன் தனக்கு வேண்டும் அருங்கடன் முறையின் ஆற்றி, நன்னுதல் தன்னைத் தேடித் தென்திசை நடக்கும் ஐயன், மன்னிய கவந்தன் தன்னை உயிரொடும் சாபமாற்றித் தன்னையே மறப்பி லாத சவரிபூசனையுங் கொண்டான்.

அக. ஆங்கவள் தனது சொல்லால் அருக்கன்மா மகனைஎய்திப், பாங்குற நட்டு வாலி பருவரல் கெடுப்பன் என்னு, ஓங்கிய மரமும் வாலி உரமும்ஊ டுருவஎய்திட், டாங்கவன் தனக்குச் செல்வம் அரைசொடும் அருளின் ஈய்ந்தான். 10394

அஉ. காலமா மாரி நீங்கிக் கலையெனை டிடபன் காந்து நீலன்மா மயிந்தன் சாம்பன் சதவலி பனசன் நீடும் வாலிமா மைந்தன் என்றிவ் வானரத் தலைவ ராய கூலவான் சேனை சூழ வந்தனன் எங்கள் கோமான். 10395

அங. எழுபது வெள்ளத் துற்ற குரக்கினம் எழுந்து பொங்கி அழுவநீர் வேலை என்ன அடைந்துழி அருக்கன் மைந்தன் தழுவிய திசைகள் தோறும் தனித்தனி இரண்டு வெள்ளம் பொழுதிறை தடாது மீள போக்கினன் திருவை நாட. 10396

அச. தென்திசை இரண்டு வெள்ளம் சேனையும் வாலிசேயும் வன்திறல் சாம்ப னெனு வாவினர் எவரும் நாயேன் குன்றிடை இவுங்கை புக்குத் திருவினைக் குறித்து மீண்ட பின்றைவந் தளக்கர் வேலை பெரும்படை இறுத்த தன்றே.

அறிவினுக் கறிவு போல்வான் வீடணன் அலங்கல் தோளான் செறிபுயத் தரக்கன் தம்பி திருவினை விடாது காப்பின் இறுதிஉற் றனனின் வாழ்நாள் என்றவன் உரைப்பச் சிறி கறுவுறப் பெயர்ந்து போந்து கருணையான் சரணம் பூண்டான்.

அசு. ஆங்கவற் கபையம் நல்கி அரசொடு முடியும் ஈய்ந்து பாங்கினுல் வருணன் தன்னை அழைத்திடப் பதைப்பி லாது தாங்கினன் சிறிது போது தாமரை நயனம் சேர்ப்ப ஓங்குநீர் எழும் அன்னன் உடலமும் வேந்த தன்றே. 10399

மற்றவன் அபையம் என்ன மலர்ச்சரண் தொடுத்த வேலை வெற்றிவா னரர்கள் பொங்கி வெற்பினுல் வேலை கோடு பெற்றிட இயற்றி நீசர் பிறங்கொளி இலங்கை புக்குப் பற்றினர் மதிலை ஆர்த்தார் வானவர் பயங்கள் தீர்ந்தார்.

அஅ. மலையினை எடுத்த தோளும் மதமலை கிழித்த மார்பும்
தலையொரு பத்தும் சிந்தி தம்பிதன் தோளும் தாளும்
குலதொழில் அரக்கர் ஆனூர் குலத்தொடும் தலத்து வீழச்
சிலையினை வளைவித் தையன் தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்.

அக. உலக்குவன் பகழி ஒன்றால் இந்திர சித்தென் றோதும்
வெலற்கரும் வரத்தி னானும் இளைஞரும் கிளையும் வீழ்ந்தார்
மலக்கமுண் டுழலும் தேவர் மலர்மழை தூவி ஆர்த்தன
றுலக்குநர் குழுக்கள் தோறும் உடற்குறை ஆடல் கண்டார்.

கூ. தேவரும் முனிவர் தாமும் சித்தரும் தெரிவை மாரும்
மூவகை உலகு ளாரும் தனித்தனி புகழ்ந்து மொய்த்தார்
பூவைபோல் நிறத்தி னானும் வீடணப் புலவர் கோமாற்
கியாவையும் இயம்பி மாண்டார்க் கியற்றுதி கடன்கள்என்றான்

கக. நான்முகன் விடையை ஊரும் நாரியோர் பாகத்தண்ணல்
மான்முத்தல் முதலாய் உள்ள வானவர் தொழுது தோற்ற
ஊன்முகங் கமழும் வேலான் உம்பர்நா யகியைச் சீறித்
தேன்முக மலர்ந்த தாரான் எரிசொலச் சீற்றந் தீர்ந்தான்.

மெய்யினுக் குயிரை ஈந்த வேந்தர்கோன் விமானத் தெய்த
அய்யனும் இளைய கோவும் அன்னமும் அடியில் வீழக்
கையினுல் பொருந்தப் புல்லிக் கண்ணினீர்க் கலசம் ஆட்டிச்
செய்வரம் அருளு கென்றான் திருவின்நா யகனுங் கொண்டான்.

1என்னிடைக் கருணை தன்னால் ஈன்றெடுத் தென்னைத் தந்த
அன்னையும் மகனும் முன்போல் ஆகென அருளின் ஈய்ந்து
மன்னவன் போன பின்னர் வானரம் வாழ்வு கூறப்
பொன்னெடு நாட்டில் உள்ளார் வரம்பல வழங்கிப் போனார்.

கஉ. வெள்ளம்ஓர் ஏழு பத்து வெலற்கரும் வீர ராதி
உள்ளவர் அறுபத் தேழு கோடியும் ஒற்றை ஆழி
வள்ளல்தன் மகனும் உள்ளம் மகிழ்வுற விமானம் ஈய்ந்தான்
எள்ளலி லாத கீர்த்தி வீடணன் இலங்கை வேந்தன். 10407

கூ. ஆரியன் பின்னை நின்னை அன்பினுல் நினைந்து காதல்
சூரியன் மகனும் தொல்லைத் துணைவரும் இலங்கை வேந்தும்
பேரியல் சேனை சூழப் பெண்ணினுக் கரசி யோடும்
சீரிய விமானத் தேறிப் பரத்துவன் இருக்கை சேர்ந்தான். 10408

---

1. [பிரதி] என்னுடைக்

கூசு. அன்பினுல் என்னை நின்பால் ஆழியுங் காட்டி ஆன்ற
துன்பெலாம் துடைத்தி என்றே துரந்தனன் என்று தோன்ற
முன்பினுல் இயன்ற தெல்லாம் மொழிந்தனன் முந்நீர் தாவி
வன்பினுல் இலங்கை முற்றும் எரிக்குண வாக வைத்தான்.

கூள. காலின்மா மதலை சொல்லப் பரதனுங் கண்ணீர் சோர
வேலிமா மதில்நீர் சூழும் இலங்கைமா வேட்டை கொண்ட
நீலமா முகில்பின் போவான் ஒருவன்நான் நின்று நைவேன்
போலுமாம் இவைகள் கேட்பேன் புகழ்உடைத் தடிமைமன்னே.

கூஅ. என்றவன் இரங்கி ஏங்கி இருகணும் அருவி சோர
வன்திறல் அனுமன் செங்கை மலர்க்கையால் பற்றிக் காலில்
சென்றனன் இருளின் ஊடு செறிபுனல் கங்கை சூழக்
குன்றினை வலஞ்செய் தேரோன் குணகடல் தோன்றும் முன்னர்

*கூகூ. கோவொடு தூசுநற் குலமு ணிக்குல
மாவொடு கரித்திரள் வாவு தேரினம்
தாவுநீர் உடுத்தஅத் தரணி தன்னுடன்
ஏவரும் சிலேவலான் யாதும் நல்கினுன். 10412

ஈ. நின்றவன் இவ்வயின் நெடிய வன்தினை
சென்றிறைப் பொழுதினில் கொணர்வன் சென்றெனப்
பொன்திணி பொலன்கழல் வணங்கிப் போயினுன்
வன்திறல் மாருதி வளருங் கீர்த்தியான். 10413

*ஈக. ஆய காலையில் ஐயனைப் கொண்டுதன்
தூய காலின் உறைவிடந் துன்னினுன்
மேய சேனைக் கமைப்பன் விருந்தெனத்
தீயின் ஆகுதி செங்கையின் நூக்கினுன். 10414

*ஈஉ. பான நெய்யொடு நானமும் சாந்தமும் பலவும்
ஆன வெள்ளிலை யோடடைக் காய்கருப் பூரம்
தேன ளாவுமுக் கனிகறி காயொடு தென்பால்
வான நாட்டர மங்கையர் மகிழ்ந்துகொண் டிழிந்தார்.

*ஈஊ. கங்கைதரு கழலார்க்கும் இளவலுக்கும் காரிகைக்கும்
துங்கமுடி வீடணற்கும் சுக்கிரீவப் பெருமாட்கும்
தங்குபெருஞ் சேனைக்கும் தனித்தனியே பொற்கலக்கால்
அங்கடைவின் மண்தலம்இட் டளிவிளங்க நிறைத்தனரால்,

ஈச. வெள்ளோநறும் போனகமும் மிகுபருப்பும் பொரிக்கறியும்
தள்ளரிய முக்கனியும் சருக்கரையும் நறுசெய்யும்
எள்ளரிய பலவிதத்துக் கறியமுதும் இமையவர்தம்
வள்ளல்முதல் அனைவோர்க்கும் வரிசைமுறை படைத்தனரால்.

ஈடு. நிருலவி நீர்குடித்து நினைத்திருந்தா குதிபண்ணிக்
கார்உலவு மேனியனும் காரிகையும் இளங்கோவும்
தேர்இரவித் திருமகனும் தென்இலங்கைப் பெருமானும்
போரின்உயர் சேனையுடன் போனகம்பற் றினர்பொலிவால்.

ஈசு. அக்கணத் தநுமனும் அருக்க னேஎன
மிக்குயர் முனிவனு சிரமம் மேயினன்
சக்கரக் கரத்தனைத் தாழ்ந்து முன்நின்ரு ன்
உக்குறு கண்ணினீர் ஒழுகும் மார்பினன். 10419

*ஈஎ. உருப்பவிர் கனல்இடை ஒளிக்க உற்றஅப்
பொருப்பவிர் தோளனைப் பொருந்தி நாயினேன்
திருப்பொலி மார்பனின் வரவு செப்பினேன்
இருப்பன ஆயின உலகம் யாவையும். 10420

ஈஅ. தீவினை யாம்பல செய்யத் [1]தீர்விலா
வீவினை முறைமுறை விளைய மெய்மையால்
நீஇவை துடைத்துனின் றளித்து நொந்ததால்
யாயினும் அன்பினுய் யான்செய் மாதவம். 10421

ஈக. என்றுரைத் தனுமனை இறுகப் புல்லினன்
ஒன்றுரைத் திறுப்பதென் உனக்கும் எந்தைக்கும்
இன்துணைத் தம்பிக்கும் ஆய்க்கும் என்றனன்
குன்றிசைத் தனையதோர் குவவுத் தோளினன். 10422

*ஈகஅ. இரவி காதலன் இலங்கையர் கோன் இவர்உதவி
அரசின் ஆசையின் என்னலாம் அனுமனே என்பால்
விரவு காதலின் நீசெய்த உதவிக்கு வேறு
தருவ தொன்றிலை உடன்உணும் தரம்அது அல்லால். 10423

ஈஉக. முனிவன் வாண்முகம் நோக்கியே முழுதுணர் முனியே
அனுமன் என்பவன் செய்தபே ருதவி இன்றெம்மால்
நினையவும் உரை நிரப்பவும் அரிதது நிலையாற
புனித உண்டி எம்முடன் என இராகவன் புகன்ரு ன். 10424

பிரதி 1. தீவிலே.

ஈகஉ. என்ற வாசகம் கேட்டடந்த இருந்தவன் முதலோர்
நன்று நன்றுநின் கருணைஎன்றி யாவரும் நவிலத்
துன்று தாரவன் பாதுகம் தொழுதினித் தோன்றல்
ஒன்று கூறுவன் கேள்என் மாருதி உரைக்கும். 10425

ஈஎக. செய்ய மாதவம் உடையையின் னினக்கன்பு சிறந்து
பொய்யில் சாதனம் பூண்டனன் புண்டரீ கத்தின்
ஐய நின்பொருள் உண்டிஎன் றிணையடி அமைபும்
உய்ய மாதெனக் காணுவன் றடிதொழ உவந்தான்.

ஈஎச. கொற்ற வனுடன் உண்ணுமோ கோதில்மா தவனை
வெற்றி வீரனே எனஅந்தி நின்றனன் விமலன்
மற்றப் போனகத் தினாலையால் வைத்தபின் வாராப்
பற்றி அப்பொழு தனுமனும் பரிகலம் பரித்தான்.

*ஈஎசு. பரிகலத் தமுதேந்தி ஏப்பந் நிகழ்தாறும்
இரவி காதலர்க் கங்கதாக்கி லங்கையர் வேந்தர்க்
குரிய வீரர்கட் களித்துந் தானவர்கள் ஓர்பாதி
வரிசை யால்உண்ண மாமுனி விருந்தும்உண் டனரால்.

ஈஎஞ. அன்ன காலையில் போனகம் அமரர்பொற் கலத்தே
முன்னம் போல் படைத்துத் திருமுன்பு வைத்தனரால்
உன்னும் பேருல கீன்றும் உண்டும் பகிதீரா
மன்னன் மாமுனி விருந்தும்உண் டகமகிழ்ந் தனனால்.

ஈஎள. பான நல்அமு துடன்கருப் பூரமும் பலவும்
ஏனை வானவர் மகளிர்கள் ஏந்திமுன் னிற்பத்
தான மெய்ப்படைத் தம்முடை போகத்துள் தந்த
வான கற்பனுள் உடன்அமிழ் தென்பதும் அயின்றான்.

ஈஎஅ. அண்ணல் மாமுனி அருளிய போனகம் அளக்கர்
வண்ண னேமுதல் வானரக் கடல்எலாம் வாய்பெய்
துண்ணும் வாசகம் கேட்டிலை யோர்முனி வோரும்
மண்ணும் நாரும் யாவரும் அருந்துயர் மறந்தார்.

ஈஎக. மான வேந்தரும் வள்ளலும் மலர்க்காம விளக்கி
ஆன வெள்ளிலை யோடடைக் காயமு தருந்தி
ஞான மாமுனி பெருமையைப் புகழ்ந்துரா யாடும்
பான லில்லெழு பாணனோடும் பரடியோடும் இருந்து.

*ாஉம். ஆரிருள் அகலுங் காலை அலனும் மறையோன் பாதம்
ஆர்வமோ டெழுந்து சென்று வணங்கலும் அவனும் ஆசி
சீரிது கூறிச் சேறி என்றலும் தேர்மேல் கொண்டு
சீரிய தானையோடும் சிறப்பொடும் மகிழ்ந்து சென்றான். 10433

*ாஉக. விருந்தும் உண்டுமா முனிவனீ விடைகொண்டு தேர்
மேல், அருந்த திக்கற்பி னுரொடும் படையொடும் அமைந்
தான், வருந்து கோசல நாடுடன் அயோத்தியும் வாழப்,
பரிந்தி ராமனும் ஏகினன் பரதனைக் காண்பான். 10434

ாஉஉ. இராவணன் வேட்டை போய்மீண் டெம்பிரான்
அயோத்தி எய்தித், தராதல மகளும் பூவில் தையலும்
மகிழச் சூடும் அராவுபொன் மவுலிக் கேய்ந்த சிகாமணி
குணபால் அண்ணல், விராவுற விடித்தான் என்ன வெய்
யவன் உதையஞ் செய்தான். 10435

சஉ-வது, பரதன் விரதப்படலம் – முற்றிற்று
ஆகப்படலம் 136க்கு கவி 10435

சஉ-வது நகர்புகு படலம்

க. அன்னதோர் அளவையின் விசும்பின் ஆயிரம்
துன்னிருங் கதிரவர் தோன்றி னுர்எனப்
பொன்னொளிர் புட்பகப் பொருவில் மானமும்
மன்னவர்க் கரசனும் வருகின் றூர்களே 10436

உ. தோன்றலும் சுமந்திரன் தொழுத கையினன்
ஈன்றுகாத் தழித்தவை இயற்றும் அவ்வுரு
மூன்றுமாய் நான்குமாய் ஐந்து மாமுதற்
சான்றினைப் பரதற்குக் காட்டிச் சாற்றுவான். 10437

ங. அண்ணலே காண்டியால் அலங்கு தாமரைக்
கண்ணனும் வானரக் கடலும் கற்புடைப்
பெண்அருங் கலமும்நின் பின்பு தோன்றிய
வண்ணவில் குமரனும் வருகின் றூர்களே. 10438

ச. ஏழிரண் டாக்கிய உலகம் ஏறினும்
பாழ்புறம் கிடப்பது படியின் றூயதோர்
சூழ்ஒளி மானத்துள் தோன்று கின்றனன்
ஊழியோன் என்றுகொண் டுணருங் காலையில். 10439

ரு. பொன்னொளிர் மேருவின் பொதும்பில் புக்கதோர்
மின்னொளிர் மேகம்போல் வீரன் தோன்றலும்
மன்னர் ஆர்த்தபோர் ஆர்ப்பி ராவணன்
தென்னகர்க் கப்புறத் தளவும் சென்றதால். 10440

சு. ஊனுடை யாக்கைவிட் டுண்மை வேண்டிய
வானுடைத் தந்தையை வரவு கண்டெனக்
கானிடைப் போன அக் கமலக் கண்ணனைத்
தானுடை அகமகிழ் தம்பி கண்டனன். 10441

எ. ஈடிய வன்துணை இராமன் சேவடி
சூடிய சென்னியன் தொழுத கையினன்
ஊடுயிர் உண்டென உயர்ந்த யாக்கையன்
பாடுறப் பெரும்புகழ்ப் பரதன் தோன்றினன். 10442

அ. தோன்றிய பரதனைத் தொழுது தொல்அறம்
சான்றென நின்றனன் இனிய தம்பியை
வான்தொடர் பேரர சாண்ட மன்னனை
ஈன்றவள் பகைஞனைக் காண்டி ஈண்டெனை. 10443

கூ. காட்டினன் மாருதி கண்ணில் காணஅத்
தோட்டலர் தெரியலான் நிலைமை சொல்லுங்கால்
ஊட்டிய தேர்மயத் துயிரில் தந்தையார்
கூட்டுருக் கண்டன்ன தன்மை கூடினன். 10444

எ. ஆனதோர் அளவையின் அமரர் கோனெடும்
வான்உயர் திருநகர் வதிந்த தாம்என
மேனிறை வானவர் விசும்பு பூவொடும்
தான்உயர் புட்பகம் நிலத்தைச் சார்ந்ததால். 10445

*எக. தாயருக் கன்று சார்ந்த கன்றெனத் தசையன் ஆனன்
மாயையில் கரந்தோர்க் கெல்லாம் மனோலயம் வந்தெய்தான்
ஆய்வளீ யார்க்குக் கண்ணுள் ஆடிரும் பாவை ஒத்தான்
நோய்வுறுத் துலந்த யாக்கைக் குயிர்புகுந் தனைய தொத்தான்.

எளிவரும் உயிர்கட் கெல்லாம் ஈன்றதாய் எதிர்ந்த தொத்தான்
அளிவரும் மனத்தோர்க் கெல்லாம் அரும்பத அமுதம்ஒத்தான்
ஒளிவரப் பிறந்த தொத்தான் உலகினுக் குண்க ணுர்க்குத்
தெளிவருங் களிப்பு நல்கும் தேம்பிழித் தேறல் ஒத்தான். 10447

ஆவியங் கவன லான்மற் றின்மையால் அனையோன் நீங்கக்
காவியங் கழனி நாடும் நகரமுங் கலந்து வாழும்
மாவியல் உண்க ணுரும் மைந்தரும் வள்ளல் எய்த
ஓவியம் உயிர்பெற் றென்ன ஒத்தனர் உணர்வு பெற்றார்.

மச. சுண்ணமும் சாந்தும் நெய்யும் சுரிவளை முத்தும் பூவும்
எண்ணையுங் கலின மாவில் ஆளியும் இளநல் யானை
வண்ணவார் மதமும் நீரும் மான்மதம் தழுவி மாதர்
கண்ணவாம் புனலும் ஓடிக் கடலிடைக் கிடந்த அன்றே.

மஞ. சேவடி இரண்டும் அன்பும் அடிஉறை யாகச் சேர்த்திப்
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி
நாவிடைப் பெயர்ப்ப தொன்றும் உணர்ந்திலான் நின்ற நம்பி
ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினன் அழுது சோர்வான்.

மசு. தழுவினன் நின்ற பின்னர் தத்திவீழ் அருவி காலும்
முழுமலர்க் கண்ணீர் மூரி வெள்ளத்தான் முருகற் செவ்வி
வழுவுறப் பின்னிப் பின்னி மாசுண்ட சடையின் மாலை
தழுவினன் உச்சி மோந்து கன்றுகாண் களிறே அன்னான்.

மள. இனையதோர் காலத் தம்பொற் சடைமுடி படிய தாகக்
கனைகழல் அரக்கர் கோனைக் கட்டறப் பிணித்த வீரன்
துனைபரி கரிதேர் ஊர்தி என்றிவை தொலைத்த காளை
வினையறு செருப்புக் கேய்ந்த விரைமலர்த் தாளின் வீழ்ந்தான்.

மஅ. சேடுறு கமலக்கண்ணீர் திசைதொறும் சிவிறியோடத்
தாடுறு தடக்கை ஆரத் தழுவினன் தனிமை நீங்கிக்
காடுறைந் துலைந்த மெய்யோ கையறு கவலைகூர
நாடுறைந் துலைந்த மெய்யோ நைந்ததென் றுலகம் நைய.

*மகூ. நீடுவேல் ஏற்றவற் கிளைய நின்மலன்
வாடிய மனத்தனுய் வசிட்டன் முன்வர
சூடிய கடிமலர் தூவி ஆர்த்தனன்
வடவிழ் தாமரை இறைஞ்சி எய்தினான். 10454

*பின்இணைக் குரிசில் தன்னைப் பெருங்கையால்வாங்கி வீங்கும்
தன்இணைத் தோள்கள் ஆரத் தழுவிய தம்பி மாருக்
கின்உயிர்த் துணைவர் தம்மைக் காட்டினான் இருவர் தாளும்
மன்உயிர்க் குவமை கூர மைந்தரும் வணக்கம் செய்தார்.

உக. ஆயிடைக் குகனும் வந்தாங் காண்டவன் அடியில்வீழ
நாயகன் உவந்து புல்லி நண்ணிஎன் பின்பு வந்த
தூயனே கிளையி னோடும் சுகம்இருந் தனையோ என்ன
வாயிடை மொழிந்தான் மற்றை மறைகளும் காணு வள்ளல்.

உஉ. அசனியின் குழுவும் ஆழி ஏழும்ஒத் தளந்த தென்ன
விசையுறு முரசும் வேதத் தோசையும் விளிகொள் சங்கும்
இசையுறு குரலும் ஏத்தி னரவமும் எழுந்து பொங்கித்
திசையுறச் சென்று வானோர் தோத்திரத் தொலியும் தீர்ந்த.

உங. நம்பியும் பரத னோடு நந்தியம் பதியை நண்ணி
வெம்பியல் எரியின் பாங்கர் விலக்குவன் என்று விம்மும்
கொம்பியன் மருங்குல் தேய கோசலை குளிர்பொற் பாதம்
தம்பிய ரோடுந் தாழ்ந்தான் தாமரைக் கண்ணீர் தாழ. 10458

உச. மூன்றென நின்ற தன்மைக் குணங்களின் முயற்சிக் கெல்லாம்,
சான்றென நின்ற மானச் சிறுவனைத் தலைப்பட் டாட்டுத்,
தோன்றிய உவகைக் காங்கோர் எல்லையும் சொல்லிற் பாற்றே,
ஈன்றபோ தொத்த தன்றே எதிர்ந்தபோ தொத்த தன்மை. 10459

உடு. இணைமலர்த் தாளின் வீழ்ந்த இலக்குவன் தன்னை ஏந்திப்
பணைமுலைப் பாலுங் கண்ணீர்த் தாரையும் பனிப்ப நின்ற
பிணைஎனத் தகைய நோக்கில் சீதையைப் பேடை அன்ன
துணையினை அல்ல கற்பில் பெருங்கடல் துறையைக் கண்டாள்.

உசு. நான்முகன் தாதை தன்றன் மகன்என்று நல்கி விம்மிப்
பான்முலை சோர நின்ற பல்பெருந் தவத்தி னோளைக்
கான்முதல் தொழுது தங்கள் கட்டிரும் பாவம் விட்டார்
மான்முயல் உருவத்தோடும் தோன்றிய வானோர் எல்லாம்.

உஎ. நம்பியைப் பரதன் தன்னை நானிலத் தெவருங் காண
வம்பியல் சடையும் மாற்றி மயிர்வினை முற்றி மண்ணித்
தம்பிய ரோடுந் தானும் அனையது சமைத்த பின்னர்
உம்பரும் உவகை கூர ஒப்பமை ஒப்பஞ் செய்தார். 10462

உஅ. ஊழியின் இறுதி காணும் இந்திரன் உயர்ந்த பொற்றேர்
ஏழுயர் மதமா அன்ன இலக்குவன் கவிகை ஏந்தப்,
பாழியா மற்றைத் தம்பி பால்நிறக் கவரி பற்றப்,
பூழியை அடக்குங் கண்ணீர்ப் பரதன்கோல் கொள்ளப் போனான். 10463

உகூ. ஆயதோர் அளவில் செல்வத் தண்ணலும் அயோத்தி
நண்ணித், தாயரை வணங்கித் தங்கள் முனிவனைத் தாழ்ந்து
தங்கள், நாயகக் கோயில் எய்தி நானில மாதும் மற்றைச்,
சேயொளிக் கமலத் தாளும் களிநடம் செய்யக் கண்டான்.

சந்—வது நகர் புகு படலம் – முற்றும்
ஆகப்படலம் 137க்கு கவி 10464

திரு அபிடேகப் படலம்

க. தேவரும் முனிவர் தாமும் திசைதொறும் முறையில் சிந்தும்
ஓவலின் மாரி ஒப்ப எங்கணு முதிர்ந்து வீங்கி
கேவல மலரால் வேரூர் இடம்இன்றிக் கிடந்த வாற்றுல்
பூவெனும் நாமம் இன்றி உலகிற்கும் பொருந்திற் றம்மா.

உ. கோடையில் வந்த மேகக் குழுஎனப் பதினு லாண்டு
பாடுற மதம்செ யாத பணிமுகப் பரும யானை
காடுறைந் தண்ணல் எய்தக் கடந்திறங் துகுத்த வாரி
ஓடின உள்ளத் துள்ளங் களிதிறந் துடைத்த தேபோல்.

ங. துருவத்தார் புரவிஎல்லா மங்கையர் சொற்பெற் றென்ன
அரவப்போர் மேகம் அஞ்ச வாலித்த மரங்கள் ஆன்ற
பருவத்தார் பூத்த என்னப் பூத்தன பகையில் சீறும்
புருவத்தார் மேனி முற்றும் பொன்னிறப் பசலைபூத்த. 10467

ச. இருபத்தைந் தமைந்தகோடி யானைமேல் வரிசைக்கேற்ற
திருவொத்த சிறப்பர் ஆகி மானுடச் செவ்வி வீரர்
உருவத்தோள் ஒளிரும் பூணர் உச்சிவெண் குடையர்பச்சை
மருவொத்த அலங்கல் மார்பர் வானரத் தலைவர் போனார்.

ஞ. வானர மகளிர் எல்லாம் வானவர் மகளி ராய்வந்
தூனமில் பிடியும் ஒண்தார்ப் புரவியும் பிறவும் ஊர்ந்து
மீனின மதியைச் சூழ்ந்த தன்மையின் விரிந்து சுற்றப்
பூநிற விமானம் தன்மேல் மிதுலைநாட் டன்னம் போந்தாள்.

ட. எட்டமை இறுதிப் பக்கத் தேழ்பொழில் வளாக வேந்தர்
பட்டம்வைத் தமைந்த நெற்றிப் பகட்டினர் பைம்பொற்றேரர்
வட்டவெண் குடையர் வீசு சாமரை மருங்கர் வாளைத்
தொட்டவெண் சோதி மோலிச் சென்னியர் சூழ வந்தார்.

எ. எழுவகை முனிவ ரோடும் எண்திசை திசைகாப்பாளர்
குழுவினர் திசைகள் தோறும் குழாங்கொண்டு களித்துக்கூடித்
தொழுவன அமரர் கைகள் சுமக்கலாம் விசும்பில் துள்ளி
வழுவவின் மலர்கள் சிந்தி மானிடஞ் சுருங்கச் சார்ந்தார்.

அ. வாங்குதும் துகில்கள் என்ன மனம்இலர் எனினும் பல்கால்
தாங்கினர் என்ற போதும் மைந்தரும் தையலாரும்
வீங்கிய உவகை மேனி கீறுற மேன்மேல் துள்ளி
ஓங்கவும் களிப்பால் சோர்ந்தும் உடையிலா தாரை ஒத்தார்.

கூ. வேசையர் உடுத் கூறை வேதியர் சுற்ற வெற்றி
பாசிழை மகளிர் ஆடை அந்தணர் பறித்துச் சுற்ற
வாசமென் கலவைச் சாந்தென் றீனியன மயக்கந் தன்னுல்
பூசினர்க் கிரட்டி யானுர் பூசலால் திரிந்து ளாரும். 10473

எ. இறைப்பெருஞ் செல்வம் நீத்த ஏழிரண் டாண்டு மியாரும்
இறைப்பிலர்ஆத லாலே வேறிருந் தொழிந்த மின்னுர்
பிறைக்கொழுந் தனைய நெற்றிப் பெய்வளை மகளிர் மெய்யை
மறைப்பன பூண்கள் மைந்தர் உயிர்க்கொரு மறுக்கம் தோன்ற.

விண்ணுறை வோர்தந் தெய்வ வெறியொடு வேறு ளோர்தந்
தண்ணுறு நாற்றம் தன்னில் தலைதடு மாறு நீரால்
மண்ணுறை மாத ரார்க்கும் வானுறை மடந்தை மார்க்கும்
உண்ணிறைந் துயிர்ப்பு வீங்கும் ஊடல்உண் டாய தன்றே.

ஙஉ. இந்திர குருவும் அன்னுர் ஏனையர் என்ன நின்ற
மந்திர முனிவர் மற்றை வசிட்டனும் வரைந்து விட்டார்
சந்திர கவிகை ஓங்கு தசரத ராமன் தாமச்
சுந்தர மௌலி சூட்ட ஓரையும் நாளும் நோக்கி. 10476

ஙங. அடுக்கிய உலக மூன்றும் ஆதரத் தூதர் கூற
இடுக்கொரு பெயரும் இன்றி அயோத்திவந் திறுத்த தென்முல்
தொடுக்குறு கவியான் மற்றைத் துழனியை இறுதி தோன்ற
ஒடுக்குறுத் துரைக்குந் தன்மை நான்முகத் தொருவர்க்குண்டோ

ஙச. சூழ்கடல் நான்கில் தோயம் எழுவகைத் தாகச் சொன்ன
ஆழ்திரை ஆற்றின் நீரோ டன்றென ஆகு மாம்என்
றூழியின் இறுதி செல்லும் தாதையின் உலாவி அன்றே
ஏழ்கடல் நீரும் தந்தான் இடர்கெட மருந்து தந்தான்.

நான்முகத் தொருவன் ஏவ நன்நெறி மயன்என்றேதும்
நூன்முகத் தொருங்கு கேள்வி நுணங்கியோன் வணங்குகெஞ்சன்
கோன்முகத் துற்ற கொற்ற செற்றுல கெல்லாம் கொள்ளும்
மான்முகத் தொருவா யன்ன மண்டபம் வயங்கக் கண்டான்.

ஙசு. அந்தணர் வணிகர் வேளாண் மரபினுேர் ஆலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளல்அச் சடையனே அனைய சான்றுேர்
உய்ந்தனம் அடியம் என்னும் உவகையர் உவரி நாண
வந்தனர் இராமன் கோயில் மங்கலத் துரிமை மாக்கள்.

ஐ எ. தெய்வநீர் ஆடற் கொத்த செய்வினை வசிட்டன் செய்ய
ஐயமில் சிந்தை யாணைச் சுமந்திரன் அமைச்ச ரோடும்
நொய்தினில் இயற்ற நோன்பின் மாதவர் நுனித்துக் காட்ட
எய்தின இயன்ற பல்வே றிந்திரற் கேய என்ன. 10481

அரியணை அனுமன் ஏற்ற அங்கதன் உடைவாள் கொள்ளப்
பரதன்வெண் கவிகை ஏந்த இருவரும் கவரி பற்ற
விரிகடல் உலகம் காக்கும் வேண்மணமன் சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மோலி.

வெள்ளியும் பொன்னும் என்ப விதிமுறை மெய்யிற் கொண்ட
ஒள்ளிய நாளின் நல்ல ஓரையில் உலக மூன்றும்
துள்ளின குளிப்ப மோலி சூடின சுருதி நான்கும்
தெள்ளிய திருவும் தெய்வப் பூமியும் செங்க ணனும் 10483

சித்தம்ஒத் தனன்என் றேதும் திருநகர்த் தெய்வ நன்னூல்
வித்தகன் ஒருவன் சென்னி மிலைச்சிய தெனினும் மென்மை
ஒத்தமூ வுலகத் தோர்க்கும் உவகையின் உறுதி உன்னில்
தத்தம்உச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மோலி.

உக. பன்னெடுங் கால நோற்றுத் தன்னுடைப் பண்புக் கேற்ற
பின்னெடுங் கணவன் தன்னைப் பெற்றிடை இருந்தோம்உற்றுள்
தன்னுடை மாசு நீங்கத் தழுவினள் தடக்கை தன்னுல்
நன்னெடு பூமிஎன்னும் நங்கைதன் கொங்கை ஆர. 10485

உஉ. விரதமா முனிவன் சொன்ன விதிநெறி வழாமைநோக்கி
வரதனும் இளைஞர்க் காங்கண் மாமணி மகுடம் சூட்டிப்
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து நாளும்
கரைதெரி விலாத போகக் களிப்பினுள் ளிருந்தான் மன்னோ.

உங. மறையவர் வாழி வேத மனுநெறி வாழி நன்னூல்
முறைசெயும் அரசர் தங்கள் மும்மைசீர் வாழி மெய்மை
இறையவன் இராமன் வாழி இக்கதை கேட்போர் வாழி
அறைபுகழ்ச் சடையன்வாழி அரும்புகழ் அனுமன் வாழி.

உச. உம்பரோ டிம்பர் வாழும் உலகம்ஓர் ஏழும் ஏழும்
எம்பெரு மான்என் றேத்தி இறைஞ்சிநின் றேவல் செய்யத்
தம்பிய ருடனே தானும் தாரணி முழுதுங் காத்தான்
அம்பரத் தனந்தல் நீங்கி அயோத்தியில் வந்த வள்ளல்.

திரு அபிடேகப் படலம் முற்றும்.

ஆகப் படலம் 46-க்கு கவி 4337

ஆகக்காண்டம் 6-க்கு படலம் 138-க்கு கவி 10488.

(ஆழ்வார் திருநகரிப் பிரதிகளின்படி)

கவி எண்	வரி	பிழை	திருத்தம்
6168	4	ஆணையால்	ஆணையால்
6183	1	செற்றினர்	செற்றனர்
6207	3	சிரியர்	சிறியர்
6236	1	பிள்ளமை	பிள்ளமை
		*6402	6401
6503	4	தன்னலன்	தனலன்
6509	3	கரன்புகுன்	கரன்புகு
6511	1	ககத்தியேல்	காத்தியேல்
6540	3	மழுதெனப்	பழுதெனப்
6548	3	வறிகடல்	எறிகடல்
6550	2	வாய்த்துளான்	வாய்த்துளர்
6560	1	நல்லவரவே	நல்வரவே
6573	2	றறைந்த	றழைத்த
6583	3	தாகில்	தாயில்
6609	4	கேட்டீர்	கண்டீர்
6610	1	அளவு	அளவும்
		5636	6636
6636	1	மதில்	மதிள்
6637	3	உறத்தறும்	உறத்தெரும்
6644	3	செருப்பெய்	செருப்பெயர்
6646	4	யான்உளன்	யால்உளன்
6650	1	எருத்தெரி	உருத்தெரி
6650	2	நச்சிரப்படை	நால்லிரு–நச்சிரப்படைநாலிரு
6662	3	சிறுவர்க்குந்	சிறுவர்க்குத்
6678	1	நொதுமல	நொதுமத்
6690	3	எரிமூனத்	எரிமூளத்
6691	3	உயிர்ப்பொருள்	உயிர்ப்பொடுள்
		6715	6716
6783	1	மையறுமலிக	மையுறுமணிக
6813	4	போந்தவே	பேர்ந்தவே
6865	4	எள்னக்	என்னக்
6866	2	சூரங்கென	சுரங்கென
6867	3	உள்ளத்	உள்ளத்
6893	3	கன்புகுத்	கன்புகுந்த
6907	4	செய்வதெதள்	செய்வதென்
6939	2	கண்ணிமா	கன்னிமா
7035	1	இனிவேறுஉண்டோ	–இனிவேறும் உண்டோ
7084	3	என்னுடன்	என்றுடன்
7101	4	இனிப்கபாரும்	இனிப்பொரும்

கவி எண்	வரி	பிழை	திருத்தம்

121-ம் பக்கத்தில் 7802வது எண்ணை 7102 எண் ஆகக் கொண்டு 1 முறையே 156-வது பக்கத்தில் 8088வது எண் வரை 7383 எண் ஆகத்திருத்தஞ் செய்து கொள்க.

	2	7807 குற்றும்	7107 முற்றும்
7817	3	வீழ்ந்தசெங்	7117. 3 விழ்ந்தசெங்
		7984. 3 கசவத்துடன்	7284. 3 கவசத்துடல்
	1	7998 சுாலியில்	7298. 1 காலியில்
		8000. 4 கனமழை	7300. 4 கன்மழை
	2	8001 மீனெடு	7301 மீனெடு
7516		தங்குபோந்தென்	தங்குப்போந்தென்
7518	3	பொறுத்துறு	பொருத்துறு
7527	3	சேகர	சேகற
7529	4	கடெலாலாம்	கடலெலாம்
7585	2	நுங்கனை	நுங்கணை

182-வது பக்கம் 7895 முதல் 192-வது பக்கம் 7932 முடிய 7595 முதல் 7632முடிய என முறையாகத் திருத்திக்கொள்ள.

7899	2	செலல	7599. 2 செல்ல
7907	3	படர்தோன்	7607. 3 படர்தோள்
7947	1	என்ருலும்	7647. 1 என்றலும்
7684	2	எங்கினர்	ஏங்கினர்
7685	1	தனிநிள்ருய்	தனிநின்ருய்
7757	4	கண்ணுய்	கண்ணுல்
7765	2	ஆரபூழியில்	ஆர்ப்பப் பூழியில்
7840	2	மூன்	முன்
7847	3	நெறியேல்	நெறியில்
7856	4	யிரளண்	யிரம்எண்
7857	2	கொளிர்பூண்	சொளிர்பூண்
7936	2	பெருமையால்	பெருமையான்
7931	1	தணைபடப்	கணைபடப்
7947	4	துகிடை	முதுகிடை
7948	1	கெடுஎன	கெடுவன
7965	2	குழுவா	குழுவாய்
7967	1	கழுகின்திரள்	கழுதின்திரள்
7978	3	உயிரிலகில	உயிரில்கில
8045	3	துறக்கின்ருன்	துரக்கின்ருன்
8069	4	மண்ணீர்	மண்ணீர
8112	1	தேய்ந்த	தேய்த்த
8124	1	வன்ளலும்	வள்ளலும்
8152	3	இன்மையில்	இன்மையால்
8163	3	னிறக்கும்	னிலிறக்கும்
8181	4	தம்பெந்	தன்பெருந்
8182	4	என்பெற	என்பெறரி

கவி எண்	வரி	பிழை	திருத்தம்
8194	3	நீக்கி	நீங்கி
8262	2	அவசசதை	அவசத்தை
8262	3	புரலித்	புரவித்
8275	3	எண்ணிள்	எண்ணில்
8276	1	தானும்	தாலும்
8292	1	துளக்கு	துளக்கு
8408	1	ஓதுறுங்கினன்	ஓதுங்கினன்
8424	1	முன்றுரகத்த	முன்துருதத்
8430	4	போம்விசைந்	போம்விசைத்
8433	3	அரகமும்	ஆகமும்
8536	3	துடிகை	துடிக்கை
8545	2	விழுந்தன	வீழ்ந்தன
8545	3	சிங்கம்	நடுக்கம்
8562	1	அள்னித்	அள்ளித்
8563	2	விந்தன	வந்தன
8592	4	சாதம்என்	சரதம்என்
8607	3	மூரட்கணை	முரட்கணை
8608	4	சிங்கவே ஏறென -	சிங்கவ றென
8610	2	அறிகிலன்	டறிகிலன்
8615	4	மறைந்தார்	மறந்தார்
8623	2	சொல்லவும்	கொல்லவும்
8649	2	அன்றும்வகை	அளரும் வகை
8654	1	என்றும்	என்னும்
8695	4	நுண்ணெடு	நுண்ணெடுங்
8697	4	துதவிலங்கி	ததுவிலங்கி
8730	2	விண்ணோ	விண்ணோர்
8746	3	கணச்	காணச்
8762	3	களிகூரப்	களிகூர
8763	2	முடுக்கிநின்	முடுக்கிடுநின்
8766	1	அழுதாள்	அழுதார்
8825	4	விசையதோளான் -	விசையத்தோளான்
8889	3	கொண்டான்	கொண்டரன்
8923	3	திருமுறை	திருமறை
8954	3	உறற்றின	உரற்றின
9015	3	றுணர்ந்திலன்	றுணர்ந்திலென்
9032	1	தொகுத்தவை	தொடுத்தவை
9054	4	வல்லார்பபடைநின் -	பல்லார்படைநின்
9061	4	களிகூர	களிகூர
9088	3	எதிர்த்தான்அவர்பேர் -	எதிர்த்தானவர்பேர்
9144	1	கழுந்தத்	கழுந்தத்

385-வது பக்கம் 9225 முதல் 388-வது பக்கம் 9252-வரை 9254-வரை முறையாக திருத்தஞ்செய்து கொள்க.

389 நிரும்பலியாகப் படலம் - இந்திரசித்துவதைப்படலம்.

கவி எண்	வரி	பிழை	திருத்தம்
9427	2	ய்ாவரும்	யாவரும்
9487	2	எற்றுவாகுத்	எற்றுவர்குத்
..	4	வைவர்சிலர்	வய்வர்சிலர்
9513	1	னத்தர்	னத்திற்
..	3	னேத்தெரு	னேச்செரு
9538	2	தடுப்பரியாம்வ	தடுப்பரியவாம்
9530	3	மோகும்அதன்	மோடும்அதன்
9536	2	வீங்கின	வீங்கினர்
9568	2	படுத்தல்	படுதல்
9564	4	கொன்றனனன்	கொன்றனன்
9575	4	ஆப்புறு	ஆர்ப்புறு
9589	4	வில்லொ	வில்லோ
9605	2	தொடரும் சுழலும்-சுழலும் தொடரும்	
9610	2	மெய்அற	மெய்உறு
9611	2	தொடர்	தொடர
9643	4	விளக்கினன்	விலக்கினன்
9644	2	உய்ந்தனன்	உய்த்தனன்
9651	4	நிற்கலத்	நிற்கலாத்
9674	2	றென்ன	றென்னு
9675	4	என்றும்	ஒன்றும்
9677	1	தொழுதார்	தொழுதனர்
9678	4	ஊற்ற	உற்ற
9681	1	வெம்பை	வெம்மை
9682	2	கரையில்லாம்	கரையில்லாப்
9683	4	நோங்கீர்	நோக்கீர்
9686	2	பொறிகூடிக்	பொறிகூட்டிக்
9716	3	விரைவில்	விரைவில்
9761	1	சனகிமலர்க்கையால்-சனகிதன்மலக்கையால்	
9793	2	உண்ணும்விசை	உண்ணும்இசை
9807	2	நினற	நின்ற
9815	3	துனிப்படா	நுனிப்படா
9819	1	இழுகும்	[1] இழுகும்
9848	3	இருளபோர்த்தன-இருள்போர்த்தன	
9856	2	பரங்கள்	புரங்கள்
9868	2	இடைபடுங்	இடைபடு
9876	4	கண்டிலன்	கண்டிலர்
9915	3	பரிந்தன	பரிந்தனர்
9921	4	சேயான்	சேயோன்
9928	1	டைத்தின்	டைத்திண்
9930	3	முற்று	முற்றி
9937	2	போய்வாள்	போய்வார்
9941	1	மால	மாய
9941	2	துளக்கரும்	துளக்கறும்

கவி எண்	வரி	பிழை	திருத்தம்
9947	4	டொன்றுபோய்-டன்றுபோய்	
9954	4	பிறந்தகை	பிறந்ததை
9969	3	புலன்கொளதேர்-புலன்கொள்தேர்	
9985	1	தப்புறும்	தப்புறம்
9981	3	நுறுக்கிருன்	நுறுக்கினுன்
9993	1	மேன்மையால்-மென்மையால்	
10004	3	இவன்எதிர்	அவன்எதிர்
10007	4	றனேய	றினேய
10034	1	அற்ந்தலே	அறந்தலே
10056	3	னேதமு	னேமுத
10081	2	றன்னேஅம்	றன்னேஅம்
10084	3	அன்னேநின்	அன்னேநின்
10096	1	பால்துரை	பால்நுரை
10096	3	மலரிள்	மலரின்
10145	3	கணியில்	கனியில்
10186	3	உலரும்	உலகும்
10195	3	ஊந்தி	ஊர்தி
10195	4	தொழுதாள்	தொழுதான்
10196	2	தூய	தூயது
10200	4	டணேந்தான்	டணேந்தாள்
10201	4	கொண்டனன்	கொண்டல்தன்
10212	3	சிதைந்திடச்	சிதைத்திடச்
10222	3	மரந்திறந்	மறந்திறந்
10276	3	றருடடர	றருடர
10282	4	மாாமரம்	மராமரம்
10349	2	சுந்தரியன்	சுந்தரியர்
10363	4	தரும்ஒன்று	தரும்என்று
10391	3	சமைந்த	சமைத்த
10392	4	சீர்த்தி	கீர்த்தி

மதிப்புரைகள்.

மதுரை "செந்தமிழ்" தொகுதி — 39. பக்கம் ருளஉ

தமிழிலக்கியங்களில் தலேசிறந்தவற்றுட் கம்பர் இயற்றிய இராமாவதாரமும் ஒன்று. தமிழ் நாட்டுள் யாவரும் இதன் நடையழகு, சொல்லின்பம், பொருளாழம், அணிநயம், சுவை நயம், கற்பனே, அரசியல், ஒழுக்கநெறி, அறவுரை, வீரவுரை முதலியவற்றில் ஈடுபட்டு இதனேயே பெரிதும் பயில்வாராயினர்.

இதனைப் பழைய ஓலை யேட்டுச் சுவடிகளோடு ஒப்புநோக்கி நன்கு ஆராய்ந்து பதித்து வெளியிட முயன்று வருவாருள் திரு பெரிய ன் ஸ்ரீநிவாஸையங்காரவர்களும் ஒருவராவர். இவர் பெருங்குடிப் பிறப்பும், அருந்தமிழ்ப் பயிற்சியும், பற்றும் உடையவர். இவர்க்குக் கிடைத்த ஓலைச் சுவடிகள் இரு நூறு வருடங்களுக்கு முன் ஆழ்வார் திருநகரியில் இருந்த ஒருபுலவரும், பிறரும் எழுதியவை. ''ஆழ்வார் திருநகரி ஏடுகள் பதிப்போர்க்கு மிகவும் உபயோகப்படத் தக்கன. பழந்தமிழ் நூல் வெளியீடு களுள் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு முதலிய நூற்பதிப்புகளுக்கு ஆழ்வார் திருநகரி ஏட்டுப்பிரதிகள் மிகவும் உபயோகமாயிருந்தன'' என்பது ஐயரவர்கள் எழுதிய முகவுரையால் அறிந்தது. இந்நூற் பாலகாண்டம் பரிசோதகரான வித்வான் ராஜசாஹிப் ஸ்ரீ மு. இராகவையங் கராவர்கள் பரந்த ஆராய்ச்சியும், விரிந்த புலமையும் வாய்ந்த வர்கள். பல தமிழ் நூற்பதிப்புக்களைச் செவ்விதின் ஆராய்ந்து வெளியிட்டவர்கள். இவ்வாறு தகுந்த சுவடிகளின் உதவி கொண்டு சிறந்த புலவரால் இதனைப் பரிசோதித்து வெளியிடு வித்த திரு பெரியன் ஸ்ரீநிவாசையங்காரவர்களுடைய தமிழ்ப் பணி பாராட்டத் தகும். இப்பதிப்பினுட் காணப்படும் அதிக மான படலத் தலைப்புகளும் பிறவும் இன்னும் பல பிரதிகள் கொண்டு நன்கு ஆராய்ந்து முடிவு செய்யத் தக்கன. எனினும் இது பயில்வார்க்கும் மேலும் இக்காண்டத்தை ஆராய்ந்து பதிக்க முயல்வார்க்கும் பெரிதும் பயன்படு மென்பதில் ஐயம் இல்லை.

ஸ்ரீ உ. வே. ராவ்சாஹிப் வித்வான் மு. இராகவையங்கார் ஸ்வாமி
16--10—'42

தேவரீர் அன்புடன் அனுப்பிய அயோத்தியா காண்டப் பதிப்பின் பிரதி கிடைக்கப் பெற்றும் பரம சந்தோஷம் அடைந்தேன். ஆதியில் சங்கல்பித்த அரியசைங்கர்யத்தை நிறைவேற்றிவரும் தேவரீர்க்கு மென்மேலும் ஊக்கமும், ஸௌகரியங்களும் அமைத்துதவும்படி எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன். இப்பதிப்பு அநேக சிறந்த பாடங்கள் கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகின்றது. தேவரீருடைய பிதிர் அபிமானமும், பாஷாபிமானமும் தமிழ் நாட்டவரால் கொண்டாடத் தக்கன. தங்கள் வெளியீட்டால் கம்பராமா யணத்தின் பழைய அமைப்பும், அரியபாட பேதங்கள் பலவும்

விளங்குதலால் ஆராய்ச்சி செய்து கொள்வதற்கும் பயன்படு மென்பதில் ஐயமில்லை. ஏனைய காண்டங்களும் தங்கள் பெரு முயற்சியால் வெளி வருவதை தமிழ்நாடு எதிர்பார்க்கக் கூடும். மேலும் இவ்வரிய தொண்டைத் தொடர்ந்து நடத்திப் பூர்த்தி பெற வைக்கும்படி தமிழ்த் தெய்வமான ஸ்ரீ ஆழ்வாரைச் சரணம் புகுகிறேன்.

மகாவித்வான் ரா. இராகவையங்கார் ஸ்வாமி 17—10—'42

தேவரீர் கிருபை கூர்ந்துதவிய கம்பராமாயண பாலகாண்டம் எய்தப்பெற்று மகிழ்கூர்ந்தேன். முன்னைப் பிரதிகளினும் அதிகமான திருத்தங்களிருத்தல் கண்டுமனமுக்கின்றேன்.

முதுபெருங்கவி திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் 12–7–'43

ஆழ்வார்திருநகரி தமிழ் நாட்டின் நடுநாயகமான ஊர் என்பது பண்டை வரலாறுகளால் நன்கு தெளிவாகின்றது. ஆதிகால முதலே அங்கு தமிழ் வித்வான்கள் பலர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அங்குள்ள வித்வான்கள் சுஜீந்திரம் திருவிழாவிற்குப் புராணப் பிரசங்கம் செய்யவும், வாகனக் கவிகள் பாடவும் வருவது சில ஆண்டுகளுக்கு முன் வரையிலும் வழக்கமாயிருந்தது. மார்கழித் திருவிழாவிற்கு வருபவர்கள் சித்திரைத் திருவிழா வரையிலும் நாஞ்சி நாட்டுப் பிரபுக்கள் வீடுகளில் வரவேற்கப்படுவார்கள் அந்தந்தக் காலங்களில் ஊர்ப் பொதுக் கட்டிடங்களில் வைத்து இரவில் இராமாயணப் பிரசங்கம் நடைபெறும். பகல் வேளைகளில் ஏடுகள் பகர்த்தி எழுதப்படும். அவ்வாறு எழுதப்பட்ட ஏடுகளை நான் தேரூர் முதலிய பல இடங்களில் பார்த்திருக்கிறேன். ஆழ்வார்திருநகரி ஏட்டுப் பிரதிகளுக்கு எங்கும் விசேஷ மதிப்பு உண்டு. அந்த ஏட்டுப் பிரதிகளைத் தாங்கள் தக்க அறிஞர்களைக் கொண்டு அழகான முறையில் வெளியிடச் செய்திருப்பது மிகவும் பாராட்டற்குரியதாம். ஒரு பழைய ஏட்டுப் பிரதியை பரிசோதனை செய்து யாவரும் எளிதில் கற்கும்படி நல்ல முறையில் வெளியிடுபவருக்கு ஒரு பழைய திருக்கோயிலை ஜீரணோத்தாரணம் செய்த பெரும் புண்ணியம் உண்டென்பது பெரியோர்கள் கண்ட உண்மை.

ஸ்ரீ ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள், B. A. B. L.
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் பல்கலைக் கழகம், சென்னை,
1—3—'44

இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு தொடங்கிச் செந்தமிழன்னையைப் போற்றி தமிழ் நாட்டிற்கும் இலக்கிய உலகிற்கும் அரிய தொண்டுகள் இயற்றி வந்த பெருமுது நகர்களுள் குருகூர் எனப் பெயர் பெற்ற ஆழ்வார்திருநகரி தலை சிறந்து விளங்குவதாகும். நம்மாழ்வாரது திருவவதாரச் சிறப்பால் பெருமை பெற்று ஒளிரும் இத்திருப்பதி பக்தர்களெல்லாம் தரிசனஞ் செய்தற்குரிய திவ்ய க்ஷேத்திரமாயுள்ளது. தமிழ்க்கு உரையாணி போன்ற பல பெருமக்கள் வாழ்ந்து தமிழைப் போற்றி வளர்த்த பெருமையினுலே இப்பொழுது பக்தர்களேயன்றி தமிழ்நாட்டினர் அனைவரும் சென்று தரிசித்தற்குரிய பெருந்தகுதியையும், புண்ணியத்தையும் அடைந்து விட்டது. இங்குச் செழித்த ஆராய்ச்சித் துறையாளர்களின் நன் முயற்சியின் மூலமாகவே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. டாக்டர், உ. வே. சாமிநாதையர், மஹா வித்துவான் ரா. ராகவையங்கார் முதலியோர்களுக்குப் பண்டைத் தமிழ்க் கருவூலங்கள் அகப்பட்ட புண்ணிய ஸ்தலம் இதுவேயாகும். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு வரை இங்ஙகரினர் குன்றாத ஊக்கங்கொண்டு தமிழ் கற்றுத் தமிழ்க் கருவூலங்களைப் பேணி வந்தனர். தமிழ் இலக்கிய சரித்திரம் எழுதப் புகுவார் இத்திருப்பதியின் இலக்கிய வாழ்க்கையை மறந்துவிட முடியாது.

பண்டை இலக்கியங்களைக் கற்றுப் பெயர்த்தெழுதிப் பின் சந்ததியினருக்கு இங்ஙகரினர் உதவியது போலவே தமிழ்க் கலை வாணியின் மணிமகுடமாகிய கம்பராமாயணத்தையும் இவர்கள் போற்றி வந்தார்கள். இப்பொழுது கன்னடம் பேசும் பிரதேசம் ஒன்றில் 14-ம் நூற்றாண்டில் கம்பராமாணப் பிரவசனம் செய்து வந்த குடும்பமொன்று இருந்ததாகச் சாசனத்தால் அறிகிறோம். இவ்வாறுயின், தமிழையும், வைஷ்ணவ சமயத்தையும், ராமசரிதத்தையும் ஒருங்கே போற்றிவந்த திருக்குருகூரினர் ராமாயணப் பிரவசனத்தில் அந்நூற்றாண்டிற்கு முன்பு தொடங்கி ஈடுபட்டிருந்தனர்

என்பது சொல்லாமலே அமையும். சில குடும்பத்தினர் ராமாயணப் பிரவசனத்தினுலேயே சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதும் விளங்குகிறது. குருகூரை அடுத்துள்ள வாசிகள் பலரும் இங்கு வந்து பிரதிகள் எழுதுவித்துப் பெற்றுக் கொள்வது வழக்கமாயிருந்தது. இவ்வூரிலுள்ள வித்துவான்களை அழைத்துச் சென்று பிரதிகள் எழுதுவித்துக் கொள்ளுதலும் உண்டு. எனவே இப்பிரதேசத்திலுள்ள பிரதிகள் வித்வப் பரம்பரையினருள் ஒரு சாராரால் மரபு நெறி தவறுது எழுதப்பட்டனவாம். இவற்றுள் எல்லாம் தலைசிறந்தவை ஆழ்வார் திருநகரிப் பிரதிகளேயாகும். ஆகவே, அந்ததேசத்துப் பிரதிகளைத் தாங்கள் பயன்படுத்தி வெளியிட்டிருக்கும் இப்பதிப்பு மிகவும் பயன்படத் தக்கது என்று உறுதியாகக் கூறுவேன்.

எனது நண்பர் பெரியன் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் ராமாயணம்பற்றிச் செய்துள்ள முயற்சிகள் பெரிதும் பாராட்டற்பாலன. இங்ஙனமே பல பிரதேசத்து இராமாயணப் பிரதிகளும் அச்சிடப் பெறுமாயின் ஆராய்ச்சி முறையில் திருந்திய இராமாயணப் பதிப்பு வெளி வருவதற்குப் பெரிதும் அநுகூலமாயிருக்கும். தமிழ்நாடு முழுவதும் ஆவலோடு எதிர்நோக்கியிருக்கும் இவ்வாராய்ச்சிப் பதிப்பிற்கு முதற்படியாக எனது நண்பர் இப்பதிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். இப்பதிப்பினை ஆதரித்து இதன் பதிப்பாசிரியருக்கு மேன்மேலும் ஊக்கமளித்தல் தமிழ் மக்கள் கடனுகும்.

ஸ்ரீ கி. வ. ஜகன்னாதன், B. O. L. "கலைமகள்" ஆசிரியர்

க. குலத்தினுற் பெரியன் குணத்தினுற் பெரியன் கொழிதமிழ் வளத்தினுற் பெரியன், நலத்தினுற் பெரிய னன்பினுற் பெரியன் நாயகனிராகவன் தாளில், பலத்தநற் பத்தி பழுத்த தண் மணத்துப் பண்பினுற் பெரியன் சீர்க்குருகூர், நிலத்தினில் மாறனடிக்குடி யாகும் நிறைவினுற் பெரியனு மியல் போய்.

உ. தேனின்வா சத்தாற் பெரியமா மகிழின் திருவலங் கல்புனை ஆழ்வார், மானநல் லடிக்கெத் தமிழ்ப்பிர பந்தம் வையகத் திருப்பினு மதனை, ஆனநல் அன்போ டச்சினிற் பதிக்கும் ஆர்வமீக் கொளப்பல நூலை, வானமா மழையென் றேதரும் பெரிய வள்ளலே மற்றிது கொண்க.

ந. ஞாயிறன் றிரவு பலபல பேசி நன்குநான் விடைபெற்ற பின்னர், ஆயநற் றிங்கட் கிழமையி லுன்றன் அகத்தினை அடைகிலேன் துயிலில், மேயினை யென்று கேட்டனன் அதனுல் விருப்புறும் உறவின ரோடும். தூயவர் வாழும் வைகுந்தப் பதிக்குத் துரிதமாச் சென்றனன் ஆங்கே.

ச. கள்ளவிழ் துழாய்மா மாலையான் கள்ளப் பிராணையே கண்குளிர்ந் திடக்கண், டுள்ளவிழ்ந் தின்பம் ஆர்ந்தனன் விருந்தை உண்டனன் நெல்லூர் சென்றேன், தள்ளரு மிரண்டாம் வகுப்பினிற் சார்ந்தே யொருபுகை வண்டி யதனிற், நள்ளுசென் னைக்கே படர்ந்தனனேற்று நயத்தொடு நினன்பி னினைவால்.

ரு. செந்தமிழ் நூல்கள் செவ்விதி லச்சிற் றிகழ்தர வேண்டு மென் றெண்ணி, இந்தமா நிலத்தில் யாரிதை ஆற்ற வற்றவ ரென்பதும் நினைந்து, சொந்தவாற் றலினுற் பொருளினுற் றொண்டினுற் றிறம்பட வவற்றைச், சந்தமார் தரவே விளக்குநின் னியல்பு தரணியி லெவர்செய விழைவார்.

சு. பலபல நூல்கள் பயின்றனை புலவர் பலரொடும் நண்பினைப் பூண்டாய், அலகிலாத் தமிழ்நூல் வளமெலாம் ஆர்ந்த அடைவினிற் பெருமிதங் கொண்டாய், சிலசில பிதற்றித் திரியுமென் றனையுஞ் செந்தமிழ் வல்லுன ஞக, மலிவுற மதித்தாய் மற்றிது நின்றன் வளவிய உளத்திறம் அன்றே.

எ. அன்புட னளித்த கம்பன்றன் நூல்கள் அமுதெனக் கொண்டனன் சிறுநூல், இன்புடன் பயில்வேன் எனக்குநீ அளிக்க இசைந்தமற் றவைகளும் நாடி, என்பெரு விருப்பம் அறிந்துநீ விடுத்தல் ஏற்றதென் றிசைத்திடு கின்றேன், மன்பெரு மாறன் இயலுநா வீறன் மலரடி கனவிலும் மறவாய்.

அ. இனியுநின் தன்னே டன்பினிற் பலநாள் எய்தியே உரை செய விழைவேன், கனியுமா ஞான முத்திரைக் கரத்தோன் கருணையை நோக்கிநிற் கின்றேன், தனிநலஞ் சாரும் திருப்பதி ஒன்பான் தலமுஞ்சார்ந் தின்புறல் வேண்டும், துனியிலா நின்றன் அன்பினுல் அருளால் சூழுமிவ் வெலாநிறை வுறுக.

ஸ்ரீ K. சுப்பா ராவ், ஆசிரியர், கும்பகோணம்.

கம்பராமாயண ஆராய்ச்சியாளர்

ஆழ்வார்திருநகரிப் பிரதியில் அநேக சிறந்த பாடங்கள் கிடைத்தன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஆரண்ய காண்டப் பாடங்கள் ஒரு பெரும் நிதிபோல் அமைந்துள்ளன. என்போன்ற கம்பன் கலைப்பித்தருக்கு இவை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தாங்கள் மேற்கண்ட இவ்வுத்தம கைங்கர்யத்தின் பெருமை வருங்காலத்தில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆழ்வார் அருளால் கிஷ்கிந்தா காண்டமும், ஏனைய காண்டங்களும் விரைவில் அச்சில் ஏறுமென நம்புகிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் சர்வதாரிஷு ஆனிமீ

கற்றூர் விரும்பும் காவியம் ஆக்குவதில் காளிதாசனும், மேலைநாட்டுமில்டனும் கைதேர்ந்தவராவர். நாட்டார் நயக்கும் நாடக நன் னூல் இயற்றுவதில் செகப்பிரியர்(Shakespeare) சிறந்தவராவர். இம்மூவரும் ஒருவராய் உருவெடுத்த இயல்பு உடையார் கல்வியிற் பெரிய கம்பராவர். பாலினும், தேனினும் இனிய தமது பாடல்களால் அழியாப் புகழை அடைந்த அவரது காவியமாகிய இராமகாதை கம்பராமாயணம் என்று வழங்கப்படுகின்றது. இந்நூல் காலத்தால் பல்வகை வேறு பாடுகளைப் பெற்றுள்ளது, அவற்றைக் கம்பராமாயணப் பதிப்புக்களில் காணலாம். கலைஞனின் கருத்தினை அவன் நிலையில் நின்று உண்மைக் கவிதையின் உருவை அறிய அந் நூலைப் பதிப்பிக்கும் அறிஞராவார் பலர் முயன்று வருகின்றனர். அத்தகைய பதிப்புக்களில் இதுவும் ஒன்றாகும். ஏனைய பதிப்புக்கள் பலவற்றினும் இதன்பால் சிறந்த இயல்புகள் சில காணப்படுகின்றன. பொருத்தமான பாடங்கள் அமைந்து பொலிகின்றன. எடுத்துக்காட்டாகச் சில காண்போம்.

அருந்தவ முனிவனுகிய விசுவாமித்திரனோடு "கருமலை, சிம்மலையனைய காட்சியராகிய இளங்குமரர் வீற்றிருப்பதனை மிதிலை வேந்தனுய ஜனகன் கண்டான். "ஆடவர் பெண்மையை அவாவும் தோளினராய" மைந்தரது பரந்த மார்பும், மலர்ந்த முகமும், விரிந்த கண்களும் மன்னன் மனதைக்கவர்ந்தன. அவரது அளத்தற்கரிய அழகினை அள்ளிப் பருகும் நிலையினை மிதிலை வேந்தன் அடைந்தான். இதனைக் கம்பர் 'இருந்த குலக் குமரர்தமை இருகண்ணின் முகந்துஅழகு பருகநோக்கி' எனக் கூறுகிறார். அழகில் ஆழ்ந்து அதனை அள்ளி அள்ளி உள்ளங் குளிர உண்டலை 'முகந்தழகு பருக' என அரசிளங் குமரர் அழகின் பெருமையையும், அரசன் ஆர்வமும் தோன்றக் கம்பர் அமைத்தார். 'முகந்து' என இந்நூலில் அமைந்து உள்ள பாடம் முன்னைய பதிப்புக்களில் 'முகத்து' என உள்ளது. அடிமுதல் முடி காறும் அழகனைய் விளங்கிய மன்னர் மக்களின் முகத்தழகு மாத்திரமே கம்பர் சிறப்பித்தார் எனக் கருதுதலினும், கண்டார் கருத்தைக் கவரும் அவரது மேனி அழகு முழுமையிலும் ஈடுபட்டுப் பருகுவன் அன்ன பண்பு உடையவனைய் அரசன் நின்றான் எனப் பொருள்படும் பாடம்

பொருத்தமுடையதன்றே? சோலையில் நின்ற சுதமதியை நோக்கி மன்னவன் மைந்தனாய உதயகுமரன் 'எத்திரத்தாள் நின் இளங்கொடி' என மணிமேகலையைக் குறிக்து வினவுகின்றான். அங்ஙிலையில் உதய குமரன் அழகினை வியந்த சுதமதி அன்னவனை நோக்கி,

'குருகு பெயர்க் குன்றம் கொன்றோன் அன்ன நின்
முருகச் செவ்வி முகந்து தன் கண்ணால்
பருகா ளாயின் பைந்தொடி நங்கை'

(மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை 13—14) எனக் கூறுமிடத்தில் 'முகந்து தன் கண்ணால்' என அமைந்து இருப்பதும் ஒப்புநோக்கி மகிழ்தற்குரியதாம். இன்னும் பல முன்னைய பதிப்புகள் பலவற்றிற் காணப்படும் பாடங்களினும் இந்நூலிற் சில சிறந்து விளங்குகின்றன. 'மதுப் பெருமழலைச் செவ்வாய் வாட்கடைக் கண்ணின் மைந்தர், விதுப்புற நோக்கும்....." என்பது (பாலகாண்டம் 11) ஒரு பாடம். இந்நூலில் 'விதிர்ப்புற' என அமைந்திருத்தல் பொருத்தமாய் உள்ளது. "முள்ளரை முளரி வெள்ளி மூளையில்" (பால காண்டம் 16) இந்நூல் "வெள்ளை முளையிற்" எனும் பாடம் சொற் பொருத்தமும், பொருட் பொருத்தமும் அமைந்து உள்ளது "தந்தமிலிருந்து தாமும் விருந்தொடும் தமரினுடும்" (பாலகாண்டம் 19) என்ற ஒரு பதிப்புப் பாடத்தினும் "தந்தமிலிருந்து தாமும் விருந்தொடு தமதுண்டென்ன" எனற இந்நூற் பாடம் சிறந்ததாம். இவ்வரிகளில் 'தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றால்' என்னும் திருக்குறட் கருத்து பொலிகிறது.

இவை யாவும் ஆராய்வார்க்குப் பயன் பல அளிக்கும் என்பதில் ஐயமில்லை. துறை பணியும் தமிழ்ப் பணியுமாய் அமையும் இப்பதிப்பை மேற்கொண்ட ஆன்றோர்க்கு மூலமும். நடுவும், சுறும் இல்லா முழுமுதற் பரம்பொருள் எல்லா நலங்களையும் நல்குவதாக.

வாணிதாசன் கூறியவைகள்.

மாலூட்டும் பிறவியெனும் பெருங்கடலைக் கடந்துயிர்கள் மாலைச்சேரப், பாலூட்டும் பசுந்தமிழிற் பரமகுரு வகுள மொளிர் பகவனேற்குந், தாலாட்டின் சுவையறிந்து மனமுருக அச்சேற்றித் தரணிக்கீந்த, சோலாட்டும் பெரியனெனு மருதிருந்த கோதில்குணக் கொழுந்துநீயே.

ஐயார் "சடகோப திவ்ய சரிதத்துக்கு"

மயக்குறு மாமறை மாசு நீங்கிடக்
கயக்கறு போதங் கனிந்து தெளிய
கோதில் கனியென குண்பரன் றன்னைத்
தீதில் திருவாய் மொழியினில் திரட்டிய
பகவன் பெரியன் பாராங்குசன் சரிதம்
தகையுறு நெஞ்சந் தழைக்க அருளிய
தேவேச பாரதித் தெருளோன் பெயரீதீ
நாவீ றன்றன் நற்புகழ் தன்னுல்
உலகுக் களித்த ஒரு பெருங் குணத்தோய்
நிலவுஞ் செல்வ நீடிசைக் குலத்துதி
பெரியன் ஸ்ரீநி வாஸப் பெரியோய்
அரிது நின்செயல் அனைத்து மோங்குக
கைம்மா றெவன்செயக் கருதுவன் வாழி
அம்மா பெரிதுன் அன்பின் திறனே.

ஐயார் "பராங்குச நாடகத்திற்கு"

தமிழினுக் களித்தான் முத்தி தாந்தமாப் புனித நாடன்
அமிழ்தொலி வேத நான்கின் ஆயிரம் உரைத்த நாவோன்
உமிழ்திரைத் தரளப் பாண்டி ஓளியிசைக் குருகை யாளன்
இமிழ்பொழி காதை மாந்தர் இழைப்பருந் தவத்தின் பேறே.

வேதமாக் கடல் கடைந்த வித்தகன் அதற்கு முத்தி
கோதறத் தந்த மாறன் புகழைமுத் தமிழிற் கூறும்
சோதியா யிந்தத் தொன்னூற் சுவையினைப் பருகுவிக்கும்
நீதறு பெரியன் ஸ்ரீநி வாஸனின் செவ்வி வாழி

தென்திருப்பேரை அபிநவகாளமேகம் ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார் ஸ்வாமி 24—9—'45.

பராங்குச நாடகம்

சேடனும் புலவர் சோன்முன் செய்பராங் குசன்றன் காதை
நாடகச் சுதையுட் கொண்டே நல்லறி வாளர் யாரும்
ஏடவிழ் வகுளத் தாரான் இன்னருட் கிலக்காய் வாழ்வான்
பீடமை ஸ்ரீநி வாசப் பெரியனே வெளியிட் டானே.

நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ்.

காரணிய மேனியன் ஸ்ரீபூமி நீளையின் காந்தனு மாதிநாதன்
கழற்கஞ்ச மென்றுமே தொழுதுகக் குஞ்சில கவிச்சக்ர
வர்த்தியான. காரிமகிழ் மாறனுக் கேற்றதா யெவ்விதத்
கவினுமுறு பிள்ளைத்தமிழ். கவிவாணர் யார்க்குமே யின்பம்
பயக்குநற் கவிகணிறை யொருநூலினைப், பேரினை விளக்காம
லொருபெரிய புலவர்கோன் பெருமையாய்ச் செய்தவிதனைப்,

பெரியனும் சீனிவாசப் பெயருளான் சகல பேறுபெரு வள்ளற் குணன், பாரினிற் பற்பல வயிணவப் பிரபந்த பந்திகளை வெளியாக்கிய, பான்மையன் புலவர்புகழ் மேன்மையன் பரவவே பதித்தனன் வளவச்சிலே.

வித்வான் கி வேங்கடசாமி அவர்கள் 21—2—52

[வி. பூதூர், வளவனூர் போஸ்ட், தென்ஆற்காடு]

ஆ! பெரியன் சீனிவா சையங்கார் என்கின்ற
வா! பெரிய ஞய்விளங்கு மண்ணு அல் — நீ பெரியை
என்பதனை நும்பதிப்பு நூல்களால் யாருமுணர்ந்
தின்புறுவ ரீதுண் மையே.

பெண்ணைப் பெறுதல் பெரிதன்றுல் அப்பெண்ணை
மண்ணிற் றகுந்த வரற்கண்டு — நண்ணிடச்செய்
அச்செயலே யொக்கும் அருநூல்கள் அச்சிலிலிட்
டிக்சையினுற் முன்கொணர் தலே.

இம்மா திரிச்செய்கை யாரும் இயற்றரிதால்
அம்மா! இபற்றி னதுபெரிதாம் — எம்மா அன்
பாம்பறியும் பாம்பின்கால் என்பபோல் பண்பாளர்
தாம்பறிவர் இச்செயற்குத் தான்.

அனுப்புங் குருகூர்ப்பள் ளான துரைக் குற்ற (து)
இனிப்பி னைதப்படித் தின்பேப்ந்தேன் — மனத்துவகை
மேவிப் பிறபதிப்புங் காண விரும்பிடுமவ்
ஆவல் மிகவுடைய னுல்.

9—5—51ல் ஷெயார் எழுதியது.

சீர்திக முன்பார்வ மேவுறுஞ்சீல சீபெரியன் சீனிவா ஸையங் கார்நல், ஏர்திகழ் தண்சோதி யாதியன்பாத மேவினை நெஞ்சாள! நீயுவந்தீபும், நீர்திழைஞ்சீர்மை நூல்கள் நன்முன நேர்மையர் கொண்டாடவே பொலிந்தார, நார்திகழ் நன்காரி மாறனன்பாக நாளுமுவந் தேதயாசெய் வன்முனே.

அங்கண்மா ஞாலத்தி யாவரும் புகழ்குருகை யாதியன் பாத மேத்தி, அமைந்தபெரி யன்சீனி வாசையங் காரென அறைந்த திரு நாமமுடையாய், பொங்குவப் புடனே யனுப்புபுத் தகமெலாம் போதவிங் குற்றபோழ்தே, பூரிப் புடன்புளக மாயினேன் இந்நன்றி பூதலத் தென்று மறவேன், இங்கிநா ளிற்சைவர் தமநூல்க ளியாவையு மியைந்தச்சி லிட்டழக தாய், இனிமையின டக்கவிலே யேகொண்டு வெளியிடுமவ் வியல்பினைக் கண்டு நொந்தே, மங்குநெஞ்சத்தனேற் கிதுபேனுங் கண்டுள மகிழ்ந்திடும் பேறுற்றதால், வைணவச் செல்வர்பல ராலநமது நூல்கள் வெளிவர வருள்க மாயவன ரே.

நெற்களத்து வேலையு மெட்களத்து வேலையு
மெக்கணத்து வேலையா யுற்றலுத்து நாயினேன்
அக்கணத்தி லேவரைந் துற்றனுப்ப நேர்கிலேன்
இக்கசட்டை ஓர்கிலா துட்பொறுத்து நீகொளே.

N. R. **கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்** B. A., B. L. **அவர்கள்**
அட்வகேட், 143. வடக்காவணிமூல வீதி, மதுரை
17—5—1951ல் எழுதியது.

தேவரீர் அடியேனுக்குக் கொடுத்துதவிய கம்பராமாயணம் 4 காண்டங்களையும் படித்துப் பார்த்தேன். படலங்களின் பெயர் அமைப்புகள் மிகப் பொருத்தமாகவும், அந்தந்த விஷயத்துக்கு ஏற்றதாகவும் இருக்கின்றன. ஆங்காங்குள்ள பாட வேறுபாடுகளும் சில பொருத்தமாவும் சுவைமிகுந்த பொருள் தருவனவாகவும் அமைந்துள்ளன. சில பாடங்கள் வலிந்து பொருள்கொள்ள வேண்டியவையாயிருக்கின்றன.

கம்பர் காலத்துக்குப் பின் அவர் இயற்றிய பெருங் காவியமாகிய இராமாவதாரம் ஓர்மையோடும், ஆர்வத்தோடும் காப்பாற்றிக் கற்றுப்பெற்ற விடங்களுள் ஆழ்வார்திருநகரி தலை சிறந்த கல்விக் கூடமாகும். அதன்கண் விளங்கிய பெரும் புலவர்கள் கற்றுத் தேர்ந்த சுவடிப் பிரதியை அதிற் கண்டவாறு புத்தகமாய் அச்சேற்றி உதவியது தமிழ்க் கல்விக்கும், தமிழ் நாட்டுக்கும், தேவரீர் செய்த பெரும் தொண்டாகும். இக்ஷ்வாகு வம்சத்தை ராமன், தன்குலம் ஆக்கிக் கொண்டான் என்று ஹனுமான் முடிவு கட்டியதுபோல் தேவரீர் வம்சத்தில் இன்னொருவர் தோன்றி இதனினும் பெரிய தமிழ்த்தொண்டு ஆற்றும்வரை எம்பெருமானுர் தாஸர் வம்சாவழியில் ஒருவராக நிலைத்த ஸ்ரீ அம்மாளையன் குலத்தை தேவரீர் பெரியன் ஸ்ரீநிவாசையங்கார் குலமாக ஆக்கிக்கொண்டுவிட்டீர்கள். இவ்வழியாப் புகழ் எய்தியது தேவரீர் பல முன் பிறவிகளில் செய்த புண்ணியங்களும், இந்தப் பிறப்பில் ஏற்பட்ட ஆசாரிய கடாக்ஷமும் ஆக்கித் தந்ததாகும். நம்மாழ்வார் தாலாட்டு முதலானவை அடங்கிய ஸம்புடமும், நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்கள் அடங்கிய மற்ற ஸம்புடமும் படிக்கப் படிக்க இன்பம் தருவனவாயும், தெவிட்டாக் கனிகளாயும் அமைந்து பண்டித பாமரசாமான்யமாய் எல்லோருக்கும் இன்பம் தருவனவாய் இவைகள் அமைந்திருப்பது இவைகளின் மிகவும் குறிப்

பிடத்தக்க பெருமையாகும். ஆழ்வார் எம்பெருமானுர் ஸம்ப்ர தாயத்தின் உண்மைகளை எல்லாம் உணரவேண்டும். என்னும் ஆர்வம் உள்ளவர்களுக்கும் இந்த நூல்கள் பெரும் துணையாக அறிவும். உணர்ச்சியும் ஊட்டுவன. இவைகளை அச்சேற்றி வெளியேற்றியது அரிய பெரிய ஸம்பிரதாயத் தொண்டாகும்.

ஆனந்தவிகடன் ஆபீஸ் பி ஸ்ரீ அவர்கள் 29—10—53.

அன்பிற் சிறந்த பக்ஷிராஜனுக்கு என் அன்பும் ஆசியும், மதுவன மயக்கத்திலே தடுமாறி ஒருவாறு வழிகாண முயன்று கொண்டிருக்கும் எனக்கு, 'இது தீரமெள்ள இருளோடு வந்து தேரிவான்' என்று வருணிக்கப் படுகின்ற அந்த பக்ஷிராஜனைப் போல் இந்த பக்ஷிராஜனுடைய திருமுகம் காணப்பெற்று மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் பரிசோதித்து வெளியிட்டு உள்ள சுந்தரகாண்டப் பிரதியை இப்போது தான் பார்வை யிட்டேன். திருவடிதொழ படலத்தை ஒழுங்கு செய்து கொள் வதற்குத் தங்கள் பதிப்பு ஒரு நல்ல வழி காட்டி தான். சுந்தர காண்டம் பொது நோக்கு எள்ற தலைப்பெயருடன் விகடனில் ஒரு கட்டுரை வரும். அதில் திருநகரிப் பதிப்பைக் குறித்துப் பிரஸ்தாபிக்கலாமென்று கருதுகிறேன். கம்பர் மகாநாட்டிலே தலைமை உரையிலும் தங்கள் பிரதிகளை குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். இப்போது தான் திருநகரிச் சுந்தரகாண்டப் பிரதியை பார்வையிட்டு வருகிறேன். பிரதேசப் பிரதிகளில் எல்லாம் தலைசிறந்தவை திருநகரிப் பிரதிகளே என்று ஸ்ரீவையாபுரி குறிப்பிடுவதும் தங்கள் பிரதிகளை நன்கு ஆராயும் படி என்னைத் தூண்டுகிறது. தங்கள் புஸ்தகத்திற்கும் கடிதத் திற்கும் நன்றி. தங்கள் கம்பன் கல்வியைப் பாராட்டுகிறேன்.

செந்தமிழ்த், தொகுதி 28 பகுதி 11 பிரமோதூத வருஷம் புரட்டாசிமீ 1930. செப்டம்பர்.

ஸ்ரீசடகோபதிவ்ய சரித்திரம் நம்மாழ்வாரது வைபவங்களை ஏறத்தாழ ஆயிரத்து இருநூறு செய்யுட்களால் அழகாக விரித் துரைப்பது எல்லோர்க்கும் எளிதில் பொருள் விளங்குமாறு, தெள்ளியதீந்தமிழ்க் கவிகளால் இயன்றுள்ளது. இதன் ஆசிரி யர் ஆழ்வார்திருநகரி யென்னும் திருக்குருகூரில் எழுந்தருளி யிருந்த, ஸ்ரீ உவே தேவராஜ ஐயங்கார் ஸ்வாமி என்னும் தேவேச பாரதிகளாவர், ஸ்ரீசடகோபருடைய அவதாரமும், அவருக்கு நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களும் திருப் புளியின் கீழ் ஸேவைசாதித்ததும். திராவிட வேதமாகிய திரு

வாய்மொழியை, ஆழ்வார் அருளிச் செய்ததும், ஸ்ரீமதுரகவிகள் அதனைப் பட்டோலை கொண்டதும், பின்புள்ளாரும் ஸேவித்து உய்யஅவர் அர்ச்சாரூபியாய் எழுந்தருளிய விபரமும், அவ்வருவுடன் கூடிஅவர்காலக் கிரமத்தில் ஸ்ரீநாதமுனிகளுக்கு நாலாயிரமுரைத்ததும், முதலான வரலாறுகள் எல்லாம் முன்னோர் மொழியின் வழியே. இதில் நன்கு விவரிக்கப்பெறறுள்ளன. இந்நூல் இதன் ஆசிரியருடைய மாணக்கரான பெரியள் தேசிகமையங்கார் ஸ்வாமியின் குமாரர் பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸையங்காரின் நன்முயற்சியால் இப்பொழுது வெளிவருவதாயிற்று. தமது குடும்பத்தின் தகுதிக்கேற்ப ஸ்ரீநிவாஸையங்காரிடம் அமைந்த தமிழபிமானமும் வைணவ சமயப்பற்றும் பாராட்டற்பாலன. இதுபோலவே இன்னும் பல நூல்களைச் செவ்வையாக அச்சிடுவதற்கு அறிவும் ஆற்றலும் வளந்தோங்குமாறு எம்பெருமான் திருவருள் புரிக.

ஆழ்வார்திருநகரி திருஞான முத்திரைப் பிரசுராயலம் பழைய சுவடிகள் வெளியீடு.

மேகாவை		ரூ.	அ.
1.	ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதி தாலாட்டு ...	0	4
2.	ஸ்ரீ சடகோபன் சந்திர கலாமாலை ... ... தேவராஜ பாரதிகளின் சகோதரர் அநந்துவை ஐயங்காரீ இயற்றியது.	0	1
3.	ஸ்ரீ சடகோபன் திவ்ய சரிதம் ... ... ஸ்ரீ தேவராஜையங்காரென்ற தேவேச பாரதிகளால் 15 படலங்களில் 1190 கவிகளாக (நம்மாழ்வார் வைபவம் முழுதும்) இயற்றியது. B. A. வகுப்புக்குப் பாடமாக இருந்தது.	2	0
4.	ஸ்ரீ ராமாயணம் (பெரியவாச்சான் பிள்ளை அரிய திவ்வியப்ரபந்த பாசுரப்படி) பதிப்பில்		
5.	துலவில்லிமங்கலம் தேவர்பிரான் சந்திர காலமாலை	0	1
	ஷி தேவேச பாரதிகள் என்ற தேவராஜ பாரதிகளியற்றியது		
6.	ஸ்ரீ நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் (வாணிதாஸன் முகவுரையுடன்)	1	0
7.	திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம் ...	0	4
8.	குருகூர்ப்பள்ளு ... ... ஸ்ரீ சடகோபப் புலவர் இயற்றியது ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், பரிசோதித்தது விரிவான முன்னுரையுடன்	0	6

9. ஆழ்வார்கள் வைபவம் (முதல்மூன்றாழ்வார்) 0 6
வடிவழகிய நம்பிதாஸர் அருளியது

10. தெந்திருப்பேரை திருக்கோளூர் திருப்பணிமாலை 0 6
S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், பரிசோதித்தது

11. திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ் ... 0 8
(ராவ்சாகிப் மு. ராகவையங்கார் ஸ்வாமி
பரிசோதித்து எழுதிய முன்னுரையுடன்)

12. கம்பராமாயணம் பாலகாண்டம் (பிரதி
பேதங்களுடன் தாடகை வதைப்படலமுடிய) 0 10
S. வையாபுரிப் பிள்ளை, B.A.,B.L. } பரிசோதித்தது
P. N. அப்புசாமி அய்யர், B.A.,B.L. }

13. தெய்வச்சிலையார் விறலிவிடுதூது (கற்சிற்பத்
தொழிலில் பிரசித்தி வாய்ந்த திருச்செந்தூர்
ரோட்டில் உள்ள கிருஷ்ணபுரம் சம்பந்தமானது
பழைய தாமிரசாசனத்துடன்) 0 10
(ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L.
பரிசோதித்தது முன்னுரையுடன்)

14. கம்பராமாயணம் (ஆழ்வார் திருநகரிப் பிரதி
களின்படி) பாலகாண்டம் ... 2 0
(ராவ்சாகிப் மு. ராகவையங்கார் பரிசோதித்தது)

15. ஷை (ஷை) திருவயோத்தியா காண்டம் ... 2 4
ஸ்ரீ A. N. மகராபூஷணமையங்கார், B. A., B. L.
ஸ்ரீ N. K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.
இவர்கள் பரிசோதித்தது.

16. ஷை (ஷை) ஆரண்ய காண்டம் ... 2 4
S. வையாபுரிப் பிள்ளை, B. A., B. L. முன்னுரையுடன்
ஸ்ரீ N. K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.
பரிசோதித்தது.

18. ஷை (ஷை) கிட்கிந்தா காண்டம் ஷை. ... 2 8
20. ஷை (ஷை) சுந்தர காண்டம் ஷை ... 2 8
22. ஷை (ஷை) யுத்த காண்டம் ஷை ... 10 0
23. ஷை (ஷை) உத்தர காண்டம் அச்சில்

17. ஸ்ரீ பராங்குச நாடகம் ... 1 0
சேஷகவி இயற்றியது, செந்தமிழாசிரியர்
ஸ்ரீ திருநா ராயணையங்கார் ஸ்வாமி முன்னுரை

19. குருகாக்ஷேத்திர மஹாத்மியம் 0 8

21. திருக்குருகூர் திருப்பணி மாலை 0 10

கம்பராமாயணம் நூல்கள் கிடைக்கும் இடம்:-

1. பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார்
திருஞான முத்திரைப் பிரசுராலயம்,
ஆழ்வார்திருநகரி.

2. ஸ்ரீ குமரன் பிரஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

Printed By: Sri Kumaran Press, Tirunelveli Jn. '54. Cs. 1000